முன்னுரை

தாவீது ராஜாவின் ராஜ்யபார சரித்திரத்தைப்பற்றி இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சாமுவேலின் முதலாவது புஸ்தகத்தில், சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். சவுல் தாவீதைக் கொன்றுபோட வகைதேடினார். சாமுவேலின் முதலாம் புஸ்தகம் சவுலின் மரணத்தோடு நிறைவு பெறுகிறது.

சாமுவேலின் இரண்டாம் புஸ்தகம், தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, ராஜ்யபாரம் பண்ணுவது பற்றியும் விவரமாகச் சொல்லுகிறது. தாவீது இஸ்ரவேல் தேசத்தை நாற்பது வருஷமாக ஆட்சி செய்த சம்பவம் இந்தப் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் செப்துவஜிந்த் பதிப்பில் இந்தப் புஸ்தகத்திற்கு, "ராஜாக்களின் மூன்றாவது புஸ்தகம்" என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாவீதுக்கு கிடைத்த வெற்றிகளைப்பற்றியும், அவர் சந்தித்த நெருக்கங்களையும், பிரச்சனைகளையும் பற்றியும் இந்தப் புஸ்தகம் விரிவாகச் சொல்லுகிறது. தாவீதுக்கு சவுலின் குடும்பத்தார்மீது வெற்றி கிடைக்கிறது (2சாமு 1-4 ஆகிய அதிகாரங்கள்). தாவீதுக்கு எபூசியர்மேலும், பெலிஸ்தர்மேலும் வெற்றி கிடைக்கிறது (2சாமு 5-ஆம் அதிகாரம்).

தாவீது கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டு வருகிறார் (2சாமு 6,7 ஆகிய அதிகாரங்கள்).

தாவீதுக்கு மேலும் சில ராஜ்யங்கள்மீது வெற்றி கிடைக்கிறது. அண்டை தேசத்தார்மீதும், தனக்கு விரோதமாக எழும்பினவர்கள்மீதும் தாவீதுக்கு வெற்றி கிடைக்கிறது (2சாமு 8-10 ஆகிய அதிகாரங்கள்). இதுவரையிலும் தாவீதின் வெற்றிகளைப்பற்றியும், நல்ல சுபாவங்களைப்பற்றியும் இந்தப் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

தாவீதின் ஜீவியத்தில் ஒரு சில மோசமான சம்பவங்களும் நடைபெறுகிறது. தாவீது சில பாவங்களை செய்கிறார். இதன் நிமித்தமாக அவருக்கு பல பிரச்சனைகள் வருகிறது. தாவீது உரியாவின் மனைவியின்மீது ஆசைப்படுகிறார் (2சாமு 11,12 ஆகிய அதிகாரங்கள்).

அம்னோனின் பாவத்தினிமித்தமாக தாவீதுக்கு பிரச்சனைகள் வருகிறது (2சாமு 13-ஆவது அதிகாரம்). அப்சலோம் (1சாமு 14-19 ஆகிய அதிகாரங்கள்) சேபா (2சாமு 20-ஆவது அதிகாரம்) ஆகியோர் தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள்.

கிபியோனியர் நிமித்தமாக தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சமுண்டாயிற்று (2சாமு 21-ஆவது அதிகாரம்).

தாவீது கர்த்தருக்கு முன்பாக பாடின பாட்டு (2சாமு 22-ஆவது அதிகாரம்). தாவீதின் கடைசி வார்த்தைகள் (2சாமு 23-ஆவது அதிகாரம்). தாவீது இஸ்ரவேல் புத்திரரை இலக்கம் பார்த்தார். இதனால் இஸ்ரவேல்மீது வாதை வந்தது (2சாமு 24-ஆவது அதிகாரம்).

1 அதிகாரம்

தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகிலிருக்கிறார்கள். பெலிஸ்தருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே, சவுலும் அவருடைய மூன்று குமாரரும் மரித்துப்போகிறார்கள். சவுல் மரித்துப்போன செய்தியை, அமலேக்கியன் ஒருவன் தாவீதுக்கு சொல்லுகிறான் *(2சாமு 1:1-10)*.

சவுல் மரித்துப்போன செய்தியைக் கேட்டு தாவீது மிகவும் துக்கப்படுகிறார் *(2சாமு 1:11-12)*. அமலேக்கியன் யுத்தத்திலே சவுலைக் கொன்றுபோட்டதாகச் சொல்லுகிறான். தாவீது அந்த அமலேக்கியனுக்கு நீதியான தண்டனை கொடுக்கிறார் *(2சாமு 1:13-16)*.

தாவீது சவுலின் பேரிலும், அவருடைய குமாரனாகிய யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடுகிறார் *(2சாமு 1:17-27)*.

சவுலின் மரணச்செய்தி 2சாமு 1:1-10

2சாமு 1:1. சவுல் மரித்தபின்பு, தாவீது அமலேக்கியரை முறிய அடித்து, சிக்லாகுக்குத் திரும்பிவந்து, இரண்டுநாள் அங்கே இருந்தபிற்பாடு,

2சாமு 1:2. மூன்றாம்நாளிலே ஒரு மனுஷன் சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் தலையின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு, தாவீதினிடத்தில் வந்து, தரையிலே விழுந்து வணங்கினான்.

2சாமு 1:3. தாவீது அவனைப் பார்த்து: நீ எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டதற்கு, அவன்: இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து தப்பிவந்தேன் என்றான்.

2சாமு 1:4. தாவீது அவனைப் பார்த்து: நடந்த செய்தி என்ன? சொல் என்று கேட்டதற்கு, அவன்: ஜனங்கள் யுத்தத்தைவிட்டு முறிந்தோடிப்போனார்கள்; ஜனங்களில் அநேகம்பேர் விழுந்து மடிந்துபோனார்கள்; சவுலும் அவர் குமாரனாகிய யோனாத்தானும் மடிந்தார்கள் என்றான்.

2சாமு 1:5. சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனது உனக்கு எப்படித் தெரியும் என்று தாவீது தனக்கு அதை அறிவிக்கிற வாலிபனிடத்தில் கேட்டதற்கு,

2சாமு 1:6. அந்த வாலிபன்: நான் தற்செயலாய்க் கில்போவா மலைக்குப் போனேன்; அப்பொழுது இதோ,சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார்; இரதங்களும் குதிரைவீரரும் அவரைத் தொடர்ந்து நெருங்கினார்கள்.

2சாமு 1:7. அவர் திரும்பிப் பார்த்து: என்னைக் கண்டு கூப்பிட்டார்; அதற்கு நான்: இதோ இருக்கிறேன் என்றேன்.

2சாமு 1:8. அப்பொழுது அவர்: நீ யார் என்று என்னைக் கேட்டார்; நான் அமலேக்கியன் என்று சொன்னேன்.

2சாமு 1:9. அவர் என்னை நோக்கி: நீ என்னண்டையில் கிட்டவந்து நின்று, என்னைக் கொன்றுபோடு; என் பிராணன் முழுவதும் இன்னும் போகாததினால் எனக்கு வேதனையாயிருக்கிறது என்றார்.

2சாமு 1:10. அப்பொழுது நான், அவர் விழுந்தபின்பு பிழைக்கமாட்டார் என்று நிச்சயித்து, அவரண்டையில் போய் நின்று, அவரைக் கொன்றுபோட்டேன்; பிற்பாடு அவர் தலையின்மேல் இருந்த முடியையும் அவர் புயத்தில் இருந்த அஸ்தகடகத்தையும் எடுத்துக்கொண்டு, அவைகளை இங்கே என் ஆண்டவனிடத்திற்குக் கொண்டு வந்தேன் என்றான்.

அமலேக்கியர் சிக்லாகுக்கு வந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து அதை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டார்கள். அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்கள் கொள்ளையடித்து கொண்டுபோன பொருட்களையும், தங்களுடைய ஸ்திரீகளையும், புருஷர்களையும் அவர்களிடத்திலிருந்து மீட்டுக்கொண்டு வருகிறார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும், அவர்களுடைய குடும்பத்தாரும் மறுபடியுமாய் சிக்லாகுக்கு திரும்பி வந்து அங்கே தங்கியிருக்கிறார்கள்.

சவுல் மரித்தபின்பு, தாவீது அமலேக்கியரை முறிய அடித்து, சிக்லாகுக்குத் திரும்பிவந்து, இரண்டுநாள் அங்கே இருக்கிறார். அதற்கு பிற்பாடு, மூன்றாம்நாளிலே ஒரு மனுஷன் சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் தலையின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு, தாவீதினிடத்தில் வந்து, தரையிலே விழுந்து வணங்குகிறான் (2சாமு 1:1,2).

ஆரம்பத்தில் தாவீதைப் பார்க்க வந்தவர்கள் தரித்திரராகவும், கடன்பட்டவர்களாகவும், சமுதாயத்தினால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். முதலில் அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே தாவீதோடு சேர்ந்துகொண்டார்கள். அதன்பின்பு சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துகளிலிருக்கிறவர்களும், பலமுள்ளவர்களும், பராக்கிரமசாலிகளும் தாவீதைப் பார்க்க வருகிறார்கள்.

"தாவீது கீசின் குமாரனாகிய சவுலினிமித்தம் இன்னும் மறைவாயிருக்கையில், சிக்லாகிலிருக்கிற அவனிடத்திற்கு வந்தார்கள் (1நாளா 12:1).

"காத்தியரில் பரிசையும் ஈட்டியும் பிடித்து, சிங்கமுகம்போன்ற முகமும், மலைகளிலிருக்கிற வெளிமான் வேகம் போன்ற வேகமுமுள்ளவர்களாயிருந்து, யுத்தசேவகரான பராக்கிரமசாலிகள் சிலரும் வனாந்தரத்திலுள்ள அரணான இடத்தில் இருக்கிற தாவீது பட்சமாய்ச் சேர்ந்தார்கள்" (1நாளா 12:8).

"அப்படியே அவன் சிக்லாகுக்குத் திரும்பிப்போகையில், மனாசேயில் அத்னாக், யோசபாத், எதியாவேல், மிகாயேல், யோசபாத், எலிகூ, சில்த்தாயி என்னும் மனாசே கோத்திரத்தாரின் ஆயிரத்துச் சேர்வைக்காரர் அவன் பட்சமாய் வந்தார்கள்" (1நாளா 12:20).

இப்போது சிக்லாகிலிருக்கிற தாவீதைப் பார்க்க ஒரு அமலேக்கியன் வருகிறான். அவன் சவுலின் மரணச்செய்தியை தாவீதுக்கு சொல்லுகிறான். தாவீதுக்கு வேவுகாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சவுலின் போக்கையும் வரத்தையும் தாவீதுக்கு அறிவிப்பார்கள். ஆனால் சவுலின் மரணச்செய்தி, தாவீதின் வேவுகாரர் மூலமாக அவருக்கு வரவில்லை. இது ஒரு அமலேக்கியன் மூலமாக வருகிறது.

சவுல் மரித்துப்போகவேண்டும் என்பது தாவீதின் விருப்பமல்ல. சவுலும் இஸ்ரவேலரும் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனது தாவீதுக்கு தெரியும். தாவீதும் பெலிஸ்தரோடு சேர்ந்து, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனார். காத்தின் ராஜாவாகிய ஆகீஸ், தாவீதையும் அவருடைய மனுஷரையும், பெலிஸ்தருடைய பாளயத்திலிருந்து வெளியேற்றி விட்டான். தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகுக்கு வந்தார்கள்.

சவுல் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார் என்பது தாவீதுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இந்த யுத்தத்தில் சவுல் தோற்றுப்போவார் என்பதும் தாவீதுக்கு தெரியும். ஆனாலும் சவுலின் சோகமான முடிவை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் விருப்பம் தாவீதிடத்தில் இல்லை.

சவுலும் அவருடைய மனுஷரும், பெலிஸ்தரின் பாளயங்களிலிருந்து சிக்லாகுக்கு வந்தபோது, அங்கே சிக்லாகே அழிந்துகிடக்கிறது. தாவீதும் அவருடைய மனுஷரும், சிக்லாகில் தங்க முடியாமல், உடனே அமலேக்கியரை பின்தொடர்ந்து போகிறார்கள். தாவீது அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்தில் முழுமையான ஈடுபட்டிருந்ததினால், ஒரு வேளை சவுலைக்குறித்த செய்தியை சேகரிக்க, தாவீது தன்னுடைய வேவுகாரரை அனுப்ப முடியாமல் போயிருக்கலாம்.

தாவீது சவுலின் முடிவை அறிந்துகொள்ள தன்னுடைய வேவுகாரரை அனுப்பாமலிருப்பது, தாவீதின் நற்குணத்திற்கு அடையாளமாயிருக்கிறது. தாவீதுக்கு சவுலின் மரணத்தில் பிரியமில்லை. சவுலுக்கு பதிலாக, தான் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் ராஜாவாக வீற்றிருந்து ராஜ்யபாரம்பண்ண வேண்டுமென்று தாவீது அவசரப்படவுமில்லை. தாவீது சவுலின் ஜீவனையும், தன்னுடைய வருங்காலத்தையும், கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய வேளைக்கும் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

இந்த சூழ்நிலையில், அமலேக்கியன் ஒருவன் சிக்லாகுக்கு வந்து, தாவீதின் முன்பாக தரையிலே விழுந்து வணங்குகிறான். அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தலையின்மேல் புழுதியைப்போட்டுக்கொண்டு, சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்.

அமலேக்கியன் தாவீதைக் கனம்பண்ணுகிறான். தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாகப்போகிறார் என்பது இந்த அமலேக்கியனுக்கு தெரிந்திருக்கிறது. தாவீது ராஜாவை முதன்முதலாக, தானே கனம்பண்ணவேண்டும் என்னும் ஆசையில், இவன் சவுலின் பாளயத்திலிருந்து வேகமாக ஓடி வந்திருக்கிறான். தாவீதைப் பார்த்த உடனே அவன் தரையிலே விழுந்து வணங்குகிறான். ஒரு ராஜாவுக்கு கொடுக்கவேண்டிய கனத்தையும் மரியாதையையும் கொடுக்கிறான்.

ஆனால் அந்த அமலேக்கியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டிருக்கிறான். தன் தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டிருக்கிறான். ராஜாவைக் கனம்பண்ண வருகிறவர்கள். இந்தக் கோலத்தில் வரமாட்டார்கள். இது துக்கத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் தேசத்து அரண்மனையிலே, ஒரு ராஜாவோ அல்லது ஒரு பிரபுவோ மரித்துப்போனால், ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தங்கள் தலைகளின்மேல் புழுதியைப்போட்டுக்கொள்வார்கள். அமலேக்கியன் சவுலின் மரணச்செய்தியை அறிவிக்க வந்திருக்கிறான். ஆகையினால் அவன் இந்தக் கோலத்தில் வந்திருக்கிறான்.

தாவீது அவனைப் பார்த்து: "நீ எங்கேயிருந்து வந்தாய்" என்று கேட்கிறார். அதற்கு, அந்த அமலேக்கியன்: "இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து தப்பிவந்தேன்" என்று சொல்லுகிறான். தாவீது அவனைப் பார்த்து: "நடந்த செய்தி என்ன? சொல்" என்று கேட்கிறார். அமலேக்கியன் தாவீதிக்கு பிரதியுத்தரமாக "ஜனங்கள் யுத்தத்தைவிட்டு முறிந்தோடிப்போனார்கள்; ஜனங்களில் அநேகம்பேர் விழுந்து மடிந்துபோனார்கள்; சவுலும் அவர் குமாரனாகிய யோனாத்தானும் மடிந்தார்கள்" *(1சாமு 1:3,4)* என்று சொல்லுகிறான்.

அமலேக்கியன் யுத்தக்களத்தில் நடந்த சம்பவங்களை தாவீதுக்கு சுருக்கமாகவும் பொதுவாகவும் சொல்லுகிறான். அதைச் சொன்ன பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தத்தை விட்டு முறிந்தோடிப்போனார்கள் என்றும், இஸ்ரவேல் ஜனங்களில் அநேகம்பேர் விழுந்து மடிந்துபோனார்கள் என்றும், யுத்த நிலமையை தாவீதுக்கு சொல்லுகிறான். அதைச் சொன்ன பின்பு, "சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்தார்கள்" என்றும் சொல்லுகிறான்.

யுத்தத்திலே சவுலும், அவருடைய மூன்று குமாரரும் மடிந்துபோனார்கள். ஆனால் இந்த அமலேக்கியனோ சவுலின் பெயரையும், யோனத்தானுடைய பெயரையும் மாத்திரம் தாவீதுக்கு சொல்லுகிறான். தாவீது யோனத்தானை அதிகமாய் நேசிக்கிறார் என்பது இந்த அமலேக்கியனுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் இவன் யோனத்தானுடைய பெயரை விசேஷமாகச் சொல்லுகிறான்.

இஸ்ரவேல் ஜனங்களில் அநேகர் விழுந்து மடிந்துபோனார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடனேயே, சவுலுக்கும், யோனத்தானுக்கும் என்ன ஆயிற்று என்பதை அறிந்துகொள்ள தாவீது ஆவலாயிருப்பார் என்பது இந்த அமலேக்கியனுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் அமலேக்கியன் சவுலும், யோனத்தானும் மடிந்தார்கள் என்று சொல்லுகிறான்.

அமலேக்கியன் சொல்லுகிற செய்தியை தாவீது உறுதிபண்ண விரும்புகிறார். தாவீது அந்த அமலேக்கியனிடத்தில், "சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனது உனக்கு எப்படி தெரியும்" *(2சாமு 1:5)* என்று கேட்கிறார்.

தாவீதின் கேள்விக்கு அமலேக்கியன் உடனே பிரதியுத்தரம் சொல்லுகிறான். "நான் தற்செயலாய்க் கில்போவா மலைக்குப் போனேன்; அப்பொழுது இதோ, சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார்; இரதங்களும் குதிரைவீரரும் அவரைத் தொடர்ந்து நெருங்கினார்கள். அவர் திரும்பிப் பார்த்து; என்னைக் கண்டு கூப்பிட்டார்; அதற்கு நான்: இதோ இருக்கிறேன் என்றேன். அப்பொழுது அவர்: நீ யார் என்று என்னைக் கேட்டார்; நான் அமலேக்கியன் என்று சொன்னேன்" *(2சாமு 1:6-8)* என்று அந்த அமலேக்கியன் தாவீதுக்கு சொல்லுகிறான்.

மேலும் யுத்தக்களத்திலே சவுல் தனக்கு என்ன சொன்னார் என்பதையும், தான் அவருக்கு செய்த காரியத்தையும் அந்த அமலேக்கியன் தாவீதுக்கு சொல்லுகிறான். "சவுல் என்னை நோக்கி: நீ என்னண்டையில் கிட்டவந்து நின்று, என்னைக் கொன்றுபோடு; என் பிராணன் முழுவதும் இன்னும் போகாததினால் எனக்கு வேதனையாயிருக்கிறது என்றார். அப்பொழுது நான், அவர் விழுந்தபின்பு பிழைக்கமாட்டார் என்று நிச்சயித்து, அவரண்டையில் போய் நின்று, அவரைக் கொன்றுபோட்டேன்; பிற்பாடு அவர் தலையின்மேல் இருந்த முடியையும் அவர் புயத்தில் இருந்த அஸ்தகடகத்தையும் எடுத்துக்கொண்டு, அவைகளை இங்கே என் ஆண்டவனிடத்திற்குக் கொண்டுவந்தேன்" *(2சாமு 1:9,10)* என்று அமலேக்கியன் தாவீதுக்கு சொல்லுகிறான்.

அமலேக்கியன் தாவீதிடம் மிகவும் தெளிவாகப் பேசுகிறான். அவன் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் தற்செயலாய் கில்போவா மலைக்குப்போனேன்" என்று சொல்லுகிறான். அங்கே அவன் சவுலைப் பார்க்கிறான். அப்போது சவுல் தன்னுடைய ஈட்டியின்மேல் சாய்ந்துகொண்டிருக்கிறார்.

சவுலுக்கு உதவி செய்ய அங்கே வேறு ஒருவருமில்லை. ஆகையினால் அவர் இந்த அமலேக்கியனை தன்னிடத்தில் கூப்பிட்டு, "நீ யார்" என்று விசாரித்திருக்கிறார்.

அமலேக்கியன் இஸ்ரவேலனல்ல. அதே வேளையில் இவன் பெலிஸ்தனுமல்ல. இந்த வாலிபன் பெலிஸ்தனல்ல என்பதை தெரிந்தபோது, சவுல் அவனை நோக்கி "நீ என்னண்டையில் கிட்ட வந்து நின்று, என்னைக் கொன்றுபோடு" என்று சொல்லுகிறார். சவுல் அவனிடம் "என் பிராணன் முழுதும் போகாததினால் எனக்கு வேதனையாயிருக்கிறது" என்றும் சொல்லுகிறார். இந்த அமலேக்கியன் சவுலின் வார்த்தையைக் கேட்டு, அவரைக் கொன்றுபோடுகிறான்.

அமலேக்கியன் தாவீதிடம் சவுலின் மரணச்செய்தியை சொல்லும்போது, தாவீது சந்தோஷப்படுவார் என்று எதிர்பார்த்தான். ஆனால் தாவீதின் முகத்தில் சந்தோஷமில்லை. அவருடைய முகம் கோபமாயிருக்கிறது. அமலேக்கியன் தாவீதின் கோபமான முகத்தைப் பார்த்து, "சவுல் விழுந்த பின்பு பிழைக்கமாட்டார் என்று நிச்சயமாய் அறிந்தேன்" என்று சொல்லுகிறான். ஆகையினால்தான் தான் சவுலைக் கொன்றுபோட்டதாகவும், அவர் பிழைத்துக்கொள்வார் என்று தெரிந்திருந்தால், அவரைக் கொன்றுபோடாமல், அவருடைய உயிரை காப்பற்றியிருப்பேன் என்றும் பொருள்படுமாறு அமலேக்கியன் சொல்லுகிறான். தாவீதின் கோபமான முகத்தை இந்த அமலேக்கியனால் பார்த்து பயப்படாமலிருக்க முடியவில்லை.

இந்த அமலேக்கியன் பொய்சொல்லுகிறான் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இவன் சவுலைக் கொன்றுபோடவில்லை. சவுல் செத்துப்போன செய்தியை தாவீதுக்கு சொன்னால், அவர் தனக்கு வெகுமானம் கொடுப்பார் என்று இந்த அமலேக்கியன் எதிர்பார்க்கிறான்.

தான் சொல்லும் வார்த்தைகளை தாவீது நம்பவேண்டும் என்னும் அக்கரையும் இந்த அமலேக்கியனிடத்தில் இருக்கிறது. ஆகையினால் சவுலின் தலையின்மேலிருந்த முடியையும், அவருடைய புயத்திலிருந்த அஸ்தகடகத்தையும் எடுத்துக்கொண்டு தாவீதினிடத்தில் வந்திருக்கிறான். சவுல் செத்துப்போனார் என்பதற்கு இது நிச்சயமான அடையாளம். சவுலின் கிரீடமும், அவருடைய அஸ்தகடகமும் இப்போது அமலேக்கியன் கையிலிருக்கிறது.

யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம், இந்த அமலேக்கியன் தோவேக்கின் குமாரன் என்று சொல்லப்படுகிறது. தோவேக்கு சவுலின் ஆயுததாரியாயிருந்தவன் என்றும், தோவேக்கு யுத்தக்களத்திலே செத்துப்போவதற்கு முன்பாக, அவன் சவுலின் கிரீடத்தையும், அவருடைய அஸ்தகடகத்தையும் எடுத்து தன் குமாரனாகிய இந்த அமலேக்கியனுக்கு கொடுத்தான் என்றும் யூதருடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது.

தோவேக்கு இவற்றை தன் குமாரனிடத்தில் ஒப்புவித்து, இவற்றை தாவீதிடம் கொடுக்குமாறு சொல்லுகிறான். தாவீது இதைப் பார்த்து தன் மகனுக்கு மிகப்பெரிய வெகுமானம் கொடுப்பார் என்று தோவேக்கு எதிர்பார்த்து, இந்தக் காரியத்தை செய்தான் என்றும், இதன் பின்பு தோவேக்கு செத்துப்போனான் என்றும் யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது.

அமலேக்கியனின் மரணம் 2சாமு 1:11-16

2சாமு 1:11. அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

2சாமு 1:12. சவுலும், அவன் குமாரனகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத்தாரும், பட்டயத்தாலே விழுந்தபடியினால் புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்தார்கள்.

2சாமு 1:13. தாவீது அதைத் தனக்கு அறிவித்த வாலிபனைப் பார்த்து: நீ எவ்விடத்தான் என்று கேட்டதற்கு, அவன்: நான் அந்நிய ஜாதியானுடைய மகன், நான் அமலேக்கியன் என்றான்.

2சாமு 1:14. தாவீது அவனை நோக்கி: கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக் கொன்றுபோடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன என்று சொல்லி,

2சாமு 1:15. வாலிபரில் ஒருவனைக் கூப்பிட்டு, நீ கிட்டப்போய் அவன்மேல் விழுந்து, அவனை வெட்டு என்றான்; அவன் அவனை வெட்டினான்; அவன் செத்தான்.

2சாமு 1:16. தாவீது அவனைப் பார்த்து: உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருப்பதாக; கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரை நான் கொன்றுபோட்டேன் என்று உன் வாயே உனக்கு விரோதமான சாட்சி சொல்லிற்று என்றான்.

அமலேக்கியன் சொன்ன செய்தியைக் கேட்டு தாவீது சந்தோஷப்படவில்லை. அமலேக்கியன் எதிர்பார்த்த பிரகாரமாக தாவீது அவனுக்கு வெகுமானமும் கொடுக்கவில்லை. சவுலின் மரணச்செய்தியைக் கேட்டு தாவீது அழுகிறார். தாவீதோடுகூட அவருடைய மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு அழுகிறார்கள்.

தாவீதும் அவரோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, சவுலும், அவருடைய குமாரனகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத்தாரும், பட்டயத்தாலே விழுந்தபடியினால் புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருக்கிறார்கள் *(2சாமு 1:11,12)*.

சவுல் தாவீதைக் கொன்றுபோடுவதற்காக அவரைத் தேடி அலைந்தார். யோனத்தான் தாவீதுக்கு சிநேகிதர். சவுலோ தாவீதைப் பகைக்கிறார். சவுல் தன்னைப் பகைத்தாலும், அவர் தன்னைக் கொன்றுபோடவேண்டும் என்று முயற்சி பண்ணினாலும், சவுலின் மரணச்செய்தியைக் கேட்டு, தாவீது உபவாசமாயிருந்து, சாயங்கால மட்டும் அழுது புலம்புகிறார்.

தாவீதின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. அவர் நற்குணமுள்ளவர். சவுல் தனக்கு ஏராளமான தீங்குகளை செய்தபோதிலும், தாவீது சவுலை மன்னிக்கிறார். தனக்கு விரோதமாய் சவுல் செய்த தப்பிதங்களை தாவீது இப்போது நினைத்துப் பார்க்கவில்லை. ஒருவர் மரித்துப்போனால் அவரைப்பற்றி நல்ல வார்த்தைகளை மாத்திரமே பேசவேண்டும். துக்கவீட்டிலே தூஷண வார்த்தைகளைப் பேசக்கூடாது.

"உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக. கர்த்தர் அதைக் காண்பார், அது அவர் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கும்; அப்பொழுது அவனிடத்திலின்று அவர் தமது கோபத்தை நீக்கிவிடுவார்" *(நீதி 24:17,18)*

"ஏழையைப் பரியாசம்பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; ஆபத்தைக்குறித்துக் களிக்கிறவன் தண்டனைக்குத் தப்பான்" *(நீதி 17:5).*

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் இந்த நீதிமொழிகளை எழுதினவர். சாலொமோன் இந்த வார்த்தைகளை எழுதுவதற்கு முன்பாகவே, தாவீது இந்த சத்தியத்தை அறிந்து வைத்திருக்கிறார். தாவீது ஒரு யுத்தவீரர். அவர் ஒரு பராக்கிரமசாலி. ஆனாலும் அவருடைய மனது மென்மையானதாயிருக்கிறது. தாவீது இரக்க சுபாவமுள்ளவர்.

சவுல் மரித்துப்போன செய்தியைக் கேட்டவுடன், தாவீதின் மென்மையான சுபாவமும், அவருடைய இரக்ககுணமும் உடனே வெளிப்படுகிறது. சவுல் தாவீதை வெறுத்தாலும், சவுலுடைய மரணச்செய்தி, தாவீதின் இருதயத்தை வேதனைப்படுத்துகிறது.

சவுலின் மரணச்செய்தியைச் சொன்ன அமலேக்கியன், தாவீது அழுவதைப் பார்த்து அதிர்ச்சியடைகிறான். தான் சொன்ன செய்தியைக் கேட்டு, தாவீது சந்தோஷமாயிருப்பார் என்றும், இந்தச் செய்தியைச் சொன்னதற்காக, அவர் தனக்கு பெரிய வெகுமானம் கொடுப்பார் என்றும் அமலேக்கியன் எதிர்பார்க்கிறான். ஆனால் அமலேக்கியன் எதிர்பார்ப்பது ஒன்றாகவும், இங்கே நடைபெறுவது வேறொன்றாகவும் இருக்கிறது.

தாவீது இந்தச் செய்தியை தனக்கு அறிவித்த வாலிபனைப் பார்த்து: "நீ எவ்விடத்தான்" என்று கேட்கிறார் அதற்கு, அவன்: "நான் அந்நிய ஜாதியானுடைய மகன், நான் அமலேக்கியன்" என்று சொல்லுகிறான் *(2சாமு 1:13).*

தாவீது அந்த அமலேக்கியனை நோக்கி: "கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக் கொன்று போடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன" என்று கோபமாய்ச் சொல்லுகிறார். தாவீது வாலிபரில் ஒருவனைக் கூப்பிட்டு, "நீ கிட்டப்போய் அவன்மேல் விழுந்து, அவனை வெட்டு" என்று கட்டளையிடுகிறார்; அவன் அந்த அமலேக்கியனை வெட்டுகிறான்; அமலேக்கியன் செத்துப்போகிறான் *(2சாமு 1:14,15).*

தாவீதின் வாயிலிருந்து சன்மான வார்த்தைகள் வருமென்று அமலேக்கியன் எதிர்பார்க்கிறான். ஆனால் தாவீதோ அவனுக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பு சொல்லுகிறார். கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை கொன்றுபோடும்படி அமலேக்கியன் தன் கையை நீட்டினான். ராஜாவைக் கொல்லுவது தேசத்துரோகம். அமலேக்கியனுடைய துரோகத்திற்கு தண்டனையாக, தாவீது அவனை வெட்டிக்கொன்றுபோடச் சொல்லுகிறார்.

சவுலின் மரணச்செய்தியை தாவீதிடம் சொன்னது ஒரு அமலேக்கியன். அவன் ஏற்கெனவே தன்னை ஒரு அமலேக்கியன் என்று தாவீதுக்கு சொல்லியிருக்கிறான் (2சாமு 1:8). தாவீது அவனுக்கு தண்டனை கொடுப்பதற்கு முன்பாக, அவன் எவ்விடத்தான் என்று உறுதிபண்ண விரும்புகிறார். தாவீது மறுபடியுமாக அமலேக்கியனுடைய பாவத்தை உறுதிபண்ணுகிறார். தாவீது அவனை நோக்கி, "கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொன்று போடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன" (2சாமு 1:14) என்று கேட்கிறார்.

அமலேக்கியன் இந்தப் பாவத்தை செய்திருக்காவிட்டால், அவனுக்கு மரணதண்டனை கிடைத்திருக்காது. அவனுக்கு தண்டனை கொடுப்பதற்கு முன்பாக, தாவீது அவனுடைய பாவத்தை உறுதிபண்ணுகிறார்.

சவுல் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி, "நீ உன் பட்டயத்தை உருவி என்னைக் குத்திப்போடு" என்று சொன்னார். சவுலின் ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், "அப்படிச் செய்யமாட்டேன்" (1சாமு 31:4) என்று சொன்னான்.

ஆனால் இந்த அமலேக்கியனோ, சவுலண்டையில் போய் நின்று, அவரைக் கொன்றுபோட்டேன் (2சாமு 1:10) என்று துணிகரமாகச் சொல்லுகிறான். தாவீதிடம் தன்னைப்பற்றி பெருமையாகப் பேசுகிறான். தாவீதின் மனதிலுள்ளது அமலேக்கியனுக்குத் தெரியாது. தாவீது தன்னைப்போலிருப்பார் என்று அமலேக்கியன் நினைக்கிறான். தாவீதின் இருதயமோ கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற இருதயமாயிருக்கிறது.

அமலேக்கியன் செத்துப்போன பின்பும், தாவீது அவனோடு பேசுகிறார். தாவீது செத்துப்போன அமலேக்கியனைப் பார்த்து: "உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருப்பதாக; கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரை நான் கொன்றுபோட்டேன் என்று உன் வாயே உனக்கு விரோதமான சாட்சி சொல்லிற்று" (2சாமு 1:16) என்று சொல்லுகிறார்.

தாவீது கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரை கொன்றுபோட மறுத்தவர். ஆனால் இந்த அமலேக்கியனோ, "கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரை நான் கொன்றுபோட்டேன்" என்று சாட்சியாய் அறிவித்தவன். ஆகையினால் தாவீது இந்த அமலேக்கியனுக்கு மரணதண்டனை கொடுக்கிறார்.

தாவீது பாடின புலம்பல் பாட்டு 2சாமு 1:17-27

2சாமு 1:17. தாவீது சவுலின்பேரிலும், அவன் குமாரனாகிய யோனத்தானின்பேரிலும், புலம்பல் பாடினான்.

2சாமு 1:18. (வில்வித்தையை யூதா புத்திரருக்குக் கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான்; அது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.) அவன் பாடின புலம்பலாவது:

2சாமு 1:19. இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று; பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்.

2சாமு 1:20. பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத்பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.

2சாமு 1:21. கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.

2சாமு 1:22. கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை; சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.

2சாமு 1:23. உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்; மரணத்திலும் பிரிந்துபோனதில்லை; கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தார்கள்.

2சாமு 1:24. இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள்.

2சாமு 1:25. போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.

2சாமு 1:26. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.

2சாமு 1:27. பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே; யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்துபோயிற்றே, என்று பாடினான்.

சவுல் செத்துப்போன செய்தியைக் கேட்டு, தாவீதும் அவரோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள். சவுலும், அவருடைய குமாரனாகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத்தாரும், பட்டயத்தாலே விழுந்தபடியினால் அவர்கள் புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்தார்கள் *(2சாமு 1:11,12)*.

இதன் மூலமாக தாவீது சவுலுக்கு செலுத்த வேண்டிய மரியாதையை செலுத்தி முடித்துவிட்டார் என்று அவரைப் பார்ப்பவர்கள் பொதுவாக நினைப்பார்கள். ஆனால் தாவீதின் துக்கம் இத்தோடு முடிந்துபோகவில்லை. தாவீதின் இருதயத்தில் சவுலைப்பற்றிய நினைவுகள் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. தாவீது சவுலின் பேரிலும், அவருடைய குமாரனாகிய யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடுகிறார்.

தாவீது பாடுகிற புலம்பல் பாட்டை அவரோடு கூடயிருக்கிறவர்கள் எல்லோரும் கேட்கிறார்கள். தாவீது தன்னுடைய துக்கத்தை தனக்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ளவில்லை. தாவீது சவுலின்மீது அன்பாயிருக்கிறார். சவுல் தாவீதை வெறுத்தாலும், தாவீது அவரை வெறுக்கவில்லை. தாவீது சவுலுக்குக் கொடுக்கிற மதிப்பும் மரியாதையும், அவருடைய புலம்பல் பாடலில் வெளிப்படுகிறது. தாவீதின் புலம்பல் பாடலை கேட்கிறவர்களின் இருதயங்களில், இந்த வார்த்தைகள் பதிந்திருக்கும்.

யூதருடைய பாரம்பரியத்தில், தாவீதின் புலம்பல் பாடலைப் போல, ஏராளமான பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்கள் எல்லாமே இஸ்ரவேல் ஜனத்தாரின் சரித்திரத்தை விவரிக்கிறது. சரித்திர ஆசிரியர்கள் சரித்திர புஸ்தகங்களை ஆராய்ந்து பார்ப்பதுபோல, யூதர்களுடைய பாரம்பரிய பாடல்களையும் ஆராய்ந்து பார்க்கிறார்கள்.

தாவீது இந்தப் புலம்பல் பாடலை ஆரம்பிக்கும்போது, "வில்வித்தையை யூதா புத்திரருக்குக் கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான்" *(2சாமு 1:18)* என்னும் பாடல் வரியோடு ஆரம்பிக்கிறார். வில் யுத்தத்தில் பயன்படுத்தப்படும் ஆயுதம். தாவீது இஸ்ரவேல் தேசத்து சேனையின்மீது கரிசனையோடிருக்கிறார்.

சாமுவேல் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இதன் மூலமாக, இஸ்ரவேலரின் சேனையின்மீது தாவீதுக்கு அதிகாரமும் ஆளுகையுமுள்ளது. சவுலின் ராஜ்யபாரத்தில் ஒரு சில தப்பிதங்கள் காணப்பட்டது. தாவீதின் ராஜ்யபாரத்தில் அந்த தப்பிதங்கள் இல்லாதவாறு அவை நிவிர்த்தி பண்ணப்படும், தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு, தன்னுடைய ராஜ்யபாரத்தை உறுதிபண்ணும் வண்ணமாக, "வில் வித்தையை யூதாபுத்திரருக்கு கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான்" என்னும் வாக்கியத்தோடு, இந்தப் புலம்பல் பாடலை பாட ஆரம்பிக்கிறார்.

தாவீது சிக்லாகிலிருக்கும்போது, அவரைப் பார்க்க வந்தவர்கள் வில் ஆயுதங்களோடு வந்தார்கள். "யுத்தத்திற்கு ஒத்தாசை செய்த வில்வீரரும், கவண்கல் எறிகிறதற்கும் வில்லினால் அம்பு எய்கிறதற்கும் வலது இடது கைவாட்டமான பராக்கிரமசாலிகளான மற்ற மனுஷருமாவன" (1நாளா 12:2).

"வில்" என்பது ஒரு இசைக்கருவியின் பெயர் என்றும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். சோககீதம் பாடுவதற்கும், புலம்பல் பாடல் பாடுவதற்கும் "வில்" என்னும் இசைக்கருவியை யூதர்கள் பயன்படுத்துவது வழக்கம்.

யோனத்தான் வில் வித்தையில் தேர்ந்தவர். தாவீது இந்தப் புலம்பல் பாடலை சவுலின் பேரிலும், யோத்தானின் பேரிலும் பாடுகிறார். யோனத்தானுடைய வில் வித்தையை பெருமைப்படுத்தும் வண்ணமாக, தாவீது "வில் வித்தையை யூதாபுத்திரருக்கு கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான்" என்று யோனத்தானைப்பற்றி பாடுகிறார்.

"அது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது" (2சாமு 1:18) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யாசேரின் புஸ்தகம் யூதருடைய சரித்திர ஆகமம். தாவீது சவுலின் பேரிலும், யோனத்தானின் பேரிலும் பாடின புலம்பல் பாட்டு, யாசேரின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பாடல் யூதருடைய சரித்திர ஆகமத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

யூதாதேசத்திலே பாடப்படும் முக்கியமான பாடல்களெல்லாம் யாசேரின் புஸ்தகத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறது. இது யூதருடைய சரித்திரத்தை விவரிக்கும் அதிகார பூர்வமான சரித்திர புஸ்தகமாகும். இது பொதுவாக பாடல் நடையில் இருக்கும். இந்தப் புஸ்தகத்தில் கோர்க்கப்பட்டிருக்கிற பாடல்களில் சில, யூதர்களுடைய சரித்திரத்தை விவரிக்கிறது.

"அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது" (யோசு 10:13).

தாவீது சவுலின் பேரிலும், யோனத்தானின் பேரிலும் பாடின புலம்பல் பாடலை, யூதர்கள் தேவாலயத்தில் பாடுவதில்லை. இது கர்த்தரைத் துதிப்பதற்கு பாடப்படும் பாடல் அல்ல. யூதர்கள் தெய்வீக ஆராதனையில் இந்தப் பாடலை பாடமாட்டார்கள். தாவீதின் புலம்பல் பாடலில் கர்த்தருடைய நாமம் பயன்படுத்தப்படவில்லை. ஆகையினால் தாவீதின் புலம்பல் பாடல் தேவஆவியினால் ஏவப்பட்டு எழுதப்படவில்லை என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

சவுலின் பேரிலும், யோனத்தானின் பேரிலும் பாடின புலம்பல் பாடல், தாவீதே இயற்றியது. இது தேவஆவியானவரால் ஏவப்பட்டு இயற்றப்படவில்லை. இது மனுஷரால் இயற்றப்பட்டது. ஆகையினால் இந்தப் புலம்பல் பாடல், பரிசுத்த வேதாகமத்தில் சேர்க்கப்படாமல் யாசேரின் புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தாவீது பாடின இந்தப் புலம்பல் பாடல், பரிசுத்த வேதாகமத்திலுள்ள சங்கீதப்புஸ்தகத்தில் சேர்க்கப்படவில்லை.

யாசேரின் புஸ்தகத்தில் ஏராளமான பாடல்கள் உள்ளன. அந்தப் பாடல்களில் தாவீதின் புலம்பல் பாடலும் ஒன்று. யூதர்கள் எழுதின பாடல்கள் சரித்திரத்தில் காணாமல் போய்விடக்கூடாது என்பதற்காக, அவர்கள் அந்தப் பாடல்கள் எல்லாவற்றையும் சேர்த்து யாசேரின் புஸ்தகத்திலே தொகுத்து கோர்த்திருக்கிறார்கள்.

தாவீது பாடின புலம்பல் பாடலில், அவருடைய மனதும், சுபாவமும் வெளிப்படுகிறது. தாவீது சவுலின்மேல் கிருபையும் இரக்கமுமுள்ளவராகயிருந்தார். சவுல் தாவீதைப் பகைத்தார். அவர் தாவீதை தன்னுடைய சத்துருவாகப் பாவித்தார். ஆனாலும் தாவீது சவுலைப் பகைக்காமல், அவரை நேசித்தார்.

சவுல் ஏராளமான தப்பிதங்களை செய்தார். அவர் கர்த்தருக்கு விரோதமாகவும், மனுஷருக்கு விரோதமாகவும் பாவம் செய்தார். தாவீதோ, சவுலின் பேரில் பாடின புலம்பல் பாடலில், சவுலின் தப்பிதத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. சரித்திரத்திலே சவுலைப்பற்றி படிக்கிறவர்கள், அவருடைய நற்குணங்களை மாத்திரம் படிக்க வேண்டும் என்பது தாவீதின் விருப்பம்.

நம்மிடத்தில் நற்குணம் இருக்குமென்றால், நாம் மற்றவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுப்போம். மற்றவர்கள்மீது தூஷண வார்த்தைகளைப் பேசாமல், அவர்களைப்பற்றி நல்ல வார்த்தைகளைப் பேசுவோம்.

ஒரு சிலரிடத்தில் நற்குணமே இருக்காது. அவர்களைப் புகழ்ந்து பேசவும் முடியாது. அவர்கள் ஒரு நன்மையும் செய்திருக்கமாட்டார்கள். ஆனாலும் அப்படிப்பட்டவர்கள் மரிக்கும்போது, அவர்களுடைய அடக்க ஆராதனையில், அவர்களைப் பற்றிப் புகழ்ந்தும், பாராட்டியும் பேசுவது நம்முடைய பண்பாடு. செத்தவர்களைப்பற்றித் தூஷண வார்த்தைகளைப் பேசக்கூடாது.

தாவீது சவுலைப்பற்றிச் சொல்லும்போது, அவரை ஒரு யுத்தவீரராகவும், பராக்கிரமசாலியாகவும் பாவித்து, இந்தப் புலம்பல் பாடலில் பாடுகிறார்.

"இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று; பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள். பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத்பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.

கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே" *(2சாமு 1:19-21)* என்று தாவீது சவுலின் பேரில் புலம்பல் பாடுகிறார்.

தாவீது சவுலைப்பற்றிச் சொல்லும்போது, சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்பட்ட சம்பவத்தையும் நினைவுபடுத்தி சொல்லுகிறார் *(2சாமு 1:21)* இந்த அபிஷேக தைலம் பரிசுத்தமானது. சவுல் இந்த அபிஷேக தைலத்தினால்தான் உயர்த்தப்பட்டார். சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்பட்டதினால், அவர் ராஜாவாக உயர்த்தப்பட்டார்.

சவுலின் காலத்தில் இஸ்ரவேலுக்கு அநேக சத்துருக்கள் இருந்தார்கள். சவுல் அவர்கள்மேல் யுத்தம்பண்ணினார். இஸ்ரவேலின் சத்துருக்களை முறியடித்தார். யுத்தங்களிலே, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஜெயம் கிடைத்தது.

"இப்படிச் சவுல் இஸ்ரவேலை ஆளுகிற ராஜ்யபாரத்தைப் பெற்றுக்கொண்டு, சுற்றிலும் இருக்கிற தன்னுடைய எல்லாச் சத்துருக்களுமாகிய மோவாபியருக்கும், அம்மோன் புத்திரருக்கும், ஏதோமியருக்கும், சோபாவின் ராஜாக்களுக்கும், பெலிஸ்தருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணி, எவர்கள்மேல் படையெடுத்தானோ, அவர்களையெல்லாம் அடக்கினான்" *(1சாமு 14:47).*

சவுல் ஆரம்பத்தில் புகழோடு இருந்தாலும், சிறிது காலத்திற்கு பின்பு அவருடைய புகழ் மங்கிப்போயிற்று. சூரியன் மேகத்திற்குள் மறைவது போல, சவுலின் பெருமையும் மறைந்துபோயிற்று. ஆனாலும் சவுலின் புகழ் மங்கும்போது, அவருடைய குமாரனாகிய யோனத்தான் பிரகாசமாக எழும்பி வருகிறார்.

"கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை; சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை" என்று தாவீது யோனத்தானைப்பற்றிச் சொல்லுகிறார்.

தாவீது சவுலையும், யோனத்தானையும் பற்றி, இந்தப் புலம்பல் பாடலில் புகழ்ந்து பாடுகிறார். "உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்; மரணத்திலும் பிரிந்துபோனதில்லை; கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தார்கள்" (2சாமு 1:23) என்று தாவீது பாடுகிறார்.

யோனத்தான் தன்னுடைய தகப்பனுக்கு நல்ல குமாரனாயிருந்தான். அவன் தன்னுடைய கடமைகளை நேர்த்தியாய்ச் செய்கிறவன். சவுலோ பாசமுள்ள தகப்பனாயிருந்தார். இவர்கள் உயிரோடிருக்கையில், இவர்கள் இருவரும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள். ஆகையினால் இவர்கள் இருவரும் மரணத்திலும் பிரிந்துபோகவில்லை. மரணத்தால் இவர்களை பிரிக்க முடியவில்லை. இவர்கள் இருவரும் ஒரே நாளில், ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், மரித்துப்போனார்கள். இவர்கள் இருவருமே ஒரே நோக்கத்திற்காக பெலிஸ்தர்மீது யுத்தம்பண்ணப்போனார்கள். அந்த யுத்தத்தில் இவர்கள் இருவரும் செத்துப்போனார்கள்.

தாவீது சவுலின் பேரில் புலம்பல் பாடி விட்டு, அதைத் தொடர்ந்து சவுலின் குமாரனாகிய யோனத்தானின் பேரில் புலம்பல் பாடுகிறார். யோனத்தானின் வீரத்தையும், பராக்கிரமத்தையும், ஞானத்தையும் தாவீது உறுதிப்படுத்துகிறார்.

தாவீதும் யோனத்தானும் நெருக்கமான சிநேகிதர்கள். தாவீது யோனத்தானின் பேரில் புலம்பல் பாடும்போது, தனக்கும் யோனத்தானுக்கும் இடையே உள்ள சிநேகத்தை உறுதிபண்ணுகிறார். தாவீது யோனத்தானைப்பற்றிச் சொல்லும்போது, "என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது" (2சாமு 1:26) என்று சொல்லுகிறார்.

யோனத்தானுடைய சிநேகம் மெய்யாகவே தாவீதுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. யோனத்தானைப் போல் யாரும் தாவீதுக்கு சிநேகிதராயிருக்க முடியாது. தன்னுடைய சிரசில் சூட்டப்பட வேண்டிய கிரீடம், தாவீதின் சிரசில் சூட்டப்படும் என்பதை அறிந்திருந்தும், யோனத்தான் தாவீதின்மேல் சிநேகமாயிருந்தான். ஆகையினால் யோனத்தானுடைய சிநேகம் தாவீதுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது, நமக்கு நல்ல சிநேகிதர்கள் தேவை. அவர்கள் புத்தியுள்ளவர்களாயும், நல்லவர்களாயும் இருக்கவேண்டும். அவர்கள் நம்முடைய சிநேகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய சிநேகத்தை நமக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும். நம்முடைய சிநேகிதர்கள் நமக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நம்மீது கரிசனையும், அக்கறையும் உள்ளவர்களாய் காணப்படவேண்டும்.

மெய்யான சிநேகிதர்களை இழந்துபோவது நமக்கு பேரிழப்பாகயிருக்கும். அப்படிப்பட்டவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோகும்போது, நம்மையே நாம் பிரிந்துபோவதுபோல இருக்கும். நம்முடைய சிநேகிதர்களை நாம் அதிகமாய் நேசிக்கும்போது, அவர்களுடைய பிரிவுக்காக, நாம் அதிகமாய்த் துக்கப்படுவோம். அன்பு அதிகரிக்கும்போது, துக்கமும் அதிகரிக்கும்.

தாவீது சவுலின் பேரிலும், யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடலைப் பாடும்போது, கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும் என்பதிலும் கரிசனையோடிருக்கிறார். "பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராக்கூடாது" (2சாமு 1:20) என்று தாவீது சொல்லுகிறார். சவுலும் யோனத்தானும் செத்துப்போன செய்தியைக் கேட்டு, விருத்தசேதனமில்லாதவர்களின் ஸ்திரீகள் களிகூரக்கூடாது.

விருத்தசேதனமில்லாதவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். கர்த்தர் இவர்களோடே உடன்படிக்கை பண்ணவில்லை. இஸ்ரவேலின்மேல் தங்களுக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைவிட, தங்களுடைய புறஜாதி தெய்வங்களே வல்லமையுள்ளவை என்றும் நினைத்து, பெலிஸ்தர்கள் களிகூரக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே, சவுலும் யோனத்தானும் செத்துப்போனாலும், தாவீது அவர்களை தனிநபர்களாக பார்க்கவில்லை. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு பொதுவானவர்கள் என்றும், அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் நன்மையை நாடியவர்கள் என்றும், அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்காகவே தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தவர்கள் என்றும் தாவீது சொல்லுகிறார்.

தாவீது, சவுலின் மரணத்தையும், யோனத்தானின் மரணத்தையும் பற்றிச் சொல்லும்போது, "இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று; பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்" *(2சாமு 1:19)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமானதினாலும், பராக்கிரமசாலிகள் விழுந்துபோனதினாலும், இஸ்ரவேல் தேசத்திற்கு சேதமுண்டாயிற்று. இஸ்ரவேல் தேசம் இழந்துபோன அலங்காரத்தை மறுபடியும் திரும்பப் பெறுவதற்கு, கர்த்தர் தாவீதைப் பயன்படுத்துவார். இஸ்ரவேல் தேசம் இழந்துபோன மகிமையை திரும்பப் பெற்றுக்கொள்ளும். இதற்கு, கர்த்தர் தாவீதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவார். ஆனாலும் தாவீது சவுலின் பேரிலும், யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடுகிறார்.

தாவீது கற்பனை வளம் மிகுந்தவர். அவர் பரிசுத்தவான். தேவனுடைய தெய்வீக ஞானம் தாவீதுக்கு விசேஷமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. சவுலும் யோனத்தானும் யுத்தத்திலே மரித்துப்போன செய்தியைக் கேட்டு விருத்தசேதனமில்லாதவர்களின் குமாரத்திகள் களிகூருவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் களிகூராமலிருக்க வேண்டுமென்றால், சவுல் மரித்துப்போன செய்தியை அவர்களுக்கு அறிவிக்கக்கூடாது.

தாவீது இதை மனதில் நினைத்து, மிகுந்த ஞானத்தோடு, "சவுலும் யோனத்தானும் யுத்தத்திலே மரித்துப்போன செய்தியை காத்பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்" *(2சாமு 1:20)* என்று சொல்லுகிறார். இந்தச் செய்தியை பெலிஸ்தரின் பட்டணங்களில் அறிவியாமலும், அதன் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருக்கவேண்டும்.

சவுலும் அவருடைய குமாரரும் கில்போவா மலைகளில் மரித்துப்போனார்கள். இதனால் தாவீது அந்த மலைகளை சபிக்கிறார். "கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக" *(1சாமு 1:21)* என்று சொல்லுகிறார். அந்த மலைகளில் பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது. சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர் போல், அவருடைய கேடகமும் அங்கே அவமதிக்கப்பட்டது.

தாவீதும், அவருடைய மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, புலம்பி அழுது உபவாசமாயிருக்கிறார்கள். தங்களோடு சேர்ந்து இஸ்ரவேலின் குமாரத்திகளும் அழுது புலம்புமாறு, தாவீது அவர்களையும் அழைக்கிறார். "இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள்" *(2சாமு 1:24)* என்று தாவீது சொல்லுகிறார்.

போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்கள். அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது. கில்போவா மலையிலே கர்த்தருடைய ஜனங்கள் பட்டயத்தால் விழுந்தாலும், தாவீது தன்னுடைய ஆத்தும சிநேகிதனாகிய யோனத்தானை நினைவுகூர்ந்து, "யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே" *(2சாமு 1:25)* என்று சொல்லுகிறார். இத்துடன் தாவீது சவுலின் பேரிலும், அவருடைய குமாரனாகிய யோனத்தானின் பேரிலும் பாடின புலம்பல் பாடல் முடிவுபெறுகிறது.

2 அதிகாரம்

சவுல் மரித்துப்போனார். தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக எழும்புகிறார். தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தருடைய அனுமதியோடு தாவீது எப்ரோனுக்குப் போகிறார். யூதாவின் மனுஷர் அங்கே தாவீதை யூதாவம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள் (2சாமு 2:1-4).

கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷர் சவுலுக்கு தயவு செய்து அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ணினார்கள். தாவீது இதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லுகிறார் (2சாமு 2:5-7).

சவுலின் படைத்தலைவனான அப்னேர், சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக்குகிறான் (2சாமு 2:8-11). தாவீதின் யுத்தவீரரும், இஸ்போசேத்தின் யுத்தவீரரும், ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். ஒவ்வொரு பக்கத்திலும் பன்னிரண்டு பேர் எழுந்து, சிலம்பம் பண்ணுகிறார்கள். அவர்கள் எல்லோருமே ஒருமிக்க விழுந்து செத்துப்போகிறார்கள் (2சாமு 2:12-16). இந்த யுத்தத்தில், அப்னேரும், இஸ்ரவேல் மனுஷரும், தாவீதின் சேவகரால் முறியடிக்கப்படுகிறார்கள் (2சாமு 2:17).

செருயாவின் மூன்று குமாரரில் ஆசகேல் என்பவன் ஒருவன். அப்னேர் ஆசகேலைக் கொன்றுபோடுகிறான் (2சாமு 2:18-23). அப்னேரின் விண்ணப்பத்தை ஏற்று, தாவீதின் படைத்தளபதியாகிய யோவாப், தாவீதின் மனுஷரைக் கூட்டிக்கொண்டு எப்ரோனுக்கு திரும்பிப்போகிறான் (2சாமு 2:24-28). அப்னேரும் யோர்தானைக்கடந்து, தன் மனுஷரோடு மக்னாயீமுக்கு திரும்பிப்போகிறான் (2சாமு 2:29). இரண்டு பக்கத்திலும் உயிர்ச்சேதமுண்டாயிற்று (2சாமு 2:30-32).

இந்த யுத்தம் அந்நிய தேசத்தாருக்கு விரோதமாக நடைபெறவில்லை. இந்த யுத்தம் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளேயே நடைபெறுகிறது. யூதாகோத்திரத்தார் ஒரு பக்கத்திலும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் மற்றொரு பக்கத்திலும் இருந்து யுத்தம்பண்ணுகிறார்கள். யூதாவுக்கு தாவீது தலைவர். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு இஸ்போசேத்தும், அவனுடைய படைத்தலைவனாகிய அப்னேரும் தலைவர்கள். அப்னேரும் இஸ்போசேத்தும் மரித்துப்போகிறார்கள். இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் தாவீதை, சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாக்குகிறார்கள்.

எப்ரோனிலே தாவீது
2சாமு 2:1-7

2சாமு 2:1. பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: போ என்றார்; எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார்.

2சாமு 2:2. அப்படியே தாவீது தன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமோடும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலோடும் கூட அவ்விடத்திற்குப் போனான்.

2சாமு 2:3. அன்றியும் தன்னோடிருந்த மனுஷரையும், அவர்கள் குடும்பங்களையும் கூட்டிக் கொண்டுபோனான்; அவர்கள் எப்ரோனின் சுற்றூர்களிலே குடியேறினார்கள்.

2சாமு 2:4. அப்பொழுது யூதாவின் மனுஷர் வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள். கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷர் சவுலை அடக்கம்பண்ணினவர்கள் என்று அவர்கள் தாவீதுக்கு அறிவித்தபோது,

2சாமு 2:5. தாவீது கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி, நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய சவுலுக்கு இந்தத் தயவைச் செய்து, அவரை அடக்கம்பண்ணினபடியினாலே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

2சாமு 2:6. கர்த்தர் உங்களைக் கிருபையும் உண்மையுமாய் நடத்துவாராக; நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத்தக்கதாக உங்களை நடத்துவேன்.

2சாமு 2:7. இப்போதும் நீங்கள் உங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டு நல்ல சேவகராயிருங்கள்; உங்கள் ஆண்டவனாகிய சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று அவர்களுக்குச் சொல்லச் சொன்னான்.

பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே சவுலும் யோனத்தானும் செத்துப்போகிறார்கள். சாமுவேல் தாவீதை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக ஏற்கெனவே அபிஷேகம்பண்ணியிருக்கிறார். சவுலும் யோனத்தானும் இப்போது செத்துப்போனதினால், இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தை ஏற்றுக்கொள்வதற்கு தாவீதுக்கு தடையேதுமில்லை. இது தாவீதுக்கு தெரிந்திருக்கிறது.

ஆனாலும் தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு உடனே ராஜாவாகவேண்டுமென்று முயற்சி பண்ணவில்லை. தாவீது தன்னுடைய தூதுவர்களை இஸ்ரவேல் தேசத்தின் எல்லையெங்கும் அனுப்பி, இஸ்ரவேல் கோத்திரத்தாரின் மூப்பர்கள் எல்லோரும் தன்னை வந்து பார்க்கவேண்டும் என்றும் சொல்லவில்லை, அவர்கள் தன்னை ராஜாவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளவில்லை. இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரும் தன்னுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று தாவீது அவர்களை உடனே நிர்ப்பந்தம்பண்ணவுமில்லை.

தாவீது சிக்லாகிலிருந்தபோது, இஸ்ரவேல் கோத்திரத்தாரில் அநேகர் தாவீதுக்கு உதவியாக அங்கே வருகிறார்கள். "தாவீது கீசின் குமாரனாகிய சவுலினிமித்தம் இன்னும் மறைவாயிருக்கையில், சிக்லாகிலிருக்கிற அவனிடத்திற்கு வந்து, யுத்தத்திற்கு ஒத்தாசை செய்த வில்வீரரும், கவண்கல் எறிகிறதற்கும் வில்லினால் அம்பு எய்கிறதற்கும் வலது இடது கைவாட்டமான பராக்கிரமசாலிகளான மற்ற மனுஷருமாவன: சவுலின் சகோதரராகிய பென்யமீன் கோத்திரத்தில், கிபேயா ஊரானாகிய சேமாவின் குமாரர் அகியேசர் என்னும் தலைவனும், யோவாசும், அஸ்மாவேத்தின் குமாரராகிய எசியேலும், பேலேத்தும், பெராக்கா, ஆனதோத்தியனான ஏகூ என்பவர்களும் ......அக்காலத்திலே நாளுக்குநாள் தாவீதுக்கு உதவிசெய்யும் மனுஷர் அவனிடத்தில் வந்து சேர்ந்தபடியால், அவர்கள் தேவசேனையைப்போல மகா சேனையானார்கள்" (1நாளா 12:1-22).

தாவீது சிக்லாகிலிருக்கும்போதே அவரோடுகூட இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் அவருடைய உதவிக்காக வந்திருக்கிறார்கள். தாவீது அவர்கள் எல்லோரையும் கூட்டிச் சேர்த்து, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை தன்னுடைய ஆளுகைக்குட்படுத்தியிருக்க முடியும். ஆனால் தாவீதோ இஸ்ரவேல் தேசத்தை பலவந்தமாக தன்னுடைய ஆளுகைக்கு கீழ் கொண்டு வர விரும்பவில்லை. தாவீது கர்த்தருக்கு பயப்படுகிறவர். அவர் மனத்தாழ்மையுள்ளவர். இருதயத்தில் சுத்தமுள்ளவர்களும், தாழ்மையுள்ளவர்களும், அக்கிரமத்தினாலும், பலவந்தத்தினாலும், பலாத்காரத்தினாலும் தங்களை உயர்த்துவதற்கு முயற்சி பண்ண மாட்டார்கள்.

தாவீது ஒவ்வொரு காரியத்தையும் செய்யும்போது, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம் செய்வது வழக்கம். இப்போது தாவீது தன்னுடைய ஜீவியத்தின் முக்கியமான காலத்திலிருக்கிறார். இப்போதும் தான் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்.

பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: "நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா" என்று விசாரிக்கிறார். அதற்குக் கர்த்தர்: "போ" என்று சொல்லுகிறார்; தாவீது "எவ்விடத்திற்குப் போகலாம்" என்று கேட்கிறார் அதற்கு, கர்த்தர், "எப்ரோனுக்குப் போ" *(2சாமு 2:1)* என்று தாவீதுக்கு சொல்லுகிறார்.

யுத்தத்திலே தனக்கு வெற்றி கிடைக்கும் என்னும் நிச்சயம் தாவீதின் மனதிலிருக்கிறது. தாவீதின் உள்ளத்தில் கர்த்தருடைய கிருபையைக் குறித்தோ, அவருடைய உதவியையும், ஒத்தாசையையும் குறித்தோ சிறிதும் சந்தேகமில்லை. ஆனாலும் தாவீது தான் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும், கர்த்தருக்கு சித்தமான பிரகாரம் செய்யவேண்டுமென்று விரும்புகிறார். தாவீதுக்கு மனுஷருடைய தயவும் தேவைப்படுகிறது. அதைவிட அதிகமாக கர்த்தருடைய தயவு தேவைப்படுகிறது.

தான் எங்கு போனாலும் கர்த்தர் தன்னோடு கூட வரவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவருக்குப் பிரியமான வழியில் நடந்தால்தான், கர்த்தர் நம்மோடு கூட வருவார். நம்முடைய சுயசித்தத்தையும், சுயஆசைகளையும் நிறைவேற்றுவதற்கு கர்த்தர் நமக்கு உதவிசெய்ய மாட்டார். கர்த்தர் நம்முடைய சித்தத்திற்கு கீழ்ப்படியமாட்டார். நாமே கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

தாவீதோடுகூட ஆசாரியனாகிய அபியத்தார் இருக்கிறார். அவரிடத்தில் ஏபோத்து இருக்கிறது. தாவீது அபியத்தாரிடம் ஏபோத்தை கொண்டு வரச்சொல்லுகிறார். இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் மார்ப்பதக்கமாகும். அபியத்தாரும் தாவீது சொன்ன பிரகாரமாக, ஏபோத்தைக் கொண்டு வருகிறார். தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்.

தாவீது இப்போது நெருக்கத்திலில்லை. அவர் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாவதற்கு எல்லா சூழ்நிலைகளும் சாதகமாகயிருக்கிறது. இந்த சூழ்நிலையிலும் தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்.

நாமும், நமக்கு நெருக்கமான காலங்களும், கஷ்டமான காலங்களும், பிரச்சனை நிரம்பிய உபத்திரவ காலங்களும் வரும்போதுதான் கர்த்தரிடத்தில் விசாரிக்க வேண்டும் என்று நினைக்கக்கூடாது. நாம் எப்போதும், எல்லா வேளைகளிலும், எல்லா காரியங்களுக்கும் கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும். நம்முடைய சூழ்நிலைகள் நமக்கு சாதகமாகயிருந்தாலும் அல்லது பாதகமாகயிருந்தாலும் நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும்.

தாவீது கர்த்தரை நோக்கி, "நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா" என்று விசாரிக்கிறார். சிக்லாகு இப்போது அழிந்து கிடக்கிறது. அமலேக்கியர் சிக்லாகை அழித்து, அதை சுட்டெரித்துப்போட்டார்கள். சிக்லாகிலே தாவீதும் அவருடைய மனுஷரும் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையில்லை. ஆகையினால் தாவீது கர்த்தரிடத்தில் விசாரியாமலேயே, வேறொரு பட்டணத்திற்குப் போய்விடலாம். ஆனால் தாவீது தன்னுடைய சுயசித்தத்தின் பிரகாரமாக ஒன்றும் செய்ய விரும்பவில்லை.

தாவீது கர்த்தரிடத்தில், "நான் யூதாவின் பட்டணங்களில் ஒன்றில் போய் இருக்கலாமா" என்று விசாரிக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு அனுமதி கொடுத்தால் மாத்திரமே அவர் அந்தப் பட்டணத்திற்குப் போவார். இல்லையென்றால் சிக்லாகில் தங்கியிருப்பது கர்த்தருடைய சித்தம் என்று தீர்மானித்து தாவீது அங்கேயே தங்கிவிடுவார். சிக்லாகு பாழாய்க்கிடந்தாலும், அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டிருந்தாலும், அங்கே தங்குவது கர்த்தருக்கு சித்தமானால், தாவீது நிச்சயமாய் அங்கே தங்கியிருப்பார்.

தாவீது கர்த்தரிடத்தில், "நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா" என்று விசாரித்தபோது, கர்த்தர் தாவீதுக்கு, "போ" என்று உத்தரவு கொடுக்கிறார். தாவீதுக்கு எங்கே போவது என்று தெரியவில்லை. அவர் அதையும் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். "எவ்விடத்திற்குப் போகலாம்" என்று தாவீது கேட்டதற்கு, கர்த்தர், "எப்ரோனுக்குப்போ" என்று தாவீதுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

எப்ரோன் ஆசாரியரின் பட்டணங்களில் ஒன்று. இது ஒரு அடைக்கலப்பட்டணம். தாவீதுக்கு கர்த்தருடைய அடைக்கலம் தேவைப்படுகிறது. கர்த்தர் தாவீதை அடைக்கலப்பட்டணமாகிய எப்ரோனுக்கு போகச் சொல்லுகிறார். எப்ரோனிலே கர்த்தர் தாவீதுக்கு பாதுகாப்பாயிருப்பார். கர்த்தர் தாவீதோடு தங்கியிருப்பார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் தாவீதோடுகூட எப்ரோனிலே இருக்கும்.

அப்படியே தாவீது தன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமோடும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலோடும் கூட அவ்விடத்திற்குப் போகிறார். அன்றியும் தாவீது தன்னோடிருந்த மனுஷரையும், அவர்கள் குடும்பங்களையும் கூட்டிக் கொண்டுபோகிறார்; அவர்கள் எப்ரோனின் சுற்றூர்களிலே குடியேறுகிறார்கள் *(2சாமு 2:2,3)*.

தாவீது சிக்லாகிலிருந்து எப்ரோனுக்குப்போகும்போது, தன்னுடைய குடும்பத்தையும், தன்னுடைய மனுஷரையும், அவர்களுடைய குடும்பத்தாரையும் அங்கே கூட்டிக்கொண்டுபோகிறார். தாவீதின் இரண்டு மனைவிகளும் அவருடைய கஷ்டங்களிலும், வேதனைகளிலும், உபத்திரவங்களிலும் அவரோடுகூடவே இருந்தவர்கள். தனக்கு எப்ரோனிலே ஒரு பாதுகாப்பு இருக்கும்போது, அந்தப் பாதுகாப்பின் ஆசீர்வாதத்தை தன்னுடைய மனைவிமார்களும் அனுபவிக்க வேண்டுமென்று தாவீது விரும்புகிறார்.

தாவீது சிக்லாகிலிருந்த வரையிலும் அவருக்கு பிள்ளைகள் பிறந்ததாக தெரியவில்லை. தாவீது எப்ரோனுக்கு வந்து குடியேறின பிற்பாடு அவருக்கு பிள்ளைகள் பிறக்கிறது. "எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: *யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன்" (2சாமு 3:2)*.

தாவீது எப்ரோனுக்குப் போகும்போது, தன்னோடு கூடயிருந்த மனுஷரையும், அவர்களுடைய குடும்பத்தாரையும் அங்கே கூட்டிக்கொண்டு போகிறார். அவர்கள் எல்லோரும் எப்ரோனின் சிற்றூர்களிலே குடியேறுகிறார்கள். தாவீது காடுகளிலும், வனாந்தரங்களிலும், கெபிகளிலும் சுற்றி அலைந்தபோது, தாவீதின் மனுஷரும் அவரோடுகூட சுற்றி அலைந்தார்கள். இப்போது தாவீது எப்ரோனிலே குடியேறும்போது, அவருடைய மனுஷரும், அவர்களுடைய குடும்பத்தாரும் அங்கே குடியேறுகிறார்கள்.

தாவீதும், அவருடைய மனுஷரும் எப்ரோனிலே குடியேறினபொழுது, யூதாவின் மனுஷர் வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள் *(2சாமு 2:4)*. யூதா கோத்திரத்தார் எப்போதுமே இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைவிட விசேஷமானவர்களாயிருப்பார்கள். சவுலின் காலத்தில், அவர் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றியபோது, யூதாகோத்திரத்தாரைத் தனியாகவும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரை தனியாகவும் எண்ணித் தொகையேற்றினார்.

"அப்பொழுது சவுல்: இதை ஜனங்களுக்கு அறியப்படுத்தி, தெலாயிமிலே அவர்களைத் தொகைபார்த்தான்; அவர்கள் இரண்டு லட்சம் காலாட்களும், யூதா ஜனங்கள் பதினாயிரம்பேருமாயிருந்தார்கள்" *(1சாமு 15:4)*.

யூதாகோத்திரத்தாரின் செய்கைகள் எப்போதுமே விசேஷமாகவும், மற்ற கோத்திரத்தாரோடு ஒத்துப்போகாமல் தனியாகவும் இருக்கும். இவர்கள் எதை செய்தாலும் தனியாக செய்து பழக்கப்பட்டவர்கள். தங்களுடைய பழக்கத்தின் பிரகாரம் இப்போது, யூதாவின் மனுஷர், எப்ரோனுக்கு வந்து, அங்கே தாவீதை யூதாவம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாய் அபிஷேகம்பண்ணவில்லை. அவர்கள் மற்ற கோத்திரத்தாரின் காரியங்களில் தலையிடுவதில்லை. யூதாவின் மனுஷர், தாவீதை யூதாவம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினதினால், தாவீது முதலில் யூதாகோத்திரத்திற்கு ராஜாவாயிருக்கிறார். அதன் பின்பு இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரும் தாவீதை தங்களுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள். அப்போது தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார்.

தாவீதின் ராஜ்யம் ஒரே வேளையில் மொத்தமாக ஸ்தாபிக்கப்படாமல், கொஞ்சம் கொஞ்சமாக ஸ்தாபிக்கப்படுகிறது. முடிவிலே தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிறார். மேசியாவின் ராஜ்யமும் இந்தப் பூமியிலே, ஒரே வேளையில் மொத்தமாய் ஸ்தாபிக்கப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாய் ஸ்தாபிக்கப்படும். தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே அபிஷேகம்பண்ணப்பட்ட மேசியாவாகவும், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார்.

"சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை; அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்" *(எபி 2:8).*

யூதாவின் மனுஷர் தாவீதுக்கு, கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷர் சவுலை அடக்கம்பண்ணினவர்கள் என்று தாவீதுக்கு அறிவிக்கிறார்கள் *(2சாமு 2:4).* அவர்கள் சவுலுக்கு தயவு செய்து அவரை அடக்கம்பண்ணினதினால், தாவீது அவர்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். அவர்களுக்கு நன்றி சொல்லுகிறார்.

தாவீது கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்புகிறார். தாவீது தன்னுடைய ஸ்தானபதிகள் மூலமாக, அவர்களுக்கு தன்னுடைய நல்ல செய்தியை சொல்லியனுப்புகிறார். "நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய சவுலுக்கு இந்தத் தயவைச் செய்து, அவரை அடக்கம்பண்ணின படியினாலே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் உங்களைக் கிருபையும் உண்மையுமாய் நடத்துவாராக; நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத்தக்கதாக உங்களை நடத்துவேன். இப்போதும் நீங்கள் உங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டு நல்ல சேவகராயிருங்கள்; உங்கள் ஆண்டவனாகிய சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்" என்று தாவீது தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாக கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷருக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்.

சவுல் தாவீதுக்கு முன்பு இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தவர். தாவீது இப்போது யூதாதேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், இந்த தேசத்திலே தனக்கு முன்பு ராஜாவாயிருந்த சவுலை மறக்கவில்லை. தனக்கு சவுலின்மீது இருக்கிற மதிப்பையும் மரியாதையையும் தாவீது வெளிப்படுத்துகிறார். தாவீது சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியோ அல்லது சதிபண்ணியோ இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகயில்லை. தாவீதுக்கு சவுலின்மீது பகையோ கோபமோ இல்லை. சவுல்தான் தாவீதின்மீது கோபமாயிருந்தார். அவர் தாவீதுக்கு விரோதமாக பகை பாராட்டினார்.

சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம்பண்ணினதுபோல, அவர் சவுலையும் அபிஷேகம்பண்ணினார். சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். தாவீது சவுலைப்பற்றி கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் சொல்லும்போது, "உங்கள் ஆண்டவனாகிய சவுல்" *(2சாமு 2:5).* "ஆண்டவன்" என்னும் வார்த்தைக்கு, "தலைவர்" அல்லது "ராஜா" என்று பொருள். சவுல் அவர்களுடைய ராஜாவாயிருந்ததினால் அவர்கள் தங்கள் ராஜாவுக்கு செலுத்த வேண்டிய கனத்தையும், மரியாதையையும் செலுத்தினார்கள். அவர்கள் தங்கள் ராஜாவுக்கு தயவு செய்து, அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ணினார்கள்.

கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷர் சவுலுக்கு தயை செய்ததினால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று, தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக" என்றும், "கர்த்தர் உங்களை கிருபையும் உண்மையுமாய் நடத்துவாராக" என்றும் தாவீது கீலேயாத் தேசத்து மனுஷருக்கு ஆசீர்வாதமான வாழ்த்துதல் செய்தியை சொல்லுகிறார்.

கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கும்போது, தானும் அவர்களுக்கு நன்மை செய்யப்போவதாக தாவீது வாக்குப்பண்ணுகிறார், "நீங்கள் இந்தக் காரியத்தை செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத்தக்கதாக உங்களை நடத்துவேன்" *(2சாமு 2:6)* என்று தாவீது அவர்களுக்கு வாக்குப்பண்ணுகிறார்.

தாவீது அவர்களை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதித்தாலும், கர்த்தரே அவர்களுக்கு நன்மை செய்யட்டும் என்று சொல்லி, தாவீது அவர்களை அப்படியே விட்டுவிடவில்லை. அவர்களுக்கு ஒரு நன்மையும் செய்யாமல் சும்மாயிருந்துவிடவில்லை. கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார் என்று சாக்குப்போக்கு சொல்லிவிட்டு, தாவீது அவர்களுக்கு ஒரு நன்மையும் செய்யாமல், அவர்களை புறக்கணித்து விடவில்லை. கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கும்போது, தானும் அவர்களுக்கு நன்மை செய்யப்போவதாக வாக்குப்பண்ணுகிறார்.

நாம் மற்றவர்களை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கும்போது, நம்முடைய வார்த்தைகளினாலும் ஆசீர்வதிக்கவேண்டும், நம்முடைய பொருளாதாரங்களினாலும் ஆசீர்வதிக்க வேண்டும். நம்மால் செய்ய முடிந்த நன்மைகளை அவர்களுக்கு செய்து, கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவர்களுக்கு உறுதிபண்ணவேண்டும். நாம் பிறரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கும்போது, அவர்களுக்கு உதவி செய்ய நமக்கு திராணியிருக்குமென்றால், நாம் அவர்களுக்கு நிச்சயம் உதவி செய்யவேண்டும். நமக்கு திராணியிருந்தும், பிறருக்கு உதவிசெய்யாமலிருப்பது, தவறான காரியம்.

தாவீது கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷருக்கு, சவுலைப்பற்றிச் சொல்லும்போது, தன்னைப்பற்றியும் சொல்லுகிறார். "உங்கள் ஆண்டவனாகிய சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்" (2சாமு 2:7) என்று தாவீது தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாக அவர்களுக்கு சொல்லுகிறார். அவர்கள் சவுலுக்கு தயை செய்ததுபோல, தனக்கும் தயை செய்யவேண்டும். அவர்கள் தங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டு, சவுலுக்கு நல்ல சேவகராயிருந்ததுபோல, தனக்கும் நல்ல சேவகராயிருக்க வேண்டுமென்று, தாவீது தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாக அவர்களுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்.

அப்னேரும் இஸ்போசேத்தும் 2சாமு 2:8-17

2சாமு 2:8. சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டுபோய்,

2சாமு 2:9. அவனைக் கிலேயாத்தின்மேலும், அஷூரியர்மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின்மேலும், பென்யமீனின்மேலும், இஸ்ரவேலனைத்தின்மேலும் ராஜாவாக்கினான்.

2சாமு 2:10. சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிறபோது, நாற்பது வயதாயிருந்தான்; அவன் இரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்; யூதா கோத்திரத்தார்மாத்திரம் தாவீதைப் பின்பற்றினார்கள்.

2சாமு 2:11. தாவீது எப்ரோனிலே யூதா கோத்திரத்தின்மேல் ராஜாவாயிருந்த நாட்களின் இலக்கம் ஏழு வருஷமும் ஆறுமாதமுமாம்.

2சாமு 2:12.நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் சேவகரைக் கூட்டிக்கொண்டு, மகனாயீமிலிருந்து கிபியோனுக்குப் புறப்பட்டுப்போனான்.

2சாமு 2:13. அப்பொழுது செருயாவின் குமாரனாகிய யோவாபும் தாவீதின் சேவகரும் புறப்பட்டுப்போய், கிபியோனின் குளத்தண்டையில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டு, குளத்திற்கு அந்தப்பக்கத்தில் அவர்களும், குளத்திற்கு இந்தப்பக்கத்தில் இவர்களும் இறங்கினார்கள்.

2சாமு 2:14. அப்னேர் யோவாபை நோக்கி: வாலிபர் எழுந்து, நமக்கு முன்பாகச் சிலம்பம் பண்ணட்டும் என்றான். அதற்கு யோவாப்: அவர்கள் எழுந்து, அப்படிச் செய்யட்டும் என்றான்.

2சாமு 2:15. அப்பொழுது சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் பக்கத்திற்குப் பென்யமீன் மனுஷரில் பன்னிரண்டுபேரும், தாவீதுடைய சேவகரிலே பன்னிரெண்டு பேரும், எழுந்து ஒரு பக்கமாய்ப் போய்,

2சாமு 2:16. ஒருவர் தலையை ஒருவர் பிடித்து, ஒருவருடைய விலாவிலே ஒருவர் பட்டயத்தினாலே குத்தி, ஒருமிக்க விழுந்தார்கள்; அதினாலே கிபியோனிலிருக்கிற அந்த ஸ்தலம் எல்காத் அசூரிம் என்னப்பட்டது.

2சாமு 2:17. அன்றையதினம் மிகவும் கடினமான யுத்தமாகி, அப்னேரும் இஸ்ரவேல் மனுஷரும் தாவீதின் சேவகரால் முறிய அடிக்கப்பட்டார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே இப்போது இரண்டு ராஜாக்கள் இருக்கிறார்கள். ஒருவர் தாவீது. இவரை கர்த்தர் இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். மற்றொருவர் இஸ்போசேத். இவரை அப்னேர் இஸ்ரவேலுக்கு ராஜாவாக்கியிருக்கிறார். அப்னேர் நேரின் குமாரன். இவன் சவுலின் படைத்தலைவனாயிருந்தவன்.

சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவனைக் கிலேயாத்தின்மேலும், அஷூரியர்மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின்மேலும், பென்யமீனின்மேலும், இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக்குகிறான் *(2சாமு 2:8,9)*.

சவுலும் யோனத்தானும் மரித்துப் போனபின்பு, தாவீது எந்தவித தடையுமில்லாமல், பிரச்சனையுமில்லாமல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாவார் என்னும் எதிர்பார்ப்பு பொதுவாக எல்லோருடைய மனதிலும் உண்டாயிற்று. கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார் என்பதும், கர்த்தர் தாவீதுக்கு உதவியாயிருக்கிறார் என்பதும் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

ஆனாலும் தாவீதுக்கு விரோதமாக ஒரு சிலர் எழும்புகிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே எல்லோரும் தாவீதை தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய ஆலோசனைக்கு அவர்களெல்லோரும் செவிகொடுக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணின தாவீதை, இஸ்ரவேலர் எல்லோரும் தங்களுக்கு ராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரிவினை உண்டாயிற்று. கர்த்தருடைய ஆலோசனைகளுக்கு சிலர் செவிகொடுக்காமல், அவர்கள் மனுஷருடைய ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறார்கள். சவுலின் படைத்தலைவனான அப்னேர் என்பவன் தாவீதுக்கு விரோதமாக எழும்புகிறான். சவுலின் மூன்று குமாரரும் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே செத்துப்போனார்கள்.

சவுலுக்கு மற்றும் ஒரு குமாரன் இருக்கிறான். இவனுடைய பெயர் இஸ்போசேத். இவன் மிகவும் பலவீனமானவன். ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, இஸ்போசேத் யுத்தத்திற்குப்போகாமல், அரண்மனையிலேயே தங்கிவிட்டான். சவுலோடுகூட யுத்தத்திற்குப்போக இஸ்போசேத்திற்கு பெலமுமில்லை, தைரியமுமில்லை, துணிச்சலுமில்லை, ஆகையினால் தகுதியுமில்லை.

இஸ்போசேத் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு தகுதியற்றவனாகயிருந்தாலும், இஸ்ரவேலின் ராஜாசனத்திலே வீற்றிருந்து, இஸ்ரவேலை ஆளுகை செய்ய அவனுக்கு தகுதியிருப்பதாக ஒரு சிலர் நினைக்கிறார்கள். தாவீது தங்களுக்கு ராஜாவாவாதை இவர்கள் விரும்பவில்லை.

சவுலின் படைத்தலைவனாகிய அப்னேர் தாவீக்கு விரோதமாக எழும்புகிறான். இவன் சவுலுக்கு சொந்தக்காரன். இவனால் தனித்து நின்று தாவீதை எதிர்க்க முடியாது. ஆகையினால் அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை முன்நிறுத்தி, தாவீதை எதிர்க்கிறான்.

சவுல் உயிரோடிருந்தபோது, அவர் அப்னேருக்கு தன் ராஜ்யத்திலே உயர்ந்த பதவியைக் கொடுத்தார். அப்னேர் சவுலின் படைத்தளபதியாயிருந்தான். இஸ்ரவேல் தேசத்தார் மத்தியிலே அப்னேருக்கு, அவனுடைய பதவியின் மூலமாக, மதிப்பும் மரியாதையும் இருந்தது. சவுல் செத்துப்போனபின்பு, அப்னேரின் மதிப்பும் மரியாதையும் செத்துப்போகும். அப்னேர் ஏற்கெனவே அனுபவித்த மதிப்பும் மரியாதையும் அவனுக்கு கிடைக்கவேண்டுமென்றால், அப்னேர் சொல்படி கேட்கிற ஒருவன் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்கவேண்டும். இதற்காக அப்னேர் இஸ்போசேத்தை இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாக்குகிறான்.

நேரின் குமாரனாகிய அப்னேர், சவுலுக்கு சிறிய தகப்பன். சவுலின் குடும்பத்திற்கும் அப்னேருக்கும் ஏற்கெனவே இரத்த சம்பந்தமும், உறவும் இருக்கிறது. ஆகையினால் அப்னேர் இஸ்போசேத்திற்கு உதவி செய்ய விரும்புகிறான். இதன் மூலமாக அப்னேர் தன்னுடைய மகிமையையும், கனத்தையும் காத்துக்கொள்ள திட்டமிடுகிறான். அப்னேர் மறுபடியும் பழைய கவுரவத்திற்கு வரவேண்டுமென்றால், இஸ்போசேத்தை இஸ்ரவேலுக்கு ராஜாவாக்குவதைவிட, அவனுக்கு வேறு வழி எதுவுமில்லை.

அப்னேர் தன்னுடைய சுயஆதாயத்திற்காக, சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை, இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாக்குகிறான். அவன் இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கே அவனை ராஜாவாக்குகிறான். மகனாயீம் யோர்தான் நதிக்கு அப்புறத்திலே இருக்கிறது. தாவீது எப்ரோனிலே இருக்கிறார். தாவீதால் சீக்கிரமாக நெருங்க முடியாதபடிக்கு, எப்ரோனுக்கு தூரத்திலுள்ள மகனாயீமிலே, அப்னேர் இஸ்போசேத்தை ராஜாவாக்குகிறான்.

இஸ்போசேத்திற்கு இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகும் தகுதி இல்லை. அப்னேர் அவனை ராஜாவாக்கியிருக்கவில்லையென்றால், இஸ்போசேத் இஸ்ரவேலுக்கு ராஜாவாகியிருக்கமாட்டான். அவனுக்கு ராஜாவாகவேண்டும் என்னும் விருப்பமுமில்லை. அதற்கு தேவையான தகுதியுமில்லை. அப்னேர் தன்னுடைய சொந்த ஆசையை நிறைவேற்றுவதற்காக, இஸ்போசேத்தை இஸ்ரவேலுக்கு ராஜாவாக்குகிறான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாவாதற்கு பதிலாக, தன்னுடைய உறவுக்காரரில் ஒருவனான இஸ்போசேத் இஸ்ரவேலுக்கு ராஜாவாக வரவேண்டும். இஸ்ரவேலின் ராஜாசனம் சவுலின் வம்சத்தைவிட்டு வெளியேறிப்போய்விடக்கூடாது என்பது அப்னேரின் திட்டம். சவுலின் குடும்பத்தார் இஸ்ரவேலின் ராஜாசனத்தில் வீற்றிருந்தால், அப்னேருக்கு தேசத்திலே மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

மகனாயீமிலே அப்னேர் ஏற்கெனவே தன்னுடைய பலத்தை நிரூபித்திருக்கிறான். தாவீது யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள எப்ரோனிலிருக்கிறார். மகனாயீம் யோர்தானுக்கு அப்புறத்திலிருக்கிறது. தாவீதுக்கு யோர்தானுக்கு அப்புறத்திலே அக்கரையோ, ஆர்வமோ இருக்காது என்று அப்னேர் நினைக்கிறான்.

தாவீதும் அவருடைய மனுஷரும் எப்ரோனிலிருந்து தனக்கு விரோதமாக, மகனாயீமுக்கு யுத்தம்பண்ண வந்தாலும், தூரம் அதிகமாயிருப்பதினால், இங்கு வந்து சேர அதிக நாளாகும். அந்த நாளுக்குள் தங்களுடைய சேனையை திடப்படுத்திக்கொள்ளலாம் என்று அப்னேர் நினைக்கிறான்.

அப்னேரின் ஆலோசனையை இஸ்ரவேல் கோத்திரத்தார் ஏற்றுக்கொள்கிறார்கள். யூதாகோத்திரத்தார் மாத்திரமே தாவீதை தங்களுக்கு ராஜாவாக்கியிருக்கிறார்கள். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார், இஸ்போசேத்தை தங்களுக்கு ராஜாவாக ஏற்றுக்கொள்கிறார்கள். அப்னேர் இஸ்போசேத்தை, கிலேயாத்தின்மேலும், அஷூரியர்மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின்மேலும், பென்யமீனின் மேலும், இஸ்ரவேலனைத்தின்மேலும் ராஜாவாக்குகிறான் (2சாமு 2:9).

சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிறபோது, நாற்பது வயதாயிருந்தான்; அவன் இரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்; யூதா கோத்திரத்தார்மாத்திரம் தாவீதைப் பின்பற்றினார்கள். தாவீது எப்ரோனிலே யூதா கோத்திரத்தின்மேல் ராஜாவாயிருந்த நாட்களின் இலக்கம் ஏழு வருஷமும் ஆறுமாதமுமாம் (2சாமு 2:10,11).

நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் சேவகரைக் கூட்டிக்கொண்டு, மகனாயீமிலிருந்து கிபியோனுக்குப் புறப்பட்டுப்போகிறான் (2சாமு 2:12).

அப்பொழுது செருயாவின் குமாரனாகிய யோவாபும் தாவீதின் சேவகரும் புறப்பட்டுப்போய், கிபியோனின் குளத்தண்டையில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டு, குளத்திற்கு அந்தப்பக்கத்தில் அவர்களும், குளத்திற்கு இந்தப்பக்கத்தில் இவர்களும் இறங்குகிறார்கள் (2சாமு 2:13).

இரண்டுபேருமே தங்களுடைய மொத்த சேனையையும் திரட்டிக்கொண்டு, யுத்தம்பண்ணப்போகவில்லை. இந்த யுத்தத்தின் மூலமாய் ஏற்பட்ட ஜீவசேதாரம் மிகவும் குறைவாயிருக்கிறது.

"யோவாப் அப்னேரைத் தொடராமல் ஜனங்களையெல்லாம் கூடிவரச்செய்தான்; தாவீதின் சேவகரில் பத்தொன்பதுபேரும் ஆசகேலும் குறைந்திருந்தார்கள். தாவீதின் சேவகரோ பென்யமீனரிலும், அப்னேரின் மனுஷரிலும், முந்நூற்றறுபதுபேரை மடங்கடித்தார்கள்" (2சாமு 2:30,31).

தாவீது யுத்தத்திற்கு தன்னுடைய சேவகர் எல்லோரையும் அனுப்பவில்லை. அவர் கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ற வேளைக்காக காத்திருக்கிறார். சில சமயங்களில் பிரச்சனைகள் யுத்தம்பண்ணாமல், தானாகவே தீர்ந்துவிடும். ஏற்ற வேளை வரும்போது பிரச்சனைகள் மறைந்துவிடும். தாவீதுக்கு இப்போது அப்னேர் மூலமாகவும், இஸ்போசேத் மூலமாகவும் பிரச்சனை வந்திருக்கிறது.

அப்னேரோடு கூடயிருக்கிற சேவகர்கள் எல்லோருமே இஸ்ரவேலர்கள். கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரம் தாவீது இந்த இஸ்ரவேருக்கு ராஜாவாய் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார். அவர்களை பாதுகாக்கவேண்டியது தாவீதின் கடமை. ஆகையினால் இஸ்ரவேலுக்கு விரோதமாக பெரிய யுத்தம்பண்ணி, அவர்களுக்கு பெரிய சங்காரத்தை உண்டுபண்ண தாவீது விரும்பவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே அப்னேரையும், இஸ்போசேத்தையும் பின்பற்றுகிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களில் அநேகர் இஸ்போசேத்தோடும் சேராமல், தாவீதோடும் சேராமல் நடுநிலையிலிருக்கிறார்கள். வேறு சிலரோ அப்னேருக்கு பயந்து, இஸ்போசேத்தோடு, தாவீதுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சவுலின் ராஜாசனத்திற்கு கீழே பல வருஷங்களாக இருந்ததினால், அவர்கள் அப்னேரை தங்கள் தலைவராகவும் இஸ்போசேத்தை தங்கள் ராஜாவாகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தாவீது எப்ரோனிலே யூதாகோத்திரத்தின்மேல் ராஜாவாயிருந்த நாட்களின் இலக்கம் ஏழுவருஷமும் ஆறுமாதமுமாம். இந்த ஏழுவருஷ காலத்தில், இஸ்ரவேல் தேசத்தின் பராக்கிரமசாலிகளும், யுத்தவீரர்களும் தாவீதோடு கூட சேர்ந்திருக்கிறார்கள். இவர்களிடத்தில் இருமனமில்லை. இவர்கள் எல்லாரும் ஒரே மனமாய் தாவீதை ஆதரிக்கிறார்கள்.

அப்னேரின் மனுஷரும் தாவீதின் மனுஷரும் கிபியோனின் குளத்தண்டையில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டு, குளத்திற்கு அந்தப்பக்கத்தில் அவர்களும், குளத்திற்கு இந்தப்பக்கத்தில் இவர்களும் இறங்குகிறார்கள் *(2சாமு 2:13)*. இந்த யுத்தத்திலே அப்னேர் தீவிரமாயிருக்கிறான். தாவீதோ கிபியோனின் குளத்திற்கு வராமல் எப்ரோனிலே தங்கியிருக்கிறார். அவர் கர்த்தருக்கு சித்தமான வேளைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் காத்திருக்கும்போது, சவுலின் வீட்டாரும், அவர்களுக்கு தலைவனாக அப்னேரும், தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். அப்னேர் யுத்தம்பண்ணுவதற்கு ஏற்ற இடமாக கிபியோனைத் தெரிந்தெடுக்கிறான். இது பென்யமீன் கோத்திரத்தாருடைய சுதந்தரத்திலுள்ளது. சவுலுக்கு கிபியோனிலே அநேக சிநேகிதர்கள் இருக்கிறார்கள்.

அப்னேர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கும்போது, தாவீதின் மனுஷர் அப்னேருக்கு பயந்து ஓடிப்போய்விடவில்லை. செருயாவின் குமாரனாகிய யோவாப் தாவீதின் படைக்கு தலைவனாயிருக்கிறான். யோவாப் தாவீதின் சேவகரை கிபியோன் குளத்தண்டையிலே, குளத்திற்கு இந்தப் பக்கத்தில் கூட்டிச் சேர்க்கிறான்.

தாவீதின் மனதிலே பயமோ, குழப்பமோ, சந்தேகமோ இல்லை. கர்த்தர் தன்னோடு கூடயிருக்கிறார் என்று தாவீது நிச்சயமாய் நம்புகிறார். கர்த்தர் தனக்காக யுத்தம்பண்ணுவார் என்றும், யுத்தத்திலே தனக்கு ஜெயத்தைக் கொடுப்பார் என்றும் தாவீது நிச்சயமாய் நம்புகிறார். தாவீது தன்னுடைய சுயபலத்தையோ, சுயபராக்கிரமத்தையோ நம்பாமல், சேனைகளின் கர்த்தரையும், அவருடைய சர்வவல்லமையையும் நம்புகிறார்.

தாவீது கர்த்தரை நம்புவதினால், யுத்தம் எங்கே நடைபெறுகிறது என்பதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. கிபியோன் அப்னேருக்கு சாதகமான இடமாகயிருந்தாலும் அந்த ஊரிலே சவுலின் சிநேகிதர் ஏராளமானோர் இருந்தாலும், அது பென்யமீன் கோத்திரத்து சுதந்தரவீதத்திலிருந்தாலும், கர்த்தர் அங்கேயும் தனக்கு உதவிசெய்து, தனக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார் என்று தாவீது நம்புகிறார்.

இஸ்போசேத்தின் மனுஷர் கிபியாவின் குளத்திற்கு அந்தப்பக்கத்திலும், தாவீதின் மனுஷர் கிபியாவின் குளத்திற்கு இந்தப் பக்கத்திலும் இருக்கிறார்கள். இஸ்போசேத்தின் படைக்கு அப்னேர் தலைவனாகவும், தாவீதின் சேனைக்கு யோவாப் தலைவனாகவும் இருக்கிறார்கள்.

அப்பொழுது அப்னேர் யோவாபை நோக்கி: "வாலிபர் எழுந்து, நமக்கு முன்பாகச் சிலம்பம் பண்ணட்டும்" என்று சொல்லுகிறான். அதற்கு யோவாப்: "அவர்கள் எழுந்து, அப்படிச் செய்யட்டும்" *(2சாமு 2:14)* என்று சொல்லி, அப்னேரின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறான்.

ஒவ்வொரு சேனையிலும் பன்னிரண்டு பேர் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். முழுசேனையும் யுத்தம்பண்ணுவதற்கு பதிலாக, ஒவ்வொரு சேனையிலும் தெரிந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு பேர் மாத்திரம் இப்போது சிலம்பம் பண்ணப்போகிறார்கள். இதில் யார் ஜெயிக்கிறார்களோ, அவர்களுடைய சேனை ஜெயம் பெற்றதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

சேனையில் ஏராளமானோர் செத்துப்போவதற்கு பதிலாக, இப்போது யுத்தம்பண்ணுகிற பன்னிரண்டு பேரில் ஒரு சிலர் மாத்திரம் செத்துப்போனால், யுத்தத்திலே ஜீவசேதாரம் சொற்ப எண்ணிக்கையிலிருக்கும். யோவாப் தாவீதினிடத்தில் பயிற்சி பெற்றவர். தாவீது அவருக்கு யுத்த தந்திரங்களையும், யுத்த வியூகங்களையும் கற்றுக்கொடுத்திருக்கிறார். அப்னேர் சொல்லுவது யோவாபின் பார்வைக்கு நலமாயிருக்கிறது. அப்னேரின் வார்த்தைகளை தாவீதும் ஏற்றுக்கொள்வார் என்று யோவாப் தீர்மானிக்கிறார்.

யுத்தம்பண்ணுவது விவேகமல்ல. தாவீது இஸ்போசேத்திற்கு விரோதமாக முதலில் யுத்தம்பண்ணப்போகவில்லை. இஸ்போசேத்தின் சேவகர்தான் தாவீதுக்கு விரோதமாக முதலில் யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். அப்னேர் அவர்களுக்கு தலைவனாயிருக்கிறான். தங்களோடு யுத்தம்பண்ண வருமாறு அப்னேர் கூப்பிடுகிறான். அவனுடைய சவாலை ஏற்றுக்கொள்ளாவிட்டால், தாவீதின் சேனைக்கு அவமானமாயிருக்கும். ஆகையினால் யோவாப் அப்னேரின் சவாலை ஏற்றுக்கொண்டு, "அப்படிச் செய்யட்டும்" என்று சொல்லுகிறான்.

அப்பொழுது சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் பக்கத்திற்குப் பென்யமீன் மனுஷரில் பன்னிரண்டுபேரும், தாவீதுடைய சேவகரிலே பன்னிரெண்டு பேரும், எழுந்து ஒரு பக்கமாய்ப் போய், ஒருவர் தலையை ஒருவர் பிடித்து, ஒருவருடைய விலாவிலே ஒருவர் பட்டயத்தினாலே குத்தி, ஒருமிக்க விழுகிறார்கள் (2சாமு 2:15,16).

யுத்தம்பண்ணுவதற்கு அப்னேரின் மனுஷர் முதலாவதாக வருகிறார்கள். ஆனாலும் அப்னேரின் மனுஷர் பன்னிரண்டு பேரும் இந்த யுத்தத்தில் செத்துப்போகிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின தாவீதின் சேவகரில் பன்னிரண்டுபேரும் செத்துப்போகிறார்கள். யுத்தம்பண்ணின இருபத்து நாலுபேரும் செத்துப்போனதை அப்னேரும் பார்க்கிறான். யோவாபும் பார்க்கிறான்.

அவர்கள் கிபியோனின் குளத்தண்டையிலே ஒருவருக்கு விரோதமாக மற்றொருவர் எழும்பி சிலம்பம் பண்ணுகிறார்கள். அவர்கள் பன்னிரண்டு பேரும் முரட்டுக்குணமுள்ளவர்கள். சரீர பெலமுள்ளவர்கள். அவர்களுடைய சரீரம் கற்பாறையைப்போல் இருக்கிறது. ஆகையினால் அந்த ஸ்தலம் "எல்காத் அசூரிம்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பெயருக்கு "கற்பாறையைப் போன்ற மனுஷரின் ஸ்தலம்" என்று பொருள்.

இந்த இருபத்து நாலு பேரின் சரீரமும் கற்பாறையைப்போல உறுதியாயிருந்தது மாத்திரமல்ல, அவர்களுடைய மனதும் உறுதியாயிருந்தது. இருபத்து நாலு பேரில் ஒருவர்கூட யுத்தம்பண்ணாமலிருக்கவில்லை. ஒருவர்கூட தோற்று ஓடிப்போகவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும், ஒருவர் தலையை ஒருவர் பிடித்து, ஒருவருடைய விலாவிலே ஒருவர் பட்டயத்தினாலே குத்தி, ஒருமிக்க விழுகிறார்கள். ஒருவருக்கும் ஜெயமும் உண்டாகவில்லை, தோல்வியும் உண்டாகவில்லை. ஒருவரும் தப்பிக்கவுமில்லை. அவர்களில் யாரும் மரணத்திற்கு பயப்படவுமில்லை. மனஉறுதியோடு யுத்தம்பண்ணுகிறார்கள்.

அதன்பின்பு இஸ்போசேத்தின் சேவகருக்கும், தாவீதின் சேவகருக்கும் யுத்தமுண்டாயிற்று. அன்றையதினம் மிகவும் கடினமான யுத்தமாகி, அப்னேரும் இஸ்ரவேல் மனுஷரும் தாவீதின் சேவகரால் முறிய அடிக்கப்படுகிறார்கள் (2சாமு 2:17).

அப்னேரும் ஆசகேலும் 2சாமு 2:18-24

2சாமு 2:18. அங்கே செருயாவின் மூன்று குமாரராகிய யோவாபும் அபிசாயும் ஆசகேலும் இருந்தார்கள்; ஆசகேல் வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிறவனுமாயிருந்தான்.

2சாமு 2:19. அவன் அப்னேரைப் பின்தொடர்ந்து, வலதுபுறத்திலாகிலும் இடதுபுறத்திலாகிலும், அவனைவிட்டு விலகாமல் துரத்திக்கொண்டுபோனான்.

2சாமு 2:20. அப்னேர் திரும்பிப் பார்த்து: நீ ஆசகேல் அல்லவா என்றான். அவன்: நான்தான் என்றான்.

2சாமு 2:21. அப்பொழுது அப்னேர் அவனை நோக்கி: நீ வலது பக்கத்திற்காகிலும் இடதுபக்கத்திற்காகிலும் விலகி, வாலிபரில் ஒருவனைப் பிடித்து, அவனை உரிந்துகொள் என்றான்; ஆசகேலோ விடமாட்டேன் என்று தொடர்ந்துபோனான்.

2சாமு 2:22. பின்னும் அப்னேர் ஆசகேலை நோக்கி: நீ என்னை விட்டுப்போ; நான் உன்னைத் தரையோடே ஏன் வெட்டவேண்டும்? பிற்பாடு உன் சகோதரனாகிய யோவாபின் முகத்திலே எப்படி விழிப்பேன் என்றான்.

2சாமு 2:23. ஆனாலும் அவன் விலகிப்போகமாட்டேன் என்றபடியினால், அப்னேர் அவனை ஈட்டியின் பின்புற அலகினால் அவன் வயிற்றிலே குத்தினான்; ஈட்டி முதுகிலே புறப்பட்டது; அவன் அங்கேதானே விழுந்து செத்தான்; ஆசகேல் விழுந்துகிடக்கிற இடத்திலே வந்தவர்களெல்லாரும் தரித்து நின்றார்கள்.

2சாமு 2:24. யோவாபும் அபிசாயும் சூரியன் அஸ்தமிக்குமட்டும் அப்னேரைப் பின்தொடர்ந்தார்கள்; கிபியோன் வனாந்தரவழிக்கு அருகான கீயாவுக்கு எதிரே இருக்கிற அம்மா மேடுமட்டும் வந்தார்கள்.

செருயாவுக்கு மூன்று குமாரர் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் யோவாப், அபிசாய், ஆசகேல் என்பதாகும். யோவாப் தாவீதின் சேனைக்கு தலைவனாயிருக்கிறான். ஆசகேல் வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிறவனுமாயிருக்கிறான் (2சாமு 2:18). ஆசகேல் சத்துருவைப் பார்த்து வேகமாய் பயந்து ஓடுகிறவனல்ல. அவன் சத்துருவைத் துரத்திக்கொண்டு ஓடுகிறவன்.

செருயாவின் மூன்று குமாரரும் தாவீதின் சொந்தக்காரர்கள். இவர்கள் தாவீதோடு கூடவே இருக்கிறார்கள். தாவீதின் சேனையில் இவர்களுக்கு முக்கிய பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசகேல் வேகமாய் ஓடுகிறவனாயிருந்தாலும், அவனுக்கு யுத்தத்திலே அதிக பழக்கமில்லை. அப்னேரிடத்தில் யுத்ததந்திரமும், திறமையும், அனுபவமும் இருக்கிறது. ஆசகேலிடம் யுத்த அனுபவமில்லை.

அப்னேரும் இஸ்ரவேல் மனுஷரும் தாவீதின் சேவகரால் முறியடிக்கப்படுகிறார்கள். அவர்களால் தாவீதின் சேனையை எதிர்த்து நிற்கமுடியவில்லை. அவர்கள் தங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ள தப்பித்து ஓடுகிறார்கள். அப்பொழுது ஆசகேல் அப்னேரைப் பின்தொடர்ந்து, வலதுபுறத்திலாகிலும் இடதுபுறத்திலாகிலும், அவனை விட்டு விலகாமல் துரத்திக்கொண்டுபோகிறான் (2சாமு 2:19).

அப்னேரை பிடித்துக் கைதுபண்ணவேண்டும் என்பது ஆசகேலின் விருப்பம். இஸ்போசேத்தின் சேனையிலுள்ளவர்கள் எல்லோரும் தப்பித்து ஓடும்போது, ஆசகேல் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, அப்னேரைப் பிடிப்பதற்காக அவனைத் துரத்திக்கொண்டு ஓடுகிறான். ஆசகேலின் மனதிலே பெருமையிருக்கிறது. இவன் செருயாவின் குமாரன். தாவீதுக்கு சொந்தக்காரன். வேகமாய் ஓடக்கூடியவன். ஆகையினால் அப்னேரைத் தன்னால் பிடிக்க முடியும் என்று நினைத்து வேகமாய் ஓடுகிறான். அப்னேரின் யுத்ததந்திரமும், யுத்த அனுபவமும் ஆசகேலுக்கு இல்லை.

ஆசகேல் தன்னைப் பின்தொடர்ந்து துரத்திக்கொண்டு வருவதை அப்னேர் பார்க்கிறான்.

அப்னேர் திரும்பிப் பார்த்து: "நீ ஆசகேல் அல்லவா" என்று கேட்கிறான். ஆசகேல் அப்னேருக்கு: "நான்தான்" என்று அவனைத் துரத்திக்கொண்டே பதில் சொல்லுகிறான். அப்பொழுது அப்னேர் அவனை நோக்கி: "நீ வலது பக்கத்திற்காகிலும் இடதுபக்கத்திற்காகிலும் விலகி, வாலிபரில் ஒருவனைப் பிடித்து, அவனை உரிந்துகொள்" என்று சொல்லுகிறான்; ஆனால் ஆசகேலோ "விடமாட்டேன்" என்று சொல்லி அப்னேரை தொடர்ந்துபோகிறான் (2சாமு 2:20,21).

அப்னேரை சிறைப்பிடித்தாலும், அல்லது அப்னேரைக் கொன்றுபோட்டாலும் யுத்தம் முடிவுக்கு வந்துவிடும் என்று ஆசகேல் நினைக்கிறான். அப்னேர் செத்துப்போனால் தாவீது இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு தடையும் இருக்காது என்று ஆசகேல் தீர்மானித்திருக்கிறான். தாவீதுக்கு இருக்கிற ஒரே பிரச்சனையும், ஒரே தடையும் அப்னேர்தான் என்று நினைத்து, ஆசகேல் அவனைப் பிடித்து கொன்றுபோட, வேகமாகத் துரத்துகிறான்.

அப்னேருக்கு தன்னுடைய பலமும் தெரியும். ஆசகேலுடைய பலவீனமும் தெரியும். ஆசகேல் அப்னேரைப் பின்தொடர்ந்து போகவில்லை. அவன் ஒரு ஆபத்தை பின்தொடர்ந்து போகிறான். அப்னேர் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றால், ஆசகேலைக் கொல்லவேண்டும். அப்னேர் ஆசகேல்மீது மனிதாபிமானத்தோடு பேசுகிறான். ஆசகேலுக்கு வரப்போகும் ஆபத்தை அவனுக்கு எச்சரிப்பாகச் சொல்லுகிறான். ஆசகேல் தனக்குத்தானே பொல்லாப்பைத் தேடிக்கொள்கிறான்.

"நீ ஏதோமியரை அடித்தாய் என்று பெருமைபாராட்ட உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப்பண்ணினது; இப்போதும் நீ உன் வீட்டிலே இரு; நீயும் உன்னோடே யூதாவும்கூட விழும்படிக்கு, பொல்லாப்பைத் தேடிக்கொள்வானேன் என்று சொல்லச்சொன்னான்" *(2நாளா 25:19).*

ஆசகேலைக் கொல்லவேண்டும் என்பது அப்னேரின் விருப்பமல்ல. இப்போது அப்னேரும் இஸ்ரவேல் மனுஷரும் தாவீதின் சேவகரால் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்னேர் தாவீதின் மனுஷருக்கு தப்பிக்க வேண்டும். இதுவே அப்னேரின் நோக்கம். ஆசகேலால் தன்னைப் பிடித்துக்கொன்றுபோட முடியாது என்பது அப்னேருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. தன்னிடத்திலுள்ள யுத்ததந்திரம் ஆசகேலிடத்தில் இல்லை என்பதும் அப்னேருக்கு தெரியும்.

ஆகையினால் ஆசகேல் தன்னைப் பிடிக்க முயற்சி பண்ணாமல், தன் சேனையிலுள்ள வேறு யாராவது ஒரு வாலிபனைப் பிடித்து, அவனைக் கொன்றுபோடுமாறு, அப்னேர் ஆசகேலுக்கு யோசனை சொல்லுகிறான். ஆனால் ஆசகேல் அப்னேரின் யோசனைக்கு செவிகொடுக்கவில்லை.

ஆசகேல் அப்னேரை இன்னும் பின்தொடர்ந்து வந்தால், அப்னேர் தன்னுடைய பாதுகாப்புக்காக ஆசகேலைக் கொன்றுபோடவேண்டியது வரும். அப்னேர் அதையும் அவனுக்கு மறைக்காமல் சொல்லி, அவனை எச்சரிக்கிறான். அப்னேர் ஆசகேலை நோக்கி: "நீ என்னை விட்டுப்போ; நான் உன்னைத் தரையோடே ஏன் வெட்டவேண்டும்? பிற்பாடு உன் சகோதரனாகிய யோவாபின் முகத்திலே எப்படி விழிப்பேன்" *(2சாமு 2:22)* என்று சொல்லுகிறான்.

ஆனாலும் ஆசகேல் "விலகிப்போகமாட்டேன்" என்ற படியினால், அப்னேர் அவனை ஈட்டியின் பின்புற அலகினால் அவன் வயிற்றிலே குத்துகிறான்; ஈட்டி முதுகிலே புறப்படுகிறது; அவன் அங்கேதானே விழுந்து செத்துப்போகிறான்; ஆசகேல் விழுந்துகிடக்கிற இடத்திலே வந்தவர்களெல்லாரும் தரித்து நிற்கிறார்கள் *(2சாமு 2:23).*

அப்னேர் தன்னோடு அன்பான வார்த்தைகளைப் பேசுவதினால், அவன் தனக்கு பயப்படுகிறான் என்று ஆசகேல் தப்பிதமாக நினைக்கிறான். ஆசகேலுக்கு யுத்த தந்திரம் தெரியாது. யுத்தத்திலே நேருக்கு நேர் நின்று யுத்தம்பண்ணவேண்டும் என்று ஆசகேல் நினைக்கிறான். திறமையுள்ளவர்களுக்குத்தான் ஜெயம் கிடைக்கும் என்பது ஆசகேலின் எதிர்பார்ப்பு. ஆனால் யுத்தக்களத்தில் திறமையும் வேண்டும். வீரமும் வேண்டும், விவேகமும் வேண்டும். யுத்த வியூகமும், யுத்த தந்திரமும் தெரிந்திருக்கவேண்டும்.

தான் அப்னேரைத் துரத்திக்கொண்டு போவதினால், அப்னேர் தனக்குப் பயந்து ஓடுகிறான் என்று ஆசகேல் நினைக்கிறான். யுத்தவீரர்கள் ஒரு ஈட்டியின் முன்புற அலகினால்தான் குத்துவார்கள் என்று ஆசகேல் எதிர்பார்க்கிறான். ஆனால் அப்னேரோ ஒரு தந்திரசாலி. அவன் தன்னுடைய ஈட்டியின் பின்புற அலகினால் ஆசகேலின் வயிற்றை குத்திவிடுகிறான். இது ஆசகேலுக்கு எதிர்பாராத தாக்குதலாயிருக்கிறது. அப்னேரின் ஈட்டி ஆசகேலின் முதுகிலே புறப்படுகிறது. அப்னேரை வேகமாக பின்தொடர்ந்து ஓடின ஆசகேல், இப்போது அங்கேயே செத்துவிழுகிறான். ஆசகேல் ஆபத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனால் யுத்தக்களத்திலே எதிர்பாராத வேளையில், எதிர்பாராத விதமாக ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது.

ஆசகேல் செருயாவின் குமாரன். இவன் யோவாப், அபிசாய் ஆகியோரின் சகோதரன். ஆசகேல் செத்துப்போனதைப் பார்த்து, அவனுடைய சகோதரராகிய யோவாபும் அபிசாயும் சோர்ந்துபோகவில்லை. அவர்கள் இருவரும் சூரியன் அஸ்தமிக்கு மட்டும் அப்னேரைப் பின்தொடர்ந்து போகிறார்கள். அவர்கள் கிபியோன் வனாந்தரவழிக்கு அருகான கீயாவுக்கு எதிரே இருக்கிற அம்மா மேடுமட்டும் வருகிறார்கள் *(2சாமு 2:24)*.

சூரிய வெளிச்சத்தில் ஓடுவதுபோல, சூரியன் அஸ்தமித்த பின்பு ஓடமுடியாது. இருட்டிலே ஓடுகிறவர்கள் யாரும் அவர்களுடைய பார்வைக்கு தெரியமாட்டார்கள். ஆகையினால் யுத்தவீரர்கள் இரவுவேளையிலே யுத்தம்பண்ணாமல் ஓய்வெடுப்பது வழக்கம்.

அப்னேரும் யோவாபும் 2சாமு 2:25-32

2சாமு 2:25. அப்பொழுது அப்னேரைப் பின்சென்ற பென்யமீன் புத்திரர் ஒரே படையாகக் கூடி, ஒரு மலையின் உச்சியிலே நின்றார்கள்.

2சாமு 2:26. அப்பொழுது அப்னேர் யோவாபைப் பார்த்துக் கூப்பிட்டு, பட்டயம் எப்போதும் சங்காரம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டுமோ, முடிவிலே கசப்புண்டாகும் என்று அறியீரோ, தங்கள் சகோதரரை விட்டுப் பின்வாங்கும்படிக்கு எந்த மட்டும் ஜனங்களுக்குச் சொல்லாதிருப்பீர் என்றான்.

2சாமு 2:27. அதற்கு யோவாப்: இன்று காலமே நீர் பேசாதிருந்தீரானால் ஜனங்கள் அவரவர் தங்கள் சகோதரரைப் பின்தொடராமல், அப்போதே திரும்பிவிடுவார்கள் என்று தேவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 2:28. யோவாப் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் இஸ்ரவேலைத் தொடராமலும், யுத்தம்பண்ணாமலும் நின்றுவிட்டார்கள்.

2சாமு 2:29. அன்று ராமுழுவதும் அப்னேரும் அவன் மனுஷரும் அந்தரவெளி வழியாய்ப் போய், யோர்தானைக் கடந்து பித்ரோனை உருவ நடந்து தாண்டி, மகனாயிமுக்குப் போனார்கள்.

2சாமு 2:30. யோவாப் அப்னேரைத் தொடராமல் ஜனங்களையெல்லாம் கூடிவரச்செய்தான்; தாவீதின் சேவகரில் பத்தொன்பதுபேரும் ஆசகேலும் குறைந்திருந்தார்கள்.

2சாமு 2:31. தாவீதின் சேவகரோ பென்யமீனரிலும், அப்னேரின் மனுஷரிலும், முந்நூற்றறுபதுபேரை மடங்கடித்தார்கள்.

2சாமு 2:32. அவர்கள் ஆசகேலை எடுத்து, பெத்லெகேமிலுள்ள அவனுடைய தகப்பன் கல்லறையிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்; யோவாபும் அவன் மனுஷரும் இரா முழுவதும் நடந்து, பொழுது விடியும் போது எப்ரோனிலே சேர்ந்தார்கள்.

அப்னேரும் இஸ்ரவேல் மனுஷரும் தாவீதின் சேவகரால் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்னேர் தன் ஜீவனைக் காத்துக்கொள்ள ஓடுகிறான். தன்னுடைய சேவகரும், தாவீதின் சேவகரும் இனிமேல் யுத்தம்பண்ணக்கூடாது என்று அப்னேர் எதிர்பார்க்கிறான். அப்னேரின் சேனையிலுள்ளவர்கள் எல்லோருமே சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்கள் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்னேரைப் பின்சென்ற பென்யமீன் புத்திரர் ஒரே படையாகக் கூடி, ஒரு மலையின் உச்சியிலே நிற்கிறார்கள் *(2சாமு 2:25)*.

அப்னேரோடுகூட இப்போது பென்யமீன் புத்திரர் எல்லோரும் ஒரே படையாகக் கூடியிருக்கிறார்கள். அப்னேர் இப்போது மறுபடியும் தன்னுடைய சேவகருக்கு படைத்தலைவனாயிருக்கிறான். யோவாபும் அபிசாயும் அப்னேரைப் பின்தொடர்ந்து வருகிறார்கள். அப்னேர் அவர்களிடம் தன்னை ஒரு படைத்தலைவன் போலவும், தன்னோடுகூட ஒரு சேனை இருப்பதுபோலவும் காண்பித்துக்கொள்கிறான்.

அப்னேருக்கு ஒய்வு தேவைப்படுகிறது. அவனால் இனிமேல் தொடர்ந்து ஓடவும் முடியாது. யுத்தம்பண்ணவும் முடியாது. அப்னேர் கிபியோனின் குளத்தண்டையிலிருந்தபோது, "வாலிபர் எழுந்து நமக்கு முன்பாக சிலம்பம் பண்ணட்டும்" *(2சாமு 2:14)* என்று முதலாவதாக சொன்னவன். அப்னேர்தான் யுத்தத்தை முதலில் ஆரம்பித்து வைத்தவன். இப்போது அப்னேர் தன்னை யோவாபுக்கு முன்பாகத் தாழ்த்தி, யுத்தத்தை நிறுத்திவிடுமாறு கேட்டுக்கொள்கிறான்.

அப்பொழுது அப்னேர் யோவாபைப் பார்த்துக் கூப்பிட்டு, "பட்டயம் எப்போதும் சங்காரம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமோ, முடிவிலே கசப்புண்டாகும் என்று அறியீரோ, தங்கள் சகோதரரை விட்டுப் பின்வாங்கும்படிக்கு எந்த மட்டும் ஜனங்களுக்குச் சொல்லாதிருப்பீர்" *(2சாமு 2:26)* என்று பணிவோடு பேசுகிறான்.

அப்னேரின் வார்த்தைகளைக் கேட்டு யோவாப் ஆச்சரியப்படுகிறான். அப்னேர்தான் சண்டையை ஆரம்பித்து வைத்தவன். இப்போது அவன் சண்டையை நிறுத்திவிட்டு சமாதானமாயிருக்க விரும்புகிறான். அப்னேர் இந்த யுத்தத்திலே தோற்றுப்போனான் என்பது உறுதியாயிற்று.

அப்னேர் பட்டயத்திற்கு ஒய்வு கொடுக்கச் சொல்லுகிறான். "பட்டயம் எப்போதும் சங்காரம்பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமோ" என்று அப்னேர் யோவாபிடம் கேட்கிறான். இரண்டுபேரும் தொடர்ந்து சண்டை போட்டுக்கொண்டிருந்தால் முடிவிலே இரண்டுபேருக்குமே கசப்பு உண்டாகும் என்று அப்னேர் நயமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

அப்னேர் மிகச்சிறந்த யுத்தவீரன். அவன் பெரிய தந்திரவாதி. அவனுக்கு பட்டயத்தாலும் யுத்தம்பண்ணத் தெரிந்திருக்கிறது. சாதுரிய வார்த்தைகளினாலும் யுத்தம்பண்ணத் தெரிந்திருக்கிறது. அப்னேரின் சேவகரும், தாவீதின் சேவகரும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பட்டயத்தினால் தொடர்ந்து யுத்தம்பண்ணினால், இரண்டு சேனையிலும் ஜீவசேதாரமுண்டாகும். அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய ஜனம். முடிவிலே இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவார்கள். அப்படிப்பட்ட அழிவு தங்களுக்குள்ளே வரக்கூடாது என்று அப்னேர் யோவாபுக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

யோவாப் அப்னேரின் வேண்டுகோளை அங்கீகரிக்கிறான். யுத்தத்தை நிறுத்த சம்மதிக்கிறான். யோவாப் அப்னேரைப் பார்த்து, "இன்று காலமே நீர் பேசாதிருந்தீரானால் ஜனங்கள் அவரவர் தங்கள் சகோதரரைப் பின்தொடராமல், அப்போதே திரும்பிவிடுவார்கள் என்று தேவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" *(2சாமு 2:27)* என்று சொல்லுகிறான். அதன் பின்பு யோவாப் எக்காளம் ஊதுகிறான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் இஸ்ரவேலைத் தொடராமலும், யுத்தம்பண்ணாமலும் நின்றுவிடுகிறார்கள் *(2சாமு 2:28)*.

இந்த யுத்தத்திலே தாவீதின் சேவகர், அப்னேரின் சேவகரால் முறியடிக்கப்பட்டிருந்தால், அப்னேர் யுத்தத்தை நிறுத்தியிருக்கமாட்டான். அப்னேர் தாவீதின் சேவகரை மொத்தமாய் சங்காரம்பண்ணிவிடுவான். இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களும், தாவீதின் சேனையிலுள்ளவர்களும் சகோதரர்கள் என்பதை அப்னேர் நினைத்துப் பார்க்கமாட்டான். ஆனால் அப்னேருக்கும் அவனுடைய சேனையிலுள்ளவர்களுக்கும் தோல்வி உண்டானதினால், இப்போது அவன் நயமான வார்த்தைகளைப் பேசி, யுத்தத்தை நிறுத்துகிறான். தன்னுடைய சேனையில் அதிகமான ஜீவசேதாரமுண்டாவதை அப்னேர் தடுத்துவிடுகிறான்.

இந்த யுத்தத்தில் தாவீதின் சேவகருக்கு ஜெயமுண்டாயிற்று. யோவாபுக்கு இது நன்றாய்த் தெரியும். ஆனாலும் இப்போது யோவாபும், தாவீதின் சேனையிலுள்ளவர்களும், அப்னேரையும் அவனுடைய சேனையையும் பின்தொடராமல், அவர்களோடு யுத்தம்பண்ணாமல் நின்றுவிடுகிறார்கள். தாவீதின் சேனையிலுள்ளவர்கள் தங்களைப் பின்தொடரமாட்டார்கள் என்பதையும், அவர்கள் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணமாட்டார்கள் என்பதையும் அப்னேர் உறுதிபண்ணிக்கொள்கிறான்.

அன்று ராத்திரியிலேயே, அப்னேரும் அவன் மனுஷரும், ராமுழுவதும் அந்தரவெளி வழியாய்ப் போய், யோர்தானைக் கடந்து பித்ரோனை உருவ நடந்து தாண்டி, மகனாயிமுக்குப் போகிறார்கள் *(2சாமு 2:29)*.

யோவாப் அப்னேரைத் தொடராமல் ஜனங்களையெல்லாம் கூடிவரச்செய்கிறான். யோவாபும் அவன் மனுஷரும் இரா முழுவதும் நடந்து, பொழுது விடியும் போது எப்ரோனிலே சேருகிறார்கள் *(2சாமு 2:32)*.

இரண்டு சேனைகளும் எங்கே இருந்து புறப்பட்டார்களோ, அங்கேயே திரும்பிப்போகிறார்கள். ஆனால் இரண்டு சேனையிலும் உயிர்ச்சேதமுண்டாயிற்று. தாவீதின் சேனையைவிட, அப்னேரின் சேனையில் அதிகமான உயிர்ச்சேதமுண்டாயிற்று. தாவீதின் சேவகரில் பத்தொன்பதுபேரும் ஆசகேலும் குறைந்திருக்கிறார்கள். தாவீதின் சேவகரோ பென்யமீனரிலும், அப்னேரின் மனுஷரிலும், முந்நூற்றறுபதுபேரை மடங்கடித்திருக்கிறார்கள் *(2சாமு 2:30,31)*.

இந்த வசனப்பகுதியில் ஆசகேல் அடக்கம்பண்ணப்பட்ட சம்பவமும் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆசகேலை எடுத்து, பெத்லெகேமிலுள்ள அவனுடைய தகப்பன் கல்லறையிலே அடக்கம்பண்ணுகிறார்கள் *(2சாமு 2:32)*.

தாவீதின் சேவகரில், யுத்தத்திலே செத்துப்போன பத்தொன்பது பேரையும், யுத்தக்களத்திலேயே அடக்கம்பண்ணினார்கள். அவர்கள் ஆசகேலின் சரீரத்தை மாத்திரம் பெத்லெகேமுக்கு கொண்டுவந்து, அங்கே அவனுடைய தகப்பன் கல்லறையிலே விசேஷமாய் அடக்கம்பண்ணுகிறார்கள்.

3 அதிகாரம்

தாவீது வர வர பலக்கிறார் (2சாமு 3:1). அவருடைய குடும்பம் விருத்தியடைகிறது (2சாமு 3:2-5). அப்னேருக்கும் இஸ்போசேத்திற்கும் பிரச்சனை ஏற்படுகிறது. அப்னேர் தாவீதோடு சேர்ந்துகொள்கிறார் (2சாமு 3:6-12).

சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டிருந்தாள். ஆனால் சவுல் அவளை பல்த்தியேல் என்பவனுக்கு மனைவியாகக் கொடுத்துவிட்டார். தாவீது இழந்துபோன தன் மனைவி மீகாளை திரும்பவும் பெற்றுக்கொள்கிறார் (2சாமு 3:13-16).

இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரையும் தாவீதின் ராஜ்யபாரத்திற்கு கீழ் கொண்டுவர அப்னேர் முயற்சி பண்ணுகிறான் (2சாமு 3:17-21). யோவாப் சதிபண்ணி அப்னேரைக் கொன்றுபோடுகிறான் (2சாமு 3:22-27). அப்னேரின் மரணத்திற்காக தாவீது மிகவும் துக்கப்படுகிறார் (2சாமு 3:28-39).

தாவீது வர வர பலக்கிறார் 2சாமு 3:1-6

2சாமு 3:1. சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது; தாவீது வரவர பலத்தான்; சவுலின் குடுபத்தாரோ வரவர பலவீனப்பட்டுப்போனார்கள்.

2சாமு 3:2. எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன்.

2சாமு 3:3. நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கிலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்; மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம் என்பவன்.

2சாமு 3:4. நாலாம் குமாரன் ஆகீத் பெற்ற அதொனியா என்பவன்; ஐந்தாம் குமாரன் அபித்தால் பெற்ற செப்பத்தியா என்பவன்.

2சாமு 3:5. ஆறாம் குமாரன் தாவீதின் மனைவியாகிய எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் என்பவன்; இவர்கள் எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்தவர்கள்.

2சாமு 3:6. சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் யுத்தம் நடந்துவருகிறபோது, அப்னேர் சவுலின் குடும்பத்திலே பலத்தவனானான்.

தாவீது இஸ்ரவேலின் ராஜாசனத்திலே வீற்றிருப்பதற்கு முன்பாக, சவுலின் குடும்பத்திற்கும், தாவீதின் குடும்பத்திற்கும் நெடுநாள் யுத்தம் நடக்கிறது. இந்த யுத்தத்தில் தாவீதின் விசுவாசமும் பொறுமையும் சோதிக்கப்படுகிறது. சவுலின் குடும்பத்தார் வர வர பலவீனப்பட்டுப்போகிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே அவர்கள் ஆளுகை செய்த ஸ்தலங்களை இழந்துபோகிறார்கள். சவுலின் மனுஷரும் அவர்களைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் சவுலின் குடும்பத்தாருக்கு மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போயிற்று. அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வீணாயிற்று. சவுலின் குடும்பத்தார் பலவீனப்பட்டுப்போகும்போது, தாவீது வர வர பலக்கிறார். கர்த்தர் தாவீதையும், அவருடைய கைகளின் கிரியைகளையும் ஆசீர்வதிக்கிறார்.

சவுலின் குடும்பத்திலிருந்து அநேகர் பிரிந்து தாவீதிடம் சேர்ந்துகொள்கிறார்கள். இதனால் சவுலின் குடும்பத்தார் பலவீனப்பட்டுப்போகிறார்கள். விசுவாசிகளுடைய இருதயங்களிலும், நம்முடைய பாவங்களுக்கும், தேவனுடைய கிருபைகளுக்கும் இடையே போராட்டம் வரும். நமக்குள்ளே கர்த்தருடைய கிருபைக்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் யுத்தம் நடைபெறும்.

விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். ஆனாலும் நமக்குள்ளே நம்முடைய மாம்சத்திற்கும், ஆவிக்கும் விரோதமாக யுத்தம் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவியானவரின் கிரியை நமக்குள் தொடர்ந்து நடைபெறும்போது, நம்முடைய மாம்சத்தின் கிரியைகள் பலவீனப்பட்டுப்போகும்.

சவுலின் குடும்பத்தார் வர வர பலவீனப்பட்டுப்போகிறார்கள். இவர்கள் மாம்சத்தின் கிரியைகளுக்கு அடையாளமாயிருக்கிறார்கள். தாவீதின் குடும்பத்தாரோ வர வர பலக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய கிருபைக்கும், பரிசுத்தஆவியானவருடைய கிரியைகளுக்கும் அடையாளமாயிருக்கிறார்கள்.

விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிபூரணமடையும் வரையிலும், நமக்குள்ளே மாம்சத்திற்கும், ஆவிக்கும் விரோதமான யுத்தம் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். முடிவிலே தேவனுடைய சித்தம் நிறைவேறும். விசுவாசிகளாகிய நமக்கு, கர்த்தருடைய கிருபையினால், சாத்தான்மீது வெற்றி கிடைக்கும்.

தாவீதின் குடும்பம் வர வர விருத்தியடைகிறது. இந்த வசனப்பகுதியில் தாவீதின் ஆறு குமாரர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது எப்ரோனில் ஏழுவருஷங்கள் ஆட்சி செய்கிறார். இந்தக் காலத்தில் தாவீதுக்கு ஆறுமனைவிகள் இருக்கிறார்கள். இவர்கள் மூலமாய் தாவீதுக்கு ஆறு குமாரர்கள் பிறக்கிறார்கள்.

"எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன். நாபாலின் மனையியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கீலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்; மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம் என்பவன். நாலாம் குமாரன் ஆகீத் பெற்ற அதொனியா என்பவன்; ஐந்தாம் குமாரன் அபித்தால் பெற்ற செப்பத்தியா என்வன். ஆறாம் குமாரன் தாவீதின் மனைவியாகிய எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் என்பவன்; இவர்கள் எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்தவர்கள்" *(2சாமு 3:2-5)*.

தாவீது ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை விவாகம் செய்திருக்கிறார். இது கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமான செயல். தாவீது அநேகம் மனைவிகளை விவாகம்பண்ணி, தன்னுடைய பின்சந்ததியாருக்கு மோசமான முன்உதாரணமாயிருக்கிறார்.

"அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம்; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்" *(உபா 17:17)*.

தாவீதின் ஆறு குமாரர்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் ஒருவர்கூட இஸ்ரவேல் தேசத்திலே செழித்திருக்கவில்லை. அம்னோன், அப்சலோம், அதோனியா ஆகியோரின் ஜீவியம் பரிதாபமாய் முடிவு பெற்றது.

தாவீதுக்கும் அபிகாயிலுக்கும் பிறந்த குமாரனுக்கு "கீலேயாப்" என்று பெயர். நாளாகமம் புஸ்தகத்தில் இவனுக்கு "தானியேல்" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1நாளா 3:1 தானியேல் என்பது கீலேயாப்பின் முதலாவது பெயர். தானியேல் என்னும் பெயருக்கு "தேவன் என்னை நியாயம் விசாரித்தார்" என்று பொருள்.

கர்த்தர் நாபாலுக்கு விரோதமாக நியாயம் விசாரித்தார் என்று தாவீதின் குடும்பத்தார் சொல்லுகிறார்கள். ஆனால் தாவீதின் சத்துருக்களோ, தானியேல் என்னும் பெயருக்கு, வேறு விளக்கம் சொல்லி, தாவீதை நிந்திக்கிறார்கள். தானியேல் நாபாலுடைய குமாரன் என்றும், அவன் தாவீதின் குமாரனல்ல என்றும் தாவீதின் சத்துருக்கள் சொல்லுகிறார்கள்.

தானியேல் வளர்ந்து பெரியவனானபோது, அவனுடைய முகரூபமும், சுபாவமும் தாவீதைப்போல இருந்ததாகவும் ஆகையினால் தாவீது அவனுக்கு "கீலேயாப்" என்னும் பெயர் கொடுத்ததாகவும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கீலேயாப் என்னும் பெயருக்கு, "அவனுடைய தகப்பனைப் போன்றவன்" என்று பொருள். அபிகாயிலிடத்தில் பிறந்த கீலேயாப், தன் தகப்பனாராகிய தாவீதைப்போன்ற முகரூபமும், குணமுமுள்ளவன்.

அப்சலோமின் தாயார் கேசூரின் ராஜாவான தல்மாயி என்பவனுடைய குமாரத்தி. மாக்காள் என்பது அவளுடைய பெயர். கேசூர் புறஜாதி தேசத்து ராஜா. அந்நிய தேசத்தாரோடு தன்னுடைய உறவை வளர்த்துக்கொள்ளவும், தன்னுடைய இராணுவத்தைப் பலப்படுத்திக்கொள்ளவும், தாவீது கேசூரின் ராஜாவோடு விவாக சம்பந்தம் பண்ணினார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆனால் தாவீது எதிர்பார்த்த பிரகாரம், மாக்காள் பெற்ற அப்சலோம் மூலமாய், அவருக்கு ஆறுதலோ, பெலமோ கிடைக்கவில்லை. அப்சலோம் மூலமாய் தாவீதுக்கு வெட்கமும் துக்கமும் உண்டாயிற்று.

ஆறாம் குமாரன் தாவீதின் மனைவியாகிய எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் என்பவன். இவள் மட்டுமே "தாவீதின் மனைவி" என்று சொல்லப்பட்டிருக்கிறாள். ஆகையினால், எக்லாள் என்பது மீகாளைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இவளே தாவீதின் முதலாவது மனைவி. தாவீதின் மற்ற மனைவிகளைவிட, மீகாளுக்கே தாவீதின்மீது அதிக உரிமை உள்ளது.

தாவீது கர்த்தருடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வந்தபோது, மீகாள் தாவீதை பரியாசம்பண்ணினாள். இதனால் கர்த்தர் அவளுடைய கர்ப்பத்தை அடைத்தார். மீகாளுக்கு பிள்ளை பிறக்கவில்லை. மீகாள் மறுபடியும் தாவீதோடு சேருவதற்கு முன்பாக, அவளுக்கு குழந்தைகள் பிறந்திருக்கவேண்டும் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

அப்னேர்
2சாமு 3:7-21

2சாமு 3:7. சவுலுக்கு ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் பேருள்ள ஒரு மறுமனையாட்டி இருந்தாள்; இஸ்போசேத் அப்னேரை நோக்கி: நீ என் தகப்பனாருடைய மறுமனையாட்டியினிடத்தில் பிரவேசித்தது என்ன என்றான்.

2சாமு 3:8. அப்னேர் இஸ்போசேத்தின் வார்த்தைகளுக்காக மிகவும் கோபங்கொண்டு: உம்மைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடாமல், இந்நாள்மட்டும் உம்முடைய தகப்பனாகிய சவுலின் குடும்பத்துக்கும், அவருடைய சகோதரருக்கும், சிநேகிதருக்கும், தயவுசெய்கிறவனாகிய என்னை நீர் இன்று ஒரு ஸ்திரீயினிமித்தம் குற்றம்பிடிக்கிறதற்கு, நான் யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலையா?

2சாமு 3:9. நான் ராஜ்யபாரத்தைச் சவுலின் குடும்பத்தை விட்டுத் தாண்டப்பண்ணி, தாவீதின் சிங்காசனத்தைத் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் நிலைநிறுத்தும்படிக்கு,

2சாமு 3:10. கர்த்தர் தாவீதுக்கு ஆணையிட்டபடியே, நான் அவனுக்குச் செய்யாமற்போனால், தேவன் அப்னேருக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்றான்.

2சாமு 3:11. அப்பொழுது அவன் அப்னேருக்குப் பயப்பட்டதினால், அப்புறம் ஒரு மறுமொழியும் அவனுக்குச் சொல்லாதிருந்தான்.

2சாமு 3:12. அப்னேர் தன் நாமத்தினாலே தாவீதினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: தேசம் யாருடையது? என்னோடு உடன்படிக்கைபண்ணும்; இதோ, இஸ்ரவேலையெல்லாம் உம்மிடத்தில் திருப்ப, என் கை உம்மோடிருக்கும் என்று சொல்லச்சொன்னான்.

2சாமு 3:13. அதற்குத் தாவீது: நல்லது, உன்னோடே நான் உடன்படிக்கைபண்ணுவேன்; ஆனாலும் ஒரே காரியம் உன்னிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்; அது என்னவெனில், நீ என் முகத்தைப் பார்க்க வரும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை நீ அழைத்துவரவேண்டும்; அதற்குமுன் நீ என் முகத்தைப் பார்ப்பதில்லை என்று சொல்லச்சொல்லி,

2சாமு 3:14. அவன் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தினிடத்திற்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி: நான் பெலிஸ்தருடைய நூறு நுனித்தோல்களைப் பரிசமாகக் கொடுத்து, விவாகம்பண்ணின என் மனைவியாகிய மீகாளை அனுப்பிவிடும் என்று சொல்லச்சொன்னான்.

2சாமு 3:15. அப்பொழுது, இஸ்போசேத் அவளை லாயிசின் குமாரனாகிய பல்த்தியேல் என்னும் புருஷனிடத்திலிருந்து அழைத்து வர ஆட்களை அனுப்பினான்.

2சாமு 3:16. அவள் புருஷன் பகூரீம்மட்டும் அவள் பிறகாலே அழுதுகொண்டுவந்தான். அப்னேர் அவனை நோக்கி: நீ திரும்பிப்போ என்றான்; அவன் திரும்பிப்போய்விட்டான்.

2சாமு 3:17. அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே பேசி: தாவீதை உங்கள்மேல் ராஜாவாக வைக்கும்படிக்கு நீங்கள் அநேக நாளாய்த் தேடினீர்களே.

2சாமு 3:18. இப்போதும் அப்படிச் செய்யுங்கள்; என் தாசனாகிய தாவீதின் கையினால், என் ஜனமாகிய இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கும், அவர்களுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி ரட்சிப்பேன் என்று கர்த்தர் தாவீதைக்குறித்துச் சொல்லியிருக்கிறாரே என்றான்.

2சாமு 3:19. இந்தப்பிரகாரமாக அப்னேர் பென்யமீன் மனுஷர் காதுகள் கேட்கப் பேசினான்; பின்பு அப்னேர் இஸ்ரவேலர் பார்வைக்கும், பென்யமீனுடைய எல்லாக் குடும்பத்தாரின் பார்வைக்கும், சம்மதியானதையெல்லாம் எப்ரோனிலே தாவீதின் காதுகள் கேட்கப் பேசுகிறதற்குப் போனான்.

2சாமு 3:20. அப்னேரும், அவனோடே கூட இருபதுபேரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்தபோது, தாவீது அப்னேருக்கும், அவனோடே வந்த மனுஷருக்கும் விருந்துசெய்தான்.

2சாமு 3:21. பின்பு அப்னேர் தாவீதை நோக்கி: நான் எழுந்துபோய், இஸ்ரவேலரை எல்லாம் உம்மோடே உடன்படிக்கைபண்ணும்படிக்கு, ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் சேர்த்துக்கொண்டு வருகிறேன்; அதினாலே உம்முடைய ஆத்துமா அரசாள விரும்புகிற இடமெல்லாம் அரசாளுவீர் என்றான்; அப்படியே தாவீது அப்னேரை அனுப்பிவிட்டான்; அவன் சமாதானத்தோடே போனான்.

அப்னேர் சவுலின் படைத்தலைவன். இவன் நேரின் குமாரன். இவன் சவுலுக்கு சிறிய தகப்பன். சவுலின் மூன்று குமாரர்களும் பெலிஸ்தருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே மரித்துப்போனார்கள். சவுலுக்கு இஸ்போசேத் என்னும் குமாரன் மட்டும் இன்னும் உயிரோடிருக்கிறான். அப்னேர் இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கே அவனை இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாக்கினான்.

அப்னேருக்கும் இஸ்போசேத்திற்கும் இடையிலிருந்த உறவு சீக்கிரத்தில் முறிந்துபோயிற்று. இஸ்போசேத் அப்னேர்மீது சந்தேகப்பட்டான். சவுலுக்கு ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் பேருள்ள ஒரு மறுமனையாட்டி இருந்தாள்; அப்னேர் சவுலின் மறுமனையாட்டியினிடத்தில் பிரவேசித்தான் என்று இஸ்போசேத் சந்தேகப்படுகிறான். இஸ்போசேத் ஒருநாள், அப்னேரை நோக்கி: "நீ என் தகப்பனாருடைய மறுமனையாட்டியினிடத்தில் பிரவேசித்தது என்ன" *(2சாமு 3:7)* என்று கேட்கிறான்.

அப்னேர் இஸ்போசேத்தின் குற்றச்சாட்டை உறுதியாய் மறுக்கிறான். இஸ்போசேத் தன்னை இதுபோல குற்றப்படுத்துவது அப்னேருக்கு சிறிதும் பிடிக்கவில்லை. இஸ்போசேத் அப்னேருடைய ஆதரவிலிருக்கிறான். அப்னேரோ பெருமை பிடித்தவன். பெருமைக்காரரை குற்றப்படுத்தினால் அவர்கள் கோபப்படுவார்கள். இஸ்போசேத் தனக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று அப்னேர் எதிர்பார்க்கிறான். ஆனால் இஸ்போசேத் அப்னேரை குற்றப்படுத்தி பேசியதினால், அப்னேருக்கு அவன்மீது கோபமுண்டாயிற்று.

அப்னேர் இஸ்போசேத்தின் வார்த்தைகளுக்காக மிகவும் கோபங்கொண்டு: "உம்மைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடாமல், இந்நாள்மட்டும் உம்முடைய தகப்பனாகிய சவுலின் குடும்பத்துக்கும், அவருடைய சகோதரருக்கும், சிநேகிதருக்கும், தயவுசெய்கிறவனாகிய என்னை நீர் இன்று ஒரு ஸ்திரீயினிமித்தம் குற்றம்பிடிக்கிறதற்கு, நான் யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலையா?" *(2சாமு 3:8)* என்று கேட்கிறான்.

அப்னேர் இஸ்போசேத்தின்மீது கோபப்பட்டது மாத்திரமல்ல, அவனை பழிவாங்கப்போவதாகவும் சொல்லுகிறான். அப்னேர் இஸ்போசேத்திடம், ". நான் ராஜ்யபாரத்தைச் சவுலின் குடும்பத்தை விட்டுத் தாண்டப்பண்ணி, தாவீதின் சிங்காசனத்தைத் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் நிலைநிறுத்தும்படிக்கு, கர்த்தர் தாவீதுக்கு ஆணையிட்டபடியே, நான் அவனுக்குச் செய்யாமற்போனால், தேவன் அப்னேருக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" *(2சாமு 3:9,10)* என்று சொல்லுகிறான்.

அப்னேர் தனக்கு இஸ்ரவேல் தேசத்திலே சர்வஅதிகாரமும் இருப்பதாக இறுமாப்போடு நினைக்கிறான். அப்னேர்தான் இஸ்போசேத்தை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினான். அப்னேரின் விருப்ப பிரகாரம் இஸ்போசேத்தும் இஸ்ரவேலுக்கு ராஜாவானான். தான் விரும்பினால் இஸ்போசேத் ராஜாவாயிருக்கவேண்டும், தான் விரும்பாவிட்டால் அவன் ராஜாவாயிருக்கக்கூடாது என்று அப்னேர் ஆணவமாய் நினைக்கிறான். தன்னால் இஸ்போசேத்தை இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அமரச்செய்யவும் முடியும், அதிலிருந்து அவனை கீழே இறக்கிவிடவும் முடியும் என்று அப்னேர் நினைக்கிறான்.

அப்னேருக்கு இஸ்போசேத்மீது கோபமுண்டாயிற்று. இந்தக் கோபத்தினால் அப்னேர் தாவீதை நேசிக்க ஆரம்பிக்கிறான். ராஜ்யபாரம் சவுலின் குடும்பத்தைவிட்டு நீங்கவேண்டுமென்றும், அது தாவீதின் குடும்பத்தின்மீது நிலை நிறுத்தப்படவேண்டும் என்றும் அப்னேர் இப்போது ஆசைப்படுகிறான். இஸ்போசேத்தை பழிவாங்கவேண்டும் என்பதற்காக, அப்னேர் தாவீதோடு சிநேகமாயிருக்கவும், அவரோடு உடன்படிக்கை பண்ணவும் அப்னேர் தீர்மானம்பண்ணுகிறான்.

அப்னேர் ராஜ்யபாரத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தாவீதுக்கு ஆணையிட்டபடியே" என்னும் வாக்கியத்தை பயன்படுத்துகிறான். கர்த்தர் தாவீதுக்கு ராஜ்யபாரத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை அப்னேர் மதிக்கவேண்டும். அப்னேரின் இருதயத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் இருக்குமென்றால், அவன் எப்போதுமே தன்னுடைய ஆலோசனைகளில் உறுதியாய் இருப்பான்.

அப்னேர் இதுவரையிலும் இஸ்போசேத்திற்கு ஆதரவாயிருந்தான். இது கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு விரோதமான செயல். அப்னேர் இப்போது இஸ்போசேத்தின்மீது கோபப்பட்டு தாவீதுக்கு ஆதரவாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறான். இதன் மூலமாக கர்த்தர் தாவீதுக்கு ராஜ்யபாரத்தை ஆணையிட்டதை நிறைவேற்றுவதற்கு, தானும் உதவிபுரிவதாக நினைக்கிறான்.

இஸ்போசேத்திடம் தைரியமில்லை. இஸ்போசேத் இஸ்ரவேல் தேசத்தின்மேல் ராஜாவாயிருக்கிறவன். அவன் தேசத்து ஜனங்களின் வழக்குகளை நீதியாய் விசாரிக்கவேண்டும். தைரியமாய் ஆட்சி செய்யவேண்டும். அப்னேர் உண்மையிலேயே குற்றம் செய்திருந்தால், அவன் செய்த குற்றத்தை அவனுக்கு உணர்த்தவேண்டும். அப்னேரின் குற்றத்தினிமித்தமாக அவனைக் கடிந்துகொள்ளவேண்டும். அந்தக் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை அவனுக்கு கொடுக்கவேண்டும்.

ஆனால் இஸ்போசேத்தோ மிகப்பெரிய கோழையாயிருக்கிறான். அவன் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருந்தாலும், அப்னேரின் கையிலே ஒரு பொம்மையைப்போல இருக்கிறான். அப்னேர் தன்னிடம் கோபமாக பேசியபோதும், ராஜ்யபாரத்தை தாவீதுக்கு நிலைநிறுத்த செய்யப்போவதாகவும் சொன்னபோதும், இஸ்போசேத் பொறுமையாயும், அமைதியாயும் கேட்டுக்கொண்டிருக்கிறான். அப்பொழுது இஸ்போசேத் அப்னேருக்குப் பயப்பட்டதினால், அப்புறம் ஒரு மறுமொழியும் அவனுக்குச் சொல்லாதிருக்கிறான் *(2சாமு 3:11)*.

இஸ்போசேத்தின் மனச்சாட்சி அவனுடைய பலவீனத்தை அவனுக்கு உணர்த்துகிறது. அப்னேருக்கு விரோதமாக தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை இஸ்போசேத் புரிந்துகொள்கிறான். அப்னேரின் உதவியில்லாமல் தன்னால் இஸ்ரவேலில் ராஜ்யபாரம் பண்ண முடியாது என்று நினைத்து, இஸ்போசேத் அப்னேருக்கு மிகவும் பயப்படுகிறான்.

அப்னேர் தன் நாமத்தினாலே தாவீதினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: "தேசம் யாருடையது? என்னோடு உடன்படிக்கைபண்ணும்; இதோ, இஸ்ரவேலையெல்லாம் உம்மிடத்தில் திருப்ப, என் கை உம்மோடிருக்கும்" *(2சாமு 3:12)* என்று சொல்லச்சொல்லுகிறான். அப்னேரின் ஸ்தானாபதிகள், அப்னேர் சொன்ன செய்தியை தாவீதுக்கு அறிவிக்கிறார்கள்.

சவுலின் குடும்பத்தார் வர வர பலவீனப்பட்டுப்போகிறார்கள் என்பதையும் தாவீது வர வர பலப்பதையும் அப்னேர் கவனித்துக்கொண்டிருக்கிறான். இதன் நிமித்தமாக அப்னேர், இஸ்போசேத்தைவிட்டுப் பிரிந்து, தாவீதின் பக்கமாய் சேர்ந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். இஸ்போசேத் சவுலின் மறுமனையாட்டியாகிய ரிஸ்பாளின் நிமித்தம் தன்னைக் குற்றப்படுத்தியது, அப்னேருக்கு இஸ்போசேத்தை விட்டுப்பிரிய ஒரு நல்ல காரணமாயிற்று.

அப்னேர் இப்போது தாவீதுக்கு சேவை செய்ய விரும்புகிறான். அப்னேருக்கு தாவீதின்மீது உண்மையான அன்பும், அக்கரையும், பாசமும் இருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் அப்னேருக்கு இஸ்போசேத்தின்மீது உண்மையான கோபம் இருக்கிறது. இஸ்போசேத்தின்மீதுள்ள கோபம், இப்போது தாவீதின்மீது அன்பாக வெளிப்படுகிறது.

இந்தப் பூமியிலே கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு, கர்த்தர் சில சமயங்களில், உலகப்பிரகாரமான மனுஷரையும் பயன்படுத்துகிறார். அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின்மீது உண்மையான பக்தியோ, பயமோ இல்லாதிருக்கலாம். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உண்மையிலேயே நேசிக்காதவர்களாயும் இருக்கலாம். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, இப்படிப்பட்டவர்களைக்கூட பயன்படுத்தி, இந்தப் பூமியிலே கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் கட்டியெழுப்புகிறார்.

கர்த்தர் நம்முடைய சத்துருக்களை நமக்கு பாதபடியாக்கிப்போடுகிறார். இந்தப் பாதபடியின்மீது நம்முடைய பாதங்களை வைத்து, நம்முடைய ஸ்தானத்திலே நாம் அமர்ந்திருக்கலாம். அதே வேளையில், கர்த்தருடைய கிருபையினாலே, இந்தப் பாதபடிகளின்மேல் ஏறி, நமக்கு மேலே இருக்கும் உயர்ந்த ஸ்தலங்களுக்கும் ஏறிப்போகலாம். பாதபடிகளை படிக்கட்டுக்களைப் போல பயன்படுத்தி மேலே ஏறிப்போகலாம்.

அப்னேரின் ஸ்தானாபதிகள், அவனுடைய வார்த்தைகளை தாவீதுக்கு சொல்லுகிறார்கள். தாவீதும் அப்னேரோடு உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புகிறார். ஆனாலும் அதற்கு ஒரு நிபந்தனையைச் சொல்லுகிறார். தாவீது அப்னேரின் ஸ்தானாபதிகள் மூலமாய் தன்னுடைய வார்த்தைகளை சொல்லியனுப்புகிறார்.

தாவீது, அப்னேரின் ஸ்தானாபதிகளிடம் "நல்லது, உன்னோடே நான் உடன்படிக்கைபண்ணுவேன்; ஆனாலும் ஒரே காரியம் உன்னிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்; அது என்னவெனில், நீ என் முகத்தைப் பார்க்க வரும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை நீ அழைத்துவரவேண்டும்; அதற்குமுன் நீ என் முகத்தைப் பார்ப்பதில்லை" *(2சாமு 3:13)* என்று தன்னுடைய செய்தியை அப்னேருக்கு, சொல்லச் சொல்லுகிறார்.

சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை தாவீதுக்கு முதலில் மனைவியாக கொடுத்திருந்தார். அதன் பின்பு சவுல் மீகாளை லாயிசின் குமாரனாகிய பல்த்தியேலுக்கு மனைவியாகக் கொடுத்துவிட்டார். அப்னேர் தாவீதிடத்தில் வரும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை அழைத்துக்கொண்டு வரவேண்டும். அப்னேரோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு தாவீது இந்த நிபந்தனையைச் சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய முதலாம் மனைவியின்மீது இன்னும் பிரியமாயிருக்கிறார். விவாகம் கர்த்தருக்குள் கனமுள்ளது. தாவீதுக்கு அநேக மனைவிகள் இருந்தாலும், மீகாளே அவருடைய முதலாவது மனைவி. தாவீதின் மனைவி என்னும் அந்தஸ்து மீகாளுக்கு மாத்திரமே இருக்கிறது. தாவீது எத்தனை ஸ்திரீகளை விவாகம்பண்ணினாலும், அவர் மீகாள் மீது வைத்திருக்கிற அன்பு குறையவில்லை.

தாவீது சவுலின் குடும்பத்தார்மீது இன்னும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார். தாவீது இஸ்ரவேலின் ராஜாசனத்தில் வீற்றிருக்கும்போது, அந்த ராஜரீக மேன்மையில், சவுலின் குடும்பத்தாருக்கும் ஒரு பங்கு இருக்கவேண்டும் என்று தாவீது விரும்புகிறார். மீகாள் சவுலின் குமாரத்தி. தாவீது இஸ்ரவேலின் ராஜாசனத்தில் வீற்றிருக்கும்போது, அவருக்கு அருகாமையில், சவுலின் குமாரத்தியாகிய மீகாள், தாவீதின் மனைவியாக வீற்றிருக்கவேண்டும். மீகாளே தனக்கு ராஜாத்தியாகயிருக்கவேண்டும் என்பது தாவீதின் விருப்பம்.

தாவீது தன்னுடைய ராஜ்யபாரத்தின் மேன்மையை சவுலின் குடும்பத்தாரோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறார். சவுல் தாவீதைப் பகைத்தாலும், அவர் தாவீதை தன்னுடைய சத்துருவாகப் பாவித்தாலும், தாவீது சவுலின் குடும்பத்தாருக்கு இன்னும் சிநேகிதராகவே இருக்கிறார். சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு சகாயம்பண்ண விரும்புகிறார்.

தாவீது அப்னேருக்கு சொல்லியனுப்பின வார்த்தைகளை, அப்னேரின் ஸ்தானாபதிகள், அப்னேருக்கு சொல்லுகிறார்கள். தாவீது தனக்கு சொன்ன செய்தியை, அப்னேர் தன் ஸ்தானாபதிகள் மூலமாக இஸ்போசேத்திற்கும் சொல்லியனுப்புகிறான். தாவீது இந்தச் செய்தியை, தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாக, இஸ்போசேத்திற்கு நேராடியாக சொல்லியிருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

தாவீது சவுலின் குமாரத்தியாகிய மீகாளை இலவசமாக விவாகம் செய்யவில்லை. தாவீது பெலிஸ்தருடைய நூறு நுனித்தோல்களை பரிசமாகக் கொடுத்து, மீகாளை தன் மனைவியாக விவாகம்பண்ணியிருக்கிறார். அதிக கிரயம் கொடுத்து விவாகம்பண்ணின மீகாளை, சவுல் வேறொருவனுக்கு மனைவியாகக் கொடுத்துவிட்டார்.

தாவீது சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தினிடத்திற்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி: "நான் பெலிஸ்தருடைய நூறு நுனித்தோல்களைப் பரிசமாகக் கொடுத்து, விவாகம்பண்ணின என் மனைவியாகிய மீகாளை அனுப்பிவிடும்" *(2சாமு 3:14)* என்று சொல்லச்சொல்லுகிறார்.

தாவீதின் கோரிக்கையை இஸ்போசேத் நிராகரிக்கவில்லை. அப்பொழுது, இஸ்போசேத் மீகாளை லாயிசின் குமாரனாகிய பல்த்தியேல் என்னும் புருஷனிடத்திலிருந்து அழைத்து வர ஆட்களை அனுப்புகிறான். அவள் புருஷன் பகூரீம்மட்டும் அவள் பிறகாலே அழுதுகொண்டுவருகிறான். அப்னேர் அவனை நோக்கி: "நீ திரும்பிப்போ" என்று சொல்லுகிறான்; பல்த்தியேல் திரும்பிப்போய்விடுகிறான் *(2சாமு 3:15,16)*.

அப்னேர் மீகாளை தாவீதினிடத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறான். தாவீது சொன்ன நிபந்தனையை அப்னேர் நிறைவேற்றியிருக்கிறான். தாவீது அப்னேரோடு சந்தோஷமாய் உடன்படிக்கை பண்ணுகிறார். அப்னேர் தாவீதுக்கு அவருடைய மனைவியையும் கொடுக்கிறான். இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தையும் கொடுக்கிறான்.

மீகாளின் புருஷனாகிய பல்த்தியேலுக்கு, அவளைவிட்டுப் பிரிய மனதில்லை. ஆகையினால் அவள் புருஷன் பகூரிம் மட்டும் அவள் பிரகாலே அழுதுகொண்டு வருகிறான். அவன் எவ்வளவுதான் அழுதாலும், மீகாள் ஏற்கெனவே தாவீதுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறாள். பல்த்தியேலைவிட தாவீதுக்கே, மீகாளின்மீது மெய்யான உரிமை இருக்கிறது.

தாவீதுக்கு மீகாளின்மீது, தன்னுடைய உரிமையைவிட அதிகமான உரிமை இருக்கிறது என்பது தெரிந்தவுடன், பல்த்தியேல் மீகாளை விட்டுவிட்டு திரும்பிப்போய்விடுகிறான். தாவீதும் மீகாளும் மறுபடியுமாய் தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் ஒன்றுசேருகிறார்கள்.

அப்னேர் தாவீதை ராஜாவாக்குவதற்கு இஸ்ரவேலின் மூப்பரோடு கலந்து பேசுகிறான். மூப்பர்கள் எதை தீர்மானம்பண்ணினாலும், சாதாரண ஜனங்கள் அதை ஏற்றுக்கொண்டு அவர்களைப் பின்பற்றுவார்கள். இஸ்ரவேலின் மூப்பருக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பது அப்னேருக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் அப்னேர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரோடும் பொதுவாக பேசாமல், இஸ்ரவேலின் மூப்பரோடு பேசுகிறார்.

அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே பேசி: "தாவீதை உங்கள்மேல் ராஜாவாக வைக்கும்படிக்கு நீங்கள் அநேக நாளாய்த் தேடினீர்களே. இப்போதும் அப்படிச் செய்யுங்கள்; என் தாசனாகிய தாவீதின் கையினால், என் ஜனமாகிய இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கும், அவர்களுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி ரட்சிப்பேன் என்று கர்த்தர் தாவீதைக்குறித்துச் சொல்லியிருக்கிறாரே" *(2சாமு 3:17,18)* என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் மூப்பருக்கு தாவீதைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. இஸ்போசேத்தைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. தாவீதின் பலமும், பராக்கிரமமும் அவர்களுக்கு தெரிந்திருக்கிறது. கர்த்தர் தாவீதைக்குறித்து சொன்ன வார்த்தைகளும் இஸ்ரவேலின் மூப்பருக்கு தெரிந்திருக்கிறது. கர்த்தர் தாவீதைக் குறித்து சொன்னபிரகாரம், தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருப்பாராக என்று அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே பேசுகிறார்.

கர்த்தர் தம்முடைய தாசனாகிய தாவீதின் கையினால், இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கும், அவர்களுடைய எல்லா சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி இரட்சிப்பார். இஸ்ரவேலருக்கு இரட்சிப்பு கிடைக்கவேண்டுமென்றால் அவர்கள் தாவீதை தங்களுக்கு ராஜாவாக ஏற்றுக்கொண்டு, அவருடைய ராஜரீகத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே தாவீதைக் குறித்து பேசுகிறான். அதன் பின்பு எப்ரோனிலுள்ள தாவீதின் காதுகள் கேட்க பேசுவதற்கு, அப்னேர் தாவீதினிடத்தில் போகிறான்.

இந்தப்பிரகாரமாக அப்னேர் பென்யமீன் மனுஷர் காதுகள் கேட்கப் பேசுகிறான்; பின்பு அப்னேர் இஸ்ரவேலர் பார்வைக்கும், பென்யமீனுடைய எல்லாக் குடும்பத்தாரின் பார்வைக்கும், சம்மதியானதையெல்லாம் எப்ரோனிலே தாவீதின் காதுகள் கேட்கப் பேசுகிறதற்குப் போகிறான். அப்னேரும், அவனோடே கூட இருபதுபேரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்தபோது, தாவீது அப்னேருக்கும், அவனோடே வந்த மனுஷருக்கும் விருந்துசெய்கிறார் *(2சாமு 3:19,20)*.

தாவீது தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வண்ணமாகவும், அப்னேரோடு தான் உடன்படிக்கை பண்ணியதை உறுதிபண்ணும் வண்ணமாகவும், தாவீது அப்னேருக்கும் அவனோடே வந்த இருபது மனுஷருக்கும் விருந்து செய்கிறார். இது உடன்படிக்கையின் விருந்து.

"நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்றார்கள். அவன் அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்துக் குடித்தார்கள்" *(ஆதி 26:29,30)*.

அப்னேர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணின பின்பு, அப்னேர் தாவீதை நோக்கி: "நான் எழுந்துபோய், இஸ்ரவேலரை எல்லாம் உம்மோடே உடன்படிக்கைபண்ணும்படிக்கு, ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் சேர்த்துக்கொண்டு வருகிறேன்; அதினாலே உம்முடைய ஆத்துமா அரசாள விரும்புகிற இடமெல்லாம் அரசாளுவீர்" *(2சாமு 3:21)* என்று சொல்லுகிறான்; அப்படியே தாவீது அப்னேரை அனுப்பிவிடுகிறார்; அப்னேர் சமாதானத்தோடே போகிறான்.

அப்னேரின் மரணம்
2சாமு 3:22-39

2சாமு 3:22. தாவீதின் சேவகரும் யோவாபும் அநேகம் பொருட்களைக் கொள்ளையிட்டு, தண்டிலிருந்து கொண்டுவந்தார்கள்; அப்பொழுது அப்னேர் எப்ரோனில் தாவீதினிடத்தில் இல்லை; அவனை அனுப்பிவிட்டான்; அவன் சமாதானத்தோடே போய்விட்டான்.

2சாமு 3:23. யோவாபும் அவனோடிருந்த எல்லாச் சேனையும் வந்தபோது, நேரின் குமாரனாகிய அப்னேர் ராஜாவினிடத்தில் வந்தான் என்றும், அவர் அவனைச் சமாதானமாய்ப்போக அனுப்பிவிட்டார் என்றும், யோவாபுக்கு அறிவித்தார்கள்.

2சாமு 3:24. அப்பொழுது யோவாப் ராஜாவண்டையில் பிரவேசித்து: என்ன செய்தீர்? இதோ, அப்னேர் உம்மிடத்தில் வந்தானே, நீர் அவனைப் போகவிட்டது என்ன?

2சாமு 3:25. நேரின் குமாரனாகிய அப்னேரை அறிவீரே; அவன் உம்மை மோசம்போக்கவும், உம்முடைய போக்குவரத்தை அறியவும், நீர் செய்கிறதையெல்லாம் ஆராயவும் வந்தான் என்று சொன்னான்.

2சாமு 3:26. யோவாப் தாவீதை விட்டுப் புறப்பட்டவுடனே, அவன் அப்னேரைத் தாவீதுக்குத் தெரியாமல் கூட்டிக்கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பினான்; அவர்கள் சீரா என்னும் துரவுமட்டும்போய் அவனை அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

2சாமு 3:27. அப்னேர் எப்ரோனுக்குத் திரும்பி வருகிறபோது, யோவாப் அவனோடே இரகசியமாய்ப் பேசப்போகிறவன்போல, அவனை ஒலிமுகவாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போய், தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப்பழியை வாங்க, அங்கே அவனை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்டான்.

2சாமு 3:28. தாவீது அதைக் கேட்டபோது: நேரின் குமாரனாகிய அப்னேரின் இரத்தத்திற்காக, என்மேலும் என் ராஜ்யத்தின் மேலும் கர்த்தருக்கு முன்பாக என்றைக்கும் பழியில்லை.

2சாமு 3:29. அது யோவாபுடைய தலையின் மேலும், அவன் தகப்பன் குடும்பத்தின் மேலும் சுமந்திருப்பதாக; யோவாபின் வீட்டாரிலே பிரமியக்காரனும், குஷ்டரோகியும், கோல் ஊன்றி நடக்கிறவனும், பட்டயத்தால் விழுகிறவனும், அப்பம் குறைச்சலுள்ளவனும், ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை என்றான்.

2சாமு 3:30. அப்னேர் கிபியோனில் நடந்த யுத்தத்திலே தங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்றதினிமித்தம் யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம்பண்ணினார்கள்.

2சாமு 3:31. தாவீது யோவாபையும், அவனோடிருந்த சகல ஜனங்களையும் பார்த்து: நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, இரட்டுடுத்தி, அப்னேருக்கு முன்னாக நடந்து துக்கங்கொண்டாடுங்கள் என்று சொல்லி, தாவீதுராஜா தானும் பாடைக்குப் பின்சென்றான்.

2சாமு 3:32. அவர்கள் அப்னேரை எப்ரோனிலே அடக்கம்பண்ணுகையில், ராஜா அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுதான்; சகல ஜனங்களும் அழுதார்கள்.

2சாமு 3:33. ராஜா அப்னேருக்காகப் புலம்பி: மதிகெட்டவன் சாகிறதுபோல, அப்னேர் செத்துப்போனானோ?

2சாமு 3:34. உன் கைகள் கட்டப்படவும் இல்லை; உன் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை; துஷ்டர் கைகளில் மடிகிறதுபோல மடிந்தாயே என்றான்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் பின்னும் அதிகமாய் அவனுக்காக அழுதார்கள்.

2சாமு 3:35. பொழுது இன்னும் இருக்கையில், ஜனங்கள் எல்லாரும் வந்து: அப்பம் புசியும் என்று தாவீதுக்குச் சொன்னபோது, தாவீது: சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே நான் அப்பத்தையாகிலும் வேறெதையாகிலும் ருசிபார்த்தால், தேவன் எனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்று ஆணையிட்டுச் சொன்னான்.

2சாமு 3:36. ஜனங்கள் எல்லாரும் அதைக் கவனித்தார்கள், அது அவர்கள் பார்வைக்கு நன்றாயிருந்தது; அப்படியே ராஜா செய்ததெல்லாம் சகல ஜனங்களுக்கும் நலமாய்த் தோன்றினது.

2சாமு 3:37. நேரின் குமாரனாகிய அப்னேரைக் கொன்றுபோட்டது ராஜாவினால் உண்டானதல்லவென்று அந்நாளிலே சகல ஜனங்களும், இஸ்ரவேலர் அனைவரும் அறிந்துகொண்டார்கள்.

2சாமு 3:38. ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: இன்றைய தினம் இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான் என்று அறியீர்களா?

2சாமு 3:39. நான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்த போதிலும், நான் இன்னும் பலவீனன்; செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக்கிறார்கள், அந்தப் பொல்லாப்பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக்குத்தக்கதாய்ச் சரிக்கட்டுவாராக என்றான்.

தாவீது அப்னேருக்கும் அவனோடுகூட இருபது பேருக்கும் விருந்து செய்கிறார். விருந்து முடிந்தபின்பு, அப்னேர் தாவீதுக்காக தான் செய்ய வேண்டிய வேலைகளை செய்வதற்கு புறப்பட்டுப்போகிறான். அவன் சமாதானத்தோடே போகிறான். தாவீது அப்னேருக்கு விருந்து வைத்தபோது, யோவாப் அவர்களோடு கூடயில்லை.

தாவீதின் சேவகரும் யோவாபும் அநேகம் பொருட்களைக் கொள்ளையிட்டு, தண்டிலிருந்து கொண்டுவருகிறார்கள்; அப்பொழுது அப்னேர் எப்ரோனில் தாவீதினிடத்தில் இல்லை; தாவீது அவனை அனுப்பிவிட்டார்; அப்னேர் சமாதானத்தோடே போய்விட்டான் *(2சாமு 3:22)*.

யோவாபும் அவனோடிருந்த எல்லாச் சேனையும் வந்தபோது, நேரின் குமாரனாகிய அப்னேர் ராஜாவினிடத்தில் வந்தான் என்றும், அவர் அவனைச் சமாதானமாய்ப்போக அனுப்பிவிட்டார் என்றும், யோவாபுக்கு அறிவிக்கிறார்கள் *(2சாமு 3:23)*.

அப்னேர் தாவீதைப் பார்க்க வந்தான் என்னும் செய்தியைக் கேட்டு யோவாப் மிகவும் கோபப்படுகிறான். தாவீது அப்னேருக்கு விருந்து செய்த செய்தியையும், அவர் அவனை சமாதானத்தோடு அனுப்பிவிட்ட செய்தியையும் யோவாப் கேள்விப்பட்டு, மிகவும் கோபப்படுகிறான். யோவாபால் தன்னுடைய கோபத்தை அடக்க முடியவில்லை. அவன் தாவீதுக்கு முன்பாக வந்து, கோபமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

அப்பொழுது யோவாப் ராஜாவண்டையில் பிரவேசித்து: "என்ன செய்தீர்? இதோ, அப்னேர் உம்மிடத்தில் வந்தானே, நீர் அவனைப் போகவிட்டது என்ன? நேரின் குமாரனாகிய அப்னேரை அறிவீரே; அவன் உம்மை மோசம்போக்கவும், உம்முடைய போக்குவரத்தை அறியவும், நீர் செய்கிறதையெல்லாம் ஆராயவும் வந்தான்" *(2சாமு 3:24,25)* என்று தாவீதின் முகத்திற்கு விரோதமாக கோபமாய்ச் சொல்லுகிறான்.

தாவீது யோவாபுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டியதில்லை. யோவாப் தான் தாவீதுக்கு கணக்கு சொல்லவேண்டும். ஆனால் யோவாப் தாவீதைப் பார்த்து, "நீர் அவனைப் போகவிட்டது என்ன" என்று கேட்கிறான். தாவீது அப்னேரை கைதுபண்ணி சிறையிலடைத்திருக்க வேண்டும் என்று யோவாப் எதிர்பார்க்கிறான்.

அப்னேரின் துர்க்குணம் யோவாபுக்கு நன்றாய்த் தெரியும். அவன் ஒரு சதிகாரன். அப்னேர் ஏற்கெனவே யோவாபின் சகோதரனாகிய ஆசகேலை தன் ஈட்டியினால் கொன்றுபோட்டவன். யோவாபின் பார்வையில் அப்னேர் ஒரு வஞ்சகக்காரன். அவன் தாவீதை வேவுபார்ப்பதற்காக வந்திருக்கிறான் என்று யோவாப் தாவீதிடம் விவாதம்பண்ணுகிறான்.

தாவீதோ யோவாபுக்கு பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. தாவீது யோவாபுக்கு பயப்படவில்லை. இஸ்போசேத் அப்னேரிடம் கோபமாய்ப் பேசினான். அப்னேரும் அவனுக்கு கோபமாக பிரதியுத்தரம் சொன்னான். அப்போது இஸ்போசேத் அப்னேருக்கு பயந்து ஒன்றும் பேசாதிருந்தான் *(2சாமு 3:11)*. தாவீது இஸ்போசேத்தைப்போல, யோவாபுக்கு பயந்து, ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கவில்லை. தாவீது யாருக்கும் பயப்படுகிறவரல்ல. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். இந்த சூழ்நிலையில் யோவாபுக்கு பதில் சொல்லாமல், அமைதியாகயிருப்பதே நல்லது என்று தாவீது தீர்மானித்திருக்கிறார்.

அப்னேரை கைதுபண்ணுவதற்கோ அல்லது அவனைக் கொன்றுபோடுவதற்கோ தாவீது உதவிசெய்யமாட்டார் என்பது யோவாக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆனாலும் யோவாபுக்கு அப்னேர் மீதுள்ள கோபம் சிறிதும் குறையவில்லை. யோவாப் அப்னேரை இரகசியமாகப் பிடித்து, அவனை யாருக்கும் தெரியாமல் கொன்றுபோடவேண்டும் என்று திட்டமிடுகிறான்.

யோவாப் தாவீதை விட்டுப் புறப்பட்டவுடனே, அவன் அப்னேரைத் தாவீதுக்குத் தெரியாமல் கூட்டிக்கொண்டு வரும்படி ஆட்களை அனுப்புகிறான்; அவர்கள் சீரா என்னும் துரவுமட்டும்போய் அப்னேரை யோவாபிடம் அழைத்துக்கொண்டு வருகிறார்கள் *(2சாமு 3:26)*. யோவாபின் சதிதிட்டம் நிறைவேறுகிறது.

அப்னேர் எப்ரோனுக்குத் திரும்பி வருகிறான் அப்போது, யோவாப் அவனோடே இரகசியமாய்ப் பேசப்போகிறவன்போல, அவனை ஒலிமுகவாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போகிறான். தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப்பழியை அப்னேரிடம் வாங்க வேண்டும் என்னும் கோபம் யோவாபின் இருதயத்திலே ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. அப்னேரை பழிவாங்கும் வண்ணமாக, அங்கே யோவாப் அப்னேரை அவனுடைய வயிற்றிலே குத்திக் கொன்றுபோடுகிறான் *(2சாமு 3:27)*.

அப்னேர் ஒரு தந்திரக்காரன். ஆனாலும் அவனுக்கு யோவாபின் சதிதிட்டம் தெரியவில்லை. யோவாபின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே, அப்னேர் எப்ரோனுக்கு திரும்பி வருகிறான். யோவாப் அப்னேரை தாவீதின் பெயரால் அழைத்தான். எப்ரோனிலே தாவீது இருப்பார் என்று அப்னேர் எதிர்பார்த்தான். ஆனால் அங்கே தாவீது இல்லை. யோவாப் அப்னேரை சந்திக்கிறான். யோவாப் தன்னைக் கொல்லப்போகிறான் என்பது தெரியாமலேயே, அப்னேர் அவனோடு கூடப்போகிறான்.

"அப்னேர் கிபியோனில் நடந்த யுத்தத்திலே தங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்றதினிமித்தம் யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம்பண்ணினார்கள்" *(2சாமு 3:30)*.

அப்னேருக்கு விரோதமான சதிதிட்டத்தை யோவாப் தீட்டினாலும், அவனுடைய சகோதரன் அபிசாயும் அவனுக்கு உடந்தையாயிருக்கிறான். அப்னேர் தன்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக பல காரியங்களை செய்தான். இஸ்போசேத்தை தனியாக விட்டான். அவனை வஞ்சித்தான். கர்த்தருக்கும் இஸ்ரவேலுக்கும் மதிப்பு கொடுக்கப்போவதாகச் சொல்லி, தாவீதோடு சேர்ந்துகொண்டான்.

அப்னேரிடம் கர்த்தர்மீது உண்மையான பக்தியில்லை. அவன் சுயநலக்காரன். பெருமை பிடித்தவன். பொறுமையில்லாதவன். பிறரை பழிவாங்கவேண்டும் என்னும் வஞ்சக எண்ணம் கொண்டவன். யோவாப் சதிகாரனாகிய அப்னேரைக் கொன்றுபோட்டான். யோவாப் செய்ததும் நீதியான காரியமல்ல. யோவாபும் துன்மார்க்கமான காரியத்தையே செய்திருக்கிறான்.

யோவாப் தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப்பழியை வாங்க, அவன் அப்னேரை அவனுடைய வயிற்றிலே குத்திக்கொன்றுபோட்டான். தங்கள் தம்பியாகிய ஆசகேலை அப்னேர் கொன்றதினிமித்தம், யோவாபும் அபிசாயும், அப்னேரை சங்காரம்பண்ணினார்கள் *(2சாமு 3:27,30)*. அப்னேர் ஆசகேலை யுத்தக்களத்தில் கொன்று போட்டான். யோவாபைப்போல, அப்னேர் ஆசகேலை வஞ்சிக்கவில்லை. அப்னேர் ஆசகேலை வெளிப்படையாகவே எச்சரித்தான். அதன் பின்புதான் அவன் ஆசகேலைக் கொன்றான். தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே அப்னேர் ஆசகேலைக் கொன்றான்.

"செருயாவின் குமாரனாகிய யோவாப், இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும், ஏத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் செய்த காரியத்தினால் எனக்குச் செய்த குற்றத்தை நீ அறிந்திருக்கிறாயே; அவன் அவர்களைக் கொன்று, சமாதான காலத்திலே யுத்த காலத்து இரத்தத்தைச் சிந்தி, யுத்த காலத்து இரத்தத்தைத் தன் அரையிலுள்ள கச்சையிலும் தன் கால்களில் இருந்த பாதரட்சையிலும் வடியவிட்டானே" *(1இராஜா 2:5)*.

யோவாப் தாவீதின் சேனைக்கு தலைவனாயிருக்கிறான். அப்னேர் தாவீதோடு உடன்படிக்கை செய்துகொண்டதினால், அவன் தாவீதின் சேனைக்கு தலைவனாக நியமிக்கப்படுவானோ என்னும் சந்தேகம் யோவாபுக்கு வந்திருக்கலாம். தாவீதின் சேனையில் அப்னேருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமோ என்றும், தன்னுடைய முக்கியத்துவம் குறைந்துபோகுமோ என்றும் யோவாப் சந்தேகப்பட்டிருக்கலாம்.

யோவாப் அப்னேரோடு சமாதானம் பேசுவதுபோல நடித்து, அவனை கொன்றுபோட்டான்.

"ஒளிப்பிடத்திலே பிறனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்" *(உபா 27:24).*

யோவாப் ஒரு உண்மையான வீரனாக இருந்திருப்பானென்றால், அவன் அப்னேரோடு நேருக்கு நேராக யுத்தம்பண்ணவேண்டும். ஆனால் யோவாபோ ஒரு கோழையைப்போல, மறைவாகயிருந்து, அப்னேரைக் கொன்றுபோட்டான்.

அப்னேர் இப்போது தாவீதோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். தாவீதை இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அமரச் செய்வதற்கு அப்னேரும் சேவை செய்கிறான். இந்த வேளையில், யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டதினால், அவன் தாவீதின் நன்மைக்கு விரோதமாக இந்த செயலை செய்திருக்கிறான். அப்னேர் செத்துப்போனதினால் தாவீதுக்கு பேரிழப்பு உண்டாயிற்று.

யோவாப் அப்னேரை ஒலிமுகவாசலின் நடுவே ஒருபக்கமாய் அழைத்துக்கொண்டுபோய், அவன் வயிற்றிலே குத்திக்கொன்றுபோட்டான். ஒலிமுகவாசலிலே ஜனங்கள் கூட்டமாயிருப்பார்கள். யோவாப் அப்னேரை இரகசியமாக அழைத்தாலும், அவனை அங்கே எல்லோருக்கும் முன்பாக கொன்றுபோட்டான். தான் செய்வது ஒரு கொலை பாதகம் என்பது தெரிந்திருந்தும், யோவாப் அதைப்பற்றி கவலைப்படாமல், வெட்கப்படாமல், எல்லோருடைய கண்களுக்கும் முன்பாக, அப்னேரின் வயிற்றிலே குத்தி கொன்றுபோட்டான்.

யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்ட செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்னேரின் மரணத்திற்காக தாவீது மிகவும் வருத்தப்படுகிறார். துக்கப்படுகிறார். அப்னேர் செத்துப்போனதில் தனக்கு ஒரு பங்குமில்லை என்பதை தாவீது உறுதிபண்ணுகிறார். அப்னேர் செத்துப்போன செய்தியை தாவீது கேட்டபோது: "நேரின் குமாரனாகிய அப்னேரின் இரத்தத்திற்காக, என்மேலும் என் ராஜ்யத்தின் மேலும் கர்த்தருக்கு முன்பாக என்றைக்கும் பழியில்லை" *(2சாமு 3:28)* என்று சொல்லுகிறார்.

அப்னேரின் மரணத்திற்கு யோவாபும் அவனுடைய குடும்பத்தாருமே காரணம் என்பது தாவீதுக்கு தெரியும். தாவீது யோவாபையும் அவனுடைய குடும்பத்தையும், அப்னேரைக் கொன்றுபோட்ட காரணத்திற்காக சபிக்கிறார். நேரின் குமாரனாகிய அப்னேரின் இரத்தப்பழி, "யோவாபுடைய தலையின் மேலும், அவன் தகப்பன் குடும்பத்தின் மேலும் சுமந்திருப்பதாக; யோவாபின் வீட்டாரிலே பிரமியக்காரனும், குஷ்டரோகியும், கோல் ஊன்றி நடக்கிறவனும், பட்டயத்தால் விழுகிறவனும், அப்பம் குறைச்சலுள்ளவனும், ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை" *(2சாமு 3:29)* என்று சொல்லி தாவீது சபிக்கிறார்.

கொலைசெய்தவருக்கு தண்டனை கொடுக்கப்படவேண்டும். தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். அவரே இந்தக் கொலை குற்றத்தை விசாரித்து, யோவாபுக்கு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். ஆனால் தாவீதோ, கர்த்தர் யோவாபை தண்டிக்கவேண்டும் என்று விரும்புகிறார். யோவாபை மாத்திரமல்ல அவனுடைய சந்ததியார் எல்லோர்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று சொல்லி, தாவீது, யோவாபையும் அவனுடைய குடும்பத்தாரையும் சபிக்கிறார்.

யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டதற்கு ஒரு காரணமுள்ளது. ஆசகேல் யோவாபின் சகோதரன். அப்னேர் ஏற்கெனவே ஆசகேலைக் கொன்றுபோட்டான். அப்னேர் கிபியோனில் நடந்த யுத்தத்திலே தங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்றதினிமித்தம் யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம்பண்ணினார்கள் *(2சாமு 3:30).*

தாவீது அப்னேருக்காக துக்கங்கொண்டாடுகிறார். தான் மாத்திரமல்ல தன்னோடிருக்கிற சகல ஜனங்களும் அப்னேருக்காக துக்கங்கொண்டாட வேண்டுமென்று தாவீது கட்டளையிடுகிறார். தாவீது அப்னேருக்காக துக்கங்கொண்டாடும்போது, அப்னேரைக் கொன்றுபோட்ட யோவாபும், தாவீதோடுகூடு துக்கங்கொண்டாடவேண்டும். தாவீது யோவாபுக்கு இதை விசேஷித்த கட்டளையாகச் சொல்லுகிறார். யோவாப் தாவீதின் படைத்தலைவனாகயிருந்தாலும், அவனுக்கு அப்னேர்மீது கோபம் இருந்தாலும், யோவாப் தாவீது ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவனும் அப்னேருக்காக துக்கங்கொண்டாடவேண்டும்.

தாவீது யோவாபையும், அவனோடிருந்த சகல ஜனங்களையும் பார்த்து: "நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, இரட்டுடுத்தி, அப்னேருக்கு முன்னாக நடந்து துக்கங்கொண்டாடுங்கள்" *(2சாமு 3:31)* என்று சொல்லுகிறார். தாவீதுராஜா தானும் அப்னேரின் பாடைக்குப் பின்செல்கிறார்.

மரித்துப்போன ஒருவரை அடக்கம்பண்ணும்போது, அவரைப்பற்றி நல்ல வார்த்தைகளைச் சொல்லுவது வழக்கம். அப்னேர் ஒரு பரிசுத்தவானோ அல்லது நற்குணமுள்ளவனோ அல்ல. தாவீது அப்னேரைப்பற்றி பொய்சொல்லவில்லை. அப்னேர் இதுவரையிலும் தாவீதுக்கு விரோதமாகயிருந்தவன். அவன் சவுலோடுகூடயிருந்து, தாவீதைக் கொல்லுவதற்கு வகை தேடினவன். ஆனாலும் தாவீது அப்னேருக்காக துக்கங்கொண்டாடுகிறார்.

தாவீது அப்னேரைக் குறித்து "இன்றைய தினம் இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான்" *(2சாமு 3:38)* என்று சொல்லுகிறார். தாவீது அப்னேரை பரிசுத்தவான் என்று சொல்லாவிட்டாலும், அவனை "பிரபு" என்றும், "பெரிய மனுஷன்" என்றும் புகழ்ந்து சொல்லுகிறார்.

அப்னேரின் மரணத்திற்காக எல்லோரும் துக்கங்கொண்டாடவேண்டும் என்பது தாவீதின் கட்டளை. ஒரு தேசத்தில் பொதுவான இழப்பு அல்லது தேசத்தலைவரின் மரணம் என்று நேரிடும்போது, அந்த தேசத்திலுள்ள எல்லோருமே துக்கங்கொண்டாடவேண்டும். ஒவ்வொருவரும் அந்த துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

தாவீது இப்போது அப்னேருக்காக துக்கங்கொண்டாடுவது, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே ஒரு முன்உதாரணமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திற்காக நன்மை செய்த எல்லோருக்கும் ஜனங்கள் மதிப்பும் மரியாதையும் காண்பிக்கவேண்டும். தாங்களும் தேசத்திற்கு நன்மை செய்யவேண்டும் என்று சாதாரண ஜனங்களும், இதன் மூலமாக நினைக்கவேண்டும். தேசத்தலைவர்களை பின்பற்றி, தேசத்து ஜனங்களும் தங்கள் தேசத்திற்கு நல்லது செய்யவேண்டும்.

தன்னோடிருந்த எல்லா ஜனங்களும் அப்னேருக்காக துக்கங்கொண்டாடவேண்டும் என்று தாவீது சொல்லுகிறார். அப்போது, அப்னேருக்காக யோவாபும் துக்கங்கொண்டாடவேண்டுமென்று தாவீது விசேஷமாய் அவனுக்கு சொல்லுகிறார். அப்னேர் மரித்துப்போனதில் யோவாபுக்கு மனவருத்தமோ, மனவேதனையோ, துக்கமோ உண்டாகவில்லை. ஆனாலும் யோவாபும் அப்னேருக்காக துக்கங்கொண்டாடவேண்டும். யோவாப் அப்னேரைக் கொன்று, அவனுடைய இரத்தப்பழியை தன்மீது சுமந்துகொண்டிருக்கிறான். ஆகையினால் மற்றவர்களைவிட, யோவாப் அப்னேருக்காக அதிகமாய் துக்கங்கொண்டாடவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் அப்னேரின் மரித்துப்போன சரீரத்தை பாடையிலே சுமந்துகொண்டு போகிறார்கள். தாவீதோடு கூடயிருக்கிறவர்கள் எல்லோரும் அப்னேருக்கு முன்னாக நடந்து துக்கங்கொண்டாடுகிறார்கள். அப்னேரின் சரீரம் பாடையில் போகும்போது தாவீது தன் வீட்டிலே ஒய்வெடுக்கவில்லை. தாவீது ராஜாவும் அப்னேரின் பாடைக்கு பின்செல்கிறார்.

தாவீதோடிருக்கிறவர்கள் அப்னேரை எப்ரோனிலே அடக்கம்பண்ணுகிறார்கள். அவனை அடக்கம்பண்ணுகையில் தாவீது ராஜா, அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுகிறார். அப்போது தாவீதோடு கூடயிருக்கிற சகல ஜனங்களும் அழுகிறார்கள் *(2சாமு 3:32)*.

அப்னேர் ஒரு யுத்தவீரன். அவன் ஒரு பராக்கிரமசாலி. அவன் சவுலுக்காக அநேக யுத்தங்களை நடத்தியிருக்கிறான். அப்னேர் சத்துருக்களின் கைகளிலிருந்து இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சித்திருக்கிறான். அப்னேர் உயிரோடிருந்திருந்தால், இஸ்ரவேல் தேசத்திற்கு இன்னும் அநேக நன்மைகளை செய்திருப்பான். அவன் இப்போதுதான் தாவீதோடு சேர்ந்து, உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். அப்னேர் மூலமாய் தனக்கு அநேக நன்மைகள் உண்டாகும் என்று தாவீது எதிர்பார்த்தார். தாவீது இப்போது இக்கட்டான சூழ்நிலையிலும், நெருக்கமான சூழ்நிலையிலும் இருக்கிறார். அவருக்கு அப்னேரின் உதவி அதிகமாய்த் தேவைப்படுகிறது. இந்த முக்கியமான காலத்தில், யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டான்.

அப்னேர் செத்துப்போனது தாவீதுக்கு பேரிழப்பாயிருக்கிறது. அப்னேர் இதற்கு முன்பு தனக்கு செய்த எல்லா தீங்குகளையும் தாவீது மன்னித்து மறந்துவிடுகிறார். தாவீதின் கண்களுக்கு முன்பாக அப்னேரை எப்ரோனிலே அடக்கம்பண்ணுகிறார்கள். அப்போது தாவீது அப்னேரின் கல்லறையண்டையில் சத்தமிட்டு அழுகிறார். அப்னேர் செத்துப்போனதினால், தனக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பட்டிருக்கிற ஏராளமான இழப்புக்களை நினைத்துப் பார்த்து, தாவீது மனங்கசந்து அழுகிறார். தாவீது சத்தமிட்டு அழுவதைக் கேட்டு, அவரோடு கூடயிருக்கிற சகல ஜனங்களும் அழுகிறார்கள்.

தாவீது ராஜா அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழும்போது, அவர் அப்னேருக்காக புலம்பல் பாடல் பாடுகிறார். "மதிகெட்டவன் சாகிறதுபோல, அப்னேர் செத்துப்போனானோ? உன் கைகள் கட்டப்படவும் இல்லை; உன் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை; துஷ்டர் கைகளில் மடிகிறதுபோல மடிந்தாயே" *(2சாமு 3:33,34)* என்று தாவீது அப்னேருக்காக புலம்புகிறார்.

அப்னேர் ஒரு யுத்தவீரன். அவன் ஒரு தந்திரசாலி. அவனுக்கு யுத்த வியூகங்கள் நன்றாய்த் தெரியும். ஆனாலும் அப்னேர் மதிகெட்டவன் சாகிறதுபோல செத்துப்போனான். அப்னேர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணினான். ஆகையினால் தாவீதின் சேனைத்தலைவனாகிய யோவாப் தனக்கு சிநேகிதனாயிருப்பான் என்று அப்னேர் எதிர்பார்த்தான். ஆனால் யோவாபோ அப்னேரை வஞ்சித்து அவனைக் கொன்றுபோட்டான்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவன் எவ்வளவு பெரிய ஞானியாகயிருந்தாலும், அவன் எவ்வளவு பெரிய ஐசுவரியவானாகயிருந்தாலும், அவன் எவ்வளவு பெரிய பலசாலியாகயிருந்தாலும், அவனுக்கு விரோதமாகவும் சதிவலையும், வஞ்சக வலையும் பின்னப்படுவதற்கு வாய்ப்புள்ளது. சதியையும் வஞ்சகத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு பாதுகாப்பு அரண்களைக் கட்ட முடியாது. கர்த்தரே நமக்கு அரணாகயிருக்கவேண்டும். அவரே நமக்கு பலத்த துருக்கமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் நமக்கு இருந்தால் மாத்திரமே, நம்மால் சத்துருக்களின் வஞ்சக வலைகளுக்கும், அவர்களுடைய கண்ணிகளுக்கும் நம்மால் தப்பிக்க முடியும்.

அப்னேர் இஸ்ரவேலின் சரித்திரத்திலே, ஒரு முக்கியமான காலகட்டத்தில், தாவீதோடு உடன்படிக்கைபண்ணினான். தாவீதுக்கு தன்னால் அநேக நன்மைகளை செய்ய முடியும் என்றும், இஸ்ரவேலின் சரித்திரமே தன்னால் தலைகீழாக மாறும் என்றும் அப்னேர் எதிர்பார்த்தான். ஆனால் அப்னேருக்கும் யோவாபுக்கும் இருந்த பகையினால், அப்னேர் செத்துப்போனான். அப்னேரின் மனதிலே பொறாமையும் பெருமையும் உள்ளது. அப்னேர் தன்னுடைய பொறாமைக்கு பலியானான்.

கர்த்தருடைய பிள்ளைகள் சமுதாயத்தில் எவ்வளவு உயர்ந்தவர்களாகயிருந்தாலும், அவர்களிடத்தில் பெருமை இருக்கக்கூடாது. பெருமை நம்முடைய மகிமையை மாசுபடுத்தி கெடுத்துவிடும். இருதயத்தில் பெருமையுள்ளவர்கள் உலகத்தையும், உலககாரியங்களையும் சிநேகிப்பார்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை.

"மதிகெட்டவன் சாகிறதுபோல அப்னேர் செத்துப்போனானோ" என்று தாவீது புலம்பும்போது, "மதிகெட்டவன் சாகிறதுபோல அப்னேர் செத்துப்போகவில்லை" என்று பொருள்படுமாறு தாவீது புலம்புகிறார் என்று வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள். அப்னேர் ஒரு குற்றவாளியல்ல. அவன் யாரையும் கொன்றுபோடவேண்டுமென்று சதிபண்ணவுமில்லை செப்துவஜிந்த் பதிப்பில், "அப்னேர் நாபாலைப்போல செத்துப்போனான்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

நாபால் உயிரோடிருந்தபோதே செத்தவன்போல கிடந்தான். அப்னேரும் நாபாலைப்போலவே, உயிரோடிருக்கும்போதே செத்தவனாயிருக்கிறான். அப்னேரைப்போல இந்தப் பிரபஞ்சத்தில், தலைவர்களும், நல்லவர்களும், பலமுள்ளவர்களும், பராக்கிரமசாலிகளும், சத்துருக்களின் வஞ்சத்தினால் செத்துப்போகிறார்கள்.

தாவீது அப்னேருக்காக புலம்பும்போது, ஜனங்கள் எல்லாரும் இன்னும் அதிகமாய் அப்னேருக்காக அழுகிறார்கள். அவர்கள் சூரியன் அஸ்தமனமாகும் வரையிலும் ஒன்றும் புசியாமல், அப்னேருக்காக உபவாசம்பண்ணி துக்கங்கொண்டாடுகிறார்கள். தாவீதும் அப்பம் புசிக்கவில்லை. ஜனங்களும் அப்பம் புசிக்கவில்லை.

பொழுது இன்னும் இருக்கையில், ஜனங்கள் எல்லாரும் தாவீதிடம் வந்து; "அப்பம் புசியும்" என்று சொல்லுகிறார்கள். தாவீதோ சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே அப்பம் புசிக்க மறுத்துவிடுகிறார். தாவீது அவர்களிடம், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே நான் அப்பத்தையாகிலும் வேறெதையாகிலும் ருசிபார்த்தால், தேவன் எனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" *(2சாமு 3:35)* என்று ஆணையிட்டுச் சொல்லுகிறார்.

அப்னேர் கிபியோனில் நடந்த யுத்தத்திலே தங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்றதினிமித்தம் யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம்பண்ணினார்கள் *(2சாமு 3:30)*. தாவீது கொலைகாரர்களுக்கு நியாயமான தண்டனை கொடுக்கவேண்டும். ஆனால் தாவீதால் யோவாபுக்கு தண்டனை கொடுக்க முடியவில்லை.

தாவீதின் ராஜ்யம் இப்போதுதான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தாவீதும் பலவீனமாயிருக்கிறார். தாவீதின் ராஜ்யத்திலே, இப்போது சிறிய குழப்பம் ஏற்பட்டாலும், அது தாவீதின் ராஜாசனத்தைக் கவிழ்த்துப்போடும். அதனால் தாவீது தன்னுடைய ராஜாசனத்தை இழந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் அப்னேரைக் கொன்றுபோட்ட யோவாபை தாவீது தண்டிக்காமல் விட்டுவிடுகிறார். கர்த்தருடைய சாபம் யோவாபின்மீதும், அவனுடைய குடும்பத்தார்மீதும் தங்கியிருக்கும் என்று தாவீது அவனை சபிக்கிறார்.

இக்காலத்தில் யோவாபின் குடும்பத்தாரும் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தாவீதுக்கு விரோமாகக் கலகம்பண்ணினால் தாவீதால் அவர்களை அடக்க முடியாது. தாவீது இந்தப் பிரச்சனைகளையெல்லாம் யோசித்துப் பார்த்து, அப்னேரைக் கொன்றுபோட்ட யோவாபை தண்டியாமல் விட்டுவிடுகிறார்.

தாவீது யோவாபை தண்டிக்காமலிருப்பது ஜனங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தாவீது தன்னுடைய ஜனங்களிடம், "நான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்தபோதிலும், நான் இன்னும் பலவீனன்; செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக்கிறார்கள், அந்தப் பொல்லாப்பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக்குத்தக்கதாய்ச் சரிக்கட்டுவாராக" *(2சாமு 3:39)* என்று சொல்லுகிறார்.

யோவாபை தன்னால் தண்டிக்க முடியாது. ஆனாலும் கர்த்தரால் அவனைத் தண்டிக்க முடியும் என்று தாவீது நம்புகிறார். அப்னேர் செத்துப்போனதற்கு தானும் ஒரு காரணம் என்று ஜனங்கள் நினைப்பார்களோ என்னும் சந்தேகம் தாவீதின் மனதிலிருக்கிறது. அவர்கள் தாவீது அப்னேருக்காக, அவனுடைய கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுததைப் பார்க்கிறார்கள். தாவீது அப்னேருக்காக புலம்பி பாடின புலம்பல் பாடலைக் கேட்கிறார்கள். ஜனங்கள் எல்லோரும் தாவீதை கவனிக்கிறார்கள். தாவீது அப்னேருக்காக சத்தமிட்டு அழுதது, அவனுக்காக புலம்பியது ஆகியவை ஜனங்கள் எல்லோருடைய பார்வைக்கும் நன்றாயிருக்கிறது.

தாவீதுராஜா செய்ததெல்லாம் சகல ஜனங்களுக்கும் நலமாய்த் தோன்றுகிறது. நேரின் குமாரனாகிய அப்னேரைக் கொன்றுபோட்டது ராஜாவினால் உண்டானதல்லவென்று அந்நாளிலே சகல ஜனங்களும், இஸ்ரவேலர் அனைவரும் அறிந்துகொள்கிறார்கள் *(2சாமு 3:36,37)*.

தாவீது தன்னுடைய ஊழியக்காரர் மத்தியிலே அப்னேரைப் புகழ்ந்து பேசுகிறார். "இன்றைய தினம் இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான் என்று அறியீர்களா?" *(2சாமு 3:38)* என்று தாவீது தன் ஊழியக்காரருக்கு, அப்னேரைப்பற்றிச் சொல்லுகிறார்.

அப்னேர் செத்துப்போனதினால் தாவீது சோர்ந்துபோயிருக்கிறார். நீதி எது என்றும், நியாயம் எது என்றும், உண்மை எது என்றும் தாவீதுக்கு தெரிந்திருக்கிறது. அப்னேரைக் கொன்ற கொலைகாரர்கள் யார் என்பதும் தாவீதுக்கு தெரிந்திருக்கிறது. ஆனாலும் அப்னேரின் வழக்கை தாவீதால் நீதியாய் விசாரிக்க முடியவில்லை. அப்னேரைக் கொன்றுபோட்ட கொலைகாரர்களுக்கு, தாவீதால் நியாயமான தண்டனை கொடுக்க முடியவில்லை.

கொலைகாரர்களுக்கு தன்னால் தண்டனை கொடுக்க முடியாவிட்டாலும், கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார் என்று தாவீது நம்புகிறார். "அந்தப் பொல்லாப்பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக்குத்தக்கதாய்ச் சரிக்கட்டுவாராக" *(2சாமு 3:39)* என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது நீதிக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டு, யோவாபை தண்டித்திருந்தால், பிற்காலத்தில் தாவீதின் ராஜ்யத்திலே, இஸ்போசேத், அம்னோன் போன்றவர்கள் செத்துப்போயிருக்கமாட்டார்கள். தாவீது நீதிக்கு தலைவணங்காமல், தன்னுடைய மாம்ச சுபாவத்திற்கு கீழ்ப்படிகிறார். நல்லவர்களுக்கு இரக்கம் காண்பிக்காமல், பொல்லாதவர்களுக்கும், கொலைகாரர்களுக்கும் இரக்கம் காண்பிக்கிறார். தாவீது ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார். ஆனாலும், "நான் இன்னும் பலவீனன்" என்று தாவீது தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

ராஜாவின் பலம், தன்னுடைய தேசத்திலுள்ள குடிமக்கள் எல்லோருடைய பலத்திற்கும் மிஞ்சினதாயிருக்கவேண்டும். அப்போதுதான் ராஜாவால் நீதியாய் ஆட்சி செய்ய முடியும். ராஜா ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். தேசத்திலுள்ள ஒரு சில பலவான்களும், துன்மார்க்கரும், அக்கிரமக்காரரும் ராஜாவை ஆளுகை செய்யக்கூடாது.

தாவீது இந்த சூழ்நிலையில் தன்னுடைய பலவீனத்தை உணருகிறார். தாவீது தன் ஊழியக்காரரை நோக்கி, "நான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்தபோதிலும், நான் இன்னும் பலவீனன்; செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக்கிறார்கள்" *(2சாமு 3:39)* என்று மனவேதனையோடு சொல்லுகிறார்.

4 அதிகாரம்

இஸ்போசேத்தின் படைத்தலைவரான பானா என்பவனும், ரேகாப் என்பவனும், இஸ்போசேத்தை கொன்றுபோடுகிறார்கள். அவர்கள் இஸ்போசேத்தின் தலையை தாவீதினிடத்தில் கொண்டு வருகிறார்கள் (2சாமு 4:1-8). இஸ்போசேத்தைக் கொன்றுபோட்டதற்காக, தாவீது தங்களுக்கு சன்மானம் கொடுப்பார் என்று இவர்கள் இருவரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் தாவீதோ அவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கிறார் (2சாமு 4:9-12).

இஸ்போசேத்தின் மரணம் 2சாமு 4:1-8

2சாமு 4:1. அப்னேர் எப்ரோனிலே செத்துப் போனதைச் சவுலின் குமாரன் கேட்டபோது, அவன் கைகள் திடனற்றுப்போயிற்று; இஸ்ரவேலரெல்லாரும் கலங்கினார்கள்.

2சாமு 4:2. சவுலின் குமாரனுக்குப் படைத்தலைவரான இரண்டுபேர் இருந்தார்கள்; ஒருவனுக்குப் பேர் பானா, மற்றவனுக்குப் பேர் ரேகாப்; அவர்கள் பென்யமீன் புத்திரரில் பேரோத்தியனாகிய ரிம்மோனின் குமாரர்கள். பேரோத்தும் பென்யமீனுக்கு அடுத்ததாய் எண்ணப்பட்டது.

2சாமு 4:3. பேரோத்தியர் கித்தாயீமுக்கு ஓடிப்போய், இந்நாள்வரைக்கும் அங்கே சஞ்சரிக்கிறார்கள்.

2சாமு 4:4. சவுலின் குமாரன் யோனத்தானுக்கு இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருந்தான்; சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து வருகிறபோது, அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது அவனுடைய தாதி அவனை எடுத்துக்கொண்டு ஓடிப் போனாள்; அவள் ஓடிப்போகிற அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான்; அவனுக்கு மேவிபோசேத் என்று பேர்.

2சாமு 4:5. பேரோத்தியனான அந்த ரிம்மோனின் குமாரராகிய ரேகாபும் பானாவும் போய், இஸ்போசேத் மத்தியானத்திலே வெய்யில் நேரத்தில் படுக்கையின்மேல் சயனித்திருக்கும் போது அவன் வீட்டிற்குள் பிரவேசித்து,

2சாமு 4:6. கோதுமை வாங்க வருகிறவர்கள் போல, நடுவீடுமட்டும் வந்து, அவனை வயிற்றிலே குத்திப்போட்டார்கள்; பின்பு ரேகாபும் அவன் சகோதரன் பானாவும் தப்பி ஓடிப்போனார்கள்.

2சாமு 4:7. அவன் தன் பள்ளி அறையிலே தன் கட்டிலின்மேல் படுத்திருக்கும்போது இவர்கள் உள்ளே போய், அவனைக் குத்திக் கொன்றுபோட்டு, அவன் தலையை வெட்டிப்போட்டார்கள்; பின்பு அவன் தலையை எடுத்துக்கொண்டு, இராமுழுதும் அந்தரவெளி வழியாய் நடந்து,

2சாமு 4:8. எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு வந்து, ராஜாவை நோக்கி: இதோ, உம்முடைய பிராணனை வாங்கத்தேடின உம்முடைய சத்துருவாயிருந்த சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் தலை; இன்றைய தினம் கர்த்தர் ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்காகச் சவுலின் கையிலும் அவன் குடும்பத்தாரின் கையிலும் பழிவாங்கினார் என்றார்கள்.

சவுலின் வீட்டார் வர வர பலவீனப்பட்டுப்போகிறார்கள். அப்னேர் எப்ரோனிலே செத்துப்போனான். அவன் செத்துப்போன செய்தியை சவுலின் குமாரனான இஸ்போசேத் கேள்விப்படுகிறான். அப்பொழுது அவனுடைய கைகள் திடனற்றுப்போயிற்று. அப்னேர் செத்துப்போனதை நினைத்து, இஸ்ரவேலர் எல்லோரும் கலங்குகிறார்கள் (2சாமு 4:1).

அப்னேர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆதரவாகயிருந்தான். இஸ்போசேத்தும், இஸ்ரவேல் மனுஷரும் அப்னேரின் ஆதரவிலும், பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருந்தார்கள். ஆனால் அப்னேர் திடீரென்று செத்துப்போய்விட்டான். யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டான். அப்னேரின் மரணச்செய்தியைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரின் இருதயம் கலங்கிற்று. அவர்களுடைய ஆவி முறிந்துபோயிற்று.

இஸ்போசேத்திற்கு இப்போது அப்னேரின் ஆதரவு இல்லை. அப்னேர் செத்துப்போனதினால் இஸ்போசேத்தின் கைகள் திடனற்றுப்போயிற்று. இஸ்போசேத்தின் சிநேகிதர்கள் அவனை விட்டு விலகிப்போய்விட்டார்கள். இப்போது இஸ்போசேத்தோடு கூடயிருக்கிறவர்கள் அவனுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள்.

சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்திற்குப் படைத்தலைவராக இரண்டுபேர் இருக்கிறார்கள்; ஒருவனுக்குப் பேர் பானா, மற்றவனுக்குப் பேர் ரேகாப்; அவர்கள் பென்யமீன் புத்திரரில் பேரோத்தியனாகிய ரிம்மோனின் குமாரர்கள். பேரோத்தும் பென்யமீனுக்கு அடுத்ததாய் எண்ணப்படுகிறது *(2சாமு 4:2)*. பேரோத்தியர் கித்தாயீமுக்கு ஓடிப்போய், இந்நாள்வரைக்கும் அங்கே சஞ்சரிக்கிறார்கள் *(2சாமு 4:3)*.

சவுலின் மூன்று குமாரரும், பெலிஸ்தருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே செத்துப்போனார்கள். சவுலின் குமாரன் யோனத்தானுக்கு இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான்; சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து வருகிறபோது, அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது அவனுடைய தாதி அவனை எடுத்துக்கொண்டு ஓடிப் போனாள்; அவள் ஓடிப்போகிற அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான்; அவனுக்கு மேவிபோசேத் என்று பேர் *(2சாமு 4:4)*.

சவுலும், யோனத்தானும் யுத்தத்திலே செத்துப்போனபோது மேவிபோசேத்திற்கு ஐந்து வயதாயிருந்தது. இவனுடைய தாத்தாவும் தகப்பனாரும், யுத்தத்திலே செத்துப்போனபோது, மேவிபோசேத்தின் தாதி, இவனை எப்படியும் காப்பாற்றவேண்டும் என்று தீர்மானித்து, அவனை எடுத்துக் கொண்டு ஓடிப்போனாள். வேகமாக ஓடும்போது அந்த அவசரத்தில் இஸ்போசேத் கீழே விழுந்துவிட்டான். அவனுடைய எலும்புகள் முறிந்தது. முறிந்த எலும்புகள் மறுபடியும் ஒட்டவில்லை. இதனால் மேவிபோசேத் முடவனாயிருக்கிறான்.

மேவிபோசேத்தைத் தவிர, சவுலின் குடும்பத்திலே, இஸ்போசேத் மாத்திரமே இருக்கிறான். இப்போது இஸ்போசேத்தின் ஜீவனுக்கும், அவனுடைய படைத்தலைவர்கள் மூலமாய் ஆபத்து உண்டாயிற்று. பானாவும் ரேகாபும் இஸ்போசேத்தின் படைத்தலைவர்கள். இவர்கள் ரிம்மோனின் குமாரர். இவர்கள் இருவரும் சகோதரர்கள்.

சவுல் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இஸ்போசேத் தன்னுடைய பாதுகாப்புக்கு பென்யமீன் கோத்திரத்தாரை நம்புகிறான். பானாவும், ரேகாபும் பென்யமீன் புத்திரர். இவர்கள் இருவரும் தனக்கு படைத்தவராயிருக்க வேண்டுமென்றும், தனக்குப் பாதுகாப்பாயிருக்கவேண்டுமென்றும் இஸ்போசேத் எதிர்பார்க்கிறான். இதற்காகவே அவன் இவர்கள் இவருவரையும் தன்னுடைய படைத்தலைவராய் நியமித்திருக்கிறான்.

பானாவும் ரேகாபும் பேரோத் ஊரைச் சேர்ந்தவர்கள். சவுல் மரித்த பின்பு, பேரோத்தியர் கித்தாயீம் ஊருக்கு ஓடிப்போனார்கள். அவர்கள் இந்நாள் வரைக்கும் அங்கே சஞ்சரிக்கிறார்கள். இந்த சம்பவம் நடைபெற்றபோது, பேரோத்தியர், கித்தாயீம் ஊரிலே சஞ்சரித்திருக்க வேண்டும். ரிம்மோனின் குமாரர்களாகிய பானாவும், ரேகாபும் கித்தாயீம் ஊரிலே சஞ்சரித்திருக்கவேண்டும்.

இஸ்போசேத்தின் படைத்தலைவனாகிய பானாவும் ரேகாபும், தங்கள் ராஜாவாகிய இஸ்போசேத்தை கொன்றுபோட வேண்டுமென்று சதிபண்ணுகிறார்கள். பேரோத்தியனான அந்த ரிம்மோனின் குமாரராகிய ரேகாபும் பானாவும் போய், இஸ்போசேத் மத்தியானத்திலே வெய்யில் நேரத்தில் படுக்கையின்மேல் சயனித்திருக்கும்போது அவன் வீட்டிற்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் இருவரும் கோதுமை வாங்க வருகிறவர்கள் போல, நடுவீடுமட்டும் வந்து, இஸ்போசேத்தை வயிற்றிலே குத்திப்போடுகிறார்கள்; பின்பு ரேகாபும் அவன் சகோதரன் பானாவும் தப்பி ஓடிப்போகிறார்கள் *(2சாமு 4:5,6)*.

இஸ்போசேத் ஒரு சோம்பேறி. அவன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், ராஜாசன காரியங்களை ஒழுங்காய்க் கவனிக்கமாட்டான். அவன் மத்தியான நேரத்தில்கூட படுக்கையின்மேல் சயனித்துக்கொண்டிருக்கிறான். இஸ்போசேத்தின் படைத்தளபதியாகயிருந்த அப்னேர், தாவீதோடு உடன்படிக்கை செய்துகொண்டான். யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டான். இந்தச் செய்தியைக் கேட்டு இஸ்ரவேலர் எல்லோரும் கலங்குகிறார்கள். இஸ்போசேத்தின் கைகள் திடனற்றுப்போயிற்று. அவனுடைய மனதிலே திகிலும், கலக்கமும் உண்டாயிற்று. ஆனாலும் இந்த சூழ்நிலையில்கூட அவன் மத்தியானத்திலே, வெய்யில் நேரத்திலே, படுக்கையின்மேல் சயனித்துக் கொண்டிருக்கிறான். இஸ்போசேத்தின் கைகள் திடனற்றுப்போனதுபோலவே, அவனுடைய மனதும் இருதயமும் திடனற்றுப்போயிற்று.

பானாவும் ரேகாபும் இஸ்போசேத்தைக் கொன்றுபோட சதிபண்ணுகிறார்கள். ராஜாவினுடைய படுக்கை அறையும், அவனுடைய கோதுமை களஞ்சியத்தின் அறையும் ஒன்றுக்கொன்று அருகாமையிலிருக்கிறது. பானாவும் ரேகாபும் இஸ்போசேத்தின் படைத்தலைவராயிருப்பதினால், அவர்களுக்கு ராஜாவின் வீட்டைப்பற்றிய விவரம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. கோதுமை வாங்க வருகிறவர்கள் ராஜாவின் நடுவீடு மட்டும் வருவார்கள் என்பதும் அவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

இஸ்போசேத் தன் பள்ளி அறையிலே தன் கட்டிலின்மேல் படுத்திருக்கும்போது இவர்கள் உள்ளே போய், அவனைக் குத்திக் கொன்றுபோடுகிறார்கள். அவர்கள் இஸ்போசேத்தின் தலையை வெட்டிப்போடுகிறார்கள்; பின்பு அவர்கள் இஸ்போசேத் தலையை எடுத்துக்கொண்டு, இராமுழுதும் அந்தரவெளி வழியாய் நடந்து, எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வருகிறார்கள். அவர்கள் கையில் இஸ்போசேத்தின் தலை இருக்கிறது. தாவீதிடம் இஸ்போசேத்தின் தலையைக் கொடுத்தால், அவர் தங்களுக்கு பெரிய சன்மானம் கொடுப்பார் என்று பானாவும் ரேகாபும் எதிர்பார்க்கிறார்கள் *(2சாமு 4:7)*.

பானாவும் ரேகாபும் தாவீது ராஜாவை நோக்கி, "இதோ, உம்முடைய பிராணனை வாங்கத்தேடின உம்முடைய சத்துருவாயிருந்த சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் தலை; இன்றைய தினம் கர்த்தர் ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்காகச் சவுலின் கையிலும் அவன் குடும்பத்தாரின் கையிலும் பழிவாங்கினார்" *(2சாமு 4:8)* என்று சொல்லுகிறார்கள்.

பானாவுக்கும் ரேகாபுக்கும் கர்த்தர்மீது பக்தியில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தரைப்பற்றிச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு தாவீது ராஜாவின்மீது மதிப்போ மரியாதையோ இல்லை. ஆனாலும் அவர்கள் தாவீதைப் புகழ்ந்து பேசுகிறார்கள். அவர்கள் தாவீதின் நன்மையைத் தேடுகிறவர்கள்போல பாசாங்கு பண்ணுகிறார்கள்.

பானாவுக்கும் ரேகாபுக்கும் மற்றவர்களுடைய நன்மையில் அக்கரையில்லை. தாவீது இஸ்போசேத்தின் தலையைப் பார்த்து, தங்களுக்கு ஏதாவது சன்மானம் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தாவீதின் மனுஷர் மத்தியிலே தங்களுக்கு உயர்ந்த பதவி கொடுக்கப்படும் என்றும் இவர்கள் இருவரும் ஆசையோடு எதிர்பார்க்கிறார்கள்.

ரேகாபுக்கும் பானாவுக்கும் மரணம்
2சாமு 4:9-12

2சாமு 4:9. ஆனாலும் தாவீது பேரோத்தியனான ரிம்மோனின் குமாரராகிய ரேகாபுக்கும், அவன் சகோதரன் பானாவுக்கும் பிரதியுத்தரமாக: என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு நான் சொல்லுகிறதைக் கேளுங்கள்.

2சாமு 4:10. இதோ, ஒருவன் எனக்கு நற்செய்தி கொண்டுவருகிறவன் என்று எண்ணி, சவுல் செத்துப்போனான் என்று எனக்கு அறிவித்து, தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தபோது, அவனை நான் பிடித்து சிக்லாகிலே கொன்றுபோட்டேனே.

2சாமு 4:11. தமது வீட்டிற்குள் தமது படுக்கையின்மேல் படுத்திருந்த நீதிமானைக் கொலை செய்த பொல்லாத மனுஷருக்கு எவ்வளவு அதிகமாய் ஆக்கினை செய்யவேண்டும்? இப்போதும் நான் அவருடைய இரத்தப்பழியை உங்கள் கைகளில் வாங்கி, உங்களை பூமியிலிருந்து அழித்துப்போடாதிருப்பேனோ என்று சொல்லி,

2சாமு 4:12. அவர்களைக் கொன்றுபோடவும், அவர்கள் கைகளையும் கால்களையும் தறித்து, எப்ரோனிலிருக்கிற குளத்தண்டையிலே தூக்கிப்போடவும் தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். இஸ்போசேத்தின் தலையை எடுத்து, எப்ரோனிலிருக்கிற அப்னேரின் கல்லறையிலே அடக்கம்பண்ணினார்கள்.

இஸ்போசேத்தை கொன்றுபோட்ட பானாவுக்கும் ரேகாபுக்கும் தாவீது நீதியான தண்டனை கொடுக்கிறார். குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பதற்கு முன்பாக, அவர்களுடைய குற்றம்நிரூபிக்கப்பட வேண்டும். சாட்சிகள் பலமாயிருக்கவேண்டும். குற்றவாளிகளின் வார்த்தைகளே அவர்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லுகிறது. இஸ்போசேத்தின் தலையும் அவர்களுடைய கையிலிருக்கிறது.

பானாவும் ரேகாபும் தாவீதைப் பார்த்து, "இதோ உம்முடைய பிராணனை வாங்கத்தேடின உம்முடைய சத்துருவாயிருந்த சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் தலை" *(2சாமு 4:8)* என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தாங்கள் செய்த குற்றத்தை மறுக்கவில்லை. தாங்கள் செய்தது குற்றம் என்பதுகூட அவர்களுக்கு தெரியவில்லை. இஸ்போசேத்தைக் கொன்றுபோட்டதை அவர்கள் பெருமையோடு சொல்லுகிறார்கள். தாங்கள் தாவீதுக்கு நன்மை செய்திருப்பதாக நினைத்து, தாவீதின் கைகளில் சன்மானம் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

இஸ்போசேத் ஒரு நீதிமான். இவன் பானாவுக்கும் ரேகாபுக்கும் ஒரு தீங்கும் செய்ததில்லை. இஸ்போசேத் அவர்களுக்கு விரோதமாக சதிஆலோசனையும் பண்ணவில்லை. தாவீதும் இஸ்போசேத்தை ஒரு நீதிமானாகவும், கண்ணியமுள்ள ஒரு மனுஷனாகவும் பார்க்கிறார். இஸ்போசேத் அப்னேரோடு சேர்ந்துகொண்டு தாவீதுக்கு தீங்கு செய்தான். அதற்கு இஸ்போசேத் காரணமல்ல. அப்னேரின் ஆலோசனையின் பிரகாரம், இஸ்போசேத் தாவீதுக்கு தீங்கு செய்தான்.

பானாவும் ரேகாபும், தங்கள் ராஜாவாகிய இஸ்போசேத்தைக் கொன்றுபோட்டதைப் பார்த்து தாவீது கோபப்படுகிறார். அவர்கள் இஸ்போசேத்தை, அவனுடைய பள்ளியறையிலே, அவன் கட்டிலின்மேல் படுத்திருக்கும்போது, கொன்றுபோட்டார்கள். இஸ்போசேத் சயனித்திருக்கிறான். பானாவும் ரேகாபும் அவனுக்கு படைத்தலைவராகயிருந்தாலும், அவர்கள் இருவரும் ஒரு கோழையைப்போல, இஸ்போசேத்தைக் கொன்றுபோடுகிறார்கள். இஸ்போசேத்தின் கையிலே ஆயுதமில்லை. ஆயுதமில்லாத ஒரு நிராயுதபாணியை, அதுவும் அவன் நித்திரையிலிருக்கும்போது, பானாவும் ரேகாபும் அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

தாவீது பானாவுக்கும் ரேகாபுக்கும் தன்னுடைய தீர்ப்பைச் சொல்லுவதற்கு முன்பாக, இதற்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவத்தை, தாவீது அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். "இதோ, ஒருவன் எனக்கு நற்செய்தி கொண்டுவருகிறவன் என்று எண்ணி, சவுல் செத்துப்போனான் என்று எனக்கு அறிவித்து, தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தபோது, அவனை நான் பிடித்து சிக்லாகிலே கொன்றுபோட்டேனே" *(2சாமு 4:10)* என்று தாவீது சொல்லுகிறார்.

சவுலின் மரணம் தாவீதுக்கு நல்ல செய்தியாகயிருக்குமென்று அமலேக்கியன் நினைத்தான். இந்தச் செய்தியைச் சொன்னதற்காக தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்றும் எதிர்பார்த்தான். ஆனால் தாவீதோ அவனை சிக்லாகிலே கொன்றுபோட்டார். தாவீது ரேகாபுக்கும் பானாவுக்கும், தன்னுடைய தீர்ப்பைச் சொல்லும்போது, தாவீது அவர்களிடம், "என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு நான் சொல்லுகிறதைக் கேளுங்கள்" *(2சாமு 4:9)* என்று சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருக்கு பயந்து தீர்ப்பு சொல்லுகிறார். குற்றம் செய்தவர்களுக்கு ஆதரவாக யாரும் பரிந்து பேசக்கூடாது. தாவீது மனுஷரை நம்பவில்லை. அவர் கர்த்தரை நம்புகிறார். கர்த்தரே தன்னுடைய ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் என்று தாவீது சொல்லுகிறார். சவுல் உயிரோடிருந்தாலும், அவர் செத்துப்போனாலும், அதனால் தாவீதுக்கு நன்மையோ தீமையோ உண்டாகப்போவதில்லை.

தாவீதின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை அவருக்கு வாக்குத்தத்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேலின் ராஜாசனம் தாவீதுக்கு கொடுக்கப்படும். இது கர்த்தருடைய சித்தம். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதற்கு, கர்த்தருக்கு சித்தமான வழிகளில் அவருக்கு யார் வேண்டுமானாலும் உதவிசெய்யலாம். தாவீது நீதியான உதவிகளை மாத்திரமே அங்கீகரிக்கவேண்டும். அநியாயமான வழிகளில் தனக்கு யாராவது உதவி செய்ய வந்தால், தாவீது அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது. பானாவும், ரேகாபும் இஸ்போசேத்தைக் கொன்றுவிட்டு, அவர்கள் தாவீதுக்கு உதவிசெய்வதாக சொல்லுகிறார்கள். அவர்கள் அநியாயம் செய்திருக்கிறார்கள். தாவீது அவர்களுடைய செய்கையை தனக்கு உதவியாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று தாவீது தீர்மானிக்கிறார்.

பானாவும் ரேகாபும் இஸ்போசேத்தின் வீட்டிற்குள்ளே வந்து, அவன் படுக்கையின்மேல் படுத்திருந்தபோது, இவர்கள் அவனைக் கொன்றுபோட்டார்கள். இஸ்போசேத் ஒரு நீதிமான். பானாவும் ரேகாபும் பொல்லாத மனுஷர். நீதிமானைக் கொலைசெய்த பொல்லாத மனுஷருக்கு அதிகமான ஆக்கினை செய்ய வேண்டுமென்று தாவீது தீர்மானிக்கிறார்.

இஸ்ரபோசேத்தின் இரத்தப்பழியை, தாவீது, அவனைக் கொன்றுபோட்ட பானாவின் கையிலும், ரேகாபின் கையிலும் வாங்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அவர்கள் இருவரையும் பூமியிலிருந்து அழித்துப்போடவேண்டுமென்று தாவீது தீர்ப்பு சொல்லுகிறார்.

தாவீது தன் சேவகரைப் பார்த்து, பானாவையும் ரேகாபையும் கொன்றுபோடுமாறு கட்டளையிடுகிறார். அவர்கள் கைகளையும் கால்களையும் தறித்து, எப்ரோனிலிருக்கிற குளத்தண்டையிலே தூக்கிப்போடவும் தன் சேவகருக்குக் கட்டளையிடுகிறார் *(2சாமு 4:12)*.

இஸ்போசேத்தைக் கொன்றுபோட்டவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படுகிறது. இது தாவீதின் நீதிக்கும், நியாயத்திற்கும் அடையாளமாயிருக்கிறது. தாவீதின் தீர்ப்பைக் கேட்டு பானாவும் ரேகாபும் அதிர்ச்சியடைகிறார்கள். தாவீது தங்களுக்கு வெகுமானம் கொடுப்பார் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று. தாவீது அவர்களுக்கு வெகுமானம் கொடுக்காமல், மரணதண்டனை கொடுக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாவீதின் குமாரனாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்கள், நீதியான வழிகளிலும், நியாயமான வழிகளிலும் ஊழியம் செய்யவேண்டும். யாரையும் துன்பப்படுத்தியோ, உபத்திரவப்படுத்தியோ, வஞ்சித்தோ, பலவந்தம்பண்ணியோ, கர்த்தருடைய ராஜ்யத்தில் சேர்க்கவேண்டும் என்று முயற்சி பண்ணக்கூடாது. அவை கர்த்தர் அங்கீகரிக்காத வழிகள்.

கர்த்தருக்காக ஊழியம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, அநியாயமும், அக்கிரமமும் பண்ணிவிடக்கூடாது. சபையின் ஊழியத்திற்கு உதவியாயிருக்கும் என்று நினைத்து, பிறருக்கு தீங்கு செய்யக்கூடாது. நம்முடைய வார்த்தைகளும் கிரியைகளும் கர்த்தருக்கு பிரியமுள்ளதாயிருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய ஊழியத்தை அங்கீகரிக்கவேண்டும்.

மனுக்குலத்திற்கு தீங்கு செய்வதோ அல்லது மனுக்குலத்தை அழித்துப்போடுவதோ கர்த்தருடைய ஊழியமல்ல. மனுஷரை அழிப்பதற்காக இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வரவில்லை. மனுஷருக்கு ஜீவனைக் கொடுப்பதற்காகவே கிறிஸ்துவானவர் இந்த உலகத்திற்கு வந்தார். நம்முடைய கிரியைகள் கர்த்தருக்கு சித்தமில்லாததாக இருக்குமென்றால், நாம் பரலோகத்தின் ராஜ்யத்திற்கு ஊழியம் செய்யமாட்டோம். நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறோம் என்று சொன்னாலும், நரகத்தின் வேதனைகளுக்கு நம்மால் தப்பிக்க முடியாது.

கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்துவிட்டு, கர்த்தருடைய சமுகத்திலிருந்து நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தால், நமக்கு ஏமாற்றமே கிடைக்கும். ஆசீர்வாதத்திற்கு பதிலாக நமக்கு தண்டனை கிடைக்கும்.

பானாவும் ரேகாபும் இஸ்போசேத்தை அவனுடைய வீட்டிலே கொன்றுபோட்டு, அவனுடைய தலையை தாவீதிடம் கொண்டு வந்து காண்பிக்கிறார்கள். தாவீதின் மனுஷர் இஸ்போசேத்தின் தலையை எடுத்து, எப்ரோனிலிருக்கிற அப்னேரின் கல்லறையிலே அடக்கம்பண்ணுகிறார்கள். இஸ்போசேத்தின் சரீரத்தை என்ன செய்தார்கள் என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை.

5 அதிகாரம்

இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள் *(2சாமு 5:1-5)*. தாவீது சீயோன் கோட்டையை பிடிக்கிறார். அது தாவீதின் நகரமாயிற்று *(2சாமு 5:6-10)*. தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறார். கர்த்தர் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக திடப்படுத்துகிறார். கர்த்தர் தாவீதின் ராஜ்யத்தை உயர்த்துகிறார் *(2சாமு 5:11,12)*.

தாவீது எப்ரோனிலிருந்து வந்த பின்பு அவருக்கு இன்னும் அநேக குமாரரும் குமாரத்திகளும் பிறக்கிறார்கள் *(2சாமு 5:13-16)*. தாவீதுக்கு பெலிஸ்தர்மீது ஜெயமுண்டாயிற்று *(2சாமு 5:17-25)*.

தாவீதின் ராஜாபிஷேகம் 2சாமு 5:1-5

2சாமு 5:1. அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து: இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்.

2சாமு 5:2. சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும்போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே; கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள்.

2சாமு 5:3. இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள்; தாவீதுராஜா எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணினபின்பு, அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

2சாமு 5:4. தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருந்தான்; அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்.

2சாமு 5:5. அவன் எப்ரோனிலே யூதாவின்மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும், எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் முப்பத்துமூன்று வருஷமும் ராஜ்யபாரம்பண்ணினான்.

இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் தாவீதினிடத்தில் வருகிறார்கள். தாவீது தங்களுக்கு ராஜாவாயிருக்கவேண்டும் என்றும், அவர் தங்களை ஆளுகை செய்யவேண்டும் என்றும் அவர்கள் தாவீதினிடத்தில் பணிவாக விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

யூதாகோத்திரத்தார் ஏழுவருஷங்களுக்கு முன்பே, தாவீதை தங்களுக்கு ராஜாவாக்கினார்கள். தாவீதினுடைய ஆளுகையின்கீழ் யூதாகோத்திரத்தார் சந்தோஷமாயும், சமாதானமாயும், ஆறுதலாயும், ஆசீர்வாதமாயும் இருக்கிறார்கள். தாவீது யூதாகோத்திரத்தாரை நல்லாட்சி செய்கிறார். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் தாவீதின் ராஜ்யபாரத்தையும், யூதாகோத்திரத்தார் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களையும் பார்க்கிறார்கள்.

தாவீது தங்களுக்கும் ராஜாவாகயிருந்தால், தாங்களும் யூதாகோத்திரத்தாரைப்போல ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம் என்று இஸ்ரவேல் கோத்திரங்களெல்லாம் நினைக்கிறார்கள். இதற்காக அவர்கள் அக்காலத்திலே எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வருகிறார்கள்.

இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதினிடத்தில் வருகிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்திலும் எத்தனை பேர் வந்தார்கள் என்னும் எண்ணிக்கை நாளாகமம் புஸ்தகத்தில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.

"கர்த்தருடைய வாக்கின்படியே, சவுலின் ராஜ்யபாரத்தைத் தாவீதினிடமாய்த் திருப்ப, எப்ரோனிலிருக்கிற அவனிடத்துக்கு வந்த யுத்தசன்னத்தரான தலைவரின் இலக்கமாவன: யூதாபுத்திரரில் பரிசையும் ஈட்டியும் பிடித்து, யுத்தசன்னத்தரானவர்கள் ஆறாயிரத்து எண்ணூறுபேர்..............." (1நாளா 12:23-40).

இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் உத்தம இருதயத்தோடே தாவீதினிடத்தில் வருகிறார்கள். அவர்கள் யாவரும் தாவீதை ராஜாவாக்குகிறதற்கு ஒருமனப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலிலே மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர்கள் தாவீதோடேகூட எப்ரோனிலே மூன்று நாட்கள் இருந்து போஜனம்பண்ணுகிறார்கள். அவர்கள் சகோதரர்கள் அவர்களுக்காக சகலத்தையும் ஆயத்தம்பண்ணியிருக்கிறார்கள்.

தாவீதை தங்களுக்கு ராஜாவாக்கவேண்டும் என்னும் எண்ணம் அவர்கள் மனதிலிருக்கிறது. அதற்கு ஒரு அடிப்படை காரணத்தை அவர்கள் தாவீதுக்கு சொல்லுகிறார்கள். "இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்" (2சாமு 5:1) என்று இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதுக்கு சொல்லுகிறார்கள்.

தாவீது அவர்களுடைய எலும்பாகவும் மாம்சமாகவும் இருக்கிறார். தாவீது அவர்களுக்கு அந்நியரல்ல. தங்கள் ராஜாவாயிருப்பதற்கு தாவீதுக்கு எல்லா தகுதியும் இருக்கிறது என்று அவர்கள் சந்தோஷமாய்ச் சொல்லுகிறார்கள்.

"உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்பவனையே உனக்கு ராஜாவாக வைக்கக்கடவாய்; உன் சகோதரருக்குள்ளிருக்கிற ஒருவனையே உன்மேல் ராஜாவாக ஏற்படுத்தக்கடவாய்; உன் சகோதரன் அல்லாத அந்நியனை ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது" (உபா 17:15).

இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதிடம் தங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள். "நாங்கள் உம்முடைய எலும்பும், உம்முடைய மாம்சமுமானவர்கள்" என்று அவர்கள் தாவீதுக்கு சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே கலகமும் குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. யூதாகோத்திரத்தாருக்கும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கும் இடையே பல வருஷங்களாக யுத்தம் நடைபெற்று வருகிறது. தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தால், இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து விடுவார் என்று இஸ்ரவேலர் நம்புகிறார்கள்.

தாவீது தங்கள்மீது இரக்கம் காண்பிக்கவேண்டும் என்றும், அவர் தங்களைப் பாதுகாக்கவேண்டும் என்றும், அவர் தங்களுடைய நன்மைக்காக பாடுபடவேண்டும் என்றும் இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் தாவீதினிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு தாவீது ராஜாவாயிருப்பதுபோல, விசுவாசிகளாகிய நமக்கு, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். கிறிஸ்து தங்களுக்கு ராஜாவாக இருக்கவேண்டுமென்று விண்ணப்பம்பண்ணுகிறவர்கள், "நாங்கள் உம்முடைய எலும்பும், உம்முடைய மாம்சமுமானவர்கள்" என்று பயபக்தியோடு கர்த்தரிடத்தில் அறிக்கை செய்யவேண்டும்.

"அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும் படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (எபி 2:17).

கிறிஸ்துவானவர் நம்மைப் பார்க்கும்போது, அவர் நம்மை தம்முடைய சகோதரராகப் பார்க்கிறார். கிறிஸ்துவானவரும் தம்மை நம்முடைய சகோதரராக ஆக்கியிருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய சகோதரராயிருக்கும்போது, நாம் அவரை நம்முடைய ராஜாவாகவும், நம்முடைய எஜமானராகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய கிருபையுள்ள கரம் நம்மை ஆளுகை செய்யவேண்டும்.

"அப்பொழுது ஒருவன் தன் தகப்பன் வீட்டானாகிய தன் சகோதரனைப் பிடித்து: உனக்கு வஸ்திரம் இருக்கிறது, நீ எங்களுக்கு அதிபதியாயிரு" (ஏசா 3:6).

தாவீது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏற்கெனவே அநேக நன்மைகளை செய்திருக்கிறார். தாவீது தங்களுக்கு செய்த நன்மைகளை இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் நன்றியோடு நினைவுகூருகிறார்கள். அவர்கள் தாவீதினிடத்தில், "சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும்போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே" (2சாமு 5:2) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தரும் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஏற்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தாவீதைப் பார்த்து, "என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பாய்" (2சாமு 5:2) என்று சொன்னார். இஸ்ரவேலின் கோத்திரங்கள் எல்லோரும் தாவீதுக்கு, கர்த்தர் சொன்ன வார்த்தையையும் நினைவுபடுத்துகிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனிலே தாவீது ராஜாவினிடத்தில் வருகிறார்கள்; தாவீதுராஜா எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணுகிறார். அதன்பின்பு, அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறார்கள் (2சாமு 5:3).

எப்ரோனிலே இஸ்ரவேலின் மூப்பர்கள் எல்லோரும் கூடிவருகிறார்கள். தாவீது கர்த்தருக்கு முன்பாக அவர்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார். தாவீது அவர்களை ஆளுகை செய்வதற்கு சம்மதம் தெரிவிக்கிறார். சத்துருக்களின் கைகளுக்கு அவர்களைப் பாதுகாப்பதாகவும், இஸ்ரவேல் ஜனத்தாரை நீதியாய் நியாயம் விசாரிப்பதாகவும் தாவீது அவர்களோடு உடன்படிக்கை செய்கிறார். யுத்தகாலத்திலே இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோகிற தளபதியாகவும், சமாதான காலத்திலே இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிற நியாயாதிபதியாகவும் இருக்கப்போவதாக, தாவீது அவர்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார். இஸ்ரவேலின் மூப்பரும் தாவீதுக்கு கீழ்ப்படிவதாக, அவரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பரும் தாவீதும் உடன்படிக்கை பண்ணும்போது, கர்த்தரே அவர்களுக்கு சாட்சியாயிருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள். தாவீது இப்போது, மூன்றாம் முறையாக, ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுகிறார்.

தாவீது வர வர பலக்கிறார். அவருடைய முன்னேற்றம் கொஞ்சம் கொஞ்சமாக வருகிறது. கர்த்தர் தாவீதின் விசுவாசத்தை சோதிக்கிறார். அவரை விசுவாசத்தில் பலப்படுத்துகிறார். கர்த்தர் தாவீதுக்கு ஏராளமான அனுபவங்களையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறார்.

தாவீதின் ராஜ்யம், மேசியாவின் ராஜ்யத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் இந்தப் பூமியிலே தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். கர்த்தருடைய ராஜ்யம் கொஞ்சம் கொஞ்சமாக கட்டியெழுப்பப்படும்.

"சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை; அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்" (எபி 2:8).

"எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது" (1கொரி 15:25).

கிறிஸ்துவின் ராஜ்யம் இந்தப் பூமியிலே பூரணமாய் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை நாம் இன்னும் பார்க்காவிட்டாலும், ஏற்ற வேளை வரும்போது, நாம் அதைப் பார்ப்போம் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு.

தாவீதின் ராஜாசனமும், அவருடைய வயதும் இங்கே சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. சவுல் மரித்துப்போனபோது, தாவீதுக்கு முப்பது வயதாயிற்று. தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருக்கிறார்; அவர் நாற்பது வருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறார் (2சாமு 5:4).

லேவியர்கள் முப்பதாவது வயதிலே கர்த்தருக்கு ஊழியம் செய்ய நியமிக்கப்படுவார்கள். "ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகையிடுவாயாக" *(எண் 4:3).*

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய முப்பதாவது வயதிலே, தமது ஊழியத்தை ஆரம்பிக்கிறார்.

"அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார். அவர் யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார். அந்த யோசேப்பு ஏலியின் குமாரன்" *(லூக் 3:23).*

பொதுவாக முப்பதாவது வயதில், மனுஷருக்கு போதுமான அளவு முதிர்ச்சியும் பெலமும் உண்டாகும். இந்த வயதில் அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் நிதானித்து அறிய ஆரம்பிப்பார்கள்.

தாவீது எப்ரோனிலே யூதாவின்மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும், எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் முப்பத்துமூன்று வருஷமும் ராஜ்யபாரம்பண்ணுகிறார் *(2சாமு 5:5).*

தாவீது எப்ரோனிலே ஏழுவருஷமும் ஆறுமாதமும். எருசலேமிலே முப்பத்து மூன்று வருஷமும் ராஜ்யபாரம் பண்ணுகிறார். எப்ரோன் ஆசாரியரின் பட்டணம் *(யோசு 14:15).* இதனால் எப்ரோன் அக்காலத்தில் பிரசித்திப் பெற்று விளங்கிற்று. எருசலேமோ பரிசுத்த நகரம். ஆகையினால் எருசலேம் எப்ரோனைவிட மிகவும் பிரசித்திப் பெற்றதாய் விளங்குகிறது.

சீயோன் கோட்டை
2சாமு 5:6-10

2சாமு 5:6. தேசத்திலே குடியிருக்கிற எபூசியர் மேல் யுத்தம்பண்ண ராஜாவானவன் தன் மனுஷரோடேகூட எருசலேமுக்குப் போனான். அவர்கள்: இதிலே பிரவேசிக்க தாவீதினால் கூடாது என்று எண்ணி, தாவீதை நோக்கி: நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை; குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள் என்று சொன்னார்கள்.

2சாமு 5:7. ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று.

2சாமு 5:8. எவன் சாலகத்தின் வழியாய் ஏறி, எபூசியரையும் தாவீதின் ஆத்துமா பகைக்கிற சப்பாணிகளையும், குருடரையும் முறிய அடிக்கிறானோ, அவன் தலைவனாயிருப்பான் என்று தாவீது அன்றையதினம் சொல்லியிருந்தான்; அதனால் குருடனும் சப்பாணியும் வீட்டிலே வரலாகாது என்று சொல்லுகிறதுண்டு.

2சாமு 5:9. அந்தக் கோட்டையிலே தாவீது வாசம்பண்ணி, அதற்குத் தாவீதின் நகரம் என்று பேரிட்டு, மில்லோ என்னும் ஸ்தலந்துவக்கி, உட்புறமட்டும் சுற்றிலும் இருக்கிற மதிலைக் கட்டினான்.

2சாமு 5:10. தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.

மெல்கிசேதேக் சாலேமின் ராஜா. சாலேம் என்னும் பெயருக்கு சமாதானம் என்று பொருள். ஆபிரகாமின் காலத்திலிருந்தே சாலேம் பிரசித்திப்பெற்ற பட்டணமாயிருந்தது. அந்த சாலேமும், எருசலேமும் ஒரே பட்டணம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"யூதாவில் தேவன் அறியப்பட்டவர்; இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது. சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது" *(சங் 76:1,2).*

யோசுவா தன்னுடைய காலத்திலே கானானின் தென்பகுதியிலே, எருசலேமை ஒருபிரதான பட்டணமாக ஸ்தாபித்தார்.

"யோசுவா ஆயியைப் பிடித்து, சங்காரம்பண்ணி, எரிகோவுக்கும் அதின் ராஜாவுக்கும் செய்தபடி, ஆயிக்கும் அதின் ராஜாவுக்கும் செய்ததையும், கிபியோனின் குடிகள் இஸ்ரவேலோடே சமாதானம்பண்ணி அவர்களுக்குள் வாசமாயிருக்கிறதையும், எருசலேமின் ராஜாவாகிய அதோனிசேதேக் கேள்விப்பட்டபோது, கிபியோன் ராஜதானி பட்டணங்களில் ஒன்றைப்போல் பெரிய பட்டணமும், ஆயியைப்பார்க்கிலும் பெரிதுமாயிருந்த படியினாலும், அதின் மனுஷரெல்லாரும் பலசாலிகளாயிருந்த படியினாலும், மிகவும் பயந்தார்கள். ஆகையால், எருசலேமின் ராஜாவாகிய அதோனிசேதேக் எபிரோனின் ராஜாவாகிய ஒகாமுக்கும், யர்மூத்தின் ராஜாவாகிய பீராமுக்கும், லாகீசின் ராஜாவாகிய யப்பியாவுக்கும், எக்லோனின் ராஜாவாகிய தெபீருக்கும் ஆள் அனுப்பி: நாங்கள் கிபியோனைச் சங்கரிக்கும்படி, நீங்கள் என்னிடத்தில் வந்து, எனக்குத் துணைசெய்யுங்கள்; அவர்கள் யோசுவாவோடும் இஸ்ரவேல் புத்திரரோடும் சமாதானம் பண்ணினார்கள் என்று சொல்லி அனுப்பினான்" *(யோசு 10:1-4).*

எருசலேம் நகரம் பென்யமீன் கோத்திரத்தாருக்கு பங்குவீதமாயிற்று. "சேலா, ஏலேப், எருசலேமாகிய எபூசி, கீபெயாத், கீரேயாத் என்னும் பதினான்கு பட்டணங்களும் அவைகளின் கிராமங்களுமே; பென்யமீன் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படி இருக்கிற சுதந்தரம் இதுவே" *(யோசு 18:28).*

எருசலேம் பென்யமீன் கோத்திரத்தின் சுதந்தர வீதத்திலிருந்தாலும், இது யூதாகோத்திரத்தாருக்கு மிகவும் அருகாமையிலிருக்கிறது.

"அப்புறம் எபூசியர் குடியிருக்கிற எருசலேமுக்குத் தென்புறமாய் இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கைக் கடந்து, வடக்கேயிருக்கிற இராட்சதருடைய பள்ளத்தாக்கின் கடைசியில் மேற்காக இன்னோம் பள்ளத்தாக்கின் முன்னிருக்கிற மலையின் சிகரமட்டும் ஏறிப்போய்.........." *(யோசு 15:8).*

யூதாவின் புத்திரர் எருசலேமைப் பிடித்துக்கொண்டார்கள். "யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அதிலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கிவிட்டார்கள்" *(நியா 1:8).*

எருசலேமிலே குடியிருந்த எபூசியரை பென்யமீன் புத்திரர் துரத்திவிடவில்லை. "பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் எபூசியர் இந்நாள்மட்டும் பென்யமீன் புத்திரரோடேகூட எருசலேமில் குடியிருக்கிறார்கள்" *(நியா 1:21).*

எருசலேமிலே எபூசியர்கள் குடியிருந்ததினால், இந்தப் பட்டணம் எபூசியரின் பட்டணமாயிற்று. "அவர்கள் எபூசுக்குச் சமீபமாய் வருகையில், பொழுதுபோகிறதாயிருந்தது; அப்பொழுது வேலைக்காரன் தன் எஜமானை நோக்கி: எபூசியர் இருக்கிற இந்தப் பட்டணத்திற்குப் போய், அங்கே இராத் தங்கலாம் என்றான்" *(நியா 19:11).*

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு, அவர் இஸ்ரவேல் தேசத்தில் குடியிருக்கிற எபூசியர்மேல் யுத்தம்பண்ண, தன் மனுஷரோடேகூட எருசலேமுக்குப் போகிறார். எருசலேம் பென்யமீன் கோத்திரத்தாருக்கு சுதந்தரமானது. ஆனால் எருசலேமில் இப்போது எபூசியர்கள் குடியிருக்கிறார்கள்.

பென்யமீன் புத்திரர் இதுவரையிலும் சவுலின் குடும்பத்தாருக்கு விசுவாசமாயிருந்தார்கள். "பென்யமீன் புத்திரரான சவுலின் சகோதரரில் மூவாயிரம்பேர்; அதுவரைக்கும் அவர்களில் மிச்சமானவர்கள் சவுலின் குடும்பத்தைக் காப்பாற்றப் பார்த்தார்கள்" *(1நாளா 12:29).*

ஆகையினால் தாவீதால் இதுவரையிலும் எருசலேமிலுள்ள எபூசியரை துரத்திவிட முடியாமல் போயிற்று. இப்போது பென்யமீன் புத்திரரும் தாவீதை தங்களுக்கு ராஜாவாக அங்கீகரித்திருக்கிறார்கள். ஆகையினால் தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவுடன், முதல் யுத்தமாக, எருசலேமிலுள்ள எபூசியர்மீது யுத்தம்பண்ண அங்கே போகிறார்.

"சத்துருவும் பகைஞனும் எருசலேமின் வாசல்களுக்குள் பிரவேசிப்பான் என்கிறதை பூமியின் ராஜாக்களும் பூச்சக்கரத்தின் சகல குடிகளும் நம்பமாட்டாதிருந்தார்கள்" (புல 4:12).

எபூசியர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். தங்கள் விக்கிரகங்கள் எருசலேமைப் பாதுகாக்கும் என்று எபூசியர்கள் நம்புகிறார்கள். தாவீது புறஜாதியாரின் விக்கிரகங்களை குருடும், சப்பாணியுமாயிருக்கிறது என்று ஏளனமாய்ச் சொல்லுவது வழக்கம். ஏனென்றால் விக்கிரகங்களுக்கு கண்கள் இருந்தாலும், அவற்றால் பார்க்க முடியாது. விக்கிரகங்களுக்கு கால்கள் இருந்தாலும், அவற்றால் நடக்க முடியாது.

எருசலேமின் அலங்கம் பலமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே எருசலேம் அரணுள்ள பட்டணமாயிருக்கிறது. இயற்கையின் அரணோடு சேர்ந்து, எருசலேம் பட்டணத்தைச் சுற்றிலும் வலுவான அலங்கமும் கட்டப்பட்டிருக்கிறது. எவ்வளவு பெரிய பராக்கிரமசாலியாகயிருந்தாலும், பலசாலியாகயிருந்தாலும், அவர்களால் எருசலேமின் வாசல்களுக்குள் பிரவேசிக்க முடியாது என்று எபூசியர்கள் நினைக்கிறார்கள்.

எபூசியரோ தாவீதையும் அவருடைய மனுஷரையும் ஏளனம்பண்ணுகிறார்கள். தாவீதால் எருசலேமுக்குள்ளே பிரவேசிக்கக்கூடாது என்று எபூசியர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் தாவீதை நோக்கி, "நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை; குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள்" (2சாமு 5:6) என்று சொல்லுகிறார்கள்.

எபூசியரின் வார்த்தை தாவீதை ஏளனம்பண்ணும் வார்த்தையாகவும், அவரை அவமானப்படுத்தும் வார்த்தையாகவும் இருக்கிறது. எருசலேமின் வாசல்களுக்குள் எந்த சத்துருவாலும் பிரவேசிக்க முடியாது என்று எபூசியர்கள் நினைக்கிறார்கள்.

எருசலேமுக்கு இயற்கையான அரண்களும், பெலமுள்ள அலங்கங்களும் இருப்பதினால், எருசலேமைப் பாதுகாப்பதற்கு பராக்கிரமசாலிகளோ, பலமுள்ள யுத்தவீரர்களோ தேவையில்லை என்று எபூசியர்கள் நினைக்கிறார்கள். சாதாரண குருடர்களும், சப்பாணிகளும் எருசலேமின் பாதுகாப்புக்கு இருந்தாலே போதுமானது. அவர்களே சத்துருக்களைத் துரத்திவிடுவார்கள் என்று எபூசியர்கள் தங்கள் அரண்களை குறித்து பெருமையாய்ப் பேசுவது வழக்கம்.

சீயோன் கோட்டை மிகவும் பலமுள்ளது. எருசலேம் நகரத்தார் சீயோன் கோட்டையை நம்புகிறார்கள். இந்தக் கோட்டையை ஒருவராலும் பிடிக்க முடியாது என்று, எருசலேமிலுள்ள எபூசியர்கள் இறுமாப்பாயிருக்கிறார்கள்.

ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடிக்கிறார்; அது தாவீதின் நகரமாயிற்று (2சாமு 5:7). தாவீது எபூசியர்மேல் யுத்தம்பண்ண எருசலேமுக்குப்போகிறார். இந்த யுத்தத்திலே தாவீதுக்கு எபூசியர்மீது ஜெயமுண்டாயிற்று. எபூசியரின் பெருமையும், ஆணவமும் முறிந்துபோயிற்று.

தாவீது எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, "எவன் சாலகத்தின் வழியாய் ஏறி, எபூசியரையும் தாவீதின் ஆத்துமா பகைக்கிற சப்பாணிகளையும், குருடரையும் முறிய அடிக்கிறானோ, அவன் தலைவனாயிருப்பான்" (2சாமு 5:8) என்று தாவீது அன்றையதினம் சொல்லியிருந்தார்.

எபூசியர்கள் தாவீதையும், இஸ்ரவேல் புத்திரரையும், இஸ்ரவேலின் தேவனையும் தூஷித்தார்கள். அவர்களை ஏளனம்பண்ணினார்கள். தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்து, எருசலேமிலுள்ள விக்கிரகங்களை அழித்துப்போடுகிறார். எபூசியரின் விக்கிரகங்கள் அவர்களைப் பாதுகாக்கவில்லை. ஆகையினால் அந்த விக்கிரகங்களுக்கு எருசலேமிலே இடமில்லை.

குருடரும், சப்பாணியும் என்னும் வார்த்தை எபூசியரின் விக்கிரகங்களைக் குறிக்கிறது. தாவீது எருசலேமிலுள்ள விக்கிரகங்களை அழித்துப்போட்டதினால், "குருடனும் சப்பாணியும் வீட்டிலே வரலாகாது" (2சாமு 5:8) என்று சொல்லுகிறதுண்டு. எருசலேமிலே விக்கிரங்களுக்கு இடமில்லை.

தாவீது சீயோன் கோட்டையை பிடிக்கிறார். அது தாவீதின் நகரமாயிற்று. தாவீது சீயோன் நகரத்திலே, தன்னுடைய ராஜாசனத்தை ஸ்தாபிக்கிறார். அந்தக் கோட்டையிலே தாவீது வாசம்பண்ணி, அதற்குத் தாவீதின் நகரம் என்று பேரிட்டு, மில்லோ என்னும் ஸ்தலந்துவக்கி, உட்புறமட்டும் சுற்றிலும் இருக்கிற மதிலைக் கட்டுகிறார் (2சாமு 5:9).

தாவீது நாளுக்குநாள் விருத்தியடைகிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார் (2சாமு 5:10). தாவீது நாளுக்கு நாள் பலக்கிறார். கர்த்தர் அவருடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கிறார். தாவீதின் கனமும் மதிப்பும், பெலமும் ஐசுவரியமும் நாளுக்கு நாள் விருத்தியடைகிறது.

தாவீது தன்னுடைய சத்துருக்களின் கண்களுக்கு பயங்கரமானவராயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாருடைய கண்களுக்கோ, தாவீது மதிப்பும் மரியாதையும் உள்ளவராயிருக்கிறார். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தாவீதோடு கூடயிருப்பதினால், தாவீதுக்கு சகலமும் அநுகூலமாய் நடைபெறுகிறது.

தாவீதின் வீடு
2சாமு 5:11-16

2சாமு 5:11. தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினிடத்தில் ஸ்தானாபதிகளையும், கேதுரு மரங்களையும், தச்சரையும் கல்தச்சரையும் அனுப்பினான்; அவர்கள் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டினார்கள்.

2சாமு 5:12. கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்தபோது,

2சாமு 5:13. அவன் எப்ரோனிலிருந்து வந்த பின்பு, எருசலேமில் இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொண்டான்; இன்னும் அதிக குமாரரும் குமாரத்திகளும் தாவீதுக்குப் பிறந்தார்கள்.

2சாமு 5:14. எருசலேமில் அவனுக்குச் சம்முவா, சோபாப், நாத்தான், சாலொமோன்,

2சாமு 5:15. இப்பார், எலிசூவா, நெப்பேக், யப்பியா,

2சாமு 5:16. எலிஷாமா, எலியாதா, எலிப்பேலேத் என்னும் பேர்களையுடைய குமாரர் பிறந்தார்கள்.

தாவீதுக்கு ஒரு வீடு கட்டப்படுகிறது. இது ராஜாவின் அரண்மனை. ராஜாவைப் பார்ப்பதற்கு பிரபுக்களும், பிரதானிகளும், அந்நிய தேசத்து ராஜாக்களும் வருவார்கள். அவர்கள் தாவீது ராஜாவுக்கு மதிப்பையும் மரியாதையையும், செலுத்த வருவார்கள். அவர்கள் வெகுமதிகளையும் கொண்டு வருவார்கள்.

தாவீதின் காலத்தில் தீருவின் ராஜாவாகிய ஈராம் ஐசுவரியமுள்ள ராஜாவாயிருக்கிறார். சமஸ்த இஸ்ரவேலுக்கும் தாவீது ராஜாவானதைக் கேள்விப்பட்டு ஈராம் மிகவும் சந்தோஷப்படுகிறார். தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினிடத்தில் ஸ்தானாபதிகளையும், கேதுரு மரங்களையும், தச்சரையும் கல்தச்சரையும் அனுப்புகிறார்; அவர்கள் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறார்கள் (2சாமு 5:11).

ஈராம் தனக்கு கட்டிக்கொடுக்கும் அரண்மனையை தாவீது ஏற்றுக்கொள்கிறார். ஈராமின் தச்சரும் கல்தச்சரும், தாவீதின் மனதிற்கு பிரியமானபடி, அவருக்கு அரண்மனையைக் கட்டுகிறார்கள். ஈராம் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர். ஆனாலும் அவரிடத்தில் நேர்த்தியாய் வேலை செய்யக்கூடிய தச்சரும் கல்தச்சரும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய வேலைகளில் நிபுணர்கள்.

இக்காலத்திலும் புறஜாதியார் மத்தியிலும், அவிசுவாசிகள் மத்தியிலும் பிரசித்திப் பெற்ற மேதைகளும், விஞ்ஞானிகளும், சகல கலைகளில் தேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு அந்நியர்கள். ஆனாலும் கர்த்தருடைய கிருபையினால், இவர்களிடத்திலும் விசேஷித்த ஞானம் இருக்கிறது.

தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்திலே தச்சரும், கல்தச்சரும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் தாவீதின் அரண்மனையை ஈராமின் தச்சரும் கல்தச்சரும் நேர்த்தியாய்க் கட்டிக்கொடுக்கிறார்கள். தாவீதின் அரண்மனையை புறஜாதியார் கட்டினாலும், அது தாவீதின் பார்வையிலோ அல்லது கர்த்தருடைய பார்வையிலோ அசுத்தமாயில்லை. தாவீது தன்னுடைய வீட்டை கர்த்தருடைய சமுகத்திலே பிரதிஷ்டைபண்ணுகிறார். தாவீது கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுத்து, தன் குடும்பத்தாரோடு அங்கே வாசம்பண்ணுகிறார்.

சுவிசேஷ சபையைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி இப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசனத்தை சொல்லியிருக்கிறார். "அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்" *(ஏசா 60:10)*.

தாவீதின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது. கர்த்தர் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக திடப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் நிமித்தம், தாவீதின் ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறார். கர்த்தர் தாவீதின் ராஜ்யத்தை திடமாக ஸ்தாபித்திருப்பதினால், அதை அந்நியர்களால் அசைக்க முடியவில்லை.

கர்த்தரே தாவீதை ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். அபிஷேகம்பண்ணினவர் தாவீதை திடப்படுத்தவும் செய்கிறார். தாவீது கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். தேவனுடைய கரம் தாவீதின் மூலமாக கிரியை செய்கிறது.

தாவீதின் ராஜ்யம் அதன் சிநேகிதர்களுக்கு முன்பாகவும், அதன் சத்துருக்களுக்கு முன்பாகவும் உயர்த்தப்படுகிறது. கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் நிமித்தம் தாவீதின் ராஜ்யத்தை உயர்த்துகிறார். இஸ்ரவேலின் வரலாற்றிலே, தாவீதின் காலத்தில், இஸ்ரவேல் தேசம் உயர்ந்திருந்ததைப்போல, வேறு எப்போதும் அந்த அளவுக்கு உயர்ந்திருக்கவில்லை.

கர்த்தர் தாவீதின் நிமித்தம் இஸ்ரவேலை ஸ்தாபிக்கவில்லை. தாவீதுக்கு மகிமை உண்டாகவேண்டும் என்பதற்காகவோ, அல்லது அவருக்கு ஐசுவரியம் உண்டாகவேண்டும் என்பதற்காகவோ கர்த்தர் தாவீதின் ராஜ்யத்தை உயர்த்தவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் நிமித்தம் தாவீதை ராஜாவாக திடப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தின் நிமித்தமாகவே கர்த்தர் தாவீதின் ராஜ்யத்தை உயர்த்தவும் செய்கிறார்.

தாவீது இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்துவார், அவர்களைப் பாதுகாப்பார், அவர்களை பராமரிப்பார் என்று நம்பி, கர்த்தர் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக திடப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய ஜனங்கள். இஸ்ரவேல் ஜனங்களின் நிமித்தம் கர்த்தர் தாவீதின் ராஜ்யத்தை உயர்த்துகிறார்.

தாவீதின் குடும்பம் வர வர விருத்தியடைகிறது. தாவீது எப்ரோனிலிருந்து எருசலேமுக்கு வந்த பின்பு, அவருடைய குடும்பத்தாரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. தாவீது எப்ரோனிலிருந்து வந்த பின்பு, எருசலேமில் இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொள்கிறார்; இன்னும் அதிக குமாரரும் குமாரத்திகளும் தாவீதுக்குப் பிறக்கிறார்கள் *(2சாமு 5:13)*.

தாவீது எருசலேமுக்கு வந்த பின்பு அவருக்கு பதினொரு பிள்ளைகள் பிறந்திருப்பதாக இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"எருசலேமில் தாவீதுக்குச் சம்முவா, சோபாப், நாத்தான், சாலொமோன், இப்பார், எலிசூவா, நெப்பேக், யப்பியா, எலிஷாமா, எலியாதா, எலிப்பேலேத் என்னும் பேர்களையுடைய குமாரர் பிறந்தார்கள்" *(2சாமு 5:14-16).*

தாவீது இதற்கு முன்பு எப்ரோனிலிருந்தபோது அவருக்கு ஏற்கெனவே ஆறு குமாரர்கள் பிறந்திருக்கிறார்கள். "எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன். நாபாலின் மனையியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கிலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்; மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம் என்பவன். நாலாம் குமாரன் ஆகீத் பெற்ற அதொனியா என்பவன்; ஐந்தாம் குமாரன் அபித்தால் பெற்ற செப்பத்தியா என்பவன். ஆறாம் குமாரன் தாவீதின் மனைவியாகிய எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் என்பவன்; இவர்கள் எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்தவர்கள்" *(2சாமு 3:2-5).*

தாவீது எருசலேமிலே இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும், ஸ்திரீகளையும் கொண்டார் *(2சாமு 5:13)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாவீதுக்கு ஏராளமான மனைவிகளும், மறுமனையாட்டிகளும் இருப்பது அவருக்கு மேன்மையல்ல. கர்த்தருடைய பிரமாணத்தின்படி, ஒருவருக்கு ஒரு மனைவி மாத்திரமே இருக்கவேண்டும். ஆனால் தாவீது இந்த விஷயத்தில், தன் பின்சந்ததியாருக்கு, தவறான முன்உதாரணமாயிருக்கிறார்.

தாவீது தன்னுடைய காலத்தில், இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை உறுதிபண்ணுவதற்காகவும், தன்னுடைய ராஜாசனத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவும் அவர் பல அரச குடும்பங்களிலே விவாக சம்பந்தம் செய்திருக்கலாம்.

ஆனாலும் நம்முடைய வீட்டு ஓரத்திலே ஒரு திராட்சச்செடியை மாத்திரம் நட்டினால், அது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கும். வீட்டிலே ஏராளமான திராட்சச் செடிகளை நாட்டினால், அது புதர் போல இருக்கும். நன்றாக பராமரிக்கப்பட்ட செடி அழகாயிருக்கும். அது ஆசீர்வாதமாயிருக்கும். வீட்டிலே புதர்போல இருந்தால் அதை பராமரிப்பது கஷ்டம். புதர் அதிகமாயிருப்பது வீட்டிற்கு ஆபத்தானது. வீட்டிலுள்ளவர்களுக்கும் ஆபத்தானது.

தாவீதுக்கு மனைவிகளும் மறுமனையாட்டிகளும் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஆனாலும் அவர் பிறருடைய மனைவியை நேசித்து அவளைத் தீட்டுப்படுத்துகிறார். வேலியை உடைத்து, அதைத் தாண்டுகிறவர்கள், எல்லா இடங்களுக்கும் கட்டுப்பாடில்லாமல் அலைந்துகொண்டிருப்பார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்

2சாமு 5:17-25

2சாமு 5:17. தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, அவர்கள் எல்லாரும் தாவீதைத் தேடும்படி வந்தார்கள்; அதைத் தாவீது கேட்டபோது, ஒரு அரணிப்பான இடத்துக்குப் போனான்.

2சாமு 5:18. பெலிஸ்தரோ வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள்.

2சாமு 5:19. பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர்: போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார்.

2சாமு 5:20. தாவீது பாகால் பிராசீமுக்கு வந்து, அங்கே அவர்களை முறிய அடித்து: தண்ணீர்கள் உடைத்தோடுகிறதுபோல, கர்த்தர் என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார் என்று சொல்லி, அதினிமித்தம் அந்த ஸ்தலத்திற்குப் பாகால்பிராசீம் என்று பேரிட்டான்.

2சாமு 5:21. அங்கே பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களைவிட்டு ஓடிப்போனார்கள்; அவைகளைத் தாவீதும் அவன் மனுஷரும் சுட்டெரித்தார்கள்.

2சாமு 5:22. பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள்.

2சாமு 5:23. தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து,

2சாமு 5:24. முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ; அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்.

2சாமு 5:25. கர்த்தர் தாவீதுக்குக் கட்டளையிட்ட பிரகாரம் அவன் செய்து, பெலிஸ்தரைக் கேபா துவக்கிக் கேசேர் எல்லைமட்டும் முறிய அடித்தான்.

"என் தாசனாகிய தாவீதின் கையினால், என் ஜனமாகிய இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கும், அவர்களுடைய எல்லா சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி இரட்சிப்பேன்" *(2சாமு 3:18)* என்று கர்த்தர் தாவீதைக் குறித்து சொல்லியிருக்கிறார். இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பது தாவீதின் பிரதான ஊழியம்.

இந்த வசனப்பகுதியில் தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாக இரண்டு யுத்தங்களை மேற்கொள்கிறார். இந்த யுத்தங்களில் கர்த்தர் தாவீதுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். சவுலின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். அப்போது இஸ்ரவேலுக்கு தோல்வி உண்டாயிற்று. பெலிஸ்தருக்கு முன்பாக இஸ்ரவேலுக்கு நிந்தையும் அவமானமும் உண்டாயிற்று.

பெலிஸ்தருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே சவுல் செத்துப்போனார். அதே யுத்தத்தில் சவுலின் மூன்று குமாரர்களும் செத்துப்போனார்கள். இப்போதோ, தாவீதின் காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை முறியடிக்கிறார்கள்.

இவ்விரண்டு யுத்தங்களிலும் பெலிஸ்தரே இஸ்ரவேலுக்கு விரோதமாக முதலாவது யுத்தம்பண்ண வந்தவர்கள். தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, அவர்கள் எல்லாரும் தாவீதைத் தேடும்படி வருகிறார்கள்; அதைத் தாவீது கேட்டபோது, அவர் ஒரு அரணிப்பான இடத்துக்குப் போகிறார் *(2சாமு 5:17)*.

தாவீதின் ராஜாசனம் இப்போதுதான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும் என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். தாவீதின் ராஜ்யத்தை இப்போதே அழித்துப்போடாமல், அதை விட்டுவிட்டால், அது பிற்காலத்தில் பெரிய மரம் போல ஸ்தாபிக்கப்படும் என்று பெலிஸ்தர் யோசிக்கிறார்கள்.

பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாய் யோசனை பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுடைய யோசனைகள் சித்திக்கவில்லை.

"ஜனங்களே, நீங்கள் கூட்டங்கூடுங்கள், முறியடிக்கப்படுவீர்கள்; தூர தேசத்தாராகிய நீங்கள் எல்லாரும் செவிகொடுங்கள்; இடைக்கட்டிக் கொள்ளுங்கள், முறிந்தோடுவீர்கள், ஆலோசனை செய்யுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது; தேவன் எங்களோடே இருக்கிறார்" (ஏசா 8:9,10).

பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் நடைபெற்ற முதலாவது யுத்தத்திலே, பெலிஸ்தர் முறிந்து ஓடிப்போனார்கள். அதன் பின்பு பெலிஸ்தர் மறுபடியும் தாவீதின் ராஜ்யத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள் (2சாமு 5:21).

இவ்விரண்டு யுத்தங்களிலும் பெலிஸ்தர் ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே வந்து பாளயமிறங்குகிறார்கள். இந்தப் பள்ளத்தாக்கு எருசலேமுக்கு அருகாமையிலுள்ளது. தாவீது எருசலேமுக்கு அலங்கங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார். அவர் அலங்கத்தைக் கட்டி முடித்துவிட்டால், பெலிஸ்தரால் எருசலேமுக்குள்ளே எளிதாக பிரவேசிக்க முடியாது. ஆகையினால் தாவீது எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடிப்பதற்கு முன்பாக, தாவீதையும் அவருடைய ஜனங்களையும் அழித்துப்போடவேண்டும் என்பது பெலிஸ்தரின் யுத்த வியூகம்.

இதன் நிமித்தமாக பெலிஸ்தர் தாவீதின் ராஜ்யத்திற்கு விரோதமாக வந்து, ரெப்பாயீம் பள்ளதாக்கிலே பரவியிருக்கிறார்கள். பெலிஸ்தரின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. ஆகையினால் பெலிஸ்தரின் சேனை, ரெப்பாயீம் பள்ளத்தாக்கு முழுவதும் பரவியிருக்கிறார்கள்.

பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, தாவீது கர்த்தரிடத்தில் விசாரியாமல், தானாகவே தீர்மானம்பண்ணி, பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகவில்லை. இவ்விரண்டு யுத்தங்களிலும் தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்.

"பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர்: போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார்" (2சாமு 5:19).

"தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ; அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்" (2சாமு 5:23,24).

தாவீது கர்த்தரிடத்தில் இரண்டு காரியங்களை விசாரிக்கிறார். முதலாவதாக தாவீது தன்னுடைய கடமையைப்பற்றி விசாரிக்கிறார். "பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா" என்று தாவீது கர்த்தரிடத்தில் முதலாவதாக கேட்கிறார்.

பெலிஸ்தரின் தேசத்திலே ஆகீஸ் அவர்களுக்கு ராஜாவாயிருக்கிறான். காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதுக்கு சிநேகிதன். தாவீதுக்கு சவுல் மூலமாக ஆபத்து வந்தபோது, பெலிஸ்தரின் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதைப் பாதுகாத்தான். தாவீது பெலிஸ்தருக்கு விரோமாய் யுத்தம்பண்ணப்போகும்போது, தன் சிநேகிதன் ஆகீசை நினைத்துப் பார்க்கிறார். அவன் தனக்கு செய்த உதவிகளை நினைத்துப் பார்க்கிறார். தனக்கு நன்மை செய்த ஆகீசுக்கும், அவனுடைய ஜனமாகிய பெலிஸ்தருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணப்போக வேண்டுமா என்னும் சந்தேகம் தாவீதின் மனதில் உண்டாயிற்று.

ஆகீஸ் தாவீதின் சிநேகிதனாகயிருந்தாலும், அவன் ஒரு பெலிஸ்தன். பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலர்களுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். ஆகையினால் தாவீது கர்த்தரிடத்தில், "பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா" என்று கேட்டபோது, கர்த்தர் "போ" என்று தாவீதுக்கு சொல்லுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் இரண்டாவது காரியத்தை விசாரிக்கிறார். இந்த யுத்தத்தில் தனக்கு வெற்றி கிடைக்குமா என்பதை அவர் கர்த்தரிடத்தில் விசாரித்து அறிந்துகொள்ள விரும்புகிறார். தாவீது கர்த்தரிடத்தில், "அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா" என்று கேட்கிறார். அதற்கு கர்த்தர், "பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன்" என்று தாவீதுக்கு சொல்லுகிறார்.

தாவீது தன் மனச்சாட்சியினிமித்தமாக "பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா" என்று கர்த்தரிடத்தில் விசாரித்தார். இப்போது, "அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா" என்று தாவீது கர்த்தரிடத்தில் பயபக்தியோடு கேட்கிறார். யுத்தம் கர்த்தருடையது என்பதும், கர்த்தரே தனக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறவர் என்பதும் தாவீதுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. தாவீது கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணுகிறார். யுத்தத்திலே ஜெயம் பெறுவதற்கும் அவர் கர்த்தரையே நம்புகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு பிரதியுத்தரம் சொல்லும்போது, "பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன்" என்று சொல்லுகிறார். கர்த்தர் "நிச்சயமாய்" என்று சொன்னபடியினால், தாவீது வெற்றியைக் குறித்து கவலைப்படவேண்டியதில்லை. கர்த்தர் நம்மை அனுப்பும்போது, அவர் நம்மோடு கூடயிருப்பார். அவர் நம்மை தாங்குவார். அவர் நம்மை வழிநடத்துவார்.

தாவீதுக்கு பெலிஸ்தர்மீது யுத்தம் வந்ததுபோல, நமக்கும் ஆவிக்குரிய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தமுண்டு. சாத்தான் நமக்கு பிரதான சத்துருவாயிருக்கிறான். ஆவிக்குரிய எல்லா போராட்டங்களிலும், யுத்தங்களிலும், கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். கர்த்தரே நம்முடைய சத்துருவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் நமக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

தாவீது எருசலேமிலிருக்கும்போது, இஸ்ரவேலின் சேனை பெரிதாயிருக்கிறது. அவர்களெல்லோரும் யுத்தவீரர்கள். பராக்கிரமசாலிகள். ஆனாலும் தாவீது தன்னுடைய சேனையின் பலத்தையோ, பராக்கிரமத்தையோ, எண்ணிக்கையையோ நம்பாமல், கர்த்தருடைய உதவியையும், ஒத்தாசையையும், வார்த்தையையும் நம்புகிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாக பண்ணுகிற முதலாவது யுத்தத்திலே, பெலிஸ்தர் ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருக்கிறார்கள். பெலிஸ்தர் தன்னை தேடும்படி வருகிறார்கள் என்பதை தாவீது கேட்டபோது, அவர் ஒரு அரணிப்பான இடத்திற்குப் போகிறார். அங்கே கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண, தாவீதுக்கு கர்த்தருடைய அனுமதி கிடைக்கிறது.

அதன் பின்பு, தாவீது பாகால் பிராசீமுக்கு வந்து, அங்கே அவர்களை முறிய அடிக்கிறார். தண்ணீர்கள் உடைத்தோடுகிறதுபோல, கர்த்தர் தாவீதின் சத்துருக்களை அவருக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார். தாவீது அதினிமித்தம் அந்த ஸ்தலத்திற்குப் பாகால்பிராசீம் என்று பேரிடுகிறார் (2சாமு 5:20).

தாவீது பெலிஸ்தரை முறியடித்தபோது, அவர் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். தன் தேவனாகிய கர்த்தருக்கு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும், ஏறெடுக்கிறார். தாவீது சேனைகளின் கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். தாவீது பெலிஸ்தரை முறியடித்த இடத்திற்கு "பாகால்பிராசீம்" என்று பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு "உடைப்புக்களின் எஜமான்" என்று பொருள். கர்த்தர் பெலிஸ்தரை தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல உடைந்து ஓடப்பண்ணினார். ஆகையினால் தாவீது இந்த இடத்திற்கு பாகால்பிராசீம் என்று பேரிட்டு, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். இந்த யுத்தத்தில் பெலிஸ்தர் முறிந்து ஓடுகிறார்கள். கர்த்தர் தாவீதுக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

பெலிஸ்தர் பாகால்பிராசீமிலிருந்து முறியடிக்கப்பட்டபோது, அங்கே தங்கள் விக்கிரகங்களை விட்டு ஓடிப்போகிறார்கள். தங்கள் விக்கிரகங்கள் தங்களைப் பாதுகாக்கும் என்று பெலிஸ்தர் நம்பினார்கள். தங்களுடைய தெய்வங்கள், இஸ்ரவேல் புத்திரர்மீது தங்களுக்கு ஜெயத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் பெலிஸ்தருக்கு அவர்களுடைய விக்கிரகங்கள் மூலமாய் ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை, பெலனுமில்லை.

பெலிஸ்தரின் விக்கிரகங்களால் அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. பெலிஸ்தராலும் தங்கள் விக்கிரகங்களை பாதுகாக்க முடியவில்லை. தங்கள் விக்கிரகங்கள் தங்களைப் பாதுகாக்கும் என்றும், அவை தங்களுக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கொடுக்கும் என்று நம்பி, அவர்கள் தங்கள் விக்கிரகங்களை யுத்தக்களத்திற்கு கொண்டு வந்தார்கள். ஆனால் இப்போதோ பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு முன்பாக யுத்தம்பண்ண முடியாமல் முறிந்து ஓடுகிறார்கள். பெலிஸ்தர் முறிந்து ஓடும்போது, தங்கள் விக்கிரகங்களை தங்களோடு எடுத்துக்கொண்டு போகாமல், யுத்தக்களத்திலேயே அவற்றை விட்டுவிட்டு ஓடிப்போகிறார்கள்.

இதற்கு முன்பு, நியாயாதிபதியாகிய ஏலியின் காலத்தில், இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்கும் யுத்தமுண்டாயிற்று. அப்போது இஸ்ரவேலர் உடன்படிக்கைப் பெட்டியை பாளயத்திற்கு கொண்டு போனார்கள். ஒருவேளை பெலிஸ்தர் அதை நினைத்து, இப்போது, தங்கள் விக்கிரகங்களை, யுத்தக்களத்திற்கு கொண்டு வந்திருக்கலாம். ஆனால் பெலிஸ்தரால் தங்கள் விக்கிரகங்களைப் பாதுகாக்க முடியவில்லை. பெலிஸ்தரின் விக்கிரகங்களுக்கு அவமானமுண்டாயிற்று.

"பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் காட்டுமிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும்; நீங்கள் சுமந்த சுமைகள் இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும்" (ஏசா 46:1).

தங்கள் விக்கிரகங்கள் தங்களுக்கு உபகாரமாயிருக்குமென்று பெலிஸ்தர் நினைத்தார்கள். ஆனால் அவை பெலிஸ்தருக்கு உபகாரமாயிராமல் உபத்திரவமாயிருக்கிறது. பெலிஸ்தரின் விக்கிரகங்கள் அவர்களுக்கு பாரமாயும், சுமையாயும் இருக்கிறது. பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்து ஓடும்போது, அவர்களால் தங்கள் விக்கிரகங்களை தூக்கிக்கொண்டு ஓடமுடியவில்லை. ஆகையினால் பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களை யுத்தக்களத்திலேயே விட்டு விட்டு ஓடிப்போகிறார்கள்.

யுத்தத்திலே முறிந்து ஓடுகிறவர்கள் விட்டுப்போன பொருட்களை, தாவீதும் இஸ்ரவேலரும் கொள்ளையிடுகிறார்கள். பெலிஸ்தரின் பாளயத்தில் இஸ்ரவேலருக்கு திரளான கொள்ளைப்பொருட்கள் கிடைக்கிறது. அந்தக் கொள்ளைப் பொருட்களை இஸ்ரவேலர் தங்களுக்கு பயன்படுத்திக்கொள்கிறார்கள். பெலிஸ்தரின் கொள்ளையிலே அவர்கள் விட்டுப்போன அவர்களுடைய விக்கிரகங்களும் இருக்கிறது. கர்த்தருடைய பிரமாணத்தின் பிரகாரம் தாவீதும் அவருடைய மனுஷரும், பெலிஸ்தருடைய விக்கிரகங்களை சுட்டெரிக்கிறார்கள்.

"நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போடவேண்டும்" (உபா 7:5).

பெலிஸ்தர் இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போனபோது, கர்த்தர் அவர்களை வாதித்தார். அவர்களை நிர்மூலம்பண்ணினார். கர்த்தர் பெலிஸ்தரை பட்சித்துப்போட்டார்.

இப்போது பெலிஸ்தரின் விக்கிரகங்கள் இஸ்ரவேலருடைய கைகளிலிருக்கிறது. ஆனால் அந்த விக்கிரகங்களால் இஸ்ரவேலரை பட்சிக்க முடியவில்லை. விக்கிரகங்கள் இஸ்ரவேலரைப் பட்சிப்பதற்கு பதிலாக, இஸ்ரவேலர் அந்த விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கிறார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேலரின் விக்கிரகங்களை பட்சித்துப்போடுகிறார்கள்.

பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்குகிறார்கள் *(2சாமு 5:22)*. ஏற்கெனவே தோற்றுப்போன பெலிஸ்தர் இப்போது மறுபடியுமாய் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். தாவீது ஏற்கெனவே கர்த்தரிடத்தில் விசாரித்ததுபோல இப்போதும் விசாரிக்கிறார். தாவீது முதல் தரம் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, "பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா" என்று கேட்டார். கர்த்தர் "போ" என்று தாவீதுக்கு சொன்னார்.

ஆனால் இப்போதோ கர்த்தர் தாவீதுக்கு "போ" என்று சாதாரணமாகச் சொல்லாமல், "நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ" *(2சாமு 5:23,24)* என்று அடையாளத்தோடு சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிரசன்னம் தாவீதோடு கூடயிருக்கும். தாவீது நேராய்ப் போகாமல், பெலிஸ்தருக்கு பின்னாலே சுற்றிப்போகவேண்டும். இஸ்ரவேலர் கர்த்தருடைய இரட்சிப்பை நின்று பார்க்கவேண்டும். பெலிஸ்தரின் பாளயத்தை முறியடிக்க, கர்த்தர் தாவீதுக்கு முன்பாக புறப்பட்டுப்போவார். தாவீது தன்னுடைய சத்துருக்களைப் பார்ப்பார். ஆனால் அவர் சேனைகளின் கர்த்தரை பார்க்கமாட்டார். ஆனாலும் கர்த்தர் தாவீதுக்கு முன்னே புறப்பட்டுப்போவார்.

தாவீது முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலைக் கேட்பார். இந்த இரைச்சல் சத்தமே, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். தாவீது இந்த இரைச்சலைக் கேட்கும்போது சீக்கிரமாய் எழும்பிப்போகவேண்டும். கர்த்தர் தாவீதுக்கு முன்பாக புறப்பட்டுப்போவதினால், தாவீது கர்த்தருக்கு பின்னால் ஆறுதலாக போகலாம்.

முசுக்கட்டைச் செடிகளின் இரைச்சல் பெலிஸ்தருக்கும் கேட்கும். ஆனால் அந்த இரைச்சல் பெலிஸ்தருக்கு பயத்தையும் குழப்பதையும் உண்டுபண்ணும். அதே இரைச்சல் தாவீதுக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும், தைரியத்தையும் கொடுக்கும்.

முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை பெலிஸ்தர் கேட்கும்போது, தங்களுக்கு முன்னாக இஸ்ரவேலர் வருகிறார்கள் என்றும், அவர்கள் தங்களுக்கு விரோதமாக வருகிறார்கள் என்றும் பெலிஸ்தர் நினைப்பார்கள். இஸ்ரவேலரிடமிருந்து தப்பிப்பதற்காக, பெலிஸ்தர் பின்னாலே முறிந்து ஓடுவார்கள். தாவீதும் அவருடைய சேனையுமோ பெலிஸ்தருக்கு பின்னாலே இருக்கிறார்கள். இஸ்ரவேலர் முறிந்து ஓடுகிற பெலிஸ்தரை முறியடிப்பார்கள்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரம் தாவீது செய்கிறார். கர்த்தர் தனக்கு முன்பாக புறப்பட்டுப்போகும் வரையிலும், தாவீது பொறுமையோடு காத்திருக்கிறார். கர்த்தர் சொன்ன வேளை வரும்போது, தாவீது சீக்கிரமாய் எழும்பிப்போய் பெலிஸ்தரின் பாளயத்தை முறியடிக்கிறார். தாவீது பெலிஸ்தரை கேபா துவக்கி, கேசேர் எல்லை மட்டும் முறியடிக்கிறார். தாவீது பெலிஸ்தரை, பெலிஸ்தருடைய தேசத்தின் எல்லைகள் வரையிலும் துரத்திக்கொண்டு போய், முறியடிக்கிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து, பரமேறிப்போனபோது, "உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று தம்முடைய சீஷருக்கு கட்டளை கொடுத்தார். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, ஒருமனப்பட்டு காத்திருந்தார்கள். பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாகும் வரையிலும், அப்போஸ்தலர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே காத்திருந்தார்கள் *(அப் 2:2)*.

கர்த்தர் சொல்லுகிற வேளை வரையிலும் காத்திருப்பது நமக்கு நல்லது. கர்த்தர் நமக்கு முன்பாக புறப்பட்டுப்போகவேண்டும். நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி செல்லவேண்டும். தாவீது முசுக்கட்டைச் செடிகளின் இரைச்சலைக் கேட்கும் வரையிலும் பொறுமையாய்க் காத்திருந்தார். அந்த இரைச்சலைக் கேட்டபோது அவர் பெலிஸ்தரின் பாளயத்தை முறியடிக்க தீவிரமாய்ப் புறப்பட்டுப்போனார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரம் தாவீது செய்கிறார். இஸ்ரவேலர் பெலிஸ்தரை முறியடிக்கிறார்கள்.

6 அதிகாரம்

தாவீது பெலிஸ்தரை முறியடிக்கிறார். சீயோன் கோட்டையைப் பிடிக்கிறார். தேவனுடைய பெட்டி கிபியாவிலிருக்கிறது. தாவீது கர்த்தருடைய பெட்டியை, தன்னுடைய சொந்த நகரமாகிய தாவீதின் நகரத்திற்கு கொண்டு வருகிறார். தேவனுடைய பெட்டி தனக்கு அருகாமையிலிருக்கவேண்டும் என்று தாவீது விரும்புகிறார்.

தாவீது இஸ்ரவேலின்மீது தன்னுடைய ராஜ்யபாரத்தை ஸ்தாபித்திருக்கிறார். தேவனுடைய பெட்டி தாவீதுக்கு அருகாமையிலிருப்பது, அவருடைய ராஜாசனத்திற்கு அலங்காரமாகவும், பெலமாகவும் இருக்கிறது.

தாவீது கிபியாவிலிருந்து தேவனுடைய பெட்டியை கொண்டு வர முயற்சி பண்ணுகிறார். முதல் முயற்சி தோல்வியடைகிறது. பெட்டியைக் கொண்டு வருவதற்கு தாவீது திட்டமிடுகிறார் *(2சாமு 6:1,2)*.

தாவீதும் அவருடைய மனுஷரும் தேவனுடைய பெட்டியை சுமந்து கொண்டு வராமல் ஒரு புது இரத்தின் மேல் ஏற்றி, அதை கிபியாவிலிருந்து கொண்டு வருகிறார்கள். இது கர்த்தருடைய பார்வையில் தப்பிதமாயிருக்கிறது *(2சாமு 6:3-5)*. கர்த்தர் அவர்களுடைய தப்பிதத்திற்கு தண்டனை கொடுக்கிறார். உசியா தேவனுடைய பெட்டியண்டையில் செத்துப்போகிறான் *(2சாமு 6:6,7)*.

கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்படுகிறார் *(2சாமு 6:8,9)*. தாவீது தேவனுடைய பெட்டியை தன்னுடைய நகரத்திற்கு கொண்டு வரும் முயற்சியை நிறுத்திவிடுகிறார் *(2சாமு 6:10,11)*.

தாவீது மறுபடியும், தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து, தாவீதின் நகரத்திற்கு மகிழ்ச்சியுடனே கொண்டு வருகிறார். தாவீது ஏற்கெனவே செய்த தப்பிதத்தை இப்போது மறுபடியும் செய்யவில்லை. பழைய தப்பிதங்களெல்லாம் நிவிர்த்திபண்ணப்படுகிறது *(2சாமு 6:12-15)*.

தாவீதுக்கும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் இடையே நல்ல ஐக்கியமும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் மனப்பக்குவமும் இருக்கிறது *(2சாமு 6:17-19)*. மீகாள் தாவீதை தன் மனதிலே அவமதிக்கிறாள். பின்பு அவன் தன் வார்த்தையினால் அவரை அவமதிக்கிறாள் *(2சாமு 6:16,20-23)*.

தேவனுடைய பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. தேவனுடைய பெட்டி கிறிஸ்துவுக்கும் அடையாளமாயிருக்கிறது.

தேவனுடைய பெட்டி
2சாமு 6:1-5

2சாமு 6:1. பின்பு தாவீது இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் தெரிந்து கொள்ளப்பட்ட முப்பதினாயிரம் பேரைக் கூட்டி,

2சாமு 6:2. கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுது கொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டியைப் பாலையூதாவிலிருந்து கொண்டுவரும்படி, அவனும் அவனோடிருந்த அந்த ஸ்தலத்தாரும் எழுந்து போய்,

2சாமு 6:3. தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டுவந்தார்கள்; அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்தப் புது இரதத்தை நடத்தினார்கள்.

2சாமு 6:4. அவர்கள் தேவனுடைய பெட்டியை ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து நடத்திக்கொண்டு வருகிறபோது, அகியோ பெட்டிக்கு முன்னாலே நடந்தான்.

2சாமு 6:5. தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் தேவதாரு மரத்தால் பண்ணப்பட்ட சகலவித கீதவாக்கியங்களோடும், சுரமண்டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம் ஆகிய இவைகளோடும், கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டுபோனார்கள்.

தேவனுடைய பெட்டி சிறிதுகாலம் பெலிஸ்தருடைய தேசத்திலே இருந்தது. ஏலியின் காலத்தில், இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்கும் யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்தில், பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை, தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இதன் நிமித்தமாக கர்த்தர் பெலிஸ்தரை வாதித்தார். இதனால் பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை, தங்கள் தேசத்தைவிட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள். தேவனுடைய பெட்டி, அந்நாளிலிருந்து கீரியாத்யாரீமின் ஊரிலே, அபினதாபின் வீட்டிலிருந்தது.

"அப்படியே கீரியாத்யாரீமின் மனுஷர் வந்து, கர்த்தருடைய பெட்டியை எடுத்து, மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்து, கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படிக்கு, அவன் குமாரனாகிய எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்தினார்கள். பெட்டி கீரியாத் யாரீமிலே அநேகநாள் தங்கியிருந்தது; இருபது வருஷம் அங்கேயே இருந்து; இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாரும் கர்த்தரை நினைத்து, புலம்பிக்கொண்டிருந்தார்கள்" (1சாமு 7:1,2).

சவுல் ஒரு சமயம், தேவனுடைய பெட்டியை தன்னிடத்தில் கொண்டு வருமாறு சொன்னார். "அப்பொழுது சவுல் அகியாவை நோக்கி: தேவனுடைய பெட்டியைக் கொண்டுவா என்றான்; தேவனுடைய பெட்டி அந்நாட்களில் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இருந்தது" (1சாமு 14:18).

பூர்வகாலங்களில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய பெட்டிக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். காலம் செல்ல செல்ல, இஸ்ரவேல் ஜனத்தார், தேவனுடைய பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை குறைத்துவிட்டார்கள். இஸ்ரவேலர் தேவனுடைய பெட்டிக்கு முக்கியத்துவமும், மதிப்பும், மரியாதையும் கொடுக்காவிட்டாலும், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு, தேவனுடைய பெட்டி அடையாளமாயிருக்கிறது.

ஆலயக்கட்டிடத்தின் அலங்காரமான வெளித்தோற்றமும், அதன் அழகும், ஆடம்பரமும், உண்மையான சபைக்கு அடையாளமல்ல. அலங்காரத்தை அடிப்படையாக வைத்து, கர்த்தருடைய பிரசன்னத்தை தீர்மானம்பண்ண முடியாது. அலங்காரமான ஆலயத்தில் வாசம்பண்ணுகிற கர்த்தர், மண்சுவரினால் கட்டப்பட்டு, கூரை மேயப்பட்டிருக்கிற சபைகளிலும் வாசம்பண்ணுகிறார்.

எங்கே கர்த்தருடைய நாமத்தினால், இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் கூடியிருக்கிறார்களோ அங்கே கர்த்தர் வாசம்பண்ணுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனங்களின் ஆத்துமாக்களிலே வாசம்பண்ணுகிறார்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தில் வீற்றிருக்கும்போது, அவர் தேவனுடைய பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய பெட்டிக்கு மறுபடியும் முக்கியத்துவமும், கனமும், மரியாதையும், மதிப்பும் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள்.

தாவீது தேவனுடைய பெட்டியைப்பற்றிச் சொல்லும்போது, மிகவும் பரிசுத்தமான வார்த்தைகளையும், கனமுள்ள வார்த்தைகளையும் பயன்படுத்துகிறார். இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய பெட்டியை கனப்படுத்தி வந்தார்கள். ஆனால், சிறிது காலம் வரையிலும் அவர்கள் தேவனுடைய பெட்டியை மறந்துவிட்டார்கள்.

இப்போது மறுபடியுமாய், தேவனுடைய பெட்டியை விவரிப்பதற்கு, பரிசுத்தமான வார்த்தைகளும், கனமுள்ள வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுதுகொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டி" *(2சாமு 6:2)* என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் கர்த்தரைப்பற்றித் தியானிக்கும்போது அவரை எல்லாவற்றிற்கும் மேலானவராகவும், உயர்ந்தவராகவும் தியானிக்கவேண்டும். நாம் கர்த்தரைப்பற்றிப் பேசும்போதோ, பரிசுத்தமான வார்த்தைகளையும், பயபக்தியுள்ள வார்த்தைகளையும், மகிமையுள்ள வார்த்தைகளையும் பேசி, கர்த்தரைக் கனம்பண்ண வேண்டும்.

கர்த்தருடைய நாமம் எல்லா நாமங்களுக்கும் மேலானது. அவர் சேனைகளுடைய கர்த்தராயிருக்கிறார். வானத்திலும் பூமியிலும் இருக்கிற சர்வசிருஷ்டிகளும் கர்த்தரைத் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தரே சர்வசிருஷ்டிகராகவும், சர்வஆளுநராகவும் இருக்கிறார். கர்த்தர் எல்லா ஜீவராசிகளையும் சிருஷ்டித்து, அவற்றை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஆளுகை செய்கிறார்.

சேனைகளின் கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதியாகயிருந்தாலும், அவர் கேரூபீன்களின் நடுவே வாசமாயிருக்கிறதை தெரிந்து கொண்டிருக்கிறார். இங்கு வாசமாயிருக்கிறது கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது. கேரூபின்களுக்கு அருகாமையில் கிருபாசனம் இருக்கிறது. கிருபாசனம் கர்த்தருடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும் அடையாளம்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு தம்மை வெளிப்படுத்தும்போது, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மத்தியஸ்தர் மூலமாக நம்மோடு ஒப்புரவாகுகிறார். கர்த்தர் நமக்கு நன்மை செய்கிறவராக தம்மை வெளிப்படுத்துகிறார்.

நாம் கர்த்தருடைய பரிசுத்தமான பிரமாணங்களைப்பற்றி உயர்வாக பேசவேண்டும். அதை பயபக்தியோடு தியானிக்கவேண்டும். இஸ்ரவேல் தேசத்தாருக்கு தேவனுடைய பெட்டி மிகவும் முக்கியமானது. அவர்களுக்கு அது கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய பெட்டி முக்கியமானதாயிருந்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் முக்கியமானதாயிருக்கிறது.

"நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" *(மத் 28:20).*

கிறிஸ்துவானவர் நமக்கு மத்தியஸ்தராயிருக்கிறார். நாம் பிதாவாகிய தேவனோடு ஒப்புரவாவதற்கு, கிறிஸ்துவானவர், தம்முடைய பிதாவானவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து, நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" *(சங் 27:4).*

தேவனுடைய பெட்டியை, அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஸ்தாபிக்கும்போதும், அதை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும்போதும், கர்த்தர் ஒரு சில பிரமாணங்களை நியமித்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் உடன்படிக்கைப் பெட்டியின் பிரமாணத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிற, வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

தேவனுடைய பெட்டியை பாலையூதாவிலிருந்து தாவீது நகரத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று தாவீது தன்னுடைய விருப்பத்தை இஸ்ரவேலருக்கு சொல்லுகிறார். இதற்காக அவர் இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதினாயிரம்பேரை கூட்டுகிறார்.

"தாவீது ஆயிரம்பேருக்குத் தலைவரோடும் நூறுபேருக்குத் தலைவரோடும் சகல அதிபதிகளோடும் ஆலோசனை பண்ணி, இஸ்ரவேல் சபையையெல்லாம் நோக்கி: உங்களுக்குச் சம்மதியும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சித்தமுமாயிருந்தால், இஸ்ரவேலின் தேசங்களிலெல்லாம் இருக்கிற நம்முடைய மற்றச் சகோதரரும், அவர்களோடே தங்கள் வெளிநிலங்களில் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் நம்மோடேகூடும்படிக்கு நாம் சீக்கிரமாய் அவர்களிடத்துக்கு ஆள் அனுப்பி, நமது தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டுவருவோமாக; சவுலின் நாட்களில் அதைத் தேடாதேபோனோம் என்றான்" *(1நாளா 13:1-3)*.

கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுதுகொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டியைப் பாலையூதாவிலிருந்து கொண்டுவரும்படி, தாவீதும் அவரோடிருந்த அந்த ஸ்தலத்தாரும் எழுந்து போகிறார்கள் *(2சாமு 6:1,2)*.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வருவதற்கு, தாவீது இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதினாயிரம் பேரைக் கூட்டுகிறார். இவர்கள் எல்லோரும் தேவனுடைய பெட்டியைக் கனம்பண்ணவேண்டும். கர்த்தருடைய பெட்டியை பாலையூதாவிலிருந்து, தாவீதின் நகரத்திற்கு சந்தோஷமாய்க் கொண்டு வரவேண்டும். தேவனுடைய பெட்டி தாவீதின் நகரத்திற்கு வருவது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது. அந்த சந்தோஷத்திற்கு இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதினாயிரம்பேரும் எடுத்துக்காட்டாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரில் வாலிபராயிருக்கிறவர்கள் உடன்படிக்கைப் பெட்டியை மறந்துவிட்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இப்போது உடன்படிக்கைப் பெட்டியைப்பற்றி அதிகமாய்ப் பேசப்படுவதில்லை. இப்படிப்பட்ட காலத்தில் தாவீது தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைப்பற்றிச் சொல்லுகிறார்.

"கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுதுகொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டி" *(2சாமு 6:2)* என்று தேவனுடைய பெட்டிக்கு மறுபடியும் கனமும் மகிமையுமுள்ள வார்த்தைகள் சொல்லப்படுகிறது. இஸ்ரவேலின் வாலிபர்கள், கர்த்தரைபற்றிய பரிசுத்தமான வார்த்தைகளையும், பயபக்தியுள்ள வார்த்தைகளையும் கேட்டு, தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் உற்சாகமடைகிறார்கள். உடன்படிக்கைப் பெட்டியைப்பற்றி கேள்விப்படும்போது, இஸ்ரவேலின் வாலிபருக்கும், தேவனுடைய பெட்டியின்மீது மதிப்பும், மரியாதையும் உண்டாயிற்று.

தாவீதும், அவருடைய மனுஷரும் தேவனுடைய பெட்டியை பாலையூதாவிலிருந்து தாவீதின் நகரத்திற்கு கொண்டு வரும்போது, கர்த்தருக்கு விரோதமாக ஒரு தப்பிதம் செய்கிறார்கள். உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் தங்கள் தோளின்மீது சுமந்து செல்லவேண்டும். ஆனால் தாவீதும் அவருடைய மனுஷருமோ, தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டுவருகிறார்கள் *(2சாமு 6:3)*.

அவர்கள் தேவனுடைய பெட்டியை ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து நடத்திக்கொண்டு வருகிறபோது, அகியோ பெட்டிக்கு முன்னாலே நடக்கிறான் *(2சாமு 6:4)*.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் தங்கள் தோளின்மீது சுமந்துகொண்டு போவதற்கு பதிலாக, அதை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றிகொண்டு போகிறார்கள். அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்தப் புது இரதத்தை நடத்துகிறார்கள்.

உடன்படிக்கைப் பெட்டியை தங்கள் தோள்களின்மேல் சுமக்கும் ஊழியம் கோகாத்தியரிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இரதங்களோ, வண்டில்களோ கொடுக்கப்படவில்லை.

"கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்கவில்லை; தோள்மேல் சுமப்பதே அவர்களுக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாயிருந்தது" *(எண் 7:9)*.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி சுமப்பதற்கு கடினமாயிருக்காது. அது அதிக பாரமானதல்ல. தேவனுடைய பெட்டியை தோளின்மீது எளிதாக சுமந்துகொண்டு போகமுடியும். தாவீதோடுகூட முப்பதினாயிரம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இவர்களில் ஆசாரியர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பெட்டியை, கிபியாவிலிருந்து சீயோன் மலைக்கு, தங்கள் தோள்கள்மீது சுமந்துகொண்டு போக வேண்டும்.

ஆனால் தாவீதும் அவருடைய மனுஷருமோ, தேவனுடைய பெட்டியை தோளின்மீது சுமந்துகொண்டு போகாமல், அதை ஒரு புது இரத்தின்மேல் ஏற்றி, அந்த இரத்தை நடத்திக்கொண்டு போகிறார்கள். தேவனுடைய பெட்டி தோளின்மேல் ஏற்றப்பட்டுப்போகாமல், புது இரத்தின்மேல் ஏற்றப்பட்டுப்போகிறது.

இரதத்திலும், வண்டில்களிலும் சாதாரணமான பொருள்களையும், சுமைகளையும் ஏற்றிக்கொண்டு போவது வழக்கம். இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய பெட்டியை, சாதாரண பொருளைப்போல பாவிக்கிறார்கள். சாதாரண சுமைக்கும், தேவனுடைய பெட்டிக்கும் இடையே அவர்களுக்கு வித்தியாசம் தெரியவில்லை.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, கர்த்தருடைய பெட்டியை தங்கள் தேசத்திற்கு கொண்டு போய்விட்டார்கள். கர்த்தர் அதன் நிமித்தமாய் பெலிஸ்தரை வாதித்தார். அவர்களைத் தண்டித்தார். பெலிஸ்தருக்கு தேவனுடைய பெட்டியைப்பற்றி ஒன்றும் தெரியாது. பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டிக்கு விரோதமாக செய்தது எல்லாமே அவர்களுடைய அறியாமையினால் செய்தது.

இஸ்ரவேல் புத்திரரோ பெலிஸ்தரைப்போல சத்தியம் அறியாதவர்களல்ல. இஸ்ரவேலருக்கு தேவனைப்பற்றியும் தெரியும். தேவனுடைய பெட்டியைப்பற்றியும் தெரியும். பெலிஸ்தர் தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். இஸ்ரவேலரோ தேவனுடைய காணியாட்சிக்குட்பட்டவர்கள். இஸ்ரவேலருக்கு கர்த்தருடைய பிரமாணம் போதிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலருக்கு சத்தியம் தெரிந்திருந்தும், தேவனுடைய பெட்டியை, ஆசாரியர்கள் தங்கள் தோள்களின்மேல் சுமந்துகொண்டுபோகாமல், அதை ஒரு புது இரத்தின் மேல் ஏற்றி நடத்திக்கொண்டு போகிறார்கள்.

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை ஒரு வண்டிலின்மேல் ஏற்றிக்கொண்டு போனது அவர்களுடைய அறியாமை. ஆனால் இஸ்ரவேலர், தேவனுடைய பெட்டியை புது இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டுபோவது அவர்களுடைய துணிகரமான பாவம். இஸ்ரவேலர் தேவனுடைய பெட்டிக்கு முக்கியத்துவமும், கனமும், மதிப்பும், மரியாதையும் கொடுப்பதாக நினைத்து, அதை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இரதம் புதிதாயிருந்தாலும், பழையதாயிருந்தாலும், தேவனுடைய பெட்டியை தோளில் சுமக்காமல் இரத்தின்மேல் கொண்டுபோவது கர்த்தருக்கு சித்தமல்ல. இரதத்தின் மேல் தேவனுடைய பெட்டியைக் கொண்டு போவதை கர்த்தர் நியமனம் பண்ணவில்லை. இப்படிப்பட்ட காரியத்தை கர்த்தர் அங்கீகரிக்கவுமில்லை.

தேவனுடைய பெட்டியை கொண்டுபோகும்போது தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் மிகுந்த சந்தோஷத்தை வெளிப்படுத்துகிறார்கள். தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் தேவதாரு மரத்தால் பண்ணப்பட்ட சகலவித கீதவாக்கியங்களோடும், சுரமண்டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம் ஆகிய இவைகளோடும், கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டுபோகிறார்கள் (2சாமு 6:5).

கர்த்தரை தனிமையில், இரகசியமாய் ஆராதிக்கும்போது, நம்மால் எவ்வளவு தனிமையாயிருக்க முடியுமோ அவ்வளவு தனிமையாயிருக்கவேண்டும். கர்த்தரை எல்லோருக்கும் முன்பாக சபையாரோடு சேர்ந்து வெளிப்படையாக ஆராதிக்கும்போது, நம்மால் எவ்வளவு அதிகமாக வெளிப்படையாய் ஆராதிக்க முடியுமோ, அவ்வளவு அதிகமாக வெளிப்படையாய் ஆராதிக்கவேண்டும். தனி ஆராதனையும் சிறப்பாயிருக்கவேண்டும். பொதுஆராதனையும் சிறப்பாயிருக்க வேண்டும்.

தேவனுடைய பெட்டி தாவீதின் நகரத்திற்கு வருகிறது. பெட்டி அங்கே வருவதற்கு இதுவரையிலும் இருந்த தடையெல்லாம் நீங்கிப்போயிற்று. ஆகையினால் தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் மிகுந்த சந்தோஷத்தோடு ஆடிபாடுகிறார்கள். கர்த்தருடைய பெட்டி தங்களுக்கு பாதுகாப்பாகவும், ஆதரவாகவும் இருக்கும் என்று இஸ்ரவேலர் நினைக்கிறார்கள். கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்கு வருவது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது.

இஸ்ரவேல் சந்ததியாரால் தங்கள் சந்தோஷத்தை அடக்கி கட்டுப்படுத்த முடியவில்லை. தாவீதும், இஸ்ரவேலரும் கர்த்தருக்கு முன்பாக ஆடிக்கொண்டு போகிறார்கள். "கர்த்தர்" என்பது இங்கு தேவனுடைய பெட்டியை குறிக்கிற வார்த்தை. புது இரத்தின்மேல் தேவனுடைய பெட்டி ஏற்றப்பட்டிருக்கிறது. தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும், தேவனுடைய பெட்டிக்கு முன்பாக ஆடிக்கொண்டு போகிறார்கள்.

தாவீது இந்த சந்தர்ப்பத்தில் 68-ஆவது சங்கீதத்தை எழுதியிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த சங்கீதம் மோசேயின் ஜெபத்தோடு ஆரம்பமாகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, அவர்கள் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை, ஒவ்வொரு இடமாக தூக்கிக்கொண்டு போனார்கள். அவர்கள் உடன்படிக்கைப் பெட்டியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தூக்கிக்கொண்டு போகும்போது, மோசே, "தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப்பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள்" (சங் 68:1) என்று ஜெபிப்பது வழக்கம். மோசே ஏறெடுத்த இந்த ஜெபத்தை, தாவீது 68-ஆவது சங்கீதத்தின் முதல் வசனத்தில் பயன்படுத்துகிறார்.

தாவீதும் இஸ்ரவேல் சந்ததியாரும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போகிறார்கள். தாவீது இந்த சம்பவத்தை 68-ஆவது சங்கீதத்தில் இவ்வாறு எழுதுகிறார். "முன்னாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும், சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள்" (சங் 68:25).

தாவீதும் இஸ்ரவேல் சந்ததியாரும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக் கொண்டுபோகும்போது, அவர்களோடுகூட இஸ்ரவேலின் பிரபுக்களும் ஆடிப்பாடிக்கொண்டு போகிறார்கள்.

"அங்கே அவர்களை ஆளுகிற சின்ன பென்யமீனும், யூதாவின் பிரபுக்களும், அவர்கள் கூட்டமும், செபுலோனின் பிரபுக்களும், நப்தலியின் பிரபுக்களும் உண்டு" (சங் 68:27).

தாவீது 68-ஆவது சங்கீதத்தின் முடிவிலே, "தேவனே உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்" (சங் 68:35) என்று சொல்லுகிறார். ஊசா செத்துப்போனதைப் பார்த்து, தாவீது இந்த வாக்கியத்தை இந்த சங்கீதத்தில் சேர்த்திருக்கவேண்டும்.

ஊசா
2சாமு 6:6-11

2சாமு 6:6. அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தான்.

2சாமு 6:7. அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின் மேல் கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான்.

2சாமு 6:8. அப்பொழுது கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு இந்நாள்மட்டும் வழங்கிவருகிற பேரேஸ்ஊசா என்னும் பேரிட்டான்.

2சாமு 6:9. தாவீது அன்றையதினம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி,

2சாமு 6:10. அதைத் தன்னிடத்தில் தாவீதின் நகரத்தில் கொண்டுவர மனதில்லாமல், கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைத்தான்.

2சாமு 6:11. கர்த்தருடைய பெட்டி கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி, அதை கிபியாவிலிருந்து தாவீதின் நகரத்திற்கு நடத்திக்கொண்டு போகிறார்கள். பெட்டி இதுவரையிலும் அபினதாபின் வீட்டிலிருந்தது. அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்தப் புது இரதத்தை நடத்துகிறார்கள்.

அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தது. ஆனபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடிக்கிறான். அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின் மேல் கோபமூளுகிறது; கர்த்தர் ஊசாவினுடைய துணிவினிமித்தம், அவர் அங்கே அவனை அடிக்கிறார்; ஊசா அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்துப்போகிறான் *(2சாமு 6:6,7)*.

தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போகிறார்கள். அப்போது ஊசா செத்துப்போன சம்பவம் தேவனுடைய பெட்டியண்டையில் நடைபெறுகிறது. இஸ்ரவேல் சந்ததியாரின் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று. இரதம் அங்கேயே நிறுத்தப்படுகிறது. கிபியாவிலிருந்து தாவீதின் நகரத்திற்கு தேவனுடைய பெட்டியைக் கொண்டுபோக, இஸ்ரவேலரில் தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதினாயிரம் பேர் அங்கே கூடியிருக்கிறார்கள். அவர்களுடைய சந்தோஷமெல்லாம் இப்போது துக்கமாய் மாறிற்று. அவர்கள் தேவனுடைய பெட்டியை அதற்குமேல் கொண்டுபோக மனதில்லாமலிருக்கிறார்கள். தேவனுடைய பெட்டியை அங்கே விட்டுவிட்டு தங்கள் வீடுகளுக்கு வருத்தத்தோடு திரும்பிப்போகிறார்கள்.

சாதாரணமாகப் பார்க்கும்போது ஊசாவின் பாவம் பெரியதாக தெரியவில்லை. ஊசாவும் அகியோவும் அபினதாபின் குமாரர்கள். அபினதாபின் வீட்டில்தான் தேவனுடைய பெட்டி இவ்வளவு காலமாகயிருந்தது. அபினதாப் ஒரு லேவியன். இவனும், இவனுடைய குமாரரும், தேவனுடைய பெட்டியை பாதுகாத்து வந்தவர்கள். புது இரதத்தின்மேல் தேவனுடைய பெட்டி ஏற்றப்பட்டபோது, அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்தப் புது இரதத்தை நடத்துகிறார்கள்.

ஊசாவும் அகியோவும், தங்கள் வீட்டிலே வைக்கப்பட்டிருந்த தேவனுடைய பெட்டிக்கு இதுவரையிலும் ஊழியம் செய்தார்கள். இப்போது தேவனுடைய பெட்டி புது இரதத்தில் ஏற்றப்பட்டு, கிபியாவிலிருந்து தாவீதின் நகரத்திற்கு கொண்டுபோகப்படும்போது, அபினதாபின் குமாரர், தேவனுடைய பெட்டிக்கு தங்கள் கடைசி ஊழியத்தை செய்ய விரும்புகிறார்கள். தேவனுடைய பெட்டி தாவீதின் நகரத்திலே வைக்கப்பட்ட பின்பு, அபினதாபின் குமாரருக்கு பதிலாக, மற்ற லேவியர்கள் தேவனுடைய பெட்டிக்கு ஊழியம் செய்வதற்கு நியமிக்கப்படுவார்கள்.

தேவனுடைய பெட்டி புது இரதத்தின்மேல் ஏற்றப்பட்டிருக்கிறது. அகியோ பெட்டிக்கு முன்னாலே நடக்கிறான். அவன் இரதத்திற்கு முன்னாகப் போகிறான். இரதத்திற்கு பாதைகளை செவ்வைப்படுத்துவதற்காகவும், மாடுகளை ஓட்டுவதற்காகவும், அகியோ இரதத்திற்கு முன்பாக போயிருக்கவேண்டும்.

அபினதாபின் மற்றொரு குமாரனாகிய ஊசாவோ, இரதத்திற்கு அருகாமையில் போகிறான். இரதத்தில் வைக்கப்பட்டிருக்கிற பெட்டிக்கு பாதுகாப்பாக, இரதத்திற்கு பக்கத்திலே போய்க்கொண்டிருக்கிறான். அப்போது மாடுகள் மிரண்டு பெட்டியை அசைக்கிறது. மாடுகள் ஏன் மிரண்டது என்று தெரியவில்லை. ஒருவேளை ஊசா தாற்றுக்கோலால் மாடுகளைக் குத்தியிருக்கவேண்டும். மாடுகளை ஓட்டுகிறவர்கள் தாற்றுக்கோலைப் பயன்படுத்துவது வழக்கம். அல்லது அந்த மாடுகள் தரையிலே இடறியிருக்கவேண்டும்.

இரதம் இப்போது நாகோனின் களம் இருக்கிற இடத்திற்கு அருகே வந்திருக்கிறது. இந்த இடத்தின் தரையிலே பாதை செவ்வையாயில்லாமல் கற்கள் நிரம்பியதாயிருக்கவேண்டும். இரதத்தின் சக்கரம் ஒரு கல்லின்மேல்பட்டு, இரதம் அசைந்திருக்கவேண்டும். அந்த அசைவில் மாடுகள் மிரண்டிருக்கவேண்டும். அல்லது இரதத்தின் சக்கரம் சேற்றில் சிக்கியிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. மாடு மிரளுகிறது. அப்போது இரதத்தில் வைக்கப்பட்டிருக்கிற பெட்டி அசைகிறது. அசைவு அதிகமாயிருப்பதினால், தேவனுடைய பெட்டி இரதத்திலிருந்து கீழே விழுவதுபோல பெலமாய் அசைகிறது.

ஊசா பெட்டிக்கு அருகாமையிலிருக்கிறான். மாடுகள் மிரளுவதையும், பெட்டி அசைவதையும் ஊசா பார்க்கிறான். பெட்டி கீழே விழுந்துவிடாமல் அதைப் பாதுகாக்கவேண்டுமென்று ஊசா தீர்மானம்பண்ணுகிறான். ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி அதைப் பிடிக்கிறான். ஊசா ஒரு லேவியன். ஆசாரியருக்கு மட்டுமே தேவனுடைய பெட்டியை தொடுவதற்கு அனுமதியுள்ளது.

தேவனுடைய பெட்டியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வாறு கொண்டுபோகவேண்டும் என்று, பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கோகாத்தியர் மாத்திரமே தேவனுடைய பெட்டியை சுமக்கவேண்டும். பெட்டியையும் தங்கள் தோள்களின்மேல் நேரடியாக வைக்கக்கூடாது. பெட்டிகளில் தண்டுகளைப் பாய்ச்சி, கோகாத்தியர் அந்தத் தண்டுகளை தங்கள் தோள்களின்மேல் வைக்கவேண்டும்.

"பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதினுடைய சகல பணிமுட்டுகளையும் மூடித் தீர்ந்தபின்பு, கோகாத் புத்திரர் அதை எடுத்துக்கொண்டுபோகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாகாதபடிக்கு பரிசுத்தமானதைத் தொடாதிருக்கக்கடவர்கள்; ஆசரிப்புக் கூடாரத்திலே கோகாத் புத்திரர் சுமக்கும் சுமை இதுவே" (எண் 4:15).

ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய் தன்னுடைய கையை நீட்டி அதைப் பிடிக்கிறான். ஊசா கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாய் பாவம் செய்கிறான். கர்த்தருடைய பார்வையில் ஊசாவின் பாவம் பெரிதாயிருக்கிறது. கர்த்தர் ஊசாவுக்கு பெரிய தண்டனை கொடுக்கிறார். கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபம் மூளுகிறது. ஊசாவினுடைய துணிவினிமித்தம், தேவன் அவனை அங்கே அடிக்கிறார். ஊசா அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்துப்போகிறான் (2சாமு 6:7).

ஊசா எங்கே பாவம் செய்தானோ, அங்கே அவன் செத்துப்போகிறான். ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி அதைப் பிடிக்கிறான். கர்த்தர் ஊசாவை அடித்ததினால், அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்துப்போகிறான். தேவனுடைய பெட்டியில் கிருபாசனம் இருக்கிறது. ஆனால் அந்த கிருபாசனம் ஊசாவை இரட்சிக்கவில்லை.

கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபம் மூளுகிறது. கர்த்தர் ஊசாவுக்கு கடினமான தண்டனை கொடுக்கிறார். லேவியர்கள் தேவனுடைய பெட்டியைத் தொடக்கூடாது. கர்த்தருடைய பிரமாணத்தில் இது அவர்களுக்கு தடைபண்ணப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணத்தை மீறினால் அவர்கள் செத்துப்போவார்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி அதைப் பிடித்ததை மாத்திரமே தாவீதும், அவரோடு கூடயிருந்த இஸ்ரவேல் சந்ததியாரும் பார்த்தார்கள். கர்த்தரோ ஊசாவின் இந்த செய்கையையும் பார்த்தார். அதே சமயத்தில் ஊசாவின் இருதயத்தில் காணப்பட்ட துணிவையும், துணிகரத்தையும் பார்த்தார். ஊசாவின் இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படுகிற பயமோ, கர்த்தர்மீது பக்தியோ இல்லை.

உடன்படிக்கைப் பெட்டி ஏற்றப்பட்டிருக்கிற இரதத்திற்கு முன்பாக தாவீதும் இஸ்ரவேல் ஜனத்தாரும் ஆடிப்பாடிக்கொண்டு போகிறார்கள். அப்போது மாடுகள் மிரண்டு பெட்டியை அசைக்கிறது. தேவனுடைய பெட்டி இரதத்திலிருந்து கீழே விழுந்துவிடக்கூடிய சூழ்நிலை உண்டாயிற்று. அப்போது ஊசா எல்லோருக்கும் முன்பாக தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும், பெருமையோடு வெளிப்படுத்த விரும்புகிறான்.

தேவனுடைய பெட்டியை கீழே விழுந்துவிடாமல் பிடிப்பதற்கு தன்னிடத்தில் தைரியம் இருக்கிறது என்பதை ஊசா மற்றவர்களுக்கு காண்பிக்க விரும்புகிறான். ஊசா அபினதாபின் குமாரன். அவனுடைய வீட்டில் இதுவரையிலும் தேவனுடைய பெட்டி இருந்தது. அபினதாபின் குமாரர் தேவனுடைய பெட்டிக்கு ஊழியம் செய்தார்கள். ஊசாவுக்கு தேவனுடைய பெட்டியோடு நெருங்கிய ஐக்கியம் இருந்தது. ஊசா தனக்கும் தேவனுடைய பெட்டிக்கும் இடையே, இதுவரையிலும் இருந்த நெருங்கிய ஐக்கியத்தை, எல்லோருக்கும் காண்பிக்க விரும்புகிறான்.

தேவனுடைய பெட்டி கீழே விழும்போது, அதை எப்படி பிடிக்கவேண்டும் என்று தனக்கும் மாத்திரமே தெரியும் என்பதுபோல, ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி அதைப் பிடிக்கிறான். தனக்கு தேவனுடைய பெட்டியைக் குறித்து எல்லாம் தெரியும் என்பதுபோல ஊசா தன்னுடைய சுயபெருமையை காண்பித்துக்கொள்கிறான்.

தேவனுடைய பெட்டியை ஆசாரியரின் தோளின்மீது சுமந்துகொண்டு போகாமல், இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு போனதினால், கர்த்தருடைய கோபம் வெளிப்பட்டது என்பதை தாவீது அறிந்துகொள்கிறார். தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் எல்லோரும் இந்தப் பாவத்திலே பங்காளிகளாயிருக்கிறார்கள். எல்லோரும் செய்த பாவத்திற்கு ஊசா மாத்திரம் தண்டிக்கப்பட்டிருக்கிறான். கர்த்தர் ஊசாவை தனிமைப்படுத்தி, தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகிறார். ஊசா செத்துப்போனது கர்த்தருடைய கோபத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

ஊசா மாத்திரமல்ல, கர்த்தருடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி, அதை யார் பிடித்திருந்தாலும், கர்த்தர் அவனை அடித்திருப்பார். மாடுகள் மிரண்டு, பெட்டியை அசைத்தபோது, மற்றவர்களெல்லோரும் சும்மாயிருந்தார்கள். ஊசா மாத்திரமே தன் கையை தேவனுடைய பெட்டியினிடமாய் நீட்டி, அதைப் பிடிப்பதற்கு முந்தினான். அதனால் கர்த்தர் ஊசாவை அடித்தார்.

கர்த்தர் தம்முடைய கோபத்திலே, பெட்டிக்கு முன்பாக நடந்துபோகிற இஸ்ரவேல் சந்ததியார் எல்லோரையும் அடித்திருக்கலாம். கர்த்தருடைய கோபத்திற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஆயிரக்கணக்கானோர் சங்காரமாகியிருப்பார்கள். ஆனாலும் கர்த்தர் கோபப்பட்டாலும், தம்முடைய ஜனத்தின்மீது கிருபையும் காண்பிக்கிறார். கர்த்தருடைய கோபம் ஊசாவின்மேல் மாத்திரமே மூளுகிறது. ஊசாவின் இருதயத்தில் துணிகரம் இருக்கிறது. ஊசா துணிகரமாய்ப் பாவம் செய்ததினால் கர்த்தர் அவனை மாத்திரம் அடிக்கிறார்.

தாவீதும் இஸ்ரவேல் சந்ததியாரும், நீண்டகாலத்திற்கு பின்பு, கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் சந்தோஷமாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு முன்பாக சந்தோஷப்படுகிறவர்கள் மாம்சப்பிரகாரமாக சந்தோஷப்படக்கூடாது. விசுவாசிகளிடத்தில் ஆவிக்குரிய சந்தோஷம் காணப்படவேண்டும். நம்முடைய சந்தோஷத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமும், பக்தியும் கலந்திருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் பங்குபெறும்போது, நம்மிடத்திலும் பரிசுத்தம் இருக்கவேண்டும். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களை அசட்டைபண்ணிவிடக்கூடாது.

கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தமாக, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, பரிசுத்தத்தையும், பயபக்தியையும் உணர்த்த விரும்புகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு சந்தோஷமாய்ப் போனாலும், அவர்களுடைய சந்தோஷத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமோ, பரிசுத்தமோ இல்லை என்பதை கர்த்தர் காண்கிறார். அவர்கள் ஆடுவதும் பாடுவதும், உலகப்பிரகாரமான சந்தோஷமாயிருக்கிறது. இது பக்தியின் வெளிவேஷம். இது ஒரு மாய்மாலம். கர்த்தர் ஒருபோதும் வெளிவேஷத்தையோ, மாய்மாலத்தையோ விரும்புகிறவருமல்ல. அதை அங்கீகரிக்கிறவருமல்ல.

ஊசா தேவனுடைய பெட்டியண்டையிலே செத்துக்கிடப்பதை தாவீது பார்க்கிறார். கர்த்தர் ஊசாவின்மேல் கோபங்கொண்டு, அவனுடைய துணிவினிமித்தம் அவனை அடித்தார். கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்படுகிறார். கர்த்தரும் கோபமாயிருக்கிறார். தாவீதும் கர்த்தர்மீது கோபமாயிருக்கிறார். "கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபமூண்டது" என்னும் வாக்கியத்திலும், "தாவீது விசனப்பட்டார்" என்னும் வாக்கியத்திலும் ஒரே எபிரெய வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஊசா செத்துப்போனதினால், கர்த்தருடைய மகிமை குறைந்துபோனதுபோல தாவீதின் பார்வைக்கு தெரிகிறது. தாவீது கர்த்தரை கிருபையுள்ள தேவனாகப் பார்க்கிறார். ஆனால் கர்த்தரோ தம்மை கோபமுள்ள தேவனாக வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய இந்த கோபசுபாவத்தை தாவீது எதிர்பார்க்கவில்லை. ஆகையினால் கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்படுகிறார். தேவனுடைய கோபம் நீதியானது. அதிலே அவருடைய ஞானம் வெளிப்படுகிறது. தேவன் நம்மீது கோபப்படும்போது, நாம் தேவன்மீது கோபப்படக்கூடாது. நம்முடைய மனதிலே விசனமும் இருக்கக்கூடாது.

கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது முதலில் விசனப்பட்டார். அதன் பின்பு தாவீது கர்த்தருக்கு பயப்படுகிறார். கர்த்தருடைய கோபத்தைப் பார்த்து தாவீதுக்கும் பயமுண்டாயிற்று. கர்த்தர் கோபத்தோடு ஊசாவை அடித்ததினால், "கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படி" *(2சாமு 6:9)* என்று தாவீது ஆச்சரியத்தோடு கேட்கிறார்.

கர்த்தர் இவ்வளவு கோபமாகயிருப்பதினால், அவர் தனக்கு அருகாமையில் வராமல், தூரத்திலேயே இருப்பது நல்லது என்று தாவீது நினைக்கிறார். தேவனுடைய பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். அந்தப்பெட்டி தாவீதின் நகரத்திற்கு வராமல், இங்கேயே இருந்துவிடட்டும் என்று தாவீது தீர்மானம்பண்ணுகிறார்.

தேவனுடைய பெட்டி தாவீதின் நகரத்திற்கு வந்தால், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தங்கள்மீது வெளிப்படும் என்று தாவீது எதிர்பார்த்தார். ஆனால் இங்கு கர்த்தருடைய கிருபை வெளிப்படுவதற்கு பதிலாக, அவருடைய கோபம் வெளிப்பட்டிருக்கிறது. தேவனுடைய பெட்டி எங்கே இருக்குமோ, அங்கே அவருடைய கோபமும் வெளிப்படும் என்று நினைத்து, தாவீது கர்த்தருக்கு பயப்படுகிறார்.

ஊசா செத்துப்போனதினிமித்தமாய், தாவீது ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் தாவீதோ கர்த்தருடைய சத்தியங்களை கற்றுக்கொள்வதற்கு பதிலாக, அவருக்கு பயப்படுகிறார். "கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வரட்டும்" என்று தாவீதால் சொல்ல முடியவில்லை. "நான் கர்த்தருக்கு அதிக கனத்தையும் மகிமையையும் செலுத்துவேன்" என்றோ "நான் கர்த்தர்மீது இன்னும் அதிக பயபக்தியாயிருப்பேன்" என்றோ தாவீது சொல்லவில்லை. அதற்கு பதிலாக தாவீது கர்த்தருக்கு பயந்து, "கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படி" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்கு வரவேண்டாம்" என்று பொருள்.

கர்த்தருடைய பெட்டியை தாவீதின் நகரத்திற்கு கொண்டு வருவதற்காகத்தான், தாவீதும் இஸ்ரவேல் சந்ததியாரும் கிபியாவுக்குப் போனார்கள். அங்கே அவர்கள் தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி சந்தோஷமாய்க் கொண்டு வந்தார்கள். ஆனால் இப்போதோ, கர்த்தருடைய கோபம் வெளிப்பட்டவுடன், கர்த்தருடைய பெட்டியே தனக்கு வேண்டாம் என்று தாவீது தீர்மானித்துவிடுகிறார்.

கர்த்தருடைய பெட்டியை தன்னிடத்தில் தாவீதின் நகரத்திலே கொண்டு வர தாவீதுக்கு மனதில்லை. பெட்டி இப்போது நாகோனின் களம் இருக்கிற இடத்திற்கு அருகாமையிலிருக்கிறது. அது புது இரதத்தின்மேல் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய பெட்டியை, வெட்ட வெளியிலே, நாகோனின் களம் இருக்கிற இடத்திற்கு அருகாமையில், அப்படியே விட்டுவிட்டுப் போய்விடவும் தாவீதுக்கு மனமில்லை.

தேவனுடைய பெட்டியை தாவீதின் நகரத்திற்கு கொண்டுபோகவும் அவருக்கு விருப்பமில்லை. தாவீது தேவனுடைய பெட்டியை கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைக்கிறார் *(2சாமு 6:10)*. ஓபேத்ஏதோம் ஒரு லேவியன். இவனுடைய வீடு நாகோனின் களத்திற்கு அருகாமையிலிருக்கிறது.

ஓபேத்ஏதோமும் தேவனுடைய பெட்டியை தன் வீட்டிலே ஏற்றுக்கொள்கிறான். கர்த்தருடைய பெட்டி கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதிக்கிறார் *(2சாமு 6:11)*.

கர்த்தர் ஊசாவின்மேல் கோபங்கொண்டு அவனை அடித்த இடத்தை தாவீது மறக்கவில்லை. அதை எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டும் என்று நினைத்து, தாவீது அந்த ஸ்தலத்திற்கு "பேரேஸ் ஊசா" என்று பேரிடுகிறார் *(2சாமு 6:8)* இந்தப் பெயருக்கு "ஊசாவின் மீறுதல் அல்லது ஊசாவின் முறிவு" என்று பொருள்.

தாவீது பெலிஸ்தரை முறியடித்த இடத்திற்கு, "பாகல்பிராசீம்" என்று பேரிட்டார். கர்த்தர் தாவீதின் சத்துருக்களை, தண்ணீர்களை உடைந்தோடுகிறதுபோல உடைந்து ஓடப்பண்ணினார். அதின் நிமித்தம் தாவீது அந்த ஸ்தலத்திற்கு பாகால்பிராசீம் என்று பேரிட்டார் *(2சாமு 5:20)*. இந்தப் பெயருக்கு "தண்ணீர் உடைந்தோடுகிற ஸ்தலம்" என்று பொருள்.

முன்பு பெலிஸ்தர் தாவீதுக்கு முன்பாக முறிந்து ஓடினார்கள். இப்போதோ தாவீதின் சிநேகிதர்கள் அவரை விட்டு முறிந்து ஓடுகிறார்கள். ஊசா தேவனுடைய பெட்டியண்டையில் செத்துப்போனபோது, தாவீதோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும், அவரை விட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். சத்துருக்கள் முறிந்து ஓடுகிறதுபோல, இஸ்ரவேல் சந்ததியார் அந்த ஸ்தலத்தை விட்டு முறிந்து ஓடுகிறார்கள்.

கர்த்தர் ஊசாவை அடித்ததற்கு அடையாளமாக, தாவீது அந்த ஸ்தலத்திற்கு பேரேஸ் ஊசா என்று பேரிடுகிறார். இது தாவீதின் பின்சந்ததியாருக்கு ஒரு எச்சரிப்பாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் ஈடுபடும்போது, அவர்கள் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். கர்த்தரோடு பேசும்போதும், ஐக்கியமாயிருக்கும்போதும், கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கவேண்டும். கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களை அவசரப்பட்டு செய்யக்கூடாது. அதை பயபக்தியோடும், மிகுந்த கவனத்தோடும் செய்யவேண்டும். பேரேஸ் ஊசா என்னும் ஸ்தலம் இவையெல்லாவற்றிற்கும் அடையாளமாயிருக்கிறது. இந்த ஸ்தலம் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாயும் இருக்கிறது.

தாவீது கர்த்தருடைய பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலே வைக்கிறார். இவருடைய வீடு நாகோனின் களத்திற்கு அருகாமையிலிருக்கிறது. கர்த்தர் ஊசாவை எந்த ஸ்தலத்திலே அடித்தாரோ அந்த ஸ்தலத்திற்கு அருகாமையில் ஓபேத்ஏதோமின் வீடு இருக்கிறது. ஓபேத்ஏதோம் தேவனுடைய பெட்டியை தன்னுடைய வீட்டிலே ஏற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கிறது.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, தேவனுடைய பெட்டியை தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். இதனால் பெலிஸ்தருக்கும், பெத்ஷிமேசின் மனுஷருக்கும் மிகுந்த வாதை உண்டாயிற்று. இது பழைய சம்பவம். இந்த சம்பவம் ஓபேத்ஏதோமுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி அதைப் பிடித்தான். அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபமூண்டது. ஊசாவினுடைய துணிவின் நிமித்தம் தேவன் அவனை அங்கே அடித்தார். இதுவும் ஓபேத்ஏதோமுக்கு தெரிந்திருக்கிறது.

ஊசா செத்துப்போனதைப் பார்த்து தாவீது கர்த்தருக்கு பயப்படுகிறார். உடன்படிக்கைப் பெட்டியை தாவீதின் நகரத்திற்கு கொண்டுபோக தாவீது யோசிக்கிறார். "கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படி" என்று தாவீது வேதனையோடு சொல்லுகிறார். இந்த சம்பவமும் ஓபேத்ஏதோமுக்கு தெரிந்திருக்கிறது.

ஓபேத்ஏதோமோ கர்த்தருடைய பெட்டியைக் குறித்து பயப்படவில்லை. அவர் ஒரு லேவியன். கர்த்தருடைய பெட்டி தன்னுடைய வீட்டிலே வைக்கப்படுவதற்கு, ஓபேத்ஏதோம் தன்னுடைய வீட்டின் கதவுகளைத் திறந்துகொடுக்கிறார். கர்த்தருடைய பிரசன்னம் மரித்துப்போகிறவர்களுக்கு மரணவாசனையாகயிருக்கும். கர்த்தருடைய பெட்டியை எப்படி கையாளவேண்டும் என்பது ஓபேத்ஏதோமுக்கு தெரிந்திருக்கிறது.

ஓபேத்ஏதோம் தேவனுடைய பெட்டியை தன் வீட்டிலே ஏற்றுக்கொள்கிறார். பெட்டி அவருடைய வீட்டிலே மூன்று மாதம் இருக்கிறது. கர்த்தருடைய பெட்டி கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதிக்கிறார் *(2சாமு 6:11)*.

ஊசாவை அடித்த அதே கரம், இப்போது ஓபேத்ஏதோமையும் அவனுடைய வீட்டாரையும் ஆசீர்வதிக்கிறது. ஊசா கர்த்தருக்கு விரோதமாக துணிவாயிருந்தான். அவன் துணிகரமாய்ப் பாவம் செய்தான். ஓபேத்ஏதோமோ கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறான். அவன் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்துகிறான். கர்த்தருடைய பெட்டி ஜீவனுள்ளோர்களுக்கு ஜீவவாசனையாகயிருக்கிறது.

தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோமையும், அவனுடைய வீட்டாரையும் ஆசீர்வதிக்கிற பெட்டியாயிருக்கிறது. கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்கிறார். கர்த்தருடைய பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். ஆகையினால் கர்த்தருடைய பெட்டியை ஏற்றுக்கொள்வது, கர்த்தரையே தன்னுடைய வீட்டில் வரவேற்பதற்கு சமம் என்பதை ஓபேத்ஏதோம் அறிந்திருக்கிறார்.

கர்த்தருடைய பெட்டியை தங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்கிறவர்களோடு, வாசம்பண்ணுகிறவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கிறது. கர்த்தரை நம்புகிறவர்களும், அவருக்கு ஊழியம் செய்கிறவர்களும் செழித்திருப்பார்கள்.

தாவீது ராஜா 2சாமு 6:12-19

2சாமு 6:12. தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீது ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான்.

2சாமு 6:13. கர்த்தருடைய பெட்டியைச் சுமந்து போகிறவர்கள் ஆறு தப்படி நடந்த போது, மாடுகளையும் கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் பலியிட்டான்.

2சாமு 6:14. தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.

2சாமு 6:15. அப்படியே தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் கொண்டுவந்தார்கள்.

2சாமு 6:16. கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கிறபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து, தாவீதுராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம் பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்.

2சாமு 6:17. அவர்கள் கர்த்தருடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்து, அதற்குத் தாவீது போட்ட கூடாரத்திற்குள் இருக்கிற அதின் ஸ்தானத்திலே அதை வைத்தபோது, தாவீது கர்த்தருடைய சந்நிதியிலே சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் இட்டான்.

2சாமு 6:18. தாவீது சர்வாங்க தகனபலிகளையும்ற சமாதானபலிகளையும் இட்டபின்பு, சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசீர்வதித்து,

2சாமு 6:19. இஸ்ரவேலின் திரள்கூட்டமான ஸ்திரீ புருஷராகிய சகல ஜனங்களுக்கும், அவரவருக்கு ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித்துண்டையும், ஒவ்வொரு படி திராட்சரசத்தையும் பங்கிட்டான்; பிற்பாடு ஜனங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் வீட்டிற்குப் போய்விட்டார்கள்.

தாவீது, தேவனுடைய பெட்டியை கிபியாவிலிருந்து, தாவீதின் நகரத்திற்கு கொண்டுபோக இரண்டுமுறை முயற்சி பண்ணுகிறார். முதலாவது முயற்சி தோல்வியடைகிறது. தேவனுடைய பெட்டியண்டையிலே ஊசா செத்துப்போகிறான். தாவீது பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலே வைக்கிறார். கர்த்தர் ஓபேத்ஏதோமையும், அவருடைய வீட்டார் அனைவரையும் ஆசீர்வதிக்கிறார்.

தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீதுராஜாவுக்கு அறிவிக்கப்படுகிறது *(2சாமு 6:12)*.

கர்த்தர் ஓபேத்ஏதோமையும், அவருடைய வீட்டாரையும் ஆசீர்வதிப்பது, அவர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு ஒப்புரவாகியிருப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய கோபம் அவரை விட்டு நீங்கிப்போயிற்று என்றும், கர்த்தர் இப்போது இஸ்ரவேல் புத்திரரோடு சமாதானமாயிருக்கிறார் என்றும் தாவீது அறிந்துகொள்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு சமாதானமாயிருக்கும்போது, கர்த்தருடைய பெட்டியை தாவீதின் நகரத்திற்கு கொண்டு வரலாம் என்று தாவீது தீர்மானம்பண்ணுகிறார். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி என்பது ஒரு பாரமான கல் அல்ல. இதை சுமந்து செல்வதும் கடினமல்ல.

தேவனுடைய பெட்டியை இஸ்ரவேல் புத்திரர் கனம்பண்ணவேண்டும். தேவனுடைய பெட்டிக்கு அருகாமையிலிருக்கிறவர்கள் கர்த்தருக்கு பயந்து, பரிசுத்தமாயும், பயபக்தியாயும் இருக்கவேண்டும். அப்போது பெட்டிக்கு அருகாமையிலிருக்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்.

தேவனுடைய பெட்டிக்கு அருகாமையில் ஊசா வந்தபோது, அவன் செத்துப்போனான். தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிற்கு வந்தபோது, கர்த்தர் ஓபேத்ஏதோமையும் அவனுடைய வீட்டார் எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய பெட்டி ஒன்றுதான். அது இரண்டுவிதமாய் கிரியை செய்கிறது.

"அந்தப்படியே: இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பபெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால், தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; அவர்கள் திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" *(1பேது 2:6-8).*

தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவருவதற்கு தேவையான காரியங்களை மேற்கொள்கிறார். முதலில் தேவனுடைய பெட்டியை கிபியாவிலிருந்து கொண்டு வந்தபோது, அதை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். இப்போதோ, அதே பெட்டியை தோள்கள்மேல் சுமந்துகொண்டு வருகிறார்கள். கர்த்தருடைய கற்பனைக்கு கீழ்ப்படிந்து, தேவனுடைய பெட்டியை சுமந்துகொண்டு வருகிறார்கள்.

"பின்பு லேவி புத்திரர் கர்த்தருடைய வார்த்தையின்படியே, மோசே கற்பித்தபிரகாரம் தேவனுடைய பெட்டியை அதின் தண்டுகளினாலே தங்கள் தோள் மேல் எடுத்துக்கொண்டுவந்தார்கள்" *(1நாளா 15:15).*

தேவனுடைய பெட்டியை சுமந்துகொண்டு வரும்போது, தாவீது கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார். கர்த்தருடைய பெட்டியைச் சுமந்து போகிறவர்கள் ஆறு தப்படி நடந்த போது, தாவீது மாடுகளையும் கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் பலியிடுகிறார் *(2சாமு 6:13).* தங்களுடைய பழைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்படவேண்டும் என்பதற்காகவும், அவை நிவிர்த்தி பண்ணப்படவேண்டும் என்பதற்காகவும் தாவீது பாவநிவாரண பலிகளை செலுத்துகிறார்.

கர்த்தருடைய பெட்டியை சுமந்துபோகிறவர்கள், நடக்கும்போது, தாவீதும், அந்தப் பெட்டிக்கு முன்பாக பயபக்தியோடு நடந்துபோகிறார். பெட்டி கிபியாவிலிருந்து புறப்பட்டபோது சகலவிதமான கீதவாத்தியங்களோடும், கைத்தாளங்களோடும், தாவீதும் இஸ்ரவேல் சந்ததியாரும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போனார்கள். அப்போது ஆரவாரம் அதிகமாயிருந்தது. இப்போது ஆரவாரமில்லை. ஆரவாரத்திற்குப் பதிலாக, தாவீதின் இருதயத்திலே கர்த்தருக்குப் பயப்படும் பயமும், கர்த்தர்மீது பக்தியும் இருக்கிறது. தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணுகிறார் *(2சாமு 6:14).*

தாவீதின் இருதயம் சந்தோஷத்தினால் நிரம்பியிருக்கிறது. அவருடைய சந்தோஷம் நிரம்பி வழிவதினால் அவர் நடனமாடுகிறார். அவர் தன்னுடைய முழுபலத்தோடு நடனமாடுகிறார். தாவீதின் நடனம் செயற்கையான நடனமல்ல. தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக தாவீது தன் முழுபலத்தோடு கர்த்தருக்கு முன்பாக நடனம்பண்ணுகிறார்.

அப்படியே தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் தாவீதின் நகரத்திற்கு கொண்டுவருகிறார்கள் (2சாமு 6:15).

தேவனுடைய பெட்டி பாதுகாப்பாக கொண்டு வரப்படுகிறது. அவர்கள் கர்த்தருடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்து, அதற்குத் தாவீது போட்ட கூடாரத்திற்குள் இருக்கிற அதின் ஸ்தானத்திலே அதை வைத்தபோது, தாவீது கர்த்தருடைய சந்நிதியிலே சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் இடுகிறார் (2சாமு 6:17). தாவீது கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்துகிறார். கர்த்தருடைய கிருபை தங்கள்மீது என்றும் உள்ளதை நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார்கள்.

தாவீது சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் இட்டபின்பு, தாவீது சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசீர்வக்கிறார். தாவீது இஸ்ரவேலின் திரள்கூட்டமான ஸ்திரீ புருஷராகிய சகல ஜனங்களுக்கும், அவரவருக்கு ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித்துண்டையும், ஒவ்வொரு படி திராட்சரசத்தையும் பங்கிடுகிறார்; பிற்பாடு ஜனங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் வீட்டிற்குப் போய்விடுகிறார்கள் (2சாமு 6:18,19).

தாவீது இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர்களை சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவர்கள் செழித்திருக்கவேண்டும் என்றும் தாவீது விரும்புகிறார். தங்கள் ராஜா தங்களை நேசிக்கிறார் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் அறிந்துகொள்கிறார்கள்.

தாவீது இஸ்ரவேல் ஜனங்களை நலமான வார்த்தைகளால் ஆசீர்வதிப்பதோடு, அவர்களை உதாரத்துவமாகவும் ஆசீர்வதிக்கிறார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அப்பத்தையும் இறைச்சி துண்டையும், திராட்சரசத்தையும் பங்கிட்டுக் கொடுக்கிறார். தாவீது இஸ்ரவேல் ஜனங்களை வார்த்தைகளினாலும் ஆசீர்வதிக்கிறார், அன்பளிப்புக்களினாலும் ஆசீர்வதிக்கிறார்.

மீகாள்
2சாமு 6:20-23

2சாமு 6:20. தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டுவந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.

2சாமு 6:21. அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து: உன் தகப்பனைப்பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப்பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்.

2சாமு 6:22. இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்; அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்.

2சாமு 6:23. அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது.

தாவீது இஸ்ரவேலின் திரள்கூட்டமான ஸ்திரீ புருஷராகிய சகல ஜனங்களையும் சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதித்த பின்பு, தன்னுடைய வீட்டாரை ஆசீர்வதிப்பதற்காக, தாவீது தன் வீட்டாரின் பக்கமாக திரும்புகிறார். முதலாவது ஆசீர்வாதம் இஸ்ரவேல் ஜனங்களுக்கே கொடுக்கப்படுகிறது. அதன்பின்பே தாவீது தன் சொந்த வீட்டாரை ஆசீர்வதிக்கத் திரும்புகிறார். தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்க மறக்கவில்லை. மறுக்கவுமில்லை. ஆனாலும் முதலாவது ஆசீர்வாதம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கே கிடைக்கிறது.

தாவீது இதுவரையிலும் தன்னுடைய வீட்டிற்கு இவ்வளவு சந்தோஷமாகவும், இவ்வளவு மனதிருப்தியாகவும் வந்ததில்லை. தாவீதின் நகரத்திற்கு இப்போது கர்த்தருடைய பெட்டி வந்திருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் தாவீதின் நகரத்திலே வாசம்பண்ணுகிறது. தாவீதின் வீடு இந்த நகரத்திலிருக்கிறது. இந்த நகரத்திலே தாவீது கர்த்தருடைய பெட்டிக்கு ஒரு கூடாரத்தைப் போட்டிருக்கிறார். அந்த ஸ்தானத்திலே கர்த்தருடைய பெட்டியை வைத்திருக்கிறார்கள். இப்போது கர்த்தருடைய பெட்டி தாவீதுக்கு அருகாமையிலிருக்கிறது.

தாவீதின் இருதயத்தில் சந்தோஷம் நிரம்பியிருந்தாலும், மீகாள் அவருடைய சந்தோஷத்தை கெடுத்துபோட முயற்சி பண்ணுகிறாள். கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கிறபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்தாள். தாவீதுராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம் பண்ணுகிறதைக் கண்டு, மீகாள் தன் இருதயத்திலே தாவீதை அவமதித்தாள் *(2சாமு 6:16)*.

தாவீது கர்த்தருக்கு முன்பாக தன் முழுபலத்தோடு குதித்து நடனம்பண்ணுவதைப் பார்த்து, மீகாள் சந்தோஷப்படவில்லை. மீகாள் அதைப் பார்த்து, முதலில் தன் இருதயத்திலே தாவீதை அவமதித்தாள் *(2சாமு 6:16)*. அதன் பின்பு மீகாள் தாவீதிடம் நேருக்கு நேராகவே இதைப்பற்றி பேசுகிறாள்.

"தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டுவந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார்" என்று சொல்லுகிறாள் *(2சாமு 6:20)*.

தாவீது கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக குதித்து நடனம்பண்ணுவது மீகாளுக்கு பிடிக்கவில்லை. இவ்வாறு நடனம்பண்ணுவது ராஜாவின் தகுதிக்கும், அந்தஸ்துக்கும் உகந்ததல்ல என்று மீகாள் சொல்லுகிறாள். மீகாள் தாவீதை முதலில் தன் இருதயத்திலே அவமதித்தாள். அதன் பின்பு அவள் தாவீதுக்கு விரோதமாக, முகமுகமாக, தூஷண வார்த்தைகளைப் பேசுகிறாள்.

தாவீது ஒரு யுத்தவீரர். அவர் ஒரு பராக்கிரமசாலி. இஸ்ரவேலின் ராஜாசனம் தாவீதின் பொறுப்பிலிருக்கிறது. இவ்வளவு உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறவர், ஒரு சாதாரண அற்ப மனுஷரில் ஒருவனைப்போல, கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக, தெருவிலே நடனம்பண்ணிக்கொண்டு வரக்கூடாது என்று மீகாள் நினைக்கிறாள்.

தாவீது இன்னும் தன் வீட்டாரை ஆசீர்வதிக்கவில்லை. தாவீது அவர்களை ஆசீர்வதிக்கும் முன்பாகவே, மீகாள் தன் வார்த்தைகளினால் தாவீதை அவமதிக்கிறாள். தாவீது தன் வீட்டாரைப் பார்ப்பதற்கு முன்பாக, மீகாள் தாவீதைப் பார்க்க வருகிறாள். "இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார்" *(2சாமு 6:20)* என்று மீகாள் சாதுரியமான வார்த்தைகளில் பேசுகிறாள். வஞ்சகப்புகழ்ச்சியில் தாவீதை வசைபாடுகிறாள்.

தாவீது தேவனுடைய பெட்டியின்மீது இவ்வளவு அதிகமான பக்தியைக் காண்பிப்பது மீகாளுக்கு பிடிக்கவில்லை. பெட்டிக்கு முன்பாக குதித்து நடனம்பண்ணுவது, ராஜாவின் அந்தஸ்துக்கு ஏற்றதல்ல என்று மீகாள் நினைக்கிறாள். தாவீதோ கர்த்தருக்கு முன்பாக தன் முழுபலத்தோடும் நடனம்பண்ணுகிறார். தாவீது உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடந்து வரும்போது, தான் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா என்பதையே மறந்துவிடுகிறார்.

தாவீது மீகாள்மீதும், சவுலின் குடும்பத்தார்மீதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார். இஸ்ரவேலின் ராஜாவாக தான் அபிஷேகம்பண்ணப்படும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தன்னோடு கூடயிருக்கவேண்டுமென்று தாவீது விரும்பினார் *(2சாமு 3:13)*. ஆனால் மீகாளோ தாவீதுக்கு நன்றியுள்ளவளாயிருக்கவில்லை. மீகாளின் இருதயத்திலே சவுலின் சுபாவம் காணப்படுகிறது. அவள் தாவீதின் மனைவியாயிருப்பதை விட, சவுலின் குமாரத்தியாகவும், யோனத்தானின் சகோதரியாகவும் இருக்கிறாள். மீகாளின் இருதயத்தில் பெருமையும், ஆணவமும் நிரம்பியிருக்கிறது.

தாவீது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அவர் ஆடிப்பாடுகிறார். அவருடைய பார்வையில் கர்த்தர் மாத்திரமே இருக்கிறார். தன்னைச் சுற்றிலும் யார் இருக்கிறார்கள் என்பதை தாவீது கவனிக்கவில்லை.

தாவீது தன்னை அவமதிக்கிற மீகாளைப் பார்த்து, "உன் தகப்பனைப்பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப்பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்; அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன்" *(2சாமு 6:21,22)* என்று சொல்லுகிறார்.

கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும் என்னும் எண்ணம் மாத்திரமே தாவீதின் மனதில் இருக்கிறது. அவருடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. அவரிடத்தில் மாய்மாலம் ஏதுவுமில்லை. கர்த்தரே தாவீதை இஸ்ரவேலின் ராஜாசனத்தின்மேல் வீற்றிருக்க செய்திருக்கிறார். கர்த்தரே தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்துகொண்டார். சவுலின் விருப்பத்தினாலோ, மீகாளின் விருப்பத்தினாலோ தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாகவில்லை.

மீகாள் தன்னைப்பற்றி நியாயந்தீர்க்க வேண்டியதில்லை என்று தாவீது நினைக்கிறார். கர்த்தரே தன்னை நியாயந்தீர்க்கவேண்டும் என்பது தாவீதின் விருப்பம். கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்துகொண்டார். தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடுகிறார். தாவீது ஆடிப்பாடுவது, மீகாளுக்கு அவமானமாயிருக்கலாம். ஆனால் தாவீது சவுலுக்கு முன்பாக ஆடிப்பாடவில்லை. தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடுகிறார்.

நம்முடைய வார்த்தைகளையும், செய்கைகளையும் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். நாம் எதை செய்தாலும் அதை கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக செய்கிறோம் என்னும் உணர்வோடு செய்யவேண்டும். மனுஷர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்றோ, மனுஷர் நம்மை நிந்திப்பார்கள் என்றோ நாம் கலங்கக்கூடாது. கர்த்தர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார் என்னும் நினைவுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் நம்மை அழைத்த அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். நமக்கு கர்த்தரிடத்தில் பணிவும், பயபக்தியும் இருக்கவேண்டும். அப்போது கர்த்தர் நம்மை உயர்த்துவார். மனுஷர் நம்மைத் தாழ்த்தினாலும், கர்த்தர் நம்மை நிச்சயமாகவே உயர்த்துவார். நம்முடைய காலங்கள் மனுஷருடைய கரத்தில் இல்லை. அவை கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

தாவீது மீகாளிடம் தன்னுடைய முடிவைப்பற்றிச் சொல்லும்போது, அவர் கர்த்தருக்கு முன்பாக தன்னை இன்னும் அதிகமாய்த் தாழ்த்துகிறார். "கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்" என்று தாவீது சொல்லுகிறார். கர்த்தருடைய நாமமகிமைக்காக, கர்த்தரைக் கனம்பண்ண வேண்டும் என்பதற்காக, தாவீது எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்.

மீகாள் தாவீதை நிந்தித்தபோது "அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார்" *(2சாமு 6:20)* என்று சொன்னாள். தாவீதுக்கு தன்னுடைய மேன்மையிலோ, மகிமையிலோ சந்தேகமில்லை. தாவீது மீகாளிடம், "அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன்" *(2சாமு 6:22)* என்று சொல்லுகிறார்.

தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை கர்த்தரும் கனம்பண்ணுவார். தம்மை அசட்டைபண்ணுகிறவர்களை கர்த்தர் கனஈனம்பண்ணுவார். மீகாள் தாவீதை அவமதித்தது கர்த்தருடைய பார்வையில் பிரியமாயில்லை. அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது *(2சாமு 6:23)*.

7 அதிகாரம்

தாவீது தேவனுடைய பெட்டியை சந்தோஷமாய் பராமரிக்கிறார். தேவனுடைய பெட்டி இப்போது திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு வீட்டை கட்டவேண்டுமென்று, தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் தன்னுடைய விருப்பத்தை சொல்லுகிறார் *(1சாமு 7:1,2)*. தாவீதின் விருப்பத்தை நாத்தான் அங்கீகரிக்கிறான் *(1சாமு 7:3)*.

தாவீதின் மனதிலுள்ள விருப்பத்தை நாத்தான் கர்த்தருக்கு அறிவிக்கிறான். கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று *(1சாமு 7:4-17)*.

நாத்தான் தாவீதுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். தாவீது கர்த்தருடைய வார்த்தையை கேட்டு அவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். தேவன் தனக்கு சொன்ன வாக்குத்தத்தங்களை தாவீது நன்றியோடு ஏற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தனக்கு நிறைவேறவேண்டுமென்று தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் *(1சாமு 7:18-29)*.

தேவனுடைய பெட்டி
2சாமு 7:1-3

2சாமு 7:1. கர்த்தர் ராஜாவைச் சுற்றிலும் இருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி, இளைப்பாறப்பண்ணின போது, அவன் தன் வீட்டிலே வாசமாயிருக்கையில்,

2சாமு 7:2. ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே என்றான்.

2சாமு 7:3. அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி: நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே என்றான்.

கர்த்தர் தாவீதை இளைப்பாறப்பண்ணுகிறார். தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் யுத்தமில்லை. அமைதி உண்டாயிற்று. கர்த்தர் தாவீதைச் சுற்றிலுமிருந்த, அவருடைய எல்லா சத்துருக்களுக்கும், அவரை நீங்கலாக்கி இளைப்பாறப்பண்ணுகிறார் *(2சாமு 7:1)*.

தாவீதுக்கு விரோதமாக அவருடைய சத்துருக்கள் யாரும் யுத்தம்பண்ண வரவில்லை. தாவீதும் யுத்தக்களத்திற்கு போகவேண்டிய அவசியமில்லை. தாவீது நீண்டகாலமாக சத்துருக்களோடு யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார். அவருக்கு இளைப்பாறுதல் இல்லாமலிருந்தது. கர்த்தரோ தாவீதை இப்போது இளைப்பாறப்பண்ணுகிறார்.

தாவீது சத்துருக்களோடு பல யுத்தங்களை நடத்தியிருக்கிறார். இப்போது தேசத்திலே யுத்தமில்லாமல் அமைதலாயிருக்கிறது. தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறார். அங்கே இளைப்பாறிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பிரமாணத்தைத் தியானம்பண்ணுகிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அமைதியாகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

தேவனுடைய நாமமகிமைக்காக அவருக்கு ஒரு ஆலயத்தை கட்டியெழுப்பவேண்டும் என்னும் எண்ணம் தாவீதின் மனதில் உண்டாயிற்று. தாவீது, தனக்கு ஒரு வீட்டை கட்டினார். தன்னுடைய வேலையாட்களுக்கு ஒரு பட்டணத்தைக் கட்டினார். தாவீது இப்போது தேவனுடைய பெட்டியை வைப்பதற்கு ஒரு வாசஸ்தலத்தை கட்டவேண்டுமென்று விரும்புகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். தாவீதும் கர்த்தருக்கு நன்றியுள்ளவராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக்கட்டி, தன்னுடைய நன்றியுள்ள இருதயத்தை கர்த்தருக்கு வெளிப்படுத்த விரும்புகிறார். தாவீது கர்த்தரைக் கனம்பண்ணி, அவரை மகிமைப்படுத்த விரும்புகிறார். "நான் கர்த்தருக்காக என்ன செய்வேன்" என்னும் எண்ணமே தாவீதின் மனதில் இருக்கிறது.

தாவீது இப்போது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறார். கர்த்தர் அவரை இளைப்பாறப்பண்ணுகிறார். அமைதியான இந்த சூழ்நிலையில், தாவீது கர்த்தரைப்பற்றி தியானிக்கிறார். கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று யோசிக்கிறார்.

தாவீதின் வீடு கேதுரு மரங்களால் செய்யப்பட்டிருக்கிறது. தேவனுடைய பெட்டியோ திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. தாவீது இவ்விரண்டு வாஸ்தலங்களையும் பார்க்கிறார். தான் பெரிய அரண்மனையில் வாசம்பண்ணும்போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருப்பது, தாவீதின் மனதிற்கு வேதனையைத் தருகிறது.

"கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும். அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணு மட்டும், என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை. என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று, கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனைபண்ணினான்" *(சங் 132:1-5).*

தாவீது கர்த்தர்மீது பயபக்தியாயும், பிரியமாயும் இருக்கிறார். அவர் கர்த்தருக்கு நன்றியுள்ளவராயிருக்கிறார். தாவீது கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசம்பண்ணுகிறார். இது கர்த்தர் அவருக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதம். ஆனால் தேவனுடைய பெட்டியோ திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. இதைப் பார்க்கும்போது தாவீதின் மனது வேதனைப்படுகிறது.

கர்த்தருடைய ஆலயக்கட்டிடம் பாழாய்க்கிடக்கும்போது, நம்முடைய வீடு பிரமாண்டமானதாகவும், அலங்காரமானதாகவும் இருந்தால், நம்முடைய மனதிற்கும் வேதனையாயிருக்கும். நமக்கு கர்த்தர்மீது உண்மையான பக்தியும், அன்பும் இருக்குமென்றால், நாம் பாழாய்க்கிடக்கிற ஆலயத்தைப்பற்றி வேதனையோடு நினைத்துப் பார்ப்போம்.

தாவீது கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசம்பண்ணினாலும், அவருடைய மனதிலே சந்தோஷமில்லை. தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதை நினைத்து அவர் வேதனைப்படுகிறார். தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலத்தை கட்டவேண்டும் என்னும் விருப்பம் தாவீதின் மனதில் உண்டாயிற்று. தேவனுடைய பெட்டி நல்ல ஸ்தலத்திலே வாசம்பண்ணினால்தான், தாவீதால் தன்னுடைய வீட்டிலே சந்தோஷமாய் வாசம்பண்ண முடியும். அதுவரையிலும், தாவீதின் இருதயத்தில் வேதனை இருக்கும்.

தாவீது தன் மனதில் ஏற்பட்ட எண்ணத்தை, தீர்க்கதரிசியாகிய நாத்தானிடத்தில் அறிவிக்கிறார். தீர்க்கதரிசிக்கு தேவனுடைய மனது தெரியும். தாவீது கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய விரும்புகிறார். தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலம் கட்டுவது, மெய்யாகவே நல்ல காரியம் தான். ஆனால் இந்த வாசஸ்தலத்தைக் கட்டுவது தேவனுடைய சித்தமானதா, இல்லையா என்பது தாவீதுக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

தேவனுடைய பெட்டி இப்போது திரைச்சீலைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. தாவீதோ கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசமாயிருக்கிறார். தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது நல்ல வேலையாகயிருந்தாலும், அது கர்த்தருக்கு சித்தமான வேலையாக இருந்தால் மாத்திரமே, தாவீது அதைக் கட்ட விரும்புகிறார். கர்த்தருடைய சித்தத்தை தெரிந்துகொள்வதற்காக, தன்னுடைய மனதிலே ஏற்பட்ட யோசனையை, தாவீது தீர்க்கதரிசியாகிய நாத்தானிடத்தில் சொல்லுகிறார்.

ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: "பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே" *(2சாமு 7:2)* என்று சொல்லுகிறார். அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி: "நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே" *(2சாமு 7:3)* என்று நாத்தான் தாவீதுக்கு ஆதரவாகப் பேசுகிறான்.

தாவீதின் மனதிலுள்ள சிந்தனை நாத்தானுக்கு தெரிந்திருக்கிறது. தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது நல்ல வேலை என்றும், அதை தாவீது கட்ட ஆரம்பிக்கலாம் என்றும், தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதை உற்சாகப்படுத்துகிறான்.

நாத்தானைப்போலவே நாமும் மற்றவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் நல்ல நோக்கங்களோடு, நல்ல திட்டங்களை நிறைவேற்றும்போது நாமும் அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். நல்ல வேலைகள் எங்கே நடைபெற்றாலும், அது நல்லதுதான்.

நாத்தான் இப்போது தாவீது ராஜாவிடம் பேசும்போது, கர்த்தருடைய நாமத்தினால் பேசவில்லை. அவன் தன்னுடைய சொந்த வார்த்தைகளைப் பேசுகிறான். நாத்தான் இப்போது தாவீதிடம் ஒரு தீர்க்கதரிசியாகப் பேசவில்லை. அவன் ஒரு புத்தியுள்ள மனுஷனாகவும், ஒரு நல்ல மனுஷனாகவும் பேசுகிறான்.

கர்த்தருடைய வார்த்தை 2சாமு 7:4-17

2சாமு 7:4. அன்று ராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி அவர்:

2சாமு 7:5. நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?

2சாமு 7:6. நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன்.

2சாமு 7:7. நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ?

2சாமு 7:8. இப்போதும் நீ என் தாசனாகிய தாவீதை நோக்கி: சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீ இஸ்ரவேல் என்கிற என் ஜனங்களுக்கு அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டுமந்தையை விட்டு எடுத்து,

2சாமு 7:9. நீ போன எவ்விடத்திலும் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்.

2சாமு 7:10. நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன்.

2சாமு 7:11. உன்னுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன்; இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்.

2சாமு 7:12. உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.

2சாமு 7:13. அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

2சாமு 7:14. நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்.

2சாமு 7:15. உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்.

2சாமு 7:16. உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச்சொன்னார்.

2சாமு 7:17. நாத்தான் இந்த எல்லா வார்த்தைகளின்படியும், இந்த எல்லாத் தரிசனத்தின்படியும், தாவீதுக்குச் சொன்னான்.

அன்று இராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று. கர்த்தர் தாவீதுக்கு கிருபையாய் இரங்குகிறார். தாவீதைப்பற்றிய காரியங்கள் நாத்தானுக்கு பூரணமாக வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் நாத்தானை தாவீதிடத்தில் அனுப்புகிறார். கர்த்தர் நாத்தானுக்கு தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தி, அதை தாவீதுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலம் கட்ட வேண்டுமென்று விரும்புகிறார். நாத்தானும் தாவீதிடம், "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ள படியெல்லாம் செய்யும்" என்று சொல்லி, தாவீதின் யோசனையை அங்கீகரிக்கிறான். ஆனால் கர்த்தர் தாவீதின் இருதயத்திலுள்ள யோசனையை அங்கீகரிக்கவில்லை. தாவீது உடன்படிக்கைப் பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது கர்த்தருக்கு சித்தமாயில்லை.

தாவீது நாத்தானிடம் தன்னுடைய இருதயத்திலுள்ள யோசனையைச் சொன்னபோது, நாத்தான் அந்த யோசனையை உடனே அங்கீகரிக்கிறான். ஆனால் கர்த்தரோ தாவீதினுடைய இருதயத்தின் யோசனையை அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் சொன்ன வார்த்தையை நாத்தான் தாவீதுக்கு சொல்லவேண்டும். நாத்தான் தாவீதுக்கு ஏற்கெனவே சொன்ன வார்த்தையும், இப்போது கர்த்தர் தாவீதுக்கு நாத்தான் மூலமாய் சொல்லச் சொல்லுகிற வார்த்தையும் வித்தியாசமாயிருக்கிறது.

நாத்தான் கர்த்தருடைய வார்த்தையை தாவீதுக்கு சொல்லவேண்டும். அவன் சற்று நேரத்திற்கு முன்பு தாவீதிடம் "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ளபடியெல்லாம் செய்யும்" என்று சொன்னான். இப்போது நாத்தான் தாவீதிடம்போய், "உம்முடைய இருதயத்திலுள்ளபடி செய்யக்கூடாது" என்று சொல்லவேண்டும். நாத்தானுடைய வார்த்தையைக் கேட்டு தாவீதுக்கு குழப்பம் ஏற்படும். அவர் நாத்தான்மீது வைத்திருக்கும் மதிப்பும் மரியாதையும் குறைந்துபோகும். ஆனாலும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தும் வார்த்தைகளை அப்படியே சொல்லவேண்டும்.

நாத்தான் தாவீதை நோக்கி, "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ளபடியெல்லாம் செய்யும்" என்று சொன்ன வார்த்தை, கர்த்தருக்கு சித்தமான வார்த்தையல்ல. நாத்தானோ, தான் சொன்னது கர்த்தருக்கு சித்தமானதல்ல என்பதை அறிந்துகொள்ளாமலேயே, அப்படி சொல்லிவிட்டான். நாத்தான் தாவீதிடம் தப்பிதமாகப் பேசிவிட்டான்.

ஆனாலும் கர்த்தர் நாத்தானை சந்திக்கிறார். நாத்தானுடைய தப்பிதத்தை அவனுக்கு உணர்த்துகிறார். அன்று இராத்திரியிலேயே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று. நாத்தான் தாவீதுக்கு அனுமதி கொடுத்ததினால், தாவீது தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டும் வேலையை உடனே ஆரம்பித்துவிடுவார். நாத்தான் இப்போது தாவீதுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, அந்த வேலையை தடுத்து நிறுத்தவேண்டும்.

தாவீது தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டக்கூடாது என்னும் சிந்தனை, நாத்தானுடைய மனதில் இதுவரையிலும் வரவில்லை. ஏனென்றால், தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது ஒரு நல்ல வேலை. இந்த வேலை கர்த்தருக்கு பிரியமாயிருக்கும் என்று நாத்தான் நினைத்தான். ஆனால் தாவீது தம்முடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது, தமக்கு சித்தமல்ல என்பதை, கர்த்தர் நாத்தானுக்கு வெளிப்படுத்துகிறார்.

தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலம் கட்டப்படுவதை கர்த்தர் தடைபண்ணவில்லை. ஆனால் அந்த வாசஸ்தலத்தை தாவீது கட்டக்கூடாது என்று, கர்த்தர் தாவீதை தடைபண்ணுகிறார். கர்த்தர் எல்லா காரியங்களையும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நடத்துகிறவர். அவர் யோசனையில் பெரியவர். கர்த்தருடைய செய்கைகள் எல்லாமே நீதியுள்ளவை.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தில் இருந்தது. ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்லகாரியந்தான். ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றார்'' *(1இராஜா 8:17-19)*.

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது நல்ல காரியம் தான் என்பதை கர்த்தரும் அங்கீகரிக்கிறார். ஆனால் அந்த ஆலயத்தை தாவீது கட்டுவதை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் நாத்தானிடம், "நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?'' *(2சாமு 7:5)* என்று சொல்லச் சொல்லுகிறார்.

"ஆலயத்தை நீ எனக்கு கட்டுவாயோ'' என்னும் வாக்கியத்திற்கு, "ஆலயத்தை நீ எனக்கு கட்டமாட்டாய்'' என்று பொருள். "அன்று ராத்திரியிலே, தேவனுடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, அவர்: நீ போய், என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்'' *(1நாளா 17:3,4)* என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது நல்ல காரியமாயிருந்தாலும், தாவீது அந்த ஆலயத்தைக் கர்த்தருக்கு கட்டமாட்டார். கர்த்தர் தாவீதைக் குறித்து வேறு திட்டங்கள் வைத்திருக்கிறார். தாவீது முதலாவதாக, கர்த்தர் அவருக்கு நியமித்திருக்கிற வேலைகளை செய்யவேண்டும்.

தாவீது ஒரு யுத்தவீரர். அவர் ஒரு பராக்கிரமசாலி. அவர் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணி, இஸ்ரவேலின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணவேண்டும். இஸ்ரவேலின் காணியாட்சியில் தங்கியிருக்கிற புறஜாதியாரை, தாவீது முறியடிக்கவேண்டும். அந்நியரை இஸ்ரவேல் தேசத்தைவிட்டு துரத்தவேண்டும். இது கர்த்தருடைய சித்தம்.

தாவீது இனிமையான சங்கீதங்களை பாடுகிறவர். அவர் கர்த்தரைத் துதித்துப்பாடும் சங்கீதங்களை இயற்றவேண்டும். தாவீது கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டக்கூடாது. ஆனாலும் கர்த்தருக்காக கட்டப்பட்டிருக்கும் ஆலயத்தில், தாவீது எழுதின சங்கீதங்கள் பாடப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

தாவீது லேவியரின் வகுப்புகளை தீர்மானம்பண்ணவேண்டும். ஆலயத்தில் ஊழியங்களை ஒழுங்கு செய்யவேண்டும். தாவீதைவிட, அவருடைய குமாரன் கர்த்தருக்கு நேர்த்தியான ஆலயத்தைக் கட்டுவார். ஆலயம் கட்டுவதற்கு தாவீதின் குமாரனிடத்தில் தேவையான பொக்கிஷம் இருக்கும். தம்முடைய ஆலயத்தைக் கட்டும் பொறுப்பை, தாவீதின் குமாரனிடத்தில் கொடுக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

கர்த்தரிடத்திலிருந்து வரங்களையும் தாலந்துகளையும் பெற்றிருக்கிறவர்கள் எல்லோரும், கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஆலயம், அவருக்கு சித்தமான வேளையில் கட்டியெழுப்பப்படும். அதை கர்த்தருடைய கிருபையினால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடித்துவிடலாம்.

கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும்போது அதற்கு ஆயத்த வேலைகளையும் செய்யவேண்டும். தாவீது கர்த்தருக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்று யோசித்தார். ஆனால் அதற்குரிய ஆயத்த வேலைகளை செய்யவேண்டும் என்னும் யோசனை தாவீதின் இருதயத்தில் ஏற்படவில்லை. இப்போது கர்த்தர் அதுபற்றி நாத்தானுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் எந்த ஒரு ஆலயத்திலும் வாசம்பண்ணவில்லை. அவர் கூடாரத்திலும், வாசஸ்தலத்திலும் உலாவினார். கர்த்தர் நாத்தானிடம், தம்முடைய வாசஸ்தலத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தர் நாத்தானிடம் "நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன்" *(2சாமு 7:6)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் ஆசரிப்புக்கூடாரத்தில் வாசம்பண்ணினார். இதுவரையிலும் ஆசாரிப்புக்கூடாரத்தில் வாசம்பண்ணின கர்த்தரால், இன்னும் கொஞ்சகாலம் அங்கே வாசம்பண்ண முடியும். கர்த்தர் மனுஷர் பார்க்கிற பிரகாரமாக பார்ப்பதில்லை. ஆலயக்கட்டிடம் அழகாயிருக்கவேண்டும் என்றும், அது ஆடம்பரமாய் அழகுபடுத்தப்படவேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். புறம்பான அழகே நம்முடைய கண்களுக்கு பிரத்தியட்சமாய்த் தெரிகிறது.

கர்த்தரோ தம்முடைய ஆலயத்தின் வெளித்தோற்றம் அலங்காரமாயிருக்கிறதா, அது ஆடம்பரமாய் அழகுபடுத்தப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்ப்பதில்லை. கர்த்தர் ஆலயத்தின் பரிசுத்தத்தைப் பார்க்கிறார். கர்த்தர் பரிசுத்தர். அவருடைய வாசஸ்தலமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஆலயத்தில், அவரைத் தொழுதுகொள்ள வருகிறவர்களும், பரிசுத்தத்தோடு வரவேண்டும். கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம். இதுவே அவருக்கு பிரியமானது.

தேவனுடைய பெட்டி இதுவரையிலும் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தது. கர்த்தருடைய பிரசன்னம் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்தது. கர்த்தர் கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினார் ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட்டால்தான், அங்கே தம்முடைய பிரசன்னம் இருக்கும் என்று கர்த்தர் எங்கும் சொல்லவில்லை. அவர் பெரிய ஆலயக்கட்டிடத்திலிருப்பதுபோல, சாதாரண கூடாரத்திலும் இருப்பார். கர்த்தர் தம்மை ஆராதிக்க வருகிற ஜனங்கள் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி எங்கே இருக்கிறதோ அங்கே தேவனுடைய பிரசன்னமும் இருக்கும். பெட்டி ஆசாரிப்புக்கூடாரத்திலிருந்தாலும், அது தேவாலயத்திலிருந்தாலும், கர்த்தருடைய பிரசன்னம் அவருடைய பெட்டி இருக்கும் இடத்தில் இருக்கும்.

கிறிஸ்துவானவர் உடன்படிக்கைப் பெட்டிக்கு அடையாளமாயிருக்கிறார். அவர் இந்தப் பூமியிலிருந்த வரையிலும் கூடாரத்திலே உலாவினார். அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் நன்மை செய்கிறவராக சுற்றி அலைந்தார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த காலம் வரையிலும் அவருக்கென்று சொந்தமாக வீடு இல்லை. அவர் வானத்திலே பரமேறிப்போகும் வரையிலும், இந்தப் பூமியிலே அவருக்கு வீடு இல்லை. பரலோகத்திலே, தம்முடைய பிதாவின் வீட்டில், தமக்கு வாசஸ்தலம் இருப்பதாக இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவானவருடைய பிதாவின் வீட்டிலே, பரலோகத்திலே, அநேக வாசஸ்தலங்கள் உண்டு. குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்திலே அமர்ந்திருக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில், இயேசுகிறிஸ்துவின் சபை தேவனுடைய பெட்டியைப்போல இருக்கிறது. பெட்டி கூடாரத்திலிருப்பதுபோல, கர்த்தருடைய சபையும் கூடாரத்திலிருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சம் நித்திய நகரமல்ல. பரலோகமே நமக்கு நித்திய நகரம்.

தாவீது தன்னுடைய சங்கீதங்களில், ஆசரிப்புக்கூடாரத்தை, ஆலயம் என்று பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்.

"நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்ளுவேன்" *(சங் 5:7).*

"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" *(சங் 27:4).*

"கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்; அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்" *(சங் 29:9).*

"உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்" *(சங் 65:4).*

"உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராகநான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்" *(சங் 138:2).*

தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருந்தாலும், கர்த்தருடைய பிரசன்னம் அங்கேயும் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் எங்கே இருக்கிறதோ, அதுவே அவருடைய வாசஸ்தலம். அதுவே கர்த்தருடைய கூடாரம். அதுவே கர்த்தருடைய ஆலயம்.

கர்த்தர் தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று, இஸ்ரவேலின் செங்கோலைப் பிடித்திருக்கிற எந்த ராஜாவினிடத்திலும் சொல்லவில்லை. கர்த்தர் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளிடத்திலும், தமக்கு ஒரு ஆலயம் கட்டப்படவேண்டும் என்று சொன்னதில்லை.

"நான் சகல இஸ்ரவேலோடும் உலாவி வந்த எவ்விடத்திலாகிலும், நான் என் ஜனத்தை மேய்க்கக் கற்பித்த இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் யாதொருவனை நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுருமரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று யாதொரு வார்த்தை சொன்னது உண்டோ?" *(1நாளா 17:6).*

செங்கோல் என்னும் வார்த்தை, ராஜாக்களையும், பிரபுக்களையும் குறிக்கிறது.

"அதின் கொடிகளிலுள்ள ஒரு கொப்பிலிருந்து அக்கினி புறப்பட்டு, அதின் கனியைப் பட்சித்தது; ஆளுகிற செங்கோலுக்கேற்ற பலத்த கொப்பு இனி அதில் இல்லையென்று சொல்; இதுவே புலம்பல், இதுவே புலம்பலாயிருக்கும் என்றார்" *(எசே 19:14).*

"அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்" *(எண் 24:17)*.

கர்த்தர் நாத்தானை நோக்கி, "நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ?" *(2சாமு 7:7)* என்று கேட்கிறார்.

கர்த்தர் நாத்தானிடம் தாம் வெளிப்படுத்தும் வார்த்தைகளை, தம்முடைய தாசனாகிய தாவீதுக்கு சொல்ல சொல்லுகிறார். கர்த்தர் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். நாத்தான் அந்த நன்மைகளை தாவீதுக்கு நினைவுபடுத்த வேண்டும்.

தாவீது இப்போது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். இதற்கு முன்பு அவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். கர்த்தர் தாவீதை சாதாரண நிலமையிலிருந்து, உயர்ந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறார்.

"நீ இஸ்ரவேல் என்கிற என் ஜனங்களுக்கு அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டுமந்தையை விட்டு எடுத்து, நீ போன எவ்விடத்திலும் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்" *(2சாமு 7:8,9)* என்று கர்த்தர் நாத்தானிடம், தாவீதுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதை சாதாரண நிலையிலிருந்து உயர்த்தியது மாத்திரமல்ல, அவர் தாவீதின் சத்துருக்களையெல்லாம் அவருக்கு முன்பாக நிர்மூலமாக்கினார். தாவீது போன எவ்விடத்திலும் கர்த்தர் அவரோடு கூடயிருந்து, அவரைப் பாதுகாத்தார். கர்த்தர் தாவீதினுடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதித்தார். கர்த்தருடைய கிருபையினால் தாவீது இம்மட்டுமாக செழித்திருக்கிறார்.

கர்த்தர் தாவீதுக்கு பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உண்டாக்கியிருக்கிறார். கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இதனால் தாவீதுக்கு இஸ்ரவேலின்மேல் அதிகாரமும் ஆளுகையும் கிடைத்திருக்கிறது. கர்த்தர் தாவீதை இஸ்ரவேல் தேசத்தின்மேல் உயர்த்தியதோடு, மற்ற தேசங்களிலும் உயர்த்துகிறார். தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்திலே, கனமும் மகிமையும், மதிப்பும் மரியாதையும் உண்டானதுபோல, மற்ற தேசங்கள் மத்தியிலும் அவருக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. கர்த்தர் தாவீதுக்கு பெரிய நாமத்தை உண்டாக்கியிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருடைய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலுக்கு தம்முடைய வாக்குத்தத்தைக் கொடுத்து, தம்முடைய வார்த்தைகளை அவர்கள் மத்தியிலே நிறைவேற்றுகிறார். கர்த்தர் தாவீதுக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுப்பதற்கு முன்பாகவே, அவர் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேறும் வண்ணமாக, அவர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக கொடுத்திருக்கிறார். தாவீதின் ஆளுகையில் இஸ்ரவேல் ஜனத்தார் பாதுகாப்பாயிருப்பார்கள். அவர்களுக்கு அமைதியும் ஆறுதலும் உண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன்" *(2சாமு 7:10)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம். இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களால் சிறுமைப்படக்கூடாது. நியாயக்கேட்டின் மக்கள் அவர்களை துன்பப்படுத்தக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். "நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்" *(சங் 128:6)*.

கானான் தேசம் பாலும் தேனும் ஒடுகிற ஆசீர்வாதமான தேசம். கானான் தேசத்திலே சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியிருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனத்தார், நியாயக்கேட்டின் மக்களால், இனிமேல் சிறுமைப்படமாட்டார்கள். சத்துருக்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை, கானான் தேசத்திலிருந்து துரத்திவிடமாட்டார்கள். புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய ஜனத்தை ஒடுக்கி அடிமைப்படுத்தமாட்டார்கள். "உன்னுடைய எல்லா சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன்" *(2சாமு 7:11)* என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைக் குறித்து வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலுக்கு சத்துருவாயிருக்கிறவர்கள், தாவீதுக்கும் சத்துருவாயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் இங்கு, "உன்னுடைய எல்லா சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன்" என்று சொல்லுவது, தாவீதுக்கு சொல்லப்படும் விசேஷித்த வாக்குத்தத்தமாகவும் இருக்கிறது.

நியாயக்கேட்டின் மக்கள் என்பது பெலிஸ்தரைக் குறிக்கிற வார்த்தை. இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, நீண்டகாலமாக வாதையாகவும், கொள்ளைநோயாகவும் இருந்தார்கள். பெலிஸ்தர் இனிமேல் இஸ்ரவேல் புத்திரரை சிறுமைப்படுத்தமாட்டார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். அவர்கள் சிறுமைப்படமாட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன வாக்குத்தத்ததை, இங்கு மறுபடியுமாய் சொல்லிவிட்டு, அவர் தாவீதையும், அவருடைய குடும்பத்தாரையும் ஆசீர்வதிக்கிறார். தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறார். கர்த்தரோ தாவீதுக்கு ஒரு வீட்டை உண்டுபண்ண ஆயத்தமாயிருக்கிறார். "இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்" *(2சாமு 7:11)*.

கர்த்தர் இங்கு சொல்லும் வாக்குத்தத்தங்களில் சில, தாவீதின் குமாரனாகிய சாலொமோனுக்கு சொல்லப்படுகிறது. தாவீதுக்கு பின்பு, சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிறார். கர்த்தர் இங்கு சொல்லும் வாக்குத்தத்தங்கள், யூதாவின் சிங்காசனத்தில் அமருகிற எல்லா ராஜாக்களுக்கும் பொதுவாக சொல்லப்படுகிறது.

கர்த்தர் தாவீதுக்கு, "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்" *(2சாமு 7:12)* என்று தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். தாவீதுக்கு பின்பு அவருடைய கர்ப்பப்பிறப்பாகிய சாலொமோனுக்கு, கர்த்தர் ராஜ்யத்தை நிலைப்படுத்துவார். கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவார் *(2சாமு 7:13)*.

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவார் (2சாமு 7:13). தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்று விரும்பினார். ஆனால் கர்த்தர் தாவீதுக்கு அந்த சிலாக்கியத்தைக் கொடுக்கவில்லை. ஆனாலும் தாவீது கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான திட்டங்களையும், பொருட்களையும் சேகரித்து கொடுப்பார். தாவீதின் குமாரனாகிய சாலொமோனே, கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவார்.

கர்த்தர் தாவீதை ஆசீர்வதிப்பதுபோல, தாவீதின் குமாரனாகிய சாலொமோனையும் ஆசீர்வதிப்பார். கர்த்தர் சாலொமோனோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்வார். சாலொமோன் கர்த்தருக்கு சுவீகார புத்திரனாகயிருப்பார். "நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்" (2சாமு 7:14) என்று கர்த்தர் சாலொமோனைக் குறித்து சொல்லுகிறார்.

கர்த்தர் நம்முடைய பிதாவாயிருப்பது, நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். நாம் அவருடைய பிள்ளைகளாயிருப்பது நம்முடைய பாக்கியம். விசுவாசிகளாகிய நமக்கு, இதைவிட பெரிய ஆசீர்வாதமோ, சிலாக்கியமோ, பாக்கியமோ வேறு எதுவும் இருக்க முடியாது.

பிதாவாகிய தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் இங்கு ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். "அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்" (2சாமு 7:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை காயப்படுத்தும் நோக்கத்தோடு அடிக்கமாட்டார். அவர் நம்மை மென்மையாக கண்டித்து திருத்துவார். தங்கள் பிள்ளைகளை சிட்சியாத தகப்பன் யாருமில்லை.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சிட்சித்தாலும், அடித்தாலும், அவர்களை தம்மைவிட்டு விலக்கிவிடமாட்டார். "உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்" (2சாமு 7:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள், தாவீதின் குமாரனாகிய சாலொமோனுக்கு விசேஷமாகச் சொல்லப்பட்டாலும், இந்த வாக்குத்தத்தங்கள், கர்த்தருடைய பிள்ளைகளாகிய விசுவாசிகள் அனைவருக்கும் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்மைக் கைவிடாத தேவனாயிருக்கிறார்.

ரெகொபெயாமின் ஆட்சிக்காலத்தில், இஸ்ரவேல் புத்திரரில் பத்துக்கோத்திரத்தார், தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, தாவீதின் ராஜாசனத்தை விட்டுப் பிரிந்துபோனார்கள். அவர்களுடைய மீறுதல்களினிமித்தம் கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். ஆனாலும் தாவீதின் குடும்பத்தாரோடு இரண்டு கோத்திரத்தார் எப்போதும் கூடவே இருந்தார்கள். இவர்கள் தாவீதின் குடும்பத்தைவிட்டு விலகி போகவில்லை.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தார். தாவீதுக்கு பின்பு, அவருடைய குமாரன் சாலொமோனும் சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்தார். ஆனால் சாலொமோனுக்கு பின்பு, அவருடைய குமாரன் ரெகொபெயாமின் காலத்திலே சமஸ்த இஸ்ரவேல் தேசம் வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும், இரண்டாய்ப் பிரிந்தது. தாவீதின் குடும்பத்தார், தெற்கு யூதாதேசத்திலுள்ள இரண்டு கோத்திரத்தாரை மாத்திரமே ஆட்சி செய்தார்கள்.

தாவீதின் ராஜாசனம் எண்ணிக்கையில் குறைந்துபோயிற்று. ஆனாலும் தேவனுடைய கிருபையும் இரக்கமும், தாவீதின் சந்ததியாரிடத்தில் தங்கியிருக்கிறது. தாவீதின் குடும்பத்தார் எண்ணிக்கையில் குறைந்துபோனாலும், கர்த்தருடைய கிருபை அவர்களைவிட்டு விலக்கப்படவில்லை. "உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்" (2சாமு 7:15) என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள், தாவீதின் குமாரனாகிய சாலொமோனோடு தொடர்புடையதாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தாவீதின் குமாரனாயிருக்கிறார். கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்களெல்லாம், இயேசுகிறிஸ்துவில் பூரணமாய் நிறைவேறும்.

"பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார். அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்" (அப் 13:22,23).

கர்த்தர், "நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான்" (2சாமு 7:14) என்று தாவீதின் குமாரனுக்கு வாக்குப்பண்ணினார். இந்த வாக்குத்தத்தம், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு சொல்லப்பட்டிருக்கிறது என்று, அப்போஸ்தலர்கள் சாட்சியாய் அறிவித்தார்கள்.

"எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?" (எபி 1:5).

கர்த்தர் தாவீதின் குமாரனுடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தைக் குறித்து வாக்குத்தத்தமாய்ச் சொல்லும்போது, "அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" (2சாமு 7:13) என்றும், "உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" (2சாமு 7:16) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம் தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் மாத்திரமே பொருந்தும். தாவீதின் குடும்பத்தார் இஸ்ரவேல் தேசத்தை இப்போது ஆளுகை செய்யவில்லை. தாவீதின் ராஜ்யம் எப்போதோ முடிந்துபோயிற்று. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் மாத்திரமே, இன்றும் நிலைத்திருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் மாத்திரமே, என்றும் நிலைத்திருக்கும்.

கர்த்தர் தாவீதைக் குறித்து தம்முடைய வார்த்தைகளை நாத்தானுக்கு வெளிப்படுத்துகிறார். நாத்தான் இந்த எல்லா வார்த்தைகளின்படியும், இந்த எல்லாத் தரிசனத்தின்படியும், தாவீதுக்குச் சொல்லுகிறான் (2சாமு 7:17).

நாத்தான் ஆரம்பத்திலே தாவீதை நோக்கி "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ளபடியெல்லாம் செய்யும்" என்று சொன்னான். ஆனால் இப்போது, தான் தாவீதுக்கு ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளுக்கு, முரணாகச் சொல்லுகிறான். நாத்தான் முதலில் சொன்னது அவனுடைய சொந்த வார்த்தை. நாத்தான் இப்போது சொல்லுவது கர்த்தருடைய வார்த்தை.

தமக்கு ஆலயம் கட்ட கர்த்தர் தாவீதுக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய சந்ததிக்கும் தம்முடைய கிருபைகளையும், வாக்குத்தத்தங்களையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் ஏற்ற காலத்தில் நிறைவேறும்.

தாவீதின் ஜெபம்
2சாமு 7:18-29

2சாமு 7:18. அப்பொழுது தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?

2சாமு 7:19. கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குச் கொஞ்சகாரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச்செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே.

2சாமு 7:20. இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர்.

2சாமு 7:21. உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர்.

2சாமு 7:22. ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும், தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை.

2சாமு 7:23. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும் தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுகிறதற்கும் ஏற்பட்டாரே; தேவரீர் எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்த உம்முடைய ஜனத்திற்குமுன்பாகப் பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தி, உம்முடைய தேசத்திற்கும், அதிலிருந்த ஜாதிகளுக்கும், அவர்கள் தேவர்களுக்கும், உமது மகிமையை விளங்கச்செய்து,

2சாமு 7:24. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு அவர்களைத் திடப்படுத்தி, கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்குத் தேவனானீர்.

2சாமு 7:25. இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும்.

2சாமு 7:26. அப்படியே சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் தேவனானவர் என்று சொல்லி, உம்முடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படுவதாக; உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக.

2சாமு 7:27. உனக்கு வீடுகட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர்; ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது.

2சாமு 7:28. இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே, நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்; தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம்பண்ணினீர்.

2சாமு 7:29. இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக என்றான்.

கர்த்தர் நாத்தான் மூலமாய் தம்முடைய செய்தியை தாவீதுக்கு அறிவிக்கிறார். கர்த்தர் சொல்லுகிற செய்தியையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் தாவீது நன்றியுள்ள இருதயத்தோடு ஏற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய கிருபைக்காக தாவீது அவருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறார்.

நாத்தான் கர்த்தருடைய வார்த்தைகளை தாவீதுக்கு சொன்னபோது, தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?" (2சாமு 7:18) என்று கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக உட்பிரவேசிக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம். தாவீது, ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக உட்பிரவேசிக்கிறார்.

தாவீது ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்து, "கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அமர்ந்து" என்று மூலபாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறவர்கள், முழங்கால் படியிட்டோ அல்லது, நின்றுகொண்டோ ஜெபம்பண்ணுவது வழக்கம். தாவீது "கர்த்தருடைய சமுகத்திலிருந்து" (2சாமு 7:18) என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது கர்த்தருக்கு முன்பாக அமர்ந்திருந்தாரா அல்லது நின்றுகொண்டு ஜெபம்பண்ணினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தாவீது கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் ஏறெடுப்பதற்கு முன்பாக, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அமைதியாக காத்திருக்கிறார். கர்த்தருடைய மகிமையைப்பற்றியும், அவருடைய மகத்துவங்களைப்பற்றியும் அமைதியாக தியானிக்கிறார். தாவீது கர்த்தரைப்பற்றி இவ்வாறு ஜெபம்பண்ணுவது வழக்கம். அவர் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்து கர்த்தருடைய சமுகத்திலே நீண்ட நேரம் ஜெபம்பண்ணுவது வழக்கமாயிருக்கிறது.

தாவீதின் இருதயத்தில், கர்த்தர்மீது பயமும் பக்தியும் நிரம்பியிருக்கிறது. அவர் கர்த்தர்மீது பிரியமாயிருக்கிறார். தாவீது கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். தாவீது தன்னுடைய ஜெபத்தை ஆரம்பிக்கும்போதே, "நான் எம்மாத்திரம், என் வீடும் எம்மாத்திரம்" என்று பணிவோடு சொல்லுகிறார்.

தாவீதின் இருதயத்தில் மனத்தாழ்மையிருக்கிறது. தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னையும் தாழ்த்துகிறார், தன்னுடைய குடும்பத்தையும் தாழ்த்துகிறார். கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய குடும்பத்திற்கும் நன்மையான வாக்குத்தத்தங்களைச் சொல்லியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தங்களையெல்லாம் பெற்றுக்கொள்வதற்கு, தானும், தன்னுடைய வீடும் எம்மாத்திரம் என்று, தாவீது கர்த்தருக்கு முன்பாக மிகவும் பணிவோடு கேட்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே தாவீது உயர்ந்தவராகவும், உத்தமராகவும் இருக்கிறார். அவர் ஒரு பராக்கிரமசாலி. தாவீது நல்ல யுத்தவீரர். தேசத்திலே மிகவும் பிரயோஜனமான நபர்களில் தாவீதும் ஒருவர். தாவீதின் சரீரமும், அவருடைய மனதும் மிகவும் நேர்த்தியாயிருக்கிறது. தாவீது இஸ்ரவேலிலுள்ள சாதாரண மனுஷரைப்போல் இல்லாமல், அவர் எல்லா விஷயங்களிலும் உயர்ந்தவராகவும், மேலானவராகவும் இருக்கிறார்.

ஆனாலும் தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து, "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்?" (2சாமு 7:18) என்று கேட்கிறார். கர்த்தர் தன்னை நினைத்துப் பார்ப்பதற்கு, தான் அபாத்திரனாயிருப்பதாக, தாவீது மிகுந்த மனத்தாழ்மையோடு அறிக்கை பண்ணுகிறார்.

தாவீதின் குடும்பத்தாரும் இஸ்ரவேல் தேசத்திலே விசேஷமானவர்களாயிருக்கிறார்கள். ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாவீதோடு சம்பந்தம் பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் தாவீது, கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தும்போது, தன்னுடைய வீட்டையும் தாழ்த்துகிறார். "என் வீடும் எம்மாத்திரம்" என்று தாவீது கர்த்தருக்கு முன்பாக பணிவோடு சொல்லுகிறார்.

தாவீதின் குடும்பத்தார் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இந்தக் கோத்திரத்திலிருந்து பிரபுக்களும், ராஜாக்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் தாவீதோ தன்னுடைய குடும்பத்தாரைப்பற்றி மிகவும் தாழ்மையாய் நினைக்கிறார். கிதியோன் தன்னைப்பற்றியும், தன் குடும்பத்தைப்பற்றியும் மிகுந்த மனத்தாழ்மையோடு சொன்னார்.

"அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" (நியா 6:15).

கிதியோனைப்போலவே, தாவீதும் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். விசுவாசிகள் தங்களை கர்த்தருடைய சமுகத்திலே உயர்த்தக்கூடாது. நம்மிடத்தில் சுயபெருமை காணப்படக்கூடாது. கர்த்தருக்கு முன்பாக நாம் வரும்போது, நம்மை வெறுமையாக்கி தாழ்த்தவேண்டும்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தினாலும், அவர் கர்த்தரை கனம்பண்ணுகிறார். கர்த்தரைக் குறித்து பயபக்தியான வார்த்தைகளைப் பேசுகிறார். கர்த்தர் தாவீதை இதுவரைக்கும் கொண்டு வந்திருக்கிறார். கர்த்தர் அவரை இதுவரைக்கும் கனப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு இதுவரைக்கும் ராஜாசனத்தைக் கொடுத்திருக்கிறார்.

தாவீதின் சொந்த முயற்சியினாலோ, பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ, இந்த சிலாக்கியங்கள் அவருக்கு கிடைக்கவில்லை. இது கர்த்தருடைய கிருபை. கர்த்தருடைய உதவி நமக்கு கிடைக்கவில்லையென்றால்,நாம் ஒன்றுமில்லை.

கர்த்தர் தாவீதுக்கு ஏற்கெனவே, அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் இன்னும் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்யப்போவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் அவருக்கு ஏற்கெனவே அநேக நன்மைகளை செய்திருந்தாலும், அவையெல்லாம் கர்த்தருடைய பார்வையிலே ஒன்றும் இல்லாததுபோலிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் தாவீதுக்கு இன்னும் ஏராளமான நன்மைகளை செய்யப்போவதாக வாக்குப்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி, "கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குச் கொஞ்சகாரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச்செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே" (2சாமு 7:19) என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு மனுஷர் முறைமையாய்ச் சொன்னார். தாவீது எதிர்பார்த்திராத காரியங்களையெல்லாம், வெகுதூரமாயிருக்கும் காலத்து செய்தியையெல்லாம், கர்த்தர் அவருக்கு சொன்னார். கர்த்தரே மனுஷனை சிருஷ்டித்தவர். கர்த்தர் மனுஷனுடைய பாவத்தை மன்னிப்பதற்காக, தம்முடைய சொந்த இரத்தத்தையே கிரயமாகச் செலுத்தி அவனை மீட்டுக்கொண்டார். கர்த்தர் தம்முடைய இரத்தத்தினால் மனுஷனை சுத்தப்படுத்தி, அவனை தமக்கு அருகாமையில் அழைத்துக்கொண்டார். கர்த்தர் மனுஷனோடு உடன்படிக்கை பண்ணினார். கர்த்தர் மனுஷனோடு ஐக்கியமாயிருக்கிறார். மனுஷரை சிருஷ்டித்த கர்த்தர், மனுஷருக்கு இவ்வளவு கிருபைகளைக் காண்பிப்பார் என்று, எந்த மனுஷரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். கர்த்தர் மனுஷனை மீட்டுக்கொண்டது தேவனுடைய தெய்வீக அன்பின் வெளிப்பாடு.

கர்த்தர் மனுஷனோடு பிரியமாகவும், ஐக்கியமாகவும் இருப்பதுபோல, மனுஷன் மற்ற மனுஷரோடு பிரியமாகவும், ஐக்கியமாகவும் இருப்பதில்லை. மனுஷனுடைய வழிகள் வேறு. கர்த்தருடைய வழிகள் வேறு. கர்த்தருடைய வழிகள் எப்போதுமே, மனுஷருடைய வழிகளுக்கு மேலான வழியாகவும், உன்னதமான வழியாகவும் இருக்கிறது.

கர்த்தர் உயர்ந்தவராகவும், உன்னதமானவராகவும் இருந்தாலும், அவர் தாழ்வான மனுக்குலத்தை நினைத்துப் பார்க்கிறார். மனுஷரை நேசிக்கிறார். மனுஷனோ தன்னைவிட தாழ்வானவர்களை நினைத்துப் பார்க்கமாட்டான். தன்னைவிட மேலானவர்களை நினைத்துப் பார்ப்பான். அவர்களிடத்திலிருந்து தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்று எதிர்பார்ப்பான். இது மனுஷனுடைய சிந்தனை. கர்த்தரோ மனுஷன் சிந்திக்கிற பிரகாரமாக சிந்திப்பதில்லை. கர்த்தர் மனுஷர்மீது காண்பிக்கிற அன்பு, பிரதிபலன் எதிர்பாராத அன்பாகும்.

கர்த்தர் மனுஷனுக்கு அநேக நன்மைகளை செய்தாலும், அவர் மனுஷன்மீது அன்பாயிருந்தாலும், மனுஷன் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறான். கர்த்தருக்கு தீங்கு செய்கிறான். கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளுக்கு நன்றியில்லாதவனாயிருக்கிறான். மனுஷன் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யும்போது, அவன் தன் பாவத்திற்கு மனந்திரும்பி, தம்மோடுகூட ஒப்புரவாகவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

கர்த்தர் மனுஷன்மீது அன்பாகவே இருக்கிறார். அவனுக்கு தம்முடைய கிருபைகளை அதிகமாய் வெளிப்படுத்துகிறார். மனுஷனுடைய திரளான பாவங்களை மன்னிக்கிறார். கர்த்தர் இதில் எதையும் மனுஷர் முறையாய்ச் செய்யவில்லை. தம்முடைய தெய்வீக அன்பின் முறையாகவும், தம்முடைய கிருபையின் முறையாகவும் கர்த்தர் மனுஷனுக்கு நன்மை செய்கிறார்.

மனுஷன் கர்த்தருக்கு ஒரு நன்மையும் செய்ததில்லை. நாம் கர்த்தருக்கு ஒரு நன்மையும் செய்யாதிருந்தாலும், கர்த்தர் நமக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர் நமக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளே அதிகம். நாம் கர்த்தரிடத்திலிருந்து, இதற்குமேல் அதிகமான நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. அப்படி எதிர்பார்ப்பதற்கு நமக்கு ஒரு தகுதியுமில்லை.

கர்த்தர் இதுவரைக்கும் தனக்கு செய்த நன்மைகளை தாவீது நினைத்துப் பார்த்து, "இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர்" *(2சாமு 7:20)* என்று கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருடைய அடியான். கர்த்தர் தாவீதை அறிந்திருக்கிறார். தாவீதுக்கு எது நன்மையானது என்றும், எது அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்றும் கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் தாவீதுக்கு போதுமான அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் நமக்கு கிறிஸ்துவை வாக்குப்பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவைப்பற்றிய வாக்குத்தத்தத்தில், நமக்கு தேவையான எல்லா ஆசீர்வாதங்களும் இடம் பெற்றிருக்கிறது. கர்த்தர் நம்மை அறிந்திருக்கிறார். நமக்கு என்ன தேவை என்பதையும் அறிந்திருக்கிறார். நமக்குத் தேவையானது எல்லாவற்றையும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆகையினால் நாம் கர்த்தரிடத்தில் இனிமேல் வேண்டிக்கொள்வதற்கோ அல்லது விண்ணப்பம்பண்ணுவதற்கோ ஒன்றுமே இல்லை. கர்த்தர் நமக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்களைவிட, நாம் கர்த்தரிடத்தில் பெரிய காரியங்கள் எதையும் கேட்பதற்கு ஒன்றுமில்லை. நாம் நினைப்பதற்கும், நாம் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக, கர்த்தர் நமக்கு கொடுக்கிறார்.

கர்த்தருடைய கிருபை பெரியது. கர்த்தர் தம்முடைய கிருபையை நமக்கு இலவசமாகக் கொடுக்கிறார். கர்த்தர் நமக்கு காண்பிக்கும் தயவுக்கு ஈடாக, நம்மால் கர்த்தருக்கு ஒன்றையும் செலுத்த முடியாது. கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே, தன்னை இதுவரையிலுக்கும் கொண்டு வந்திருக்கிறார் என்றும், தனக்கு இவ்வளவு பெரிதான ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தமாய்ச் சொல்லியிருக்கிறார் என்றும் தாவீது கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் "உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர்" *(2சாமு 7:21)* என்று பயபக்தியோடு சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளுக்காகவும், கர்த்தர் தனக்கு காண்பித்த மகாபெரிய காரியங்களுக்காகவும், தாவீது கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்.

தாவீது கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் நினைத்து அவரை நன்றியோடு துதிக்கிறார். "ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும், தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை" *(2சாமு 7:22)* என்று தாவீது பயபக்தியோடு கர்த்தரைத் துதிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் தாவீதை உயர்த்தியிருக்கிறார். அவர் தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்திலே கனத்தையும், மகிமையையும் கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தில் உயர்ந்தவராகயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதைவிட உயர்ந்தவராயிருக்கிறார்.

கர்த்தர் தாவீதை தம்முடைய சமுகத்திற்கு அருகாமையில் அழைத்து வருகிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்திலே எவ்வளவு நெருக்கமாகப் போகிறாரோ, அவ்வளவு அதிகமாக கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார். தாவீதைப்போலவே நாமும், கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திற்குள் வரும்போது, அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும் அதிகமாய் தரிசித்து, அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். தாவீதைப்போலவே நாமும், கர்த்தரைப் பார்த்து, "தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர்" என்று நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, பயபக்தியோடு சொல்லவேண்டும். தேவரீருக்கு நிகரானவர் வானத்திலும் பூமியிலும் ஒருவருமில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தவிர வேறு தேவனுமில்லை.

தாவீது தேவனுடைய இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றி மிகவும் உயர்வாக பேசுகிறார். "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும் தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுகிறதற்கும் ஏற்பட்டாரே; தேவரீர் எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்த உம்முடைய ஜனத்திற்குமுன்பாகப் பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தி, உம்முடைய தேசத்திற்கும், அதிலிருந்த ஜாதிகளுக்கும், அவர்கள் தேவர்களுக்கும், உமது மகிமையை விளங்கச்செய்து, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு அவர்களைத் திடப்படுத்தி, கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்குத் தேவனானீர்" *(2சாமு 7:23,24)* என்று தாவீது இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவரீருக்கு நிகரானவர் ஒருவருமில்லை. அவரை தவிர வேறே தெய்வமில்லை என்று தாவீது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி உயர்வாகச் சொன்னார். இப்போதோ இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றியும் தாவீது உயர்வாகச் சொல்லுகிறார். "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ" என்று தாவீது கேட்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்காக அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். கர்த்தர் அவர்களுக்காக பயங்கரமான பெரிய காரியங்களை செய்தார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே தம்முடைய மகிமையை விளங்கப்பண்ணினார்.

கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனத்தாரை மீட்டுக்கொண்டது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாக்களை மீட்டுக்கொள்வதற்கு அடையாளமாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை அந்நிய ஜாதிகளிலிருந்தும், அவர்களுடைய தேவர்களிலிருந்தும் மீட்டுக்கொண்டார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பிரபஞ்சத்தின் மாயைகளிலிருந்தும், மாம்சப்பிரகாரமான பாவக்கிரியைகளிலிருந்தும் மீட்டுக்கொண்டார். பாவிகளை இரட்சிப்பதற்காகவே கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்.

இஸ்ரவேலர் என்றென்றைக்கும் தம்முடைய ஜனமாயிருக்கவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் கர்த்தருக்கு விசேஷித்த ஜாதியாயிருக்கவேண்டும் என்பதற்காகவும் கர்த்தர் அவர்களை மீட்டுக்கொண்டார். கர்த்தர் அவர்களை தமக்காக பரிசுத்தப்படுத்தி, தமக்காக திடப்படுத்திக்கொண்டார். கர்த்தர் தம்முடைய மகிமையை அவர்களுக்கு விளங்கச் செய்யவேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கு முன்பாக பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தினார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அவர்களும் கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இஸ்ரவேலர் என்றென்றைக்கும் கர்த்தருடைய ஜனமாயிருக்கவேண்டும். கர்த்தர் என்றென்றைக்கும் அவர்களுடைய தேவனாயிருக்கவேண்டும். இதுவே இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சம்.

கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத உடன்படிக்கையாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை திடப்படுத்தினார். தம்முடைய உடன்படிக்கையை அவர்களுக்கு உறுதிபண்ணினார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாமே அவர்களுக்கு தேவனாயிருக்கிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணும்போது, தன்னுடைய பணிவான விண்ணப்பங்களினால் இந்த ஜெபத்தை நிறைவு செய்கிறார். கர்த்தர் தாவீதுக்கு நாத்தான் மூலமாக தம்முடைய வார்த்தைகளை அனுப்பினார். ஆகையினால் தாவீதுக்கு கர்த்தருடைய சமுகத்திலே, இந்த விண்ணப்பங்களை ஏறெடுக்கவேண்டும் என்னும் மனத்தைரியமுண்டாயிற்று.

"உனக்கு வீடுகட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர்; ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது" *(2சாமு 7:27)* என்று தாவீது கர்த்தருடைய சமுகத்திலே பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

தாவீது தன்னுடைய ஜெபத்திலே, கர்த்தரிடத்தில் கேட்பது அதிகமாயிருக்கிறது. தாவீது பெரிய காரியங்களை கர்த்தரிடத்தில் கேட்கிறார். கர்த்தருடைய வார்த்தைகளும், வாக்குத்தத்தங்களும் தாவீதுக்கு சொல்லப்பட்டிருப்பதினால், தாவீது தன்னுடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் கர்த்தரிடத்தில் மனத்தைரியத்தோடு கேட்கிறார். தாவீது கர்த்தரிடத்தில் கேட்பது பெரிய காரியமாகயிருந்தாலும், அவையெல்லாம் கர்த்தருக்கு சாதாரண காரியங்களாகவும், அற்பகாரியங்களாகவும் இருக்கிறது. தாவீது கர்த்தரிடத்தில் இந்தக் காரியங்களை கேட்பதற்கு முன்பாகவே, கர்த்தர் தாவீதுக்கு இதைவிட பெரிய காரியங்களை வாக்குத்தத்தமாய்ச் சொல்லியிருக்கிறார்.

வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தர் வாக்குமாறாதவர். தாவீது கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறார். கர்த்தர் தாம் சொன்னதை செய்வார் என்று தாவீது நம்புகிறார். "இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும்" *(2சாமு 7:25)* என்று தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகளும், அவருடைய கிரியைகளும் ஒன்றாயிருக்கும். கர்த்தரிடத்தில் முரண்பாடுகள் காணப்படாது. கர்த்தர் எதைச் சொல்லுகிறாரோ அதை நிச்சயமாய்ச் செய்வார். அவர் எதைச் செய்வாரோ அதை மாத்திரமே சொல்லுவார். மனமாறுவதற்கோ, பொய்சொல்லுவதற்கோ கர்த்தர் ஒரு மனுஷனல்ல. மனுஷன் ஒன்றைச் சொல்லுவான் அதன் பின்பு அவன் மனம்மாறி, வேறொன்றை செய்வான். கர்த்தரிடத்தில் இப்படிப்பட்ட மாறுபாடுகள் இருக்காது என்று தாவீது நம்புகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் தன்னுடைய ஜீவியத்தில் நிறைவேறவேண்டுமென்று, தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். தாவீது கர்த்தரிடத்தில் அதிகமாக ஆசைப்படவில்லை. அதே வேளையில் அவர் கர்த்தரிடத்தில் குறைவாகவும் எதிர்பார்க்கவில்லை. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தை நிறைவேறவேண்டும் என்று தாவீது விண்ணப்பம்பண்ணுகிறார்.

"இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும்" (2சாமு 7:25) என்பதே தாவீது கர்த்தரிடத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பமாயிருக்கிறது.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய நாமம் என்றென்றும் மகிமைப்படுவதாக என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருக்கு மகிமை உண்டாகவேண்டும். தன்னுடைய நாமத்திற்கு மகிமை ஏற்பட்டாலும், மகிமை ஏற்படாவிட்டாலும், கர்த்தருடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படவேண்டும் என்று, தாவீது கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

தாவீது தன்னுடைய வீட்டுக்காக ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தாவீதின் வீட்டைக் குறித்து ஏற்கெனவே தம்முடைய வார்த்தைகளை சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறவேண்டும் என்று தாவீது ஜெபிக்கிறார்.

"இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக" (2சாமு 7:29) என்று தாவீது கர்த்தரிடத்தில் தன்னுடைய வீட்டின் ஆசீர்வாதத்திற்காக ஜெபம்பண்ணுகிறார். "உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக" (2சாமு 7:26) என்பதே தாவீதின் ஜெபமாயிருக்கிறது.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தனக்காகவும், தன்னுடைய வீட்டிற்காகவும் ஜெபம்பண்ணும்போது, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை கனம்பண்ணுகிறார்.

"இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே, நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்; தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம்பண்ணினீர்" (2சாமு 7:28) என்று தாவீது கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும் கனம்பண்ணுகிறார்.

தாவீது தன்னுடைய வீட்டைக்குறித்து ஏறெடுகிற ஜெபம், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில், பரிபூரணமாக நிறைவேறுகிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் என்றும் நிலைத்திருக்கிறது. கிறிஸ்துவானவர் என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார். கிறிஸ்துவின் ராஜ்யம் நித்தியமானது. அது பரிபூரணமானது.

"இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்" (எபி 10:12,13).

8 அதிகாரம்

தாவீது தேவனுடைய ராஜ்யத்தை முதலாவதாக தேடுகிறார். தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்து, அதிலே தன் வீட்டாரோடு தங்கியிருக்கிறார். தேவனுடைய பெட்டியையும் தாவீதின் கோட்டைக்கு கொண்டு வருகிறார்.

இதற்கு பின்பு, தாவீது இஸ்ரவேலுக்கு சத்துருக்களாயிருக்கிறவர்களோடு யுத்தம் பண்ணுகிறார். கர்த்தர் தாவீதுக்கு யுத்தங்களிலே ஜெயத்தைக் கொடுக்கிறார்.

தாவீது பெலிஸ்தரை முறியடிக்கிறார் (2சாமு 8:1). மோவாபியரை முறியடிக்கிறார் (2சாமு 8:2). சோபாவின் ராஜாவை முறியடிக்கிறார் (2சாமு 8:3,4). சீரியரை முறியடிக்கிறார் (2சாமு 8:5-8,13). தாவீது ஏதோமியரை முறியடிக்கிறார் (2சாமு 8:14).

தாவீதுக்கு அநேகர் வெகுமதிகளைக் கொண்டுவருகிறார்கள். தாவீது யுத்தம்பண்ணின தேசங்களிலிருந்து கொள்ளைப்பொருட்களை கொண்டு வருகிறார். தாவீது அவற்றை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார் (2சாமு 8:9-12).

தாவீதின் ஆளுகை. தாவீது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் நீதியும் நியாயமும் செய்து வருகிறார் (2சாமு 8:15). தாவீதின் இராணுவ தலைவர்களும், மந்திரிகளும், ஆசாரியர்களும், சம்பிரதிகளும், பிரதானிகளும் (2சாமு 8:16-18). தாவீது வர வர விருத்தியடைகிறார். தாவீதின் ராஜாசனமும் உறுதியாயிருக்கிறது.

தாவீது சத்துருக்களை முறியடிக்கிறார்

2சாமு 8:1-8

2சாமு 8:1. இதற்குப்பின்பு தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொண்டான்.

2சாமு 8:2. அவன் மோவாபியரையும் முறிய அடித்து, அவர்களைத் தரைமட்டும் பணியப்பண்ணி, அவர்கள்மேல் நூல்போட்டு, இரண்டுபங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோடே வைத்தான்; இவ்விதமாய் மோவாபியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள்.

2சாமு 8:3. ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜா ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திரும்பத் தன் வசமாக்கிக் கொள்ளப்போகையில், தாவீது அவனையும் முறிய அடித்து,

2சாமு 8:4. அவனுக்கு இருந்த இரானுத்தில் ஆயிரத்து எழுநூறு குதிரைவீரரையும், இருபதினாயிரம் காலாட்களையும் பிடித்து, இரதங்களில் நூறு இரதங்களை வைத்துக்கொண்டு, மற்றவைகளையெல்லாம் துண்டாடிப்போட்டான்.

2சாமு 8:5. சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசருக்கு உதவிசெய்ய தமஸ்குப்பட்டணத்தாராகிய சீரியர் வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீராயிரம்பேரை வெட்டிப்போட்டு,

2சாமு 8:6. தமஸ்குக்கடுத்த சீரியாவிலே தாணையங்களை வைத்தான்; சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டினார்கள்; தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

2சாமு 8:7. ஆதாதேசரின் சேவகருடைய பொற்பரிசைகளைத் தாவீது எடுத்து, அவைகளை எருசலேமுக்குக் கொண்டுவந்தான்.

2சாமு 8:8. ஆதாதேசரின் பட்டணங்களாகிய பேத்தாகிலும் பேரொத்தாயிலுமிருந்து தாவீதுராஜா மகா திரளான வெண்கலத்தையும் எடுத்துக்கொண்டுவந்தான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கானான் தேசத்தை முழுவதுமாக சுதந்தரித்துக்கொள்ளவில்லை. கானான் தேசத்திலே இஸ்ரவேலரோடு புறஜாதி ஜனங்களும் குடியிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். சத்துருக்கள் இஸ்ரவேலரை, அவர்களுடைய பட்டணங்களிலிருந்து துரத்திவிட்டு, அங்கே குடியிருக்கிறார்கள்.

கர்த்தருடைய வாக்குத்தத்தின் பிரகாரம், கானான் தேசம் முழுவதும் இஸ்ரவேலருக்கு சுதந்தரவீதமாயிருக்க வேண்டும். இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்கள்மீது தாவீது யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களிடம் இழந்துபோன பட்டணங்களையும், உரிமைகளையும் தாவீது திரும்ப மீட்டுக்கொள்கிறார்.

தாவீது முதலாவதாக பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார். தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொள்கிறார் (2சாமு 8:1). பெலிஸ்தர் நீண்டகாலமாக இஸ்ரவேலை ஒடுக்கினார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை நெருக்கினார்கள்.

சவுலின் காலத்தில், இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்கள். ஒரு சில யுத்தங்களில் சவுலுக்கு பெலிஸ்தர்மீது வெற்றி கிடைத்தது. பின்பு இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, சவுலும் அவருடைய மூன்று குமாரரும் யுத்தக்களத்திலே செத்துப்போனார்கள்.

நியாயாதிபதிகளின் காலத்தில் சிம்சோன் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆரம்பித்தார். "நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்" (நியா 13:5).

பெலிஸ்தருக்கு விரோதமாக, பல வருஷங்களுக்கு முன்பு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டாலும், தாவீதின் காலத்தில்தான் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தம் முடிவு பெறுகிறது. தாவீது பெலிஸ்தரை முறியடித்து அவர்களை கீழ்ப்படுத்துகிறார். இஸ்ரவேலை பெலிஸ்தரின் கையிலிருந்து முற்றிலுமாய் இரட்சிக்கிறார்.

மேத்தேக் அம்மா பெலிஸ்தரின் பிரதான பட்டணம். இது அவர்களுக்கு ராஜதானி பட்டணமாயிருக்கிறது. பெலிஸ்தர்கள் மேத்தேக் அம்மாவிலே தங்களுடைய சேனையோடு பாளயமிறங்குவார்கள். இது காத் தேசத்திலுள்ளது. "யோவாபும் அபிசாயும் சூரியன் அஸ்தமிக்குமட்டும் அப்னேரைப் பின்தொடர்ந்தார்கள்; கிபியோன் வனாந்தரவழிக்கு அருகான கீயாவுக்கு எதிரே இருக்கிற அம்மா மேடுமட்டும் வந்தார்கள்" (2சாமு 2:24).

அம்மா மேடு என்பது மேத்தேக் அம்மாவைக் குறிக்கிறது. மேத்தேக் என்னும் பெயருக்கு "கடிவாளம்" என்று பொருள். பெலிஸ்தரின் சேனை மேத்தேக் அம்மாவில் பாளயமிறங்கி, இஸ்ரவேல் ஜனத்தாரை கடிவாளம் போட்டு ஒடுக்குவது போல ஒடுக்கினார்கள். தாவீது மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொண்டார். அவர் பெலிஸ்தரை முறியடித்தார். பெலிஸ்தர் இதுவரையிலும் இஸ்ரவேலரைக் கீழ்ப்படுத்தினார்கள். இப்போது இஸ்ரவேலர் பெலிஸ்தரைக் கீழ்ப்படுத்துகிறார்கள். இதுவரையிலும் கடிவாளம் பெலிஸ்தரின் கையிலிருந்தது. இப்போது அந்தக் கடிவாளம் தாவீதின் கையிலும், இஸ்ரவேல் புத்திரர் கையிலும் இருக்கிறது.

தாவீது மோவாபியரையும் முறிய அடித்து, அவர்களைத் தரைமட்டும் பணியப்பண்ணினார். தாவீது அவர்கள்மேல் நூல்போட்டு, இரண்டுபங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோடே வைத்தார்; இவ்விதமாய் மோவாபியர் தாவீதைச் சேவித்து, அவருக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள் (2சாமு 8:2).

தாவீது மோவாபியரின் தேசத்தை மூன்று பங்காக பிரிக்கிறார். அந்த தேசத்தின் இரண்டு பங்கை அழித்துப்போடுகிறார். மீதமுள்ள ஒரு பங்கை அழித்துப்போடாமல் வைக்கிறார். மோவாபியரில் மூன்றில் ஒரு பங்கு மனுஷர் உயிரோடிருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தாருக்கு வேலையாட்களாயிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் நிலத்தை பயிரிடுகிறார்கள்.

பிலேயாம் மோவாபைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. "அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்" (எண் 24:17)

ஆகாப் மரிக்கும் வரையிலும் மோவாபியர் இஸ்ரவேலுக்கு கப்பம் கட்டுகிறவர்களாயிருந்தார்கள். அதன் பின்பு மோவாபியர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரால் அவர்களை ஒடுக்க முடியவில்லை.

"மோவாபின் ராஜாவாகிய மேசா ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந்து, இஸ்ரவேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக்குட்டிகளையும், இலட்சம் குறும்பாட்டுக்கடாக்களையும் செலுத்திவந்தான். ஆகாப் இறந்துபோனபின் மோவாபின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினான்" (2இராஜா 3:4,5).

தாவீது சீரியரையும் முறியடிக்கிறார். இவர்கள் அராமியர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். சீரியர்கள் இரண்டு வெவ்வேறு ராஜ்யமாயிருக்கிறார்கள். 60-ஆவது சங்கீதத்தின் தலைப்பில் சீரியரைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"(தாவீது மொசொபொத்தாமிய தேசத்துச் சீரியரோடும், சோபா தேசத்துச் சீரியரோடும் யுத்தம் பண்ணினபோது, யோவாப் திரும்பி உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பன்னீராயிரம்பேரை வெட்டினபோது, அவன் சாட்சியை விளக்குவிக்கும் ஆறு நரம்புக் கின்னரத்திலே போதிப்பதற்காகப் பாடினதும் இராகத்தலைவனுக்கு ஒப்புவித்ததுமான மிக்தாம் என்னும் சங்கீதம்)" (சங் 60).

சீரியாவில் ஆப்னா, பர்பார் ஆகிய நதிகள் உள்ளன. தமஸ்கு சீரியாவின் தலைநகரம். சோபாவின் ராஜா சீரியாவோடு சேர்ந்துகொள்கிறான். ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜா ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திரும்பத் தன் வசமாக்கிக்கொள்ளப்போகிறான் (2சாமு 8:3). சீரியாவின் ராஜாவும் சோபாவின் ராஜாவும் வடக்கு சீமையிலிருக்கிறார்கள்.

தாவீது சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசரை முறியடிக்கிறார். ஆதாதேசர் ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திருப்பி தன் வசமாக்கிக் கொள்ள முயற்சி பண்ணுகிறான். கர்த்தர் அந்த சீமையை ஆபிரகாமின் சந்ததியாருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார்.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி 15:18-21).

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியாருக்கு கொடுத்த ஐபிராத்து தேசத்தை, சோபாவின் ராஜா தன்னுடைய வசமாக்கிக்கொள்ள முயற்சிபண்ணினான். இந்த தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு சொந்தமானது. தாவீது சோபாவின் ராஜாவை முறியடித்தார்.

தாவீது சோபாவின் ராஜாவுக்கு இருந்த இராணுத்தில் ஆயிரத்து எழுநூறு குதிரைவீரரையும், இருபதினாயிரம் காலாட்களையும் பிடித்து, இரதங்களில் நூறு இரதங்களை வைத்துக்கொண்டு, மற்றவைகளையெல்லாம் துண்டாடிப்போட்டார் *(2சாமு 8:4).*

சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசருக்கு உதவிசெய்ய தமஸ்குப்பட்டணத்தாராகிய சீரியர் வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீராயிரம்பேரை வெட்டிப்போட்டு, தமஸ்குக்கடுத்த சீரியாவிலே தாணையங்களை வைத்தார்; சீரியர் தாவீதைச் சேவித்து, அவருக்குக் கப்பங்கட்டினார்கள் *(2சாமு 8:5,6).*

தாவீது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். கர்த்தர் தாவீதைப் பாதுகாத்துக்கொண்டார். தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவரைக் காப்பாற்றினார்.

தாவீது வர வர விருத்தியடைந்தார். தாவீதின் ஐசுவரியம் அதிகரித்தது. தாவீது ஆதாதேசரின் சேவகருடைய பொற்பரிசைகளைத் தாவீது எடுத்து, அவைகளை எருசலேமுக்குக் கொண்டுவந்தார் *(2சாமு 8:7).*

ஆதாதேசரின் பட்டணங்களாகிய பேத்தாகிலும் பேரொத்தாயிலுமிருந்து தாவீதுராஜா மகா திரளான வெண்கலத்தையும் எடுத்துக்கொண்டுவந்தார் *(2சாமு 8:8).* ஆதாதேசரின் பட்டணங்களெல்லாம் ஆபிரகாமின் சந்ததிக்கு சொந்தமான சுதந்தரவீதம்.

தாவீதின் ஐசுவரியம்
2சாமு 8:9-14

2சாமு 8:9. தாவீது ஆதாதேசருடைய எல்லா இராணுவத்தையும் முறிய அடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோயீகேட்டபோது,

2சாமு 8:10. ஆதாதேசர் தோயீயின்மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக் கொண்டிருந்த படியால், ராஜாவாகிய தாவீதின் சுகசெய்தியை விசாரிக்கவும், அவன் ஆதாதேசரோடே யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்தற்காக அவனுக்கு வாழ்த்துதல் சொல்லவும், தோயீ தன் குமாரனாகிய யோராமை ராஜாவினிடத்தில் அனுப்பினான். மேலும் யோராம் தன் கையிலே வெள்ளியும் பொன்னும் வெண்கலமுமான தட்டுமுட்டுகளைக் கொண்டுவந்தான்.

2சாமு 8:11. அவன் கொண்டுவந்தவைகளைத் தாவீதுராஜா கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதியர்களிடத்திலும்,

2சாமு 8:12. ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவினிடத்திலும் கொள்ளையிட்டதிலும் எடுத்து, கர்த்தருக்கு நியமித்த வெள்ளியோடும் பொன்னோடுங்கூட கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணினான்.

2சாமு 8:13. தாவீது உப்புப் பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் சீரியரை முறிய அடித்துத் திரும்பினதினால் கீர்த்திபெற்றான்

2சாமு 8:14. ஏதோமில் தாணையங்களை வைத்தான்; ஏதோம் எங்கும் அவன் தாணையங்களை வைத்ததினாலே, ஏதோமியர் எல்லாரும் தாவீதைச் சேவிக்கிறவர்களானார்கள்; தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

தோயி என்பவன் ஆமாத்திற்கு ராஜாவாயிருக்கிறான். ஆதாத்தேசாருக்கும் தோயிக்கும் நீண்டகாலமாக பகையிருக்கிறது. ஆதாதேசார் தோயீயின்மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக்கொண்டிருப்பான். இப்போது தாவீது ஆதாதேசாரை முறியடித்திருக்கிறார். தாவீது ஆதாதேசருடைய எல்லா இராணுவத்தையும் முறிய அடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ கேள்விப்படுகிறான் *(2சாமு 8:9).*

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீக்கு, ஆதாதேசார் முறியடிக்கப்பட்ட செய்தி நல்ல செய்தியாயிருக்கிறது. தாவீதின் மூலமாக, ஆமாத் தேசத்திற்கு பாதுகாப்பு கிடைத்திருக்கிறது என்று தோயீ நினைக்கிறான். தாவீது ஆதாதேசாரை முறியடித்ததற்காக, தோயீ தாவீதுக்கு நன்றி சொல்ல விரும்புகிறான். அவருக்கு வெகுமதி கொடுக்க ஆசைப்படுகிறான்.

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ ராஜாவாகிய தாவீதின் சுகசெய்தியை விசாரிக்கவும், அவர் ஆதாதேசரோடே யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்தற்காக அவருக்கு வாழ்த்துதல் சொல்லவும், தோயீ தன் குமாரனாகிய யோராமை ராஜாவினிடத்தில் அனுப்புகிறான். மேலும் யோராம் தன் கையிலே வெள்ளியும் பொன்னும் வெண்கலமுமான தட்டுமுட்டுகளை தாவீதுக்கு கொண்டுவருகிறான் *(2சாமு 8:10)*.

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ தாவீதோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறான். தோயீ தாவீதின் சிநேகிதத்தை விரும்புகிறான். ஆமாத்தின் ராஜாவாகிய தோயீயோடு சமாதான உடன்படிக்கை பண்ணுவதினால் தாவீதுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. தாவீது ஆமாத்தின் ராஜாவைப்போல மேலும் சில ராஜாக்களை தன்னுடைய பாதுகாப்பின் கீழ் கொண்டு வருகிறார். இவர்கள் தாவீதுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறார்கள்.

தாவீது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை முறியடித்த பின்பு, அவர்களுடைய தேசத்திலிருந்து எருசலேமுக்கு கொள்ளைப்பொருளை கொண்டு வருவது வழக்கம். அந்தக் கொள்ளைப் பொருட்களெல்லாம் தாவீதின் பொக்கிஷத்திலிருக்கிறது. இந்தப் பொக்கிஷங்களோடு ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ தன் குமாரனாகிய யோராம் மூலமாக கொடுத்தனுப்பி வெகுமதிகளும் இருக்கிறது. தாவீதின் ஐசுவரியம் விருத்தியடைகிறது. அவருடைய பொக்கிஷ சாலை நிரம்பி வழிகிறது. தாவீது ராஜாக்களிடத்தில் கொள்ளையிட்டதிலும், தனக்கு வந்த வெகுமதிகளிலும், வெள்ளியையும் பொன்னையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்.

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீயின் குமாரனாகிய யோராம் கொண்டுவந்தவைகளைத் தாவீதுராஜா கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதியர்களிடத்திலும், ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவினிடத்திலும் கொள்ளையிட்டதிலும் எடுத்து, கர்த்தருக்கு நியமித்த வெள்ளியோடும் பொன்னோடுங்கூட கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணுகிறார் *(2சாமு 8:11,12)*.

இந்தப் பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் தாவீதைப்போல பெரிய ராஜாக்கள், தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியிருக்கிறார்கள். மகா அலெக்சாந்தர், ரோமப்பேரரசனாகிய சீஷர் ஆகியோரை பெரிய ராஜாக்களுக்கு ஒப்பாகச் சொல்லலாம். இவர்களெல்லோரும் தங்களுடைய நாமமகிமைக்காகவும், தங்களுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காகவும் மற்ற தேசங்களோடு யுத்தம்பண்ணினார்கள். தாவீதோ கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணினார்.

தாவீது கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணின வெள்ளியும் பொன்னும், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக, கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேர்த்து வைக்கப்படுகிறது. இவையெல்லாம் கர்த்தருக்காக நியமிக்கப்பட்ட பொக்கிஷங்களாகும்.

தாவீது சத்துருக்களிடமிருந்து கொள்ளையிட்ட பொருட்களில், வெள்ளி பாத்திரங்களையும், பொன் பாத்திரங்களையும் மாத்திரம் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணினார். தாவீது பொன்னால் செய்யப்பட்ட விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டார்.

"அங்கே பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களைவிட்டு ஓடிப்போனார்கள்; அவைகளைத் தாவீதும் அவன் மனுஷரும் சுட்டெரித்தார்கள்" *(2சாமு 5:21)*.

தாவீது கர்த்தருடைய நாமமகிமைக்காக யுத்தம்பண்ணுகிறார். ஆகையினால் தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவரைக் காப்பாற்றுகிறார். இஸ்ரவேலின் சத்துருக்கள் எல்லோரும் முறியடிக்கப்படுகிறார்கள்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து மனுஷருடைய ஆத்துமாக்களை தமக்கு சொந்தமாக்கிக் கொள்கிறார். தேவனுக்கு விரோதமான அந்தகார சக்திகளை கிறிஸ்துவானவர் அழித்துப்போடுகிறார். நம்முடைய மாம்ச இச்சைகளும், உலகப்பிரகாரமான இச்சைகளும் சிலுவையிலே அறையப்படவேண்டும். கர்த்தருக்கு நியமிக்கப்பட்டவையெல்லாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரை கனம்பண்ணி மகிமைப்படுத்த வேண்டும்.

தாவீது உப்புப்பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் சீரியரை முறிய அடித்துத் திரும்பினதினால் கீர்த்திபெறுகிறார் *(2சாமு 8:13)*. தாவீது கர்த்தருடைய கீர்த்திக்காக யுத்தம்பண்ணினாலும், தாவீதின் நாமத்திற்கும் கீர்த்தி உண்டாயிற்று. தன்னுடைய நாமம் கீர்த்தி பெற்றாலும், தாவீது, கர்த்தரை கனம்பண்ண மறக்கவில்லை. மனுஷர் தன்னைப் புகழ்ந்தாலும், தாவீது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். மனுஷர் மூலமாய் வருகிற எந்த கனத்தையும், மகிமையையும் தாவீது தனக்கு சொந்தமாக அங்கீகரிப்பதில்லை. துதி கன மகிமை எல்லாவற்றையும் தாவீது கர்த்தருக்கே செலுத்துகிறார்.

தாவீது ஏதோமியரை முறியடிக்கிறார். ஏதோமியர் எல்லோரும் தாவீதை சேவிக்கிறவர்களாகிறார்கள். தாவீது ஏதோமில் தாணையங்களை வைக்கிறார்; ஏதோம் எங்கும் அவர் தாணையங்களை வைத்ததினாலே, ஏதோமியர் எல்லாரும் தாவீதைச் சேவிக்கிறவர்களாகிறார்கள் *(2சாமு 8:14)*.

யோராம் ராஜாவின் காலம் வரையிலும் ஏதோமியர்கள் இஸ்ரவேலின் ராஜாக்களை சேவிக்கிறார்கள். அதுவரையிலும் ஏதோமியர் இஸ்ரவேலுக்கு கப்பம் கட்டுகிறார்கள். அதன் பின்பு ஏதோமியர் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள்.

"அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம் பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்" *(2நாளா 21:8)*.

"தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்" *(2சாமு 8:6)* என்று ஏற்கெனவே சொல்லப்பட்டதுபோல, இங்கு மறுபடியுமாக, "தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்" *(2சாமு 8:14)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பின சத்துருக்களையெல்லாம் முறியடித்தார். இதனால் இஸ்ரவேல் தேசம் சத்துருக்களின் பிரச்சனையில்லாமல் அமைதியாயிருக்கிறது. தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் காலத்தில், இஸ்ரவேல் தேசம் எங்கும் யுத்தமில்லாமல் அமைதியாயிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு, தேசத்தில் காணப்படுகிற அமைதியும் சமாதானமும், சாதகமான சூழ்நிலையாயிருக்கிறது.

தாவீது சத்துக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களுடைய தேசங்களிலிருந்து கொள்ளைப்பொருட்களை கொண்டு வருகிறார். தாவீது கொள்ளைப்பொருட்களிலுள்ள பொன்னையும் வெள்ளியையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். பொன்னும் வெள்ளியும் கர்த்தருக்கு நியமிக்கப்பட்டு, கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. தாவீதின் குமாரனாகிய சாலொமோன், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவேண்டும். அதற்கு தேவையான பொக்கிஷங்களை தாவீது கர்த்தருக்கென்று பிரதிஷ்டைபண்ணி வைக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை வெவ்வேறு ஊழியங்களில் பயன்படுத்துகிறார். ஒரு சிலர் ஆவிக்குரிய யுத்தங்களிலே யுத்தம்பண்ணுகிறார்கள். வேறு சிலரோ ஆவிக்குரிய காரியங்களை கட்டியெழுப்புகிறார்கள். ஒரு ஊழியம் மற்றொரு ஊழியத்தைக் கட்டியெழுப்புவதற்கு பிரயோஜனமாயிருக்கிறது. கர்த்தருக்காக செய்யப்படுகிற எல்லா ஊழியங்களிலும் கர்த்தர் மகிமைப்படுகிறார்.

தாவீதுக்கு சத்துருக்கள்மேல் ஜெயம் கிடைத்தது. விசுவாசிகளாகிய நமக்கு சாத்தானுடைய ராஜ்யத்தின்மீது ஜெயம் கிடைக்கும்.

தாவீதின் ராஜாசனம் 2சாமு 8:15-18

2சாமு 8:15. இப்படியே தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாயிருந்தான்; அவன் தன்னுடைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்துவந்தான்.

2சாமு 8:16. செருயாவின் குமாரனாகிய யோவாப்இராணுவத்தலைவனாயிருந்தான்; அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியாயிருந்தான்.

2சாமு 8:17. அகிதூபின் குமாரன் சாதோக்கும், அபியத்தாரின் குமாரன் அகிமெலேக்கும் ஆசாரியராயிருந்தார்கள்; செராயா சம்பிரதியாயிருந்தான்.

2சாமு 8:18. யோய்தாவின் குமாரன் பெனாயாகிரேத்தியருக்கும் பிலேத்தியருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீதின் குமாரரோ பிரதானிகளாயிருந்தார்கள்.

தாவீது இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினாலும், தன்னுடைய ராஜாசனத்தையும் முறைப்படி ஆளுகை செய்கிறார். இஸ்ரவேல் தேசத்தைக் கவனிக்காமல், வெளிதேசங்களில் யுத்தம்பண்ண அதிக கவனம் செலுத்தினால், உள்நாட்டிலே குழப்பம் ஏற்பட்டுவிடும். தேசத்து நிர்வாகம் சீராகயிருக்காது. தாவீது மிகுந்த ஞானமாய் இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜரீகம்பண்ணுகிறார்.

தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாயிருக்கிறார் *(2சாமு 8:15)*. சமஸ்த இஸ்ரவேலும் தாவீதின் ராஜ்யபாரத்திற்கு கீழே இருக்கிறது. தாவீது இஸ்ரவேல் தேசத்திலுள்ள எல்லா ஜனத்திற்கும் நீதியும் நியாயமும் செய்து வருகிறார். அவரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் யாருக்கும் முகஸ்துதி பண்ணவுமில்லை.

இஸ்ரவேல் தேசத்தார் தங்களுடைய வழக்குகளை ராஜாவிடம் சொல்லும்போது, தாவீது ராஜா அந்த வழக்குகளுக்கு கவனமாய்ச் செவிகொடுக்கிறார். வழக்கின் தன்மைகளை நீதியாய் ஆராய்ந்து பார்க்கிறார். ஜனங்களுக்கு நியாயமான தீர்ப்பு கொடுக்கிறார். ஜனங்களால் தங்கள் ராஜாவை எளிதாகப் பார்க்க முடிகிறது. தாவீதும் தேசத்தின் நிர்வாக காரியங்கள் எல்லாவற்றையும் சீராக கவனித்து வருகிறார்.

ஒவ்வொரு தேசத்திற்கும், அந்த தேசத்தின் ராஜாவே நியாயாதிபதியாயிருக்கிறார். கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதி. அவரே எல்லா தேசத்திற்கும் ராஜாதி ராஜாவாயும், கர்த்தாதி கர்த்தாவாயும் இருக்கிறவர். அவரே சர்வசிருஷ்டிக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாயும் இருக்கிறார். தாவீது இந்த சத்தியத்தை அறிந்திருக்கிறார். தான் இஸ்ரவேல் தேசத்திற்கு நியாயாதிபதியாயிருந்தாலும், தனக்கு மேலாக இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நியாயாதிபதியாயிருக்கிறார் என்பதை உணர்ந்து, தாவீது தன் தேசத்திலுள்ள எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்து வருகிறார்.

"என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்; என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள். என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்" *(சங் 72:1,2)*.

இஸ்ரவேல் தேசத்து நாளாகமத்தை சம்பிரதியாகிய செராயா ஒவ்வொரு நாளும் எழுதவேண்டும். ராஜா ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலைகளை, சம்பிரதி ராஜாவுக்கு ஞாபகப்படுத்தவேண்டும். ராஜா சில காரியங்களை மறந்துவிடுவார். அந்தக் காரியங்களையெல்லாம் சம்பிரதி அவருக்கு ஞாபகப்படுத்தவேண்டும். சம்பிரதி ராஜாவுக்கு யோசனைகளை சொல்லக்கூடாது. ராஜாவின் வேலைகளை விமர்சனம் பண்ணவும் கூடாது. ராஜாவின் அன்றாட வேலைகளை எழுதி வைப்பதும், அதை ராஜாவுக்கு ஞாபகப்படுத்துவதும் மாத்திரம் சம்பிரதியின் வேலை.

அகிலுதின் குமாரனாகிய யோசபாத் தாவீதுக்கு மந்திரியாயிருக்கிறான். இவன் தேசத்தின் நன்மைக்காகவும், ராஜாவின் நன்மைக்காகவும் யோசனை சொல்லுவான். மந்திரியின் யோசனையை கேட்கவேண்டும் ராஜாவுக்கு என்னும் அவசியம் இல்லை. ராஜா கேட்கும்போது மாத்திரமே, மந்திரி யோசனை சொல்லவேண்டும். ராஜா வழக்குகளை விசாரித்து, தீர்ப்புகளை சொல்லும்போது, ராஜாவின் தீர்ப்புகளை நிறைவேற்றும் பொறுப்பு மந்திரிக்கு உண்டு.

தாவீதின் குமாரர் பிரதானிகளாயிருக்கிறார்கள். அவர்கள் தாவீதுக்கு அடுத்த ஸ்தானத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்கிறார்கள். தாவீதின் பிள்ளைகள் எல்லோரும் வளர்ந்து பெரியவர்களாயிருக்கிறார்கள்.

"யோய்தாவின் குமாரன் பெனாயா கிரேத்தியருக்கும் பிலேத்தியருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீதின் புத்திரர் ராஜாவினிடத்தில் பிரதானிகளாயிருந்தார்கள்" (1நாளா 18:17).

தாவீதின் குமாரர் அவருக்கு அருகாமையிலேயே இருப்பார்கள். அவர்கள் ராஜாவின் கண்பார்வையில், ராஜாவின் மேற்பார்வையின்கீழ், இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்வார்கள்.

கிறிஸ்துவானவர், விசுவாசிகளாகிய நம்மை, ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் நியமித்திருக்கிறார்.

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (வெளி 1:6).

9 அதிகாரம்

தாவீது யோனத்தான் நிமித்தம், அவனுடைய குமாரன் மேவிபோசேத்திற்கு தயவு காண்பிக்கிறார். தாவீது சவுலின் வீட்டாரைப்பற்றி விசாரித்து, மேவிபோசேத்தைப்பற்றி அறிந்துகொள்கிறார் *(2சாமு 9:1-4).* மேவிபோசேத் தாவீதினிடத்தில் வந்தபோது, தாவீது அவனை அன்போடு ஏற்றுக்கொள்கிறார் *(2சாமு 9:5-8).* தாவீது மேவிபோசேத்தை பராமரிக்கிறார் *(2சாமு 9:9-13).*

மேவிபோசேத்
2சாமு 9:1-8

2சாமு 9:1. யோனத்தான்நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா என்று தாவீது கேட்டான்.

2சாமு 9:2. அப்பொழுது சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபா என்னும் பேருள்ளவனைத் தாவீதினிடத்தில் அழைத்துவந்தார்கள்; ராஜா அவனைப் பார்த்து; நீதானா சீபா என்று கேட்டான்; அவன் அடியேன்தான் என்றான்.

2சாமு 9:3. அப்பொழுது ராஜா: தேவன் நிமித்தம் நான் சவுலின் குடும்பத்தாருக்குத் தயைசெய்யும்படி அவன் வீட்டாரில் யாரொருவன் இன்னும் மீதியாய் இருக்கிறானா என்று கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இன்னும் யோனத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான் என்றான்.

2சாமு 9:4. அவன் எங்கே என்று ராஜா கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இதோ, அவன் லோதேபாரிலே அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டில் இருக்கிறான் என்றான்.

2சாமு 9:5. அப்பொழுது தாவீதுராஜா அவனை லோதேபாரிலிருக்கிற அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டிலிருந்து அழைப்பித்தான்.

2சாமு 9:6. சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத் தாவீதினிடத்தில் வந்தபோது, முகங்குப்புற விழுந்து வணங்கினான்; அப்பொழுது தாவீது: மேவிபோசேத்தே என்றான்; அவன்: இதோ, அடியேன் என்றான்.

2சாமு 9:7. தாவீது அவனைப் பார்த்து: நீ பயப்படாதே; உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயைசெய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய் என்றான்.

2சாமு 9:8. அப்பொழுது அவன் வணங்கி: செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம் என்றான்.

தாவீது சவுலின் வீட்டாரைக் குறித்து விசாரிக்கிறார். சவுலும் அவருடைய மூன்று குமாரரும் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே செத்துப்போனார்கள். சவுலின் மற்றொரு குமாரனாகிய இஸ்போசேத்தை, அவனுடைய சேனைத்தலைவர்கள் கொன்றுபோட்டார்கள். சவுலின் குடும்பம் அழிந்துபோயிற்று.

தாவீது கர்த்தருடைய கிருபையினால் செழித்திருக்கிறார். அவர் சவுலை மறக்கவில்லை. தாவீது சவுலின் குமாரனாகிய யோனத்தானையும் மறக்கவில்லை. யோனத்தானும் தாவீதும் நெருங்கிய சிநேகிதர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் உடன்படிக்கை பண்ணிக்கொண்டவர்கள். தாவீது யோனத்தானோடு பண்ணின உடன்படிக்கையை இப்போது நினைத்துப் பார்க்கிறார்.

தாவீது தன்னுடைய மனுஷரிடம், "யோனத்தான்நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா" (2சாமு 9:1) என்று கேட்கிறார்.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக ஏற்படுத்தப்பட்டு, அநேக வருஷங்களுக்கு பின்பு, யோனத்தானின் வீட்டாரைப்பற்றி விசாரிக்கிறார். சவுலும் யோனத்தானும் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே மரித்துப்போனபோது, யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத்திற்கு ஐந்து வயது மாத்திரமே ஆயிற்று. இப்போது மேவிபோசேத்திற்கு ஒரு குமாரன் இருக்கிறான். "மேவிபோசேத்திற்கு மீகா என்னும் பேருள்ள சிறுவனாகிய ஒரு குமாரன் இருக்கிறான்" (2சாமு 9:12).

தாவீது யோனத்தானை பல வருஷங்களாக மறந்துவிட்டார். தாவீது யோனத்தானோடு உடன்படிக்கை செய்திருந்தாலும், அவர் அந்த உடன்படிக்கையை நினைத்துப் பார்க்கவில்லை. இப்போது பல வருஷங்களுக்கு பின்பு, தாவீதுக்கு யோனத்தானைப்பற்றி நினைவு வருகிறது.

தாவீது சவுலின் குடும்பத்தாருக்கு தயை செய்ய விரும்புகிறார். அதன் நிமித்தமாகவே, சவுலின் குடும்பத்தாரில் மீதியாயிருக்கிறவர்கள் யாராவது இன்னும் இருக்கிறார்களா என்று தாவீது விசாரிக்கிறார். தாவீதின் மனுஷர் அவருக்கு சவுலின் குடும்பத்தைப்பற்றி செய்தி சொல்லுகிறார்கள். அவர்கள் சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபா என்னும் பேருள்ளவனை தாவீதினிடத்தில் அழைத்து வருகிறார்கள்.

தாவீது ராஜா அவனைப் பார்த்து; "நீதானா சீபா" என்று கேட்கிறார்; அதற்கு அவன் "அடியேன்தான்" என்று ராஜாவுக்கு பணிவோடு பிரதியுத்தரம் சொல்லுகிறான். அப்பொழுது ராஜா சீபாவிடம், "தேவன் நிமித்தம் நான் சவுலின் குடும்பத்தாருக்குத் தயைசெய்யும்படி அவன் வீட்டாரில் யாதொருவன் இன்னும் மீதியாய் இருக்கிறானா" என்று கேட்கிறார். அதற்கு சீபா ராஜாவைப் பார்த்து: "இன்னும் யோனத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான்" (2சாமு 9:3) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

தாவீது ராஜா இஸ்ரவேலிலுள்ள எல்லோருக்கும் நீதியும் நியாயமும் செய்கிறார். இப்போது அவர் தயவும் செய்ய விரும்புகிறார் யாருக்கு நீதி செய்யவேண்டுமோ அவருக்கு நீதி செய்யவேண்டும். யாருக்கு தயவு செய்யவேண்டுமோ அவருக்கு தயவு செய்யவேண்டும்.

"அதைக் கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருந்தால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்தப்பட்டு, அது ஆசாரியனைச் சேரவேண்டும்" (எண் 5:8).

தாவீது யோனத்தான் நிமித்தம், சவுலின் குடும்பத்தாருக்கு தயவு செய்ய விரும்புகிறார். தாவீது கர்த்தருக்கு பயப்படுகிறவர். அவர் கர்த்தர்மீது விசுவாசமாயிருக்கிறவர். தாவீதின் மனதிலே கர்த்தருக்கு பயப்படும் பயம் இருப்பதினாலும், தாவீதின் இருதயத்திலே, பிறருக்கு தயவு செய்யவேண்டும் என்னும் இரக்க குணம் இருப்பதினாலும், தாவீது சவுலின் குடும்பத்தாருக்கு தயவு செய்ய விரும்புகிறார்.

சவுல் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்கு தீங்கு செய்தார். சவுல் தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று தீர்மானித்து, தன் சேனையோடு அவரைப் பின்தொடர்ந்தார். தாவீதோ இப்போது சவுலின் குடும்பத்தாருக்கு தயை செய்யவேண்டுமென்று விரும்புகிறார். சவுல் தனக்கு விரோதமாக செய்த தப்பிதங்களையெல்லாம் தாவீது மன்னித்து மறந்துவிடுகிறார்.

நம்முடைய வாழ்க்கையிலும் நமக்கு விரோதமாக பலர் தீங்கு செய்திருக்கலாம். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும். நமக்கு விரோதமாக அவர்கள் செய்த தீங்குகளையெல்லாம் மன்னித்து மறந்துவிட்டு, அவர்களுக்கு தயவு செய்ய வேண்டும்.

"தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்" (1பேது 3:9).

நாம் தீமையை மேற்கொள்ளவேண்டும். தீமையை நன்மையினால் வெல்லவேண்டும். நமக்கு கிருபையும் இரக்கமும் வேண்டுமென்றால், நாமும் பிறருக்கு கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கவேண்டும்.

யோனத்தானும் தாவீதும் நெருங்கிய சிநேகிதர்கள். அவர்கள் இருவரும் உடன்படிக்கையின் மூலமாய் தங்கள் சிநேகத்தை உறுதிபண்ணிக்கொண்டவர்கள். இதன் நிமித்தமாக, தாவீது யோனத்தானின் குடும்பத்தாருக்கு தயவு செய்ய விரும்புகிறார்.

நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்வதாக வாக்குப்பண்ணியிருந்தால், நம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நமக்கு நஷ்டம் வந்தாலும், நாம் சொன்னதை நிறைவேற்றவேண்டும். நம்மிடத்திலிருந்து வாக்குப்பெற்றவர்கள், நம்மிடத்தில் வந்து உதவி கேட்காவிட்டாலும், நாமே அவர்களிடம் சென்று, அவர்களுக்கு மனப்பூர்வமாய் உதவி செய்யவேண்டும். நம்முடைய வார்த்தைக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் மற்றவர்களுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் யாரையெல்லாம் சிநேகிக்கிறோமோ, அவர்கள் எல்லோருக்கும் நாம் உதவி செய்ய வேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. ஒருவரை சிநேகிக்கும்போது அவருக்கு உதவி செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடும் நிபந்தனையுமில்லை. ஆனாலும் நம்முடைய சிநேகம் உண்மையானதாகவும், அந்நியோன்னியமானதாகவும் இருக்கும்போது, நாம் நிச்சயமாகவே நம்முடைய சிநேகிதருக்கு உதவி செய்வோம்.

"உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயைகிடைக்கவேண்டும்; அவனோ சர்வவல்லவருக்குப் பயப்படாதேபோகிறான்" *(யோபு 6:14).*

நாம் நம்முடைய சிநேகிதர்களுக்கு உதவி செய்வது மாத்திரமல்ல, நம்முடைய சிநேகிதரின் குடும்பத்தாருக்கும் உதவி தேவைப்படும்போது, அவர்களுக்கும் உதவி செய்யவேண்டும். உதவி செய்வதற்கு எல்லை எதுவும் இல்லை.

தாவீதின் சிநேகிதனாகிய யோனத்தான் மரித்துப்போனான். ஆனாலும் தாவீது, "யோனத்தான்நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா" *(2சாமு 9:1)* என்று கேட்கிறார். தாவீது மறுபடியுமாய் சீபாவிடம், "தேவன் நிமித்தம் நான் சவுலின் குடும்பத்தாருக்குத் தயைசெய்யும்படி அவன் வீட்டாரில் யாதொருவன் இன்னும் மீதியாய் இருக்கிறானா" *(2சாமு 9:3)* என்று கேட்கிறார்.

தாவீது சவுலின் குடும்பத்தாருக்கு தயவு செய்ய விரும்புகிறார். தாவீது இந்த தயவைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய தயவு" என்று சொல்லுகிறார். தாவீது தேவன் நிமித்தம் சவுலின் குடும்பத்தாருக்கு தயவு செய்ய விரும்புகிறார்.

தாவீது யோனத்தானோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இந்த உடன்படிக்கைக்கு தேவனே சாட்சியாயிருக்கிறார் "அப்பொழுது யோனத்தான் தாவீதை நோக்கி: நீர் சமாதானத்தோடே போம், கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும், நடுநிற்கும் சாட்சி என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக்கொண்டதை நினைத்துக்கொள்ளும் என்றான்" *(1சாமு 20:42).*

தாவீது தேவன் நிமித்தம் சவுலின் குடும்பத்தாருக்கு தயவு செய்ய விரும்புகிறார். தேவனுடைய தயவு, தாவீதின் தயவுக்கு முன்மாதிரியாயிருக்கிறது. கர்த்தர் மனுஷர்மீது தயவு காண்பிப்பதுபோல, தாவீது சவுலின் குடும்பத்தாருக்கு தயவு காண்பிக்க விரும்புகிறார்.

"மேலும், நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயைசெய்யவேண்டியதும் அல்லாமல், கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் பூமியின்மேல் இராதபடிக்கு, வேர்அறுக்கும்போதும், நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடாமலும் இருக்கவேண்டும் என்றான்" *(1சாமு 20:14,15).*

யோனத்தான் தன்னிடத்தில் கேட்டுக்கொண்டதை தாவீது நினைவுகூர்ந்து, இப்போது யோனத்தான் நிமித்தம், அவனுடைய குடும்பத்தாரில் மீதியாயிருக்கிறவர்களுக்கு தயவு செய்ய விரும்புகிறார்.

சீபா தாவீது ராஜாவிடம் யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத்தைப்பற்றிய தகவல்களைச் சொல்லுகிறான். சீபா சவுலின் குடும்ப சொத்துகளை பராமரித்து வருகிறான். அவனுக்கு சவுலின் குடும்பத்தாரைப்பற்றிய விவரம் தெரிந்திருக்கிறது. இப்போது யோனத்தானுக்கு ஒரு குமாரன் உயிரோடிருக்கிறான். அவன் இரண்டு கால்களும் முடமானவன்.

"சவுலின் குமாரன் யோனத்தானுக்கு இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருந்தான்; சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து வருகிறபோது, அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது அவனுடைய தாதி அவனை எடுத்துக்கொண்டு ஓடிப் போனாள்; அவள் ஓடிப்போகிற அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான்; அவனுக்கு மேவிபோசேத் என்று பேர்" *(2சாமு 4:4).*

மேவிபோசேத் இப்போது லோதேபாரிலே அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டில் இருக்கிறான் *(2சாமு 9:4).* லோதேபார் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள கீலேயாத்திலுள்ளது. இங்கே மேவிபோசேத்தின் தாய் வழியிலே உறவினர்கள் இருக்கிறார்கள். சவுலும் யோனத்தானும் மரித்துப்போன பின்பு, மேவிபோசேத் தன் தாயாரோடுகூட இந்த ஊரிலே தங்கியிருக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தார் மேவிபோசேத்தை மறந்துவிட்டார்கள். அவனைப்பற்றி யாரும் நினைத்துப் பார்த்தாக தெரியவில்லை.

சீபா சவுலுடைய குடும்பத்தின் சொத்துக்களைப் பராமரித்ததினால், அவனுக்கு மேவிபோசேத்தைப்பற்றித் தெரிந்திருக்கிறது. அப்பொழுது தாவீதுராஜா மேவிபோசேத்தை லோதேபாரிலிருக்கிற அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டிலிருந்து அழைப்பிக்கிறார் *(2சாமு 9:5).* தாவீது மேவிபோசேத்தை அழைத்து வர சீபாவை அனுப்பியிருக்கவேண்டும்.

மாகீருக்கும் தாவீதுக்கும் பிரச்சனை எதுவுமில்லை. இவன் அம்மியேலின் குமாரன். இவனுடைய வீடு யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள லோதேபாரிலிருக்கிறது. மாகீர் சவுலின் குடும்பத்திலுள்ள ஒருவனுக்கு இதுவரையிலும் அடைக்கலம் கொடுத்திருக்கிறான். சவுல் தாவீதுக்கு சத்துருவாக இருந்தவன். மாகீருக்கு இதைப்பற்றியெல்லாம் தெரிந்திருக்கிறது. ஆனாலும் மாகீர் இரண்டு கால்களும் முடமான மேவிபோசேத்திற்கு தன் வீட்டிலே அடைக்கலம் கொடுத்திருக்கிறான்.

மேவிபோசேத்தை பிற்காலத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக்க வேண்டும் என்னும் எண்ணம் மாகீருக்கு இல்லை. மாகீருக்கு தாவீதின் மீதோ அல்லது தாவீதின் ராஜாசனத்தின்மீதோ வெறுப்போ விரோதமோ இல்லை. மாகீர் சவுலை நேசிக்கிறான். சவுலின் குடும்பத்தில் ஒருவனுக்கு இரண்டு கால்களும் முடமாயிருக்கும்போது, மாகீர் அவனுக்கு ஆதரவு கொடுக்கிறான்.

மாகீர் இயல்பாகவே இரக்க சுபாவம் கொண்டவன். பிற்காலத்தில் மாகீர் தாவீக்கும் உதவிசெய்கிறான். தாவீது தன் குமாரனாகிய அப்சலோமிடமிருந்து தப்பித்து ஓடும்போது, மாகீர் தாவீதுக்கு தேவையான உதவிகளை செய்கிறான்.

"இஸ்ரவேல் ஜனங்களும் அப்சலோமும் கீலேயாத் தேசத்திலே பாளயமிறங்கினார்கள். தாவீது மக்னாயீமில் சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்து ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரனும், லோதேபார் ஊரானான அம்மியேலின் குமாரன் மாகீரும், ரோகிலிம் ஊரானும் கீலேயாத்தியனுமாகிய பர்சிலாவும், மெத்தைகளையும், கலங்களையும், மண்பாண்டங்களையும், கோதுமையையும், வாற்கோதுமையையும், மாவையும், வறுத்த பயற்றையும், பெரும் பயற்றையும், சிறு பயற்றையும், வறுத்த சிறு பயற்றையும், தேனையும், வெண்ணெயையும், ஆடுகளையும், பால்கட்டிகளையும், தாவீதுக்கும் அவனோடிருந்த ஜனங்களுக்கும் சாப்பிடுகிறதற்குக் கொண்டுவந்தார்கள்; அந்த ஜனங்கள் வனாந்தரத்திலே பசியும் இளைப்பும் தவனமுமாயிருப்பார்கள் என்று இப்படிச் செய்தார்கள்" *(2சாமு 17:26-29)*.

சீபா லோதேபாருக்குப்போய் அங்கே மாகீரின் வீட்டிலிருந்த மேவிபோசேத்தை, எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வருகிறான். அவனை தாவீதுக்கு முன்பாக நிறுத்துகிறான். சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத் தாவீதினிடத்தில் வந்தபோது, அவன் தாவீதை முகங்குப்புற விழுந்து வணங்குகிறான் *(2சாமு 9:6)*.

மேவிபோசேத்தின் தகப்பனாராகிய யோனத்தான் உயிரோடிருந்தபோது, தாவீது யோனத்தானுக்கு இப்படித்தான் மரியாதை செலுத்தினார். அப்போது சவுல் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்தார். சவுலுக்கு அடுத்தபடியாக, இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அமருவதற்கு, அவருடைய குமாரன் யோனத்தான் ஆயத்தமாயிருந்தான். அப்போது தாவீது யோனத்தானை தரையிலே விழுந்து மூன்றுதரம் வணங்கினார்.

"பிள்ளையாண்டான் போனபின்பு, தாவீது தென்புறமான இடத்திலிருந்து எழுந்துவந்து, தரையிலே முகங்குப்புற விழுந்து, மூன்றுவிசை வணங்கினான்; அவர்கள் ஒருவரை ஒருவர் முத்தஞ்செய்து அழுதார்கள்; தாவீது மிகவும் அழுதான்" *(1சாமு 20:41)*.

இப்போது நிலமை முற்றிலும் மாறியிருக்கிறது. தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத், தாவீதுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து வணங்குகிறான்.

தாவீது மேவிபோசேத்தை அன்போடு ஏற்றுக்கொள்கிறார். அப்பொழுது தாவீது: "மேவிபோசேத்தே" என்று அன்போடு அழைக்கிறார்; அதற்கு அவன்: "இதோ, அடியேன்" என்று சொல்லுகிறான். தாவீது மேவிபோசேத்தைப் பார்த்து: "நீ பயப்படாதே; உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயைசெய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்" *(2சாமு 9:6,7)* என்று ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

மேவிபோசேத்தைப் பார்த்தபோது தாவீதுக்கு ஆச்சரியமாயும் சந்தோஷமாயும் இருக்கிறது. யோனத்தான் தாவீதுக்கு ஆத்தும சிநேகிதன். மேவிபோசேத் யோனத்தானின் குமாரன். தாவீது மேவிபோசேத்தைப் பார்க்கும்போது, தன்னுடைய ஆத்தும சிநேகிதனாகிய யோனத்தானைப் பார்ப்பதுபோன்ற உணர்வு அவருக்குள் உண்டாயிற்று.

மேவிபோசேத்திற்கு தாவீதைப்பற்றித் தெரியாது. தாவீதுக்கும் தன்னுடைய தகப்பனாராகிய யோனத்தானுக்கும் இடையே இருந்த ஆத்தும சிநேகிதத்தைப்பற்றியும் அவனுக்குத் தெரியாது. யோனத்தான் மரித்தபோது மேவிபோசேத்திற்கு ஐந்து வயதாயிற்று. இப்போது மேவிபோசேத் ஒரு குமாரனுக்கு தகப்பன்.

தாவீது தன்னை எருசலேமுக்கு ஏன் வர சொல்லியிருக்கிறார் என்று மேவிபோசேத்திற்கு தெரியவில்லை. தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜா. மேவிபோசேத்தோ இரண்டு கால்களும் முடமானவன். அவன் தாவீது ராஜாவை பார்த்தவுடனே அவருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து வணங்குகிறான். ராஜாவைப் பார்த்து பயப்படுகிறான். மேவிபோசேத்தின் சரீரம் பயத்தினால் நடுங்குகிறது. தாவீது அவனைப் பார்த்து, "நீ பயப்படாதே" என்று அன்போடு சொல்லுகிறார்.

தாவீது மேவிபோசேத்தை நல்ல காரியமாகத்தான் எருசலேமுக்கு வர வழைத்திருக்கிறார். தாவீதின் மனதிலே மேவிபோசேத்திற்கு விரோதமான திட்டம் எதுவுமில்லை. தாவீது அவனுக்கு தயவு செய்ய விரும்புகிறார். அவன் யோனத்தானின் குமாரன். யோனத்தானின் நிமித்தமாய், அவனுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கு தயவு செய்யவேண்டும் என்பது தாவீதின் விருப்பம். யோனத்தானின் குடும்பத்தில், இப்போது இரண்டு கால்களும் முடமான மேவிபோசேத் மாத்திரமே உயிரோடிருக்கிறான்.

தாவீது மேவிபோசேத்தைப் பார்த்து, "உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்கு தயை செய்வேன்" என்று தாவீது சொல்லுகிறார். தாவீது அவனிடம், "உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்" *(2சாமு 9:7)* என்றும் சொல்லுகிறார். தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்தின்மேல் அதிகாரம் இருக்கிறது. தாவீது தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, சவுலின் நிலங்களையெல்லாம், மேவிபோசேத்திற்கு திரும்ப கொடுக்கிறார்.

யோனத்தானின் குமாரனாகிய இஸ்போசேத் தாவீதுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினான். சவுலின்நிலங்களெல்லாம் அப்போது இஸ்போசேத்தின் பொறுப்பிலிருந்தது. இஸ்போசேத் கலகக்காரராயிருந்ததினால், தாவீது சவுலின் குடும்ப நிலங்களையெல்லாம், இஸ்ரவேல் தேசத்திற்கு சொந்தமாக்கிவிட்டார். தாவீது இப்போது அந்த நிலங்களை, யோனத்தானின் குமாரனாகிய, மேவிபோசேத்திற்கு திரும்ப கொடுப்பதாக வாக்குப் பண்ணுகிறார். இதன் மூலமாக வரும் வருமானம் மேவிபோசேத்திற்கு ஆதரவாயிருக்கும். தாவீது யோனத்தானுக்கு உண்மையான சிநேகிதன். மெய்யான சிநேகம் தாராளமான உதவிகளை செய்யும்.

தாவீது மேவிபோசேத்திற்கு சவுலின் நிலங்களையெல்லாம் திரும்பக்கொடுக்கிறார். இது அவனுக்கு கொடுக்கப்படும் பெரிய வெகுமதி. இந்த நிலங்கள் மூலமாக வரும் வருமானம், மேவிபோசேத்தின் குடும்பத்தை பராமரிப்பதற்கு போதுமானது. ஆனால் தாவீது அவனை இன்னும் அதிகமாய் ஆசீர்வதிக்க விரும்புகிறார். தாவீது மேவிபோசேத்திடம், "உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம், நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்" என்று சொல்லுகிறார்.

மேவிபோசேத் தாவீதின் அரண்மனையில், அவருக்கு நிரந்தர விருந்தாளியாகயிருக்கிறார். யோனத்தானின் முகச்சாயல் மேவிபோசேத்தின் முகத்தில் தெரிகிறது. மேவிபோசேத்தின் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம், தாவீதுக்கு யோனத்தானைப் பார்க்கும் சந்தோஷமுண்டாகும். மேவிபோசேத்திற்கு தாவீதின் அரண்மனையில், ராஜாவின் பந்தியிலே, நேர்த்தியான போஜனம் திருப்தியாய்க் கிடைக்கிறது.

மேவிபோசேத் இரண்டு கால்களும் முடமானவன். அவன் பார்ப்பதற்கு அழகாயிருக்கமாட்டான். தாவீதோ மேவிபோசேத்தின் அழகைப் பார்க்கவில்லை. அவனுடைய முடமான கால்களைப் பார்க்கவில்லை. தாவீது மேவிபோசேத்திற்குள்ளே, தன்னுடைய சிநேகிதன் யோனத்தானைப் பார்க்கிறார். யோனத்தான் நிமித்தமாய், அவனுடைய குமாரன் மேவிபோசேத்தை, தாவீது தன்னுடைய குடும்பத்தில் ஒருவனாக ஏற்றுக்கொள்கிறார்.

தாவீதின் அன்பான உபசரிப்பை மேவிபோசேத் பணிவோடு ஏற்றுக்கொள்கிறான். தாவீது தனக்கு ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொன்னபோது, மேவிபோசேத் தாவீதை வணங்குகிறான். அவன் தாவீதை நோக்கி, "செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம்" *(2சாமு 9:8)* என்று பணிவோடு சொல்லுகிறான். தாவீது மேவிபோசேத்திற்கு அதிகமான தயவு செய்கிறார். இவ்வளவு பெரிய தயவுக்கு தான் பாத்திரவானல்ல என்பதை நினைத்து, மேவிபோசேத் தன்னை தாவீதுக்கு முன்பாக வெகுவாகத் தாழ்த்துகிறான்.

சீபா
2சாமு 9:9-13

2சாமு 9:9. ராஜா சவுலின் வேலைக்காரனாகிய சீபாவை அழைப்பித்து, அவனை நோக்கி: சவுலுக்கும் அவர் வீட்டார் எல்லாருக்கும் இருந்த யாவையும் உன் எஜமானுடைய குமாரனுக்குக் கொடுத்தேன்.

2சாமு 9:10. ஆகையால் நீ உன் குமாரரையும் உன் வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு, உன் எஜமானுடைய குமாரன் புசிக்க அப்பம் உண்டாயிருக்கும்படி, அந்த நிலத்தைப் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்ப்பாயாக; உன் எஜமானுடைய குமாரன் மேவிபோசேத் நித்தம் என் பந்தியிலே அப்பம் புசிப்பான் என்றான்; சீபாவுக்குப் பதினைந்து குமாரரும் இருபது வேலைக்காரரும் இருந்தார்கள்.

2சாமு 9:11. சீபா, ராஜாவை நோக்கி; ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் உமது அடியானாகிய நான் செய்வேன் என்றான். ராஜகுமாரரில் ஒருவனைப் போல, மேவிபோசேத் என் பந்தியிலே அசனம் பண்ணுவான் என்று ராஜா சொன்னான்.

2சாமு 9:12. மேவிபோசேத்திற்கு மீகா என்னும் பேருள்ள சிறுவனாகிய ஒரு குமாரன் இருந்தான், சீபாவின் வீட்டிலே குடியிருந்த யாவரும் மேவிபோசேத்திற்கு வேலைக்காரராயிருந்தார்கள்.

2சாமு 9:13. மேவிபோசேத் ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம் பண்ணுகிறவனாயிருந்தபடியினால், எருசலேமிலே குடியிருந்தான்; அவனுக்கு இரண்டு காலும் முடமாயிருந்தது.

தாவீது சவுலின் நிலங்களை, அவருடைய பேரனாகிய மேவிபோசேத்திற்கு கொடுப்பதற்கு, சீபாவை சாட்சியாக நியமிக்கிறார். தாவீது ராஜா சவுலின் வேலைக்காரனாகிய சீபாவை அழைப்பித்து, அவனை நோக்கி: "சவுலுக்கும் அவர் வீட்டார் எல்லாருக்கும் இருந்த யாவையும் உன் எஜமானுடைய குமாரனாகிய மேவிபோசேத்திற்குக் கொடுத்தேன்" *(2சாமு 9:9)* என்று சொல்லுகிறார்.

சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தபோது அவருக்கு ஏராளமான நிலங்கள் இருந்தது. வயல் நிலங்களும், திராட்சத்தோட்டங்களும் சவுலுக்கு சொந்தமாயிருந்தது.

"சவுல் தன்னண்டையில் நிற்கிற தன் ஊழியக்காரரைப் பார்த்து: பென்யமீன் புத்திரரே கேளுங்கள்*;* ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் கொடுப்பானோ*?* உங்களெல்லாரையும் ஆயிரத்துக்கு அதிபதிகளும் நூற்றுக்கு அதிபதிகளுமாக வைப்பானோ*?*" *(1சாமு 22:7).*

சவுலின் நிலங்கள் ஏராளமாயிருப்பதினால், மேவிபோசேத்தினால் அதைப் பராமரிக்க முடியாது. மேவிபோசேத் இரண்டு கால்களும் முடமானவன். ராஜா அவனை எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனையில் தன்னோடுகூட இருக்குமாறு சொல்லியிருக்கிறார். மேவிபோசேத்திற்கு ராஜாவின் பந்தியில் போஜனம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. ஆகையினால் சவுலின் நிலங்களைப் பயிரிடுவதற்கும், அதைப் பராமரிப்பதற்கும் ஒரு நம்பிக்கையுள்ள நபர் வேண்டும்.

தாவீது சவுலின் நிலங்களை, மேவிபோசேத்திற்காக பராமரிக்கும் பொறுப்புக்களையும், நிலத்தை பயிரிட்டு அதின் பலனை சேர்க்கும் பொறுப்பையும் சீபாவிடம் ஒப்படைக்கிறார். சீபாவுக்கு பதினைந்து குமாரரும், இருபது வேலைக்காரரும் இருக்கிறார்கள்.

தாவீது சீபாவை நோக்கி, "நீ உன் குமாரரையும் உன் வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு, உன் எஜமானுடைய குமாரன் புசிக்க அப்பம் உண்டாயிருக்கும்படி, அந்த நிலத்தைப் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்ப்பாயாக; உன் எஜமானுடைய குமாரன் மேவிபோசேத் நித்தம் என் பந்தியிலே அப்பம் புசிப்பான்" *(2சாமு 9:10)* என்று சொல்லுகிறார்.

தாவீது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் கர்த்தராகவும், தேவகுமாரனாகவும் இருக்கிறார். ஆசீர்வாதமான எல்லா ஊற்றுக்களுக்கும் கிறிஸ்துவானவரே ஆதாரமாயிருக்கிறார். தாவீது மேவிபோசேத்திற்கு தயவு காண்பித்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவோ, பாவத்தில் விழுந்து கிடக்கிற மனுக்குலத்திற்கு, தம்முடைய அன்பையும், தயவையும், கிருபையையும் காண்பிக்கிறார்.

தாவீது மேவிபோசேத்திற்கு தயவு காண்பிக்கவேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. தாவீது யோனத்தான் நிமித்தமாக, யோனத்தானுடைய குமாரனுக்கு தயவு காண்பிக்கிறார். மேவிபோசேத் இரண்டு கால்களும் இழந்து முடவனாயிருப்பதுபோல, மனுக்குலமும் பாவத்தில் விழுந்து, தன்னுடைய மேன்மையையும், மகிமையையும் இழந்து நிற்கிறது.

மேவிபோசேத் தாவீதுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியதுபோல, நாமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். தாவீது சவுலின் நிலங்களை மேவிபோசேத்திற்கு திரும்பவும் கொடுத்தார். அதுபோலவே, நம்முடைய தேவனாகிய கர்த்தர், நாம் இழந்துபோன மேன்மைகளையும், ஆசீர்வாதங்களையும், நமக்கு திரும்பவும் கொடுப்பார்.

நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால், சாபம் இந்த உலகத்திற்குள் பிரவேசித்தது. மனுக்குலம் ஆசீர்வாதத்தை இழந்துவிட்டது. ஆதாமின் பாவத்தினால், மனுக்குலத்திற்கு தேவனோடு ஐக்கியமில்லாமல் போயிற்று. நாம் இழந்துபோன அந்த ஐக்கியத்தை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக திரும்பவும் பெற்றுக்கொள்கிறோம்.

மேவிபோசேத் தாவீது ராஜாவின் பந்தியிலே போஜனம்பண்ணும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டான். விசுவாசிகளாகிய நமக்கும், பரலோகத்திலே, கர்த்தரோடு நித்தியகாலமாக பந்தியிருக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

தாவீது ராஜா சீபாவிடம், சவுலின் நிலத்தைப் பயிரிட்டு, அதன் பலனை சேர்ப்பாயாக என்று கட்டளையிடுகிறார். அப்பொழுது, சீபா, ராஜாவை நோக்கி; "ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் உமது அடியானாகிய நான் செய்வேன்" *(2சாமு 9:11)* என்று சொல்லுகிறான். அப்பொழுது தாவீது ராஜா சீபாவிடம், "ராஜகுமாரரில் ஒருவனைப்போல, மேவிபோசேத் என் பந்தியிலே அசனம் பண்ணுவான்" என்று சொல்லுகிறார்.

மேவிபிபோசேத் ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம்பண்ணுகிறவனாயிருந்தபடியினால், எருசலேமிலே குடியிருக்கிறான்; அவனுக்கு இரண்டு காலும் முடமாயிருக்கிறது *(2சாமு 9:13)*. ஆனாலும் தாவீது மேவிபோசேத்தை வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. தாவீது அவனை தன்னுடைய அரண்மனையில் அன்போடு ஏற்றுக்கொண்டு, உபசரிக்கிறார்.

மேவிபோசேத்திற்கு மீகா என்னும் பேருள்ள சிறுவனாகிய ஒரு குமாரன் இருக்கிறான், சீபாவின் வீட்டிலே குடியிருந்த யாவரும் மேவிபோசேத்திற்கு வேலைக்காரராயிருக்கிறார்கள் *(2சாமு 9:12)*.

10 அதிகாரம்

தாவீது அம்மோன் புத்திரர்மீதும், அவர்களுக்கு உதவியாக வந்த சீரியர்மீதும் யுத்தம்பண்ணுகிறார். தாவீது அம்மோனின் ராஜாவாகிய ஆனூனுக்கு சமாதான தூதுவரை அனுப்புகிறார் *(2சாமு 10:1,2)*. ஆனூன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து அவர்களை அவமானப்படுத்துகிறான் *(2சாமு 10:3,4)*. தாவீது தன்னுடைய ஊழியக்காரரை எரிகோவிலே தங்கச் சொல்லுகிறார் *(2சாமு 10:5)*. அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள் *(2சாமு 10:6)*.

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக தன்னுடைய சேனையை அனுப்புகிறார். யோவாபும், அபிசாயும் தாவீதின் சேனைக்கு தளபதிகளாயிருக்கிறார்கள் *(2சாமு 10:7-12)*. தாவீதின் சேனை அம்மோன் புத்திரரையும், அவர்களுக்கு உதவியாக வந்த சீரியரையும் முறியடிக்கிறார்கள் *(2சாமு 10:13,14)*.

சீரியர்கள் தாவீதுக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ண வருகிறார்கள். இந்த யுத்தத்திலும் சீரியர்கள் முறியடிக்கப்படுகிறார்கள் *(2சாமு 10:15-19)*.

ஆனூன்
2சாமு 10:1-5

2சாமு 10:1. அதன்பின்பு அம்மோன் புத்திரரின் ராஜா மரித்துப்போனான்; அவன் குமாரனாகிய ஆனூன் அவன் பட்டத்திற்கு ராஜாவானான்.

2சாமு 10:2. அப்பொழுது தாவீது: ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குத் தயை செய்ததுபோல, அவன் குமாரனாகிய இவனுக்கு நான் தயைசெய்வேன் என்று சொல்லி, அவன் தகப்பனுக்காக அவனுக்கு ஆறுதல் சொல்ல, தன் ஊழியக்காரரை அனுப்பினான்; தாவீதின் ஊழியக்காரர் அம்மோன் புத்திரரின் தேசத்திலே வந்தபோது,

2சாமு 10:3. அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தங்கள் ஆண்டவனாகிய ஆனூனைப் பார்த்து: தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது, உம்முடைய தகப்பனைக் கனம்பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? இந்தப் பட்டணத்தை ஆராய்ந்து, உளவுபார்த்து, அதைக் கவிழ்த்துப்போட அல்லவோ தாவீது தன் ஊழியக்காரரை உம்மிடத்திற்கு அனுப்பினான் என்றார்கள்.

2சாமு 10:4. அப்பொழுது ஆனூன்: தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒருபக்கத்துத் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப்பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பிவிட்டான்.

2சாமு 10:5. அது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, ராஜா, அந்த மனுஷர் மிகவும் வெட்கப்பட்டபடியினால், அவர்களுக்கு எதிராக ஆட்களை அனுப்பி, உங்கள் தாடி வளருமட்டும் நீங்கள் எரிகோவிலிருந்து, பிற்பாடு வாருங்கள் என்று சொல்லச் சொன்னான்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் தேசத்திற்கு அண்டைதேசத்தாராயிருக்கிறார்கள். தாவீது இஸ்ரவேலுக்கு அருகாமையிலுள்ள எல்லா தேசத்தாரோடும் சமாதானமாயிருக்கிறார். அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸோடு தாவீது சிநேகமாயிருக்கிறார். அதன்பின்பு அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் மரித்துப்போகிறான்; அவன் குமாரனாகிய ஆனூன் அவன் பட்டத்திற்கு ராஜாவாகிறான் *(2சாமு 10:1)*.

நாகாஸ் உயிரோடிருந்தபோது அவன் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறான். தனக்கு தயை செய்த நாகாசுக்கு, தாவீது நன்றிசொல்ல விரும்புகிறார். நாகாசின் குமாரனாகிய ஆனூனுக்கு தாவீது தயை செய்ய விரும்புகிறார். நாகாஸ் மரித்துப்போனதற்காக, அவனுடைய குமாரன் ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல தாவீது தன்னுடைய சேவகரை அனுப்புகிறார் *(2சாமு 10:2)*.

தாவீதுக்கு யாராவது தயவு செய்தால், தாவீது அவர்களுக்கு பலமடங்கு அதிகமாக தயவு செய்வார். நாகாஸ் தாவீதுக்கு தயவு செய்ததினால், அதற்கு பிரதி உபகாரமாக, தாவீது நாகாசின் குமாரன் ஆனூனுக்கு தயவு செய்ய விரும்புகிறார். பெற்றோர் மரித்துப்போகும்போது, அவர்களுடைய பிள்ளைகள் மிகுந்த வேதனையிலிருப்பார்கள். பிள்ளைகளுக்கு பெரியவர்கள் ஆறுதல் சொல்லவேண்டும்.

மரித்துப்போனவர்களின் சிநேகிதர்கள், அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களுடைய துக்கத்தைக் குறைக்கவேண்டும். தங்கள் பெற்றோரின் சிநேகிதர்கள், தங்களுக்கும் சிநேகிதர்களாகயிருப்பார்கள் என்னும் ஆறுதலான உணர்வு பிள்ளைகளுக்கு வரவேண்டும். மரித்துப்போனவர்களின் பிள்ளைகளை கைவிட்டுவிடாமல், அவர்களுக்கு தங்களுடைய சிநேகத்தையும், ஐக்கியத்தையும் கொடுத்து அவர்களுக்கு ஆறுதலாயிருக்கவேண்டும்.

தாவீதின் ஊழியக்காரர் அம்மோன் புத்திரரின் தேசத்திலே வருகிறார்கள். அவர்கள் மரித்துப்போன நாகாசுக்காக, அவனுடைய குமாரன் ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல வருகிறார்கள். தாவீது ராஜா இதற்காகவே தன்னுடைய ஊழியக்காரர்களை அம்மோன் புத்திரரின் தேசத்திற்கு அனுப்பியிருக்கிறார்.

அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தாவீதைப் பகைக்கிறார்கள். அவர்கள் தாவீதின்மீது சந்தேகப்படுகிறார்கள். ஆனூன் தன்னுடைய பிரபுக்களின் ஆலோசனைகளைக் கேட்டு, தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்துகிறான்.

தாவீதின் ஊழியக்காரர்கள் ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல வரவில்லை என்றும், அவர்கள் அம்மோன் புத்திரரின் பட்டணத்தை ஆராய்ந்து உளவு பார்க்க வந்திருக்கிறார்கள் என்றும், பிரபுக்கள் ஆனூனுக்கு தவறான செய்தியை சொல்லுகிறார்கள். தாவீது அனுப்பின ஊழியக்காரர்கள் ஸ்தானாபதிகள் அல்ல என்றும், அவர்கள் வேவுகாரர்கள் என்றும், பிரபுக்கள் ஆனூனை நம்ப வைக்கிறார்கள்.

பிறருக்கு தீங்கு செய்கிற துன்மார்க்கர்கள் மற்றவர்களை நம்பமாட்டார்கள். தங்களைப்போலவே அவர்களும் தங்களுக்கு தீங்கு செய்வார்கள் என்று அவர்களைப்பற்றி சந்தேகப்படுவார்கள். அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் மற்ற தேசத்து ஜனங்களை நேசிக்கமாட்டார்கள். பக்கத்து தேசத்தின் ராஜாக்களோ, பிரபுக்களோ மரித்துப்போனால்கூட, அவர்களுக்கு ஆறுதல் சொல்லமாட்டார்கள்.

அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் சிநேகிதர்களைப் பிரித்து, அவர்களை பகையாளியாக்கிவிடுகிறார்கள். சிநேகமான வார்த்தைகளுக்கும், ஆறுதலான வார்த்தைகளுக்கும் தப்பிதமான விளக்கங்களைக் கொடுத்து, அவர்களுக்குள்ளே பகையை மூட்டிவிடுகிறார்கள்.

அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தங்கள் ஆண்டவனாகிய ஆனூனைப் பார்த்து: "தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது, உம்முடைய தகப்பனைக் கனம்பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? இந்தப் பட்டணத்தை ஆராய்ந்து, உளவுபார்த்து, அதைக் கவிழ்த்துப்போட அல்லவோ தாவீது தன் ஊழியக்காரரை உம்மிடத்திற்கு அனுப்பினான்" (2சாமு 10:3) என்று சொல்லுகிறார்கள்.

ஆனூன் தன்னுடைய பிரபுக்களின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறான். ஆனூன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒருபக்கத்துத் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப்பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பிவிடுகிறான் (2சாமு 10:4).

ஆனூன் தாவீதின் ஊழியக்காரர்களை அவமானப்படுத்துகிறான். ஆனூனிடம் நல்ல ஆவி இல்லை. அவனை பொல்லாத ஆவி அலைக்கழிக்கிறது. ஆனூனுக்கு ராஜாவாயிருக்கும் தகுதியில்லை. ஆனூனின் தகப்பன் நாகாஸ் நல்லவன். நாகாஸ் தாவீதோடு சிநேகமாயிருந்தவன். அவன் தாவீதுக்கு தயை செய்தவன்.

நாகாஸ் மரித்துப்போனபின்பு, ஆனூன் திடீரென்று அம்மோன் புத்திரரின் தேசத்திற்கு ராஜாவாகிவிட்டான். ஆனூனுக்கு ராஜாசனம்பண்ண அனுபவமுமில்லை, முதிர்ச்சியுமில்லை. அவனுக்கு ஆலோசனை சொல்லுகிற பிரபுக்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். சிங்காசனத்தில் உட்காருவதற்கு தகுதியில்லாத ஆனூன், அம்மோன் புத்திரரை ஆளுகை செய்கிறான்.

ஒரு தேசத்திற்கு, மற்ற தேசத்திலிருந்து ஸ்தானாபதிகள் வரும்போது, அந்த தேசத்தின் ராஜா ஸ்தானாபதிகளை கனம்பண்ணவேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். இது எல்லா தேசங்களிலும் கடைப்பிடிக்கப்படும் பொதுவான சட்டம். ஆனால் ஆனூனுக்கு, ராஜ்யபாரத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவன் தன் ராஜாசனத்தின் மேன்மையை அசட்டைபண்ணுகிறான். தாவீது அனுப்பின ஸ்தானாபதிகளை அவமானப்படுத்துகிறான்.

ஸ்தானாபதிகள் யுத்தவீரர்களைப்போல வரமாட்டார்கள். அவர்களிடத்தில் பட்டயம் இருக்காது. தங்கள் தேசத்து ராஜா அனுப்பின செய்திச்சுருள் மாத்திரமே இருக்கும். ஸ்தானாபதிகளின் கையில் ஆயுதத்திற்கு பதிலாக ஓலை இருக்கும். அவர்கள் நிராயுதபாணிகளாயிருப்பார்கள். ஆனால் ஆனூனோ, தாவீதின் ஊழியக்காரரை, கொள்ளைக்காரராகவும், கொலைகாரராகவும், வேவுகாரராகவும் பாவிக்கிறான்.

ஆனூன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒரு பக்கத்து தாடியை சிரைத்துவிடுகிறான். அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிட மட்டும் வைத்துவிட்டு மற்ற பாதியை கத்தரித்துப்போடுகிறான். இப்போது தாவீதின் ஊழியக்காரர், ஆனூனுடைய அரண்மனையில் கோமாளிகளைப்போலவும், வேடிக்கைப் பொருட்களைப்போலவும் இருக்கிறார்கள். ஆனூன் தாவீதின் ஊழியக்காரர்களை அவமானப்படுத்தி அனுப்பிவிடுகிறான்.

ஆனூன் தன்னுடைய ஊழியக்காரரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான் என்னும் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீதின் ஊழியக்காரர் அம்மோன் புத்திரரின் தேசத்திலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எருசலேமுக்கு வருவதற்கே வெட்கப்படுகிறார்கள். அவர்களுடைய ஒரு பக்கத்து தாடி சிரைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வஸ்திரங்கள் இருப்பிட மட்டும் வைக்கப்பட்டு, மற்ற பாதி கத்தரித்துப்போடப்பட்டிருக்கிறது. அவர்கள் பார்வைக்கு அலங்கோலமாயிருக்கிறார்கள்.

தாவீதின் ஊழியக்காரர், அம்மோன் புத்திரரின் தேசத்திலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வரும்போது, தாவீது தன்னுடைய ஆட்களை அவர்களுக்கு எதிராக அனுப்புகிறார். அவர்களை எருசலேமுக்கு வரவேண்டாம் என்றும், அவர்கள் எரிகோவில் தங்கியிருக்கட்டும் என்றும், அவர்களுடைய தாடி வளருமட்டும் அவர்கள் எரிகோவில் இருந்துவிட்டு, அதன் பிற்பாடு அவர்கள் எருசலேமுக்கு வரலாம் என்றும் தாவீது செய்தி சொல்லியனுப்புகிறார்.

தாவீதின் ஊழியக்காரர்கள் எரிகோவிலே, மற்றவர்களுக்கு தெரியாமல், ஒரு தனிமையான இடத்திலிருக்கிறார்கள். சிரைக்கப்பட்ட தாடி வளருமட்டும் அவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் தங்கியிருக்கும் வீட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள். அவர்கள் மிகவும் வெட்கப்பட்ட படியினால் வெளிஆட்களோடு பேசவும் மாட்டார்கள், பழகவும் மாட்டார்கள்.

ஆனூன் தாவீதின் ஊழியக்காரருடைய ஒரு பக்கத்து தாடியை சிரைத்திருக்கிறான். சிரைக்கப்பட்ட தாடி, மறுபக்கத்து தாடியைப்போல சீராக வளரவேண்டும். அதுவரையிலும் அவர்கள் எரிகோவில் தங்கியிருக்கவேண்டும். யூதர்கள் தங்கள் தாடிகளை நீளமாக வளர்ப்பார்கள். நீளமான தாடி யூதர்களுக்கு தங்கள் ஜனத்தார் மத்தியில் மதிப்பையும் மரியாதையையும் கொடுக்கும். யூதர்களில் வயதான பெரியவர்கள் நீளமான தாடியை வளர்ப்பது வழக்கம்.

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனூன் தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்தினான். பிறரை அவனமானப்படுத்துவது அநீதியானது. அது அக்கிரமமான செயல். நாம் மற்றவர்களுடைய பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும் மதிப்பு கொடுக்கவேண்டும். மற்றவர்களின் கலாச்சாரத்தை நாம் ஒருபோதும் அவமானப்படுத்தவும் கூடாது. நிந்திக்கவும் கூடாது. அது அநீதியான செயல்.

சிரைக்கப்பட்ட தாடி மறுபடியும் வளரும். தாவீதின் ஊழியக்காரர் இப்போது அவமானப்பட்டாலும், அவர்களுடைய தாடி மறுபடியும் வளரும்போது, அவர்களுடைய நிந்தை அவர்களைவிட்டு நீங்கும். அதன் பின்பு அவர்களை அவமானப்படுத்திய ஆனூனுக்கு அவமானமுண்டாகும்.

"உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு; காரியசித்தயுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே" *(சங் 37:6,7).*

அம்மோன் புத்திரர்
2சாமு 10:6-14

2சாமு 10:6. அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஸ்தானாபதிளை அனுப்பி, பெத்ரேகோப் தேசத்துச் சீரியரிலும், சோபாவிலிருக்கிற சீரியரிலும் இருபதினாயிரம் காலாட்களையும், மாக்காதேசத்து ராஜாவினிடத்தில் ஆயிரம்பேரையும், இஷ்தோபிலிருக்கிற பன்னீராயிரம்பேரையும், கூலிப்படையாக அழைப்பித்தார்கள்.

2சாமு 10:7. அதைத் தாவீது கேள்விபட்டபோது, யோவாபையும் பராக்கிரமசாலிகளாகிய சமஸ்த இராணுவத்தையும் அனுப்பினான்.

2சாமு 10:8. அம்மோன் புத்திரர் புறப்பட்டு, ஒலிமுகவாசலண்டையிலே போர்செய்ய அணிவகுத்து நின்றார்கள்; ஆனாலும் சோபாவிலும் ரேகோபிலுமிருந்துவந்த சீரியரும், இஷ்தோபிலும் மாக்காவிலுமிருந்து வந்த மனுஷரும், வெளியிலே பிரத்தியேகமாயிருந்தார்கள்.

2சாமு 10:9. யோவாபோ இராணுவங்களின் படைமுகம் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிறதைக் காண்கையில், அவன் இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட எல்லா இராணுவங்களிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து, அதைச் சீரியருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தி,

2சாமு 10:10. மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தும்படி, தன் சகோதரனாகிய அபிசாயினிடத்தில் ஒப்புவித்து:

2சாமு 10:11. சீரியர் கைமிஞ்சுகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும்; அம்மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன்.

2சாமு 10:12. தைரியமாயிரு; நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்; கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றான்.

2சாமு 10:13. யோவாபும் அவனோடிருந்த ஜனமும் சீரியர்மேல் யுத்தம்பண்ணக் கிட்டினார்கள்; அவர்கள் அவனுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்.

2சாமு 10:14. சீரியர் முறிந்தோடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் அபிசாயிக்கு முன்பாக முறிந்தோடிப் பட்டணத்திற்குள் புகுந்தார்கள்; அப்பொழுது யோவாப் அம்மோன் புத்திரரை விட்டுத் திரும்பி எருசலேமுக்கு வந்தான்.

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனூன், தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான். இந்த செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீது இதன் நிமித்தமாக அம்மோன் புத்திரர்மீது கோபப்படுகிறார். அம்மோன் புத்திரர் தாவீதுக்கு அருவருப்பானவர்களாயிருக்கிறார்கள். தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாகக் கோபப்படுவதை, அம்மோன் புத்திரரும் அறிந்துகொள்கிறார்கள்.

அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள். தாவீதின் சேனை மிகவும் பெரியது. அது அதிக பெலமுள்ளது. தாவீதின் சேனையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அம்மோன் புத்திரரின் சேனை எண்ணிக்கையில் சிறியது. பலவீனமானது.

தங்களால் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது என்று அம்மோன் புத்திரருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இதனால் அம்மோன் புத்திரர் தங்களுடைய சேனையைப் பலப்படுத்துவதற்கு, பக்கத்து தேசங்களிலுள்ள யுத்த வீரர்களை கூலிப்படையாக அழைப்பிக்கிறார்கள்.

அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஸ்தானாபதிகளை அனுப்பி, பெத்ரேகோப் தேசத்துச் சீரியரிலும், சோபாவிலிருக்கிற சீரியரிலும் இருபதினாயிரம் காலாட்களையும், மாக்காதேசத்து ராஜாவினிடத்தில் ஆயிரம்பேரையும், இஷ்தோபிலிருக்கிற பன்னீராயிரம்பேரையும், கூலிப்படையாக அழைப்பிக்கிறார்கள் (2சாமு 10:6).

அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள். அவர்கள் தங்களுடைய சேனையை பலப்படுத்துகிறார்கள். அம்மோன் புத்திரரைப்பற்றிய செய்தியை தாவீதும் கேள்விப்படுகிறார். அவர் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண யோவாபையும், பராக்கிரமசாலிகளாகிய சமஸ்த இராணுவத்தையும் அனுப்புகிறார். இஸ்ரவேலின் சேனைக்கு யோவாப் தளபதியாயிருக்கிறார்.

தாவீதுக்கு யுத்த தந்திரமும், யுத்த வியூகமும் நன்றாய்த் தெரியும். அம்மோன் புத்திரர் புறப்பட்டு, ஒலிமுகவாசலண்டையிலே போர்செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள்; ஆனாலும் சோபாவிலும் ரேகோபிலுமிருந்து வந்த சீரியரும், இஷ்தோபிலும் மாக்காவிலுமிருந்து வந்த மனுஷரும், வெளியிலே பிரத்தியேகமாயிருக்கிறார்கள் (2சாமு 10:8).

அம்மோன் புத்திரரின் யுத்த அணிவகுப்புக்களையும், யுத்த வியூகங்களையும் தாவீது கேள்விப்படுகிறார். ராப்பா அம்மோன் புத்திரரின் தலைநகரம். மேதாபா அம்மோன் புத்திரரின் எல்லைப்பட்டணம். அம்மோன் புத்திரரின் படைகள் ராப்பாவின் ஒலிமுகவாசலண்டையில் அணிவகுத்து நிற்கிறார்கள். தாவீதும் அவருடைய சேனையும் ராப்பா பட்டணத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதபடிக்கு, அம்மோன் புத்திரர், தங்கள் பட்டணத்தின் ஒலிமுகவாசலண்டையில் போர் செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள்.

"அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஆனூனும் அம்மோன் புத்திரரும் மெசொப்பொத்தாமியாவிலும் மாக்கா சோபா என்னும் சீரியரின் தேசத்திலுமிருந்து தங்களுக்கு இரதங்களும் குதிரைவீரரும் கூலிக்கு வரும்படி ஆயிரம் தாலந்து வெள்ளி அனுப்பி, முப்பத்தீராயிரம் இரதங்களையும், மாக்காவின் ராஜாவையும், அவன் ஜனத்தையும் கூலிப்படையாக அழைப்பித்தான்; இவர்கள் வந்து, மேதேபாவுக்கு முன்புறத்திலே பாளயமிறங்கினார்கள்; அம்மோன் புத்திரரும் தங்கள் பட்டணங்களிலிருந்து கூடிக்கொண்டு யுத்தம்பண்ணவந்தார்கள்" (1நாளா 19:6,7).

அம்மோன் புத்திரரின் சேனையும் தாவீதின் சேனையும் யுத்தபண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். தாவீதின் சேனைத் தளபதியாகிய யோவாப், அம்மோன் புத்திரருடைய இராணுவங்களின் படைமுகம் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிறதைக் காண்கிறார். ஆகையினால், யோவாப் இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட எல்லா இராணுவங்களிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து, அதைச் சீரியருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்துகிறார். மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தும்படி தன் சகோதரனாகிய அபிசாயினிடத்தில் ஒப்புவிக்கிறார் (2சாமு 10:9,10).

தாவீதின் சேனை அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். சீரியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். அம்மோன் புத்திரரும் சீரியரும், தாவீதின் சேனைக்கு முன்னும் பின்னுமாக இருக்கிறார்கள். தாவீதின் படைத்தளபதியாகிய யோவாப், சத்துருக்களின் யுத்த அணிவகுப்பைப் பார்த்து, இஸ்ரவேலின் சேனையை இரண்டாகப் பிரிக்கிறார். ஒரு பிரிவை அம்மோன் புத்திரருக்கு எதிராகவும், மற்றொரு பிரிவை சீரியருக்கு எதிராகவும் அணிவகுத்து நிறுத்துகிறார்.

இஸ்ரவேலின் சேனை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகிறார்கள். ஒரு பிரிவு அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். மற்றொரு பிரிவு சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் படைப்பிரிவுக்கு யோவாப் தளபதியாகயிருக்கிறான். அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் படைப்பிரிவுக்கு, யோவாபின் சகோதரன் அபிசாய் படைத்தளபதியாயிருக்கிறான்.

யோவாபும் அபிசாயும், இஸ்ரவேலின் சேனைக்கு தளபதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும், சீரியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணப்போகும் முன்பு, யோவாப் தன் சகோதரன் அபிசாயிடம் புத்தியுள்ள வார்த்தைகளைப் பேசுகிறான்.

யோவாப் அபிசாயை நோக்கி, "சீரியர் கைமிஞ்சுகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும்; அம்மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன். தைரியமாயிரு; நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்; கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" *(2சாமு 10:11,12)* என்று சொல்லுகிறான்.

இந்த யுத்தத்திலே யோவாபும் அபிசாயும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவேண்டும். யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ, அவருக்கு மற்றவன் வந்து உதவிசெய்யவேண்டும். உதவி தேவைப்படுகிறவர் அதற்குரிய செய்கை காண்பிக்கவேண்டும். யுத்தம் ஒன்றுதான். யுத்தம் சத்துருவுக்கு விரோதமாக நடைபெறுகிறது. சத்துருக்கள் இரண்டு படைகளாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேலின் சேனை இரண்டு சேனைகளோடு யுத்தம்பண்ணுவது போல யுத்தம்பண்ணவேண்டும். இஸ்ரவேலின் இரண்டு சேனையும் ஒருவருக்கொருவர் ஆதரவாயும், உதவியாயும் இருந்து யுத்தம்பண்ணவேண்டும்.

விசுவாசிகளாகிய நமக்கும், இந்தப் பிரபஞ்சத்தில் ஆவிக்குரிய யுத்தம் உண்டு. இந்த யுத்தத்தில் விசுவாசிகள் ஒருவருடைய கரத்தை மற்றொருவர் பலப்படுத்த வேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். பலமுள்ளவர் பலவீனமாயிருக்கிறவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். தேவனுடைய கிருபையினால் சோதனைகளை மேற்கொண்டவர்கள், சோதனைகளின் சிக்கிக்கொண்டவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லவேண்டும்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, தங்களை திடப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் ஜெபம்பண்ணவேண்டும். சோதிக்கப்படுகிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லவேண்டும்.

"நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" *(லூக் 22:32)*.

யோவாப் தன்னையும் உற்சாகப்படுத்துகிறான். தன்னுடைய சகோதரன் அபிசாயையும் உற்சாகப்படுத்துகிறான். தாவீதின் சேனையிலுள்ள படைவீரர்களையும், அவர்களுடைய சேனாபதிகளையும் உற்சாகப்படுத்துகிறான்.

யோவாப் தனக்கு விரோதமாக வருகிற படைகளின் அணிவகுப்பைப் பார்க்கிறான். அவர்கள் யோவாபுக்கு முன்னும் பின்னும் இருக்கிறார்கள். யோவாப் சத்துருக்களைப் பார்த்து பயந்து பின்வாங்கி ஓடிப்போய்விடவில்லை. அவன் கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணுகிறான் இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களையும் உற்சாகப்படுத்துகிறான்.

"தைரியமாயிரு; நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்" (2சாமு 10:12) என்று யோவாப் படைவீரர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

தாவீதின் சேனையிலிருக்கிறவர்கள் மாதச்சம்பளத்திற்காகவோ அல்லது தங்களுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காகவோ அல்லது சுயபெருமைக்காகவோ, யுத்தம்பண்ண வரவில்லை. அவர்கள் தங்களுடைய ஜனத்திற்காகவும், தங்கள் தேவனுடைய பட்டணங்களுக்காகவும் யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தின் பாதுகாப்புக்காகவும், தங்கள் தேசத்தின் க்ஷேமத்திற்காகவும் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம்.

தாவீதின் சேனையிலிருக்கிற ஒவ்வொருவரும் தங்கள் தேவனைப்பற்றியும், தங்கள் தேசத்தைப்பற்றியும் கரிசனையுள்ளவர்களாயிருக்கிறார்கள். யுத்தத்தின் முடிவு எப்படியிருக்கும் என்பது யோவாபுக்கு தெரியாது. அது யாருக்கும் தெரியாது. யோவாப் யுத்தத்தின் முடிவை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கிறான். "கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று யோவாப் விசுவாசத்தோடு சொல்லுகிறான்.

தாவீதின் சேனையிலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை உண்மையாய்ச் செய்யவேண்டும். தங்களுடைய மனச்சாட்சிக்கு கீழ்ப்படிந்து, தங்களுடைய கடமைகளை நிறைவேற்றவேண்டும். முடிவு கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தருக்கு சித்தமான காரியம் வாய்க்கும். கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதை செய்வார். கர்த்தர் எதை செய்தாலும், அது அவருடைய பிள்ளைகளின் நன்மைக்கேதுவாகயிருக்கும்.

தாவீதின் சேனை அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும் சீரியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுகிறார்கள். முதலாவதாக யோவாபும் அவனோடிருந்த ஜனமும் சீரியர்மேல் யுத்தம்பண்ணக் கிட்டுகிறார்கள்; சீரியர் யோவாபுக்கு முன்பாக முறிந்தோடுகிறார்கள் (2சாமு 10:13).

சீரியர் முறிந்தோடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் அபிசாயிக்கு முன்பாக முறிந்தோடிப் பட்டணத்திற்குள் புகுந்து கொள்கிறார்கள்; அப்பொழுது யோவாப் அம்மோன் புத்திரரை விட்டுத் திரும்பி எருசலேமுக்கு வருகிறான் (2சாமு 10:14). அம்மோன் புத்திரர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவே ஆரம்பிக்கவில்லை. சீரியர்கள் முறிந்து ஓடிப்போவதைப் பார்த்து, அம்மோன் புத்திரரும் முறிந்து ஓடிப்போகிறார்கள். தங்கள் பட்டணத்திற்குள் புகுந்து கொள்கிறார்கள். அம்மோன் புத்திரர் யுத்தம்பண்ணாமலேயே தோற்றுப்போகிறார்கள்.

சீரியர்
2சாமு 10:15-19

2சாமு 10:15. தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைச் சீரியர் கண்டபோது, ஒருமிக்கக் கூடினார்கள்.

2சாமு 10:16. ஆதாரேசர் நதிக்கு அப்பாலிருந்த சீரியரையும் அழைத்தனுப்பினான்; அவர்கள் ஏலாமுக்கு வந்தார்கள்; ஆதாரேசருடைய படைத்தலைவனாகிய சோபாக் அவர்களுக்கு முன்னாலே சென்றான்.

2சாமு 10:17. அது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் இஸ்ரவேலையெல்லாம் கூட்டிக்கொண்டு, யோர்தானைக் கடந்து, ஏலாமுக்குப் போனான்; சீரியர் தாவீதுக்கு எதிராக இராணுவங்களை அணிவகுத்து நின்றார்கள்; அவனோடு யுத்தம்பண்ணுகிறபோது,

2சாமு 10:18. சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தாவீது சீரியரில் எழுநூறு இரதவீரரையும் நாற்பதினாயிரம் குதிரைவீரரையும் கொன்று, அவர்களுடைய படைத்தலைவனாகிய சோபாகையும் சாகும்படி வெட்டிப்போட்டான்.

2சாமு 10:19. அப்பொழுது ஆதாரேசரைச் சேவிக்கிற சகல ராஜாக்களும் தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைக் கண்டு, இஸ்ரவேலரோடே சமாதானம்பண்ணி, அவர்களைச் சேவித்தார்கள். அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய சீரியர் பயப்பட்டார்கள்.

சீரியர் தாவீதின் சேனைக்கு விரோதமாக யுத்தம்பண்ண மறுபடியும் ஆயத்தமாகிறார்கள். தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைச் சீரியர் கண்டபோது, ஒருமிக்கக் கூடுகிறார்கள். சீரியர்கள் ஏற்கெனவே யோவாபுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாமல், அவனுக்கு முன்பாக முறிந்து ஓடிப் போனவர்கள்.

சீரியர் தங்களுடைய சேனையை வலுப்படுத்துகிறார்கள். சேனையிலுள்ள வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறார்கள். ஆதாரேசர் என்பவன் சீரியருக்கு ராஜா. அவன் நதிக்கு அப்பாலிருந்த சீரியரையும் அழைத்தனுப்புகிறான்; அவர்கள் ஏலாமுக்கு வருகிறார்கள்; ஆதாரேசருடைய படைத்தலைவனாகிய சோபாக் அவர்களுக்கு முன்னாலே செல்கிறான் (2சாமு 10:16).

சீரியர் ஒருமிக்க கூடுகிறார்கள் என்னும் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது தாவீது இஸ்ரவேலையெல்லாம் கூட்டிக்கொண்டு, யோர்தானைக் கடந்து, ஏலாமுக்குப் போகிறார்; சீரியர் தாவீதுக்கு எதிராக இராணுவங்களை அணிவகுத்து நிற்கிறார்கள் (2சாமு 10:17).

சீரியர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களால் தாவீதின் சேனையோடு யுத்தம்பண்ண முடியவில்லை. சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடுகிறார்கள்; தாவீது சீரியரில் எழுநூறு இரதவீரரையும் நாற்பதினாயிரம் குதிரைவீரரையும் கொன்றுபோடுகிறார். சீரியருடைய படைத்தலைவனாகிய சோபாகையும் தாவீது சாகும்படி வெட்டிப்போடுகிறார் (2சாமு 10:18).

தாவீது சீரியருக்கு விரோமாக யுத்தம்பண்ணியபோது, சீரியரின் படைத்தலைவனாகிய சோபாக் செத்துப்போகிறான். தாவீது வெற்றியோடு எருசலேமுக்கு திரும்பி வருகிறார். சீரியருக்கு விரோதமான இந்த யுத்தத்திலே தாவீதுக்கு ஜெயம் கிடைக்கிறது. சீரியரின் ராஜாவாகிய ஆதாரேசர் தோற்றுப்போகிறான்.

சிறிய தேசத்தின் ராஜாக்கள், சீரியரின் ராஜாவாகிய ஆதாரேசரை சேவிக்கிறார்கள். சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக தோற்றுப்போனதை ஆதாரேசரை சேவிக்கிற ராஜாக்கள் பார்த்து, அவர்கள் தாவீதோடே சமாதானம் பண்ணி, தாவீதை சேவிக்கிறார்கள். முன்பு ஆதாரேசரை சேவித்த ராஜாக்களெல்லாம் இப்போது தாவீதை சேவிக்கிறார்கள்.

சீரியரின் படைபலம் குறைந்துபோயிற்று. தாவீது சீரியரில் எழுநூறு இரதவீரரையும், நாற்பதினாயிரம் குதிரை வீரரையும் கொன்றுபோட்டார். ஆரம்பத்தில் தாவீதுக்கு சீரியர்மீது பகையில்லை. அவர் அம்மோன் புத்திரர்மீதுதான் யுத்தம்பண்ண புறப்பட்டார். சீரியர் அம்மோன் புத்திரருக்கு உதவி செய்ய வந்தார்கள். அவர்கள் ஏற்கெனவே இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடினார்கள். இப்போது அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக மறுபடியும் முறியடிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேலோடு நடைபெற்ற இரண்டாவது யுத்தத்தில், சீரியருக்கு பேரிழப்பு உண்டாயிற்று. இதனால் சீரியர் அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய பயப்படுகிறார்கள் (2சாமு 10:19).

இஸ்ரவேலரோடு நடைபெற்ற யுத்தத்திலே, சீரியாவின் ராஜா தன்னுடைய படைத்தலைவனையும் இழந்தான். தன்னுடைய இரதவீரரையும் இழந்தான், தன்னுடைய குதிரை வீரரையும் இழந்தான். தன்னை சேவிக்கிற சகல ராஜாக்களையும் இழந்தான். சீரியாவின் ராஜாவுக்கு இந்த யுத்தத்திலே மிகப்பெரிய இழப்பு உண்டாயிற்று.

அப்பொழுது ஆதாரேசரைச் சேவிக்கிற சகல ராஜாக்களும் தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைக் கண்டு, இஸ்ரவேலரோடே சமாதானம்பண்ணி, அவர்களைச் சேவித்தார்கள். அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய சீரியர் பயப்பட்டார்கள் (2சாமு 10:19).

தாவீது ஆதாரேசரை சேவித்த ராஜாக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறார். கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் இதன் மூலமாக நிறைவேறிற்று. கர்த்தர் இந்த வாக்குத்தத்தத்தை யோசுவாவுக்கு மறுபடியும் சொல்லி உறுதிபடுத்தினார். இஸ்ரவேல் தேசத்தின் எல்லை ஐபிராத்து நதிக்கு அப்பாலும் சென்றது.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்.......... எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி 15:18-21).

"நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன். வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரியநதிமட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்" (யோசு 1:3,4).

இஸ்ரவேலுக்கு விரோதமான யுத்தத்திலே அம்மோன் புத்திரரும், சீரியரும் தோற்றுப்போனார்கள். இந்த யுத்தத்திற்கு முன்பு அம்மோன் புத்திரரும், சீரியரும் இராணுவ உடன்படிக்கை செய்திருந்தார்கள். சீரியர் அம்மோன் புத்திரருக்கு நீண்டகாலமாக இராணுவ உதவி செய்து வந்தார்கள். இந்த யுத்தத்திற்கு பின்பு, சீரியர் அம்மோன் புத்திரருக்கு உதவி செய்ய பயந்து, தங்களுடைய இராணுவ உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள்.

11 அதிகாரம்

தாவீது ஒரு பராக்கிரமசாலி. அவர் ஒரு யுத்தவீரர். அவர் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் தாவீதை உயர்த்தியிருக்கிறார். ஆனாலும் தாவீதின் ஜீவியத்திலும் ஒரு சில தப்பிதங்கள் காணப்படுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் தாவீதின் வெற்றியையும், அவருடைய புகழ்ச்சியையும் பற்றி எழுதப்பட்டிருப்பதுபோலவே, அவருடைய பாவத்தைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. நாம் வேதவாக்கியத்தைப் படித்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எச்சரிப்பாயிருக்க வேண்டும். நிற்கிறேன் என்று நினைக்கிறவர்கள் விழுந்துவிடாதவாறு எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

தாவீது பத்சேபாளுடன் விபசாரம் பண்ணுகிறார். பத்சேபாள் உரியாவின் மனைவி *(2சாமு 11:1-5)*. தாவீது தன்னுடைய பாவத்தை மறைக்க முயற்சி பண்ணுகிறார். உரியாவை அவனுடைய வீட்டிற்கு அனுப்ப சதி பண்ணுகிறார். ஆனாலும் தாவீதின் முயற்சி வெற்றி பெறவில்லை *(2சாமு 11:6-13)*.

தாவீது தன்னுடைய பாவத்தை எப்படியாவது மறைத்துவிடவேண்டும் என்று முயற்சிபண்ணி, உரியாவை கொன்றுபோட சதிபண்ணுகிறார். உரியா தாவீதின் சதிஆலோசனையின் பிரகாரமாக, அம்மோன் புத்திரருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே செத்துப்போகிறான் *(2சாமு 11:14-25)*.

தாவீது உரியாவின் மனைவி பத்சேபாளை தனக்கு மனைவியாக்கிக் கொள்கிறார் *(2சாமு 11:26,27)*. தாவீது கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிற மனுஷனாகயிருந்தாலும், அவர் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து பாவம் செய்கிறார்.

பத்சேபாள்
2சாமு 11:1-5

2சாமு 11:1. மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான். தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்.

2சாமு 11:2. ஒருநாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையின்மேல் உலாத்திக் கொண்டிருக்கும்போது, ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்.

2சாமு 11:3. அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான்; அவள் எலியாமின் குமாரத்தியும், ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள் என்றார்கள்.

2சாமு 11:4. அப்பொழுது தாவீது ஆள் அனுப்பி அவளை அழைத்துவரச் சொன்னான்; அவள் அவனிடத்தில் வந்தபோது, அவளோடே சயனித்தான்; பிற்பாடு அவள் தன் தீட்டு நீங்கும்படி சுத்திகரித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனாள்.

2சாமு 11:5. அந்த ஸ்திரீ கர்ப்பம் தரித்து, தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்.

தாவீது சீரியருக்கு விரோதமாக இரண்டுமுறை யுத்தம்பண்ணினார். இவ்விரண்டு யுத்தத்திலும் சீரியர் தாவீதுக்கு முன்பாக முறிந்து ஓடினார்கள். முதலாவது யுத்தத்தில் சீரியர் முறிந்து ஓடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் முறிந்து ஓடி தங்கள் பட்டணமாகிய ரப்பாவுக்குள் புகுந்து கொள்கிறார்கள்.

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தம்பண்ணுகிறார். ரப்பா அம்மோன் புத்திரரின் தலைநகரம். இது பிரமாண்டமான பட்டணம். யோவாப் தாவீதின் படைத்தளபதி. தாவீது ஏற்கெனவே அம்மோன் புத்திரருக்கும், சீரியருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணி, ஒருவருஷத்திற்கு பின்பு, இப்போது மறுபடியுமாக, அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்.

மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வருகிறது. அப்போது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்புகிறார். தாவீதோ யுத்தத்திற்குப்போகாமல் எருசலேமில் இருந்துவிடுகிறார் *(2சாமு 11:1)*.

இஸ்ரவேல் புத்திரர் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். அப்போது தாவீது எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனையில் தங்கி ஒய்வெடுத்துக்கொண்டிருக்கிறார். அப்போது அவர் பத்சேபாளோடு பாவம் செய்கிறார்.

தாவீது பல தேசங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதன் ராஜாக்களை ஜெயித்தவர். ஆனால் இப்போதோ தாவீதால் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளை ஜெயிக்க முடியவில்லை. தாவீது தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமையாகி பாவத்திலே விழுந்துவிடுகிறார். பத்சேபாள் உரியாவின் மனைவி. தாவீது பத்சேபாளோடு விபசாரம் பண்ணுகிறார்.

தாவீது இப்போதிருக்கிற சூழ்நிலை, பாவத்தில் விழுவதற்கு சாதகமாகயிருக்கிறது. இஸ்ரவேலின் சேனை, அம்மோன் புத்திரரின் பட்டணமான ரப்பாவை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். தாவீது யுத்தக்களத்திலே இருக்கவேண்டும். சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும். ஆனால் தாவீதோ தன்னுடைய கடமையை மறந்து, எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனையில் ஒய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்கள் தங்களுக்காகவும், தங்கள் கர்த்தருக்காகவும் யுத்தம்பண்ணுகிறார். அவர்கள் கர்த்தருடைய யுத்தத்தை நடத்துகிறார்கள். இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் பங்குபெறவேண்டும். தாவீதோ இந்த யுத்தத்தில் பங்குபெறாமல், தன்னுடைய கடமையை அசட்டைபண்ணுகிறார். தான் செய்ய வேண்டிய வேலைகளையும், மற்றவர்கள்மீது சுமத்திவிட்டு, தாவீது எருசலேமிலே இருந்துவிடுகிறார்.

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக நடைபெறுகிற யுத்தத்திலே பங்குபெறுவதற்கு போயிருந்தால், பத்சேபாளோடு பாவம் செய்யும் சூழ்நிலை அவருக்கு வந்திருக்காது. தாவீது இந்த சோதனையிலிருந்து தப்பித்திருப்பார்.

தாவீதைப்போலவே நாமும் நம்முடைய கடமையை செய்யாமல், சோம்பேறித்தனமாக ஒய்வெடுத்துக்கொண்டிருந்தால், சோதனையில் சிக்கிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது.

ஒருநாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையின்மேல் உலாத்திக் கொண்டிருக்கிறார். அப்போது, ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து காண்கிறார்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருக்கிறாள் *(2சாமு 11:2)*.

தாவீது யுத்தக்களத்திலே தன்னுடைய கடமையை செய்யாமல், சாயங்காலத்தில் தன் படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கிறார். பகல்வேளையில் உறங்குகிறார். சும்மாயிருந்தால் சோதனைக்காரன் அதை தனக்கு சாதமாகப் பயன்படுத்திக்கொள்வான். கெட்டிக்கிடகிற தண்ணீர் சீக்கிரத்தில் கெட்டுப்போகும். ஒடுகிற நீரோடை சுத்தமாயிருக்கும். சோம்பேறியின் படுக்கை, மாம்ச இச்சையின் படுக்கையாகயிருக்கும். அது சோதனையின் படுக்கையாக மாறும்.

தாவீது தன்னுடைய கடமையை செய்யாமல் சும்மாயிருக்கும்போது, அவருடைய கண்கள்கூட அவரை வஞ்சிக்கிறது. தாவீது ரப்பா பட்டணத்திற்கு விரோதமாக முற்றிக்கையிட்டு, அந்தப் பட்டணத்தை கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் இப்போதோ தாவீது, யுத்தத்திற்குப் போகாமல், தன் அரண்மனையின் உப்பரிகையின்மேல் உலாத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய கண்கள் ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயின் அழகை காண்கிறது. அந்த ஸ்திரீ ஒருவேளை, தீட்டுப்பட்டு, மார்க்க பிரகாரமாக, ஸ்நானம்பண்ணி, தன்னை சுத்திகரித்திருக்கலாம்.

தாவீது ஸ்நானம்பண்ணுகிற அந்த ஸ்திரீயை கண்டவுடனேயே அவளைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்து விடுகிறார். அப்பொழுது தாவீது, "அந்த ஸ்திரீ யார்' என்று விசாரிக்க ஆள் அனுப்புகிறார்; "அவள் எலியாமின் குமாரத்தியும், ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள்" *(2சாமு 11:3)* என்று தாவீதுக்கு சொல்லுகிறார்கள். ஒருவேளை அந்த ஸ்திரீ மணமாகாத கன்னிகையாகயிருந்தால் அவளை தனக்கு மனைவியாக்கிக்கொள்ள வேண்டுமென்று தாவீது நினைத்திருக்கலாம்.

தாவீதுக்கு ஏற்கெனவே ஏராளமான மனைவிகளும், மறுமனையாட்டிகளும் இருக்கிறார்கள். அவருக்கு ஏராளமான குமாரரும் குமாரத்திகளும் இருக்கிறார்கள். தாவீதுக்கு இப்போது ஏறக்குறைய ஐம்பது வயதாகியிருக்கவேண்டும். ஆனாலும் தன்னுடைய மாம்ச இச்சைகளை தாவீதால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஸ்நானம்பண்ணுகிற ஸ்திரீ வேறொருவனுடைய மனைவி என்று தெரிந்தும், தாவீது அந்த ஸ்திரீயின்மீது ஆசைப்படுகிறார்.

அப்பொழுது தாவீது ஆள் அனுப்பி அவளை அழைத்துவரச்சொல்லுகிறார்; அவள் தாவீதிடத்தில் வந்தபோது, தாவீது அவளோடே சயனிக்கிறார் *(2சாமு 11:4)*. தாவீது இஸ்ரவேல் தேசத்தின் ராஜா. அவர் தன்னுடைய நன்மைகளை விசாரிப்பதுபோல, தன்னுடைய தேசத்தின் குடிமக்களுடைய நன்மைகளையும் விசாரிக்கவேண்டும்.

ஆனால் தாவீதின் மனதில் அவருடைய மாம்ச இச்சையே பிரதானமாயிருக்கிறது. அவர் பத்சேபாளைப் பற்றியோ, அவளுடைய புருஷன் உரியாவைப்பற்றியோ கவலைப்படவில்லை. தன்னுடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றவேண்டும் என்று மட்டுமே ஆசைப்படுகிறார். தாவீது பத்சேபாளை தன்னிடத்தில் வரவழைத்து, அவளோடே சயனிக்கிறார்.

பிற்பாடு பத்சேபாள் தன் தீட்டு நீங்கும்படி சுத்திகரித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போகிறாள். தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜா. இஸ்ரவேல் தேசத்தில் அவர் பெரியவர். ஆகையினால் தாவீது பத்சேபாளை அழைக்கும்போது, அவளால் தாவீதிடத்தில் போகாமலிருக்க முடியவில்லை. தாவீது தன்னுடைய ராஜாசன அதிகாரத்தை தன்னுடைய சுயநலத்திற்கு தப்பிதமாகப் பயன்படுத்துகிறார்.

தாவீது துணிகரமாகப் பாவம் செய்கிறார். அவருக்கு இப்போது சுமார் ஐம்பது வயதாயிற்று. தாவீதுக்கு சொந்தமாக அநேக மனைவிகளும், மறுமனையாட்டிகளும் இருக்கிறார்கள். உரியா தாவீதின் சேனையில் பணிபுரிகிறவன். அவன் தாவீதின் ஜீவனையும், அவருடைய ராஜ்யத்தையும் பாதுகாப்பதற்காக இஸ்ரவேலின் சேனையிலே பணிபுரிகிறான். உரியா தாவீதுக்கு பிரயோஜனமாயிருக்கிறவன். தாவீது உரியாவுக்கு நன்றியுள்ளவராயிருக்க வேண்டும். ஆனால் தாவீதோ உரியாவுக்கு தீங்கு செய்கிறார். உரியாவின் மனைவி பத்சேபாளை கெடுத்துப்போடுகிறார்.

பத்சேபாளும் நற்குணமுள்ளவள். இவள் தன்னுடைய ஆசை வார்த்தைகளினால் தாவீதை வஞ்சிக்கவில்லை. தாவீதுதான் பத்சேபாளை கெடுத்துப்போடுகிறார். இதன் மூலமாக தாவீது தன்னுடைய ஆத்துமாவையும் கெடுத்துப்போடுகிறார். விபசாரம்பண்ணுகிறவர்கள் தங்களுடைய சரீரங்களையும், ஆத்துமாக்களையும் கெடுத்துப்போடுகிறார்கள்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். அவருடைய கைகளில் நீதியின் பட்டயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலே தீங்கு செய்கிறவர்களுக்கு விரோதமாக, தாவீது நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும். குற்றவாளிகளை தண்டிக்கவேண்டும். தாவீதின் கையில் செங்கோல் இருக்கிறது. குற்றவாளியை தண்டிக்கவேண்டிய தாவீதே, இப்போது குற்றவாளியாயிருக்கிறார்.

விபசாரம்பண்ணுவது தாவீதின் சுபாவமல்ல. தாவீது வேறு சந்தர்ப்பங்களில் இதுபோல விபசாரம்பண்ணியதாக குறிப்பு எதுவுமில்லை. பத்சேபாள் ஸ்நானம்பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்த்து, தாவீது தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமையாகிவிட்டார். தாவீதுக்கு திடீரென்று சோதனை வந்தது. அந்த சோதனையை அவரால் மேற்கொள்ள முடியவில்லை. தாவீது பத்சேபாளோடு சயனித்து விபசாரம் செய்துவிட்டார்.

எரேமியா விபசாரக்காருக்கு விரோதமாக கடினமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். "அவர்கள் கொழுத்த குதிரைகளைப்போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்" (எரே 5:8). இப்படிப்பட்ட வார்த்தைகள் தாவீதுக்கு பொருந்தாது.

தாவீது ஒருதரம் பாவம் செய்தார். அதன் பின்பு அவர் தன்னை தேவனுடைய கரத்திலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார். தாவீது கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவராயிருந்தாலும், தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து, பாவம் செய்துவிடுகிறார். இந்த சம்பவம் விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்மை எல்லா சோதனைகளுக்கும் விலக்கி காத்துக்கொள்ள வேண்டுமென்று, நாம் அனுதினமும் ஜெபம்பண்ணவேண்டும்.

பத்சேபாள் கர்ப்பந்தரிக்கிறாள். தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்புகிறாள் (2சாமு 11:5).

உரியா
2சாமு 11:6-13

2சாமு 11:6. அப்பொழுது தாவீது: ஏத்தியனாகிய உரியாவை என்னிடத்தில் அனுப்பு என்று யோவாபினண்டைக்கு ஆள் அனுப்பினான்; அப்படியே யோவாப் உரியாவைத் தாவீதினிடத்திற்கு அனுப்பினான்.

2சாமு 11:7. உரியா அவனிடத்தில் வந்தபோது, தாவீது அவனைப் பார்த்து: யோவாப் சுகமாயிருக்கிறானா, ஜனங்கள் சுகமாயிருக்கிறார்களா, யுத்தத்தின் செய்தி நற்செய்தியா என்று விசாரித்தான்.

2சாமு 11:8. பின்பு தாவீது உரியாவை நோக்கி: நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய் என்றான்; உரியா ராஜ அரமனையிலிருந்து புறப்பட்டபோது, ராஜாவினிடத்திலிருந்து உச்சிதமான பதார்த்தங்கள் அவன் பின்னாலே அனுப்பப்பட்டது.

2சாமு 11:9. ஆனாலும் உரியா தன் வீட்டிற்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங் கூட படுத்துக்கொண்டிருந்தான்.

2சாமு 11:10. உரியா தன் வீட்டிற்குப் போகவில்லையென்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது உரியாவை நோக்கி: நீ பயணத்திலிருந்து வந்தவன் அல்லவா, நீ உன் வீட்டிற்குப் போகாதிருக்கிறது என்ன என்று கேட்டான்.

2சாமு 11:11. உரியா தாவீதை நோக்கி: பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும், குடிக்கிறதற்கும், என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடையபேரிலும் உம்முடைய ஆத்துமாவின்பேரிலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 11:12. அப்பொழுது தாவீது உரியாவை நோக்கி: இன்றைக்கும் நீ இங்கேயிரு; நாளைக்கு உன்னை அனுப்பிவிடுவேன் என்றான்; அப்படியே உரியா அன்றும் மறுநாளும் எருசலேமில் இருந்தான்.

2சாமு 11:13. தாவீது அவனைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடிக்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்கப்பண்ணினான்; ஆனாலும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல், சாயங்காலத்திலே தன் ஆண்டவனின் சேவகரோடே தன் படுக்கையிலே படுத்துக்கொண்டான்.

தாவீதின் சேனையிலுள்ளவர்கள் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போயிருக்கிறார்கள். அவர்கள் ரப்பா பட்டணத்தை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். உரியா தாவீதின் சேனையிலுள்ள யுத்தவீரன். அவனும் இஸ்ரவேலின் மற்ற யுத்தவீரரோடு, அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போயிருக்கிறான்.

உரியா தன்னுடைய மனைவியைவிட்டுப் பிரிந்து ஒரு சில வாரங்கள் கடந்திருக்கவேண்டும். அவன் ரப்பா பட்டணத்தை, முற்றிக்கைப் போடப்போயிருக்கிறான். உரியாவின் மனைவி பத்சேபாளோ இப்போது கர்ப்பந்தரித்திருக்கிறாள். பத்சேபாளும் தாவீதும் செய்த பாவத்தை, அவளால் மறைக்க முடியாது. பத்சேபாள் கர்ப்பந்தரித்திருப்பதை உரியா பார்ப்பான். தன் மனைவி தனக்கு விரோதமாக துரோகம் செய்திருக்கிறாள் என்பதை கண்டுகொள்வான். இந்த துரோகத்திற்கு யார் காரணம் என்பதையும் கண்டுபிடிக்க முயற்சி பண்ணுவான்.

யூதர்கள் தங்களுடைய முறைமையின்படி, விபசாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயை, கல்லெறிந்து கொல்ல முடியும். பத்சேபாளின் பாவம் உரியாவுக்கு தெரிந்தால், அவன் அவளை நியாயப்பிரமாணத்தின்படி தண்டிப்பதற்கு வாய்ப்புள்ளது. தனக்கு வரப்போகும் ஆபத்தைப்பற்றி பத்சேபாளுக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையினால் தான் கர்ப்பவதி என்று தாவீதுக்கு அறிவிக்கும்படி, பத்சேபாள் அவருக்கு ஆள் அனுப்புகிறாள். தாவீது பத்சேபாளை பாதுகாக்கவேண்டும். இல்லையென்றால் அவளால் தண்டனைக்கு தப்பிக்க முடியாது.

தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. உரியாவோ தாவீதின் சேனையில் பணிபுரிகிற யுத்தவீரன். பத்சேபாளின் கர்ப்பத்திற்கு தாவீதே காரணம் என்னும் உண்மை உரியாவுக்கு தெரிந்தாலும், அவனால் தாவீதை சட்டப்படி தண்டிக்க முடியாமல் போகலாம். தாவீதின் அரண்மனையில் வேலை பார்க்கிற ஒருவன், ராஜாவின்மீது குற்றம் சுமத்துவதற்கோ அல்லது ராஜாவைத் தண்டிப்பதற்கோ வாய்ப்பு இல்லை. ராஜாவின்மீது குற்றம் சொல்ல உரியாவுக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள்.

தன்னால் தாவீதை சட்டப்படி தண்டிக்க முடியாமல் போனாலும், வேறு ஏதாவது வழியில் அவரைத் தண்டிக்கவேண்டும் என்று உரியா முயற்சி பண்ணுவான். தாவீதுக்கு விரோதமாகக் கலகக்காரரை கூட்டிச்சேர்ப்பான். இஸ்ரவேல் தேசத்திலே பிரச்சனைகளை ஏற்படுத்துவான். ராஜா விபசாரம்பண்ணியிருக்கிறார் என்னும் செய்தி தேசத்தில் பரவினால், தேசம் முழுவதும் குழப்பம் ஏற்படும்.

பத்சேபாள் கர்ப்பந்தரித்திருக்கிறாள் என்னும் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தனக்கு இந்த செய்தி அறிவிக்கப்பட்டவுடன், இந்தப் பிரச்சனையை எப்படி தீர்த்து வைப்பது என்று தாவீது தீவிரமாக யோசிக்கிறார். பத்சேபாளின் கர்ப்பத்திற்கு உரியாவே காரணம் என்பதை நிரூபிக்கவேண்டும். இதை தாவீது நிரூபித்துவிட்டால், இந்தப் பிரச்சனையிலிருந்து தாவீதும் தப்பித்துக்கொள்வார். பத்சேபாளும் தப்பித்துக்கொள்வாள். பிரச்சனையும் சுமுகமாக தீர்ந்துவிடும்.

உரியாவோ இப்போது யுத்தக்களத்திலே இருக்கிறார். உரியாவை எருசலேமுக்கு வரவழைக்க வேண்டும் என்றும், உரியாவையும் அவனுடைய மனைவியாகிய பத்சேபாளையும் அவர்களுடைய வீட்டிலே சயனிக்க வைக்கவேண்டும் என்றும் தாவீது திட்டமிடுகிறார்.

அப்பொழுது தாவீது: "ஏத்தியனாகிய உரியாவை என்னிடத்தில் அனுப்பு" என்று யோவாபினண்டைக்கு ஆள் அனுப்புகிறார்; அப்படியே யோவாப் உரியாவைத் தாவீதினிடத்திற்கு அனுப்புகிறான். உரியா தாவீதினிடத்தில் வந்தபோது, "தாவீது அவனைப் பார்த்து: யோவாப் சுகமாயிருக்கிறானா, ஜனங்கள் சுகமாயிருக்கிறார்களா, யுத்தத்தின் செய்தி நற்செய்தியா" *(2சாமு 11:6,7)* என்று விசாரிக்கிறார்.

யோவாப் இஸ்ரவேலின் சேனைக்கு படைத்தளபதியாயிருக்கிறான். தாவீதின் சேனை ரப்பாவுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். அவர்கள் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போயிருக்கிறார்கள். தாவீது ராஜாவோ யுத்தத்திற்குப்போகாமல், எருசலேமிலே, தன்னுடைய அரண்மனையில் தங்கியிருக்கிறார். ராஜாவுக்கு யுத்தத்தின் நிலவரம் தெரியவேண்டும்.

தாவீது உரியாவை தன்னிடத்தில் வரவழைக்கவேண்டுமென்றால், அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். யுத்தத்தின் செய்தியை அறிந்துகொள்வதற்காக, தாவீது உரியாவை தன்னிடத்தில் வரவழைக்கிறார். தாவீது பத்சேபாளோடு தான் செய்த பாவத்தை மூடி மறைப்பதற்காக, இதுபோல சதித்திட்டம் போடுகிறார். தாவீதின் உத்தரவுப்படி, உரியாவும் தாவீதினிடத்தில் வருகிறார். தாவீது உரியாவிடம் யுத்த செய்தியை கேட்டு விசாரிக்கிறார்.

பின்பு தாவீது உரியாவை நோக்கி: "நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய்" என்று சொல்லுகிறார்; உரியா ராஜ அரமனையிலிருந்து புறப்பட்டபோது, ராஜாவினிடத்திலிருந்து உச்சிதமான பதார்த்தங்கள் அவன் பின்னாலே அனுப்பப்படுகிறது. ஆனாலும் உரியா தன் வீட்டிற்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங்கூட படுத்துக்கொண்டிருக்கிறான் *(2சாமு 11:8,9)*.

தாவீது உரியாவை அவனுடைய வீட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுகிறார். ஆனால் முதல் நாள் இரவிலே தாவீதின் திட்டம் தோல்வியடைகிறது. உரியாவுக்கு பிரயாணக்களைப்பு ஏற்பட்டிருக்கலாம். உரியா ரப்பா பட்டணத்து முற்றிகையிலிருந்து எருசலேமுக்கு நீண்ட பிரயாணம் செய்து வந்திருக்கிறான். பிரயாணக்களைப்பினால் உரியா தன் வீட்டிற்குப்போகாமல், அரண்மனையின் வாயிலில், மற்ற சேவகரோடு படுத்துக்கொள்கிறான்.

உரியா இரவிலே தன் வீட்டிற்குப்போகவில்லை என்னும் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. உரியா பிரயாணக்களைப்பினால் தன் வீட்டிற்கு போகாமல், அரண்மனையிலே படுத்திருப்பான் என்று தாவீது நினைக்கிறார். மறுநாள் தாவீது உரியாவை நோக்கி: "நீ பயணத்திலிருந்து வந்தவன் அல்லவா, நீ உன் வீட்டிற்குப் போகாதிருக்கிறது என்ன" *(2சாமு 11:10)* என்று கேட்கிறார்.

தான் வீட்டிற்கு ஏன் போகவில்லை என்பதற்கு, உரியா தாவீதுக்கு சரியான பிரதியுத்தரத்தை சொல்லுகிறான். தன்னுடைய மனைவி பத்சேபாளும், தாவீதும் தனக்கு விரோதமாக செய்த பாவம் உரியாவுக்கு தெரியாது. உரியா இன்னும் தாவீதின்மீது அன்பாயிருக்கிறான். அவனுக்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் யுத்தக்களத்திலே இருக்கும்போது, தான் மட்டும் தன்னுடைய வீட்டிலே, தன்னுடைய மனைவியோடு சயனித்து ஒய்வெடுப்பது தப்பிதமான செயல் என்பதை உரியா அறிந்திருக்கிறான்.

உரியா தாவீதை நோக்கி: "பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும், குடிக்கிறதற்கும், என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடையபேரிலும் உம்முடைய ஆத்துமாவின்பேரிலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்" *(2சாமு 11:11)* என்று சொல்லுகிறான்.

அப்பொழுது தாவீது உரியாவை நோக்கி: "இன்றைக்கும் நீ இங்கேயிரு; நாளைக்கு உன்னை அனுப்பிவிடுவேன்" என்று சொல்லுகிறார்; அப்படியே உரியா அன்றும் மறுநாளும் எருசலேமில் இருக்கிறான். தாவீது அவனைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடிக்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்கப்பண்ணுகிறார்; ஆனாலும் உரியா தன் வீட்டுக்குப் போகாமல், சாயங்காலத்திலே தன் ஆண்டவனின் சேவகரோடே தன் படுக்கையிலே படுத்துக்கொள்கிறான் *(2சாமு 11:12,13).*

தாவீது உரியாவை குடித்து வெறிக்கப்பண்ணுகிறார். குடிப்பது எவ்வளவு பாவமோ, அந்த அளவுக்கு ஒருவனை குடிக்க வைப்பதும் பாவம். குடித்து வெறிக்கிறவர்கள் தங்கள் புத்தியையும் நிதானத்தையும் இழந்துவிடுவார்கள். திருடன் பிறருடைய பொக்கிஷத்தைக் கொள்ளையிடுகிறான். பிறரைக் குடித்து வெறிக்க வைக்கிறவனோ, அவர்களுடைய புத்தியையும், நிதானத்தையும் கொள்ளையிடுகிறான்.

தாவீது பத்சேபாளோடு சயனித்து விபசாரம்பண்ணினார். இப்போது பத்சேபாளின் புருஷன் உரியாவை குடித்து வெறிக்க வைத்து, அவனுடைய புத்தியையும், நிதானத்தையும் திருடி, ஒரு கொள்ளைக்காரனாகவும் இருக்கிறார்.

தாவீது எவ்வளவுதான் சதிஆலோசனைபண்ணினாலும், அவரால் உரியாவை அவனுடைய வீட்டிற்கு அனுப்ப முடியவில்லை. உரியா ராஜாவின்மீதும், இஸ்ரவேல் தேசத்தின்மீதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். உரியாவிடம் நல்ல குணம் இருக்கிறது. இதற்காக தாவீது அவனுக்கு நன்றி சொல்லவேண்டும். ஆனால் தாவீதோ உரியாவின் மனைவியோடு விபசாரம் செய்திருக்கிறார்.

உரியா இஸ்ரவேல் தேசத்தின்மீது அக்கரையோடிருக்கிறான். அவன் தன்னுடைய தேசத்திற்காக, கஷ்டங்களை சகித்துக்கொள்கிறான். உரியாவுக்கென்று சொந்தமான ஆசைகள் இருந்தாலும், உரியா அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இஸ்ரவேல் தேசத்தின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். தன்னுடைய சுகவாழ்வைவிட, இஸ்ரவேல் தேசத்தின் பாதுகாப்பே முக்கியம் என்று உரியா நினைக்கிறான்.

உரியா பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும், தாவீதின் மனச்சாட்சியை தொட்டிருக்கவேண்டும். ஆனாலும் தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பியதாக தெரியவில்லை. தன்னுடைய பாவத்தை எப்படி மறைக்கலாம் என்பதைப்பற்றியே தாவீது யோசித்துக்கொண்டிருக்கிறார். தாவீது பாவத்திற்குமேல் பாவமாக செய்து கொண்டிருக்கிறார். தாவீதின் இருதயத்தில் வஞ்சகம் நிரம்பியிருக்கிறது.

யோவாப்
2சாமு 11:14-27

2சாமு 11:14. காலமே தாவீது யோவாபுக்கு ஒரு நிருபத்தை எழுதி, உரியாவின் கையில் கொடுத்து அனுப்பினான்.

2சாமு 11:15. அந்த நிருபத்திலே: மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு, அவனை விட்டுப் பின்வாங்குங்கள் என்று எழுதியிருந்தான்.

2சாமு 11:16. அப்படியே யோவாப் அந்தப் பட்டணத்தைச் சூழக் காவல்போட்டிருக்கையில் பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள் என்று தான் அறிந்த இடத்தில் உரியாவை நிறுத்தினான்.

2சாமு 11:17. பட்டணத்து மனுஷர் புறப்பட்டு வந்து யோவாபோடே யுத்தம் பண்ணுகையில், தாவீதின் சேவகராகிய ஜனத்தில் சிலர் பட்டார்கள்; ஏத்தியனாகிய உரியாவும் செத்தான்.

2சாமு 11:18. அப்பொழுது யோவாப் அந்த யுத்தத்தின் செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவிக்க ஆள் அனுப்பி,

2சாமு 11:19. தான் அனுப்புகிற ஆளை நோக்கி: நீ யுத்தத்தின் செய்திகளையெல்லாம் ராஜாவுக்குச் சொல்லித் தீர்ந்தபோது,

2சாமு 11:20. ராஜாவுக்குக் கோபம் எழும்பி, அவர்: நீங்கள் பட்டணத்திற்கு இத்தனைகிட்டப்போய் யுத்தம்பண்ண வேண்டியது என்ன? அலங்கத்தில் நின்று எய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?

2சாமு 11:21. எருப்பேசேத்தின் குமாரன் அபிமெலேக்கைக் கொன்றது யார்? தேபேசிலே ஒரு பெண்பிள்ளை அலங்கத்திலிருந்து ஒரு எந்திரக்கல்லின் துண்டை அவன்மேல் போட்டதினால் அல்லவோ அவன் செத்தான்; நீங்கள் அலங்கத்திற்கு இத்தனை கிட்டப்போனது என்ன என்று உன்னோடே சொன்னால், அப்பொழுது நீ, உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்று சொல் என்றான்.

2சாமு 11:22. அந்த ஆள் போய், உட்பிரவேசித்து, யோவாப் தன்னிடத்தில் சொல்லியனுப்பின செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவித்து,

2சாமு 11:23. தாவீதைப் பார்த்து: அந்த மனுஷர் கைமிஞ்சி, அவர்கள் வெளியே எங்களுக்கு எதிராகப் புறப்பட்டு வந்தபோது, நாங்கள் பட்டணவாசல்மட்டும் அவர்களைத் துரத்தினோம்.

2சாமு 11:24. அப்பொழுது வில்வீரர் அலங்கத்திலிருந்து உம்முடைய சேவகரின்மேல் எய்ததினால், ராஜாவின் சேவகரில் சிலர் செத்தார்கள்; உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்றான்.

2சாமு 11:25. அப்பொழுது தாவீது அந்த ஆளை நோக்கி: நீ யோவாபினிடத்தில் போய், இந்தக் காரியத்தைப்பற்றி விசாரப்பட வேண்டாம்; பட்டயம் ஒருவேளை ஒருவனையும், ஒருவேளை வேறொருவனையும் பட்சிக்கும்; நீ யுத்தத்தைப் பலக்கப்பண்ணி, பட்டணத்தை இடித்துப்போடு என்று அவனுக்குத் திடஞ்சொல் என்றான்.

2சாமு 11:26. தன் புருஷனாகிய உரியா செத்தான் என்று அவன் மனைவி கேள்விப்பட்டபோது, அவள் தன் நாயகனுக்காக இழவு கொண்டாடினாள்.

2சாமு 11:27. துக்கநாள் சென்றபின்பு, தாவீது அவளை அழைத்தனுப்பி, தன் வீட்டிலே சேர்த்துக்கொண்டான்; அவள் அவனுக்கு மனைவியாகி, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது.

உரியாவை அவனுடைய வீட்டிற்கு அனுப்ப தாவீது முயற்சி பண்ணினார். தாவீதின் முயற்சிகள் தோல்வியடைந்தது. தாவீது தன்னுடைய பாவத்தை மறைக்க திட்டமிடுகிறார். உரியா அவனுடைய வீட்டிற்குப் போகாததினால், தாவீது யுத்தக்களத்திலே உரியாவைக் கொன்று போடலாம் என்று சதித்திட்டமிடுகிறார். உரியா அவனுடைய வீட்டிற்குப்போகாததினால், தாவீதின் பாவம், ஏதோ ஒரு நாளில், உரியாவுக்கு தெரிந்துவிடும். அதன் பின்பு பிரச்சனை வரும். அந்தப் பிரச்சனையை தவிர்ப்பதற்கு உரியாவைக் கொன்றுபோட வேண்டும் என்பது தாவீதின் சதிதிட்டமாயிருக்கிறது.

தாவீது முதலில் தன் மாம்ச இச்சைக்கு இடங்கொடுத்து பத்சேபாளோடு விபசாரம்பண்ணினார். இப்போது சாத்தான் தாவீதின் இருதயத்தில் குடியிருக்கிறான். அவனே தாவீதை ஆளுகை செய்கிறான். உரியவைக் கொன்றுபோடவேண்டுமென்று சாத்தான் தாவீதுக்கு ஆலோசனை சொல்லுகிறான். தாவீதும் சாத்தானுடைய ஆலோசனைக்கு கீழ்ப்படிகிறார்.

உரியா ஒரு தப்பிதமும் செய்யவில்லை. அவன் ஒரு யுத்தவீரன். உரியா ஒரு பராக்கிரமசாலி. தன்னுடைய ராஜாவுக்காக, உரியா யுத்தக்களத்திலே மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறான். இஸ்ரவேல் தேசத்தின் பாதுகாப்புக்காக, யுத்தக்களத்திலே மரிக்க ஆயத்தமாயிருக்கும் உரியாவை, தாவீது தன்னுடைய சுயநலத்திற்காக கொன்றுபோட திட்டமிடுகிறார்.

மாம்சத்தின் இச்சை ஆத்துமாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது. மாம்சத்தின் இச்சைகள் மனுஷருடைய கண்களை குருடாக்கும். மனுஷருடைய இருதயங்களைக் கடினப்படுத்தும். மனுஷருடைய மனச்சாட்சிகளை மழுங்கிப்போகப்பண்ணும். மாம்சத்தின் இச்சைகள் மனுஷனுடைய மதிப்பையும் மரியாதையையும், நீதியையும் நியாயத்தையும் கெடுத்துப்போடும். சாத்தான் கொடிய விஷமுள்ள சர்ப்பத்தைப் போன்றவன். அவன் தாவீதின் இருதயத்தில் குடியிருக்கிறான். உரியாவை கொல்லவேண்டும் என்னும் யோசனையை சாத்தான் தாவீதுக்கு கொடுக்கிறான். சாத்தான் வஞ்சிக்கிற சர்ப்பத்தைப் போன்றவன். உரியவை எவ்வாறு கொல்லுவது என்னும் சதிஆலோசனைகளை சாத்தான் தாவீதுக்கு தாராளமாய்க் கொடுக்கிறான்.

யோவாப் தாவீதின் சேனைக்கு தளபதி. தாவீதின் வீரர்கள் எல்லோரும் ரப்பா பட்டணத்திற்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். உரியா தன் வீட்டிற்குப்போகாமல் தாவீதின் சேவகரோடே அரண்மனையின் வாசலிலேயே படுத்துக்கொண்டான். தாவீது மறுநாள் காலையில் உரியவை யுத்தக்களத்திற்கு அனுப்புகிறார். தாவீது அவனுடைய கையில் யோவாபுக்கு ஒரு நிருபத்தையும் கொடுத்தனுப்புகிறார்.

காலமே தாவீது யோவாபுக்கு ஒரு நிருபத்தை எழுதி, உரியாவின் கையில் கொடுத்து அனுப்புகிறார். அந்த நிருபத்திலே: "மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு, அவனை விட்டுப் பின்வாங்குங்கள்" என்று தாவீது எழுதியிருக்கிறார் *(2சாமு 11:14,15)*.

உரியாவை போர்முகத்தின் முன்னணியில் அனுப்பிவிட்டு, மற்ற வீரர்கள் பின்வாங்கவேண்டும். உரியா சத்துருக்கள் மத்தியிலே தனிமையாயிருப்பான். அப்போது சத்துருக்கள் உரியாவைக் கொன்றுபோடுவார்கள். இதுவே தாவீதின் சதிஆலோசனை.

தாவீது இந்த சதிஆலோசனையை ஒரு நிருபத்தில் எழுதி, அந்த நிருபத்தை உரியாவின் கையிலேயே யோவாபுக்கு கொடுத்தனுப்புகிறார். உரியா தன்னுடைய மரணசாசனத்தை தானே எடுத்துக்கொண்டு போகிறான். இஸ்ரவேலின் சேனையில் உண்மையாய் பணிபுரிகிற உரியாவுக்கு, இஸ்ரவேலின் ராஜா மூலமாக மரணமே வெகுமதியாகக் கொடுக்கப்படுகிறது.

உரியா இஸ்ரவேலின் சேனையில் உண்மையுள்ளவனாயிருக்கிறான். சத்துருக்களுக்கு விரோதமாக துணிந்து யுத்தம்பண்ணுகிறான். அவன் இஸ்ரவேலின் ராஜாவைக் குறித்தும், இஸ்ரவேல் தேசத்தைக் குறித்தும் வைராக்கியமாயிருக்கிறான். இப்படிப்பட்ட யுத்தவீரனுக்கு வெகுமதிகளும், பாராட்டுகளும் கொடுக்கப்படவேண்டும். ஆனால் தாவீதோ உரியாவின் மரணத்தையே அவனுக்கு வெகுமதியாகக் கொடுக்கிறார்.

உரியாவைக் கொன்றுபோடும் சதியில் யோவாபும் பயன்படுத்தப்படுகிறான். யோவாப் தாவீதின் சேனைக்கு படைத்தலைவனாயிருக்கிறவன். உரியாவை கொன்றுபோடுவதற்கான ஆலோசனை நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யோவாப் அந்த நிருபத்தைப் படித்து பார்த்து, உரியாவை ஏன் கொல்லவேண்டுமென்று யோசிக்கவில்லை. யோவாபுக்கும் உரியாவின் நற்குணத்தைப்பற்றி நன்றாய்த் தெரியும். ஆனாலும் யோவாப் ஒன்றும் யோசித்துப் பார்க்காமல், தாவீது ராஜா நிருபத்திலே எழுதின பிரகாரம், உரியாவை மும்முரமாய் நடக்கிற போர்முகத்திற்கு அனுப்புகிறான். அதிலே ஏத்தியனாகிய உரியா செத்துப்போகிறான்.

உரியா செத்துப்போனது அம்மோன் புத்திரருக்கு சந்தோஷமாயிருக்கிறது. அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின் தேவனுக்கும், தேவனுடைய இஸ்ரவேலுக்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேலில் ஒருவன் செத்துப்போவதைப் பார்த்து சத்துருக்கள் சந்தோஷப்படுவார்கள். தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், தன்னுடைய சேனையிலுள்ள உரியா செத்துப்போனதற்காக சந்தோஷப்படுகிறார். உரியாவின் மரணத்திற்கு தாவீதே காரணமாயிருக்கிறார்.

யோவாப் தாவீதின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறான். அப்படியே யோவாப் அந்தப் பட்டணத்தைச் சூழக் காவல்போட்டிருக்கையில் பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள் என்று தான் அறிந்த இடத்தில் உரியாவை நிறுத்துகிறான். பட்டணத்து மனுஷர் புறப்பட்டு வந்து யோவாபோடே யுத்தம் பண்ணுகையில், தாவீதின் சேவகராகிய ஜனத்தில் சிலர் படுகிறார்கள்; ஏத்தியனாகிய உரியாவும் செத்துப்போகிறான் (2சாமு 11:16,17).

யோவாப் தாவீது எழுதின நிருபத்தைப் பார்த்து, அதன் பிரகாரம் உடனே செயல்படுகிறான். தாவீது இவ்வாறு நிருபம் எழுதுவதற்கு காரணம் என்ன என்பதை யோவாப் யோசித்துப் பார்க்கவில்லை. உரியா சாவுக்கேதுவான குற்றம் செய்திருக்கவேண்டும் என்றும், ஆகையினால்தான் தாவீது அவனுக்கு இந்த தண்டனையை கொடுத்திருக்கிறார் என்றும் யோவாப் நினைத்திருக்கவேண்டும்.

யோவாப் ஏற்கெனவே அப்னேரைக் கொன்றவன். குற்றமில்லாதவனுடைய இரத்தத்தை சிந்தினவன். யோவாப்மீது இந்தக் குற்றச்சாட்டு இதுவரையிலும் இருந்தது. யோவாபுக்கு உரியாவைப்பற்றித் தெரியும். உரியா குற்றமில்லாதவன். தாவீது உரியாவைக் கொன்றுபோடச் சொல்லுகிறார். உரியாவின் இரத்தப்பழிக்கு தாவீதே காரணம். தன்னைப்போலவே தாவீதும், குற்றமில்லாதவனுடைய இரத்தத்தை சிந்தி, பாவம் செய்கிறார் என்று நினைத்து, யோவாப் தாவீதின் நிருபத்தை செயல்படுத்தியிருக்கவேண்டும்.

தாவீது உரியா மூலமாய் யோவாபுக்கு நிருபம் எழுதி அனுப்புகிறார். ராஜாவின் கட்டளை நிறைவேற்றப்பட்டது என்னும் செய்தி ராஜாவுக்கு அறிவிக்கப்படவேண்டும். மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே உரியவை அனுப்பியபோது, உரியாவும் செத்துப்போனான். அவனோடுகூட இஸ்ரவேலின் சேனையிலுள்ள வேறு சிலரும் செத்துப்போனார்கள். யோவாப் தாவீதுக்கு இந்தச் செய்தியை சொல்லியனுப்புகிறான். அப்பொழுது யோவாப் அந்த யுத்தத்தின் செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவிக்க ஆள் அனுப்புகிறான் (2சாமு 11:18).

யோவாப் தான் அனுப்புகிற ஆளை நோக்கி: "நீ யுத்தத்தின் செய்திகளையெல்லாம் ராஜாவுக்குச் சொல்லித் தீர்ந்தபோது, ராஜாவுக்குக் கோபம் எழும்பி, அவர்: "நீங்கள் பட்டணத்திற்கு இத்தனைகிட்டப்போய் யுத்தம்பண்ணவேண்டியது என்ன? அலங்கத்தில் நின்று எய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? எருப்பேசேத்தின் குமாரன் அபிமெலேக்கைக் கொன்றது யார்? தேபேசிலே ஒரு பெண்பிள்ளை அலங்கத்திலிருந்து ஒரு எந்திரக்கல்லின் துண்டை அவன்மேல் போட்டதினால் அல்லவோ அவன் செத்தான்; நீங்கள் அலங்கத்திற்கு இத்தனை கிட்டப்போனது என்ன" என்று உன்னோடே சொன்னால், அப்பொழுது நீ, "உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்று சொல்" (2சாமு 11:19-21) என்று சொல்லுகிறான்.

அந்த ஆள் போய், உட்பிரவேசித்து, யோவாப் தன்னிடத்தில் சொல்லியனுப்பின செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவிக்கிறான். யோவாப் அனுப்பின ஆள் தாவீதைப் பார்த்து, " அந்த மனுஷர் கைமிஞ்சி, அவர்கள் வெளியே எங்களுக்கு எதிராகப் புறப்பட்டு வந்தபோது, நாங்கள் பட்டணவாசல்மட்டும் அவர்களைத் துரத்தினோம். அப்பொழுது வில்வீரர் அலங்கத்திலிருந்து உம்முடைய சேவகரின்மேல் எய்ததினால், ராஜாவின் சேவகரில் சிலர் செத்தார்கள்; உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான்" (2சாமு 11:23,24) என்று சொல்லுகிறான்.

ஏத்தியனாகிய உரியா செத்துப்போனான் என்னும் செய்தி தாவீதுக்கு ஆறுதலைக் கொடுக்கிறது. பத்சேபாளோடு தான் செய்த பாவம் இத்துடன் மறைக்கப்பட்டு விட்டது என்று தாவீது நினைக்கிறார்.

அப்பொழுது தாவீது அந்த ஆளை நோக்கி: "நீ யோவாபினிடத்தில் போய், இந்தக் காரியத்தைப்பற்றி விசாரப்பட வேண்டாம்; பட்டயம் ஒருவேளை ஒருவனையும், ஒருவேளை வேறொருவனையும் பட்சிக்கும்; நீ யுத்தத்தைப் பலக்கப்பண்ணி, பட்டணத்தை இடித்துப்போடு என்று அவனுக்குத் திடஞ்சொல்" (2சாமு 11:25) என்று சொல்லுகிறார்.

யுத்தத்திலே உரியா செத்துப்போனான் என்னும் செய்தி அவனுடைய மனைவி பத்சேபாளுக்கும் அறிவிக்கப்படுகிறது. தன் புருஷனாகிய உரியா செத்தான் என்று அவன் மனைவி கேள்விப்பட்டபோது, அவள் தன் நாயகனுக்காக இழவு கொண்டாடுகிறாள் (2சாமு 11:26). தன்னுடைய புருஷன் செத்துப்போனான் என்னும் துக்கம், பத்சேபாளுக்கு இருந்தாலும், தான் ராஜாவுக்கு மனைவியாகப்போகும் சந்தோஷம் பத்சேபாளிடம் அதிகமாயிருக்கிறது.

துக்கநாள் சென்றபின்பு, தாவீது பத்சேபாளை அழைத்தனுப்பி, தன் வீட்டிலே சேர்த்துக்கொள்கிறார்; அவள் தாவீதுக்கு மனைவியாகி, அவருக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள். தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருக்கிறது (2சாமு 11:27).

"தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்துவந்தான்" (1இராஜா 15:5).

தாவீது உரியாவின் மனைவியினிடத்தில் விபசாரம்பண்ணினார். உரியாவைக் கொன்றுபோட்டார். பத்சேபாளை தனக்கு மனைவியாக திருமணம் செய்தார். தாவீது செய்த இந்தக் காரியங்களெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாததாயிருக்கிறது. கர்த்தர் பரிசுத்தர். தம்மை ஆராதிக்கிற ஜனமும் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். கர்த்தருடைய ஜனம் பாவத்தை வெறுத்து, பாவத்திற்கு விலகி ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரோடு எவ்வளவு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் பாவத்தை வெறுத்து பாவத்தை விட்டு விலகவேண்டும். பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். தம்முடைய பிள்ளைகளின் இருதயத்தில் பாவம் வாசமாயிருப்பதையும், பாவம் அவர்களை ஆளுகை செய்வதையும் கர்த்தர் விரும்புவதில்லை. தாவீது செய்த பாவம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாததாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் தாவீதைத் தண்டிக்கிறார்.

12 அதிகாரம்

இதற்கு முந்தின அதிகாரத்தில் தாவீதின் பாவத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் அவர் தன் பாவத்திற்கு மனந்திரும்பியது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது பாவத்தில் விழுந்தாலும், அவர் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடவில்லை. கர்த்தருடைய பெரிதான கிருபையினால் தாவீது தன்னுடைய பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறார். தாவீதுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபையும் இரக்கமும் கிடைக்கிறது.

கர்த்தர் நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்புகிறார். நாத்தான் கர்த்தருடைய செய்தியை தாவீதுக்கு சொல்லுகிறார். நாத்தான் ஒரு உவமையின் மூலமாக தாவீதின் பாவத்தை அவருக்கு உணர்த்துகிறார் *(2சாமு 12:1-6)*. நாத்தான் சொல்லும் உவமையின் விளக்கம். நாத்தான் தாவீதின் பாவத்திற்காக அவரைக் குற்றப்படுத்துகிறார் *(2சாமு 12:7-9)*. நாத்தான் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை தாவீதுக்கு சொல்லுகிறார் *(2சாமு 12:10-12)*.

தாவீது தன்னுடைய பாவத்தை உணர்ந்து மனந்திரும்புகிறார் *(2சாமு 12:13,14)*. தாவீதுக்கு பத்சேபாளிடத்தில் ஒரு குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தை வியாதிப்பட்டு செத்துப்போகிறது. அந்த சம்பவத்தில் தாவீதின் சுபாவம் *(2சாமு 12:15-23)*. தாவீது தன்னுடைய பாவத்திற்கு மெய்யாகவே மனந்திரும்புகிறார்.

தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் மேலும் ஒரு குமாரன் பிறக்கிறான். அவனுக்கு சாலொமோன் என்று பேர். கர்த்தர் தாவீதின் பாவத்தை மன்னித்து அவரோடு ஒப்புரவாகியிருக்கிறார். கர்த்தர் தாவீதின்மீது அன்பாயிருக்கிறார் என்பதற்கு, சாலொமோன் அடையாளமாயிருக்கிறார் *(2சாமு 12:24,25)*.

இஸ்ரவேல் தேசத்தார் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவைப் பிடிக்கிறார்கள் *(2சாமு 12:26-31)*. கர்த்தர் தாவீதின் பாவத்திற்குத்தக்கதாக அவரைத் தண்டிக்கவில்லை. தாவீதுக்கு ரப்பா பட்டணத்தின்மீது கிடைத்த வெற்றியும், கர்த்தர் தாவீதின் பாவத்திற்குத்தக்கதாக அவரைத் தண்டிக்கவில்லை என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

நாத்தான் சொன்ன உவமை 2சாமு 12:1-6

2சாமு 12:1. கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்; இவன் அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன்.

2சாமு 12:2. ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது.

2சாமு 12:3. தரித்திரனுக்கோ தான்கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது; அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங்கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப்போல இருந்தது.

2சாமு 12:4. அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான்.

2சாமு 12:5. அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபமூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.

2சாமு 12:6. அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும் என்றான்.

தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபசாரம் பண்ணி பாவம் செய்தார். தாவீது யுத்தக்களத்திலே உரியாவுக்கு விரோதமாக சதிபண்ணி, அவனைக் கொன்றுபோட்டார். ஆனாலும் தாவீது இதுவரையிலும் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பினாரா என்று தெரியவில்லை. உரியா செத்துப்போன பின்பு, தாவீது பத்சேபாளை தன் வீட்டிலே சேர்த்துக்கொள்கிறார்.

தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது அதற்கு பின்புதான் கர்த்தர் நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்புகிறார். நாத்தான் தாவீதிடம், "உனக்கு பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும்" *(2சாமு 12:14)* என்று சொல்லுகிறார். ஆகையினால் நாத்தான் தாவீதினிடத்தில் வருவதற்கு முன்பாகவே, தாவீதுக்கு பிள்ளை பிறந்திருக்கவேண்டும்.

தாவீது பத்சேபாளோடு விபசாரம் பண்ணினாலும், அவர் இதுவரையிலும் தன்னுடைய பாவத்தை உணர்ந்ததாக தெரியவில்லை. தாவீதின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்தவில்லை. கர்த்தர் தாவீதை உடனே தண்டித்துவிடவில்லை. தாவீது தன் பாவத்திற்கு மனந்திரும்பவேண்டுமென்று, கர்த்தர் பொறுமையோடு காத்திருக்கிறார். ஆனால் தாவீதோ கர்த்தருடைய பொறுமையை அசட்டைபண்ணுகிறார்.

தாவீது பத்சேபாளோடு விபசாரம்பண்ணினாலும், தாவீதும் பத்சேபாளும், அவருடைய அரண்மனையில் சவுகரியமாய் வசிக்கிறார்கள். அரண்மனையின் வசதிகளை சொகுசாய் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால் தாவீதுக்கு அரண்மனை வசதிகளைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தாவீதை ஆசீர்வதிப்பதினால் அவர் தன்னுடைய பாவத்தைப்பற்றியோ, தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றியோ சிந்தித்துப் பார்க்கவில்லை. உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் தாவீதின் மனச்சாட்சியை மழுங்க வைத்துவிடுகிறது. தாவீதின் அரண்மனை வாழ்க்கையும், அவருடைய சொகுசான வசதிகளும், அவருடைய மனக்கண்களை மங்கவைத்துவிடுகிறது. தாவீது கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், தன்னுடைய அரண்மனையின் வசதிகளை நோக்கிப் பார்க்கிறார். அவர் பத்சேபாளோடு சந்தோஷமாயிருக்கிறார்.

தாவீது தன்னுடைய பாவத்தை உணரும் வரையிலும், அவர் கர்த்தரோடு ஐக்கியமாயிருந்ததாகவும் தெரியவில்லை. இந்தக் காலத்தில் அவர் ஒரு சங்கீதமும் எழுதவில்லை. தாவீது தன்னுடைய இசைக்கருவிகளை இந்தக் காலத்தில் இசைத்ததாகவும் தெரியவில்லை. அவருடைய ஆத்துமா பனிக்காலத்து மரம்போல பட்டுப்போயிற்று. பனிக்காலத்தில் மரத்தின் வேர்பகுதியில் மாத்திரம் ஜீவன் இருக்கும்.

தாவீது கர்த்தரோடு ஐக்கியமில்லாமல், உலகத்தோடும், உலகத்தின் ஆசாபாசங்களோடும் ஐக்கியமாயிருக்கிறார். தாவீது நிர்விசாரமாய் ஜீவிக்கிறார். இந்த சூழ்நிலையில் கர்த்தர் நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்புகிறார். நாத்தான் கர்த்தருடைய தீர்க்கதரிசி. இவர் தாவீதுக்கு சிநேகிதர். தாவீதின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். நாத்தான் தாவீதுக்கு புத்திமதியும், ஆலோசனையும் சொல்லுவது வழக்கம்.

தாவீது இதுவரையிலும் தன்னுடைய பாவத்திலே விழுந்திருந்தார். தன்னுடைய பாவத்தைக் குறித்து உணர்வில்லாமலும், தன் பாவத்திற்கு மனந்திரும்பாமலும் இருந்தார். தாவீது தன் பாவத்திற்கு மனந்திரும்புவார் என்று, கர்த்தரும் பொறுமையோடு காத்திருந்தார். ஆனால் தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகள், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், பாவத்திலே நிலைத்திருந்தால், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை சந்திப்பார். அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர்களை விடுதலைபண்ணுவார். நாம் பாவத்திலேயே விழுந்து கிடப்பது கர்த்தருக்கு சித்தமல்ல. நாம் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கக்கூடாது.

நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், நாம் பாவத்திலே அழிந்துபோவோம். பாவத்தின் சம்பளம் மரணம். நாம் மரிப்பதற்கு முன்பாக, நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படவேண்டும். கர்த்தரால் மாத்திரமே நம்மை இரட்சிக்க முடியும். நம்மை இரட்சிக்கும்படியாக நாம் கர்த்தரைத் தேடவேண்டும். நாம் கர்த்தரைத் தேடவில்லையென்றால், கர்த்தர் தம்முடைய அன்பினாலும், கிருபையினாலும், இரக்கத்தினாலும் நம்மைத் தேடி வருவார். நாம் பாவத்தில் அழிந்துபோவதற்கு முன்பாக, கர்த்தர் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சித்து மீட்டுக்கொள்வார்.

தாவீது பத்சேபாளோடு விபசாரம்பண்ணி, தன்னுடைய பாவத்தைக் குறித்து அக்கரையில்லாதவராயிருக்கிறார். நிர்விசாரமாய் ஜீவிக்கிறார். தாவீதின் இருதயத்தில் பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு இல்லை. தாவீதின் பாவத்தை அவருக்கு உணர்த்துவதற்காக, கர்த்தர் நாத்தானை அவரிடத்தில் அனுப்புகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே தாவீதுக்கு நல்ல செய்தி சொல்லுவதற்காக, நாத்தானை அவரிடத்தில் அனுப்பினார். "அன்று ராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி அவர்: *(2சாமு 7:4)*. இப்போது கர்த்தர் தம்முடைய கோபத்தைப்பற்றி தாவீதுக்கு சொல்லுவதற்காக, அவர் நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்புகிறார்.

கர்த்தருடைய கரம் நம்மை ஆதரிக்கவும் செய்கிறது, நம்மைக் கண்டித்து திருத்தவும் செய்கிறது. நாம் கர்த்தருடைய சித்தத்தைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது. நாம் கர்த்தருடைய பாதையில் நடவாமல், திசைமாறிப்போய், காணாமல் போய்விடக்கூடாது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

நாத்தான் தாவீதினிடத்தில் வந்து, அவருக்கு ஒரு உவமையைச் சொல்லுகிறார். தாவீதின் பாவத்தை உணர்த்துவதற்காகவே, நாத்தான் இந்த உவமையை அவருக்கு சொல்லுகிறார். நாத்தான் தாவீதினிடத்தில், "கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்; இவன் அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது" *(2சாமு 12:1,2)* என்று தன்னுடைய உவமைக்கு முன்னுரை சொல்லுகிறார்.

இந்த உவமையில் ஐசுவரியவான் என்பது தாவீதைக் குறிக்கும். தரித்திரன் என்பது உரியாவைக் குறிக்கும். ஐசுவரியவானுடைய ஆடுமாடுகள் என்பது, தாவீதின் மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் குறிக்கும். தரித்திரனின் ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டி என்பது பத்சேபாளைக் குறிக்கும்.

தாவீது சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாயிருக்கிறார். நாத்தான் இந்த உவமையின் மூலமாக, ஒரு சம்பவத்தை தாவீதுக்கு சொல்லுகிறார். தாவீது நாத்தான் சொல்லுகிற சம்பவத்தைக் கேட்கும்போது, ஐசுவரியவான் அநீதி செய்திருக்கிறான் என்பதும், அவனுக்கு தண்டனை கொடுக்கவேண்டும் என்பதும் தாவீதுக்கு தெரிந்திருக்கிறது.

தரித்திரனிடத்தில் ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டி மாத்திரமே இருக்கிறது. தரித்திரனும் தன் ஆட்டுக்குட்டியின்மீது அன்பாயிருக்கிறான். அந்த ஆட்டுக்குட்டியும் தரித்திரன்மீது அன்பாயிருக்கிறது. நாத்தான் தரித்திரனையும், அவனுடைய ஆட்டுக்குட்டியையும் பற்றி இவ்வாறு சொல்லுகிறார்.

"தரித்திரனுக்கோ தான்கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது; அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங்கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப்போல இருந்தது" *(2சாமு 12:3)*.

தரித்திரனுடைய ஆட்டுக்குட்டி, அவனுடைய வீட்டிலே ஒரு செல்லப்பிள்ளைபோல் வளருகிறது. தரித்திரனிடத்தில் பணமில்லை. இன்னொரு ஆட்டுக்குட்டியை வாங்கவேண்டுமென்றால், அதற்குரிய கிரயத்தை தரித்திரனால் செலுத்த முடியாது. அவனிடத்தில் இருக்கிற ஆட்டுக்குட்டியே, அவனுடைய மொத்த சொத்து. இதுவே அவனுடைய மொத்த ஐசுவரியம்.

ஐசுவரியவானுடைய வீட்டிலே ஒரு வழிப்போக்கன் விருந்தினனாக வருகிறான். "அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான்" (2சாமு 12:4) என்று அந்த ஐசுவரிவான் செய்ததை நாத்தான் தாவீதுக்கு இந்த உவமையின் மூலமாக சொல்லுகிறார்.

ஐசுவரியவான் ஒரு பேராசைக்காரன். தன்னுடைய சொத்து குறைந்துபோகக்கூடாது என்று ஐசுவரியவான் நினைக்கிறான். தன்னுடைய ஆட்டில் ஒன்றும் குறைந்துபோகக்கூடாது என்றும், தரித்திரனுடைய ஆடு குறைந்துபோனால் தனக்கு ஒன்றும் பிரச்சனையில்லை என்றும் ஐசுவரியவான் நினைக்கிறான். தரித்திரனுடைய ஆடு அவனுக்கு ஒரு பிள்ளையைப்போல இருந்தது என்பதைப்பற்றியெல்லாம் ஐசுவரியவான் யோசித்துப் பார்க்கவில்லை.

தன்னுடைய ஆட்டை சமையல் பண்ணுவதற்கு பதிலாக, தரித்திரனுடைய ஆட்டை சமையல் பண்ணினால், அது தன்னுடைய விருந்தாளிக்கு அதிக சுவையாகயிருக்கும் என்று ஐசுவரியவான் நினைக்கிறான். ஏனெனில் தரித்திரனுடைய ஆட்டை அடித்தால், ஐசுவரிவானுக்கு ஒன்றும் குறைந்துபோகாது. ஐசுவரிவான் தனக்கு நஷ்டம் வராமல், பிறரை நஷ்டப்படுத்தி, சந்தோஷப்படுகிறான். ஐசுவரிவானிடம் தரித்திரனைப்பற்றிய கவலையோ கரிசனையோ இல்லை.

தாவீது இந்த ஐசுவரியவானைப்போல இருக்கிறார். தாவீதுக்கு அநேக மனைவிகளும், மறுமனையாட்டிகளும் இருந்தாலும், தாவீது உரியாவின் மனைவியின் மேலும் ஆசைப்பட்டு அவளோடு விபசாரம்பண்ணுகிறார். தாவீது தன்னுடைய மாம்ச இச்சைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். தாவீது உரியவைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவுமில்லை. அவனைப்பற்றி கவலைப்படவுமில்லை.

மனுக்குலத்திலுள்ளவர்கள் விபசாரம் பண்ணக்கூடாது என்பதற்காக, கர்த்தர் விவாகத்தை நியமித்திருக்கிறார். விவாகம் கனமுள்ளது. வேசித்தனமும் விபசாரமும் இருக்கக்கூடாது என்பதற்காக, ஒருவன் அநேக ஸ்திரீகளை மனைவிகளாக்கிக்கொள்ளக்கூடாது. கர்த்தர் அதையும் தடைபண்ணுகிறார்.

ஒரு பாவம் மற்றொரு பாவத்தை செய்வதற்கு வழிநடத்தும். ஐசுவரியவானுடைய வீட்டிற்கு வந்தவன் ஒரு சாதாரண வழிப்போக்கன். வழிப்போக்கனை அப்படியே அனுப்பிவிடலாம். ஆனால் ஐசுவரியவானோ, அந்த வழிப்போக்கனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்து, தன்னுடைய விருந்தாளியாக ஏற்றுக்கொள்கிறான். ஐசுவரியவானுடைய வீட்டிற்கு வந்த விருந்தாளி, அந்த வீட்டிற்கு எஜமானனைப்போல மாறுகிறான். ஐசுவரியவான் ஆரம்பத்திலேயே, வழிப்போக்கனை தன் வீட்டிற்கு அழைத்துவராவிட்டால், அவன் தரித்திரனுடைய ஆட்டை சமையல் பண்ண வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

தாவீது பத்சேபாளைப் பார்த்து, அவளை இச்சித்திருக்கவில்லையென்றால், தாவீது அவளோடு விபசாரம் செய்திருக்கமாட்டார். தாவீது தன்னுடைய கண்களினால் பத்சேபாளின் அழகைப் பார்த்தார். தன்னுடைய மனதினால் அவள்மீது ஆசைப்பட்டார். அதன் பின்பு தன்னுடைய சரீரத்தினால் அவளோடு விபசாரம் பண்ணினார். அதன் பின்பு தாவீது, தன்னுடைய ராஜாவின் அதிகாரத்தினால் உரியாவைக் கொன்றுபோட்டார். ஒரு பாவம் அநேக பாவங்களுக்கு காரணமாயிருக்கிறது.

நாத்தான் தனக்கு சொல்லும் உவமையை தாவீது கவனமாகக் கேட்கிறார். நாத்தான் தன்னைக் குறித்துதான் இந்த உவமையின் மூலமாகப் பேசுகிறார் என்பது தாவீதுக்கு தெரியவில்லை. தாவீது இஸ்ரவேல் தேசத்தின் ராஜா. அவர் நீதியுள்ள நியாயாதிபதி. தாவீது இந்த உவமையைக் கேட்டவுடனேயே, தன் தீர்ப்பை சொல்லிவிடுகிறார்.

அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபமூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: "இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும்" *(2சாமு 12:5,6)* என்று சொல்லுகிறார்.

நாத்தான் தன்னிடத்தில் சொல்லுவது ஒரு உவமை என்பதுகூட தாவீதுக்கு தெரியவில்லை. இந்த சம்பவத்தை நாத்தான் சொல்லுவதினால், இது உண்மை சம்பவமாகயிருக்க வேண்டும் என்று தாவீது நினைக்கிறார். ஆகையினால் தாவீது குற்றம் செய்தவனுக்கு, தன்னுடைய தீர்ப்பை உடனே சொல்லிவிடுகிறார்.

ஐசுவரியவான் தரித்திரனுடைய ஆட்டை அநியாயமாக எடுத்துக்கொண்டான். ஆகையினால் அந்த ஐசுவரியவான், "அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனையாக திரும்ப செலுத்தவேண்டும்" என்பது தாவீதின் தீர்ப்பு. தாவீது இந்தத் தீர்ப்பை நியாயப்பிரமாணத்தை ஆதாரமாக வைத்து சொல்லுகிறார்.

"ஒருவன் ஒரு மாட்டையாவது ஒரு ஆட்டையாவது திருடி, அதைக் கொன்றால், அல்லது அதை விற்றால், அவன் அந்த மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளையும் பதிலாகக் கொடுக்கக்கடவன்" *(யாத் 22:1)*.

நாத்தான் சொன்ன உவமையை தாவீது கவனமாகக் கேட்டிருக்கிறார். தாவீதின் பார்வையில் அந்த ஐசுவரியவான் இரக்கமற்றவனாகயிருக்கிறான். ஐசுவரிவான் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தை செய்தபடியினால், "இந்தக் காரியத்தை செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரவான்" என்றும் தாவீது அவனுக்கு தீர்ப்பு சொல்லுகிறார். தாவீது தன்னுடைய தீர்ப்பை உறுதிபண்ணும் வண்ணமாக, "கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்றும் சொல்லுகிறார்.

நீயே அந்த மனுஷன்
2சாமு 12:7-12

2சாமு 12:7. அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்து,

2சாமு 12:8. உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன்.

2சாமு 12:9. கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய, வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய்.

2சாமு 12:10. இப்போதும் நீ என்னை அசட்டை பண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்.

2சாமு 12:11. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்.

2சாமு 12:12. நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்.

நாத்தான் தாவீதுக்கு உவமையை சொல்லி முடிக்கும்போது, தாவீது ஐசுவரியவானுக்கு தீர்ப்பு சொல்லுகிறார். நாத்தானோ இந்த உவமைக்கும் தாவீதுக்கும் இடையேயுள்ள தொடர்பைப்பற்றி தெளிவாகச் சொல்லுகிறார். நாத்தான் தாவீதினிடத்தில், "நீயே அந்த மனுஷன்" என்று சொல்லுகிறார். இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தை செய்த மனுஷன் தாவீதுதான் என்று நாத்தான் அவருக்கு சொல்லுகிறார்.

நாத்தான் தன்னைப்பற்றிச் சொல்லுகிறார் என்று தெரியாமலேயே, "இந்தக் காரியத்தை செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன்" என்று தாவீது தன்னுடைய தீர்ப்பை சொன்னார். தரித்திரருடைய ஆட்டுக்குட்டியை இரக்கமில்லாமல் எடுத்துக்கொண்ட ஐசுவரியவான் மரணத்திற்குப் பாத்திரவான் என்று தாவீது சொன்னார். தாவீது உரியாவின் மனைவியை இரக்கமற்றவராக தனக்கு எடுத்துக்கொண்டார்.

கர்த்தர் தாவீதுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். நாத்தான் இப்போது தன் உவமையில் சொன்ன தரித்திரனுக்காக பரிந்து பேசவில்லை. நாத்தான் உவமையில் சொன்ன சம்பவத்தை அத்துடன் முடித்துவிட்டு, இப்போது கர்த்தருடைய வார்த்தையை தாவீதுக்கு நேரடியாக சொல்லுகிறார். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்" என்று நாத்தான் கர்த்தருடைய வார்த்தையை, அதிகாரத்தோடும், பயபக்தியோடும் வெளிப்படுத்துகிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. தாவீது ராஜாவாகயிருந்தாலும், உரியாவின் மனைவியோடு விபசாரம்பண்ணியது, கர்த்தருடைய பார்வையில் பாவமாகவே இருக்கிறது.

கர்த்தர் தாவீதுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை தாவீதுக்கு நாத்தான் மூலமாக வெளிப்படுகிறது.

"நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்து, உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்" *(2சாமு 12:7,8)* என்று கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீதுக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு ஏற்கெனவே இவ்வளவு நன்மைகளை செய்திருக்கிறார். தாவீது இந்த நன்மைகளுக்காக கர்த்தருக்கு நன்றியுள்ளவராயிருக்க வேண்டும். கர்த்தர் தனக்கு இதுவரையிலும் கொடுத்த ஆசீர்வாதங்களில் தாவீது திருப்தியாயிருக்கவேண்டும்.

தாவீதுக்கு இந்த ஆசீர்வாதங்களில் திருப்தியில்லையென்றால், கர்த்தர் தாவீதுக்கு இன்னும் அதிக நன்மைகளை தருவதாகவும் வாக்குப்பண்ணுகிறார். "இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன்" என்று கர்த்தர் தாவீதுக்கு நாத்தான் மூலமாகச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவம்சத்தாரும் தாவீதுக்கு கையளிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தின் ஐசுவரியமெல்லாம் தாவீதின் ஆளுகையின் கீழிருக்கிறது. சமஸ்த இஸ்ரவேல் தேசத்திலுள்ளவர்களும் தாவீதுக்கு கீழ்ப்படிந்து நடப்பார்கள். தாவீது இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தருக்கு பயந்து ஆளுகை செய்யவேண்டும். தாவீது இஸ்ரவேல் தேசத்தின் நன்மையிலும், இஸ்ரவேல் புத்திரரின் நன்மையிலும் கவனம் செலுத்தவேண்டும்.

ஆனால் தாவீதோ இஸ்ரவேல் புத்திரரின் நன்மையில் கவனம் செலுத்தாமல், தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தினார். தாவீது இஸ்ரவேல் ஜனங்களின் பாதுகாப்புக்கு உத்திரவாதம் கொடுக்கவேண்டும். ஆனால் தாவீதோ உரியாவை அநியாயமாகக்கொன்று போட்டார். இஸ்ரவேல் தேசத்திலே நீதியும் நியாயமும் ஆளுகை செய்யவேண்டும். தாவீதோ உரியாவுக்கு அநீதி செய்தார்.

தாவீது கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பான காரியத்தை செய்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தையை அவர் அசட்டைபண்ணிவிட்டார். தாவீது இதுவரையிலும் தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தவில்லை. தாவீதின் பாவத்தைக் குறித்து அவரிடத்தில் இதுவரையிலும் யாரும் ஒன்றும் சொன்னதுமில்லை. கர்த்தர் தன்னுடைய பாவங்களை நோக்கிப் பார்க்கவில்லையென்றும், அவர் தன்னுடைய பாவங்களை அங்கீகரித்திருக்கிறார் என்றும் தாவீது தப்பிதமாக நினைத்தார்.

கர்த்தர் இப்போது நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்பி, தாவீதின் பாவங்களை அவருக்கு உணர்த்துகிறார். நாத்தான் கர்த்தருடைய வார்த்தையை தாவீதுக்கு சொல்லுகிறார்.

நாத்தான் தாவீதை நோக்கி, "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய, வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய். இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்" *(2சாமு 12:9,10)* என்று சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தபடியினால், அவர் கர்த்தருடைய வார்த்தையை அசட்டைபண்ணிவிடுகிறார். தாவீது உரியவைக் கொன்றுபோட்ட சம்பவம் இங்கு இரண்டுதரம் சொல்லப்பட்டிருக்கிறது. "ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து" என்றும், "அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய்" என்றும் கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீதுக்கு சொல்லுகிறார்.

தான் உரியாவைக் கொன்றுபோட்டது யாருக்கும் தெரியாத இரகசியம் என்று தாவீது தன் மனதிலே நினைத்துக்கொண்டிருக்கிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமே இல்லை. தாவீது உரியாவுக்கு விரோதமாக தன்னுடைய மனதிலே சதிஆலோசனை செய்தபோதே, கர்த்தர் தாவீதின் மனதிலுள்ள யோசனையை அறிந்திருக்கிறார்.

தாவீது உரியாவை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டார். அம்மோன் புத்திரர் விருத்தசேதனமில்லாதவர்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு சத்துருக்கள்.

பத்சேபாள் உரியாவின் மனைவியாயிருந்தவள். தாவீதோ உரியாவின் மனைவியை தனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டார். தாவீது செய்த இந்தப் பொல்லாப்பான காரியமும் இங்கு இரண்டுதரம் சொல்லப்பட்டிருக்கிறது. "அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு" என்றும், "ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால்" என்றும் இந்த வசனப்பகுதியில் இரண்டு தரம் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது பத்சேபாளோடு விபசாரம் பண்ணினார். தன்னால் தீட்டுப்படுத்தப்பட்ட பத்சேபாளை தாவீது தனக்கு மனைவியாக்கிக்கொள்கிறார். தாவீது பத்சேபாளின் புருஷனாகிய உரியாவைக் கொன்றுபோடுகிறார். இது பரிசுத்தமான விவாகமல்ல. இது கர்த்தருடைய பார்வைக்கு பிரியமான விவாகமுமல்ல. தாவீது கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பான காரியத்தை செய்கிறார். கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிறார்.

தாவீதினுடைய பாவத்தினிமித்தமாக, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவருக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீதுக்கு மாத்திரமல்ல தாவீதின் குடும்பத்தார்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. "பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்" (2சாமு 12:10) என்று, கர்த்தர் நாத்தான் மூலமாக, தாவீதுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார். தாவீதும், தாவீதின் சந்ததியாரும் தங்கள் ஜீவியகாலம் முழுவதும் சத்துருக்களோடு யுத்தம்பண்ணிக்கொண்டிருப்பார்கள். தாவீதின் வீட்டைவிட்டு பட்டயமும், யுத்தமும் விலகாதிருக்கும்.

தாவீதின் வீட்டிலே கர்த்தருடைய கிருபையும் தங்கியிருக்கிறது. சத்துருக்களின் பட்டயமும் தங்கியிருக்கிறது. கிருபையும் பட்டயமும் ஒரே வீட்டில் தங்கியிருக்கிறது. தாவீதின் வீட்டைவிட்டு பட்டயமும் யுத்தமும் விலகாதிருந்தாலும், அவருடைய வீட்டைவிட்டு கர்த்தருடைய கிருபையும், அவருடைய உடன்படிக்கையும் விலகாதிருக்கிறது.

தாவீது கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து, அவர் கர்த்தரை அசட்டைபண்ணினபடியினால், தாவீதின் வீட்டைவிட்டு பட்டயம் என்றென்றைக்கும் விலகாதிருக்கும்.

தாவீதின் பிள்ளைகள் அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்காமல், துக்கத்தைக் கொடுப்பார்கள். கர்த்தர் தாவீதின் வீட்டை ஆசீர்வதிப்பதுபோல, அவருடைய வீட்டை சபிக்கவும் செய்கிறார். "இதோ நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழுப்பப்பண்ணுவேன்" (2சாமு 12:11) என்று கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீதுக்கு சொல்லுகிறார்.

தாவீதின் மனைவிகள் அவமானப்படுத்தப்படுவார்கள். தாவீது உரியாவின் மனைவியை அவமானப்படுத்தினார். பத்சேபாளோடு ஒளிப்பிடத்திலே சயனித்தார். தாவீது ஒளிப்பிடத்திலே செய்த பாவத்திற்கு தண்டனையாக, வெளியிடத்திலே அவருக்கு தண்டனை கொடுக்கப்படும்.

கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீதுக்கு, தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார். "இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன்" (2சாமு 12:11,12) என்று கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீதுக்கு சொல்லுகிறார்.

நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் 2சாமு 12:13,14

2சாமு 12:13. அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்.

2சாமு 12:14. ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

தாவீது தன்னுடைய பாவத்திற்காக வருத்தப்படுகிறார். தான் செய்த பாவங்களை அங்கீகரித்து, அதை கர்த்தரிடத்தில் அறிக்கை பண்ணுகிறார். "நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன்" என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய பாவத்தை மறைக்காமல், அதை அறிக்கை பண்ணின படியால், கர்த்தர் தாவீதின் பாவங்களை மன்னிக்கிறார். "நான் பாவம் செய்தேன்" என்று தாவீது சொல்லும்போது, அவர் உண்மையிலேயே மனந்திரும்பி, தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார் என்பதை நாத்தான் புரிந்துகொள்கிறார்.

நாத்தான் தாவீதை நோக்கி: "நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்" (2சாமு 12:13) என்று சொல்லுகிறார். தாவீதின் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. தாவீதின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதை, நாத்தான் கர்த்தருடைய நாமத்தினால் உறுதிபண்ணுகிறார். கர்த்தருடைய தண்டனை தாவீதுக்கு கொடுக்கப்படாது. ஆகையினால் தாவீது தன்னுடைய பாவத்தின் நிமித்தம் சாகமாட்டார்.

"நீ சாகாதபடிக்கு" என்னும் வாக்கியத்திற்கு, தாவீதின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதினால், அவருக்கு நித்திய மரணம் உண்டாகாது என்பது பொருளாகும். தாவீது கர்த்தரோடு நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார். கர்த்தர் தாவீதின் பாவத்தை நீங்கச் செய்யவில்லையென்றால், தாவீது நித்திய மரணத்திற்குள் பிரவேசிப்பார்.

கர்த்தர் தாவீதுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொன்னபோது, "பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்" (2சாமு 12:10) என்று சொன்னார். தாவீதின் வீட்டைவிட்டு, பட்டயம் விலகாதிருந்தாலும், அந்தப் பட்டயம் தாவீதை நிர்மூலம் பண்ணாது. ஏனென்றால், தாவீது சாகாதபடிக்கு, கர்த்தர் அவருடைய பாவத்தை நீங்கச் செய்திருக்கிறார். தாவீது தன்னுடைய கல்லறையில் சமாதானத்தோடு பிரவேசிப்பார்.

தாவீது கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பான காரியத்தை செய்தபடியினாலும், அவர் கர்த்தரை அசட்டைபண்ணின படியினாலும், தாவீது தன்னுடைய ஜீவியகாலம் முழுவதும் வேதனைகளை அனுபவிப்பார். கர்த்தர் அவரைத் தண்டிப்பார்.

தாவீது சாகமாட்டார் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் தாவீதுக்கு பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் என்று கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை தாவீதின் குடும்பத்திற்கு சொல்லுகிறார். நாத்தான் தாவீதை நோக்கி, "ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும்" (2சாமு 12:14) என்று கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரே சர்வஆளுநர். பாவம் செய்த பெற்றோர் மரித்துப்போகாமல் ஜீவனோடிருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் பாவம் செய்யாவிட்டாலும், மரித்துப்போகிறார்கள்.

தாவீது தான் செய்த பாவத்தினால், கர்த்தருடைய மகிமையை கெடுத்துப் போடுகிறார். கர்த்தருடைய சத்துருக்கள் அவரைத் தூஷிப்பதற்கு தாவீது காரணமாயிருக்கிறார். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள், கர்த்தருடைய நாமமகிமைக் காகவும், அவரைக் கனம்பண்ணு வதற்காகவும் ஊழியம் செய்யவேண்டும். ஊழியக்காரர்கள் பாவம் செய்யும்போது கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. பாவம் செய்கிற ஊழியக்காரர்கள், கர்த்தருடைய சத்துருக்கள் அவரைத் தூஷிப்பதற்கு காரணமாயிருக்கிறார்கள்.

"எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே" (ரோம 2:24).

தாவீது கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார். அவர் கர்த்தரை அசட்டைபண்ணினார். ஆனாலும் தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்தி, மனந்திரும்பி, தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தார். "நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்" என்று சொல்லி, தாவீது தன்னுடைய பாவங்களை அறிக்கைபண்ணினார். இதனால் கர்த்தர் தம்முடைய கிருபையினால் தாவீதின் பாவங்களை மன்னித்தார். "நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்" என்று, தாவீதின் பாவங்களை கர்த்தர் மன்னித்ததை நாத்தான் உறுதிபண்ணுகிறார்.

தாவீதின் பாவங்கள் மன்னிக்கப் பட்டாலும், கர்த்தருடைய சத்துருக்கள் அவரைத் தூஷிக்க தாவீது காரணமாயிருந்தபடியினால், அவருக்கு பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் என்று கர்த்தர் நாத்தான் மூலமாய் சொல்லுகிறார். கர்த்தர் தாவீதை நேசிக்கிறார். ஆனாலும் அவர் தாவீதின் பாவங்களை வெறுக்கிறார். தாவீது கர்த்தருக்கு விரோதமாக துணிகரமான பாவத்தை செய்தார். தன் பாவத்திற்கு தண்டனையாக, தாவீது தன்னுடைய பிள்ளையை இழந்தார். நாத்தான் தாவீதுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லிவிட்டு, அந்த இடத்தைவிட்டு உடனே தன்னுடைய வீட்டிற்குப்போய்விடுகிறார்.

தாவீதின் பிள்ளை செத்துப்போயிற்று 2சாமு 12:15-23

2சாமு 12:15. அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடித்தார்; அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது.

2சாமு 12:16. அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, உள்ளேபோய், இராமுழுவதும் தரையிலே கிடந்தான்.

2சாமு 12:17. அவனைத் தரையிலிருந்து எழுந்திருக்கப்பண்ண, அவன் வீட்டிலுள்ள மூப்பரானவர்கள் எழுந்து, அவனண்டையில் வந்தாலும், அவன் மாட்டேன் என்று சொல்லி, அவர்களோடே அப்பம் சாப்பிடாமல் இருந்தான்.

2சாமு 12:18. ஏழாம்நாளில், பிள்ளை செத்துப்போயிற்று. பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் அவனுக்கு அறிவிக்க ஐயப்பட்டார்கள்: பிள்ளை உயிரோடிருக்கையில், நாம் அவரோடே பேசுகிறபோது, அவர் நம்முடைய சொற்கேட்கவில்லை; பிள்ளை செத்துப்போயிற்று என்று அவரோடே எப்படிச் சொல்லுவோம்? அதிகமாக வியாகுலப்படுவாரே என்று பேசிக்கொண்டார்கள்.

2சாமு 12:19. தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுகிறதைக் கண்டு, பிள்ளை செத்துப்போயிற்று என்று அறிந்து, தன் ஊழியக்காரரை நோக்கி: பிள்ளை செத்துப்போயிற்றோ என்று கேட்டான்; செத்துப்போயிற்று என்றார்கள்.

2சாமு 12:20. அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்.

2சாமு 12:21. அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன? பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர்; பிள்ளை மரித்த பின்பு, எழுந்திருந்து அசனம்பண்ணுகிறீரே என்றார்கள்.

2சாமு 12:22. அதற்கு அவன்: பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், பிள்ளை பிழைக்கும்படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன்.

2சாமு 12:23. அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பிவரப்பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான்.

நாத்தான் தாவீதின் அரண்மனைக்கு வந்து, அவரிடத்தில் கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லி முடித்த பின்பு, நாத்தான் தாவீதின் அரண்மனையில் தங்கியிருக்கவில்லை. உடனே நாத்தான் தன் வீட்டிற்குப் போய்விடுகிறார். ஒருவேளை தாவீதுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு நாத்தான் தன் வீட்டிற்குப் போயிருந்திருக்க வேண்டும். ஊழியக்காரர்கள் யாருக்கு பிரசங்கம்பண்ணுகிறார்களோ, அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும்.

தாவீது நாத்தானை சிநேகிக்கிறார். தனக்கு விரோதமாக நாத்தான் கர்த்தருடைய வார்த்தைகளை சொன்னபோதிலும், தாவீது நாத்தானை பகைக்கவில்லை. பிற்காலத்தில் தனக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த ஒரு குழந்தைக்கு நாத்தான் என்று பேரிட்டு, தாவீது நாத்தானை கனம்பண்ணுகிறார்.

"எருசலேமில் அவனுக்குப் பிறந்தவர்கள்; அம்மியேலின் குமாரத்தியாகிய பத்சுவாளிடத்தில் சிமீயா, சோபாப், நாத்தான், சாலொமோன் என்னும் நாலு பேரும்" (1நாளா 3:5).

நாத்தான் ஒரு தீர்க்கதரிசி. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரதான தீர்க்கதரிசியாயிருக்கிறவர். கிறிஸ்துவானவர் நாத்தானுடைய சந்ததியில் வந்தவர்.

"எலியாக்கீம் மெலெயாவின் குமாரன்; மெலெயா மயினானின் குமாரன்; மயினான் மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா நாத்தானின் குமாரன்; நாத்தான் தாவீதின் குமாரன்" (லூக் 3:31).

நாத்தான் தன் வீட்டிற்குப்போனபின்பு, தாவீது கர்த்தருடைய சமுகத்திலே அமர்ந்திருந்து ஜெபம்பண்ணுகிறார். இந்த சூழ்நிலையில் அவர் 51-ஆவது சங்கீதத்தை எழுதியிருக்கவேண்டும். தாவீதின் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்னும் நிச்சயம் நாத்தான் மூலமாக அவருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் தன்னுடைய பாவங்களை மன்னிக்கவேண்டுமென்று தாவீது கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். தன்னுடைய பாவங்களுக்காக மிகவும் வருத்தப்பட்டு அழுகிறார்.

தங்களுடைய பாவங்களுக்கு மெய்யாகவே மனந்திரும்புகிறவர்கள், தாங்கள் செய்த பாவங்களை நினைத்து மிகவும் வருத்தப்படுவார்கள். அவர்களுடைய மனம் வேதனைப்படும். பாவம் செய்கிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், மனுஷருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள்.

"நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது, நீ நினைத்து வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எசே 16:63).

தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் ஒரு ஆண் பிள்ளை பிறந்திருக்கிறது. நாத்தான் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை, தாவீதுக்கு சொன்னபோது, கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடிக்கிறார்; அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருக்கிறது (2சாமு 12:15).

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்துகிறார். தன்னுடைய பாவத்தினிமித்தமாகவும், அக்கிரமத்தினிமித்தமாகவும், கர்த்தர் தன்னுடைய பிள்ளையை அடித்திருக்கிறார் என்றும், அதன் நிமித்தமாகவே தன்னுடைய பிள்ளை வியாதிப்பட்டு கேவலமாயிருக்கிறது என்றும் தாவீது அறிந்துகொள்கிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னை மிகவும் தாழ்த்தி, தன்னுடைய பிள்ளைக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணுகிறார். தாவீது உபவாசித்து, உள்ளேபோய், இராமுழுவதும் தரையிலே கிடக்கிறார். தாவீதைத் தரையிலிருந்து எழுந்திருக்கப்பண்ண, அவருடைய வீட்டிலுள்ள மூப்பரானவர்கள் எழுந்து, அவரண்டையில் வருகிறார்கள். ஆனாலும், அவர் "மாட்டேன்" என்று சொல்லி, அவர்களோடே அப்பம் சாப்பிடாமல் இருக்கிறார் (2சாமு 12:16,17).

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் ஒன்றும் சாப்பிடாமல், உபவாசம்பண்ணி ஜெபிக்கிறார். அவர் தன்னுடைய பாவங்களுக்கு உண்மையாகவே மனந்திரும்பியிருக்கிறார் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது. தன்னுடைய பாவத்தின் அவமானங்களை தாவீது தாங்கிக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். தாவீதின் பிள்ளை வியாதிப்பட்டு கேவலமாயிருக்கிறது. இது தாவீதின் பாவத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

தன்னுடைய பிள்ளை குணமடையவேண்டும் என்றும், அதன் வியாதி நீங்கவேண்டும் என்றும் தாவீது கர்த்தரிடத்தில் உபவாசம்பண்ணி ஜெபிக்கிறார். தாவீது தன்னுடைய பிள்ளைக்காக மனங்கசந்து அழுகிறார். பாவத்திற்கு வருத்தப்படுகிற இருதயம், மற்றவர்களுடைய துக்கங்களையும் வேதனைகளையும் பார்த்து, வருத்தப்படும் இருதயமாயிருக்கும்.

ஒரு தரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற காலம் வரையிலும் சஞ்சரிப்போம். அதன் பின்பு, விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தரோடுகூட நித்திய காலமாக பரலோகத்திலே சஞ்சரிப்போம். தாவீது தன்னுடைய பிள்ளைக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, இப்பிரபஞ்சத்தின் ஜீவனையும், பரலோகத்தின் ஜீவனையும் தியானித்துப் பார்க்கிறார்.

தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறவர்கள், பரலோக ஜீவியத்தின்மீது கண்ணோக்கமாயிருப்பார்கள். தாவீதின் பிள்ளை நிச்சமாய் செத்துப்போகும் என்று நாத்தான் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். ஆனாலும் தாவீது தன்னுடைய பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணுகிறார். உபவாசித்து ஜெபம்பண்ணுகிறார். தாவீது தன்னுடைய பிள்ளைக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். தன்னுடைய பிள்ளையின் ஆத்துமா பரலோகத்தில் பிரவேசிக்க வேண்டும் என்றும், அது அங்கே கர்த்தரோடு நித்திய காலமாய் ஜீவிக்கவேண்டும் என்றும் தாவீது தன்னுடைய பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணியிருக்கவேண்டும்.

தாவீது பத்சேபாளோடு விபசாரம்பண்ணி கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பான காரியத்தை செய்தார். அவர் கர்த்தரை அசட்டைபண்ணினார். தாவீதினுடைய பாவத்தினிமித்தமாய், கர்த்தர் அவருடைய பிள்ளைக்கு வியாதியைக் கொடுத்திருக்கிறார். தாவீதின் பாவம் அவருடைய பிள்ளையைப் பாதிக்கிறது. தன்னுடைய பாவத்தின் சாபங்கள், தன்னுடைய பிள்ளையின்மீது மறுபடியுமாய் வந்து தாக்கக்கூடாது என்று, தாவீது கர்த்தரிடத்தில் பிரார்த்தனை பண்ணுகிறார். தன்னுடைய பாவம், தன்னுடைய பிள்ளை பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு தடையாயிருக்கக்கூடாது என்று தாவீது கர்த்தரிடத்தில் கருத்தாய் வேண்டிக்கொள்கிறார்.

ஏழாம்நாளில், பிள்ளை செத்துப்போயிற்று. பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் அவருக்கு அறிவிக்க ஐயப்படுகிறார்கள்: "பிள்ளை உயிரோடிருக்கையில், நாம் அவரோடே பேசுகிறபோது, அவர் நம்முடைய சொற்கேட்கவில்லை; பிள்ளை செத்துப்போயிற்று என்று அவரோடே எப்படிச் சொல்லுவோம்? அதிகமாக வியாகுலப்படுவாரே" (2சாமு 12:18) என்று தாவீதின் ஊழியக்காரர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள்.

யூதர்கள் தங்களுடைய ஆண்பிள்ளைகளுக்கு எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணுவது வழக்கம். தாவீதின் பிள்ளையோ ஏழாம் நாளில் செத்துப்போயிற்று. ஆகையினால் அந்தப் பிள்ளை விருத்தசேதனம்பண்ணப்படாமலேயே செத்துப்போயிற்று. கர்த்தரோடு தாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அடையாளமாக, யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எட்டாம் நாளிலே விருத்தசேதனம்பண்ணுவது வழக்கம்.

தாவீதின் பிள்ளையோ விருத்தசேதனம் பண்ணப்படாமலேயே செத்துப்போயிற்று. உடன்படிக்கையின் ஆசீர்வாதம் அந்தப் பிள்ளைக்கு கிடைக்காதோ என்று தாவீது வேதனைப்பட்டிருக்கலாம். ஆனாலும், உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள், அடையாளங்களை ஆதாரமாக வைத்து கொடுக்கப்படுவதில்லை. எல்லா ஆசீர்வாதங்களும் கர்த்தருடைய கிருபையினாலேயே நமக்கு வருகிறது. ஆசீர்வாதங்கள் எல்லாமே கர்த்தரிடமிருந்தே வருகிறது.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாயிருக்கிறார். அவரே ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறார். உடன்படிக்கையினால் ஆசீர்வாதம் வருவதில்லை. கர்த்தருடைய கிருபையினாலேயே ஆசீர்வாதம் வருகிறது என்பதை தாவீது அறிந்துகொள்கிறார். தாவீது இப்போது விருத்தசேதன அடையாளத்தை நம்பாமல், கர்த்தரை நம்புகிறார்.

தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுகிறதைக் கண்டு, பிள்ளை செத்துப்போயிற்று என்று அறிந்து, தன் ஊழியக்காரரை நோக்கி: "பிள்ளை செத்துப்போயிற்றோ" என்று கேட்கிறார்; தாவீதின் ஊழியக்காரர், அவருக்கு பிரதியுத்தரமாக "செத்துப்போயிற்று" (2சாமு 12:19) என்று சொல்லுகிறார்கள்.

அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்கிறார்; தாவீதின் ஊழியக்காரர், அவருக்கு முன்னே போஜனம் வைத்தபோது, அவர் அதை புசிக்கிறார் (2சாமு 12:20).

ஏழாம் நாளில் தாவீதின் பிள்ளை செத்துப்போயிற்று. தாவீது மிகவும் அமைதியாயிருக்கிறார். அவருடைய மனதில் கலக்கமோ, குழப்பமோ இல்லை. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது என்னும் நிச்சயம் நமக்கு இருந்தால், நாமும் நம்முடைய மரணத்தைப் பார்த்து பயப்படமாட்டோம். நம்முடைய மனதிற்குள்ளே, மரணத்தைக் குறித்த கலக்கமும் குழப்பமும் இருக்காது.

தாவீதின் குழந்தை செத்துப்போன செய்தி, அவருக்கு வருத்தமான செய்திதான். பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் சொல்லுகிறார்கள். பிள்ளை உயிரோடிருந்தபோது தாவீது உபவாசித்து, இராமுழுவதும் தரையிலே விழுந்து கிடந்து, அந்தப் பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணினார். இப்போதோ தரையில் விழுந்து கிடக்கிற தாவீது, தரையைவிட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன்னுடைய வஸ்திரங்களை மாற்றிக்கொள்கிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்திலே பிரவேசித்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு தன் வீட்டிற்கு திரும்பி வருகிறார். தன்னுடைய பிள்ளைகளின் மரணச் செய்தியைக் கேட்டு யோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியதுபோல, தாவீதும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது இதுவரையிலும் கர்த்தருடைய சமுகத்திலே உபவாசித்து ஜெபித்தார். இப்போதோ தனக்கு முன்பாக வைக்கும் போஜனத்தைப் புசிக்கிறார்.

தாவீதின் மனதில் ஏற்பட்ட மாற்றம் அவருடைய ஊழியக்காரர்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. பிள்ளை வியாதியாயிருந்தபோது தாவீது ஒன்றும் புசிக்காமல் உபவாசித்து ஜெபித்தார். பிள்ளை மரித்தபின்பு தாவீது போஜனம்பண்ணுகிறார். தாவீதின் செய்கையைப் பார்த்து அவருடைய ஊழியக்காரர் ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள் தாவீதை நோக்கி, "நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன? பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர்; பிள்ளை மரித்த பின்பு, எழுந்திருந்து அசனம்பண்ணுகிறீரே" (2சாமு 12:21) என்று கேட்கிறார்கள்.

தாவீது தன்னுடைய ஊழியக்காரர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். தாவீது தன் ஊழியக்காரர்களை நோக்கி, "பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், பிள்ளை பிழைக்கும்படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன். அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பிவரப்பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை" (2சாமு 12:22,23) என்று சொல்லுகிறார்.

பிள்ளை உயிரோடிருக்கையில் அந்தப் பிள்ளை பிழைக்கும் என்னும் நம்பிக்கை தாவீதுக்கு இருந்தது. அந்தப் பிள்ளை செத்துப்போனபின்பு, அது பிழைக்கும் என்னும் நம்பிக்கை தாவீதுக்கு இல்லை. தன்னுடைய பிள்ளையின் ஆத்துமா பரலோகத்திற்கு போயிருக்கிறது என்றும், தானும் மரித்த பின்பு அங்கே போவேன் என்றும் தாவீது நம்புகிறார். ஆகையினால் பிள்ளை மரித்தபின்பு உபவாசித்து அழவேண்டிய அவசியமில்லை என்று தீர்மானித்து, தாவீது போஜனம் பண்ணுகிறார்.

செத்துப்போன பிள்ளையை தாவீதால் தன்னிடத்தில் திரும்பி வரப்பண்ண முடியாது. ஆனாலும் தாவீதால் அதனிடத்திற்கு போகமுடியும். நாம் செத்துப்போனவர்களுக்காக ஜெபம்பண்ண வேண்டியதில்லை. அவர்கள் நம்முடைய ஜெபத்திற்கு அப்பாற்பட்டவர்களாயிருக்கிறார்கள். செத்துப்போனவர்களுக்காக நாம் கண்ணீர்விட்டு அழுதாலும், நம்முடைய கண்ணீர்களினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை.

தாவீதைப்போலவே, நாமும் செத்துப்போனவர்களிடத்திற்குப் போவோம். முதலாவதாக, நாம் செத்துப்போன பின்பு நம்முடைய கல்லறைக்குப்போவோம். கல்லறையில் நம்முடைய சரீரம் அடக்கம்பண்ணப்படும். அதன்பின்பு விசுவாசிகளாகிய நாம் பரலோகத்திற்குப் போவோம். பழைய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் இந்த சத்தியத்தை அதிகமாக நம்பினார்கள். மரித்தவர்களின் துக்கவீட்டிலே இந்த சத்தியத்தைச் சொல்லி, ஒருவருக்கொருவர் ஆறுதல் பண்ணுவது வழக்கம்.

தாவீது இங்கு சொல்லுகிற வார்த்தைகள் நமக்கும் ஆறுதலாயிருக்க வேண்டும். நம்முடைய உற்றார் உறவினர் மரித்துப்போகும்போது, இந்த சத்திய வார்த்தைகளினால் நம்முடைய மனதை தேற்றிக்கொள்ளவேண்டும். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவனோடிருக்கும்போது அனுபவிக்கும் ஆசீர்வாதங்களைவிட, பரலோகத்திலே நமக்கு அதிகமான ஆசீர்வாதங்களும், உன்னதமான ஆசீர்வாதங்களும் காத்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தில் செத்துப்போகிறவர்கள், பரலோகத்தின் நன்மையான ஈவுகளை சுதந்தரிக்கப் போகிறார்கள். செத்துப்போகிறவர்கள் இப்போது நம்மைவிட்டுப் பிரிந்துபோனாலும், சீக்கிரத்திலே நாமும் அவர்கள் இருக்கும் இடத்திற்குப்போவோம். இந்த நம்பிக்கை நமக்கு ஆறுதலைக் கொடுக்கும். நம்முடைய துக்கத்தைக் குறைக்கும்.

சாலொமோன்
2சாமு 12:24,25

2சாமு 12:24. பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய், அவளோடே சயனித்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான்; அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார்.

2சாமு 12:25. அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப, அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு, யெதிதியா என்று பேரிட்டான்.

உரியாவின் மனைவியாகிய பத்சேபாளை தாவீது தனக்கு மனைவியாக்கிக்கொண்டார். கர்த்தர் இந்த திருமணத்தில் பிரியப்படவில்லை. ஆனாலும் தாவீது பத்சேபாளை தள்ளிவைத்து விடவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளையிடவில்லை. பத்சேபாளும் தன்னுடைய பாவத்தினிமித்தமாக மனம் வேதனைப்பட்டிருக்கவேண்டும். தன்னுடைய பிள்ளை வியாதிப்பட்டு கேவலமாயிருந்ததையும், ஏழாம் நாளிலே அந்தப்பிள்ளை செத்துப்போனதையும் பார்த்து பத்சேபாள் மனம் வேதனைப்பட்டு அழுதிருக்கவேண்டும். தன்னுடைய பாவத்தினிமித்தமாக கர்த்தருடைய கோபம் தன்மீதும், தன் வீட்டின்மீதும் வந்திருக்கிறது என்பதை பத்சேபாள் அறிந்து மனம் வேதனையடைந்திருக்கவேண்டும்.

கர்த்தர் தாவீதுக்கு இந்த துக்கத்திலிருந்து ஆறுதலைக் கொடுக்கிறார். தாவீதுக்கு கிடைத்த ஆறுதல் பத்சேபாளுக்கும் கிடைக்கிறது. பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய், அவளோடே சயனிக்கிறார்; அவள் ஒரு குமாரனைப் பெறுகிறாள்; தாவீது அவனுக்குச் சாலொமோன் என்று பேரிடுகிறார்; அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருக்கிறார் (*2சாமு 12:24*).

கர்த்தர் தாவீதுக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தைக் கொடுக்கிறார். கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட சந்தோஷத்தையும், ஆறுதலையும், தாவீது பத்சேபாளுக்கு பகிர்ந்துகொடுக்கிறார். கர்த்தர் தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த முதலாவது பிள்ளையை அடித்தார். அந்தப் பிள்ளை ஏழாம் நாளில் செத்துப்போயிற்று. இப்போது கர்த்தர் அவர்களுக்கு இரண்டாவதாக ஒரு குமாரனைக் கொடுக்கிறார். கர்த்தர் இந்தப் பிள்ளையின்மீது அன்பாயிருக்கிறார்.

தாவீது தன்னுடைய குமாரனுக்கு சாலொமோன் என்று பேரிடுகிறார். சாலொமோன் என்னும் பேருக்கு "சமாதானம்" என்று பொருள். கர்த்தர் தாவீதோடும், அவருடைய குடும்பத்தாரோடும் சமாதானமாயிருக்கிறார் என்பதற்கு, சாலொமோனுடைய பிறப்பு ஒரு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் சாலொமோனை ஆசீர்வதிக்கிறார். கிறிஸ்துவானவர் சமாதான பிரபுவாயிருக்கிறார். சாலொமோன் கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறவர். தாவீது பத்சேபாளுக்கு பெற்ற தன்னுடைய முதலாவது பிள்ளையை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இப்போதோ தாவீது தன்னுடைய இரண்டாவது பிள்ளைக்கு சாலொமோன் என்று பேரிட்டு, கர்த்தருடைய சமுகத்திலே சமாதானமாயிருக்கிறார். முதல் பிள்ளை செத்துப்போனதினிமித்தமாக, தாவீது தன்னுடைய சந்தோஷத்தை இழந்தார். இரண்டாவது பிள்ளை பிறந்ததன் மூலமாக, தாவீது தான் இழந்த சந்தோஷத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு, கர்த்தருடைய சமுகத்திலே சமாதானமாயிருக்கிறார்.

கர்த்தர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை தாவீதினிடத்திற்கு அனுப்புகிறார். நாத்தான் கர்த்தரின் நிமித்தம் சாலொமோனுக்கு, "யெதிதியா" என்று பேரிடுகிறார் (2சாமு 12:25). யெதிதியா என்னும் பேருக்கு, "கர்த்தருக்குப் பிரியமானவன், கர்த்தருக்கு அன்பானவன்" என்று பொருள். சாலொமோனிடத்தில் கர்த்தர் அன்பாயிருக்கிறார். ஆகையினால் கர்த்தர் அவனுக்கு, "கர்த்தருக்கு அன்பானவன்" என்று பொருள்படும்படியாக, "யெதிதியா" என்னும் புதிய பெயரை சாலொமோனுக்குக் கொடுக்கிறார்.

அம்மோன் புத்திரர்
2சாமு 12:26-31

2சாமு 12:26. அதற்குள்ளே யோவாப் அம்மோன் புத்திரருடைய ரப்பாபட்டணத்தின் மேல் யுத்தம்பண்ணி, ராஜதானியைப்பிடித்து,

2சாமு 12:27. தாவீதினிடத்தில் ஆள் அனுப்பி, நான் ரப்பாவின்மேல் யுத்தம்பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக்கொண்டேன்.

2சாமு 12:28. நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என் பேர் வழங்காதபடிக்கு, நீர் மற்ற ஜனங்களைக் கூட்டிக்கொண்டுவந்து, பட்டணத்தை முற்றிக்கைபோட்டு, பிடிக்கவேண்டும் என்று சொல்லிச்சொன்னான்.

2சாமு 12:29. அப்படியே தாவீது ஜனங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, ரப்பாவுக்குப் போய், அதின்மேல் யுத்தம்பண்ணி, அதைப்பிடித்தான்.

2சாமு 12:30. அவர்களுடைய ராஜாவின் தலைமேலிருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டான்; அது ஒரு தாலந்து நிறைபொன்னும்; இரத்தினங்கள் பதித்ததுமாயிருந்தது; அது தாவீதினுடைய தலையில் வைக்கப்பட்டது; பட்டணத்திலிருந்து ஏராளமான கொள்ளையைக் கொண்டுபோனான்.

2சாமு 12:31. பின்பு அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப்பண்ணினான்; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது எல்லா ஜனத்தோடுங்கூட எருசலேமுக்குத் திரும்பினான்.

தாவீதின் சேனையிலுள்ளவர்கள் ரப்பா பட்டணத்தையும், அம்மோன் புத்திரரின் மற்ற பட்டணங்களையும் பிடிக்கிறார்கள். தாவீதின் குமாரன் பிறந்தபின்பு இந்த சம்பவம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த சம்பவம் இதற்கு முன்பு நடைபெற்றிருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் சேனை ரப்பா பட்டணத்திற்கு விரோதமாக முற்றிக்கையிட்டபோது உரியா அம்மோன் புத்திரரின் பட்டயத்தினால் கொல்லப்பட்டார். பத்சேபாள் உரியாவுக்காக இழவு கொண்டாடினாள். அந்த சந்தர்ப்பத்தில் இந்த சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டுமென்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தாவீதுக்கு கிருபையாக இரங்குகிறார். தாவீது இஸ்ரவேலின் சத்துருக்கள்மீது யுத்தம்பண்ணி அவர்களை முறியடிக்கிறார். தாவீதின் பட்டயம் நீதிக்காக யுத்தம்பண்ணுகிறது. அந்தப் பட்டயம் கர்த்தருக்காகவும், இஸ்ரவேல் தேசத்திற்காகவும், இஸ்ரவேல் ஜனங்களுக்காகவும் யுத்தம்பண்ணுகிறது.

தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபசாரம்பண்ணி பாவம் செய்தார். இதனால் தாவீதின் ஜீவியத்தில் களங்கமுண்டாயிற்று. பாவக்கறைகள் தாவீதை தீட்டுப்படுத்தியது. தாவீதின் பட்டயம் நீதிக்காக யுத்தம்பண்ணாமல், சிறிதுகாலம் அநியாயத்திற்காக யுத்தம்பண்ணியது. இந்தக் காலத்தில் உரியா செத்துப்போனான்.

தாவீது தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்துகிறார். கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்க்கிறார். தாவீது மறுபடியும் கர்த்தரோடு ஒப்புரவாகிறார். தாவீதின் படைத்தளபதியாகிய யோவாப், தாவீதுக்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். அவன் தாவீதுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறான்.

யோவாப் அம்மோன் புத்திரருடைய ரப்பாபட்டணத்தின் மேல் யுத்தம்பண்ணி, ராஜதானியைப்பிடிக்கிறான். இது தண்ணீர் ஓரமான பட்டணம். அம்மோன் புத்திரருக்கு ஏராளமான பட்டணங்கள் உள்ளன. அந்தப் பட்டணங்களுக்கெல்லாம் ரப்பா பட்டணத்திலிருந்து தண்ணீர் அனுப்பப்படும். தாவீதின் சேனை ரப்பாவின்மேல் யுத்தம்பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் ரப்பாவுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டு, அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்தப் பட்டணத்தைப் பிடிக்கப்போகிறார்கள். யுத்தம் முடிவு பெறப்போகிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது வந்து யுத்தத்தை முடிக்க வேண்டும். அப்போதுதான் தாவீது ராஜாவுக்கு கனமும், மேன்மையும் உண்டாகும்.

யுத்தம் முடிவுபெறப்போகிறது என்றும், தாவீது இந்த யுத்தத்தை முடித்து வைக்கவேண்டும் என்றும், தாவீதின் பெயர் வழங்கவேண்டும் என்றும், யோவாப் தாவீது ராஜாவுக்கு செய்தி சொல்லியனுப்புகிறான்.

யோவாப் தாவீதினிடத்தில் ஆள் அனுப்பி, "நான் ரப்பாவின்மேல் யுத்தம்பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக்கொண்டேன். நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என் பேர் வழங்காதபடிக்கு, நீர் மற்ற ஜனங்களைக் கூட்டிக்கொண்டுவந்து, பட்டணத்தை முற்றிக்கைபோட்டு, பிடிக்கவேண்டும்" *(2சாமு 12:27,28)* என்று சொல்லச்சொல்லுகிறான்.

அப்படியே தாவீது ஜனங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, ரப்பாவுக்குப் போய், அதின்மேல் யுத்தம்பண்ணி, அதைப்பிடிக்கிறார் *(2சாமு 12:29)*. அம்மோன் புத்திரருடைய ராஜாவின் தலையின்மேல் ஒரு கிரீடம் இருக்கிறது. அது இரத்தினங்கள் பதிக்கப்பட்ட விலையுயர்ந்த கிரீடம். தாவீது ராஜா அந்தக் கிரீடத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். ரப்பா பட்டணத்தில் திரளான ஐசுவரியம் இருக்கிறது. தாவீது அவற்றைக் கொள்ளையிட்டு எருசலேமுக்கு கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறார்.

அம்மோன் புத்திரருடைய ராஜாவின் தலைமேலிருந்த கிரீடத்தை தாவீது எடுத்துக்கொள்கிறார்; அது ஒரு தாலந்து நிறைபொன்னும்; இரத்தினங்கள் பதித்ததுமாயிருக்கிறது; அது தாவீதினுடைய தலையில் வைக்கப்படுகிறது; தாவீது ரப்பா பட்டணத்திலிருந்து ஏராளமான கொள்ளையை எருசலேமுக்கு கொண்டுபோகிறார் *(2சாமு 12:30)*.

தாவீது அம்மோன் புத்திரரை மொத்தமாய் சங்காரம்பண்ணவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனூன், தாவீதின் ஊழியக்காரரை ஏற்கெனவே அவமானப்படுத்தினான். தாவீது ஆனூனுக்கும், அவனுடைய ஜனத்திற்கும் புத்தி வரப்பண்ணுவேண்டுமென்று விரும்பினார். அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனார். அம்மோன் புத்திரர் சீரியரின் துணையோடு, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். இந்த யுத்தத்திலே சீரியர்கள் முறியடிக்கப்பட்டார்கள். சீரியர்கள் முறிந்து ஓடுவதைப் பார்த்து, அம்மோன் புத்திரர், இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமலேயே, தங்கள் பட்டணங்களுக்குள் ஓடி ஒழிந்துகொண்டார்கள்.

இஸ்ரவேலரின் சேனை அம்மோன் புத்திரரின் பட்டணமான ரப்பாவை முற்றிக்கையிட்டு அதைப் பிடிக்கிறார்கள். அம்மோனியரின் மற்ற பட்டணங்களையும் தாவீது பிடிக்கிறார். தாவீது அம்மோன் புத்திரரை சங்காரம்பண்ணுகிறார்.

தாவீது அம்மோன் புத்திரரின் பட்டணங்களிலிருந்த ஜனங்களை வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப்பண்ணுகிறார்; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது இஸ்ரவேலின் எல்லா ஜனத்தோடுங்கூட எருசலேமுக்குத் திரும்புகிறார்.

தாவீது எருசலேமுக்கு திரும்பிய பின்பு, அவர் அம்மோன் புத்திரர்மீது கோபமாயிருந்ததுபோல, இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கவில்லை. தாவீதின் ராஜாசனத்தில் இரக்கமும் இருக்கிறது. நீதியும் இருக்கிறது.

"இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்; கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்" (சங் 101:1).

13 அதிகாரம்

தாவீது உரியாவின் மனைவியோடு விபசாரம் பண்ணினார். மேலும் அவர் உரியாவுக்கு விரோதமாக சதிஆலோசனை செய்து, அவனுடைய மரணத்திற்கு காரணமாயிருந்தார். கர்த்தர் நீதியுள்ளவர். கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீது செய்த பாவங்களுக்கு தம்முடைய நீதியான தீர்ப்பைச் சொல்லுகிறார். "நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழுப்பப்பண்ணுவேன்" *(2சாமு 12:11)* என்று கர்த்தர் நாத்தான் மூலமாக தாவீதுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தர் சொன்ன பொல்லாப்புக்கள் தாவீதின்மீது வர ஆரம்பிக்கிறது. இதன் பின்பு தொடர்ச்சியாக, தாவீதின் ஜீவியத்திலே பொல்லாப்புகளுக்குமேல் பொல்லாப்பாக வந்துகொண்டிருக்கிறது.

விபசாரமும், கொலைபாதகமும் தாவீது செய்த பாவங்களாகும். கர்த்தர் இந்தப் பாவங்களுக்காக தாவீதையும் அவருடைய குடும்பத்தையும் தண்டிக்கிறார். தாவீதின் குமாரனாகிய அம்னோன் தன் சகோதரி தாமாரைக் கெடுத்துப்போடுகிறான். தாவீதின் மற்றொரு குமாரனாகிய அப்சலோம் தன் சகோதரன் அம்னோனை கொன்றுபோடுகிறான். கர்த்தர் தாவீதுக்கு கொடுக்கும் தண்டனை ஆரம்பமாயிற்று.

யோனதாப் தாவீதின் தமையன். யோனதாபின் சதிஆலோசனை பிரகாரமாக, அம்னோன் தன் சகோதரி தாமாரைக் கெடுத்துப்போட திட்டமிடுகிறான் *(2சாமு 13:1-20)*. அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடுகிறான் *(2சாமு 13:21-39)*.

இவ்விரண்டு சம்பவங்களும் தாவீதுக்கு மிகவும் துக்கமான சம்பவங்களாயிருக்கிறது. தாவீதே தாமாரை அம்னோனிடத்திற்கு அனுப்பினார். தாவீதே அம்னோனை அப்சலோமிடத்திற்கும் அனுப்பினார்.

அம்னோனும் தாமாரும்
2சாமு 13:1-20

2சாமு 13:1. இதற்குப்பின்பு தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்; அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொண்டான்.

2சாமு 13:2. தன் சகோதரியாகிய தாமாரினிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னியாஸ்திரீயாயிருந்தாள்; அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.

2சாமு 13:3. அம்னோனுக்குத் தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி.

2சாமு 13:4. அவன் இவனைப் பார்த்து: ராஜகுமாரனாகிய நீ, நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்துபோகிறாய், எனக்குச் சொல்லமாட்டாயா என்றான். அதற்கு அம்னோன்: என் சகோதரன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின்மேல் நான் ஆசைவைத்திருக்கிறேன் என்றான்.

2சாமு 13:5. அப்பொழுது யோனதாப் அவனைப் பார்த்து: நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்; உன்னைப்பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும்போது, நீ, என் சகோதரியாகிய தாமார் வந்து, எனக்குப் போஜனம்கொடுத்து, அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு நான் பார்க்க, என் கண்களுக்கு முன்பாக சமைக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று சொல் என்றான்.

2சாமு 13:6. அப்படியே அம்னோன் வியாதிக்காரனபோல் படுத்துக் கொண்டு, ராஜா தன்னைப் பார்க்கவந்தபோது, ராஜாவை நோக்கி: என் சகோதரியாகிய தாமார் வந்து நான் அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு, என் கண்களுக்கு முன்பாக இரண்டு நல்ல பணியாரங்களைப் பண்ணும்படி உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

2சாமு 13:7. அப்பொழுது தாவீது: வீட்டுக்குத் தாமாரிடத்தில் ஆள் அனுப்பி, நீ உன் சகோதரனாகிய அம்னோன் வீட்டுக்குப் போய், அவனுக்கு சமையல் பண்ணிக்கொடு என்று சொல்லச்சொன்னான்.

2சாமு 13:8. தாமார் தன் சகோதரனாகிய அம்னோன் படுத்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போய், மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாரங்களைச் சுட்டு,

2சாமு 13:9. சட்டியை எடுத்து, அவனுக்கு முன்பாக அவைகளை வைத்தாள்; ஆனாலும் அவன் சாப்பிடமாட்டேன் என்றான்; பின்பு அம்னோன்: எல்லாரும் என்னை விட்டு வெளியே போகட்டும் என்றான்; எல்லாரும் அவனைவிட்டு வெளியே போனார்கள்.

2சாமு 13:10. அப்பொழுது அம்னோன் தாமாரைப் பார்த்து: நான் உன் கையினாலே சாப்பிடும்படிக்கு, அந்தப் பலகாரத்தை அறைவீட்டிலே கொண்டுவா என்றான்; அப்படியே தாமார் தான் செய்த பணியாரங்களை அறைவீட்டில் இருக்கிற தன் சகோதரனாகிய அம்னோனிடத்தில் கொண்டு போனாள்.

2சாமு 13:11. அவன் சாப்பிடும்படிக்கு அவள் அவைகளைக் கிட்ட கொண்டுவருகையில், அவன் அவளைப் பிடித்து, அவளைப் பார்த்து: என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி என்றான்.

2சாமு 13:12. அதற்கு அவள்: வேண்டாம், என் சகோதரனே, என்னை அவமானப்படுத்தாதே, இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத்தகாது; இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம்.

2சாமு 13:13. நான் என் வெட்கத்தோடே எங்கே போவேன்? நீயும் இஸ்ரவேலிலே மதிகெட்டவர்களில் ஒருவனைப்போல ஆவாய்; இப்போதும் நீ ராஜாவோடே பேசு, அவர் என்னை உனக்குத் தராமல் மறுக்கமாட்டார் என்றாள்.

2சாமு 13:14. அவன் அவள் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.

2சாமு 13:15. பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்; அவன் அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும் அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது. ஆகையால்: நீ எழுந்து போய்விடு என்று அம்னோன் அவளோடே சொன்னான்.

2சாமு 13:16. அப்பொழுது அவள்: நீ எனக்கு முந்தி செய்த அநியாயத்தைப்பார்க்கிலும், இப்பொழுது என்னைத் துரத்திவிடுகிற அந்த அநியாயம் கொடுமையாயிருக்கிறது என்றாள்; ஆனாலும் அவன் அவள் சொல்லைக் கேட்க மனதில்லாமல்,

2சாமு 13:17. தன்னிடத்தில் சேவிக்கிற தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு: நீ இவளை என்னை விட்டு வெளியே தள்ளி, கதவைப் பூட்டு என்றான்.

2சாமு 13:18. அப்படியே அவனிடத்தில் சேவிக்கிறவன் அவளை வெளியே தள்ளி, கதவைப் பூட்டினான்; அவள் பலவர்ணமான வஸ்திரத்தை உடுத்திக்கொண்டிருந்தாள்; ராஜகுமாரத்திகளாகிய கன்னிகைகள் இப்படிக்கொத்த சால்வைகளைத் தரித்துக் கொள்வார்கள்.

2சாமு 13:19. அப்பொழுது தாமார் தன் தலையின்மேல் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு, தான் தரித்திருந்த பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தன் தலையின்மேல் வைத்து, சத்தமிட்டு அழுதுகொண்டுபோனாள்.

2சாமு 13:20. அப்பொழுது அவள் சகோதரனாகிய அப்சலோம் அவளைப் பார்த்து: உன் சகோதரனாகிய அம்னோன் உன்னோடிருந்தானோ? இப்போதும் என் சகோதரியே, நீ மவுனமாயிரு; அவன் உன்னுடைய சகோதரன்; இந்தக் காரியத்தை உன் மனதிலே வைக்காதே என்றான்; அப்படியே தாமார் தன் சகோதரனாகிய அப்சலோமின் வீட்டில் தனித்துக் கிலேசப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அம்னோன் ஒரு துன்மார்க்கன். அவன் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறான். அம்னோன் தன் சகோதரியாகிய தாமாரைக் கெடுத்துப்போடுகிறான். அவன் கர்த்தருக்கு பயந்து ஜீவியத்திருந்தால், இதுபோன்ற பாதகமான காரியத்தை செய்திருக்கமாட்டான். அம்னோன் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து பாவம் செய்கிறான்.

பிசாசு ஒரு அசுத்தஆவி. இந்த அசுத்தஆவி அம்னோனின் இருதயத்தில் பிரவேசித்து அவனை ஆளுகை செய்கிறது. அசுத்த ஆவியின் ஏவுதலினால், அம்னோன் தன் சகோதரியாகிய தாமார்மீது மோகங்கொள்கிறான்.

தாமார் பார்வைக்கு அழகாயிருக்கிறாள். அவளுடைய அழகே அம்னோனுக்கு கண்ணியாயிருக்கிறது. அம்னோனின் மோகம் மிகவும் மோசமானது. அது இயற்கையான உறவு முறைகளுக்கு விரோதமானது. ஒரு சகோதரன் தன் சகோதரியின்மீது மோகஇச்சைப்படமாட்டான். இது பிசாசின் வேலை.

ஏதேன் தோட்டத்திலே ஆதாமும் ஏவாளும், கர்த்தரால் தடைபண்ணப்பட்ட கனியைப் புசித்தார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தர் நம்முடைய சமுதாயத்தில், சில காரியங்களை தடைபண்ணியிருக்கிறார். மனுஷரோ தங்கள் பாவசுபாவத்தினால் ஆளுகை செய்யப்பட்டு, கர்த்தர் தடைபண்ணியிருக்கும் காரியங்கள்மீது ஆசைப்படுகிறார்கள்.

"தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருக்கிறாள்; அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொள்கிறான். தன் சகோதரியாகிய தாமாரினிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்படுகிறான்; அவள் கன்னியாஸ்திரீயாயிருக்கிறாள்; அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் காண்கிறது" *(2சாமு 13:1,2)*.

அம்னோன் தன் சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கம்கொண்டு வியாதிப்படுகிறான். தன் சகோதரியை கெடுத்துப்போட அம்னோனுக்கு இதுவரைக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவனால் தன் சகோதரியின்மீது ஆசைப்படாமலும் இருக்க முடியவில்லை. இதன் நிமித்தமாக அம்னோனின் இருதயத்தில் தாமார் நிமித்தம் ஏக்கமுண்டாயிற்று. ஏக்கம் அவனுக்கு வியாதியாயிற்று.

பிசாசானவன் மனுஷரை வஞ்சிக்கிற சர்ப்பமாயிருக்கிறான். அவன் அம்னோனின் இருதயத்திலே தாமாரைக் கெடுத்துப்போடுவதற்கு வஞ்சகமான எண்ணத்தையும் கொடுக்கிறான். இப்போது அந்த வஞ்சக எண்ணத்தை நிறைவேற்றும் திட்டத்தையும் சாத்தான் அம்னோனின் மனதிலே வைக்கிறான்.

அம்னோனுக்குத் தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருக்கிறான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி *(2சாமு 13:3)*. யோனதாப் அம்னோனுக்கு சதிஆலோசனைகளையும் சொல்லுகிறான். இந்த சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உபாயங்களையும் சொல்லுகிறான்.

யோனதாப் அம்னோனைப் பார்க்கிறான். அம்னோனின் சரீரத்தில் மாற்றமுண்டாயிருக்கிறது. அவன் தன் சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கம் கொண்டு வியாதிப்பட்டிருக்கிறான். இதனால் அவன் நாளுக்கு நாள் மெலிந்துபோயிருக்கிறான். அவனுடைய சரீர மெலிவைப் பார்த்து, யோனதாப் அவனிடத்தில் விசாரிக்கிறான்.

யோனதாப் அம்னோனைப் பார்த்து "ராஜகுமாரனாகிய நீ, நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்துபோகிறாய், எனக்குச் சொல்லமாட்டாயா" *(2சாமு 13:4)* என்று கேட்கிறான். அதற்கு அம்னோன்: "என் சகோதரன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின்மேல் நான் ஆசைவைத்திருக்கிறேன்" என்று சொல்லுகிறான்.

அம்னோன் ஒரு ராஜகுமாரன். தாவீதின் அரண்மனையில் அவனுக்கு செல்வாக்கும் அதிகாரமும் இருக்கிறது. ராஜகுமாரர்கள் விரும்பியதெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்படும். அவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம். ஆனால் அம்னோனோ நாளுக்கு நாள் மெலிந்துபோயிருக்கிறான். இதைப் பார்த்து யோனதாப் ஆச்சரியப்படுகிறான்.

அம்னோன் தன் சகோதரியாகிய தாமாரின் மேல் ஆசை வைத்திருக்கிறான். இது முறையில்லாத ஆசை. அவன் ஒரு துன்மார்க்கன். துன்மார்க்கனுடைய மனதிலே துன்மார்க்கமான ஆசை வருகிறது. யோனதாப் அம்னோனுக்கு சிநேகிதனாயிருந்தாலும், அவனுடைய துன்மார்க்கமான ஆசையை கடிந்துகொள்ளவில்லை. அவனை திருத்த முயற்சிபண்ணவில்லை. அம்னோன் துன்மார்க்கனாயிருப்பதுபோல, யோனதாபும் துன்மார்க்கனாயும், மகாதந்திரவாதியுமாயிருக்கிறான்.

யோனதாப் அம்னோனுக்கு நல்ல புத்திமதிகளை சொல்லாமல், அவனுடைய துன்மார்க்கமான யோசனைக்கு துணைபோகிறான். அவனுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு யோனதாப் ஆலோசனை சொல்லுகிறான்.

அப்பொழுது யோனதாப் அம்னோனைப் பார்த்து: "நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்; உன்னைப்பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும்போது, நீ, என் சகோதரியாகிய தாமார் வந்து, எனக்குப் போஜனம்கொடுத்து, அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு நான் பார்க்க, என் கண்களுக்கு முன்பாக சமைக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று சொல்" *(2சாமு 13:5)* என்று சொல்லுகிறான்.

அம்னோன் ஏற்கெனவே தன் சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கம் கொண்டு வியாதிப்பட்டிருக்கிறான். இந்த ஏக்கத்தினாலும் வியாதியினாலும் அம்னோனால் சரியாக போஜனம்பண்ண முடியவில்லை. அரண்மனையில் ருசியான பதார்த்தங்கள் இருக்கும். ஆனாலும் அம்னோனுக்கு எந்த பதார்த்தமும் ருசியாயில்லை. ஆகையினால் அம்னோன் ஒன்றும் புசியாமல் நாளுக்கு நாள் மெலிந்துபோகிறான்.

அரண்மனையின் போஜனம் அம்னோனுக்கு பிடிக்கவில்லை. ஆனால் தாமாரின் கையினால் போஜனம் கொடுக்கப்பட்டால், அதைப் புசிப்பதற்கு அம்னோன் ஆயத்தமாயிருக்கிறான். இந்த போஜனத்தையும் அரண்மனையிலுள்ள சமையற்காரர்கள் செய்யக்கூடாது. அதை தாமாரே தன் கையினால் செய்து, அதை அம்னோனுக்கு முன்பாக கொண்டு வரவேண்டும். அம்னோனும் தாமாரும் நெருங்கி வருவதற்கு யோனதாப் இதுபோல சதித்திட்டம் போடுகிறான்.

அம்னோன் யோனதாபின் ஆலோசனை பிரகாரம் செயல்படுகிறான். அப்படியே அம்னோன் வியாதிக்காரனபோல் படுத்துக்கொள்கிறான். தாவீது ராஜா அம்னோனைப் பார்க்கவருகிறார். அப்போது, அம்னோன் ராஜாவை நோக்கி: "என் சகோதரியாகிய தாமார் வந்து நான் அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு, என் கண்களுக்கு முன்பாக இரண்டு நல்ல பணியாரங்களைப் பண்ணும்படி உத்தரவு கொடுக்கவேண்டும்" *(2சாமு 13:6)* என்று கேட்கிறான்.

தாவீதுக்கு ஏராளமான குமாரர்களும் குமாரத்திகளும் இருக்கிறார்கள். தாவீது பாசமுள்ள தகப்பன். அவர் தன்னுடைய பிள்ளைகள் எல்லோர்மீதும் பிரியமாயும் பாசமாயும் இருக்கிறார். தன்னுடைய பிள்ளைகளுக்கு வியாதி வந்துவிட்டால், தாவீது உடனே அவர்களிடத்தில் போய் அவர்களுடைய நலம் விசாரிப்பார். அம்னோன் வியாதியாய் படுத்திருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டவுடன், தாவீது ராஜா அவனைப் பார்க்க வருகிறார்.

தாவீது அம்னோனிடம், அவனுடைய வியாதியைப்பற்றி விசாரித்திருக்கவேண்டும். "உனக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா, நான் உனக்கு செய்ய வேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா" என்று தாவீது தன் மகனிடத்தில் அன்பாக கேட்டிருக்கவேண்டும்.

அம்னோனின் பக்கத்தில் தாவீது ராஜா இருக்கிறார். அவர் அம்னோனோடு பேசிக்கொண்டிருக்கிறார். அம்னோன் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தன்னுடைய வயிறு சரியில்லை என்றும், அரண்மனையின் போஜனம் தனக்கு ஒத்துவரவில்லை என்றும், தாவீதுக்கு சாக்குபோக்குகளை சொல்லுகிறான்.

தான் சாப்பிடவேண்டுமென்றால், தாமார் தன் கண்களுக்கு முன்பாக சமைக்கும்படி அம்னோன் தாவீதிடம் கேட்டுக்கொள்கிறான். தாமார் தன்னுடைய கண்களுக்கு முன்பாக இரண்டு நல்ல பணியாரங்களை பண்ணவேண்டுமென்றும், அதை தான் பார்க்கவேண்டும் என்றும், அந்தப் பணியாரங்களை தான் தாமாரின் கையினாலே சாப்பிடவேண்டும் என்றும் அம்னோன் தாவீதிடம் கேட்டுக்கொள்கிறான்.

தாவீது அம்னோனை சந்தேகப்படவில்லை. அம்னோனும் தாமாரும் சகோதர சகோதரிகளாயிருக்கிறார்கள். அம்னோனின் இருதயத்தில் தாமார்மீது மோகம் இருக்கிறது என்பது தாவீதுக்கு தெரியவில்லை. தாவீது அம்மோனின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறார்.

அப்பொழுது தாவீது: வீட்டுக்குத் தாமாரிடத்தில் ஆள் அனுப்பி, "நீ உன் சகோதரனாகிய அம்னோன் வீட்டுக்குப் போய், அவனுக்கு சமையல் பண்ணிக்கொடு" *(2சாமு 13:7)* என்று சொல்லச்சொல்லுகிறார்.

தாமார் தன் சகோதரனாகிய அம்னோன் படுத்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போய், மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாரங்களைச் சுட்டுகிறாள். அவள் சட்டியை எடுத்து, அம்னோனுக்கு முன்பாக அவைகளை வைக்கிறாள்; ஆனாலும் அவன் "சாப்பிடமாட்டேன்" என்று சொல்லுகிறான் *(2சாமு 13:8,9)*.

பின்பு அம்னோன்: "எல்லாரும் என்னை விட்டு வெளியே போகட்டும்" என்று சொல்லுகிறான்; எல்லாரும் அவனைவிட்டு வெளியே போய்விடுகிறார்கள். அப்பொழுது அம்னோன் தாமாரைப் பார்த்து: "நான் உன் கையினாலே சாப்பிடும்படிக்கு, அந்தப் பலகாரத்தை அறைவீட்டிலே கொண்டுவா" என்று சொல்லுகிறான்; அப்படியே தாமார் தான் செய்த பணியாரங்களை அறைவீட்டில் இருக்கிற தன் சகோதரனாகிய அம்னோனிடத்தில் கொண்டு போகிறாள் *(2சாமு 13:9,10)*.

அம்னோன் சாப்பிடும்படிக்கு தாமார் அவைகளைக் கிட்ட கொண்டுவருகையில், அவன் அவளைப் பிடித்து, அவளைப் பார்த்து: "என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி" *(2சாமு 13:11)* என்று சொல்லுகிறான். தாமார் அம்னோனுக்கு அருகில் வரும்போது, அவனுடைய மாய்மாலம் கலைந்துவிடுகிறது. அவன் இதுவரையிலும் போட்ட வேஷம் அவனை விட்டு நீங்கிப்போகிறது.

அம்னோனுக்கு தாமார் செய்த போஜனத்தின்மேல் பிரியமில்லை. அவன் தாமாரின் நிமித்தம் ஏக்கம் கொண்டு வியாதிப்பட்டிருக்கிறான். அம்னோன் தாமார்மேல் மோகங்கொண்டிருக்கிறான். அவன் தாமாரைக் கூப்பிடும்போது, "என் சகோதரியே" என்று தான் கூப்பிடுகிறான். ஆனால் அடுத்த வாக்கியத்தில், "நீ வந்து என்னோடே சயனி" என்று சொல்லுகிறான்.

பிசாசு பயங்கரமான சோதனைக்காரன். அவன் அம்னோனை வஞ்சிக்கிறான். அம்னோனுடைய செவிகளை செவிடாக்கிவிடுகிறான். அம்னோனுக்கு யார் புத்திமதி சொன்னாலும், அந்த வார்த்தைகள் அவனுடைய செவிகளில் கேட்காது. அவனுக்கு அவனுடைய மாம்சத்தின் இச்சைகளே பிரதானமாயிருக்கிறது.

தாமார் அம்னோனைப் பார்த்து, "என் சகோதரனே" என்று சொல்லுகிறாள். தனக்கும் அவனுக்கும் இருக்கிற உறவை தாமார் அம்னோனுக்கு நினைவு படுத்துகிறாள். இது நினைவுபடுத்த வேண்டிய உறவு அல்ல. அவர்கள் இருவரிடத்திலும் இயற்கையாகவே இரத்த பாசம் இருக்கவேண்டும். இவர்கள் இரண்டுபேருக்கும் தாவீது தகப்பனாயிருக்கிறார்.

தாமார் அம்னோனைப் பார்த்து "வேண்டாம், என் சகோதரனே, என்னை அவமானப்படுத்தாதே, இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத்தகாது; இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம்" (2சாமு 13:12) என்று சொல்லுகிறாள். அம்னோன் செய்ய நினைப்பது மதிகேடான காரியம்.

கர்த்தருடைய பிரமாணத்தில் சகோதரனும் சகோதரியும் சயனிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது.

"உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது" (லேவி 18:9).

இப்படிப்பட்ட முறைகேடான பாவத்தை துணிகரமாய் செய்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படும்.

"ஒருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியைச் சேர்த்துக் கொண்டு, அவன் அவளுடைய நிர்வாணத்தையும், அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அறுப்புண்டு போகக் கடவர்கள்; அவன் தன் சகோதரியை நிர்வாணப்படுத்தினான்; அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்" (லேவி 20:17).

தாமார் தன்னுடைய ஆசைக்கு இணங்கமாட்டாள் என்பதை அம்னோன் புரிந்துகொள்கிறான். அவன் தாமாரைப் பார்த்து, "என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி" என்று சொன்னவுடனே, அவள், "வேண்டாம், இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தை செய்யவேண்டாம்" என்று சொல்லிவிடுகிறாள்.

தாமார் அம்னோனைப் பார்த்து, "நான் என் வெட்கத்தோடே எங்கே போவேன்? நீயும் இஸ்ரவேலிலே மதிகெட்டவர்களில் ஒருவனைப்போல ஆவாய்; இப்போதும் நீ ராஜாவோடே பேசு, அவர் என்னை உனக்குத் தராமல் மறுக்கமாட்டார்" (2சாமு 13:13) என்று சொல்லுகிறாள்.

தாமார் அம்னோனிடம், "வேண்டாம், இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தை செய்யவேண்டாம்" என்று சொல்லுகிறாள். ஆனால் அம்னோனோ தாமாரின் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழிக்கிறான் (2சாமு 13:14).

தன்னுடைய வார்த்தைக்கு இணங்காத தாமாரை, அம்னோன் பலவந்தம்பண்ணுகிறான். இதுவரையிலும் அம்னோனுடைய மனதில் துன்மார்க்கமான சிந்தனை மாத்திரம் இருந்தது. இப்போது அவனுடைய சரீரமும் துன்மார்க்கமான கிரியைகளை செய்கிறது.

தான் அம்மோனோடு சயனித்தால், தனக்கு வெட்கமுண்டாகும் என்றும், இது மதிகேடான காரியம் என்றும் தாமார் சொல்லுகிறாள். "நான் என் வெட்கத்தோடே எங்கே போவேன்" என்று கேட்கிறாள். தாமாரின் வார்த்தைகள் எதுவும் அம்னோனின் செவிகளில் விழவில்லை. அவள் அம்னோனைப் பார்த்து, "நீயும் இஸ்ரவேலிலே மதிகெட்டவர்களில் ஒருவனைப்போலாவாய்" என்று சொல்லுகிறாள். ஆனால் அம்னோனோ அதைக் குறித்து கவலைப்படவில்லை.

அம்மோன் தாவீது ராஜாவின் குமாரன். தாவீதின் ராஜாசனத்தில் இவனுக்கும் பங்கு இருக்கிறது. ஆனால் அம்னோனோ தன்னுடைய மோகஇச்சையினால், தன்னுடைய ராஜாசனத்தை மறந்துவிடுகிறான், தேசத்திலே தனக்கு இருக்கும் மதிப்பையும், மரியாதையையும் மறந்துவிடுகிறான். தன்னுடைய கடமையையும் பொறுப்பையும் மறந்துவிடுகிறான். அம்னோனின் மனதில் தாமார்மீது கொண்ட மோகமே பெரிதாயிருக்கிறது.

அம்மோன் தாமாரை திருமணம் செய்யாமலேயே, அவளோடு சயனிக்கக்கூடாது. அது மதிகெட்ட காரியம். இந்த சூழ்நிலையில் தாமார் அம்னோனுக்கு ஒரு யோசனை சொல்லுகிறாள். "இப்போதும் நீ ராஜாவோடே பேசு, அவர் என்னை உனக்கு தராமல் மறுக்கமாட்டார்" என்று தாமார் அம்னோனுக்கு சொல்லுகிறாள்.

தாவீது ராஜா தாமாரை தனக்கு மனைவியாக தரமாட்டார் என்பது அம்னோனுக்கு நன்றாய்த் தெரியும். அம்னோன் ஒரு துன்மார்க்கன். அவன் தாமாரின் சகோதரன். அம்னோனின் மோகம் மதிகேடானது. தாவீது இப்படிப்பட்ட பொல்லாப்பான காரியங்களுக்கு துணைபோகமாட்டார் என்பது அம்னோனுக்கு தெரிந்திருக்கிறது.

அம்னோன் பெருமை பிடித்தவன். அவன் ஒரு பேராசைக்காரன். தாமார் தன்னிடத்தில் என்ன பேசினாலும், அம்னோன் இப்போது அவளுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்க ஆயத்தமாயில்லை. அவனிடத்தில் தெளிந்த சிந்தனையில்லை. தாமார்மீது அவன் வைத்திருக்கிற மோகம் அவனை ஆளுகை செய்கிறது. அவன் தன்னுடைய மாம்சத்தின் இச்சைக்கு அடிமையாயிருக்கிறான்.

அம்னோனோ தாமாரின் சொல்லைக்கேட்காமல் அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளை கற்பழிக்கிறான். அம்னோன் ஒரு வாலிபன். இன்னும் பல வருஷம் அரண்மனையில் வாழவேண்டியவன். அவனிடத்தில் ராஜாவுக்குரிய நற்குணங்கள் காணப்படவேண்டும். ஆனால் அம்னோனோ தன்னுடைய வாலிபவயதில், மாம்சத்தின் இச்சைக்கு இடங்கொடுத்து, தன்னுடைய சரீரத்தையும், தன்னுடைய ஆத்துமாவையும் கெடுத்துப்போடுகிறான்.

பிசாசானவன் மனுஷரை உபத்திரவப்படுத்துகிறான். மனுஷரை வஞ்சிக்கவும் செய்கிறான். அம்னோன் தாமார்மீது மோகங்கொண்டான். அவள்மீது ஏக்கம்கொண்டு வியாதிப்பட்டான். அவளோடே சயனித்து அவளை கற்பழித்தான். பிற்பாடு அம்னோன் தாமாரை மிகவும் வெறுக்கிறான்.

அம்னோன் தாமாரை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும், அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருக்கிறது. ஆகையால்: "நீ எழுந்து போய்விடு" (2சாமு 13:15) என்று அம்னோன் தாமாரோடே சொல்லுகிறான்.

அம்னோன் தாமாரை தன்னைவிட்டு வெளியே தள்ளி கதவைப் பூட்டுமாறு தன்னுடைய சேவகனுக்கு கட்டளையிடுகிறான். அம்னோனின் கட்டளையின் பிரகாரம், அவனிடத்தில் சேவிக்கிறவன், தாமாரை வெளியே தள்ளி, கதவைப் பூட்டுகிறான் (2சாமு 13:17,18).

தாமார் மிகப்பெரிய தப்பிதம் செய்தவள்போல, இப்போது வீட்டைவிட்டு வெளியே தள்ளப்படுகிறாள். தாமார் அம்னோனை கெடுத்துவிட்டதுபோல, அவளுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. தாமார் அம்னோனை வஞ்சிக்கவில்லை. அம்னோன் ஒரு துன்மார்க்கன். அவன் தான் தாமாரை பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளை கற்பழித்தான். இப்போது தாமாருக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது.

அம்னோன் தாமாரிடம், "நீ எழுந்து போய்விடு" என்று வெறுப்போடு சொன்னபோது, தாமார் அவனிடம், "நீ எனக்கு முந்தி செய்த அநியாயத்தைப்பார்க்கிலும், இப்பொழுது என்னைத் துரத்திவிடுகிற அந்த அநியாயம் கொடுமையாயிருக்கிறது" (2சாமு 13:16) என்று சொல்லுகிறாள்; ஆனாலும் அம்னோன் தாமாரின் சொல்லைக் கேட்க மனதில்லாமலிருக்கிறான்.

பாவம் விஷமுள்ள சர்ப்பத்தைப்போல கொத்துகிறது. பாவம் ஆரம்பத்தில் இனிமையாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். அதன் பின்புதான் பாவத்தின் வேதனையும், பயங்கரமும் புரியும். பாவிகளுடைய சொந்த மனச்சாட்சியே அவர்களைக் குற்றப்படுத்தும். அம்னோன் தாமாரை கற்பழித்தான். அம்னோனின் மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. ஆனாலும் அவனுடைய இருதயமோ உணர்வடையாமல், பெருமையோடிருந்து, தாமாரைத் துரத்திவிடச் சொல்லுகிறது. அம்னோன் தன் பாவத்திற்கு மனம் வருந்தவுமில்லை, மனந்திருந்தவுமில்லை. கர்த்தருக்கு முன்பாக அம்னோன் தன் இருதயத்தை தாழ்த்தவுமில்லை.

அம்னோன் தன்னிடத்தில் சேவிக்கிற தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு: "நீ இவளை என்னை விட்டு வெளியே தள்ளி, கதவைப் பூட்டு" என்று சொல்லுகிறான். அப்படியே அவனிடத்தில் சேவிக்கிறவன் அவளை வெளியே தள்ளி, கதவைப் பூட்டுகிறான் (2சாமு 13:17,18).

தாமார் வெளிப்பார்வைக்கு அழகாகயிருக்கிறாள். தாமார் பலவர்ணமான வஸ்திரத்தை உடுத்திக்கொண்டிருக்கிறாள்; ராஜகுமாரத்திகளாகிய கன்னிகைகள் இப்படிக்கொத்த சால்வைகளைத் தரித்துக் கொள்வார்கள். அம்னோனின் வேலைக்காரன் தாமாரை வீட்டைவிட்டு வெளியே தள்ளி கதவைப் பூட்டி விடுகிறான்.

அப்பொழுது தாமார் தன் தலையின் மேல் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு, தான் தரித்திருந்த பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தன் தலையின்மேல் வைத்து, சத்தமிட்டு அழுதுகொண்டுபோகிறாள் (2சாமு 13:19).

தாவீதின் அரண்மனையில் தாமாரின் மதிப்பும் மரியாதையும், கண்ணியமும் கெட்டுப்போயிருக்கிறது. அவளுடைய கன்னிகைத்தன்மையை அம்மோன் பறித்துக்கொண்டான். தாமார் மிகவும் துக்கப்படுகிறாள். துக்கத்திற்கு அடையாளமாக அவள் தன் தலையின்மேல் சாம்பலை வாரிப்போட்டுக்கொள்கிறாள். தான் தரித்திருக்கிற பல வர்ணமான வஸ்திரத்தைக் கிழித்துக்கொள்கிறாள். தாமாரின் அழகு அம்னோனைக் கவர்ந்தது. தான் கெட்டுப்போனதற்கு காரணமாயிருக்கும் தன்னுடைய அழகை தாமார் அலங்கோலப்படுத்துகிறாள்.

அம்னோன் தாமாரை பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளை கற்பழித்தான். அம்னோனின் பாவத்திற்கு அவன் அழுது புலம்பவேண்டும். ஆனால் தாமாரோ, அம்னோன் செய்த பாவத்திற்காக சத்தமிட்டு அழுதுகொண்டு போகிறாள்.

அப்சலோம் தாமாரின் சகோதரன். அப்பொழுது அவள் சகோதரனாகிய அப்சலோம் தாமாரைப் பார்த்து: "உன் சகோதரனாகிய அம்னோன் உன்னோடிருந்தானோ? இப்போதும் என் சகோதரியே, நீ மவுனமாயிரு; அவன் உன்னுடைய சகோதரன்; இந்தக் காரியத்தை உன் மனதிலே வைக்காதே" (2சாமு 13:20) என்று சொல்லுகிறான்; அப்படியே தாமார் தன் சகோதரனாகிய அப்சலோமின் வீட்டில் தனித்துக் கிலேசப்பட்டுக்கொண்டிருக்கிறாள்.

தாமார் இப்போது தன் சகோதரன் அப்சலோமின் வீட்டிலே தனிமையிருக்கிறாள். அவள் வருத்தத்தோடும் கிலேசத்தோடும் இருக்கிறாள். அப்சலோம் தன் சகோதரிக்கு ஆறுதல் சொல்லுகிறான். "இந்தக் காரியத்தை உன் மனதிலே வைக்காதே" என்று அப்சலோம் தன் சகோதரிக்கு சொல்லுகிறான். ஆனாலும் அப்சலோமால் இந்தக் காரியத்தை மறக்க முடியவில்லை. அவனால் அம்னோனை மன்னிக்கவும் முடியவில்லை. அப்சலோம் அம்னோனை பழிவாங்குவதற்கு ஏற்ற சமயத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறான்.

அப்சலோம்
2சாமு 13:21-29

2சாமு 13:21. தாவீதுராஜா இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டபோது, வெகு கோபமாயெரிந்தான்.

2சாமு 13:22. அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும் தீமையாகிலும் பேசவில்லை; தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் கற்பழித்த காரியத்தினிமித்தம் அப்சலோம் அவனைப் பகைத்தான்.

2சாமு 13:23. இரண்டு வருஷம் சென்றபின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்குச் சமீபமான பாலாத்சோரிலே ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்கத்தரிக்கிற வேலையில் இருந்தான்; அங்கே ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைத்தான்.

2சாமு 13:24. அவன் ராஜாவினிடத்தில் போய், ஆட்களை வைத்து ஆடுகளை மயிர்கத்தரிக்கிறேன்; ராஜாவும் அவருடைய ஊழியக்காரரும் உமது அடியானோடே வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

2சாமு 13:25. ராஜா அப்சலோமைப் பார்த்து: அப்படி வேண்டாம், என் மகனே; நாங்கள் எல்லாரும் வருவோமாகில் உனக்கு வெகு செலவுண்டாகும் என்றான்; அவனை வருந்திக்கேட்டாலும், அவன் போக மனதில்லாமல், அவனை ஆசீர்வதித்தான்.

2சாமு 13:26. அப்பொழுது அப்சலோம்: அது கூடாதிருந்தால், என் சகோதரனாகிய அம்னோனாவது எங்களோடே வரும்படி அவனுக்கு உத்தரவு செய்யும் என்றான். அதற்கு ராஜா: அவன் உன்னோடே வரவேண்டியது என்ன என்றான்.

2சாமு 13:27. அப்சலோம் பின்னையும் அவனை வருந்திக் கேட்டுக்கொண்டபடியினால், அவன் அம்னோனையும், ராஜாவின் குமாரர் அனைவரையும் அவனோடே போகவிட்டான்.

2சாமு 13:28. அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி: அம்னோன் திராட்சரசம் குடித்துக் களித்திருக்கும் சமயத்தை நன்றாய்ப் பார்த்திருங்கள்; அப்பொழுது நான்: அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன்; உடனே நீங்கள் பயப்படாமல் அவனைக் கொன்றுபோடுங்கள்; நான் அல்லவோ அதை உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; திடன்கொண்டு தைரியமாயிருங்கள் என்று சொல்லியிருந்தான்.

2சாமு 13:29. அப்சலோம் கற்பித்தபடியே அப்சலோமின் வேலைக்காரர் அம்னோனுக்குச் செய்தார்கள்; அப்பொழுது ராஜகுமாரர் எல்லாரும் எழுந்திருந்து, அவரவர் தம்தம் கோவேறு கழுதையின்மேல் ஏறி ஓடிப்போனார்கள்.

அம்னோன் தாமாருக்கு செய்த பாவத்தினால் தாவீதின் அரண்மனையில் பிரச்சனையும் குழப்பமும் உண்டாகிறது.

தாவீதுராஜா இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டபோது, வெகு கோபமாயெரிகிறார். அம்னோன் தாவீதின் குமாரன். தாமார் தாவீதின் குமாரத்தி. தன்னுடைய சொந்தக்குமாரனே, தன்னுடைய சொந்தக்குமாரத்தியை கெடுத்துப்போட்டான். தாவீது இதை நினைத்துப் பார்த்து, அம்னோன்மீது மிகவும் கோபப்படுகிறார்.

அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும் தீமையாகிலும் பேசவில்லை; தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் கற்பழித்த காரியத்தினிமித்தம் அப்சலோம் அவனைப் பகைக்கிறார். அம்னோனும் அப்சலோமும் சகோதரராயிருந்தாலும் இருவரும் பேசாதிருக்கிறார்கள். ஒரே அரண்மனையிலிருந்தாலும், இரண்டுபேரும் சகோதரர்களாகயிருந்தாலும், இப்போது சத்துருக்களாயிருக்கிறார்கள். அம்னோனின் பாவம் அவர்களை பிரித்துவிடுகிறது *(2சாமு 13:21,22)*.

தாவீது அம்னோன் செய்த பாவத்தைக் கேள்விப்பட்டபோது, அவன்மீது கோபப்படுகிறார். கோபப்பட்டால் மாத்திரம் போதாது. தாவீது அம்னோனுக்கு தகப்பனாகவும், அதே வேளையில் அவர் சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாகவும் இருக்கிறார். அம்னோன் தன்னுடைய குமாரனாகயிருந்தாலும், தாவீது அவனுக்கு நீதியான தண்டனையைக் கொடுக்கவேண்டும். ஆனால் தாவீதோ அம்னோனுக்கு தண்டனை கொடுக்காமல், அவன்மீது கோபமாக மாத்திரமே இருக்கிறார்.

தாவீது அம்னோனைத் தண்டிக்காமலிருப்பது, அப்சலோமுக்கு கோபத்தையும் ஏமாற்றத்தையும் கொடுக்கிறது. அப்சலோம் ஏற்கெனவே இஸ்ரவேல் தேசத்திலே வழக்குகளை விசாரித்துக் கொண்டிருக்கிறான். இஸ்ரவேலின் மூப்பருக்கு முன்பாக, தன்னை ஒரு நியாயாதிபதிபோல காண்பித்துக் கொண்டிருக்கிறான். தாவீது அம்னோனை தண்டிக்காமல் விட்டுவிட்டதினால், தான் அம்னோனுக்கு தண்டனை கொடுக்கவேண்டுமென்று அப்சலோம் தீர்மானிக்கிறான்.

அப்சலோம் அம்னோனை தண்டிக்கவேண்டுமென்று விரும்புவது, நீதியின் மேலுள்ள தாகத்தினால் அல்ல. அம்னோனை பழிவாங்கவேண்டும் என்னும் வெறி அப்சலோமின் மனதிலிருக்கிறது. அம்னோன் தன் சகோதரியாகிய தாமாரை கற்பழித்த காரியத்தினிமித்தம், அப்சலோம் அவனைப் பகைக்கிறான். அவனைப் பழிவாங்கவேண்டுமென்று துடிக்கிறான்.

அப்சலோம் இரண்டு வருஷமாக தன் சகோதரன் அம்னோனை பகைத்துக்கொண்டிருக்கிறான். ஆனாலும் அவனுக்கு விரோதமாக அப்சலோம் ஒரு தீங்கும் செய்யவில்லை. தாவீது அம்னோனை சட்டத்தின் பிரகாரமாக தண்டிப்பார் என்று அப்சலோம் எதிர்பார்க்கிறான். தாவீது அம்னோனை தண்டிப்பது, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாகயிருக்கும் என்று அப்சலோம் எதிர்பார்க்கிறான்.

அம்னோன் தாமாரை கெடுத்துப்போட்டதினால் அவள் இப்போது, அப்சலோமின் வீட்டிலே தனித்து கிலேசப்பட்டுக்கொண்டிருக்கிறாள். தாவீது அம்னோனைத் தண்டித்து, தாமாருக்கு ஜீவனாம்சம் கிடைக்க ஏதாவது வழிவகை பண்ணுவார் என்று அப்சலோம் எதிர்பார்க்கிறான். இதற்காக அப்சலோம் இரண்டு வருஷகாலமாக காத்துக்கொண்டிருக்கிறான்.

இவ்விரண்டு வருஷகாலத்தில் தாவீது அம்னோனுடைய குற்றத்தை விசாரிக்கவுமில்லை, அவனுக்கு தண்டனை கொடுக்கவுமில்லை, தாமாருக்கு ஜீவனாம்சம் கொடுக்கவுமில்லை. தாவீது எப்போதும்போல தன்னுடைய ராஜ்யபாரத்தை கவனித்துக் கொண்டிருக்கிறார். அம்னோனோ ஒரு குற்றமும் செய்யாதவன்போல, தாவீதின் அரண்மனையிலே உலாவிக்கொண்டிருக்கிறான். தாமாருக்கு ஜீவனாம்சம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

இவ்விரண்டு வருஷகாலத்தில், அப்சலோமின் இருதயத்தில், அம்னோனுக்கு விரோதமான கோபம் குறையவில்லை. அம்னோன் தாமாருக்கு செய்த பாவத்தினிமித்தமாய், அப்சலோம் அவனை கொலை செய்யவேண்டுமென்று திட்டமிடுகிறான். கற்பழிப்பதும் பாவம். கொலை செய்வதும் பாவம். தன்னுடைய சகோதரியை அம்னோன் கற்பழித்ததை மாத்திரமே அப்சலோம் குற்றமாக நினைக்கிறான். தான் அம்னோனை கொலைசெய்ய திட்டமிடுவது, அப்சலோமின் மனதில் குற்றமாய்த் தெரியவில்லை.

"ஏனென்றால், விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ் செய்யாமலிருந்தும் கொலைசெய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்" (யாக் 2:11).

அம்னோனை கொலை செய்யவேண்டும் என்னும் தன்னுடைய திட்டத்தை அப்சலோம் யாரிடத்திலும் பேசவில்லை. அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும் தீமையாகிலும் பேசவில்லை. அப்சலோமின் சதிஆலோசனை அவனுக்குள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

அப்சலோம் அம்னோனிடம் தனிமையில் பேசி, அவன் செய்த தப்பிதத்தை அவனுக்கு எடுத்து சொல்லியிருக்கவேண்டும். அப்போது அம்னோன் ஒருவேளை தன் பாவத்திற்கு மனம்வருந்தி, மனந்திரும்புவதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் அப்சலோமோ இரண்டு வருஷகாலமாக அம்மோனிடம் பேசாமலிருக்கிறான். அம்னோனிடத்திலும், தாமாருக்கு விரோதமாக செய்த பாவத்தைப்பற்றிய குற்றவுணர்வு காணப்பட்டதாக தெரியவில்லை.

இரண்டு வருஷகாலமாக, அப்சலோம் அம்னோனுக்கு விரோதமான பகையை வளர்க்கிறான். ஆரம்பத்தில் அம்னோனைக் கொன்றுபோடவேண்டும் என்னும் எண்ணம் அப்சலோமின் மனதில் இருந்திருக்காது. அம்னோனை அவமானப்படுத்தவேண்டும் என்றும், அம்னோனுக்கு ஏதாவது தீங்கு செய்யவேண்டும் என்றும் அப்சலோம் நினைத்திருக்கலாம். ஆனால் இரண்டு வருஷகாலத்தில், அம்னோனுக்கு விரோதமாக அப்சலோமின் இருதயத்தில் ஏற்பட்ட கோபம் கொலைவெறியாக மாறிவிடுகிறது. அம்னோனுக்கு மரணதண்டனையை தவிர, அதற்கு குறைவான தண்டனை எதுவும் கொடுக்கக்கூடாது என்று அப்சலோம் தன் மனதிலே தீர்மானித்திருக்கிறான்.

இரண்டு வருஷம் சென்றபின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்குச் சமீபமான பாலாத்சோரிலே ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்கத்தரிக்கிற வேலையில் இருக்கிறான்; அங்கே ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைக்கிறான் (2சாமு 13:23). நாபால் தன் ஆடுகளை மயிர்க்கத்தரித்த வேளையிலே ஒரு பெரிய விருந்து பண்ணினான். அதுபோன்ற விருந்தை இப்போது அப்சலோமும்செய்கிறான்.

அப்சலோம் தாவீது ராஜாவினிடத்தில் போய், "ஆட்களை வைத்து ஆடுகளை மயிர்கத்தரிக்கிறேன்; ராஜாவும் அவருடைய ஊழியக்காரரும் உமது அடியானோடே வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (2சாமு 13:24) என்று அழைக்கிறான். தன்னுடைய உற்றார் உறவினர்மீது தனக்கு அதிக மதிப்பும், மரியாதையும் இருப்பதுபோல அப்சலோம் காண்பித்துக்கொள்கிறான்.

தாவீது ராஜாவால் இதுபோன்ற விருந்துகளுக்கு போகமுடியாது. அவர் ராஜாங்க காரியத்தில் ஈடுபட்டிருப்பார். தாவீது ராஜா அப்சலோமைப் பார்த்து: "அப்படி வேண்டாம், என் மகனே; நாங்கள் எல்லாரும் வருவோமாகில் உனக்கு வெகு செலவுண்டாகும்" என்று சொல்லுகிறார்; அப்சலோம் தாவீது ராஜாவை வருந்திக்கேட்டாலும், அவர் போக மனதில்லாமல், அப்சலோமை ஆசீர்வதிக்கிறார் (2சாமு 13:25).

அம்னோனை இந்த விருந்திற்கு எப்படியாவது அழைக்கவேண்டும் என்றும், விருந்து நடைபெறும்போதும் அம்னோனைக் கொன்றுபோடவேண்டும் என்றும் அப்சலோம் சதிஆலோசனைபண்ணியிருக்கிறான். ஆகையினால் தாவீது ராஜா விருந்துக்கு வரவில்லை என்று சொல்லுவது அப்சலோமுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கவில்லை. அம்னோன் விருந்திற்கு வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

அப்பொழுது அப்சலோம்: "அது கூடாதிருந்தால், என் சகோதரனாகிய அம்னோனாவது எங்களோடே வரும்படி அவனுக்கு உத்தரவு செய்யும்" என்று கேட்கிறான். அதற்கு தாவீது ராஜா: "அவன் உன்னோடே வரவேண்டியது என்ன" என்று கேட்கிறார். அப்சலோம் பின்னையும் தாவீது ராஜாவை வருந்திக் கேட்டுக்கொண்டபடியினால், அவர் அம்னோனையும், ராஜாவின் குமாரர் அனைவரையும் அப்சலோமோடே போகவிடுகிறார் (2சாமு 13:26,27).

அம்னோனை தன்னோடு அனுப்பவேண்டுமென்று அப்சலோம் கேட்டபோது தாவீதுக்கு அப்சலோமின்மீது சந்தேகம் வரவில்லை. அம்னோன் மீதுள்ள கோபத்தை அப்சலோம் தன் இருதயத்தின் ஆழத்தில் மறைத்து வைத்திருக்கிறான்.

அப்சலோம் தன்னுடைய சதிஆலோசனையை நிறைவேற்றுவதற்கு திட்டமிடுகிறான். அப்சலோமின் விருந்தில் திராட்சரசம் பரிமாறப்படுகிறது. மதுபானம் குடிக்கிறவர்கள் வெறித்திருப்பார்கள். விருந்தினர்கள் குடித்து வெறித்திருக்கும் சமயத்தில், அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட திட்டமிடுகிறான். அப்சலோம் தன்னுடைய சதிதிட்டத்தை தன்னுடைய வேலைக்காரருக்கு சொல்லியிருக்கிறான்.

அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி: "அம்னோன் திராட்சரசம் குடித்துக் களித்திருக்கும் சமயத்தை நன்றாய்ப் பார்த்திருங்கள்; அப்பொழுது நான்: அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன்; உடனே நீங்கள் பயப்படாமல் அவனைக் கொன்றுபோடுங்கள்; நான் அல்லவோ அதை உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; திடன்கொண்டு தைரியமாயிருங்கள்" (2சாமு 13:28) என்று சொல்லியிருந்தான்.

அப்சலோம் தன் வேலைக்காரருக்கு அம்னோனை கொன்றுபோடும் திட்டத்தை அறிவித்திருக்கிறான். அம்னோனுக்கு கொடுக்கப்படும் திராட்சரசத்தில், அவனுடைய இரத்தமும் கலக்கப்படும். அம்னோன் திராட்சரசம் குடித்து களித்திருக்கும் சமயத்தில், அம்னோனின் வேலைக்காரர்கள் அவனைக் கொன்றுபோடுவார்கள்.

அம்னோன் தாமாரைக் கெடுத்துப்போட்டான். அம்னோன் தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்தவோ, மனந்திருந்தவோ, அப்சலோம் அவனுக்கு கால அவகாசம் கொடுக்கவில்லை. அம்னோன் தன் பாவத்தை உணர்ந்திருந்தால், "கர்த்தாவே என்மீது இரக்கம் காண்பியும்" என்று ஜெபித்திருப்பான். ஆனால் அம்னோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு அப்சலோம் அவனுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை.

அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி, "அம்னோனை அடியுங்கள்" என்று சொன்னவுடனே, அவர்கள் அம்னோனைக் கொன்றுபோடவேண்டும். இதுவே அப்சலோமின் சதித்திட்டம். அப்சலோமின் பாவத்திற்கு அவனுடைய வேலைக்காரரும் பங்காளிகளாயிருக்கிறார்கள்.

அப்சலோம் தன்னுடைய வேலைக்காரரிடம், "நீங்கள் பயப்படாமல் அவனைக் கொன்றுபோடுங்கள், நான் அல்லவோ அதை உங்களுக்கு கட்டளையிடுகிறேன்" என்று ஆறுதலாகவும், ஆதரவாகவும் சொல்லுகிறான்.

அப்சலோமின் வேலைக்காரர், அம்னோனைக் கொன்றுபோடும்போது, அந்த விருந்தில் தாவீது ராஜாவின் குமாரர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். அவர்கள் அம்னோனை அவனுடைய சகோதரருக்கு முன்பாக கொன்றுபோடப்போகிறார்கள். "தாவீதின் குமாரரோ பிரதானிகளாயிருக்கிறார்கள்" *(2சாமு 8:18)*. இஸ்ரவேல் தேசத்தின் பிரதானிகளுக்கு முன்பாக, அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடுகிறான்.

அப்சலோம் கற்பித்தபடியே அவனுடைய வேலைக்காரர் அம்னோனுக்குச் செய்கிறார்கள்; அப்பொழுது ராஜகுமாரர் எல்லாரும் எழுந்திருந்து, அவரவர் தம்தம் கோவேறு கழுதையின்மேல் ஏறி ஓடிப்போகிறார்கள் *(2சாமு 13:29)*.

தாவீது ராஜா அம்னோனை நியாயம் விசாரித்திருக்கவேண்டும். ஆனால் தாவீது அவனை நியாயம் விசாரிக்காமல், இரண்டு வருஷமாக அமைதியாயிருக்கிறார். தாவீது விசாரிக்காத வழக்கை, அப்சலோம் விசாக்கிறான். இஸ்ரவேலின் பிரதானிகளாகிய தன்னுடைய சகோதரருக்கு முன்பாக, அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடுகிறான். அப்சலோம் அம்னோனுக்கு தண்டனை கொடுக்கும்போது தாவீது ராஜாவுக்கு பதிலாக, அவருடைய குமாரர்கள், இஸ்ரவேலின் பிரதானிகளாக, அங்கே இருக்கிறார்கள்.

அப்சலோம் தன்னுடைய சகோதரருக்கு முன்பாக, அம்னோனைக் கொன்றுபோட்டதற்கு இரண்டு காரணங்கள் உள்ளது. அவையாவன : 1. அம்னோன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரைக் கெடுத்துப்போட்டான். இதற்கு பழிவாங்கும் வண்ணமாக அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடுகிறான். 2. தாவீதுக்கு பின்பு அப்சலோம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக விரும்புகிறான். அம்னோன் தாவீதின் மூத்த குமாரன். அப்சலோம் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமருவதற்கு அம்னோன் தடையாகயிருக்கிறான். ஆகையினால் அப்சலோம், அம்னோனை, தன்னுடைய சகோதரர் எல்லோருக்கும் முன்பாக கொன்றுபோடுகிறான்.

தாவீதின் மூத்த குமாரனாகிய அம்னோன் செத்துப்போனதினால், தாவீதுக்கு பின்பு இஸ்ரவேலுக்கு ராஜாவாக அப்சலோமுக்குத் தடையேதுமில்லை. அப்சலோம் அம்னோனை, தன்னுடைய சகோதரர் எல்லோருக்கும் முன்பாக கொன்றுபோட்டதினால், அவர்கள் எல்லோருக்குமே அப்சலோமைக் குறித்து பயம் இருக்கும். அவர்கள் அப்சலோமின் முயற்சிக்கு எதிர்த்து நிற்கமாட்டார்கள்.

அப்சலோம் தன்னுடைய வேலைக்காரரிடம் ஏற்கெனவே சொல்லியிருந்த பிரகாரமாக, "அம்னோனை அடியுங்கள்" என்று சொல்லுகிறான். அப்போது அப்சலோமின் வேலைக்காரர், அம்னோனைக் கொன்றுபோடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய எஜமானுக்கு கீழ்ப்படிகிறார்கள். அம்னோனைக் கொல்லுவது மிகப்பெரிய குற்றம். ஆனாலும் அப்சலோம் தங்களுக்கு இந்தக் கட்டளையைக் கொடுத்திருப்பதினால், அவர்கள் அம்னோனை பயப்படாமல் தைரியமாய்க் கொன்றுபோடுகிறார்கள்.

தாவீதுக்கு பின்பு, இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தில் அப்சலோம் வீற்றிருப்பார் என்றும், அவர் தங்களை பாதுகாப்பார் என்றும் அப்சலோமின் வேலைக்காரர்கள் தைரியமாயிருக்கிறார்கள். அவர்கள் பின் விளைவுகள் எதையும் யோசிக்காமல், அப்சலோம் தங்களுக்கு கற்பித்தபடியே, அம்னோனைக் கொன்றுபோடுகிறார்கள்.

தாவீதின் வீட்டிலே பட்டயம் இருக்கிறது. அது தன்னுடைய வேலையை செய்ய ஆரம்பித்திருக்கிறது. முதலாவதாக, தாவீதின் மூத்த குமாரன் செத்துப்போகிறான். ராஜகுமாரர் எல்லோரும், அப்சலோமுக்கு பயந்து ஓடிப்போகிறார்கள். அம்னோன் செத்துப்போனான். அம்னோனுக்கு பின்பு, அப்சலோம் தங்களைக் கொன்றுபோடுவானோ என்று பயந்து, தாவீதின் குமாரர் எல்லோரும், தங்களுடைய கோவேறு கழுதையின்மேல் ஏறி ஓடிப்போகிறார்கள். அப்சலோமின் மனதிலே இப்படிப்பட்ட சதிஆலோசனை இருந்தது என்பது ராஜகுமாரருக்கு தெரியவில்லை.

தாவீது
2சாமு 13:30-39

2சாமு 13:30. அவர்கள் வழியில் இருக்கிறபோதே, அப்சலோம் ராஜகுமாரரையெல்லாம் அடித்துக் கொன்றுபோட்டான், அவர்களில் ஒருவரும் மீந்திருக்க விடவில்லை என்கிறதாய், தாவீதுக்குச் செய்தி வந்தது.

2சாமு 13:31. அப்பொழுது ராஜா எழுந்திருந்து, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தரையிலே விழுந்துகிடந்தான்; அவன் ஊழிக்காரர் எல்லாரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நின்றார்கள்.

2சாமு 13:32. அப்பொழுது தாவீதின் தமையனாகிய சிமியாவின் குமாரன் யோனதாப் வந்து: ராஜகுமாரரான வாலிபரையெல்லாம் கொன்றுபோட்டார்கள் என்று என் ஆண்டவன் நினைக்கவேண்டாம்; அம்னோன் மாத்திரம் செத்துப்போனான்; அவன் தன் சகோதரியாகிய தாமாரைக் கற்பழித்த நாள்முதற்கொண்டு, அது அப்சலோமின் நெஞ்சில் இருந்தது.

2சாமு 13:33. இப்போதும் ராஜகுமாரர்கள் எல்லாரும் செத்தார்கள் என்கிற பேச்சை ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய மனதிலே வைக்கவேண்டாம்; அம்னோன் ஒருவனே செத்தான் என்றான்; அப்சலோம் ஓடிப்போனான்.

2சாமு 13:34. ஜாமக்காரச் சேவகன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, இதோ, அநேகம் ஜனங்கள் தனக்குப் பின்னாலே மலை ஓரமாய் வருகிறதைக் கண்டான்.

2சாமு 13:35. அப்பொழுது யோனதாப் ராஜாவைப் பார்த்து: இதோ, ராஜகுமாரர் வருகிறார்கள்; உமது அடியேன் சொன்னபடியே ஆயிற்று என்றான்.

2சாமு 13:36. அவன் பேசி முடித்தபோது, ராஜகுமாரர் வந்து, சத்தமிட்டு அழுதார்கள்; ராஜாவும் அவனுடைய எல்லா ஊழியக்காரரும் மிகவும் புலம்பி அழுதார்கள்.

2சாமு 13:37. அப்சலோமோ அம்மியூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கேசூரின் ராஜாவினிடத்தில் ஓடிப்போனான்; தாவீது தினந்தோறும் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

2சாமு 13:38. அப்சலோம் கேசூருக்கு ஓடிப்போய், அங்கே மூன்று வருஷம் இருந்தான்.

2சாமு 13:39. தாவீதுராஜா அம்னோன் செத்தபடியினால், அவனுக்காகத் துக்கித்து ஆறுதல் அடைந்தபோது அப்சலோமைப் பின் தொடரும் நினைவை விட்டுவிட்டான்.

அப்சலோம் செய்த விருந்துக்கு தாவீது போகவில்லை. அவர் தன்னுடைய அரண்மனையிலேயே இருந்துவிடுகிறார். தன்னுடைய குமாரர் எல்லோரையும் அந்த விருந்திற்கு அனுப்பினார். விருந்திலே அம்னோன் திராட்சரசம் குடித்து களித்திருக்கும் சமயத்திலே, அப்சலோமின் வேலைக்காரர் அம்னோனைக் கொன்றுபோடுகிறார்கள். ராஜகுமாரர் எல்லோரும் விருந்து நடைபெறும் ஸ்தலத்திலிருந்து தங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ள தப்பித்து ஓடிப்போகிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் தாவீது தன்னுடைய அரண்மனையிலிருக்கிறார். அப்போது தாவீதுக்கு ராஜகுமாரரைப்பற்றிய செய்தி வருகிறது. அதுவும் தவறான செய்தியாயிருக்கிறது. ராஜகுமாரர் எல்லோரும், விருந்துசாலையை விட்டு, தங்கள் கோவேறு கழுதையின்மேல் ஏறி அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் வழியில் இருக்கிறபோதே, அப்சலோம் ராஜகுமாரரையெல்லாம் அடித்துக் கொன்றுபோட்டான், அவர்களில் ஒருவரும் மீந்திருக்க விடவில்லை என்கிறதாய், தாவீதுக்கு தவறான செய்தி வருகிறது (2சாமு 13:30).

தாவீது இந்த தவறான செய்தியை கேட்டு மனம் கலங்குகிறார். அப்பொழுது ராஜா எழுந்திருந்து, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தரையிலே விழுந்துகிடக்கிறார்; தாவீதின் ஊழியக்காரர் எல்லாரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நிற்கிறார்கள் (2சாமு 13:31).

அப்போது தாவீதின் தமையனாகிய சிமியாவின் குமாரன் யோனதாப் என்பவன், தாவீதைப் பார்க்க வருகிறான். தாவீதுக்கு வந்த செய்தி தவறான செய்தி என்று அவருக்கு அறிவிக்கிறான். அப்சலோமின் விருந்தில் நடைபெற்ற உண்மை சம்பவத்தை, யோனதாப் தாவீதுக்கு அறிவிக்கிறான்.

யோனதாப் தாவீதிடம் வந்து: "ராஜகுமாரரான வாலிபரையெல்லாம் கொன்றுபோட்டார்கள் என்று என் ஆண்டவன் நினைக்கவேண்டாம்; அம்னோன்மாத்திரம் செத்துப்போனான்; அவன் தன் சகோதரியாகிய தாமாரைக் கற்பழித்த நாள்முதற்கொண்டு, அது அப்சலோமின் நெஞ்சில் இருந்தது. இப்போதும் ராஜகுமாரர்கள் எல்லாரும் செத்தார்கள் என்கிற பேச்சை ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய மனதிலே வைக்கவேண்டாம்; அம்னோன் ஒருவனே செத்தான் என்றான்; அப்சலோம் ஓடிப்போனான்" (2சாமு 13:32,33) என்று சொல்லுகிறான்.

அம்னோன் மாத்திரமே செத்துப்போனான் என்பதும், மற்ற ராஜகுமாரரெல்லாம் சாகவில்லை என்பதும் தாவீதுக்கு ஓரளவு ஆறுதலான செய்தியாகயிருக்கும். யோனதாப் தாவீதிடம் அப்சலோமைப்பற்றிச் சொல்லுகிறான். தன்னுடைய சகோதரியாகிய தாமாரை, அம்னோன் கற்பழித்ததினிமித்தமாக, அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டான் என்னும் காரணத்தையும் யோனதாப் சொல்லுகிறான்.

அம்னோனுடைய மரணத்தில் தனக்கு எந்தவிதமான பங்குமில்லை என்பதுபோலவும், தான் குற்றமற்றவன் என்பதுபோலவும் யோனதாப் தாவீதுக்கு சொல்லுகிறான். யோனதாப் தான் அம்னோனுக்கு தாமாரைக் கெடுத்துப்போடும் துன்மார்க்கமான ஆலோசனையை சொன்னவன். அம்னோன் வழிதவறிபோனபோது, யோனதாப் அவனுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லி அவனைத் திருத்தியிருக்கவேண்டும். ஆனால் யோனதாபோ அம்னோனுக்கு தீயஆலோசனைகளையும், அதை செயல்படுத்தும் திட்டங்களையும் சொல்லிக்கொடுத்தான். இப்போதோ யோனதாப், தாவீதுக்கு முன்பாக, தன்னை குற்றமில்லாதவன்போல காண்பித்துக்கொள்கிறான்.

யோனதாப் அப்சலோமுக்கு நல்ல புத்திமதிகளை சொல்லி, அவன் அம்னோனைக் கொன்றுபோடாதவாறு, அவனைத் தடுத்திருக்க முடியும். ஆனால் யோனதாபோ அப்சலோமுக்கும் நல்ல ஆலோசனை ஒன்றும் சொல்லவில்லை.

யோனதாப் தாவீது ராஜாவிடம் அம்னோனின் மரணத்தைப்பற்றி சொல்லும்போது, ராஜகுமாரர்கள் எல்லோரும் அரண்மனைக்கு தப்பித்து வருகிறார்கள். ஜாமக்காரச் சேவகன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, இதோ, அநேகம் ஜனங்கள் தனக்குப் பின்னாலே மலை ஓரமாய் வருகிறதைக் காண்கிறான். அப்பொழுது யோனதாப் தாவீது ராஜாவைப் பார்த்து: "இதோ, ராஜகுமாரர் வருகிறார்கள்; உமது அடியேன் சொன்னபடியே ஆயிற்று" (2சாமு 13:34,35) என்று சொல்லுகிறான்.

அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்ட செய்தியை, ராஜகுமாரர்களும் தாவீதுக்கு சொல்லுகிறார்கள். தன்னுடைய சகோதரனைக் கொன்றுபோட்ட குற்றத்திற்காக, தாவீது ராஜா அப்சலோமை அரண்மனைக்கு அழைத்து வந்து விசாரிக்கவேண்டும். ஆனால் அப்சலோமோ அம்னோனைக் கொன்றுபோட்டு, தப்பித்து ஓடிப்போகிறான். அப்சலோம் அம்மியூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கேசூரின் ராஜாவினிடத்தில் ஓடிப்போகிறான்.

ராஜகுமாரர்கள் எல்லோரும் அரண்மனைக்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் தாவீது ராஜாவிடம் வந்து, சத்தமிட்டு அழுகிறார்கள். தாவீது ராஜாவும் அவருடைய எல்லா ஊழியக்காரரும் மிகவும் புலம்பி அழுகிறார்கள் (2சாமு 13:36).

இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும் அரண்மனையில் ஏற்பட்ட துக்கமான சம்பவத்திற்காக புலம்பி அழுகிறார்கள். காரணமில்லாமல் துக்கம் வரவில்லை. தாவீதினுடைய பாவத்தினிமித்தமாய், அவருடைய வீட்டிலே தேவனுடைய நியாயத்தீர்ப்பு, வந்திருக்கிறது. பட்டயம் தாவீதின் வீட்டிலே பிரவேசித்திருக்கிறது.

அப்சலோம் தாவீதைப் பார்க்க பயப்படுகிறான். அம்னோனைக் கொன்று போட்ட குற்றத்திற்காக, தாவீது தனக்கு கடுமையான தண்டனை கொடுப்பார் என்று அப்சலோம் பயப்படுகிறான். அப்சலோமுக்கு இஸ்ரவேல் தேசத்தில் ஒருவரும் அடைக்கலம் கொடுக்கமாட்டார்கள். இஸ்ரவேல் தேசத்தில் அடைக்கலப் பட்டணங்கள் இருக்கிறது. அப்சலோமோ இஸ்ரவேலிலுள்ள அடைக்கலப்பட்டணத்திற்கு ஓடிப்போகாமல், அம்மியூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கேசூரின் ராஜாவினிடத்தில் ஓடிப்போகிறான். அப்சலோம் தல்மாயின் பேரன். அப்சலோமுடைய தாயாரின் உற்றார் உறவினர்கள் கேசூரிலே இருக்கிறார்கள். அப்சலோம் கேசூருக்கு ஓடிப்போய், அங்கே மூன்று வருஷம் இருக்கிறான் (2சாமு 13:38).

கேசூரின் ராஜாவாகிய தல்மாய் அப்சலோமின் தாத்தா. அப்சலோம், தன்னுடைய தாத்தாவின் பாதுகாப்பில், கேசூரிலே, மூன்று வருஷமாய்த் தங்கியிருக்கிறான். இந்த மூன்று வருஷகாலத்தில், அப்சலோம் இஸ்ரவேல் தேசத்திற்கும் போகவில்லை, தன்னுடைய தகப்பனாராகிய தாவீதையும் பார்க்கவில்லை.

தாவீதுராஜா அம்னோன் செத்தபடியினால், அவனுக்காகத் துக்கிக்கிறார். அநேகநாட்கள் சென்றபின்பு, அம்னோன் நிமித்தமாய் தாவீதுக்கு உண்டான துக்கம் குறைகிறது. தாவீது ஆறுதல் அடைகிறார். அவர் அப்சலோமைப் பின் தொடரும் நினைவை விட்டுவிடுகிறார் (2சாமு 13:39). அப்சலோமை தண்டிக்கவேண்டும் என்னும் எண்ணமும் தாவீதின் மனதிலே குறைந்துபோயிற்று. தாவீதின் துக்கமும் குறைந்துபோயிற்று.

14 அதிகாரம்

அப்சலோம் தாவீதின் அரண்மனையைவிட்டு கேசூருக்கு ஒடிப்போய்விடுகிறான். தாவீது ராஜாவின் பாதுகாப்பும், பராமரிப்பும் அப்சலோமுக்கு கிடைக்கவில்லை. தாவீதும் அப்சலோமும் மறுபடியுமாக சேர்ந்துகொள்ளும் சம்பவம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது அப்சலோமை தண்டிக்கவில்லை.

தாவீதுக்கும் அப்சலோமுக்கும் இருக்கும் பகையை நீக்குவதற்கு யோவாப் முயற்சிபண்ணுகிறான். யோவாப் தன்னுடைய முயற்சியில் தெக்கோவா ஊராளான ஒரு ஸ்திரீயை பயன்படுத்துகிறான். இந்த ஸ்திரீ தாவீதிடம் தன்னுடைய வழக்கை சொல்லுவதுபோல சொல்லி, தாவீது அப்சலோமை தன்னிடத்தில் திரும்பவும் அழைத்துக்கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறாள் *(2சாமு 14:1-20).*

தாவீது அப்சலோமை எருசலேமுக்கு வரவழைக்கிறார். ஆனாலும் அப்சலோம் தன்னுடைய முகத்தைப் பார்க்கக்கூடாது என்று தாவீது தடைபண்ணிவிடுகிறார் *(2சாமு 14:21-23).* யோவாப் தாவீது ராஜாவினிடத்தில் அப்சலோமுக்காக பரிந்து பேசுகிறான். தாவீது அப்சலோமை தன்னிடத்தில் வரவழைக்கிறார் *(2சாமு 14:25-33).*

தெக்கோவா ஊராளான ஸ்திரீ 2சாமு 14:1-20

2சாமு 14:1. ராஜாவின் இருதயம் அப்சலோமின் மேல் இன்னும் தாங்கலாயிருக்கிறதைச் செருயாவின் குமாரன் யோவாப் கண்டு,

2சாமு 14:2. அவன் தெக்கோவாவிலிருக்கிற புத்தியுள்ள ஒரு ஸ்திரீயை அழைத்து: நீ இழவு கொண்டாடுகிறவளைப்போல, துக்கவஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, எண்ணெய் பூசிக்கொள்ளாமல், இறந்துபோனவனுக்காக நெடுநாள் துக்கிக்கிற ஸ்திரீயைப் போலக் காண்பித்து,

2சாமு 14:3. ராஜாவினிடத்தில் போய், அவரை நோக்கி: இன்ன இன்ன பிரகாரமாகச் சொல் என்று அவள் சொல்லவேண்டிய வார்த்தைகளை யோவாப் அவள் வாயிலே போட்டான்.

2சாமு 14:4. அப்படியே தெக்கோவா ஊராளான அந்த ஸ்திரீ ராஜாவோடே பேசப்போய், தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: ராஜாவே, இரட்சியும் என்றாள்.

2சாமு 14:5. ராஜா அவளைப் பார்த்து: உனக்கு என்ன வேண்டும் என்றதற்கு, அவள்: நான் விதவையானவள், என் புருஷன் செத்துப்போனான்.

2சாமு 14:6. உமது அடியாளுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; அவர்கள் இருவரும் வெளியிலே சண்டைபண்ணி, அவர்களை விலக்க ஒருவரும் இல்லாதபடியினால், ஒருவன் மற்றவனை அடித்துக் கொன்றுபோட்டான்.

2சாமு 14:7. வம்சத்தார் எல்லாரும் உம்முடைய அடியாளுக்கு விரோதமாய் எழும்பி, தன் சகோதரனைக் கொன்றுபோட்டவனை ஒப்பி; அவன் கொன்ற அவன் சகோதரனுடைய பிராணனுக்காக நாங்கள் அவனைக் கொன்றுபோடுவோம்; சுதந்தரவாளனாயினும் அவனையும் அழித்துப்போடுவோம் என்கிறார்கள். இப்படி என் புருஷனுக்குப் பேரும் நீதியும் பூமியின்மேல் வைக்கப்படாதபடிக்கு, எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற பொறியையும் அவித்துப் போட மனதாயிருக்கிறார்கள் என்றாள்.

2சாமு 14:8. ராஜா அந்த ஸ்திரீயைப் பார்த்து: நீ உன் வீட்டுக்குப் போ, உன் காரியத்தைக் குறித்து உத்தரவு கொடுப்பேன் என்றாள்.

2சாமு 14:9. பின்னும் அந்தக் தெக்கோவாவூர் ஸ்திரீ ராஜாவைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவின்மேலும் அவர் சிங்காசனத்தின் மேலும் குற்றமில்லாதபடிக்கு, அந்தப் பழி என்மேலும் என் தகப்பன் வீட்டின்மேலும் சுமரக்கடவது என்றாள்.

2சாமு 14:10. அதற்கு ராஜா: உனக்கு விரோதமாகப் பேசுகிறவனை என்னிடத்தில் கொண்டுவா, அப்பொழுது அவன் இனி உன்னைத் தொடாதிருப்பான் என்றான்.

2சாமு 14:11. பின்னும் அவள்: இரத்தப்பழி வாங்குகிறவர்கள் அழிம்புசெய்து, என் குமாரனை அதம்பண்ணப் பெருகிப்போகாதபடிக்கு, ராஜாவானவர் தம்முடைய தேவனாகிய கர்த்தரை நினைப்பாராக என்றாள். அதற்கு ராஜா: உன் குமாரனுடைய மயிரில் ஒன்றாவது தரையில் விழுவதில்லை என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 14:12. அப்பொழுது அந்த ஸ்திரீ: ராஜாவாகிய என் ஆண்டவனோடே உமது அடியாள் ஒரு வார்த்தைசொல்ல உத்தரவாக வேண்டும் என்றாள். அவன்: சொல்லு என்றான்.

2சாமு 14:13. அப்பொழுது அந்த ஸ்திரீ: பின்னை ஏன் தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாய் இப்படிப்பட்ட நினைவை நீர் கொண்டிருக்கிறீர், துரத்துண்ட தம்முடையவனை ராஜா திரும்ப அழைக்காததினாலே, ராஜா இப்பொழுது சொன்ன வார்த்தையினால் குற்றமுள்ளவரைப்போல் இருக்கிறார்.

2சாமு 14:14. நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக்கூடாதபடிக்கு, தரையிலே சுவறுகிற தண்ணீரைப்போல் இருக்கிறோம்; தேவன் ஜீவனை எடுத்துக்கொள்ளாமல், துரத்துண்டவன் முற்றிலும் தம்மை விட்டு விலக்கப்படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார்.

2சாமு 14:15. இப்போதும் நான் என் ஆண்டவனாகிய ராஜாவோடே இந்த வார்த்தையைப் பேசவந்த முகாந்தரம் என்னவென்றால்: ஜனங்கள் எனக்குப் பயமுண்டாக்கினதினால், நான் ராஜாவோடே பேசவந்தேன்; ஒருவேளை ராஜா தமது அடியாளுடைய வார்த்தையின்படி செய்வார் என்று உமது அடியாளாகிய நான் நினைத்ததினாலும் வந்தேனே ஒழிய வேறில்லை.

2சாமு 14:16. என்னையும் என் குமாரனையும் ஏகமாய் தேவனுடைய சுதந்தரத்திற்குப் புறம்பாக்கி, அழிக்க நினைக்கிற மனுஷனுடைய கைக்குத் தமது அடியாளை நீங்கலாக்கிவிடும் படிக்கு ராஜா கேட்பார்.

2சாமு 14:17. ராஜாவாகிய என் ஆண்டவனுடைய வார்த்தை எனக்கு ஆறுதலாயிருக்கும் என்று உமது அடியாளாகிய நான் எண்ணினேன்; நன்மையையும் தீமையையும் கேட்கும்படி, ராஜாவாகிய என் ஆண்டவன் தேவனுடைய தூதனைப்போல இருக்கிறார்; இதற்காக உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்றாள்.

2சாமு 14:18. அப்பொழுது ராஜா அந்த ஸ்திரீக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னிடத்தில் கேட்கும் காரியத்தை நீ எனக்கு மறைக்கவேண்டாம் என்றான். அதற்கு அந்த ஸ்திரீ, ராஜாவாகிய என் ஆண்டவர் சொல்வாராக என்றாள்.

2சாமு 14:19. அப்பொழுது ராஜா: இதிலெல்லாம் யோவாப் உனக்கு உட்கையாய் இருக்கவில்லையா என்று கேட்டான். அதற்கு ஸ்திரீ பிரதியுத்தரமாக, ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னதற்கெல்லாம் வலது பக்கத்திலாவது இடதுபக்கத்திலாவது விலகுவதற்கு ஒருவராலும் கூடாது என்று ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; உமது அடியானாகிய யோவாப் தான் இதை எனக்குக் கற்பித்து, அவனே இந்த எல்லா வார்த்தைகளையும் உமது அடியாளின் வாயிலே போட்டான்.

2சாமு 14:20. நான் இந்தக் காரியத்தை உபமானமாய்ப் பேசுகிறதற்கு உமது அடியானாகிய யோவாப் அதற்குக் காரணமாயிருந்தான்; ஆனாலும் தேசத்தில் நடக்கிறதையெல்லாம் அறிய, என் ஆண்டவனுடைய ஞானம் தேவதூதனுடைய ஞானத்தைப் போல் இருக்கிறது என்றாள்.

அப்சலோம் தாவீதின் அரண்மனையைவிட்டு தப்பித்து கேசூரிலே இருக்கிறான். அவனை மறுபடியும் தாவீதின் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று யோவாப் விரும்புகிறான். யோவாப் தாவீதின் சேனைக்கு தலைவன்.

அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டதினால் தாவீதின் அரண்மனையில் சில பிரச்சனைகள் உண்டாயிற்று. அம்னோன் செத்தபடியினால், தாவீது அவனுக்காக துக்கித்துக்கொண்டிருக்கிறார். அம்னோன் தாமாரைக் கற்பழித்தான். தாவீதோ அம்னோனை நியாயம் விசாரிக்கவில்லை. தாமார் அப்சலோமின் சகோதரி. தன்னுடைய சகோதரியை கற்பழித்ததற்காக, அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடுகிறான். தாவீது அப்சலோமையும் நியாயம் விசாரிக்கவில்லை.

அம்னோன் செத்துப்போனதினால் தாவீதின் இருதயம் வேதனையடைந்திருக்கிறது. அவர் ராஜாசன காரியங்களை சரியாக செய்யாமல், அம்னோனுக்காக துக்கித்துக் கொண்டிருக்கிறார். அம்னோன் செத்து இரண்டு வருஷமாயிற்று.

ராஜாவின் இருதயம் அப்சலோமின் மேல் இன்னும் தாங்கலாயிருக்கிறதைச் செருயாவின் குமாரன் யோவாப் காண்கிறான் (2சாமு 14:1).

தாவீது மறுபடியுமாய் தன்னுடைய சிங்காசனத்தில் அமர்ந்து, இஸ்ரவேலை ஆளுகை செய்யவேண்டும். கேசூருக்கு ஓடிப்போன அப்சலோமும் தாவீதினிடத்தில் திரும்பி வரவேண்டும். யோவாப் இதற்காக திட்டமிட்டு செயல்படுகிறான்.

யோவாப் அப்சலோமுக்கு சிநேகிதன். அப்சலோம் எருசலேமுக்கு திரும்பி வந்துவிட்டால், தாவீதுக்கு அவன்மீதுள்ள கோபம் குறைந்துவிடும். தாவீது எப்படியாவது தன்னுடைய குமாரன் அப்சலோமோடு ஒப்புரவாகிவிடுவார் என்று யோவாப் எதிர்பார்க்கிறான். தாவீதும் அப்சலோமும் சிநேகமாயிருக்கவேண்டும். தாவீது அப்சலோமின்மீது கோபப்படக்கூடாது. இரண்டுபேருக்கும் சமாதானத்தை உண்டுபண்ணவேண்டுமென்று யோவாப் முயற்சிபண்ணுகிறான்.

யோவாப் தாவீதின் படைத்தளபதியாயிருக்கிறான். இஸ்ரவேல் தேசத்தின் நன்மையிலே யோவாபுக்கும் அக்கரையிருக்கிறது. அரண்மனையின் நிர்வாகம் சீராக நடைபெறவேண்டுமென்று யோவாப் விரும்புகிறான்.

அப்சலோம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகவும் பிரியமானவன். ஆனால் அப்சலோம் இப்போது தாவீதுக்கு பயந்து கேசூருக்கு ஓடிப்போய்விட்டான். அப்சலோம் கேசூரிலிருக்கும்போது, தாவீது செத்துப்போய்விட்டால், இஸ்ரவேல் தேசத்திலே உள்நாட்டு குழப்பம் வந்துவிடும். தேசம் இரண்டாகப் பிரிந்துவிடும். இஸ்ரவேல் ஜனத்தாரில் ஒரு சிலர் தாவீதையும், வேறு சிலர் அப்சலோமையும் நேசிப்பார்கள். இதனால் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே குழப்பமும் கலவரமும் உண்டாகும்.

யோவாப் ஏற்கெனவே அப்னேரைக் கொன்றுபோட்டவன். ஒருவனைக் கொல்லுவதினால் வரக்கூடிய பழிகளைப்பற்றி யோவாபுக்கு நன்றாய்த் தெரியும். அப்னேரைக் கொன்றதினால் யோவாபுக்கு கெட்ட பெயர் உண்டாயிற்று. இதனால் யோவாப் மிகவும் பாதிக்கப்பட்டான். தன்னைப்போலவே அப்சலோமும் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை நினைத்து, யோவாப் அவனுக்காக பரிதாபப்படுகிறான்.

யோவாப் அப்லோமுக்கு தயவு காண்பிக்கிறான். கேசூரிலே இருக்கிற அப்சலோமை மறுபடியுமாக எருசலேமுக்கு அழைத்து வரவேண்டுமென்று யோவாப் முயற்சிபண்ணுகிறான். தாவீதுக்கும் அப்சலோமுக்கும் இடையே சமாதானத்தை உண்டுபண்ணவேண்டுமென்று விரும்புகிறான்.

தாவீது பத்சேபாளோடு சயனித்து பாவம் செய்தார். நாத்தான் கர்த்தருடைய வார்த்தையை தாவீதுக்கு அறிவிக்க வந்தார். நாத்தான் ஆரம்பத்திலேயே தாவீதின் பாவத்தை வெளிப்படையாக சொல்லாமல், ஒரு உவமையின் மூலமாக தாவீதின் பாவத்தை உணர்த்தினார். நாத்தான் தன்னைப்பற்றிப் பேசுகிறார் என்று தெரியாமலேயே தாவீது தன்னுடைய தீர்ப்பைச் சொன்னார். தாவீதின் இருதயத்தில் நீதிக்கும் நியாயத்திற்கும், சத்தியத்திற்கும் முக்கியத்துவம் இருக்கிறது என்பது யோவாபுக்கு தெரிந்திருக்கிறது.

யோவாப் தாவீதோடு எவ்வாறு பேசலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். நாத்தானைப்போல தாவீதுக்கு ஒரு உவமையை முதலாவதாக சொல்லவேண்டும் என்றும், அதன்பின்பு அவருக்கு உண்மை சம்பவத்தை சொல்லவேண்டும் என்றும் யோவாப் திட்டமிடுகிறான். யோவாப் தெக்கோவா ஊரிலிருக்கிற ஒரு புத்தியுள்ள ஸ்திரீயை தன்னுடைய திட்டத்திலே பயன்படுத்துகிறான்.

தெக்கோவா ஊராளான ஸ்திரீயின் பெயர் என்ன என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. இவள் ஒரு புத்தியுள்ள ஸ்திரீ. சாதுரியமாகப் பேசக்கூடியவள். எதையும் சீக்கிரத்தில் புரிந்துகொள்வாள். சிந்தித்து செயல்படுவாள். அவள் புத்தி கூர்மையுள்ளவள். எப்படிப்பட்ட வார்த்தைகளை எப்போது பேசவேண்டும் என்பது இந்த ஸ்திரீக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. யோவாப் இந்த புத்தியுள்ள ஸ்திரீயை தன்னுடைய திட்டத்திற்கு பயன்படுத்துகிறான்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ, தாவீதின் சமுகத்திலே எப்படிப்பட்ட கோலத்தோடு போகவேண்டும் என்றும், அவள் தாவீதினிடத்தில் என்னென்ன பிரகாரமாக பேசவேண்டும் என்றும் யோவாப் அவளுக்கு சொல்லிக்கொடுக்கிறான்.

யோவாப் தெக்கோவாவிலிருக்கிற புத்தியுள்ள ஒரு ஸ்திரீயை அழைத்து: "நீ இழவு கொண்டாடுகிறவளைப்போல, துக்கவஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, எண்ணெய் பூசிக்கொள்ளாமல், இறந்துபோனவனுக்காக நெடுநாள் துக்கிக்கிற ஸ்திரீயைப் போலக் காண்பித்து, ராஜாவினிடத்தில் போய், அவரை நோக்கி: இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்" *(2சாமு 14:2,3)* என்று அவள் சொல்லவேண்டிய வார்த்தைகளை யோவாப் அவள் வாயிலே போடுகிறான்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ, ஒரு விதவையைப்போல, தாவீதுக்கு தன்னைக் காண்பிக்கவேண்டும். இறந்துபோன தன் புருஷனுக்காக தான் நெடுநாள் துக்கிக்கிற ஸ்திரீயைப்போல அவள் தன்னை காண்பிக்கவேண்டும். தாவீது இரக்ககுணமுள்ளவர். திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் ஆதரவு காண்பிக்கிறவர். தெக்கோவா ஸ்திரீ தன்னை ஒரு விதவையைப்போல காண்பித்தால், அவள் ராஜாவின் சமுகத்திற்கு முன்பாக எளிதாகப் போகலாம். தாவீது ராஜாவும் விதவைகளுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறவர்.

அப்படியே தெக்கோவா ஊராளான அந்த ஸ்திரீ ராஜாவோடே பேசப்போய், தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: "ராஜாவே, இரட்சியும்" என்று சொல்லுகிறாள். ராஜா அவளைப் பார்த்து: "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்கிறார். அதற்கு அவள்: "நான் விதவையானவள், என் புருஷன் சென்றுபோனான்" *(2சாமு 14:4,5)* என்று சொல்லுகிறாள். "சென்றுபோனான்" என்னும் வார்த்தைக்கு "செத்துப்போனான்" என்று அர்த்தம்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதிடம் தன்னுடைய குடும்பத்தைப்பற்றிச் சொல்லுகிறாள். அவளுக்கு இரண்டு குமாரர் இருப்பதாகவும், ஒருவன் மற்றவனைக் கொன்றுபோட்டதாகவும், ஊரிலுள்ள ஜனங்கள் உயிரோடிருக்கிறவனை கொன்றுபோட முயற்சி பண்ணுகிறார்கள் என்றும் அந்த ஸ்திரீ ராஜாவிடம் சொல்லுகிறாள்.

தெக்கோவா ஸ்திரீ தாவீது ராஜாவிடம், "உமது அடியாளுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; அவர்கள் இருவரும் வெளியிலே சண்டைபண்ணி, அவர்களை விலக்க ஒருவரும் இல்லாதபடியினால், ஒருவன் மற்றவனை அடித்துக் கொன்றுபோட்டான். வம்சத்தார் எல்லாரும் உம்முடைய அடியாளுக்கு விரோதமாய் எழும்பி, தன் சகோதரனைக் கொன்றுபோட்டவனை ஒப்பி; அவன் கொன்ற அவன் சகோரனுடைய பிராணனுக்காக நாங்கள் அவனைக் கொன்றுபோடுவோம்; சுதந்தரவாளனாயினும் அவனையும் அழித்துப்போடுவோம் என்கிறார்கள். இப்படி என் புருஷனுக்குப் பேரும் நீதியும் பூமியின்மேல் வைக்கப்படாதபடிக்கு, எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற பொறியையும் அவித்துப் போட மனதாயிருக்கிறார்கள்" (2சாமு 14:6,7) என்று சொல்லுகிறாள்.

தெக்கோவா ஊராளான ஸ்திரீயின் புருஷன் செத்துப்போனான். அவளுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களே அவளுக்கு ஆதரவாயிருந்தார்கள். ஆனால் அவளுடைய இரண்டு குமாரர்களுக்கும் ஏதோ ஒரு காரணத்திற்காக சண்டை உண்டாயிற்று. அவர்களுடைய சண்டையை விலக்கிவிட ஒருவரும் முன்வரவில்லை. இதனால் அவர்களுக்குள் சண்டை முற்றிப்போயிற்று. அவளுடைய குமாரரில் ஒருவன் மற்றவனை அடித்து கொன்றுபோட்டான்.

தெக்கோவா ஊராளான ஸ்திரீக்கு மிகப்பெரிய பிரச்சனை உண்டாயிற்று. அவளோ ஒரு விதவை. அவளுக்கு ஆதரவாயிருந்த இரண்டு குமாரரில் ஒருவன் செத்துப்போனான். அவளுடைய குமாரரில் ஒருவனே, மற்ற குமாரனை கொன்றுபோட்டான். தன் சகோதனை அடித்து கொன்றவன், இப்போது தன் தாயாருக்கு ஆதரவாயிருக்கிறான். கொலைசெய்வது பாவம். தெக்கோவா ஊர் ஜனங்கள், தன் சகோதரனைக் கொன்றுபோட்ட இவனை, நியாயம் விசாரித்து கொன்றுபோட முயற்சி பண்ணுகிறார்கள்.

இந்த விதவையின் இரண்டு குமாரரில் ஒருவன் மாத்திரமே இப்போது உயிரோடிருக்கிறான். அவனே அவளுக்கு ஆதரவாயிருக்கிறான். தெக்கோவா ஊர் ஜனங்களோ, உயிரோடிருக்கிற அவனையும் கொல்லவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஊர்ஜனங்கள் நியாயப்பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவனும் செத்துப்போனால், அவனுடைய தாயாருக்கு அதன்பின்பு ஒரு ஆதரவும் இருக்காது. விதவையின் சுதந்தரமெல்லாம் தங்களுக்கு வந்துவிடும் என்று தெக்கோவா ஊரார் நினைக்கிறார்கள். ஆகையினால் விதவையின் மகன் "சுதந்தரவாளனாயினும் அவனையும் அழித்துப்போடுவோம்" என்று சொல்லுகிறார்கள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் இரண்டு குமாரரும் செத்துப்போனால், அவளுடைய புருஷனுக்கு பேரும் நீதியும் பூமியின் மேல் இருக்காது. அவளுக்கு நீதியாயிருக்கிற பொறியையும், அவளுடைய ஊரார் அவித்துப்போட மனதாயிருக்கிறார்கள். இப்போது உயிரோடிருக்கிற குமாரனும் செத்துப்போனால், அவனுடைய விதவை தாய்க்கு இனிமேல் ஆறுதலோ, ஆதரவோ இருக்காது. அவனைக் கொன்றுபோட முயற்சி பண்ணுவதன் மூலம், தெக்கோவா ஊரார், அவளுக்கு இன்னும் மீதியாயிருக்கிற பொறியையும் அவித்துப்போட மனதாயிருக்கிறார்கள். அந்த ஸ்திரீயின் வயதான காலத்திலே, உயிரோடிருக்கிற அவளுடைய குமாரன் மாத்திரமே அவளுக்கு ஆதரவாயிருப்பான். அவனும் செத்துப்போனால், அவளுக்கு வேறு எந்த ஆதரவும் இல்லை.

தெக்கோவா ஊராளான இந்த ஸ்திரீயின் இரண்டு குமாரரும் செத்துப்போனால், ஏற்கெனவே செத்துப்போன அவளுடைய புருஷனைப்பற்றிய பேரும் நீதியும் அழிந்துபோகும். அந்த மனுஷனைப்பற்றி இனிமேல் யாரும் நினைத்துப்பார்க்க மாட்டார்கள். பிள்ளைகளும் செத்துப்போனால், பெற்றோரைப்பற்றிய நினைவு யாருடைய மனதிலும் இருக்காது.

தாவீது தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ சொல்லுகிற சம்பவத்தைக் கவனித்துக் கேட்கிறார். அவளுடைய பிரச்சனைக்கு செவிகொடுக்கிறார். ராஜா அந்த ஸ்திரீயைப் பார்த்து: "நீ உன் வீட்டுக்குப் போ, உன் காரியத்தைக் குறித்து உத்தரவு கொடுப்பேன்" *(2சாமு 14:8)* என்று சொல்லுகிறார்.

தாவீது ராஜாவின் உத்தரவை எதிர்பார்த்து தெக்கோவா ஊராளான ஸ்திரீ அவருடைய சமுகத்திற்கு முன்பாக வரவில்லை. அவள் யோவாபின் ஆலோசனை பிரகாரம் அங்கே வந்திருக்கிறாள். தாவீது "உன் காரியத்தைக் குறித்து உத்தரவு கொடுப்பேன்" என்று சொல்லுகிறார். ஆனால் அந்த ஸ்திரீயோ, தனக்கு இப்போதே உத்தரவு கொடுக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறாள். தாவீது அந்த ஸ்திரீயைப்பார்த்து, "நீ உன் வீட்டிற்குப்போ" என்று சொல்லுகிறார். ஆனால் அந்த ஸ்திரீக்கு, தாவீதின் உத்தரவைப் பெற்றுக்கொள்ளாமல், தன்னுடைய வீட்டிற்குப்போக மனதில்லை.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீது ராஜாவிடம் தன்னுடைய பிரச்சனையை இன்னும் கொஞ்சம் விரிவாக எடுத்துச் சொல்லுகிறாள். பின்னும் அந்தக் தெக்கோவாவூர் ஸ்திரீ ராஜாவைப் பார்த்து: "ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவின்மேலும் அவர் சிங்காசனத்தின்மேலும் குற்றமில்லாதபடிக்கு, அந்தப் பழி என்மேலும் என் தகப்பன் வீட்டின்மேலும் சுமரக்கடவது" *(2சாமு 14:9)* என்று சொல்லுகிறாள்.

தாவீது ராஜா தனக்கு உடனே உத்தரவு கொடுக்கவேண்டும் என்றும், அதில் அவர் காலதாமதம் பண்ணக்கூடாது என்றும் அந்த ஸ்திரீ ராஜாவிடம் தொடர்ந்து பேசுகிறாள். தாவீது ராஜாவால் அந்த ஸ்திரீக்கு உத்தரவு சொல்லாமல் அமைதியாயிருக்க முடியவில்லை. அப்போது தாவீது ராஜா அந்த ஸ்திரீயிடம், "உனக்கு விரோதமாகப் பேசுகிறவனை என்னிடத்தில் கொண்டுவா, அப்பொழுது அவன் இனி உன்னைத் தொடாதிருப்பான்" *(2சாமு 14:10)* என்று உத்தரவு சொல்லுகிறார்.

தாவீது அந்த ஸ்திரீயை பாதுகாப்பதாக உத்தரவு கொடுக்கிறார். ஆனால் ராஜாவின் உத்தரவில் அந்த ஸ்திரீக்கு திருப்தி உண்டாகவில்லை. தன்னுடைய குமாரன் பாதுகாக்கப்படவேண்டும் என்றும், தன்னுடைய ஊரார் அவனைக் கொன்றுபோடக்கூடாது என்றும், அவன் உயிரோடிருந்து தன்னைப் பாதுகாத்து பராமரிக்கவேண்டும் என்றும், தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதிடம் விண்ணப்பம்பண்ணுகிறாள். தங்கள் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு கிடைக்கும் வரையிலும், பெற்றோர் அமைதியாயிருக்க மாட்டார்கள். தங்கள் பிள்ளைகள் இம்மையிலும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்றும், மறுமையில் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்றும் பெற்றோர் விரும்புவார்கள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீது ராஜாவிடத்தில், "இரத்தப்பழி வாங்குகிறவர்கள் அழிம்புசெய்து, என் குமாரனை அதம்பண்ணப் பெருகிப்போகாதபடிக்கு, ராஜாவானவர் தம்முடைய தேவனாகிய கர்த்தரை நினைப்பாராக" *(2சாமு 14:11)* என்று விண்ணப்பம்பண்ணுகிறாள். தன்னுடைய குமாரன் செத்துப்போனால், தன்னுடைய பாதுகாப்பு, பராமரிப்பு, சந்தோஷம், சமாதானம் எல்லாமே செத்துப்போகும் என்று அந்த ஸ்திரீ சொல்லுகிறாள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதினிடத்தில் தன்னுடைய வழக்கை சொல்லும்போது, "ராஜாவானவர் தம்முடைய தேவனாகிய கர்த்தரை நினைப்பாராக" என்று சொல்லுகிறாள். காயீன் ஆபேலைக் கொன்றுபோட்டான். கர்த்தரோ காயீனைப் பழிவாங்குவதற்காக, அவனைக் கொன்றுபோடவில்லை. காயீனின் பாவத்தை மன்னித்து அவனை உயிரோடே விட்டுவிட்டார்.

தாவீது உரியாவின் இரத்தத்தை சிந்தி பாவம் செய்தார். கர்த்தரோ உரியாவின் இரத்தத்தை சிந்தின தாவீதின் ராஜாவின் பாவத்தையும் மன்னித்தார். தாவீது கர்த்தரிடத்திலிருந்து கிருபையையும் இரக்கத்தையும் பெற்றிருக்கிறார். ஆகையினால் அவர் மற்றவர்களுக்கு கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கவேண்டும். இரக்கம் பெற்றவர்கள் இரக்கம் காண்பிக்கவேண்டும்.

தன்னுடைய குமாரனின் பாவத்தை தாவீது ராஜா மன்னிக்கவேண்டுமென்று தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ, அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறாள். அதற்கு தாவீது ராஜா "உன் குமாரனுடைய மயிரில் ஒன்றாவது தரையில் விழுவதில்லை என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (2சாமு 14:11) என்று அந்த ஸ்திரீக்கு உத்தரவு சொல்லுகிறார்.

தாவீது இங்கு சொல்லும் உத்தரவின் மூலமாக, தன்னுடைய சகோதனை கொலை செய்த ஒருவனை மன்னிக்கிறார். கொலைகாரனுக்கு பாதுகாப்பு கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அடைக்கலப்பட்டணம் அந்தக் கொலைகாரனுக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை. ஆனாலும் தாவீது, கொலைகாரனுக்கு பாதுகாப்பு கொடுக்கிறார். "அவனுடைய தலைமயிரில் ஒன்றாவது தரையில் விழுவதில்லை" என்று தாவீது கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறார்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் குமாரரில் ஒருவன், தன்னுடைய சகோதரனைக் கொன்றுபோட்டான். இதற்கு முன்பு அவர்கள் இருவருக்கும் பகையிருந்ததில்லை. அவர்கள் இருவரும் ஏதோ ஒரு காரியத்திற்காக வெளியிலே சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சண்டையை விலக்கிவிட ஒருவரும் முன்வரவில்லை. ஆகையினால் சகோதரரில் ஒருவன் உணர்ச்சி வசப்பட்டு, அதிகமாய்க் கோபப்பட்டு தன்னுடைய மற்ற சகோதரனை அடித்து கொன்றுபோட்டான். திடீரென்று கோபப்பட்டு கொலை செய்துவிட்டான். தாவீதும் அவனுடைய கொலை குற்றத்தை மன்னிக்கிறார். கொலை செய்தவனை பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

தாவீது தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் குமாரனை பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அந்த ஸ்திரீ புத்தியுள்ளவள். தாவீது அவருடைய குமாரனாகிய அப்சலோமின்மீது கோபமாயிருக்கிறார். தன்னுடைய குமாரனுக்கு ஆதரவாகச் சொன்ன வார்த்தைகளை, தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்கு ஆதரவாகப் பயன்படுத்த விரும்புகிறாள். அவள் சாதுரியமான வார்த்தைகளை நயமாய்ப் பேசக்கூடியவள். சூழ்நிலைகளுக்கு தக்கபடி அவள் ஞானமுள்ள வார்த்தைகளைப் பேசுவாள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ எந்த நோக்கத்திற்காக தாவீதைப் பார்க்க வந்தாளோ, அந்த நோக்கம்நிறைவேறுவதற்கு சூழ்நிலைகள் சாதகமாயிருக்கிறது. அவள் இந்த சூழ்நிலைகளை பயன்படுத்தி தன்னுடைய வேஷத்தைக் கலைக்கிறாள். தான் ராஜாவைப் பார்க்க வந்ததன் நோக்கத்தை வெளிப்படையாகச் சொல்லுகிறாள்.

அப்பொழுது அந்த ஸ்திரீ: "பின்னை ஏன் தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாய் இப்படிப்பட்ட நினைவை நீர் கொண்டிருக்கிறீர், துரத்துண்ட தம்முடையவனை ராஜா திரும்ப அழைக்காததினாலே, ராஜா இப்பொழுது சொன்ன வார்த்தையினால் குற்றமுள்ளவரைப் போல் இருக்கிறார்" (2சாமு 14:13) என்று ராஜாவினிடத்தில் சொல்லுகிறாள்.

அந்த ஸ்திரீயின் வார்த்தைகளைக் கேட்டு தாவீது ராஜா ஆச்சரியப்படுகிறார். தாவீது அந்த ஸ்திரீயின்மீது கோபப்படவில்லை. அந்த ஸ்திரீ ஞானமாகப் பேசுகிறாள். தன்னுடைய குமாரனுக்காக பரிந்து பேசுவதுபோல பேசி, இப்போது அப்சலோமுக்கு ஆதரவாகப் பேசுகிறாள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீது ராஜாவிடம் பேசுவதற்கு முன்பாகவே, அவருடைய அனுமதியைக் கேட்டுத்தான் பேசினாள். "ராஜாவாகிய என் ஆண்டவனோடே உமது அடியாள் ஒரு வார்த்தைசொல்ல உத்தரவாக வேண்டும்" என்று தான் பேசுவதற்கு அந்த ஸ்திரீ ராஜாவின் அனுமதியைக் கேட்டாள். ராஜாவும் அவளிடத்தில் "சொல்லு" என்று பேசுவதற்கு உத்தரவு கொடுத்தார்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் குமாரனுடைய வழக்கும், தாவீதின் குமாரனாகிய அப்சலோமின் வழக்கும் ஒன்றுபோலிருக்கிறது. தாவீது அந்த ஸ்திரீயின் குமாரனை பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறார். ஸ்திரீயின் குமாரன் தன்னுடைய சகோதரனைக் கொன்றுபோட்டவன். தாவீதின் குமாரனாகிய அப்சலோமும், தன்னுடைய சகோதரனாகிய அம்னோனைக் கொன்றுபோட்டவன். தாவீது அந்த ஸ்திரீயின் குமாரனைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கும்போது, தன்னுடைய குமாரனாகிய அப்சலோமையும் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

அப்சலோம் துரத்துண்டவனாகயிருக்கிறான். அவன் எருசலேமைவிட்டு கேசூரிலே போய் தங்கியிருக்கிறான். ராஜா தன்னுடைய குமாரனாகிய அப்சலோமை, கேசூரிலிருந்து தன்னிடத்தில் அழைத்து வரவேண்டும். அவனைப் பாதுகாக்கவேண்டும்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் குமாரனுடைய வழக்கும், அப்சலோமினுடைய வழக்கும், வெளிப்பார்வைக்கு ஒன்றுபோலிருந்தாலும், அடிப்படையில் இவ்விரண்டு வழக்குகளும் வெவ்வேறானவை. அப்சலோம் திடீரென்று தன்னுடைய சகோதரன் அம்னோனைக் கொன்றுபோடவில்லை. அப்சலோம் இரண்டு வருஷமாக அம்னோனுக்கு விரோதமாக சதிபண்ணினான். அப்சலோமின் மனதிலே அம்னோனைக் கொன்றுபோடவேண்டும் என்னும் கொலைவெறி இரண்டு வருஷமாக மறைந்திருந்தது. சமயம் கிடைத்தபோது அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டான்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் குமாரர்கள் இருவரும் வெளியிலே சண்டைபண்ணிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒருவனுக்கு தன் சகோதரன்மீது அதிகமான கோபம் வந்துவிட்டது. இதன் நிமித்தமாக ஒருவன் மற்றவனை, எதிர்பாராத விதமாக, இதற்கு முன்பு கொலைசெய்யவேண்டும் என்னும் திட்டமில்லாமலேயே, அடித்து கொன்றுபோட்டான்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீக்கு இரண்டு குமாரர் மாத்திரமே இருக்கிறார்கள். ஒருவன் ஏற்கெனவே அடித்து கொல்லப்பட்டுவிட்டான். இப்போது மற்றொரு மகனையும் தெக்கோவா ஊரார் கொல்லவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தாவீதுக்கோ அப்சலோம் மாத்திரம் குமாரனல்ல. அவருக்கு இன்னும் அநேக குமாரரும், குமாரத்திகளும் இருக்கிறார்கள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தன்னிடத்தில் சாதுரியமாகப் பேசுவதை தாவீது புரிந்துகொள்கிறார். அந்த ஸ்திரீ தாவீதிடம் மனுஷருடைய ஜீவனைப்பற்றியும் சொல்லுகிறாள். "நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக்கூடாதபடிக்கு, தரையிலே சுவறுகிற தண்ணீரைப்போல் இருக்கிறோம்; தேவன் ஜீவனை எடுத்துக்கொள்ளாமல், துரத்துண்டவன் முற்றிலும் தம்மை விட்டு விலக்கப்படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார் (2சாமு 14:14) என்று அந்த ஸ்திரீ தாவீதுக்கு சொல்லுகிறாள்.

தாவீது தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீக்கு நியாயமான தீர்ப்பு சொல்லியிருக்கிறார். அவளுடைய குமாரன் பாதுகாக்கப்படவேண்டுமென்று வாக்குப்பண்ணுகிறார். தாவீதின் குடும்பத்திலும் இதே போன்ற வழக்கே இருக்கிறது. தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயின் குமாரனை தாவீது பாதுகாக்கும்போது, தன்னுடைய குமாரனாகிய அப்சலோமையும் அவர் பாதுகாக்கவேண்டும். மற்றவர்களுடைய வழக்கை விசாரிக்கிற தாவீது, தன்னுடைய வழக்கையும் விசாரிக்கவேண்டும். மற்றவர்களுக்கு நீதியான தீர்ப்பு சொல்லுகிற தாவீது, தன்னுடைய குடும்பத்திற்கும் நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும்.

அப்சலோம் இப்போது கேசூரிலே துரத்தப்பட்டவனைப்போல இருக்கிறான். தாவீது அவனை தன்னிடத்தில் திரும்ப அழைத்து, அவனுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஒரு தரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. "நாம் மரிப்பது நிச்சயம்" என்று அந்த ஸ்திரீ தாவீதுக்கு சொல்லுகிறாள்.

எல்லோரும், தங்களுக்கு நியமிக்கப்பட்ட நாளில் மரித்துப்போவதுபோல, அம்னோனும் ஒரு நாளில் மரிப்பான். அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடாவிட்டாலும், அம்னோன் ஒரு நாளில் மரிக்கவேண்டும். அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டான். செத்துப்போனவர்கள் தரையிலே சுவருகிற தண்ணீரைப்போல இருக்கிறார்கள். தரையிலே ஊற்றப்பட்ட தண்ணீரை, மறுபடியும் கூட்டி அள்ள முடியாது. அதுபோலவே செத்துப்போனவர்களையும் மறுபடியும் உயிரோடு எழுப்ப முடியாது. அம்னோன் செத்துப்போனவன். அவனை உயிரோடு எழுப்புவதற்கு வாய்ப்பில்லை.

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவர் பாவிகள்மீது கிருபையாக இரங்குகிறவர். தேவன் ஜீவனை எடுத்துக் கொள்ளாமல், துரத்துண்டவன் முற்றிலும் தம்மை விட்டு விலக்கப்படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார்.

கர்த்தர் பாவிகளை உடனே தண்டித்துவிடவில்லை. அவர் பாவிகள்மீது நீடிய பொறுமையோடிருக்கிறார். பாவம் செய்கிறவர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை மீறுகிறார்கள். ஆனாலும் தேவன் பாவிகளை உடனே கொன்றுபோடாமல், அவர்கள்மீது இரக்கம் காண்பிக்கிறார்.

பாவிகளை அழிக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்பதே தேவனுக்கு பிரியமானது. கர்த்தர் பாவத்தை வெறுக்கிறார். அவர் பாவிகளை சிநேகிக்கிறார். மனுஷன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போகிறான். பாவம் செய்கிற மனுஷன் தேவனைவிட்டு, துரத்துண்டவனைப்போல போய்விடுகிறான். ஆனாலும் கர்த்தர் பாவிகளை முற்றிலுமாய் வெறுத்து ஒதுக்கிவிடுவதில்லை.

பாவிகள் தம்மைவிட்டு நித்தியகாலமாக துரத்தப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. பாவிகள் மனந்திரும்பும்போது, கர்த்தர் அவர்களை திரும்பவும் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கிறார். பாவிகள் துரத்துண்டவர்களைப்போல இருந்தாலும், கர்த்தர் அவர்களை மறந்துவிடாமல் நினைவில் வைத்திருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது கர்த்தருடைய சித்தமல்ல.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதினிடத்தில் இரக்கத்தையும் நியாயத்தையும் எதிர்பார்க்கிறாள். தாவீது அந்த ஸ்திரீயின் மகனுக்கு இரக்கம் காண்பித்ததுபோல, தன்னுடைய மகனாகிய அப்சலோமுக்கும் இரக்கம் காண்பிக்கவேண்டும்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ, தான் தாவீதைப் பார்க்க வந்த நோக்கத்தை, வெளிப்படையாகவே சொல்லுகிறாள்.

அந்த ஸ்திரீ தாவீதை நோக்கி, "இப்போதும் நான் என் ஆண்டவனாகிய ராஜாவோடே இந்த வார்த்தையைப் பேசவந்த முகாந்தரம் என்னவென்றால்: ஜனங்கள் எனக்குப் பயமுண்டாக்கினதினால், நான் ராஜாவோடே பேசவந்தேன்; ஒருவேளை ராஜா தமது அடியாளுடைய வார்த்தையின்படி செய்வார் என்று உமது அடியாளாகிய நான் நினைத்ததினாலும் வந்தேனே ஒழிய வேறில்லை. என்னையும் என் குமாரனையும் ஏகமாய் தேவனுடைய சுதந்தரத்திற்குப் புறம்பாக்கி, அழிக்க நினைக்கிற மனுஷனுடைய கைக்குத் தமது அடியாளை நீங்கலாக்கிவிடும்படிக்கு ராஜா கேட்பார். ராஜாவாகிய என் ஆண்டவனுடைய வார்த்தை எனக்கு ஆறுதலாயிருக்கும் என்று உமது அடியாளாகிய நான் எண்ணினேன்; நன்மையையும் தீமையையும் கேட்கும்படி, ராஜாவாகிய என் ஆண்டவன் தேவனுடைய தூதனைப்போல இருக்கிறார்; இதற்காக உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார்" (2சாமு 14:15-17) என்று சொல்லுகிறாள்.

தாவீது ராஜாவை தொந்தரவுபடுத்த வேண்டும் என்பது அவளுடைய நோக்கமல்ல. அவள் தெக்கோவா ஊர் ஜனங்களுக்காக பயப்படுகிறாள். அவர்கள் தன்னுடைய மகனை கொன்றுபோடுவார்களோ என்னும் பயம் அவளுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. ஆனாலும் தாவீது அந்த ஸ்திரீயின் வழக்கை கேட்டு, அவளுடைய குமாரனுக்கு சாதகமாக தீர்ப்பு சொல்லுகிறார்.

அந்த ஸ்திரீயின் குமாரனுக்கு தாவீது சாதகமாகயிருக்கிறார் ஆகையினால், தாவீது தன்னுடைய குமாரனாகிய அப்சலோமுக்கும் சாதகமாகயிருப்பார் என்னும் நம்பிக்கை அந்த ஸ்திரீயின் மனதில் உண்டாயிற்று. தாவீது அப்சலோமுக்கு விரோதமாக கோபமாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர், அப்சலோமுக்கு சாதகமாக இருக்கிறார்கள். அப்சலோமைத் தண்டிக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேலில் வேறு சிலரோ தாவீது ராஜாவுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். தாவீது இந்த பிரச்சனையைத் தீர்த்து வைக்கவில்லையென்றால், இஸ்ரவேல் தேசத்தில் உள்நாட்டு குழப்பம் ஏற்படும். இஸ்ரவேலர் மத்தியிலே கலவரமுண்டாகும்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதின் ஞானத்திற்கும், அவருடைய ராஜதந்திரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறாள். ராஜாவைப் புகழ்ந்து பேசுகிறாள். தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தாவீதைப் புகழ்ந்து பேசின வார்த்தைகளை, சகரியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

"அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்; அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்; தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்" *(சக 12:8)*.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ தன்னிடத்தில் பேசுகிற புத்தியுள்ள வார்த்தைகளைக் கேட்டு தாவீது ஆச்சரியப்படுகிறார். இந்த ஸ்திரீ தன்னிடத்தில் தானாக வந்தாளா அல்லது அவள் வருவதற்கு யோவாப் உடந்தையாகயிருந்தானா என்னும் சந்தேகம் தாவீது ராஜாவுக்கு வந்துவிடுகிறது. தாவீது தன்னுடைய சந்தேகத்தை அந்த ஸ்திரீயினிடத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறார்.

அப்பொழுது ராஜா அந்த ஸ்திரீக்குப் பிரதியுத்தரமாக: "நான் உன்னிடத்தில் கேட்கும் காரியத்தை நீ எனக்கு மறைக்கவேண்டாம்" என்று சொல்லுகிறார். அதற்கு அந்த ஸ்திரீ, "ராஜாவாகிய என் ஆண்டவர் சொல்வாராக" என்று சொல்லுகிறாள். அப்பொழுது தாவீது ராஜா: "இதிலெல்லாம் யோவாப் உனக்கு உட்கையாய் இருக்கவில்லையா" *(2சாமு 14:18,19)* என்று அந்த ஸ்திரீயினிடத்தில் கேட்கிறார்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயும் தாவீது ராஜாவினிடத்தில் எதையும் மறைக்கவில்லை. அந்த ஸ்திரீ தாவீதுக்கு பிரதியுத்தரமாக, "ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னதற்கெல்லாம் வலது பக்கத்திலாவது இடதுபக்கத்திலாவது விலகுவதற்கு ஒருவராலும் கூடாது என்று ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; உமது அடியானாகிய யோவாப் தான் இதை எனக்குக் கற்பித்து, அவனே இந்த எல்லா வார்த்தைகளையும் உமது அடியாளின் வாயிலே போட்டான். நான் இந்தக் காரியத்தை உபமானமாய்ப் பேசுகிறதற்கு உமது அடியானாகிய யோவாப் அதற்குக் காரணமாயிருந்தான்; ஆனாலும் தேசத்தில் நடக்கிறதையெல்லாம் அறிய, என் ஆண்டவனுடைய ஞானம் தேவதூதனுடைய ஞானத்தைப் போல் இருக்கிறது" *(2சாமு 14:19,20)* என்று சொல்லுகிறாள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ உண்மையை மறைக்கவில்லை. நாமும் உண்மை பேசவேண்டும் என்பதற்கு அவள் எடுத்துக்காட்டாயிருக்கிறாள். நம்முடைய திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக, நாம் பொய் பேசவேண்டிய அவசியமில்லை. சத்தியத்தை தைரியமாய்ப் பேசவேண்டும். உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாதது என்றும் நாம் சொல்லவே வேண்டும்.

அப்சலோம்
2சாமு 14:21-27

2சாமு 14:21. அப்பொழுது ராஜா யோவாபைப் பார்த்து: இதோ, இந்தக் காரியத்தைச் செய்கிறேன், நீ போய் அப்சலோம் என்னும் பிள்ளையாண்டானைத் திரும்ப அழைத்துக்கொண்டுவா என்றான்.

2சாமு 14:22. அப்பொழுது யோவாப் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, ராஜாவை வாழ்த்தி: ராஜா தமது அடியானுடைய வார்த்தையின்படி செய்ததினால், என் ஆண்டவனாகிய ராஜாவின் கண்களில் எனக்குத் தயைகிடைத்தது என்று இன்று உமது அடியானுக்குத் தெரியவந்தது என்றான்.

2சாமு 14:23. பின்பு யோவாப் எழுந்து, கேசூருக்குப் போய், அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டுவந்தான்.

2சாமு 14:24. ராஜா: அவன் என் முகத்தைப் பார்க்கவேண்டியதில்லை; தன் வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும் என்றான்; அப்படியே அப்சலோம் ராஜாவின் முகத்தைப் பார்க்காமல் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்

2சாமு 14:25. இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக் கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது.

2சாமு 14:26. அவன் தன் தலைமயிர் தனக்குப் பாரமாயிருப்பதினால் வருஷாந்தரம் சிரைத்துக்கொள்ளுவான்; சிரைக்கும் போது, அவன் தலைமயிர் ராஜாவுடைய நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும்.

2சாமு 14:27. அப்சலோமுக்கு மூன்று குமாரரும், தாமார் என்னும் பேர்கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தார்கள்; இவள் ரூபவதியான பெண்ணாயிருந்தாள்.

தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீ, எருசலேமிலே, தாவீது ராஜாவினிடத்தில் அப்சலோமுக்காக பரிந்துபேசும்போது, அப்சலோம் கேசூரிலே இருக்கிறான். இந்த ஸ்திரீ யோவாபின் தூண்டுதலினால் தன்னோடு பேசுகிறாள் என்பதை தாவீது புரிந்துகொள்கிறார்.

அப்பொழுது தாவீது ராஜா யோவாபைப் பார்த்து: "இதோ, இந்தக் காரியத்தைச் செய்கிறேன், நீ போய் அப்சலோம் என்னும் பிள்ளையாண்டானைத் திரும்ப அழைத்துக்கொண்டுவா" *(2சாமு 14:21)* என்று சொல்லுகிறார்.

யோவாப் தாவீது ராஜாவின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாயிருக்கிறான். தாவீது அப்சலோமை திரும்ப அழைத்துக்கொண்டு வருமாறு சொல்லுவது, யோவாபுக்கு நற்செய்தியாயிருக்கிறது.

அப்பொழுது யோவாப் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, ராஜாவை வாழ்த்தி: "ராஜா தமது அடியானுடைய வார்த்தையின்படி செய்ததினால், என் ஆண்டவனாகிய ராஜாவின் கண்களில் எனக்குத் தயைகிடைத்தது என்று இன்று உமது அடியானுக்குத் தெரியவந்தது" என்று சொல்லுகிறான்.

பின்பு யோவாப் எழுந்து, கேசூருக்குப் போய், அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வருகிறான் *(2சாமு 14:22,23)*.

தாவீது அப்சலோமை முழுவதுமாய் மன்னித்துவிட்டாரா அல்லது மன்னிக்கவில்லையா என்பது தெரியவில்லை. அப்சலோம் தன்னுடைய சகோதரன் அம்னோனுடைய இரத்தத்தை சிந்தியிருக்கிறான்.

"மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:6) என்பது பூர்வகாலத்து பிரமாணம். தாவீது இந்தப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. இந்தப் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால், தன்னுடைய குடும்பத்திலே நஷ்டம் வரும் என்று தெரிந்தபோது, தாவீது இந்தப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் இதை மீறிவிடுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே யாராவது ஒருவர் பிறருடைய இரத்தத்தை சிந்தினால், தாவீது இந்த பிரமாணத்தின் பிரகாரம் அவர்களைத் தண்டிக்கிறார். தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கு ஒரு நியாயம் என்றும், மற்றவர்களுக்கு வேறொரு நியாயம் என்றும், தாவீது வழக்கிலே பட்சபாதம் காண்பிக்கிறார். முகஸ்துதி செய்கிறார். முகஸ்துதி பண்ணுவது கர்த்தருக்கு விரோதமான பாவம்.

தாவீது அப்சலோமை எருசலேமுக்கு திரும்ப அழைத்துக்கொண்டு வரச்சொன்னாலும், அவர் அப்சலோமின் முகத்தைப் பார்க்க விரும்பவில்லை. யோவாப் கேசூருக்குப்போய் அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வருகிறான். தாவீது ராஜாவோ, "அவன் என் முகத்தைப் பார்க்கவேண்டியதில்லை; தன் வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும்" *(2சாமு 14:24)* என்று சொல்லிவிடுகிறார். அப்படியே அப்சலோம் ராஜாவின் முகத்தைப் பார்க்காமல் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகிறான்.

அப்சலோம் எருசலேமுக்கு வந்தாலும், தாவீது தன்னுடைய கவுரவத்தைப் பார்க்கிறார். இஸ்ரவேல் தேசத்தார், அப்சலோமை தாவீதின் அரண்மனையில் பார்த்தால், அவர்கள் தாவீதைக் குறித்து தப்பிதமாய் நினைப்பார்கள். தாவீதின் நீதியும் நியாயமும் கேள்விக்குறியாகிவிடும். இஸ்ரவேலர் மத்தியிலே தாவீதுக்கு மதிப்பும் மரியாதையும் குறைந்துபோகும். தாவீது தன்னுடைய கவுரவத்தையும், கண்ணியத்தையும் காத்துக்கொள்ளும் வண்ணமாக அப்சலோம் தன்னுடைய முகத்தைப் பார்க்கக்கூடாது என்று கட்டளையிடுகிறார்.

அப்சலோம் இதுவரையிலும் கேசூரிலே தன்னுடைய தாத்தாவின் வீட்டிலிருந்தான். அங்கே அவனுக்கு எல்லா சுதந்தரமும் கொடுக்கப்பட்டது. இப்போது அவன் எருசலேமுக்கு திரும்பவும் அழைத்து வரப்பட்டிருக்கிறான். ஆனால் அப்சலோம் தாவீதின் முகத்தைப் பார்க்கக்கூடாது என்னும் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இதனால் அப்சலோமுக்கு வெட்கமும் அவமானமும் அதிகரித்திருக்கிறது. அப்சலோம் தாவீதுக்கு அருகாமையிலிருந்தாலும், தாவீதின் முகத்தைப் பார்க்கும் வாய்ப்பு அவனுக்கு கிடைக்கவில்லை. அப்சலோம் தாவீது ராஜாவின் முகத்தைக் காணாமலேயே இரண்டு வருஷம் எருசலேமிலே குடியிருக்கிறான் *(2சாமு 14:28)*.

இந்த வசனப்பகுதியில் அப்சலோமின் குணாதிசயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவனுடைய ஞானத்தைப்பற்றியோ, கர்த்தரிடத்தில் அவனுக்கு இருக்கும் பயபக்தியைப்பற்றியோ இங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. அவனுடைய வெளித்தோற்றத்தைப்பற்றி மாத்திரமே இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருக்கிறது. அவன் தன் தலைமயிர் தனக்குப் பாரமாயிருப்பதினால் வருஷாந்தரம் சிரைத்துக்கொள்ளுவான்; சிரைக்கும் போது, அவன் தலைமயிர் ராஜாவுடைய நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும் *(2சாமு 14:25,26)*.

அப்சலோம் வெளிப்பார்வைக்கு மிகவும் அழகாகயிருக்கிறான். ஆனால் அவனுக்கு உள்ளேயோ தீயசுபாவங்களும், மோசமான குணாதிசயங்களும் இருக்கிறது. இக்காலத்திலும் மனுஷருடைய ஆத்துமா கெட்டுப்போயிருக்கிறது. ஆனால் அவர்களுடைய வெளித்தோற்றமோ மிகவும் அழகாகயிருக்கிறது. வெளித்தோற்றத்திற்கு நல்லவர்களைப்போல வேஷம்போடும் துன்மார்க்கருக்கு, அப்சலோம் ஒரு எடுத்துக்காட்டாயிருக்கிறான்.

அப்சலோமின் இரத்தத்தில் பாவம் கலந்திருக்கிறது. அவனுக்கு தன்னுடைய தகப்பனாராகிய தாவீதின்மீது மெய்யான பாசமில்லை. அவனுடைய இருதயத்தில் தாவீதின்மீது உண்மையான அன்புமில்லை. அவனுடைய சரீரத்தில் பழுது ஒன்றும் இல்லை. ஆனால் அவனுடைய சிந்தையோ கேடுள்ளதாயிருக்கிறது. அவனுடைய இருதயம் காயப்பட்டு சேதமடைந்திருக்கிறது.

அப்சலோமின் தலைமயிரைப்பற்றி இங்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நசரேய விரதமிருக்கிறவர்கள் தங்கள் தலைமயிரை சவரம்பண்ணமாட்டார்கள். அவர்களுடைய தலைமுடி நீளமாயிருக்கும். அப்சலோம் நசரேய விரதம் இருக்கவில்லை. ஆனாலும் அவனுடைய தலைமயிர் மிகவும் நீளமாயிருக்கிறது. அவன் அடிக்கடி தலைச்சவரம் பண்ணாமல், வருஷத்திற்கு ஒருதரம் தலைச்சவரம் பண்ணுவான்.

அப்சலோமின் நீளமான தலைமுடியே, அவனுக்கு பெருமையைக் கொடுக்கிறது. மற்ற எல்லோருடைய தலைமயிரைவிட, அப்சலோமின் தலைமயிர் மிகவும் நீளமாகயிருக்கும். தன்னுடைய நீளமான தலைமயிரே தனக்கு அழகு என்றும், அலங்காரம் என்றும் அப்சலோம் நினைக்கிறான். ஆனால் அவனுடைய தலைமுடியே அவனுடைய ஜீவனுக்கு ஆபத்தாயிற்று.

"அப்சலோம் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்பட்டான்; அப்சலோம் கோவேறு கழுதையின்மேல் ஏறிவரும் போது, அந்தக் கோவேறுகழுதை சன்னல்பின்னலான ஒரு பெரிய கர்வாலிமரத்தின் கீழ் வந்ததினால், அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டு, அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்; அவன் ஏறியிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று" *(2சாமு 18:9)*.

அப்சலோமின் குடும்பத்தைப்பற்றியும் இங்கு சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "அப்சலோமுக்கு மூன்று குமாரரும், தாமார் என்னும் பேர்கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தார்கள்; இவள் ரூபவதியான பெண்ணாயிருந்தாள்" *(2சாமு 14:27).*

அப்சலோம் தாவீதைப் பார்க்காமல், தன்னுடைய வீட்டிலே இருந்த சம்பவம், அவனுக்கு குழந்தைகள் பிறப்பதற்கு முன்பாக நடந்திருக்கவேண்டும்.

"அப்சலோம் உயிரோடே இருக்கையில்: என் பேரை நினைக்கப்பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்திருந்தான்; அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின் அடையாளம் என்று சொல்லப்படும்" *(2சாமு 18:18).*

இந்த சம்பவத்திற்கு பின்பு, அப்சலோமுக்கு மூன்று குமாரரும், தாமார் என்னும் பேர்கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருக்கிறார்கள்.

அப்சலோமும் யோவாபும்
2சாமு 14:28-33

2சாமு 14:28. அப்சலோம், ராஜாவின் முகத்தைக் காணாமலே, இரண்டு வருஷம் எருசலேமிலே குடியிருந்தான்.

2சாமு 14:29. ஆகையால் அப்சலோம் யோவாபை ராஜாவினிடத்தில் அனுப்பும்படி அழைப்பித்தான்; அவனோ அவனிடத்திற்கு வரமாட்டேன் என்றான்; இரண்டாம்விசையும் அவன் அழைத்தனுப்பினான்; அவன் வரமாட்டேன் என்றான்.

2சாமு 14:30. அப்பொழுது அவன் தன் வேலைக்காரரைப் பார்த்து: இதோ என் நிலத்திற்கு அருகே யோவாபின் நிலம் இருக்கிறது; அதிலே அவனுக்கு வாற்கோதுமை விளைந்திருக்கிறது; நீங்கள் போய், அதைத் தீக்கொளுத்திப் போடுங்கள் என்றான்; அப்படியே அப்சலோமின் வேலைக்காரர் அந்த நிலத்தை தீக்கொளுத்திப்போட்டார்கள்.

2சாமு 14:31. அப்பொழுது யோவாப் எழுந்திருந்து, அப்சலோமிடத்தில் வீட்டிற்குள் போய், என்னுடைய நிலத்தை உம்முடைய வேலைக்காரர் தீக்கொளுத்திப் போட்டது என்ன என்று அவனைக் கேட்டான்.

2சாமு 14:32. அப்சலோம் யோவாபைப் பார்த்து: இதோ, நான் ஏன் கேசூரிலிருந்து வந்தேன்; நான் அங்கே இருந்துவிட்டால் நலம் என்று ராஜாவுக்குச் சொல்லும்படி உம்மை ராஜாவினிடத்தில் அனுப்புவதற்காக உம்மை இங்கே வரும்படி அழைப்பித்தேன்; இப்போதும் நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கட்டும்; என்மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்று போடட்டும் என்றான்.

2சாமு 14:33. யோவாப் ராஜாவினிடத்தில் போய், அதை அவனுக்கு அறிவித்தபோது, அப்சலோமை அழைப்பித்தான்; அவன் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கினான், அப்பொழுது ராஜா அப்சலோமை முத்தமிட்டான்.

அப்சலோம் ஏற்கெனவே மூன்று வருஷம், தன்னுடைய தகப்பனாராகிய தாவீதை விட்டுப்பிரிந்து கேசூரிலே தங்கியிருந்தான். இப்போது அவன் மேலும் இரண்டு வருஷம், தாவீதின் முகத்தை காணாமலேயே, எருசலேமிலே குடியிருக்கிறான் *(2சாமு 14:28).*

அப்சலோம் செய்த பாவத்திற்கு அவனுக்கு சரியான தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவன் இன்னும் தன்னுடைய பாவத்தை உணரவில்லை. அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை. அவனுடைய இருதயத்தில் பெருமையும், துராலோசனையும் நிரம்பியிருக்கிறது.

தாவீதின் அரண்மனையில் பிரவேசிப்பதற்கு அப்சலோமுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அப்சலோம் தாவீது ராஜாவின் முகத்தைப் பார்க்க விரும்புகிறான். தாவீது ராஜாமீது தான் அன்பாகவும் பாசமாகவும் இருப்பதுபோல நடிக்கிறான். மாய்மாலம் பண்ணுகிறான். அப்சலோமுக்கு தாவீதின் முகத்தைப் பார்க்கவேண்டும் என்னும் விருப்பமில்லை. அப்சலோம் தாவீது அமர்ந்திருக்கும் ராஜாசனத்திலே அமர விரும்புகிறான். தாவீதின் கையிலிருக்கும் செங்கோல், தன்னுடைய கைக்கு வரவேண்டும் என்று அப்சலோம் ஆசைப்படுகிறான்.

தாவீது அப்சலோமோடு ஒப்புரவாகும் வரையிலும், அவனால் இஸ்ரவேலுக்கு ராஜாவாகும் தன்னுடைய ஆசையை நிறைவேற்ற முடியாது. அப்சலோம் இஸ்ரவேலுக்கு ராஜாவாக வேண்டுமென்றால், அவனுக்கு தாவீதின் உதவியும், ஒத்தாசையும், ஆதரவும் தேவைப்படுகிறது. தாவீது ராஜாவோடு ஒப்புரவாவதற்கு அப்சலோம் சதிபண்ணுகிறான்.

விஷமுள்ள சர்ப்பம் சும்மாயிருக்காது. அது யாரையாவது கொத்தினாலும், மறுபடியும் விஷத்தை சேர்த்துக்கொண்டு, மற்றவர்களைக் கொத்துவதற்கு ஆயத்தமாயிருக்கும். அப்சலோம் ஏற்கெனவே அம்னோனுக்கு விரோதமாக சதிபண்ணி அவனைக் கொன்றுபோட்டான். இப்போது யாருக்கு விரோதமாக சதிபண்ணினால், தன்னால் தாவீது ராஜாவோடு ஒப்புரவாக முடியும் என்று அப்சலோம் சதிஆலோசனைபண்ணுகிறான்.

அப்சலோம் இப்போது எருசலேமிலிருந்தாலும், அவனால் ராஜாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. இது அவனுக்கு மனவேதனையாகயிருக்கிறது. ராஜாவின் முகத்தைப் பார்க்காமலிருப்பது அவனுடைய இருதயத்தில் காயத்தை உண்டுபண்ணுகிறது. கேசூரிலே இருந்த அப்சலோமை, யோவாப் எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான். யோவாபால் தன்னை தாவீதின் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோக முடியும் என்று அப்சலோம் நம்புகிறான்.

ஆகையால் அப்சலோம் யோவாபை ராஜாவினிடத்தில் அனுப்பும்படி அழைப்பிக்கிறான்; யோவாபோ அப்சலோமினிடத்திற்கு வரமாட்டேன் என்கிறான்; இரண்டாம்விசையும் அப்சலோம் யோவாபை அழைத்தனுப்புகிறான்; யோவாபோ வரமாட்டேன் என்று சொல்லிவிடுகிறான் *(2சாமு 14:29)*.

அப்சலோமுக்கும் தாவீதுக்கும் இடையே சமாதானம் உண்டுபண்ண ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுகிறது. அப்சலோமைப் பொறுத்தவரையில், யோவாபே தனக்கு சாதகமான மத்தியஸ்தராயிருப்பான் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் யோவாபோ அப்சலோமுக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. யோவாப் அப்சலோமின் அன்பான வேண்டுகோளுக்கு செவிகொடுக்க மறுக்கிறான்.

அப்சலோம் ஒரு சதிகாரன். தான் அழைத்தும் யோவாப் தன்னிடத்தில் வராததைக் கண்டு, அப்சலோமுக்கு யோவாபின்மீது கோபமுண்டாயிற்று. யோவாபை தன்னிடத்தில் வரவழைப்பதற்கு அப்சலோம் ஒரு திட்டம் போடுகிறான்.

அப்பொழுது அப்சலோம் தன் வேலைக்காரரைப் பார்த்து: "இதோ என் நிலத்திற்கு அருகே யோவாபின் நிலம் இருக்கிறது; அதிலே அவனுக்கு வாற்கோதுமை விளைந்திருக்கிறது; நீங்கள் போய், அதைத் தீக்கொளுத்திப்போடுங்கள்" *(2சாமு 14:30)* என்று சொல்லுகிறான்; அப்படியே அப்சலோமின் வேலைக்காரர் அந்த நிலத்தை தீக்கொளுத்திப்போடுகிறார்கள்.

யோவாப் அப்சலோமுக்கு நன்மை செய்தான். யோவாப் தெக்கோவா ஊராளாகிய ஸ்திரீயை தாவீது ராஜாவினிடத்தில் அனுப்பி, அப்சலோமுக்காக பரிந்து பேசவைத்தான். தாவீது ராஜாவின் கட்டளைப்படி, யோவாப் கேசூருக்குப்போய், அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக் கொண்டு வந்தான். ஆனால் அப்சலோமோ தனக்கு நன்மை செய்த யோவாபுக்கு தீங்கு செய்கிறான். தீங்கு செய்வது அப்சலோமின் சுபாவம். அப்சலோமின் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் ஒரு பழுதும் இல்லாமலிருக்கிறது. ஆனால் அப்சலோமின் சரீரம் முழுவதும் விஷம் நிரம்பியிருக்கிறது. அப்சலோம் இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் சவுந்தரிய முள்ளவனாயிருக்கிறான். அதே வேளையில் அவன் எல்லோரைவிடவும் அதிக துன்மார்க்கனாகவும், நன்றியில்லாதவனாகவும் இருக்கிறான்.

அப்சலோமின் வேலைக்காரன் தன்னுடைய நிலத்தை தீக்கொளுத்திப்போட்டது, யோவாபுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவன் அப்சலோமின் தைரியத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான். அப்சலோமுக்கு யோவாபின் ஆதரவு தேவைப்படுகிறது. ஆனாலும் அவன் மிகவும் துணிச்சலாக யோவாபின் நிலத்தை தீக்கொளுத்திப்போடுகிறான்.

அப்சலோமின் துன்மார்க்கமான செய்கை தாவீது ராஜாவுக்கு தெரிந்தால், அவர் அப்சலோமின் மேல் கோபப்படுவார். அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வரச்சொன்னதற்காக தாவீது வருத்தப்படுவார். ஒருவேளை தாவீது அப்சலோமை மறுபடியும் எருசலேமைவிட்டு துரத்திவிடுவதற்கும் வாய்ப்புள்ளது. ஆனால் அப்சலோமோ, எதற்கும் கவலைப்பட்டதாக தெரியவில்லை. இரண்டு வருஷம் தாவீதின் முகத்தைப் பார்க்காமல், எருசலேமிலிருப்பது அப்சலோமுக்கு மனவேதனையாயிருக்கிறது. இந்தப் பிரச்சனைக்கு எப்படியாவது ஒரு முடிவு பண்ணவேண்டும் என்று, அப்சலோம் தீர்மானமாயிருக்கிறான்.

அப்சலோமின் திட்டத்தின்படி, யோவாப் அவனைப் பார்ப்பதற்கு வருகிறான். அப்பொழுது யோவாப் எழுந்திருந்து, அப்சலோமிடத்தில் வீட்டிற்குள் போய், "என்னுடைய நிலத்தை உம்முடைய வேலைக்காரர் தீக்கொளுத்திப் போட்டது என்ன" *(2சாமு 14:31)* என்று அவனைக் கேட்கிறான்.

அப்சலோம் யோவாபிடம் தன்னுடைய மனதிலுள்ளதையெல்லாம் சொல்லுகிறான். அப்சலோம் யோவாபைப் பார்த்து: "இதோ, நான் ஏன் கேசூரிலிருந்து வந்தேன்; நான் அங்கே இருந்துவிட்டால் நலம் என்று ராஜாவுக்குச் சொல்லும்படி உம்மை ராஜாவினிடத்தில் அனுப்புவதற்காக உம்மை இங்கே வரும்படி அழைப்பித்தேன்; இப்போதும் நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கட்டும்; என்மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்றுபோடட்டும்" *(2சாமு 14:32)* என்று சொல்லுகிறான்.

அப்சலோமுக்கு தாவீது ராஜாவைப் பார்க்கவேண்டும் என்னும் விருப்பம் இருக்கிறது. ராஜா நியாயப்பிரமாணத்தையும் ராஜநீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது வழக்கம் *(எஸ் 1:14)*. அப்சலோம் தாவீது ராஜாவின் அரண்மனையிலிருக்க வேண்டியவன். தாவீது ராஜநீதியை அறிந்தவர்களிடத்தில் பேசும்போது, அவர் அப்சலோமிடத்திலும் பேசவேண்டும். ஆனால் அப்சலோமோ இப்போது, எருசலேமிலே இருந்தாலும், ராஜாவின் முகத்தைப் பார்க்க முடியாதவனாயிருக்கிறான்.

ராஜா தன்னை அவருடைய குமாரனாகவோ அல்லது இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஒரு குடிமகனாகவோ பார்க்கட்டும் என்று அப்சலோம் எதிர்பார்க்கிறான். "இப்போதும் நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கட்டும், என்மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்றுபோடட்டும்" என்று அப்சலோம் தெளிவாகப் பேசுகிறான்.

தாவீது தன்னைக் கொன்றுபோடமாட்டார் என்பது அப்சலோமுக்கு தெரிந்திருக்கிறது. அவர் அப்சலோமின்மேல் அன்பாயிருப்பதினால்தான் அவனை கேசூரிலிருந்து எருசலேமுக்கு அழைத்து வரச்சொல்லியிருக்கிறார். ராஜாவின் அரண்மனை எருசலேமிலிருக்கிறது. அப்சலோமின் வீடும் இங்கேதான் இருக்கிறது. அப்சலோமின் வீட்டிற்கும், தாவீது ராஜாவின் அரண்மனைக்கும் வெகுதூரமில்லை. இரண்டும் சமீபத்திலிருக்கிறது. தாவீது ராஜாவின் அரண்மனைக்குப்போய்விட்டால், அவருடைய இருதயத்திற்குள் பிரவேசித்துவிடலாம் என்று அப்சலோம் திட்டமிடுகிறான்.

யோவாப் தாவீது ராஜாவினிடத்தில் போய், அப்சலோம் தனக்கு சொன்னதை தாவீதுக்கு அறிவித்தபோது, தாவீது அப்சலோமை அழைப்பிக்கிறார்; அப்சலோம் தாவீது ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்குகிறான், அப்பொழுது தாவீது ராஜா அப்சலோமை முத்தமிடுகிறார் *(2சாமு 14:33)*.

அப்சலோம் தாவீதைப் பார்த்தவுடனேயே, அவருக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்குகிறான். ராஜாவுக்கு தன்னுடைய மதிப்பையும் மரியாதையையும் காண்பிக்கிறான். தான் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிவதை அப்சலோம் தரையிலே முகங்குப்புறவிழுந்து வணங்கி வெளிப்படுத்துகிறான்.

தாவீது அப்சலோமின் தப்பிதத்தை மன்னிக்கிறார். தாவீது அப்சலோமின் தப்பிதங்களை மன்னித்ததற்கு அடையாளமாக, அவனை முத்தமிடுகிறார். தன்மேல் குற்றம் இருந்தால், தாவீது ராஜா தன்னைக் கொன்றுபோடட்டும் என்று அப்சலோம் சொன்னான். ஆனால் தாவீதோ அப்சலோமின் குற்றத்தை மன்னித்து, அவனை முத்தமிடுகிறார்.

15 அதிகாரம்

அப்சலோம் என்னும் பெயருக்கு, "அவருடைய தகப்பனாரின் சமாதானம்" என்று பொருள். ஆனால் அப்சலோமோ, தன்னுடைய தகப்பனாராகிய தாவீதுக்கு ஏராளமான பிரச்சனைகளைக் கொடுக்கிறார்.

தாவீது பத்சேபாளோடு செய்த பாவத்தினிமித்தமாய், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தாவீதுக்கு சொல்லப்பட்டது. "தாவீதின் வீட்டைவிட்டு பட்டயம் நீங்காதிருக்கும்" என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. இது வரையிலும் பட்டயம் தாவீதின் பிள்ளைகளுக்கு எதிராகயிருந்தது. இப்போதோ அந்தப் பட்டயம் தாவீதுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருக்கிறது.

தாவீது கொலைகாரர்களை நியாயம் விசாரித்து அவர்களைத் தண்டிக்கவில்லை. அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டான். தாவீதோ அப்சலோமைத் தண்டிக்கவில்லை. இப்போது அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறான். தாவீது ஆரம்பத்திலேயே, அப்சலோமுடைய வழக்கை விசாரித்து, அவனுக்கு நீதியான தண்டனை கொடுத்திருந்தால், இப்போது அவருக்கு இவ்வளவு பிரச்சனை வந்திருக்காது. தாவீது இந்தப் பிரச்சனையிலிருந்து தப்பித்திருக்கலாம்.

அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக சதிசெய்யும் சம்பவம் இந்த அதிகாரத்தில் ஆரம்பமாகிறது. அப்சலோம் தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். அவன் இஸ்ரவேல் ஜனத்தாருடைய அன்பையும் ஆதரவையும் பெறுவதற்கு முயற்சி பண்ணுகிறான். ஜனங்களும் அப்சலோமை விரும்புகிறார்கள் *(2சாமு 15:1-6)*.

அப்சலோம் எப்ரோனுக்குப்போய் அங்கே தன்னை இஸ்ரவேலின் ராஜாவாக பிரகடனம்பண்ணுகிறான். அப்சலோம் கர்த்தருக்கு ஆராதனை செய்யப்போவதாக, தாவீதிடம் சொல்லிவிட்டு, அவன் எப்ரோனுக்குப்போகிறான். திரளான ஜனங்கள் எப்ரோனிலே அவனிடத்தில் வந்து கூடுகிறார்கள் *(2சாமு 15:7-12)*.

தாவீது எருசலேமிலிருக்கிறார். அப்சலோமின் சதிஆலோசனை தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீது எருசலேமைவிட்டு தப்பித்து ஓடிப்போகிறார் *(2சாமு 15:13-18)*.

தாவீது எருசலேமைவிட்டுப் போகும்போது, நடைபெற்ற சம்பவம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது கித்தியனாகிய ஈத்தாயிடம் சொன்னது *(2சாமு 15:19-22)*. இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும் தாவீதுக்காக மகாசத்தமாய் அழுகிறார்கள் *(2சாமு 15:23)*. தாவீது சாதாக்கோடு சொன்ன வார்த்தைகள் *(2சாமு 15:24-29)*. தாவீது கர்த்தருடைய சமுகத்தில் கண்ணீரோடு ஏறெடுத்த ஜெபம் *(2சாமு 15:30,31)*. தாவீது ஊசாயோடு சொன்ன வார்த்தைகள் *(2சாமு 15:32-37)*.

எருசலேமில் அப்சலோம்
2சாமு 15:1-6

2சாமு 15:1. இதற்குப்பின்பு, அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான்.

2சாமு 15:2. மேலும் அப்சலோம் காலைதோறும் எழுந்திருந்து, பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்றுகொண்டு, எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது, அவனை அழைத்து, நீ எந்த ஊரான் என்று கேட்பான்; அவன் உமது அடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றுக்கடுத்த இன்ன ஊரான் என்றால்,

2சாமு 15:3. அப்பொழுது அப்சலோம் அவனை நோக்கி; இதோ, உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது; ஆனாலும் ராஜாவினிடத்திலே உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை என்பான்.

2சாமு 15:4. பின்னும் அப்சலோம்: வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில்வந்து, நான் அவர்களுக்கு நியாயஞ்செய்யும்படிக்கு, என்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான்.

2சாமு 15:5. எவனாகிலும் ஒருவன் அவனை வணங்க வரும்போது, அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி, முத்தஞ்செய்வான்.

2சாமு 15:6. இந்தப்பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்.

அப்சலோம் மறுபடியும் தாவீது ராஜாவின் அரண்மனைக்குள் பிரவேசிக்கிறான். தாவீதோடு சமாதானமாயிருக்கவேண்டும் என்பது அவனுடைய நோக்கமல்ல. தாவீது அமர்ந்திருக்கும் சிங்காசனத்தில் அமரவேண்டும் என்பதே அவனுடைய பேராசை. ஆனால் அப்சலோமின் குணம் மிகவும் துன்மார்க்கமும், கபடமும் நிரம்பியதாயிருக்கிறது. நேர்வழியில் ஆட்சியைப் பிடிப்பதற்கு பதிலாக, குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க சதிபண்ணுகிறான்.

அப்சலோம் தாவீது ராஜாவின் அரண்மனையில் வந்து, அவரோடு கூடயிருந்து, ராஜாங்க காரியங்களை யெல்லாம் கற்றுக்கொள்ளவேண்டும். ராஜரீகத்தின் நுணுக்கங்களையெல்லாம் புரிந்துகொள்ளவேண்டும். தாவீதுக்கு பின்பு, தான் அந்த சிங்காசனத்தில் அமரவேண்டும் என்று அப்சலோம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

ஆனால் அப்சலோமுக்கோ பொறுமையில்லை. தாவீதை அவருடைய சிங்காசனத்திலிருந்து கீழே தள்ளிவிட்டு, தான் அதில் எவ்வாறு அமர்ந்து, இஸ்ரவேலை ஆட்சி செய்யலாம் என்று அப்சலோம் சதிபண்ணுகிறான். இதற்காக, அவன் முதல் வேலையாக ஜனங்களுடைய இருதயத்தை கவர்ந்துகொள்ள திட்டமிடுகிறான். ஜனங்கள் தனக்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று அப்சலோம் எதிர்பார்க்கிறான்.

ஒருவன் உயர்ந்த அந்தஸ்திற்கு வரவேண்டுமென்றால், அவனிடத்தில் மேன்மையும் நன்மையும் காணப்படவேண்டும். தலைவராக வருகிறவர்களிடத்தில் இவ்விரண்டு நற்குணங்களும் இருக்கவேண்டும். இது அப்சலோமுக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையினால் அப்சலோம் தன்னை, இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே பெரியவனாக காண்பித்துக்கொள்ள திட்டமிடுகிறான்.

அப்சலோமின் முயற்சி வெற்றி பெறுகிறது. இஸ்ரவேல் தேசத்தில் தான் உயர்ந்த அந்தஸ்திலிருப்பதற்கு தகுதியானவன் என்பதை, அவன் எல்லோருக்கும் புரிய வைக்கிறான். அவன் பார்வைக்கு உயர்ந்த அந்தஸ்திலே இருந்தாலும், அவனுடைய இருதயத்தில் துன்மார்க்கமும், தீயஎண்ணமும் நிரம்பியிருக்கிறது.

அப்சலோம் தாவீதைவிட்டு கேசூருக்குப்போனான். கேசூரின் ராஜாவினிடத்தில் அவன் அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டான். இஸ்ரவேலின் ராஜாக்கள் தங்களுக்கு குதிரைகளையும் இரதங்களையும் சேர்க்கக்கூடாது. கேசூரின் ராஜாவோ தனக்கு ஏராளமான குதிரைகளையும் இரதங்களையும் வைத்திருக்கிறான்.

அப்சலோமின் பார்வைக்கு கேசூரின் ராஜா கம்பீர தோற்றத்திலே காணப்படுகிறான். தாவீது ராஜா கோவேறு கழுதையின்மேல் ஏறி வருவது வழக்கம். தாவீது அந்தக் கழுதையின்மேல் ஏறிவருவது, அப்சலோமின் பார்வைக்கு கெம்பீரமாயில்லை. தாவீது பரிதாபமான தோற்றத்தில் இருப்பதுபோல அவனுக்கு காணப்படுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களும், மற்ற ஜாதிகளுக்கு இருப்பதுபோல தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று விரும்பினார்கள். சாமுவேல் தீர்க்கதரிசியும் ராஜாவின் காரியத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னார்.

"உங்களை ஆளும் ராஜாவின் காரியம் என்னவென்றால், தன் ரதத்திற்கு முன் ஓடும்படி அவன் உங்கள் குமாரரை எடுத்து, தன் ரதசாரதிகளாகவும் தன் குதிரைவீரராகவும் வைத்துக்கொள்ளுவான்" *(1சாமு 8:11).*

சாமுவேல் சொன்ன பிரகாரமாகவே, அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதிக்கிறான் *(2சாமு 15:1).*

ராஜாவுக்கு முன்பாக ஐம்பதுசேவகர் ஓடுவதைப் பார்க்கும்போது, ஜனங்கள் அப்சலோமை கெம்பீரத்தோற்றத்தில் பார்க்கிறார்கள். அப்சலோமின் பெருமையும் அதிகரிக்கிறது. ஜனங்களும் இதுபோன்ற மதியீனமான மாய்மாலத்தை விரும்புகிறார்கள். அப்சலோம் ஐம்பது சேவகரோடு இரதத்தில் போவதை தாவீது பார்க்கிறார். அப்சலோம் தாவீதின் ராஜரீகத்திற்கு பெருமை சேர்ப்பதற்காக, இவ்வாறு குதிரைகளையும், இரதங்களையும், தனக்கு முன்பாக ஓடும் சேவகரையும் சம்பாதித்திருக்கிறான் என்று தாவீது நினைக்கிறார். தாவீது அப்சலோமின் முயற்சியை தடைபண்ணவில்லை.

அப்சலோம் ஜனங்களுடைய பார்வையிலே கெம்பீரமான தோற்றத்தோடிருக்கிறான். ஆனால் அவனுடைய இருதயத்தில் மோசமான திட்டங்கள் இருக்கிறது. அப்சலோம் தாவீதுக்கு கீழ்ப்படிந்து, தன்னை ஒரு நல்ல குமாரனாக நிரூபிக்கவேண்டும். ஜனங்களுக்கு அவன் உண்மையாகவே நன்மை செய்து, ஜனங்களுடைய மதிப்பையும் மரியாதையையும் பெறவேண்டும். அப்சலோம் இதுபோன்ற நியாயமான காரியங்களை செய்திருந்தால், தாவீது ராஜாவின் மரணத்திற்கு பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் அப்சலோமை, இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அமரச் செய்வார்கள்.

நன்றாக கீழ்ப்படிய தெரிந்தவர்களுக்குத்தான், நன்றாக ஆட்சி செய்யவும் தெரியும். உண்மையிலேயே நல்ல சுபாவமுள்ளவர்கள், தங்கள் சொந்த இடங்களில் நல்லவர்களாகயிருப்பார்கள். சொந்த ஊரில் துன்மார்க்கராயிருந்து கொண்டு, மற்ற ஊர்களில் நல்லவர்களைப்போல வேஷம்போட மாட்டார்கள். நல்லவர்கள் எங்குபோனாலும் நல்லவர்களாகவே இருப்பார்கள்.

அப்சலோமோ தன்னுடைய தகப்பன் இருக்கும் அரண்மனையில் துர்க்குணமுள்ளவனாகயிருக்கிறான். ஆனால் அரண்மனைக்கு வெளியிலோ, ஜனங்கள் மத்தியில் தன்னை நல்லவன்போல காண்பித்துக்கொள்கிறான்.

மேலும் அப்சலோம் காலைதோறும் எழுந்திருந்து, பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்றுகொண்டு, எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது, அவனை அழைத்து, "நீ எந்த ஊரான்" என்று கேட்பான்; அவன் "உமது அடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றுக்கடுத்த இன்ன ஊரான்" என்றால், அப்பொழுது அப்சலோம் அவனை நோக்கி; "இதோ, உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது; ஆனாலும் ராஜாவினிடத்திலே உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை" என்பான் *(2சாமு 15:2,3).*

இஸ்ரவேல் தேசத்திற்கு தான் நியாயாதிபதியாயிருக்கவேண்டும் என்பது அப்லோமின் விருப்பம். அப்சலோம் ஏற்கெனவே தன் சகோதரன் அம்னோனைக் கொன்றுபோட்டவன். அப்சலோம் நியாயாதிபதியாகயிருக்க வேண்டுமென்றால், அவன் மற்றவர்களுடைய வழக்குகளை விசாரிப்பதற்கு முன்பு, தன்னுடைய கொலைக்குற்றத்தை விசாரித்து, தனக்குத்தானே தண்டனை கொடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் அப்சலோமோ தன்னுடைய வழக்கை விசாரிக்க விரும்பவில்லை. மற்றவர்களுடைய வழக்கை விசாரிக்க விரும்புகிறான். தான் ஜனங்களுக்கு நியாயம் விசாரிக்கும்படிக்கு, தன்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்று அப்சலோம் எல்லோரிடத்திலும் சொல்லுகிறான் *(2சாமு 15:4)*

இந்த வசனப்பகுதியில் அப்சலோமின் குணாதிசயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவனுடைய ஞானத்தைப்பற்றியோ, நீதியைப்பற்றியோ, அவன் நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொண்டது பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனாலும் அப்சலோம் நியாயாதிபதியாகயிருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறான். நியாயப்பிரமாணத்தைத் தெரியாமல், வழக்குகளை விசாரிக்க முடியாது. கர்த்தருடைய சட்டம் தெரியாமல், நியாயாதிபதியின் ஆசனத்தில் அமரவும் முடியாது.

இக்காலத்திலும் அப்சலோமைப்போல சிலர், ஒரு சில பதவிகளுக்கு ஆசைப்படுகிறார்கள். அந்தப் பதவிகளை வகிப்பதற்கு அவர்களுக்கு தகுதியும் திறமையும் இல்லாவிட்டாலும், அந்தப் பதவிகளை எப்படியாவது பெற்றுக்கொள்ளவேண்டும் என்று முயற்சி பண்ணுகிறார்கள். பதவிகளுக்கு தகுதியுள்ளவர்கள் மிகுந்த கண்ணியத்தோடிருப்பார்கள். அவர்கள் பதவிகளை தேடிப்போகமாட்டார்கள். பதவிகள் அவர்களை தேடிவரும். அதுவரையிலும் பொறுமையோடிருப்பார்கள். அப்சலோமுக்கோ பொறுமையில்லை. இஸ்ரவேல் தேசத்திலே நியாயாதிபதியாக வைக்கப்படுவதற்கு அவனுக்கு தகுதியுமில்லை.

அப்சலோம் தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு, தவறான வழிமுறைகளை பின்பற்றுகிறான். வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லோரும் தன்னிடத்தில் வரவேண்டும் என்பதும், தான் அவர்களுக்கு நியாயம் செய்யவேண்டும் என்பதும் அப்சலோமின் ஆசை. இதற்காக தன்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்று அவன் ஆசைப்படுகிறான். வழக்குகள் விசாரிக்கப்படும்போது, நியாயாதிபதி, தலைமை ஸ்தானத்தில் அமர்ந்திருப்பார். இதுவே அப்சலோமின் ஆசை. அப்சலோம் தலைவனாயிருக்க விரும்புகிறான்.

அப்சலோம் இஸ்ரவேலின் ராஜரீகத்தை கைப்பற்றுவதற்கு குறுக்கு வழியில் முயற்சி பண்ணுகிறான். அதிகாரத்தைக் பிடிக்க வேண்டுமென்றால், முதலாவதாக மக்களுடைய இருதயத்தில் இடம் பிடிக்கவேண்டும். இதற்காக அப்சலோம் ஒரு சில தந்திரமான காரியங்களை செய்கிறான்.

எவனாகிலும் ஒருவன் அப்சலோமை வணங்க வரும்போது, அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி, முத்தஞ்செய்வான். இந்தப்பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொள்கிறான் *(2சாமு 15:5,6)*.

தாவீது ராஜா இஸ்ரவேல் தேசத்தை நல்ல முறையில் ராஜரீகம்பண்ணி வருகிறார். ஆனால் அப்சலோமோ இஸ்ரவேல் தேசத்தின் ராஜாங்க காரியங்களை குறை சொல்லுகிறான். ராஜாவினிடத்தில் வழக்கு வியாஜ்யமுள்ளவர்களின் காரியத்தை விசாரிப்பார் ஒருவருமில்லை என்று அப்சலோம், ஜனங்கள் மத்தியிலே விஷவிதைகளை தூவுகிறான்.

தாவீது ராஜாவுக்கு அதிக வயதாயிற்று என்றும், அவரால் ஒரு வேலையையும் ஒழுங்காய் செய்ய முடியாது என்றும், ராஜாவின் வேலைகளை தன்னிடத்தில் கொடுத்தால், அதை தன்னால் நேர்த்தியாக செய்து முடிக்க முடியும் என்றும் அப்சலோம் ஜனங்கள் மத்தியிலே தன்னைக் குறித்து பெருமையாகப் பேசுகிறான்.

அப்சலோமைப்போல தாவீதுக்கு இன்னும் அநேக குமாரர்கள் இருக்கிறார்கள். அப்சலோம் ஜனங்கள் மத்தியிலே தாவீதின் மற்ற குமாரர்களைப்பற்றி தப்பிதமான செய்திகளை பரப்புகிறான். அவர்கள் போஜனப்பிரியர்கள் என்றும், குடித்துவெறிக்கிறவர்கள் என்றும், ஜனங்களுடைய வழக்குகளை அவர்களால் விசாரிக்க முடியாது என்றும், இஸ்ரவேலை ஆளுகை செய்ய அவர்கள் தகுதியில்லாதவர்கள் என்றும், அப்சலோம் தன்னுடைய சகோதரரைப்பற்றி ஜனங்கள் மத்தியிலே பொல்லாப்புகளை சொல்லுகிறான்.

தாவீதின் குமாரர்கள் பிரதானிகளாயிருக்கிறார்கள். அவர்களுக்கு உயர்ந்த பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காய்ச் செய்யமாட்டார்கள். ஜனங்களுடைய காரியங்களை அவர்களால் விசாரிக்க முடியாது என்று அப்சலோம், தாவீதின் மற்ற குமாரர்களைப்பற்றி தப்பிதமான செய்திகளை ஜனங்கள் மத்தியிலே சொல்லுகிறான்.

அப்சலோமின் சாதுரிய வார்த்தைகளை கேட்கிறவர்கள் அவனை நம்புகிறார்கள். அப்சலோமை தேசத்தில் நியாயாதிபதியாக வைத்தால்தான் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். அப்சலோம் ஜனங்களிடத்தில் சொல்லும்போதே, அவர்கள் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது என்றும் ஆனாலும் ராஜாவினிடத்தில் அவர்களுடைய காரியத்தை விசாரிப்பார் ஒருவருமில்லை என்றும் சொல்லியிருக்கிறான். ஜனங்களும் அப்சலோமை நம்பி, அவனைத் தங்களுக்கு நியாயாதிபதியாக நியமிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள்.

அப்சலோமைப்போல, தங்கள் குடும்பத்திலும், சமுதாயத்திலும், தேசத்திலும் தீங்கு செய்கிறவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய சுயநலத்திற்காக, ஜனங்கள் மத்தியிலே குழப்பத்தை ஏற்படுத்துவார்கள். ஒற்றுமையாயிருக்கிறவர்களை பிரித்துவிடுவார்கள். சமாதானமாயிருக்கிறவர்களுக்கு மத்தியிலே சண்டைகளை உண்டுபண்ணிவிடுவார்கள்.

அப்சலோம் தங்களுக்கு நல்ல நியாயாதிபதியாயிருப்பார் என்று, ஜனங்கள் சொல்லவேண்டும். அதையும் அப்சலோம் அவர்களுக்கு சொல்லித் தருகிறான். "ராஜாவினிடத்தில் ஜனங்களுடைய காரியத்தை விசாரிப்பார் ஒருவருமில்லை" என்று சொல்லும்போதே, "ஜனங்களுக்கு நியாயம் செய்யும்படிக்கு என்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும்" என்றும் அப்சலோம் சொல்லுகிறான்.

அப்சலோம் தன்னை இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே, ஒரு துடிப்பான வாலிபனைப்போல காண்பித்துக் கொள்கிறான். வழக்குகளெல்லாம் நல்ல முறையில் விசாரிக்கப்பட்டு, ஜனங்களுக்கு நியாயம் செய்யப்படும் என்று உறுதிசொல்லுகிறான். தங்களுடைய வழக்குகளை அப்சலோம் விசாரிக்கவேண்டுமென்று ஜனங்களும் விரும்புகிறார்கள்.

அப்சலோம் ஜனங்கள் மத்தியில் தனக்கு மதிப்பும் அக்கரையும் இருப்பதுபோல காண்பித்துக்கொள்கிறான். அவன் ராஜாவின் அரண்மனையிலிருக்க வேண்டியவன். ஆனால் அப்சலோம் காலைதோறும் எழுந்திருந்து, பட்டணத்து வாசலுக்கு போகிற வழி ஓரத்தில் நின்றுகொண்டு, ராஜாவினிடத்தில் வழக்கு விசாரிக்கப்போகிறவர்களை, தானாகவே வலியப்போய் அவர்களைப் பார்த்து பேசுகிறான். அவர்களுடைய ஊரையும், அவர்களுடைய வழக்குகளையும் விசாரித்து, தனக்கு அவர்கள்மீது அக்கரையுள்ளதுபோல காண்பித்துக் கொள்கிறான். அவர்களுடைய வழக்குகளில் நேர்மையும் நியாயமும் இருக்கிறது என்று அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையும் சொல்லுகிறான்.

அப்சலோமின் இருதயத்தில் பெருமை இருக்கிறது. ஆனால் அவன் தன்னுடைய இருதயத்தின் பெருமையை மறைத்துவிட்டு, தனக்கு தாழ்மை இருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். எவனாகிலும் ஒருவன் அப்சலோமை வணங்க வரும்போது, அப்சலோம் அவனை வணங்குவதோடு நிறுத்திக்கொள்ளமாட்டான். தன் கையை நீட்டி அவனைத் தழுவி, முத்தம் செய்வான். இவ்வாறாக அப்சலோம் இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொள்கிறான்.

அப்சலோமின் இருதயம் லூசிபரைப்போல பெருமையோடிருக்கிறது. அப்சலோம் லூசிபரைப்போல தந்திரக்காரனாயுமிருக்கிறான். இஸ்ரவேல் ஜனங்களும் அப்சலோமின் தந்திரங்களை அறியாமல் அவனை நேசிக்கிறார்கள். தங்கள் இருதயத்தில் அப்சலோமுக்கு இடங்கொடுக்கிறார்கள். அப்சலோமும் தன்னுடைய சாதுரிய வார்த்தைகளினாலும், மாய்மாலமான காரியங்களினாலும், வெளிவேஷங்களினாலும் இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொள்கிறான்.

எப்ரோனில் அப்சலோம்
2சாமு 15:7-12

2சாமு 15:7. நாற்பது வருஷம் சென்றபின்பு, அப்சலோம் ராஜாவை நோக்கி: நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும்படிக்கு நான் போக உத்தரவுகொடும்.

2சாமு 15:8. கர்த்தர் என்னை எருசலேமுக்குத் திரும்பி வரப்பண்ணினால், கர்த்தருக்கு ஆராதனை செய்வேன் என்று உமது அடியானாகிய நான் சீரியாதேசத்தில் கேசூரிலே குடியிருக்கும்போது, பொருத்தனை பண்ணினேன் என்றான்.

2சாமு 15:9. அதற்கு ராஜா, சமாதானத்தோடே போ என்றான்; அப்பொழுது அவன் எழுந்து எப்ரோனுக்குப் போனான்.

2சாமு 15:10. அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் வேவுகாரரை அனுப்பி, நீங்கள் எக்காளத்தொனியைக் கேட்கும் போது, அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்று சொல்லுங்கள் என்று சொல்லிச்சொல்லி வைத்திருந்தான்.

2சாமு 15:11. எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறுபேர் அப்சலோமோடே கூடப்போனார்கள்; அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போனார்கள்.

2சாமு 15:12. அப்சலோம் பலிகளைச் செலுத்தும் போது, தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேல் என்னும் கீலோனியனையும் அவன் ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பித்தான்; அப்படியே கட்டுப்பாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள்.

அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக கலகம்பண்ண ஆரம்பிக்கிறான். அவனுடைய இருதயத்தில் ஏற்கெனவே கலகக்குணம் இருந்தது. அது வெளியே தெரியாமல் மறைவாயிருந்தது. இப்போது அப்சலோமின் கலகக்குணமும், அவனுடைய சதிஆலோசனையும், சதித்திட்டமும் வெளிப்படுகிறது.

அப்சலோமின் இருதயத்தில் அவனுடைய ஆவி அமைதியில்லாமலிருந்தது. அப்சலோம் அம்னோனைக் கொல்ல வேண்டுமென்று சதிபண்ணினான். தன்னுடைய ஆலோசனைப் பிரகாரமாக, அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டான். இஸ்ரவேலின் சிங்காசனத்திலே தாவீதுக்கு பதிலாக, தான் அமர்ந்து, ஆட்சி செய்யவேண்டுமென்று அப்சலோம் சதிபண்ணுகிறான். அப்சலோம் தன்னுடைய சதித்திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பிக்கிறான்.

அப்சலோம் தாவீதுக்கு முன்பாக தன்னை ஒரு புதிய மனுஷன்போல காண்பித்துக்கொள்கிறான். தன்னுடைய பழைய பாவசுபாவங்களெல்லாம் தன்னைவிட்டு நீங்கிப்போனதுபோல மாய்மாலம்பண்ணுகிறான்.

அப்சலோம் தன்னுடைய சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எப்ரோனைத் தெரிந்தெடுக்கிறான். அப்சலோம் எப்ரோனில் பிறந்தவன். தாவீது முதன்முதலாக எப்ரோனில்தான் தன்னுடைய ராஜரீகத்தை ஆரம்பித்தார். அவர் எப்ரோனிலே பல வருஷங்களாகயிருந்து, இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணினார்.

எப்ரோன் ஒரு ராஜரீகப்பட்டணம் என்பது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் தெரியும். யூதாவின் மனுஷர் எப்ரோனை அதிகமாக நேசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் இருதயத்தில் எப்ரோனுக்கு அதிக மதிப்பும் மரியாதையும், முக்கியத்துவமும் கொடுக்கிறார்கள். எப்ரோன் யூதாகோத்திரத்தின் நடுப்பகுதியிலிருக்கிறது. அப்சலோமும் தன்னுடைய சதித்திட்டத்தை, யூதாகோத்திரத்தார் மத்தியிலே, எப்ரோனிலே ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறான். இங்கே அப்சலோமுக்கு வேண்டிய சிநேகிதர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

நாற்பது வருஷம் சென்றபின்பு, அப்சலோம் தாவீது ராஜாவை நோக்கி: "நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும்படிக்கு நான் போக உத்தரவுகொடும். கர்த்தர் என்னை எருசலேமுக்குத் திரும்பி வரப்பண்ணினால், கர்த்தருக்கு ஆராதனை செய்வேன் என்று உமது அடியானாகிய நான் சீரியாதேசத்தில் கேசூரிலே குடியிருக்கும்போது, பொருத்தனை பண்ணினேன்" *(2சாமு 15:7,8)* என்று சொல்லுகிறான்.

தான் கேசூரிலிருந்தபோது, இந்தப் பொருத்தனையை பண்ணியதாக அப்சலோம் சொல்லுகிறான். இது ஒரு மாய்மாலம். அப்சலோம் தாவீதின் அனுமதியோடு எப்ரோனுக்குப்போக விரும்புகிறான். அப்சலோம் கர்த்தருக்கு பண்ணின பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும்படிக்கு போகவிரும்புவதினால், தாவீது ராஜாவும் அவனுக்கு அனுமதி மறுக்கமாட்டார். அவர் அப்சலோமை சந்தோஷமாய் அனுப்பி வைப்பார்.

அப்சலோம் எருசலேமுக்கு திரும்பி வந்ததற்காகவும், அவன் தான் பண்ணின பொருத்தனையை நினைவுகூருவதற்காகவும், அந்தப் பொருத்தனையை நிறைவேற்ற விரும்புவதாகவும் சொல்லுகிற வார்த்தைகள் தாவீதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அப்சலோம் கர்த்தரை சேவிக்க ஆரம்பித்திருக்கிறான் என்னும் சிந்தனை தாவீதின் மனதிலே சமாதானத்தைக் கொடுக்கிறது. தாவீது ராஜா அப்சலோமைப் பார்த்து, "சமாதானத்தோடே போ" என்று சொல்லி, அவனை எப்ரோனுக்கு வழியனுப்பி வைக்கிறார்.

அப்சலோமும் எழுந்து எப்ரோனுக்குப் போகிறான். அவன் அங்கே தனியாய்ப் போகவில்லை. எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறுபேர் அப்சலோமோடே கூடப்போகிறார்கள்; அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போகிறார்கள் *(2சாமு 15:11)*. எருசலேமிலிருந்து தன்னோடு எப்ரோனுக்கு வருகிறவர்களுக்கு, தன்னுடைய சதித்திட்டம் தெரியக்கூடாது என்று அப்சலோம் தீர்மானித்திருக்கிறான். ஆகையினால் அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் அப்சலோமோகூட, எருசலேமிலிருந்து எப்ரோனுக்குப் போகிறார்கள்.

எருசலேமிலிருந்து போகிற இருநூறுபேரும் தாவீதுக்கு உண்மையுள்ளவர்கள். அவர்கள் தாவீதைப் பின்பற்றுகிறவர்கள். ஆனால் அவர்கள் இப்போது அப்சலோமோடுகூட எப்ரோனுக்குப் போகிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலுள்ள பொதுஜனங்கள், அப்சலோமோடு கூடப்போகிற எருசலேமின் மனுஷர் இருநூறுபேரையும் பார்ப்பார்கள். இவர்கள் எல்லோரும் அப்சலோமை சேர்ந்துகொண்டார்கள் என்று நினைப்பார்கள். தாவீது எருசலேமிலுள்ள தன்னுடைய நம்பிக்கைக்குரிய சிநேகிதர்களை இழந்துவிட்டார் என்றும் ஜனங்கள் நினைப்பதற்கு வாய்ப்புள்ளது.

எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறுபேரும், அப்சலோமோடே கூடப்போனாலும், அவர்களுக்கு அவனுடைய சதித்திட்டம் தெரியாது. அவர்களிடத்தில் வஞ்சகமில்லை. அவர்கள் அப்சலோமின் சதித்திட்டத்தை அறியாமலேயே அவனோடு கூடப்போகிறார்கள். அப்சலோம் கர்த்தருக்கு பண்ணின தன்னுடைய பொருத்தனையை செலுத்துவதற்காக எப்ரோனுக்குப் போகிறான் என்று நினைத்து, எருசலேமின் மனுஷர் அவனோடே கூடப்போகிறார்கள்.

அப்சலோம் மார்க்க ஆராதனையை தன்னுடைய சுயநலத்திற்காக பயன்படுத்துகிறான். ஆராதனை, பொருத்தனை என்று சொல்லும்போது, ஜனங்கள் அதை நம்புவார்கள். ஆனால் அப்சலோமோ மார்க்கத்தின் பெயரால் சதிபண்ணுகிறான்.

கர்த்தருடைய நாமத்தினால் அவருடைய பிள்ளைகளை எளிதாகக் கூட்டிவிடலாம். ஏராளமாகவும் கூட்டிவிடலாம். மார்க்கத்தலைவர்களின் இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். அவர்களுக்கு மெய்யாகவே கர்த்தரிடத்தில் பயமும் பக்தியும் இருக்கவேண்டும். இல்லையென்றால், மார்க்கத்தலைவர்கள், கர்த்தருடைய ஜனங்களை, தவறான பாதையில் வழிநடத்துவதற்கு வாய்ப்புள்ளது. ஜனங்களும் வஞ்சகமில்லாமல், அறியாமையினால் மார்க்கத்தலைவர்களை பின்பற்றிப்போவார்கள்.

மார்க்கத்தலைவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளை தங்களுடைய சுயஆதாயத்திற்காக பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புள்ளது. கர்த்தருடைய ஜனம் நல்ல நோக்கத்தோடு கூடிவந்தாலும், அவர்களுக்கு சாத்தானுடைய தந்திரம் தெரிவதில்லை. இவர்கள் சாத்தான் விரிக்கும் வலையிலும் கண்ணியிலும், வஞ்சகமின்றி அறியாமையினால் சிக்கிக்கொள்கிறார்கள்.

அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் வேவுகாரரை அனுப்பி, நீங்கள் எக்காளத்தொனியைக் கேட்கும் போது, அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்று சொல்லுங்கள் என்று சொல்லச்சொல்லி வைத்திருந்தான் *(2சாமு 15:10).*

இஸ்ரவேலுக்கு ராஜாவாகவேண்டும் என்பது அப்சலோமின் திட்டம். அவன் தன்னுடைய சதித்திட்டத்தை, தன்னுடைய வேவுகாரர் மூலமாக, இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கெல்லாம் சொல்லியனுப்புகிறான். "அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான்" என்னும் செய்தியை, எக்காள தொனியைக் கேட்கும்போது, அவர்கள் அறிவிக்கவேண்டும்.

தாவீதுக்கு வயதாயிற்று. எக்காள தொனியையும், அப்சலோமின் ஆட்கள் அறிவிக்கிற செய்தியையும் ஜனங்கள் கேட்கும்போது, தாவீது ஒருவேளை தன்னுடைய ராஜ்யபார பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற்று விட்டாரோ என்றும் அல்லது தாவீது மரித்துப்போய்விட்டாரோ என்றும் நினைப்பார்கள். தாவீதுக்கு பதிலாக அப்சலோம் முறைப்படி, நியாயமான வழியில், எப்ரோனிலே ராஜாவானான் என்று தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். ஜனங்களுக்கு அப்சலோமின் சதித்திட்டம் தெரியாது. அவர்களுக்கு அப்சலோமின் சதித்திட்டம் தெரிந்திருந்தால், அவர்கள் அவனுக்கு ஒத்துழைக்கமாட்டார்கள். ஜனங்கள் அப்சலோமின் சதித்திட்டத்தை முறியடித்துவிடுவார்கள்.

அகித்தோப்பேல் என்பவன் அப்சலோமின் சதிஆலோசனைகளுக்கு உடந்தையாயிருக்கிறான். அகித்தோப்பேலுக்கு ராஜதந்திரங்களெல்லாம் நன்றாய்த் தெரியும். இவன் தாவீதுக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன். தாவீதுக்கும் அகித்தோப்பேலுக்கும் ஏற்பட்ட பிரச்சனையினால், இவர்கள் இருவரும் பிரிந்திருக்கவேண்டும். அல்லது தாவீது அகித்தோப்பேலை ஏதோ ஒரு காரணத்திற்காக, தன்னுடைய அரண்மனையைவிட்டு வெளியேற்றியிருக்க வேண்டும். அப்சலோமுக்கு அகித்தோப்பேலைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

அப்சலோம் பலிகளைச் செலுத்தும் போது, தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேல் என்னும் கீலோனியனையும் அவன் ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பிக்கிறான் *(2சாமு 15:12).* அகித்தோப்பேல் அப்சலோமோடு சேர்ந்துகொள்கிறான். அப்சலோமின் சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, அகித்தோப்பேல் அவனுக்கு மிகவும் உதவியாயிருக்கிறான். அப்படியே கட்டுப்பாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடுகிறார்கள்.

அப்சலோமோடு கூடயிருக்கிற ஜனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இதனால் அவனுடைய சதித்திட்டமும் வலுவடைகிறது. அப்சலோம் ஏற்கெனவே மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டவன். அவர்கள் எல்லோருமே எப்ரோனிலிருக்கும் அப்சலோமினிடத்திற்கு திரளாய்க் கூடிவருகிறார்கள். கர்த்தருக்கு பொருத்தனையை செலுத்துவது என்னும் பெயரிலே அவர்களெல்லோரும், அப்சலோமுக்கு ஆதரவாக, எப்ரோனிலே வந்து கூடுகிறார்கள். இவர்கள் அப்சலோமின் மேல் பிரியமாயிருக்கிறார்கள். இவர்களில் அநேகர் அப்சலோம் இஸ்ரவேலுக்கு ராஜாவாகவேண்டுமென்று விரும்புகிறவர்கள்.

தப்பி ஓடும் தாவீது
2சாமு 15:13-23

2சாமு 15:13. அதை அறிவிக்கிற ஒருவன் தாவீதினிடத்தில் வந்து, இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமை பற்றிப்போகிறது என்றான்.

2சாமு 15:14. அப்பொழுது தாவீது எருசலேமிலே தன்னிடத்திலுள்ள தன்னுடைய எல்லா ஊழியக்காரரையும் நோக்கி: எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை; அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து நம்மைப் பிடித்து, நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள் என்றான்.

2சாமு 15:15. ராஜாவின் ஊழியக்காரர் ராஜாவைப் பார்த்து: இதோ, ராஜாவாகிய எங்கள் ஆண்டவன் கட்டளையிடும் காரியத்தையெல்லாம் செய்ய உமது அடியாராகிய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம் என்றார்கள்.

2சாமு 15:16. அப்படியே ராஜாவும் அவனுடைய வீட்டார் எல்லாரும் கால்நடையாய்ப் புறப்பட்டார்கள்; வீட்டைக்காக்க ராஜா மறுமனையாட்டிகளாகிய பத்து ஸ்திரீகளைப் பின்வைத்தான்.

2சாமு 15:17. ராஜாவும் சமஸ்த ஜனங்களும் கால்நடையாய்ப் புறப்பட்டு, சற்றுத்தூரம்போய், ஒரு இடத்திலே தரித்து நின்றார்கள்.

2சாமு 15:18. அவனுடைய ஊழியக்காரர் எல்லாரும், கிரேத்தியர் யாவரும், பிலேத்தியர் யாவரும் அவன் பக்கத்திலே நடந்து போனார்கள்; காத்தூரிலிருந்து கால்நடையாய் வந்திருந்த அறுநூறுபேராகிய கித்தியர் எல்லாரும் ராஜாவுக்குமுன்பாக நடந்தார்கள்.

2சாமு 15:19. அப்பொழுது ராஜா கித்தியனாகிய ஈத்தாயைப் பார்த்து: நீ எங்களுடனே கூட வருவானேன்? நீ திரும்பிப்போய் ராஜாவுடனேகூட இரு; நீ அந்நியதேசத்தான்; நீ உன் இடத்திற்குத் திரும்பிப் போகலாம்.

2சாமு 15:20. நீ நேற்றுதானே வந்தாய்; இன்று நான் உன்னை எங்களோடே நடந்துவரும்படிக்கு அழைத்துக்கொண்டு போகலாமா? நான் போகக்கூடிய இடத்திற்குப் போகிறேன்; நீ உன் சகோதரரையும் அழைத்துக்கொண்டு திரும்பிப்போ; கிருபையும் உண்மையும் உன்னோடே இருப்பதாக என்றான்.

2சாமு 15:21. ஆனாலும் ஈத்தாய் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும், செத்தாலும் பிழைத்தாலும், இருப்பான் என்று கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 15:22. அப்பொழுது தாவீது ஈத்தாயை நோக்கி: நடந்துவா என்றான்; அப்படியே கித்தியனாகிய ஈத்தாயும் அவனுடைய எல்லா மனுஷரும் அவனோடிருக்கிற எல்லாப் பிள்ளைகளும் நடந்துபோனார்கள்.

2சாமு 15:23. சகல ஜனங்களும் நடந்துபோகிறபோது, தேசத்தார் எல்லாரும் மகா சத்தமாய் அழுதார்கள்; ராஜா கீதரோன் ஆற்றைக் கடந்தான்; ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்துபோனார்கள்.

அப்சலோம் எப்ரோனில் தாவீதுக்கு விரோதமாக சதிபண்ணும் செய்தி, அவருக்கு அறிவிக்கப்படுகிறது. அதை அறிவிக்கிற ஒருவன் தாவீதினிடத்தில் வந்து, "இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமை பற்றிப்போகிறது" *(2சாமு 15:13)* என்று சொல்லுகிறான். தனக்கு விரோதமாக நடைபெறும் சதி தாவீதுக்கு வேதனையைத் தருகிறது. இது அவருக்கு ஒரு துர்ச்செய்தி.

"இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமைப்பற்றிப்போகிறது" என்னும் செய்தி தாவீதுக்கு மிகவும் மோசமான செய்தியாகயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் ஏராளமான ஜனங்களும், அவர்களில் பிரதானமானவர்களும் இப்போது அப்சலோமோடு கூடயிருக்கிறார்கள். ஒரு நல்ல ராஜா தன்னுடைய தேசத்து ஜனங்களின் இருதயத்தைக் கவர்ந்துகொள்வார். ஆனால் தாவீதோ அதைச் செய்யவில்லை. அப்சலோம் இஸ்ரவேல் மனுஷரோடு நயமாகப் பேசி அவர்களுடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான். ஆகையினால் இப்போது இஸ்ரவேலின் ஒவ்வொருவருடைய இருதயமும், தாவீதைப்பற்றிப்போகாமல், அப்சலோமைப்பற்றிப்போகிறது.

ஒரு ராஜா தன்னுடைய தேசத்து ஜனங்களின் இருதயங்களில் இடம் பிடிக்கவேண்டும். அவர்களுடைய இருதயங்கள் ராஜாவை பற்றிப்போகவேண்டும். ராஜா தன் தேசத்து ஜனங்களின் இருதயத்தை கவர்ந்துகொள்ளும்போது, அவர்களிடத்திலிருக்கிற பலத்தையும், ஆயுதங்களையும், பணத்தையும், தன்னுடைய தேசத்தின் நன்மைக்காகவும், சேவைக்காகவும் கவர்ந்துகொள்கிறார். ராஜாவின்மீது பிரியமாயிருக்கிற ஜனங்கள், தேசத்துக்கு சேவை செய்ய முன்வருவார்கள். தாங்கள் விரும்புகிற ராஜாவுக்கு தியாகம்பண்ணவும் ஆயத்தமாயிருப்பார்கள்.

எப்ரோனில் நடைபெறும் செய்தியை தனக்கு சொன்னவுடனே, தாவீது எருசலேமிலே தன்னிடத்திலுள்ள எல்லா ஊழியக்காரரையும் நோக்கி: "எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை; அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து நம்மைப் பிடித்து, நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள்" (2சாமு 15:14) என்று சொல்லுகிறார்.

தாவீது தன் குமாரனாகிய அப்சலோமின்மீது பாசமாயிருக்கிறார். அவன் தனக்கு விரோதமாக கலகம் பண்ணுவதை தாவீதால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அப்சலோமிடத்தில் நன்றியுள்ள இருதயமில்லை. அவன் இஸ்ரவேல் தேசத்திற்கு முறையான வழியில் ராஜாவாகாமல், குறுக்கு வழியில் ராஜாவாகிறான். அவன் தாவீதுக்கு விரோதமாக ஆயுதம் ஏந்துகிறான். திரளான ஜனங்களை தனக்கு ஆதரவாகக் கூட்டுகிறான்.

அப்சலோமின் சதிஆலோசனையைக் கேட்டவுடனே, தாவீது சுயமாய்த் தீர்மானம்பண்ணுகிறார். அவர் இஸ்ரவேலின் ஆலோசனைச்சங்கத்தைக் கூட்டவில்லை. அவர்களுடைய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்கவில்லை. தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். தன்னுடைய இருதயத்திற்கு சரியாய்த் தோன்றுகிறபடி செயல்படுகிறார். அப்சலோமைப்பற்றிய செய்தி கிடைத்தவுடன், தாவீது முதல் வேலையாக, எருசலேமைவிட்டு தப்பித்து ஓடிவிடவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறவர். அவர் கர்த்தருடைய அன்புக்கும், கோலுக்கும் கட்டுப்படுகிறவர். தன்னுடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் தன்னைத் தண்டிக்கும்போது, தாவீது அந்தத் தண்டனையைத் தாங்கிக்கொள்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே தனக்கு, தன்னுடைய குமாரன் மூலமாக பிரச்சனை வந்திருப்பது, கர்த்தருடைய சித்தம் என்று தாவீது தீர்மானிக்கிறார். இந்தப் பிரச்சனையின் மூலமாய் கர்த்தர் தன்னை கண்டித்து திருத்துகிறார் என்பதையும் தாவீது அங்கீகரிக்கிறார்.

தாவீதுக்கு அரசியல் தந்திரங்கள் தெரியும். அவர் இஸ்ரவேல் தேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மேலும் பற்றுதலாயிருக்கிறார். எருசலேம் மிகப்பெரிய பட்டணம். ஆனால் இந்தப் பட்டணத்திற்கு போதுமான பாதுகாப்பு இல்லை. இப்போது தாவீதோடுகூட ஒரு சிலர் மாத்திரமே பாதுகாப்புக்காக இருக்கிறார்கள். அப்சலோம் தன்னுடைய திரளான கூட்டத்தோடு, எருசலேமுக்கு விரோதமாக வந்தால், தாவீதின் ஜனங்களால் எருசலேமைப் பாதுகாக்க முடியாது. அவர்களால் அப்சலோமுக்கு எதிர்த்து நிற்க முடியாது.

அப்சலோமோடு கூடயிருக்கிறவர்களும் அவனுக்கு ஆதரவாயிருக்கிறவர்கள். எருசலேமிலுள்ளவர்கள்கூட, தாவீதுக்கு உண்மையுள்ளவர்களாயிராமல், அப்சலோமுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். அப்சலோம் தன்னுடைய திரளான கூட்டத்தோடு எருசலேமுக்கு விரோதமாக வரும்போது, தாவீதும் அவருடைய சிறிய சேனையும் அவனுக்கு எதிர்த்து நின்றால், அப்சலோம் எருசலேமையே அழித்துவிடுவான். தாவீது எருசலேமை நேசிக்கிறார். எருசலேம் சமாதானத்தின் நகரம். எருசலேம் நகரத்திற்குள்ளே யுத்தம் நடைபெறக்கூடாது என்று தாவீது தீர்மானமாயிருக்கிறார்.

தாவீது எருசலேமை நேசிப்பதினால், எருசலேமுக்கு சேதம் வராக்கூடாது என்று யோசிக்கிறார். தானும், தன்னுடைய ஊழியக்காரரும், எருசலேமைவிட்டு ஓடிப்போய்விட்டால், அப்சலோமுக்கு இந்த நகரத்திலே எதிர்ப்பு இருக்காது. எருசலேம் நகரம் அழிவுக்கு தப்பிக்கும். அப்சலோமும் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடவேண்டிய அவசியம் இருக்காது.

தாவீதும் அவரிடத்திலுள்ள எல்லா வேலைக்காரரும் எருசலேமைவிட்டு வேகமாக ஓடிப்போகிறார்கள். தாவீது ராஜாவும் அவருடைய வீட்டார் எல்லாரும் கால்நடையாய் புறப்படுகிறார்கள். தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்கோ இரதங்களும் குதிரைகளும் இருக்கிறது.

தாவீது எருசலேமைவிட்டு ஓடிப்போகும்போது, தன்னுடைய வீட்டார் எல்லோரையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போகிறார். தாவீது ராஜாவின் மனைவிகளும், அவருடைய பிள்ளைகளும் அவரோடு கூடபோகிறார்கள். தாவீதுக்கும் அவருடைய வீட்டாருக்கும் இது ஆபத்துக்காலமாயிருக்கிறது. அவர் தன்னுடைய வீட்டாரை இந்த ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்கவேண்டும். தாவீதுக்கு இது துக்ககாலமாயிருக்கிறது. தாவீதின் வீட்டார் அவருக்கு இந்த துக்கத்திலே ஆறுதலாயிருக்கவேண்டும்.

தாவீது தன்னுடைய ஊழியக்காரரை நோக்கி "எழுந்து ஓடிப்போவோம்" என்று சொன்னபோது, ராஜாவின் ஊழியக்காரர் ராஜாவைப் பார்த்து: "இதோ, ராஜாவாகிய எங்கள் ஆண்டவன் கட்டளையிடும் காரியத்தையெல்லாம் செய்ய உமது அடியாராகிய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்" *(2சாமு 15:15)* என்று சொல்லுகிறார்கள்.

தாவீது எருசலேமைவிட்டு ஓடிப்போகும்போது, அவர் பக்கத்திலே கிரேத்தியர் யாவரும், பிலேத்தியர் யாவரும் நடந்துபோகிறார்கள். காத்தூரிலிருந்து கால்நடையாய் வந்திருந்த அறுநூறுபேராகிய கித்தியர் எல்லாரும் தாவீது ராஜாவுக்கு முன்பாக நடக்கிறார்கள் *(2சாமு 15:18)*.

கித்தியர் பெலிஸ்தரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். தாவீது காத் தேசத்திலிருந்தபோது, அவருக்கும் கித்தியருக்கும் நெருங்கிய பழக்கமுண்டாயிற்று. தாவீதின் நீதியையும், தெய்வபக்தியையும் பார்த்து கித்தியர் அவரை சிநேகிக்க ஆரம்பித்தார்கள். இவர்கள் பெலிஸ்தராகயிருந்தாலும், தங்களுடைய புறஜாதி மார்க்கத்தை விட்டுவிட்டு, யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். தாவீது கித்தியரை தன்னுடைய மெய்க்காப்பாளராக நியமித்துக்கொண்டார்.

தாவீது எருசலேமைவிட்டு ஓடிப்போகும்போது, யாரையும் தன்னோடுகூட வருமாறு கட்டாயம்பண்ணவில்லை. ராஜாவும் சமஸ்த ஜனங்களும் கால்நடையாய்ப் புறப்பட்டு, சற்றுத்தூரம்போய், ஒரு இடத்திலே தரித்து நிற்கிறார்கள் *(2சாமு 15:17)*. தாவீது தன்னோடு கூடவந்த எருசலேமின் ஜனங்களையும் அழைத்துக்கொண்டு, கால்நடையாய்ப் புறப்பட்டுப்போகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய ஊழியத்தை செய்யுமாறு யாரையும் கட்டாயம்பண்ணமாட்டார். கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டுமென்று, மனப்பூர்வமாய் முன்வருகிறவர்களை, கிறிஸ்துவானவர் ஏற்றுக்கொண்டு அவர்களை தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.

தாவீது ராஜாவும், அவருடைய வீட்டார் எல்லாரும் எருசலேமைவிட்டு கால்நடையாய்ப் புறப்பட்டுப்போகிறார்கள். வீட்டைக்காக்க தாவீது ராஜா தன்னுடைய மறுமனையாட்டிகளாகிய பத்து ஸ்திரீகளைப் பின்வைக்கிறார். இந்த பத்து ஸ்திரீகளும் தாவீது ராஜாவின் அரண்மனையில் தங்கிவிடுகிறார்கள்.

தாவீது ராஜாவுக்கு முன்பாக அறுநூறு பேராகிய கித்தியர் நடந்து போகிறார்கள். அப்பொழுது தாவீது ராஜா கித்தியனாகிய ஈத்தாயைப் பார்த்து: "நீ எங்களுடனே கூட வருவானேன்? நீ திரும்பிப்போய் ராஜாவுடனேகூட இரு; நீ அந்நியதேசத்தான்; நீ உன் இடத்திற்குத் திரும்பிப் போகலாம். நீ நேற்றுதானே வந்தாய்; இன்று நான் உன்னை எங்களோடே நடந்துவரும்படிக்கு அழைத்துக்கொண்டு போகலாமா? நான் போகக்கூடிய இடத்திற்குப் போகிறேன்; நீ உன் சகோதரரையும் அழைத்துக்கொண்டு திரும்பிப்போ; கிருபையும் உண்மையும் உன்னோடே இருப்பதாக" (2சாமு 15:19,20) என்று சொல்லுகிறார்.

ஈத்தாய் தாவீதைப் பின்பற்றவேண்டுமென்று விரும்புகிறானா அல்லது அப்சலோமைப் பின்பற்றவேண்டு மென்று விரும்புகிறானா என்பது தாவீதுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. தாவீது ஈத்தாயின் இருதயத்திலுள்ள நினைவுகளை அறிந்துகொள்ள விரும்புகிறார். ஆகையினால் ஈத்தாயும், அவனோடு கூடயிருக்கிறவர்களும் எருசலேமுக்கு திரும்பிப்போகும் வாய்ப்பை தாவீது அவர்களுக்கு கொடுக்கிறார். ஈத்தாய் தாவீதை சேவிக்க விரும்பவில்லையென்றால், அவனும், அவனோடு கூடயிருக்கிற மனுஷரும், எருசலேமுக்கு புதிய ராஜாவாக வரப்போகிற அப்சலோமை சேவிக்கலாம். தாவீது ஈத்தாயை கட்டாயம்பண்ணவில்லை.

ஈத்தாய் தாவீதுக்கு உண்மையுள்ளவனாகயிருந்தாலும், அவன் தன்னோடுகூட பாடுகளை அனுபவிப்பதை தாவீது விரும்பவில்லை. தாவீதுக்கு முன்பாக பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாடுகள் கித்தியருக்கு வஜ்வேண்டாம் என்று தாவீது நினைக்கிறார். "இன்று நான் உன்னை எங்களோடேகூட நடந்து வரும்படிக்கு அழைத்துக்கொண்டுபோகலாமா" என்று தாவீது ஈத்தாயிடம் கேட்கிறார்.

காத்தூரிலிருந்து ஈத்தாயும், அறுநூறு பேராகிய கித்தியர் எல்லோரும் நேற்றுதான் தாவீதைப் பார்ப்பதற்காக எருசலேமுக்கு வந்திருந்தார்கள். ஆனால் இன்று தாவீது எருசலேமைவிட்டு ஓடிப்போகிறார். கித்தியர் தன்னோடுகூட கஷ்டங்களை அனுபவிக்க வேண்டாம் என்று தாவீது நினைக்கிறார்.

நல்ல குணமுள்ளவர்கள், மற்றவர்களுடைய துன்பத்தையும் தங்களுடைய துன்பம்போல பாவிப்பார்கள். ஈத்தாய் தன்னோடுகூட வந்தால் அவனுக்கு துன்பம் உண்டாகும் என்று தாவீது நினைக்கிறார். ஈத்தாயிக்கு துன்பம் வரக்கூடாது என்று தாவீது விரும்புகிறார். தாவீது ஈத்தாயிடம் "நீ உன் சகோதரரையும் அழைத்துக்கொண்டு திரும்பிப்போ; கிருபையும் உண்மையும் உன்னோடே இருப்பதாக" என்று ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லி, அவனை திருப்பி அனுப்புகிறார்.

தன்னுடைய ஆறுதலுக்கும் சந்தோஷத்திற்கும் தாவீது கர்த்தருடைய சத்தியத்தையும், அவருடைய கிருபையையும் நம்பியிருக்கிறார். தனக்கு மாத்திரமல்ல, தன்னுடைய சிநேகிதருக்கும் கர்த்தருடைய கிருபையே நன்மையைத் தரும் என்று தாவீது நம்பிக்கையோடிருக்கிறார்.

"அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்; தயையும் உண்மையும் அவரைக் காக்கக்கட்டளையிடும்" (சங் 61:7).

ஈத்தாய் தாவீதை விட்டுவிட்டு, எருசலேமுக்கு திரும்பிப்போக விரும்பவில்லை. தாவீது ராஜா எங்கே போனாலும் அங்கே தானும், தன்னுடைய மனுஷரும் கூடவே வர விரும்புவதாகவே சொல்லுகிறான்.

தாவீது ஈத்தாயைப் பார்த்து, "நீ உன் சகோதரரையும் அழைத்துக்கொண்டு திரும்பிப்போ" என்று சொல்லுகிறார். ஆனாலும் ஈத்தாய் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: "ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும், செத்தாலும் பிழைத்தாலும், இருப்பான் என்று கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" (2சாமு 15:21) என்று சொல்லுகிறான்.

அப்பொழுது தாவீது ஈத்தாயை நோக்கி: "நடந்துவா" என்று சொல்லுகிறார்; அப்படியே கித்தியனாகிய ஈத்தாயும் அவனுடைய எல்லா மனுஷரும் அவனோடிருக்கிற எல்லாப் பிள்ளைகளும் தாவீதோடுகூட நடந்துபோகிறார்கள் (2சாமு 15:22).

ஈத்தாய் தாவீதுக்கு உண்மையான சிநேகிதன். செத்தாலும் பிழைத்தாலும் ஈத்தாய் தாவீதோடுகூடவே இருக்க விரும்புகிறான். ஈத்தாய் தன்னுடைய வார்த்தையை சொல்லும்போது, கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுகிறான். "கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" என்று ஈத்தாய் தன்னுடைய வார்த்தைகளை ஆணையிட்டு உறுதிபண்ணுகிறான். ஈத்தாய் தன்னுடைய வார்த்தையை முறித்துப்போட விரும்பவில்லை. ஆகையினால் அவன் தன்னுடைய வார்த்தைகளை கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிட்டு உறுதிபண்ணுகிறான்.

ஈத்தாய் தாவீதை உண்மையாய்ப் பின்பற்றுவதுபோல, விசுவாசிகளாகிய நாமும் தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றவேண்டும். நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய நோக்கம் தெளிவாயிருக்கவேண்டும். மரணமோ ஜீவனோ இயேசுகிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்காது என்று, நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து நாம் சொல்லவேண்டும்.

தாவீது நடந்துபோகும்போது எருசலேமிலுள்ள சகல ஜனங்களும் அவரோடு கூட நடந்துபோகிறார்கள். அவர்கள் தாவீது அனுபவிக்கும் பாடுகளையும், வேதனைகளையும் பார்க்கிறார்கள். சகல ஜனங்களும் நடந்துபோகிறபோது, தேசத்தார் எல்லாரும் மகா சத்தமாய் அழுகிறார்கள்;

தாவீது ராஜா கீதரோன் ஆற்றைக் கடக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்முடைய பாடுகளுக்குள் பிரவேசிக்கும்போது, இதே கீதரோன் ஆற்றைக்கடந்துபோனார்.

"இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்" (யோவா 18:1).

தாவீது கீதரோன் ஆற்றைக் கடந்து வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்துபோகிறார். இது எருசலேமுக்கும் எரிகோவுக்கும் நடுவே உள்ளது. ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்திற்குப்போகிற வழியே நடந்துபோகிறார்கள். அவர்கள் எல்லோரும் மகாசத்தமாய் அழுகிறார்கள்.

எருசலேமிலுள்ள அரண்மனையிலே தாவீது ராஜா சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கவேண்டியவர். ஆனால் அவர் இப்போது வனாந்தரத்திற்குப்போகிற வழியே நடந்துபோகிறார். தாவீது ராஜா இஸ்ரவேல் ஜனத்தாரின் ஜீவனைப் பாதுகாக்க வேண்டியவர். ஆனால் அவருடைய ஜீவனுக்கே இப்போது ஆபத்து வந்திருக்கிறது. தன்னுடைய ஜீவனைப் பாதுகாப்பதற்காக, தாவீது அரண்மனையைவிட்டு ஓடிப்போகிறார்.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தாலும், அவருக்கு அரண்மனையிலே பாதுகாப்பு இல்லை. அடைக்கலம் தேடி வனாந்தரத்திற்குப் போகிறார். எருசலேம் நகரத்திற்கு தாவீதின் நகரம் என்று பெயர். தாவீது இந்த நகரத்தைக் கட்டினார். எருசலேமின் ஜனங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக தாவீது இதன் அரண்களை பலப்படுத்தினார். ஆனால் தாவீதுக்கு இப்போது எருசலேம் நகரத்திலே பாதுகாப்பு இல்லை. அவர் எருசலேமைவிட்டு வெளியேறி, தன்னுடைய பாதுகாப்பைத் தேடி வனாந்தரத்திற்குப்போகிறார்.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி. 2சாமு 15:24-30

2சாமு 15:24. சாதோக்கும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அவனோடேகூட இருந்து சுமக்கிற சகல லேவியரும் வந்து, தேவனுடைய பெட்டியை அங்கே வைத்தார்கள்; ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும், அபியத்தார் திரும்பிப்போயிருந்தான்.

2சாமு 15:25. ராஜா சாதோக்கை நோக்கி: தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்.

2சாமு 15:26. அவர்: உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில், இதோ, இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக என்றான்.

2சாமு 15:27. பின்னும் ராஜா ஆசாரியனாகிய சாதோக்கை நோக்கி: நீ ஞானதிருஷ்டிக்காரன் அல்லவோ? நீ சமாதானத்தோடே நகரத்திற்குத் திரும்பு; உன் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானுமாகிய உங்கள் குமாரர் இரண்டுபேரும் உங்களோடே கூடத் திரும்பிப் போகட்டும்.

2சாமு 15:28. எனக்கு அறிவிக்கிறதற்கு உங்களிடத்திலிருந்து செய்திவருமட்டும், நான் வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருப்பேன் என்றான்.

2சாமு 15:29. அப்படியே சாதோக்கும் அபியத்தாரும் தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுபோய், அங்கே இருந்தார்கள்.

2சாமு 15:30. தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள்.

ஆசாரியரும் லேவியரும் தாவீதுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். தாவீது எங்கெல்லாம் போகிறாரோ அங்கெல்லாம் சாதோக்கும், அபியத்தாரும், லேவியர் எல்லோரும் அவரோடு கூடவே போவார்கள். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியையும் லேவியர்கள் சுமந்துகொண்டு போவார்கள். தாவீதுக்கு தேவைப்படும்போது, கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்காக, அவர்கள் தேவனுடைய பெட்டியை சுமந்துகொண்டு போவது வழக்கம்.

சாதோக்கும் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டியை அவனோடேகூட இருந்து சுமக்கிற சகல லேவியரும் வந்து, தேவனுடைய பெட்டியை அங்கே வைக்கிறார்கள்.

ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும், அபியத்தார் திரும்பிப்போயிருக்கிறான் (2சாமு 15:24). அபியத்தார் பிரதான ஆசாரியன்.

"அவனுக்குப் பதிலாக ராஜா யோய்தாவின் குமாரன் பெனாயாவை இராணுவத்தின்மேலும், ஆசாரியனாகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்திலும் வைத்தான்" (1இராஜா 2:35).

சாதோக்கு அபியத்தாருக்கு உதவிசெய்கிறவன். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை லேவியர் சுமந்துகொண்டு போகும்போது, சாதோக்கு அவர்களோடு கூடப்போவது வழக்கம். தேவனுடைய பெட்டி போகும் இடமெங்கும் சாதோக்கும் கூடவே போவான். பிரதான ஆசாரியனாகிய அபியத்தாரோ, ஆசாரிய ஊழியத்தில் கவனம் செலுத்துவான். ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும், அபியத்தார் எருசலேமுக்கு திரும்பிப்போயிருந்தான்.

தாவீது வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்துபோகும்போது, பிரதான ஆசாரியனாகிய அபியத்தார் தாவீதோடு கூடயில்லை. அவன் எருசலேம் நகரத்திலே ஆசாரிய ஊழியத்திற்காக தங்கியிருக்கிறான். சாதோக்கும், தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற லேவியரும் தாவீதோடு கூடயிருக்கிறார்கள். தன்னோடுகூட தேவனுடைய பெட்டி வருவதை தாவீது விரும்பவில்லை. பெட்டி எருசலேமிலே தங்கியிருக்கவேண்டுமென்று தாவீது விரும்புகிறார்.

ராஜா சாதோக்கை நோக்கி: "தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார். அவர்: உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில், இதோ, இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக" (2சாமு 15:25,26) என்று சொல்லுகிறார்.

அபியத்தார் தன்னோடு கூடயில்லாததினால், தாவீது இப்போது சாதோக்கிடம் உடன்படிக்கைப் பெட்டியைப்பற்றி சொல்லுகிறார். உடன்படிக்கைப் பெட்டியின் பாதுகாப்புக்கு தாவீது முக்கியத்துவம் கொடுக்கிறார். "தேவனுடைய பெட்டியை நகரத்திற்கு திரும்பக்கொண்டுபோ" என்று தாவீது சாதோக்குக்கு கட்டளை கொடுக்கிறார். அப்சலோம் எவ்வளவு மோசமானவனாகயிருந்தாலும், அவன் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு சேதம் உண்டுபண்ணமாட்டான் என்னும் நம்பிக்கை தாவீதின் மனதிலிருக்கிறது.

தேவனுடைய பெட்டி, ஆசாரிப்புக்கூடாரத்திலிருக்கவேண்டும். அது கர்த்தருடைய வாசஸ்தலம். தாவீது ராஜாவால் எருசலேமிலுள்ள அரண்மனையில் இருக்க முடியவில்லை. அவர் தன் உயிருக்கு பயந்து எருசலேமைவிட்டு வனாந்தரத்திற்குப் போகிறார். தேவனுடைய பெட்டி தன்னோடுகூட வனாந்தரத்திற்கு வந்து கஷ்டப்படவேண்டியதில்லை என்றும், பெட்டி தேவனுடைய வாசஸ்தலத்திலேயே தங்கியிருக்கவேண்டும் என்றும் தாவீது விரும்புகிறார்.

தாவீது இப்போது மிகவும் நெருக்கமான சூழ்நிலையிலிருக்கிறார். தன்னுடைய வருங்காலம் எப்படியிருக்கும் என்பதும் தாவீதுக்கு தெரியவில்லை. இந்த சூழ்நிலையில் அவர் கர்த்தருடைய கிருபையை நம்புகிறார். கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார். "கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்" என்று தாவீது விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

தாவீது எருசலேமுக்கு திரும்பி வருவது கர்த்தருக்கு சித்தமில்லாத காரியமாயிருந்தாலும், தாவீது அதையும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்கிறார். கர்த்தருக்கு தாவீதின்மேல் பிரியமில்லையென்றால், தாவீது வனாந்தரத்திலேயே தங்கியிருக்கவும் ஆயத்தமாயிருக்கிறார். "கர்த்தர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி தனக்கு செய்வார்" என்பது தாவீதின் உறுதியான விசுவாசம். கர்த்தருடைய சித்தத்திற்கு தாவீது எதிர்த்து நிற்க விரும்பவில்லை. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு சகலமும் நன்மைகேதுவாக நடைபெறும். கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். அவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். கர்த்தர் செய்வது எல்லாமே தனக்கு நலமாயிருக்கும் என்று தாவீது நம்புகிறார்.

விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியத்தையும் கர்த்தரே ஆளுகை செய்கிறார். கர்த்தர் தமக்கு சித்தமான காரியங்களை நமக்கு செய்கிறார். நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கவும் கூடாது. கர்த்தருடைய கிரியைகளுக்கு விரோதமாக நாம் முறுமுறுக்கவும் கூடாது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. ஆகையினால் நமக்கு என்ன நேரிடுமோ என்று நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

தாவீது வனாந்தரத்திற்குப்போனாலும், அவர் சாதோக்கை எருசலேமுக்கு திரும்பி அனுப்புகிறார். சாதோக்கோடுகூட தேவனுடைய பெட்டியையும், அதை சுமக்கிற லேவியரையும் எருசலேமுக்கு திரும்பி அனுப்புகிறார். ஆசாரியர்கள் தாவீதுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். தாவீது அவர்களோடுகூட எருசலேமில் இல்லாமல், வனாந்தரத்திலிருந்தாலும், அவர்கள் தாவீதுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். தாவீது கர்த்தருடைய ஆசாரியரை நம்புகிறார்.

தாவீது சாதோக்கை "ஞானதிருஷ்டிக்காரன்" என்று அழைக்கிறார். ஞானதிருஷ்டிக்காரருக்கு சகலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். அவர்களுக்கு ஒன்றும் மறைவாயிருக்காது. தாவீது இப்போது நெருக்கமான சூழ்நிலையிலிருக்கிறார். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், சாதாரண பார்வையுள்ள நூறுபேரை விட, ஒரு ஞானதிருஷ்டிக்காரன் தாவீதோடுகூடயிருப்பது அவருக்கு அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கும். ஆனாலும் தாவீது சாதோக்கை எருசலேமுக்கு திரும்ப அனுப்புகிறார்.

தாவீது சாதோக்கோடுகூட, அவனுடைய மகன் அகிமாசையும், அபியத்தாரின் மகன் யோனத்தானையும் எருசலேமுக்கு அனுப்புகிறார். பின்னும் ராஜா ஆசாரியனாகிய சாதோக்கை நோக்கி: "நீ ஞானதிருஷ்டிக்காரன் அல்லவோ? நீ சமாதானத்தோடே நகரத்திற்குத் திரும்பு; உன் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானுமாகிய உங்கள் குமாரர் இரண்டுபேரும் உங்களோடே கூடத் திரும்பிப் போகட்டும். எனக்கு அறிவிக்கிறதற்கு உங்களிடத்திலிருந்து செய்திவருமட்டும், நான் வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருப்பேன்" *(2சாமு 15:27,28)* என்று சொல்லுகிறார்.

ஆசாரியரும், லேவியரும் எருசலேமிலே அவர்களுடைய வீடுகளில் தரித்திருந்தாலும் தாவீதோ, வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆசாரியரிடமிருந்து தனக்கு செய்தி வருமட்டும் தாவீது வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருப்பார். அதன் பின்பு, அவர்கள் அனுப்புகிற செய்தியைப் பொறுத்து, தாவீது எங்கே தங்குவது என்று தீர்மானம்பண்ணுவார்.

தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போகிறார். அவரோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறுகிறார்கள் *(2சாமு 15:30)*.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறவர். ஆனாலும் அவருடைய கால்களில் பாதரட்சைகள் இல்லை. அவர் வெறுங்காலால் நடக்கிறார். இஸ்ரவேலின் ராஜா ஒரு அடிமையைப்போல நடந்துபோகிறார். ஒரு சிறைக்கைதியைப்போல தாவீது ராஜா தன் முகத்தை மூடி வெறுங்காலால் நடந்துபோகிறார். தனக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டதுபோல பாவித்து, தாவீது அழுதுகொண்டு போகிறார்.

தாவீதின் சொந்தக்குமாரனே இப்போது அவருக்கு சத்துருவாயிருக்கிறான். தாவீது அப்சலோமை தன்னுடைய கைகளிலும், மார்பிலும், தோள்களிலும் சுமந்து வளர்த்தவர். ஆனால் இப்போதோ அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக தன்னுடைய குதிங்காலைத் தூக்கியிருக்கிறான்.

தாவீதின் பாவங்கள் கர்த்தருக்கு முன்பாக இருக்கிறது. தாவீதின் பாவங்கள் அவருடைய கண்களுக்கு முன்பாகவும் இருக்கிறது. "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" *(சங் 51:3)*.

தாவீது தன்னுடைய பாவங்களை நினைத்து மனங்கசந்து அழுகிறார். தான் செய்த பாவங்கள் எதையும் தாவீது மறக்கவில்லை. சவுல் தாவீதைக் கொன்றுபோட துரத்தினார். அப்போதுகூட தாவீது இதுபோல் அழுததில்லை. இப்போது தாவீதின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது. தாவீதின் பாவங்கள் அவருக்கு மிகவும் பாரமாயிருக்கிறது. தன்னுடைய பாவங்களின் பாரத்தை சுமக்க முடியாமல், தாவீது மனங்கசந்து அழுகிறார்.

"என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப்பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று" *(சங் 38:4)*.

தாவீது ராஜா அழுவதை அவரோடுகூட நடந்துபோகிற ஜனங்கள் பார்க்கிறார்கள். அவர்களுடைய மனதிலும் துக்கமும் வேதனையும் உண்டாயிற்று. அப்போது தாவீதோடிருந்த சகல ஜனங்களும், தங்கள் முகத்தை மூடி அழுதுகொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போகிறார்கள். அவர்கள் தாவீதின் துக்கத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

அகித்தோப்பேலின் ஆலோசனை 2சாமு 15:31-37

2சாமு 15:31. அப்சலோமோடே கட்டுப்பாடு பண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது: கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்திய மாக்கிவிடுவீராக என்றான்.

2சாமு 15:32. தாவீது மலையின் உச்சிமட்டும் வந்து, அங்கே தேவனைப் பணிந்து கொண்டபோது, இதோ, அர்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவனாய் அவனுக்கு எதிர்ப்பட்டான்.

2சாமு 15:33. தாவீது அவனைப் பார்த்து: நீ என்னோடேகூட நடந்துவந்தால் எனக்குப் பாரமாயிருப்பாய்.

2சாமு 15:34. நீ நகரத்திற்குத் திரும்பிப்போய், அப்சலோமை நோக்கி: ராஜாவே, உம்முடைய ஊழியக்காரனாயிருப்பேன்; முன் நான் உம்முடைய தகப்பனுக்கு ஊழியக்காரனாயிருந்தேன்; இப்போது நான் உமக்கு ஊழியக்காரன் என்றாயேயாகில், எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவாய்.

2சாமு 15:35. உன்னோடே அங்கே சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் இருக்கிறார்கள் அல்லவா? ராஜாவின் வீட்டிலே பிறக்கிற ஏதேது செய்தி உண்டோ, என்னென்ன கேள்விப்படுகிறாயோ, அதையெல்லாம் சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களுக்கு அறிவிப்பாய்.

2சாமு 15:36. அங்கே அவர்களோடே சாதோக்கின் மகன் அகிமாசும், அபியத்தாரின் மகன் யோனத்தானும், அவர்கள் இரண்டு குமாரரும் இருக்கிறார்கள்; நீங்கள் கேள்விப்படுகிற செய்தியையெல்லாம் அவர்கள் வசமாய் எனக்கு அனுப்புவீர்களாக என்றான்.

2சாமு 15:37. அப்படியே தாவீதின் சிநேகிதனாகிய ஊசாய் நகரத்திற்கு வந்தான்; அப்சலோமும் எருசலேமுக்கு வந்தான்.

அப்சலோமோடுகூட அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான். இந்தச் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீதுக்கு அகித்தோப்பேலின் ஆலோசனைகளைப்பற்றி நன்றாய்த் தெரியும். அகித்தோப்பேல் ராஜதந்திரங்களில் தேறினவன். தாவீது தன் குமாரனாகிய அப்சலோமின் சதித்திட்டத்திற்கு அதிகமாய்ப் பயப்படவில்லை. ஆனால் அப்சலோமோடு கட்டுப்பாடு பண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான் என்னும் செய்தி, தாவீதுக்கு மிகுந்த கலக்கத்தைக் கொடுக்கிறது.

ஒரு தந்திரசாலி, ஆயிரம் கைகளைவிட பலமுள்ளவனாயிருப்பான். அகித்தோப்பேல் ஒரு புத்திசாலி. அவன் ஒரு தந்திரசாலி. அப்சலோமுக்கு ராஜதந்திரம் தெரியாது. ஆனால் அகித்தோப்பேல் ராஜாங்க காரியங்கள் அனைத்தையும் அறிந்தவன். அப்சலோமுக்கு அகிப்தோப்பேலின் ஆலோசனை கிடைக்கவில்லையென்றால், அப்சலோமால் தனக்கு பெரிய தீங்கு எதையும் செய்ய முடியாது என்பதை தாவீது அறிந்திருக்கிறார். ஆகையினால் தாவீது அகித்தோப்பேலின் ஆலோசனையை சபிக்கிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கிவிடுவீராக" *(2சாமு 15:31)* என்று தாவீது கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். தாவீதின் ஜெபம் சுருக்கமானது. அவர் அகித்தோப்பேலுக்கு விரோதமாக ஜெபம்பண்ணவில்லை. அவனுடைய ஆலோசனைக்கு விரோதமாகவே ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது ஒலிவமலையின் உச்சிமட்டும் வந்து அங்கே தேவனை பணிந்துகொள்கிறார். நாம் எவ்வளவுதான் முயற்சி பண்ணினாலும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது மிகவும் அவசியம். ஜெபம் இல்லாத முயற்சிகள் வீணாய்ப்போகும். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணாமல், நம்முடைய சுயமுயற்சிகளை நாம் நம்பினால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். நாம் தேவனை சோதிக்கிறவர்களாயும் இருப்போம்.

தாவீது இந்த சூழ்நிலையில் 3-ஆவது சங்கீதத்தை எழுதுகிறார். இந்த சங்கீதத்தின் தலைப்பில் "தாவீது தன் குமாரன் அப்சலோமுக்கு தப்பி ஓடுகையில் பாடின சங்கீதம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. தாவீது கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய கிருபை அவருக்கு விசேஷித்த வழியில் கிடைக்கிறது.

தாவீது ஒலிவமலையின் உச்சி மட்டும் வந்து அங்கே தேவனைப் பணிந்துகொள்கிறார். அப்போது தேவனுடைய தெய்வீக வழிநடத்துதல் தாவீதுக்கு கிடைக்கிறது. "இதோ, அற்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவனாய் தாவீதுக்கு எதிர்ப் படுகிறான்" *(2சாமு 15:32)*. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலே, ஊசாயை, தாவீதினிடத்தில் அழைத்து வந்திருக்கிறது.

தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம்ண்ணும்போது, "கர்த்தாவே அகித்தோப்பேலின் ஆலோசனையை பயித்தியமாக்கிவிடுவீராக" என்று ஜெபம்பண்ணினார். கர்த்தர் தாவீதின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் வண்ணமாக, ஊசாயை தாவீதினிடத்திற்கு அனுப்புகிறார். அகித்தோப்பேலின் ஆலோசனையை பயித்திமாக்குவதற்கு, கர்த்தர் ஊசாயை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார்.

தாவீது இப்போது மிகவும் நெருக்கத்திலிருக்கிறார். ஊசாய் தாவீதுக்கு ஆறுதல் சொல்லுவதற்காக இங்கே வந்திருக்கிறான். ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவனாய் தாவீதுக்கு எதிர்ப்படுகிறான். தாவீதோ ஊசாயை தன்னோடு அழைத்துக்கொண்டு போகாமல், அவனை எருசலேமுக்கு அனுப்ப விரும்புகிறார். ஊசாயை அப்சலோமுக்கு முன்பாக தன்னுடைய வேவுகாரனாக வைத்திருக்கவேண்டுமென்று தாவீது திட்டமிடுகிறார்.

ஊசாய் எருசலேமுக்கு திரும்பிப்போகவேண்டும் என்றும், அவன் அப்சலோமோடு எப்படி பேசவேண்டும் என்றும், அங்கே அவன் தனக்காக என்ன செய்யவேண்டும் என்றும் தாவீது ஊசாயிக்கு தெளிவாகச் சொல்லுகிறார்.

தாவீது ஊசாயைப் பார்த்து: "நீ என்னோடேகூட நடந்துவந்தால் எனக்குப் பாரமாயிருப்பாய்". நீ நகரத்திற்குத் திரும்பிப்போய், அப்சலோமை நோக்கி: "ராஜாவே, உம்முடைய ஊழியக்காரனாயிருப்பேன்; முன் நான் உம்முடைய தகப்பனுக்கு ஊழியக்காரனாயிருந்தேன்; இப்போது நான் உமக்கு ஊழியக்காரன்" என்றாயேயாகில், எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவாய் *(2சாமு 15:33,34)* என்று சொல்லுகிறார்.

அப்சலோம் ஒரு ஏமாற்றுக்காரன். ஊசாய் அப்சலோமை ஏமாற்றுகிற மிகப்பெரிய ஏமாற்றுக்காரனாக இருக்கிறான். தாவீது யுத்த தந்திரங்களையும், யுத்தவியூகங்களையும் அறிந்தவர். தாவீது கர்த்தருக்கு பயந்தவராகயிருந்தாலும், ஒரு ஏமாற்றுக்காரனை ஏமாற்றுவது, யுத்த தந்திரம் என்று நினைக்கிறார்.

அப்சலோம் புத்தியில்லாதவன். அவன் தன் சொந்த தகப்பனுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறவன். இப்படிப்பட்ட துன்மார்க்கன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கே விரோதமாக எழும்புவான். அப்சலோமை ஏமாற்றினால், இஸ்ரவேல் ஜனங்கள் பாதுகாக்கப்படுவார்கள். தாவீது இதை மனதில் நினைத்து, ஊசாயை அப்சலோமிடம் அனுப்புகிறார்.

ஈசாய் எருசலேமுக்குப்போய், இராஜாவின் வீட்டில் பிறக்கிற செய்திகளை, தனக்கு எப்படி அனுப்பவேண்டும் என்றும் தாவீது அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார். தாவீது ஊசாயை நோக்கி, "உன்னோடே அங்கே சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் இருக்கிறார்கள் அல்லவா? ராஜாவின் வீட்டிலே பிறக்கிற ஏதேது செய்தி உண்டோ, என்னென்ன கேள்விப்படுகிறாயோ, அதையெல்லாம் சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களுக்கு அறிவிப்பாய். அங்கே அவர்களோடே சாதோக்கின் மகன் அகிமாசும், அபியத்தாரின் மகன் யோனத்தானும், அவர்கள் இரண்டு குமாரரும் இருக்கிறார்கள்; நீங்கள் கேள்விப்படுகிற செய்தியையெல்லாம் அவர்கள் வசமாய் எனக்கு அனுப்புவீர்களாக" *(2சாமு 15:35,36)* என்று சொல்லுகிறார்.

ஊசாய் தாவீது ராஜாவின் சிநேகிதன். இவன் தாவீதின் கட்டளைப் பிரகாரமாக எருசலேமுக்கு வருகிறான். அப்போது அப்சலோமும் எப்ரோனிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வருகிறான். அப்சலோமோடுகூட, அகித்தோப்பேல் வருகிறான். அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவதற்கு ஊசாயும் அங்கே இருக்கிறான். தாவீது ஒலிவமலையின் உச்சியிலே தேவனைப் பணிந்துகொண்டார். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். தாவீது வனாந்தரத்திலுள்ள ஒலிவமலையிலிருந்தாலும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், எருசலேமில் ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வவியாபகர். ஜெபம் ஒலிவமலையில் நடைபெறுகிறது. காரியம் எருசலேமில் நடைபெறுகிறது.

16 அதிகாரம்

தாவீது தன்னுடைய குமாரன் அப்சலோமுக்கு தப்பித்து, வனாந்தர வழியாக நடந்துபோகிறார். அவர் போகும் வழியில் நடைபெற்ற சம்பவங்களில் சில இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சீபா தாவீதை சந்திக்கிறான். அவன் மேவிபோசேத்தைக் குறித்து தாவீதிடம் வஞ்சகமான வார்த்தைகளைச் சொல்லுகிறான் *(2சாமு 16:1-4).*

தாவீது பகூரிம் மட்டும் வந்தபோது, சவுல் வீட்டின் வம்சத்தானாகிய சீமேயி என்பவன் தாவீதைத் தூஷிக்கிறான் *(2சாமு 16:5-14).*

அப்சலோம் தன் மனுஷரோடு எருசலேமுக்கு வருகிறான். தாவீதின் ஆலோசனைப் பிரகாரம் ஊசாய் அப்சலோமை சந்திக்கிறான் *(2சாமு 16:15-19).* தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசிக்குமாறு அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஆலோசனை சொல்லுகிறான் *(2சாமு 16:20-23).*

சீபாவின் வஞ்சக வார்த்தைகள் 2சாமு 16:1-4

2சாமு 16:1. தாவீது மலையுச்சியிலிருந்து சற்றப்புறம் நடந்துபோனபோது, இதோ, மேவிபோசேத்தின் காரியக்காரனாகிய சீபா, பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டுவந்து, அவனைச் சந்தித்தான்; அவைகளில் இருநூறு அப்பங்களும், வற்றலான நூறு திராட்சப்பழக்குலைகளும், வசந்தகாலத்துப் பலனான நூறு குலைகளும், ஒரு துருத்தி திராட்சரசமும் இருந்தது.

2சாமு 16:2. ராஜா சீபாவைப்பார்த்து: இவைகள் என்னத்திற்கு என்று கேட்டதற்கு, சீபா: கழுதைகள் ராஜாவின் வீட்டார் ஏறுகிறதற்கும், அப்பங்களும் பழங்களும் வாலிபர் புசிக்கிறதற்கும், திராட்சரசம் வனாந்தரத்தில் விடாய்த்துப்போனவர்கள் குடிக்கிறதற்குமே என்றான்.

2சாமு 16:3. அப்பொழுது ராஜா: உன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே என்று கேட்டதற்கு, சீபா ராஜாவை நோக்கி: எருசலேமில் இருக்கிறான்; இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப்பண்ணுவார்கள் என்றான் என்று சொன்னான்.

2சாமு 16:4. அப்பொழுது ராஜா சீபாவை நோக்கி: மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று என்றான். அதற்குச் சீபா: ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்க வேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன் என்றான்.

தாவீதும் யோனத்தானும் நெருங்கிய சிநேகிதர்கள். மேவிபோசேத் யோனத்தானுடைய குமாரன். தாவீது மேவிபோசேத்திற்கு தயவு செய்ய விரும்பினார். தாவீது சவுலின் நிலங்களையெல்லாம் மேவிபோசேத்திற்கு கொடுத்தார். மேவிபோசேத் இரண்டு கால்களும் முடமானவன். தாவீது மேவிபோசேத்திற்காக, அவனுடைய நிலங்களை பராமரிக்கும் பொறுப்பை சீபா என்பவனிடம் ஒப்புக்கொடுத்தார். மேவிபோசேத் அனுதினமும் தாவீது ராஜாவின் பந்தியில் போஜனம் பண்ணும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டான்.

"ஆகையால் நீ உன் குமாரரையும் உன் வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு, உன் எஜமானுடைய குமாரன் புசிக்க அப்பம் உண்டாயிருக்கும்படி, அந்த நிலத்தைப் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்ப்பாயாக; உன் எஜமானுடைய குமாரன் மேவிபோசேத் நித்தம் என் பந்தியிலே அப்பம் புசிப்பான் என்றான்; சீபாவுக்குப் பதினைந்து குமாரரும் இருபது வேலைக்காரரும் இருந்தார்கள்" *(2சாமு 9:10).*

மேவிபோசேத்தின் காரியக்காரனாகிய சீபா ஒரு பேராசைக்காரன். அவனுக்கு காரியக்காரனாகயிருப்பதில் திருப்தியில்லை. சீபா மேவிபோசேத்தின் நிலங்களுக்கு எஜமானாயிருக்க விரும்புகிறான். இப்போது தாவீதின் வீட்டிலே குழப்பம் உண்டாயிருக்கிறது. சீபா இந்தக் குழப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறான்.

இஸ்ரவேலின் சிங்காசனத்தில் தாவீது அமர்ந்திருந்தாலும் அல்லது தாவீதுக்கு பதிலாக அதிலே அப்சலோம் அமர்ந்திருந்தாலும், சீபாவுக்கு எல்லாம் ஒன்றுதான். இந்த இரண்டு பேரில் தனக்கு யார் நன்மை செய்வார்கள் என்று சீபா யோசித்துப் பார்க்கிறான். தாவீது இப்போது அப்சலோமுக்கு தப்பித்து ஓடிப்போகிறார். தாவீதுதான் மேவிபோசேத்திற்கு சவுலின் நிலங்களை தானமாகக் கொடுத்தார். சீபா தாவீதை சந்தித்து, தாவீதுக்கும் மேவிபோசேத்திற்கும் இடையே பிரச்சனைகளை உண்டுபண்ண சதிபண்ணுகிறான்.

தாவீதுக்கு மேவிபோசேத்மீது கோபம் வரவேண்டும். அது தனக்கு நன்மையாயிருக்குமென்று சீபா நினைக்கிறான். தாவீது இப்போது ஒலிவமலையின் உச்சியிலிருந்து, சற்று அப்புறம் நடந்துபோகிறார். அப்போது, இதோ, மேவிபோசாத்தின் காரியக்காரனாகிய சீபா, பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டுவந்து, தாவீதைச் சந்திக்கிறான்.

சீபா தாவீதை வெறுங்கையோடு சந்திக்க வரவில்லை. அவன் இரண்டு கழுதைகளையும் பொதிகளையும் கொண்டு வருகிறான். அந்தப் பொதிகளில் இருநூறு அப்பங்களும், வற்றலான நூறு திராட்சப்பழக்குலைகளும், வசந்தகாலத்துப் பலனான நூறு குலைகளும், ஒரு துருத்தி திராட்சரசமும் இருக்கிறது. சீபா தாவீதுக்கு வெகுமதிகளை தாராளமாய்க் கொண்டு வருகிறான். தாவீதுக்கு இப்போது இதுபோன்ற உதவி தேவைப்படுகிறது.

தாவீது ராஜா சீபாவைப்பார்த்து: "இவைகள் என்னத்திற்கு" என்று கேட்கிறார். அதற்கு, சீபா: தாவீதுக்கு பிரதியுத்தரமாக "கழுதைகள் ராஜாவின் வீட்டார் ஏறுகிறதற்கும், அப்பங்களும் பழங்களும் வாலிபர் புசிக்கிறதற்கும், திராட்சரசம் வனாந்தரத்தில் விடாய்த்துப்போனவர்கள் குடிக்கிறதற்குமே" *(2சாமு 16:2)* என்று சொல்லுகிறான்.

தாவீது சீபா கொண்டு வந்திருக்கிற தாராளமான வெகுமதிகளைப் பார்க்கிறார். சீபா மிகவும் நல்லவன் என்னும் எண்ணம் தாவீதின் மனதில் உண்டாயிற்று. சீபா தன்மீது பிரியமாயிருக்கிறான் என்று தாவீது நினைக்கிறார். தனக்கு உதவி தேவைப்படும்போது சீபா இவ்வளவு வெகுமதிகளை கொண்டு வந்ததற்காக தாவீது மிகவும் சந்தோஷப்படுகிறார்.

தாவீது நினைப்பதுபோல சீபா நற்குணமுள்ளவனல்ல. அவன் தாவீதின் மேலுள்ள அன்பினாலும், பாசத்தினாலும் இந்த வெகுமதிகளை அவருக்கு கொண்டு வரவில்லை. மேவிபோசேத்தின் நிலங்களை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும் என்பதே சீபாவின் ஆசை. தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு, சீபா இந்தப் பரிசுப்பொருட்களை, தாவீதுக்கு லஞ்சமாகக் கொடுக்க கொண்டு வந்திருக்கிறான்.

சீபா எப்படிப்பட்ட எண்ணத்தோடு வந்திருந்தாலும், அவன் தாவீதுக்கு போஜனங்களை கொண்டு வந்திருப்பது, கர்த்தருடைய தெய்வீக கிருபையினால் நடைபெற்ற காரியமாயிருக்கிறது. தாவீதும் அவரோடு கூடயிருக்கிறவர்களும் வனாந்தரத்திலே விடாய்த்துப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு புசிக்க போஜனமும், பானம்பண்ண திராட்சரமும் தேவை. சீபா கொண்டு வந்திருப்பது அவர்களுடைய பசியைப் போக்குகிறது. அவர்களுடைய தாகத்தையும் தணிக்கிறது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு காகத்தைக் கொண்டும் போஷிக்கிறவர். நம்முடைய சத்துருக்கள் மூலமாய் கூட, கர்த்தர் நமக்கு தேவையான உதவிகளை அனுப்புவார். கர்த்தர் சீபாவைப்போல மோசமான மனுஷரைக்கூட, தாவீதுக்கு நன்மை செய்ய பயன்படுத்துகிறார்.

சீபா மேவிபோசேத்தோடு வரவில்லை. அவன் தனியாக வந்திருக்கிறான். தாவீதுக்கு மேவிபோசேத் மீது பாசமுண்டு. அவன் தாவீதின் சிநேகிதனான யோனத்தானுடைய குமாரன். தாவீது சீபாவினிடத்தில் மேவிபோசேத்தைப்பற்றி விசாரிக்கிறார்.

தாவீது ராஜா சீபாவை நோக்கி, "உன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே" என்று கேட்கிறார். அதற்கு, சீபா தாவீது ராஜாவை நோக்கி: "எருசலேமில் இருக்கிறான்; இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப்பண்ணுவார்கள் என்றான்" *(2சாமு 16:3)* என்று சொல்லுகிறான். சீபா மேவிபோசேத்தைக் குறித்து தப்பிதமாகச் சொல்லுகிறான். அவன்மீது பொய்யான குற்றம் சொல்லுகிறான்.

மேவிபோசேத்தின் நிலங்களை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும் என்பது சீபாவின் விருப்பம். தாவீது இப்போது மேவிபோசேத் மீது பிரியமாயிருக்கிறார். தாவீதுக்கு மேவிபோசேத்தின் மீதுள்ள பிரியம் கோபமாக மாறவேண்டும். இதுவே சீபாவின் திட்டம். இதற்காக சீபா தாவீதிடம் மேவிபோசேத்தைக் குறித்து தப்பிதமான குற்றச்சாட்டுகளை சொல்லுகிறான்.

தாவீதோ மேவிபோசேத்தை தன்னுடைய குடும்பத்திலுள்ளவனைப்போல பாவிக்கிறார். தன்னுடைய அரண்மனையில் தன்னோடுகூட போஜனம்பண்ணும் சிலாக்கியத்தை தாவீது அவனுக்கு கொடுத்தார். இதன் நிமித்தமாகவே, தாவீது வனாந்தரத்திலிருந்தாலும், மேவிபோசேத்தைக் குறித்து அன்போடு விசாரிக்கிறார். சீபாவோ இந்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறான்.

தாவீதுக்கு மேவிபோசேத்தின்மேல் கோபம் வந்துவிட்டால், தாவீது அவனுடைய நிலத்தை தனக்கு கொடுப்பார் என்று சீபா நினைக்கிறான். சீபாவின் சதித்திட்டம் வெற்றிபெறுகிறது. இஸ்ரவேல் வீட்டார் சவுலின் ராஜ்யத்தை தன் வசமாய்த் திரும்பப் பண்ணுவார்கள் என்று மேவிபோசேத் சொன்னதாக சீபா தாவீதுக்கு சொல்லுகிறான்.

தாவீது இந்த வார்த்தைகளைக் கேட்டு மேவிபோசேத்தின் மேல் கோபப்படுகிறார். தாவீது மேவிபோசேத்துக்கு கொடுத்த நிலங்களை சீபாவுக்கு கொடுத்துவிடுகிறார்.

தாவீது சீபாவின் வார்த்தைகளை அப்படியே நம்புகிறார். அவர் மேவிபோசேத்தைக் குறித்து வேறு யாரிடத்திலும் விசாரிக்கவில்லை. அப்பொழுது தாவீது ராஜா சீபாவை நோக்கி: "மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று" என்று சொல்லுகிறார். அதற்குச் சீபா: "ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்க வேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்" *(2சாமு 16:4)* என்று சொல்லுகிறான்.

தாவீது இப்போது எருசலேமிலுள்ள அரண்மனையில் இல்லை. அவர் வனாந்தரத்தில் இருக்கிறார். ஆனாலும் தாவீது தன்னுடைய ராஜரீக அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேவிபோசேத்தின் நிலங்களை பறிமுதல் செய்து, அதை சீபாவுக்கு கொடுத்துவிடுகிறார்.

சீபாவுக்கு கிடைத்த நிலம், அவனுடைய வஞ்சகத்தினாலும், அநியாயத்தினாலும் கிடைத்திருக்கிறது. அநியாயமாய்ச் சம்பாதித்த சொத்து நிலைக்காது. அதில் கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்கியிருக்காது. தாவீதோ மிகவும் அவசரப்பட்டு, உண்மையை விசாரிக்காமல், மேவிபோசேத்தின் நிலங்களை சீபாவுக்கு கொடுத்துவிடுகிறார். சில காலத்திற்கு பின்பு, சீபாவின் நயவஞ்சகம் தாவீதுக்கு தெரியவருகிறது. அப்போது சீபா தன்னுடைய ஏமாற்று வேலைக்காக வெட்கப்படுகிறான்.

"அப்பொழுது ராஜா அவனைப் பார்த்து:உன் காரியத்தைக்குறித்து அதிகமாய்ப் பேசுவானேன்? நீயும் சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன் என்றான். அதற்கு மேவிபோசேத் ராஜாவை நோக்கி: ராஜாவாகிய என் ஆண்டவன் சமாதானத்தோடே தம்முடைய வீட்டிற்கு வந்திருக்கும்போது, அவனே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளட்டும் என்றான்" *(2சாமு 19:29,30).*

சீமேயியின் தூஷண வார்த்தைகள் 2சாமு 16:5-14

2சாமு 16:5. தாவீதுராஜா பகூரிம்மட்டும் வந்தபோது, இதோ, சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சீமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன் அங்கேயிருந்து புறப்பட்டு, தூஷித்துக் கொண்டே நடந்துவந்து,

2சாமு 16:6. சகல ஜனங்களும், சகல பலசாலிகளும், தாவீதின் வலதுபுறமாகவும் இடதுபுறமாகவும் நடக்கையில், தாவீதின்மேலும், தாவீதுராஜாவுடைய சகல ஊழியக்காரர் மேலும் கற்களை எறிந்தான்.

2சாமு 16:7. சீமேயி அவனைத் தூஷித்து: இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்து போ.

2சாமு 16:8. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப்பண்ணினார்; கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் என்றான்.

2சாமு 16:9. அப்பொழுது செருயாவின் குமாரன் அபிசாய் ராஜாவை நோக்கி: அந்தச் செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப்போடட்டுமே என்றான்.

2சாமு 16:10. அதற்கு ராஜா: செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான்.

2சாமு 16:11. பின்னும் தாவீது அபிசாயையும் தன் ஊழியக்காரர் எல்லாரையும் பார்த்து: இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

2சாமு 16:12. ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்.

2சாமு 16:13. அப்படியே தாவீதும் அவன் மனுஷரும் வழியே நடந்துபோனார்கள்; சீமேயும் மலையின் பக்கத்திலே அவனுக்கு எதிராக நடந்து தூஷித்து, அவனுக்கு எதிராகக் கற்களை எறிந்து, மண்ணைத் தூற்றிக்கொண்டே வந்தான்.

2சாமு 16:14. ராஜாவும் அவனோடிருந்த சகல ஜனங்களும் விடாய்த்தவர்களாய், தங்குமிடத்திலே சேர்ந்து, இளைப்பாறினார்கள்.

தாவீது வனாந்தரத்திலே நடந்து பகூரிம் என்னும் இடத்திற்கு வந்திருக்கிறார். தாவீதைப் பார்க்க ஒரு சிலர் வருகிறார்கள். சீபா தாவீதிடத்தில் வஞ்சக வார்த்தைகளை சொன்னான். தாவீது அவனுடைய வார்த்தைகளை நம்பினார். அதன்பின்பு சீமேயி என்பவன் தாவீதுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொல்லுகிறான். தாவீதோ அவனுடைய தூஷண வார்த்தைகளையும் தாங்கிக்கொள்கிறார்.

தாவீது சீபாவின் பொய்யான பேச்சைக் கேட்டு, மேவிபோசேத்திற்கு தப்பிதமான தீர்ப்பைக் கொடுத்தார். இப்போது தாவீது சீமேயியின் தூஷண வார்த்தைகளைக் கேட்டு, தனக்குத்தானே நீதியான தீர்ப்பைக் கொடுக்கிறார். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. உலகத்தாரின் சிரிப்பும் சந்தோஷமும் விசுவாசிகளுக்கு எப்போதுமே ஆபத்தானதாயிருக்கும். விசுவாசிகளின் உண்மையான சந்தோஷம் கர்த்தருக்குள் இருக்கிறது.

தாவீது இப்போது மிகவும் நெருக்கத்திலிருக்கிறார். அவர் அதிகமாய் ஒடுக்கப்பட்டிருக்கிறார். வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணும்போது, தாவீதும் அவரோடு கூடயிருக்கிறவர்களும் விடாய்த்துப்போயிருக்கிறார்கள். தாவீது பகூரிம் என்னும் பட்டணத்திற்கு வந்திருக்கிறார். இது பென்யமீன் கோத்திரத்தாரின் சுதந்தரத்திலுள்ளது.

பகூரிம் ஊரில் அல்லது, இந்த ஊருக்கு அருகாமையில் சீமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன் இருக்கிறான். இவன் சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரன். தாவீது பகூரிம் மட்டும் வந்தபோது, சீமேயி தாவீதைத் தூஷித்துக்கொண்டே நடந்துவருகிறான்.

சவுல் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்கவேண்டும் என்பது சீமேயியின் விருப்பம். சவுல் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பென்யமீன் கோத்திரத்தாரும், சவுலே தங்களுக்கு ராஜாவாயிருக்கவேண்டுமென்று விரும்பினார்கள். தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவானதினால் அவர்களுடைய நம்பிக்கையெல்லாம் வீணாய்ப்போயிற்று. சவுலின் வீழ்ச்சிக்கும், அவருடைய குடும்பத்தார் ஒன்றுமில்லாமல் போனதற்கும் தாவீதே காரணமென்று சீமேயி நினைக்கிறான். இதனால் சீமேயிக்கு தாவீதின்மீது மிகவும் கோபமுண்டாயிற்று. தாவீது தன்னுடைய ஊருக்கு அருகாமையிலுள்ள பகூரிம் மட்டும் வந்தபோது, சீமேயி தாவீதைத் தூஷிக்கிறான்.

தாவீது எருசலேமில், அவருடைய அரண்மனையிலிருந்தபோது, சீமேயி அங்கு போய் அவரை தூஷிக்கவில்லை. எருசலேம் சீமேயிக்கு பாதுகாப்பான ஊரல்ல. அங்கே யூதாகோத்திரத்தார் இருக்கிறார்கள். தாவீது யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். இப்போதோ தாவீது பகூரிம் மட்டும் வந்திருக்கிறார். இந்த ஊரிலிருக்கிறவர்கள் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். சவுலும் அவருடைய குடும்பத்தாரும் பென்யமீன் கோத்திரத்தார். சீமேயியும் பென்யமீன் கோத்திரத்தான். தான் தாவீதை இங்கு தூஷிப்பது தனக்கு பாதுகாப்பானது என்று சீமேயி நினைக்கிறான்.

தாவீது பகூரிம் பட்டணம் மட்டும் வந்தபோது, அவர் மிகவும் விடாய்த்துப் போயிருக்கிறார். அவர் அதிகமான வேதனைகளையும், துன்பங்களையும், நெருக்கங்களையும், பாடுகளையும் அனுபவிக்கிறார். இந்த சூழ்நிலையில் சீமேயி தாவீதைத் தூஷிப்பது, அவருடைய வேதனையை அதிகரிக்கச் செய்கிறது. சீமேயி தாவீதின் காயங்களுக்கு மருந்து கட்டுவதற்கு பதிலாக, அதிலே காடி உப்பைப் போட்டு, தாவீதின் வேதனைகளை அதிகரிக்கச் செய்கிறான்.

தாவீது வனாந்தரத்திலே தப்பி ஓடுவது, தேவன் அவருக்கு கொடுத்திருக்கும் நீதியான தண்டனை என்று சீமேயி நினைக்கிறான். தாவீது சவுலுக்கு தீங்கு செய்தார் என்றும், அதற்காக கர்த்தர் தாவீதை தண்டிக்கிறார் என்றும் சீமேயி நினைக்கிறான். தாவீது மிகவும் மோசமான மனுஷனாக இருப்பதினால்தான், அவருக்கு இவ்வளவு பாடுகளும் வேதனைகளும் வந்திருக்கிறது என்று சீமேயி நினைக்கிறான்.

பாடுகளை அனுபவிக்கிறவர்கள் எல்லோருமே பாவிகள் என்று நாம் மொத்தமாக சொல்லிவிடக்கூடாது. துன்மார்க்கருக்கு பாடுகள் வருவதுபோலவே, நீதிமான்களுக்கும் பாடுகள் வரும். யோபு பாடுகளை அனுபவித்தார். அவருடைய பாவத்தினிமித்தமாகவே, அவருக்கு பாடுகள் வந்திருக்கிறது என்று, யோபுவின் சிநேகிதர்கள் அவரைக் குற்றப்படுத்தினார்கள்.

சகல ஜனங்களும், சகல பலசாலிகளும், தாவீதின் வலதுபுறமாகவும் இடதுபுறமாகவும் நடக்கிறார்கள். அப்போது சீமேயி தாவீதின்மேலும், தாவீதுராஜாவுடைய சகல ஊழியக்காரர் மேலும் கற்களை எறிகிறான் (2சாமு 16:6). சீமேயியின் பார்வையில், தாவீது ராஜா ஒரு நாயைப்போல தெரிகிறார். நாயின்மீது கற்களை எறிவதுபோல, சீமேயி தாவீதின்மேல் கற்களை எறிகிறான்.

சீமேயி தாவீதின்மேல் மண்ணைத் தூற்றுகிறான். தாவீதும் அவருடைய மனுஷரும் வழியே நடந்துபோகிறார்கள்; சீமேயும் மலையின் பக்கத்திலே தாவீதுக்கு எதிராக நடந்து தூஷித்து, அவருக்கு எதிராகக் கற்களை எறிந்து, மண்ணைத் தூற்றிக்கொண்டே வருகிறான் (2சாமு 16:13).

சீமேயி தாவீதின்மேல் மண்ணைத் தூற்றும்போது, காற்று அவன் பக்கமாக அடித்தால், அவன் தூற்றியமண் அவன் கண்களிலே விழும். சீமேயி இப்படிப்பட்ட தூஷண வார்த்தைகளைத்தான் தாவீதுக்கு விரோதமாகச் சொல்லுகிறான். சீமேயியின் வார்த்தைகளில் உண்மையில்லை. ஆகையினால் அவனுடைய தூஷண வார்த்தைகள் தூற்றப்பட்ட மண்ணைப்போல, அவன் தலையின்மேல் திரும்ப வந்து விழும்.

சீமேயி தாவீதின்மேல் கற்களை எரிகிறான். அதோடு அவன் தாவீது ராஜாவை தூஷிக்கவும் செய்கிறான். தன்மீது எறியப்படும் கற்களின் வேதனையைவிட, தனக்கு விரோதமாகச் சொல்லப்படும் தூஷண வார்த்தைகளின் வேதனைகள் தாவீதுக்கு மிகவும் அதிகமாயிருக்கிறது.

சீமேயி தாவீதைப் பார்த்து "இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்து போ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப்பண்ணினார்; கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன்" *(2சாமு 16:7,8)* என்று சொல்லி தூஷிக்கிறான்.

சவுலின் வீட்டாருக்கு என்ன நடந்தது என்பது சீமேயிக்கு தெரியும். ஆனால் அது ஏன் நடந்தது என்பதற்கான காரணம் சீமேயிக்கு தெரிய வாய்ப்பில்லை. தாவீதின் குடும்பத்திலும் என்ன நடந்தது என்பது சீமேயிக்கு தெரியும். சவுலின் இரத்தப்பழிக்கு தாவீதே காரணம் என்று சீமேயி சொல்லுகிறான். ஆனால் சவுலைக் கொல்லவேண்டும் என்னும் எண்ணம் தாவீதுக்கு ஒருபோதும் இருந்ததில்லை.

சவுல்தான் தாவீதைக் கொன்றுபோட முயற்சிபண்ணினார். சவுலைக் கொல்லுவதற்கு தாவீதுக்கு இரண்டு வாய்ப்புக்கள் கிடைத்தது. ஆனால் தாவீதோ அந்த வாய்ப்பை பயன்படுத்தி, சவுலைக் கொன்றுபோடவில்லை. சவுல் வீட்டாரின் இரத்தப்பழி தாவீதின்மீது இருக்கிறது என்பது பொய்யான குற்றச்சாட்டு. சவுலின் இரத்தத்திற்கும், தாவீதுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. சவுலின் இரத்தத்தைப் பொறுத்தவரையில், தாவீது குற்றமில்லாதவர்.

சீமேயி தாவீதைத் தூஷிக்கும்போது, "பேலியாளின் மனுஷனே" என்று சொல்லுகிறான். அவன் தாவீதை "இரத்தப்பிரியனே" என்றும் சொல்லி தூஷிக்கிறான். இது தாவீதின் சுபாவமல்ல. சீமேயி தன்னுடைய மனதிலுள்ள கோபங்களை, தூஷண வார்த்தைகளினால் வெளிப்படுத்துகிறான்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தாவீதின்மீது வந்திருக்கிறது என்று சீமேயி தீர்மானித்திருக்கிறான். "சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப்பண்ணினார்" என்று சீமேயி தாவீதுக்கு விரோதமாகப் பேசுகிறான். சீமேயியைப்போல துன்மார்க்கர், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை, தங்களுடைய சொந்த விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும், தங்களுடைய கோபங்களையும், பழிவாங்கும் உணர்ச்சிகளையும் உறுதிபண்ணுவதற்காகவும் பயன்படுத்துகிறார்கள்.

கர்த்தருடைய சித்தமும், அவருடைய நோக்கமும் என்ன என்று தெரியாமலேயே, கர்த்தர் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறார் என்று துன்மார்க்கர் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எப்போதுமே அவருடைய நீதியின் பிரகாரமாகவே இருக்கும். அது ஒருபோதும் மனுஷருடைய விருப்பத்தின் பிரகாரமாக இருக்காது.

தாவீது இப்போது தன்னுடைய அக்கிரமத்தில் அகப்பட்டார் என்றும், சவுலின் வீட்டாருடைய இரத்தப்பழியை கர்த்தர் தாவீதின்மேல் திரும்பப்பண்ணினார் என்றும், அதினால், தாவீதின் ராஜ்யபாரத்தை அவருடைய குமாரனாகிய அப்சலோமின் கையில் கர்த்தர் ஒப்புக்கொடுத்தார் என்றும் சொல்லி சீமேயி தாவீதைத் தூஷிக்கிறான். தாவீதால் இனிமேல் இஸ்ரவேலுக்கு ராஜாவாய் வரமுடியாது என்று சீமேயி தீர்மானமாகச் சொல்லுகிறான்.

சீமேயி தன்னைத் தூஷித்தாலும், தாவீதோ கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். தன்னுடைய நீடிய பொறுமையைக் காத்துக்கொள்கிறார். சீமேயி தாவீதைத் தூஷிக்கும்போது, செருயாவின் குமாரன் அபிசாய் தாவீது ராஜாவை நோக்கி: "அந்தச் செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப்போடட்டுமே" *(2சாமு 16:9)* என்று சொல்லுகிறான்.

தாவீது அபிசாயிக்கு அனுமதி கொடுத்திருந்தால், அவன் சீமேயியின் தலையை துண்டித்துப்போட்டிருப்பான். தாவீதுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசின வாயும் உதடுகளும் செயலற்றுப்போயிருக்கும். ஆனால் தாவீது அபிசாயிக்கு அனுமதி கொடுக்கவில்லை.

தாவீது அபிசாயை நோக்கி, "செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார்" *(2சாமு 16:10)* என்று சொல்லுகிறார்.

சீமேயி தன்னைத் தூஷிக்க தாவீது அவனுக்கு அனுமதி கொடுக்கிறார். அபிசாய் தாவீது ராஜாவின்மீதுள்ள மதிப்பினாலும், மரியாதையினாலும், சீமேயியை கொன்றுபோடவேண்டும் என்று நினைக்கிறான். ஆனால் சீமேயி செத்துப்போவதில் தாவீதுக்கு பிரியமில்லை. "அவன் என்னைத் தூஷிக்கட்டும்" என்று தாவீது சொல்லிவிடுகிறார்.

ஒரு சமயம் இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். ஆனால் அவ்வூரார் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. இதைப் பார்த்து யாக்கோபும் யோவானும், அந்த ஊராரை அழித்துப்போடவேண்டும் என்று சொன்னார்கள். இயேசுகிறிஸ்துவோ அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

"அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிரந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்" *(லூக் 9:53-56).*

சீமேயி தன்னைத் தூஷித்தாலும், தான் இந்த தூஷண வார்த்தைகளைக் கேட்பதற்கு பாத்திரவானாயிருப்பதாக தாவீது நினைக்கிறார். "தாவீதைத் தூஷிக்கவேண்டுமென்று கர்த்தர் அவனுக்கு சொன்னார். ஆகையினால் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார்" என்று தாவீது சொல்லுகிறார்.

சீமேயி தன்னைத் தூஷிப்பதில், கர்த்தருடைய கரமும், அவருடைய சித்தமும், அவருடைய வழிநடத்துதலும் இருக்கிறது என்பதை தாவீது அங்கீகரிக்கிறார்.

தாவீதைத் தூஷிக்கவேண்டுமென்று கர்த்தர் சீமேயிக்கு சொல்லவில்லையென்றால், அது அவனுடைய பாவம். தாவீதைத் தூஷிக்கவேண்டுமென்று பிசாசு சீமேயிக்கு சொல்லியிருக்கிறான். சீமேயி பிசாசுக்கு கீழ்ப்படிகிறான். சீமேயியின் இருதயமும் துன்மார்க்கமாயிருக்கிறது. கெட்ட இருதயத்திலிருந்து தூஷண வார்த்தைகள் புறப்பட்டு வருகிறது.

தாவீது இப்போது மிகுந்த வேதனைகளையும் அவமானங்களையும் அனுபவிக்கிறார். கர்த்தருடைய அனுமதியில்லாமல் தனக்கு இந்த துன்பங்கள் வராது என்று தாவீது நினைக்கிறார். யோபுவுக்கு பல கஷ்டங்கள் வந்தது. அப்போது யோபு "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்துக்கொண்டார்" என்று விசுவாசத்தோடு சொன்னார்.

தாவீதைப்போல நமக்கும் வேதனைகளும், பாடுகளும், நெருக்கங்களும் வரும்போது, நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய அனுமதியின் பிரகாரமாக நமக்கு பாடுகள் வந்திருக்கிறது என்பதை நினைவுகூரவேண்டும். கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

தாவீதுக்கு சீமேயி மூலமாய் அவமானமுண்டாயிற்று. இதைவிட பெரிய தீங்கு தாவீதின் ஜீவியத்தில் வந்திருக்கிறது. தாவீதின் குமாரன் அப்சலோம், தாவீதின் பிராணனை வாங்கத் தேடுகிறான்.

தாவீது அபிசாயையும் தன் ஊழியக்காரர் எல்லாரையும் பார்த்து: "இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்" *(2சாமு 16:11)* என்று சொல்லுகிறார்.

தனக்கு சீமேயி மூலமாய் சிறிய தீங்கு வந்தபோது, தன் குமாரன் அப்சலோம் மூலமாய் தனக்கு வந்த பெரிய தீங்கை, தாவீது நினைத்துப் பார்க்கிறார். கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்டிருப்பதினால், அவர்கள் இந்தத் தீங்குகளை தனக்கு செய்கிறார்கள் என்று தாவீது சொல்லுகிறார். தாவீது கர்த்தர்மீது தன் பாரத்தை வைக்கிறார்.

மற்றவர்கள் தனக்கு தீங்கு செய்தாலும், கர்த்தர் தனக்கு நன்மை செய்வார் என்று தாவீது கர்த்தரை நம்புகிறார். "ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார்" *(2சாமு 16:12)* என்று தாவீது கர்த்தர்மீது விசுவாசம் வைத்து சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை ஆசீர்வதிக்கிறார். தமக்காக ஊழியம் செய்கிறவர்களை கனம்பண்ணுகிறார். நாம் அனுபவிக்கும் நிந்தனைகளுக்கு பதிலாக நமக்கு நன்மைகளை சரிக்கட்டுகிறார். கர்த்தர் நம்முடைய சேவைகளுக்கும் பலன் கொடுக்கிறார். நம்முடைய பாடுகளுக்கும் நஷ்டஈடு கொடுக்கிறார்.

"சீமேயி என்னைத் தூஷிக்கட்டும்" என்று தாவீது சொல்லுகிறார். தாவீதின் மனுஷர் சீமேயியை தடைபண்ணவில்லை. தாவீதும் அவருடைய மனுஷரும் வழியே நடந்துபோகிறார்கள்; சீமேயும் மலையின் பக்கத்திலே அவருக்கு எதிராக நடந்து தூஷித்து, அவருக்கு எதிராகக் கற்களை எறிந்து, மண்ணைத் தூற்றிக்கொண்டே வருகிறான் *(2சாமு 16:13)*.

தாவீதும் அவரோடு கூடயிருக்கிற மனுஷரும் பகூரிமிலே தங்கியிருக்கிறார்கள். தாவீது ராஜாவும் அவரோடிருந்த சகல ஜனங்களும் விடாய்த்தவர்களாய், தங்குமிடத்திலே சேர்ந்து, இளைப்பாறுகிறார்கள். தாவீதுக்கு பகூரிமிலே இளைப்பாறுதல் கிடைக்கிறது. தூஷண வார்த்தைகளைப் பேசும் நாவுகளுக்கும் தாவீதுக்கு இங்கே மறைவிடம் கிடைக்கிறது.

அப்சலோமும் ஊசாயும் 2சாமு 16:15-19

2சாமு 16:15. அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷராகிய சகல ஜனங்களும் அவனோடேகூட அகித்தோப்பேலும் எருசலேமுக்கு வந்தார்கள்.

2சாமு 16:16. அற்கியனாகிய ஊசாய் என்னும் தாவீதின் சிநேகிதன் அப்சலோமிடத்தில் வந்தபோது, ஊசாய் அப்சலோமை நோக்கி: ராஜாவே வாழ்க, ராஜாவே வாழ்க என்றான்.

2சாமு 16:17. அப்பொழுது அப்சலோம் ஊசாயைப் பார்த்து: உன் சிநேகிதன்மேல் உனக்கு இருக்கிற தயை இதுதானோ? உன் சிநேகிதனோடே நீ போகாதேபோனது என்ன என்று கேட்டான்.

2சாமு 16:18. அதற்கு ஊசாய் அப்சலோமை நோக்கி: அப்படி அல்ல, கர்த்தரும் இந்த ஜனங்களும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும் தெரிந்துகொள்ளுகிறவரையே நான் சேர்ந்து அவரோடே இருப்பேன்.

2சாமு 16:19. இதுவும் அல்லாமல், நான் யாரிடத்தில் சேவிப்பேன்? அவருடைய குமாரனிடத்தில் அல்லவா? உம்முடைய தகப்பனிடத்தில் எப்படி சேவித்தேனோ, அப்படியே உம்மிடத்திலும் சேவிப்பேன் என்றான்.

தாவீது எருசலேமைவிட்டு ஓடிப்போனார் என்னும் செய்தியை எப்ரோனிலிருக்கும் அப்சலோம் கேள்விப்படுகிறான். உடனே அவன் காலதாமதம் பண்ணாமல் எருசலேமுக்கு வருகிறான். அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷராகிய சகல ஜனங்களும் அவனோடேகூட அகித்தோப்பேலும் எருசலேமுக்கு வருகிறார்கள் (2சாமு 16:15).

எருசலேமில் இப்போது தாவீது இல்லை. ஆகையினால் அப்சலோம் எருசலேமுக்கு எப்போது வேண்டுமானாலும் வரலாம். ஆனால் அப்சலோம் எருசலேமுக்கு வர காலதாமதம்பண்ணவில்லை. தன்னுடைய முயற்சிகளில் வெற்றி கிடைத்திருப்பதாக நினைத்து, அப்சலோம் எருசலேமுக்கு உடனே வந்துவிடுகிறான்.

அப்சலோமோடுகூட அகித்தோப்பேல் வருகிறான். அகித்தோப்பேல் ராஜதந்திரம் தெரிந்தவன். அவன் அப்சலோமுக்கு ஆலோசனைக்காரன். இப்போது தாவீதின் சிநேகிதனாகிய ஊசாயும், அப்சலோமோடு சேர்ந்துகொள்ள எருசலேமுக்கு வருகிறான்.

அற்கியனாகிய ஊசாய் என்னும் தாவீதின் சிநேகிதன் அப்சலோமிடத்தில் வந்தபோது, ஊசாய் அப்சலோமை நோக்கி: "ராஜாவே வாழ்க, ராஜாவே வாழ்க" (2சாமு 16:16) என்று சொல்லுகிறான். அப்சலோம் அகித்தோப்பேலை தன்னோடுகூட எருசலேமுக்கு அழைத்து வருகிறான். ஊசாயோ அப்சலோமை சந்திக்க எருசலேமுக்கு வருகிறான். பெரிய ஆலோசனைக்காரர்களெல்லாம் தன்னோடு கூடயிருப்பதினால், தனக்கு பேரும் புகழும் உயரும் என்று அப்சலோம் நினைக்கிறான்.

ஊசாய் அப்சலோமுக்கு சிநேகிதனல்ல. இவன் தாவீதின் சிநேகிதன். ஊசாய் அப்சலோமுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லமாட்டான். அப்சலோமை வஞ்சிக்கவேண்டும் என்பதும், அப்சலோமின் வீட்டிலே நடைபெறும் காரியங்களை வனாந்தரத்திலிருக்கும் தாவீதுக்கு அறிவிக்கவேண்டும் என்பதும் ஊசாயின் திட்டம்.

அகித்தோப்பேலைப்போல, ஊசாயும் ஒரு தந்திரக்காரன். அவன் அப்சலோமைப் பார்த்தவுடனேயே, "ராஜாவே வாழ்க, ராஜாவே வாழ்க" என்று வாழ்த்துகிறான். அப்சலோமைப் பார்ப்பதினால் தனக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டானதுபோல ஊசாய் மாய்மாலம்பண்ணுகிறான்.

ஊசாய் தாவீதின் சிநேகிதன் என்பது அப்சலோமுக்கும் தெரியும். ஆகையினால் அவன் தன்னைப் பார்க்க வந்திருப்பது, அப்லோமுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அப்பொழுது அப்சலோம் ஊசாயைப் பார்த்து: "உன் சிநேகிதன்மேல் உனக்கு இருக்கிற தயை இதுதானோ? உன் சிநேகிதனோடே நீ போகாதேபோனது என்ன" (2சாமு 16:17) என்று கேட்கிறான். ஊசாய் தாவீதோடு இருக்கவேண்டியவன். ஆனால் அவன் தன்னிடத்தில் ஏன் வந்திருக்கிறான் என்பது அப்லோமுக்கு தெரியவில்லை.

ஊசாய் ஞானமுள்ளவன். அவன் எந்த சூழ்நிலையிலும் சாதுரியமான பிரதியுத்தரம் சொல்லக்கூடியவன். அப்சலோம் தன்னிடத்தில் கேள்வி கேட்கும்போது, ஊசாய் அப்சலோமை நோக்கி: "அப்படி அல்ல, கர்த்தரும் இந்த ஜனங்களும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும் தெரிந்துகொள்ளுகிறவரையே நான் சேர்ந்து அவரோடே இருப்பேன். இதுவும் அல்லாமல், நான் யாரிடத்தில் சேவிப்பேன்? அவருடைய குமாரனிடத்தில் அல்லவா? உம்முடைய தகப்பனிடத்தில் எப்படி சேவித்தேனோ, அப்படியே உம்மிடத்திலும் சேவிப்பேன்" (2சாமு 16:18,19) என்று சொல்லுகிறான்.

ஊசாய் இதுவரையிலும் தாவீதை சேவித்தவன். அதை அவன் மறுக்கவில்லை. ஆனாலும் அவன் அப்சலோமையும் சேவிப்பதாக வாக்குப்பண்ணுகிறான். "உம்முடைய தகப்பனிடத்தில் எப்படி சேவித்தேனோ, அப்படியே உம்மிடத்திலும் சேவிப்பேன்" என்று ஊசாய் அப்லோமுக்கு சொல்லுகிறான். ஊசாய் அப்சலோமுக்கு பிரியமான வார்த்தைகளைப் பேசி, அவனோடுகூட சேர்ந்துகொள்கிறான். தாவீதின் திட்டம் நிறைவேறுகிறது. தாவீது சொன்ன பிரகாரமாக, ஊசாய் இப்போது, அப்சலோமோடு கூடயிருக்கிறான்.

அகித்தோப்பேலின் ஆலோசனை 2சாமு 16:20-23

2சாமு 16:20. அப்சலோம் அகித்தோப்பேலைப் பார்த்து, நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று ஆலோசனை சொல்லும் என்றான்.

2சாமு 16:21. அப்பொழுது அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: வீட்டைக்காக்க உம்முடைய தகப்பன் பின்வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசியும், அப்பொழுது உம்முடைய தகப்பனுக்கு நாற்றமாய்ப்போனீர் என்பதை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, உம்மோடிருக்கிற எல்லாருடைய கைகளும் பலக்கும் என்றான்.

2சாமு 16:22. அப்படியே அப்சலோமுக்கு உப்பரிகையின்மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்கள்; அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான்.

2சாமு 16:23. அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப்போல் இருந்தது, அப்படி அகித்தோப்பேலின் ஆலோசனையெல்லாம் தாவீதுக்கும் இருந்தது, அப்சலோமுக்கும் அப்படியே இருந்தது.

அப்சலோமுக்கு இப்போது இரண்டு ஆலோசனைக்காரர் இருக்கிறார்கள். அகித்தோப்பேல் ஒரு ஆலோசனைக்காரன். ஊசாய் மற்றொரு ஆலோசனைக்காரன்.

அப்சலோம் அகித்தோப்பேலைப் பார்த்து, "நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று ஆலோசனை சொல்லும்" *(2சாமு 16:20)* என்று கேட்கிறான். அப்சலோம் ஊசாயினிடத்தில் முதலாவதாக ஆலோசனை கேட்காமல், அகித்தோப்பேலினிடத்தில் ஆலோசனை கேட்டு, அவனுக்கு மதிப்பு கொடுக்கிறான்.

அகித்தோப்பேல் ஒரு துன்மார்க்கன். அவன் அப்சலோமிடம், துன்மார்க்கமான காரியத்தை செய்யுமாறு ஆலோசனை சொல்லுகிறான். அவன் அப்சலோமை பாவம் செய்ய சொல்லுகிறான். மற்றவர்களை பாவம் செய்யுமாறு ஆலோசனை சொல்லுகிறவர்கள், அவர்களுடைய அழிவுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். பாவத்தினால் அஸ்திபாரம் போடப்படும் ராஜ்யம், மணல்மீது கட்டப்படும் ராஜ்யத்தைப்போலிருக்கும்.

அகித்தோப்பேலுக்கு ராஜதந்திரம் நன்றாய்த் தெரியும். அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப்போல இருக்கிறது *(2சாமு 16:23)*. அகித்தோப்பேலிடம் உலகஞானம் அதிகமாயிருக்கிறது. ஆனால் அவனிடத்தில் பரலோகத்தின் கிருபையில்லை. அகித்தோப்பேல் பரலோகத்தின் கிருபைக்கு அந்நியனாயிருக்கிறான். தங்களுடைய சொந்த வாக்குக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள், தேவனுடைய வாக்குக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள்.

ஜனங்களுக்கும் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப்போல இருக்கிறது. அகித்தோப்பேல் தாவீதோடு கூடயிருந்த காலத்தில், அவனுடைய ஆலோசனைகள் எல்லாம், தாவீதுக்கும் தேவனுடைய வாக்கைப்போலவே இருந்தது. இப்போது அகித்தோப்பேலின் ஆலோசனை, தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்கும், தேவனுடைய வாக்கைப்போல இருக்கிறது.

அகித்தோப்பேல் ஒரு ராஜதந்திரி. இவன் மிகச்சிறந்த அரசியல்வாதி. ராஜாங்கத்தின் சூட்சுமங்களையெல்லாம் இவன் நன்றாய் அறிந்திருக்கிறான். அகித்தோப்பேல் மற்றவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுகிறான். ஆனாலும் தன்னுடைய விஷயத்தில் புத்தியீனமாய் நடந்துகொள்கிறான்.

அப்சலோம் அகித்தோப்பேலிடம் ஆலோசனை கேட்கிறான். அப்பொழுது அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: "வீட்டைக்காக்க உம்முடைய தகப்பன் பின்வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசியும், அப்பொழுது உம்முடைய தகப்பனுக்கு நாற்றமாய்ப்போனீர் என்பதை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, உம்மோடிருக்கிற எல்லாருடைய கைகளும் பலக்கும்" *(2சாமு 16:21)* என்று சொல்லுகிறான்.

அப்சலோம் தன் தகப்பனாராகிய தாவீதின் மறுமனையாட்டிகளோடு பிரவேசிக்குமாறு பாவமான ஆலோசனையைச் சொல்லுகிறான். அப்சலோம் தன்னுடைய தகப்பனாரின் மறுமனையாட்டிகளை, தனக்கு சொந்தமாக்கிக்கொண்டால், தாவீதுக்கு சொந்தமானதெல்லாம், அப்சலோமுக்கு வந்துவிட்டது என்று இஸ்ரவேல் ஜனங்கள் நினைப்பார்கள்.

அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தால், தாவீதுக்கும் அப்சலோமுக்கும் மறுபடியும் சமாதானம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அப்சலோம் தன் தகப்பனோடு மறுபடியும் சமாதானமாகிவிடுவானோ என்னும் சந்தேகம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வராது. ஆகையினால் அப்சலோமைப் பின்பற்றுகிறவர்கள் தாராளமாய்க் கூடிவருவார்கள். தாவீதுக்கு விரோதமாகத் தீங்கு நினைக்கிறவர்கள், அந்தத் தீங்குகளை பயமில்லாமல் செய்வார்கள்.

அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை அப்சலோமுக்கு தேவனுடைய வாக்கைப்போல இருந்தாலும், இது பிசாசின் வாக்காகவே இருக்கிறது. அப்சலோம் தன்னுடைய தகப்பனின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசிப்பது மிகப்பெரிய பாவம். அகித்தோப்பேலோ, அப்சலோமின் பாவத்தை, இன்னும் அதிகரிக்கச் செய்கிறான். அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில், இரகசியமாய் பிரவேசியாமல், வெளிப்படையாய்ப் பிரவேசிக்வேண்டுமென்று அகித்தோப்பேல் ஆலோசனை சொல்லுகிறான்.

அகித்தோப்பேலின் பொல்லாத ஆலோசனைப் பிரகாரம், அப்சலோமுக்கு உப்பரிகையின்மேல் ஒரு கூடாரத்தைப் போடுகிறார்கள்; அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசிக்கிறான் *(2சாமு 16:22)*.

இந்த சம்பவத்தின் மூலமாய், தாவீதுக்கு நாத்தான் மூலமாக சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுகிறது.

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்" *(2சாமு 12:11,12)*.

அகித்தோப்பேல் அப்சலோமுக்கு இவ்வளவு மோசமான ஆலோசனையை சொல்லுவதற்கு ஒரு காரணமுள்ள என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அகித்தோப்பேல் தாவீதை பழிவாங்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறான். தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபசாரம் பண்ணினார். பத்சேபாள் அகித்தோப்பேலின் பேத்தி. பத்சேபாள் எலியாமின் குமாரத்தி *(2சாமு 11:3)*. எலியாம் அகித்தோப்பேலின் குமாரன் *(2சாமு 23:34)*.

தாவீது தன்னுடைய பேத்தியாகிய பத்சேபாளை கெடுத்துப்போட்டதினிமித்தமாக, அகித்தோப்பேல் தாவீதைப் பழிவாங்குவதற்கு சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். அகித்தோப்பேல் இப்போது, தாவீதின் குமாரனாகிய அப்சலோம் மூலமாய், தாவீதை பழிவாங்குகிறான். தாவீது அகித்தோப்பேலின் பேத்தியாகிய பத்சேபாளிடத்தில் பிரவேசித்தான். தாவீதின் மகனாகிய அப்சலோமோ, தாவீதின் மறுமனையாட்டிகளோடே, சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக பிரவேசிக்கிறான்.

17 அதிகாரம்

தாவீதுக்கும் அப்சலோமுக்கும் விரோதமான பகை முற்றுகிறது. அவர்கள் இருவரும், ஒருவருக்கு விரோதமாக ஒருவர், பட்டயம் ஏந்தி யுத்தம்பண்ண வேண்டிய நிலமைக்கு வருகிறார்கள். தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டுமென்று அப்சலோம் தீர்மானம்பண்ணுகிறான். அவன் அகித்தோப்பேலிடம் யுத்த ஆலோசனை கேட்கிறான். அகித்தோப்பேலும் தாவீதுக்கு விரோதமாய் உடனே யுத்தம்பண்ண வேண்டுமென்று அப்சலோமுக்கு ஆலோசனை சொல்லுகிறான் (2சாமு 17:1-4).

அப்சலோம் ஊசாயிடமும் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது பற்றி ஆலோசனை கேட்கிறான். தாவீதுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண உடனே புறப்பட்டுப்போகாமல், காலதாமதம் பண்ணவேண்டுமென்று ஊசாய் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறான் (2சாமு 17:5-13).

அப்சலோமும் இஸ்ரவேலர் எல்லோரும் ஊசாயின் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறார்கள் (2சாமு 17:14). அப்சலோமின் ஆலோசனை நிராகரிக்கப்படுகிறது. அகித்தோப்பேல் இதனால் மனமுடைந்து நான்றுகொண்டு செத்துப்போகிறான் (2சாமு 17:23).

அப்சலோமின் வீட்டில் நடைபெறுகிற சம்பவங்கள் தாவீதுக்கு இரகசியமாய் அறிவிக்கப்படுகிறது (2சாமு 17:15-21). தாவீது யோர்தானைக் கடந்து அக்கரைக்குப் போகிறார் (2சாமு 17:22-24). தாவீது மக்னாயீமிலிருக்கிறார். அப்போது தாவீதின் சிநேகிதர் அவருக்கு போஜனபதார்த்தங்களையும், தேவையான பொருட்களையும் கொண்டு வந்து கொடுக்கிறார்கள் (2சாமு 17:27-29).

அப்சலோமும் அவனுடைய சேனையும் தாவீதுக்கு விரோதமாகப் புறப்பட்டு வருகிறார்கள். அவர்கள் யோர்தானைக் கடந்து கீலேயாத் தேசத்திலே பாளயமிறங்குகிறார்கள் (2சாமு 17:25,26).

அகித்தோப்பேலின் ஆலோசனை 2சாமு 17:1-4

2சாமு 17:1. பின்பு அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்துகொண்டு எழுந்து, இன்று இராத்திரி தாவீதைப் பின்தொடர்ந்து போகட்டும்.

2சாமு 17:2. அவன் விடாய்த்தவனும் கைதளர்ந்தவனுமாயிருக்கையில், நான் அவனிடத்தில் போய், அவனைத் திடுக்கிடப்பண்ணுவேன்; அப்பொழுது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவதினால், நான் ராஜா ஒருவனைமாத்திரம் வெட்டி,

2சாமு 17:3. ஜனங்களையெல்லாம் உம்முடைய வசமாய்த் திரும்பப்பண்ணுபேன், இப்படிச் செய்ய நீர் வகைதேடினால், எல்லாரும் திரும்பினபின் ஜனங்கள் சமாதானத்தோடு இருப்பார்கள் என்றான்.

2சாமு 17:4. இந்த வார்த்தை அப்சலோமின் பார்வைக்கும், இஸ்ரவேலுடைய சகல மூப்பரின் பார்வைக்கும் நலமாய்த் தோன்றினது.

அப்சலோம் இப்போது எருசலேமில் அமைதியாயிருக்கிறார். தாவீதுக்கு உண்மையுள்ளவர்கள் எல்லோரும் அவரோடுகூட வனாந்தரத்திற்குப் போய்விட்டார்கள். அப்சலோமை எதிர்க்கிறவர்கள் எருசலேமில் ஒருவர் கூடயில்லை. தாவீதின் அரண்மனை இப்போது அப்சலோமின் வசமாயிற்று.

தாவீது ஆரம்பத்தில் எப்ரோனிலே தங்கியிருந்தார். அவர் அங்கேயிருந்து ஏழுவருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணினார். யூதாகோத்திரத்தார் மாத்திரமே அப்போது தாவீதின் ராஜாங்கத்திற்குட்பட்டிருந்தார்கள். தனக்கு விரோதமாக எழும்பினவர்களை தாவீது உடனே அழித்துப்போட வேண்டுமென்று அவசரப்படவில்லை. தாவீதின் ராஜ்யம், தேவனுடைய வார்த்தையினால் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது. ஆகையினால் தாவீது அப்போது, கர்த்தருக்கு ஏற்ற வேளை வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருந்தார்.

ஆனால் தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்கோ பொறுமையில்லை. அவனுக்கு காத்திருக்க மனமில்லை. தாவீது எருசலேமைவிட்டு தப்பி ஓடிப்போனார் என்று தெரிந்தவுடன், அப்சலோம் எப்ரோனிலிருந்து எருசலேமுக்கு உடனே வந்துவிடுகிறான். தாவீது உயிரோடிருக்கும் நாளெல்லாம் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தில் அமர்ந்திருக்கவேண்டும் என்று அப்சலோம் பொறுமையாய்க் காத்திருக்கவில்லை. தாவீதுக்கு பின்பு தான் ராஜாவாகவேண்டும் என்னும் பொறுமையும் அப்சலோமுக்கு இல்லை. தாவீதை அழித்துப்போட்டு, தான் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ண வேண்டுமென்று அப்சலோம் அவசரப்படுகிறான்.

தாவீதும் அவரோடு கூடயிருக்கிற எல்லோரும் அழிக்கப்படவேண்டும் என்பது அப்சலோமின் விருப்பம். இஸ்ரவேல் தேசத்தில் தாவீதுக்கு நல்ல பெயர் இருக்கக்கூடாது என்று அப்சலோம் நினைக்கிறான். தாவீதின் நற்கிரியைகளைப்பற்றி ஒருவரும் புகழ்ந்து பேசக்கூடாது என்றும் அப்சலோம் எதிர்பார்க்கிறான். தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள், தாவீது தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிடவேண்டுமென்று அப்சலோம் எதிர்பார்க்கிறான்.

தாவீதை அழித்துப்போடவேண்டும் என்பதில் அப்சலோம் தீர்மானமாயிருக்கிறான். ஆனால் தாவீதை எப்படி அழிப்பது என்று அப்சலோமுக்கு தெரியவில்லை. அவனுக்கு ஆலோசனை தேவைப்படுகிறது. அப்சலோம் இது சம்பந்தமாக, அகித்தோப்பேலிடம் ஆலோசனை கேட்கிறான். அகித்தோப்பேல் யுத்த தந்திரங்களையும், யுத்தவியூகங்களையும் அறிந்திருக்கிறவன். அகித்தோப்பேல் அப்சலோமுக்கு தன்னுடைய ஆலோசனைகளைச் சொல்லுகிறான்.

அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: "நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்துகொண்டு எழுந்து, இன்று இராத்திரி தாவீதைப் பின்தொடர்ந்து போகட்டும். அவன் விடாய்த்தவனும் கைதளர்ந்தவனுமாயிருக்கையில், நான் அவனிடத்தில் போய், அவனைத் திடுக்கிடப்பண்ணுவேன்; அப்பொழுது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவதினால், நான் ராஜா ஒருவனை மாத்திரம் வெட்டி, ஜனங்களையெல்லாம் உம்முடைய வசமாய்த் திரும்பப்பண்ணுவேன், இப்படிச் செய்ய நீர் வகைதேடினால், எல்லாரும் திரும்பினபின் ஜனங்கள் சமாதானத்தோடு இருப்பார்கள்" (2சாமு 17:1-3) என்று தன்னுடைய ஆலோசனையைச் சொல்லுகிறான்.

தாவீதுக்கு விரோதமாக உடனே யுத்தம்பண்ண போகவேண்டும் என்பது அகித்தோப்பேலின் திட்டம். காலதாமதம்பண்ணாமல் இந்த இராத்திரியிலேயே தாவீதுக்கு விரோதமாக புறப்பட்டுப்போகவேண்டும் என்று அகித்தோப்பேல் சொல்லுகிறான்.

தாவீதோடு கூடயிருக்கிற ஜனங்களைக் கொன்றுபோடாமல், தாவீது ராஜாவை மாத்திரம் கொன்றுபோடவேண்டும் என்று அகித்தோப்பேல் ஆலோசனை சொல்லுகிறான். அப்சலோமின் சேனையை தானே வழிநடத்துவதாகவும் சொல்லி, அகித்தோப்பேல் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முன்வருகிறான்.

தாவீதும், அவரோடு கூடயிருக்கிறவர்களும், விடாய்த்தவர்களாகவும், கைதளர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். தாவீதால் இப்போது அப்சலோமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. தாவீதினிடத்தில் இப்போது சரீர பலமில்லை. தாவீதோடு கூடயிருக்கிறவர்கள் விடாய்த்துப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய கைகளெல்லாம் தளர்ந்துபோனபடியினால், அவர்களால் பட்டயம் பிடித்து யுத்தம்பண்ண முடியாது.

தாவீதுக்கு விரோதமாக திடீரென்று யுத்தம்பண்ணப்போனால், அவர் திடுக்கிடுவார். தாவீதோடு கூடயிருக்கிற ஜனங்களெல்லோரும் அவரைவிட்டு ஓடிப்போவார்கள். தாவீதின் மனுஷர் மத்தியிலே குழப்பமுண்டாகும். அப்போது தாவீது ராஜாவை மாத்திரம் எளிதாக வெட்டிக்கொன்றுபோடலாம் என்று அகித்தோப்பேல் ஆலோசனை சொல்லுகிறான்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், காய்பா என்பவன், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக, இதுபோன்ற ஆலோசனையைச் சொன்னான். காய்பா இரண்டாம் அகித்தோப்பேலைப்போல இருக்கிறான்.

"அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந்தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்" (யோவா 11:49,50).

அகித்தோப்பேலின் வார்த்தை அப்சலோமின் பார்வைக்கும், இஸ்ரவேலுடைய சகல மூப்பரின் பார்வைக்கும் நலமாய்த் தோன்றுகிறது (2சாமு 17:4).

ஊசாயின் ஆலோசனை 2சாமு 17:5-14

2சாமு 17:5. ஆகிலும் அப்சலோம்: அற்கியனாகிய ஊசாயைக் கூப்பிட்டு, அவன் வாய்மொழியையும் கேட்போம் என்றான்.

2சாமு 17:6. ஊசாய் அப்சலோமிடத்தில் வந்தபோது, அப்சலோம் அவனைப் பார்த்து: இந்தப் பிரகாரமாக அகிப்தோப்பேல் சொன்னான்; அவன் வார்த்தையின்படி செய்வோமா? அல்லவென்றால், நீ சொல் என்றான்.

2சாமு 17:7. அப்பொழுது ஊசாய் அப்சலோமை நோக்கி: அகித்தோப்பேல் இந்தவிசை சொன்ன ஆலோசனை நல்லதல்ல என்றான்.

2சாமு 17:8. மேலும் ஊசாய்: உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள் என்றும், வெளியிலே குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல மனமெரிகிறவர்கள் என்றும் நீர் அறிவீர்; உம்முடைய தகப்பன் யுத்தவீரனுமாயிருக்கிறார்; அவர் இராக்காலத்தில் ஜனங்களோடே தங்கமாட்டார்.

2சாமு 17:9. இதோ, அவர் இப்பொழுது ஒரு கெபியிலாவது, வேறே யாதோரிடத்திலாவது ஒளித்திருப்பார்; துவக்கத்திலே தானே நம்முடையவர்களில் சிலர் பட்டார்களேயானால், அதைக் கேட்கிற யாவரும் அப்சலோமைப் பின்செல்லுகிற ஜனங்களில் சங்காரம் உண்டாயிற்று என்பார்கள்.

2சாமு 17:10. அப்பொழுது சிங்கத்தின் இருதயத்திற்கொத்த இருதயமுள்ள பலவானாயிருக்கிறவனுங்கூட கலங்கிப் போவான்; உம்முடைய தகப்பன் சவுரியவான் என்றும், அவரோடிருக்கிறவர்கள் பலசாலிகள் என்றும், இஸ்ரவேலர் எல்லாரும் அறிவார்கள்.

2சாமு 17:11. ஆதலால் நான் சொல்லுகிற யோசனையாவது, தாண்முதல் பெயெர்செபாமட்டும் இருக்கிற கடற்கரை மணலத்தனை திரட்சியான இஸ்ரவேலர் எல்லாரும் உம்மண்டையில் கூட்டப்பட்டு, நீர்தானே கூட யுத்தத்திற்குப் போகவேண்டும்.

2சாமு 17:12. அப்பொழுது அவரைக் கண்டுபிடிக்கிற எவ்விடத்திலாகிலும் நாம் அவரிடத்தில் போய், பனி பூமியின்மேல் இறங்குவதுபோல அவர்மேல் இறங்குவோம்; அப்படியே அவரோடிருக்கிற எல்லா மனுஷரிலும் ஒருவனும் அவருக்கு மீந்திருப்பதில்லை.

2சாமு 17:13. ஒரு பட்டணத்திற்குள் புகுந்தாரேயானால், இஸ்ரவேலர் எல்லாரும் அந்தப் பட்டணத்தின்மேல் கயிறுகளைப் போட்டு, அங்கே ஒரு பொடிக்கல்லும் காணப்படாதே போகுமட்டும், அதை இழுத்து ஆற்றிலே போடுவார்கள் என்றான்.

2சாமு 17:14. அப்பொழுது அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும்: அகித்தோப்பேலின் ஆலோசனையைப்பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது என்றார்கள்; இப்படி கர்த்தர் அப்சலோமின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணும் பொருட்டு, அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டார்.

அகித்தோப்பேலின் ஆலோசனை அப்சலோமின் பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறது. ஆனாலும் அவன் ஊசாயிடமும் ஆலோசனை கேட்கவேண்டுமென்று விரும்புகிறான். அப்சலோம் இஸ்ரவேலுடைய சகல மூப்பரையும் நோக்கி, "அற்கியனாகிய ஊசாயைக் கூப்பிட்டு, அவன் வாய்மொழியையும் கேட்போம்" (2சாமு 17:5) என்று சொல்லுகிறான்.

அகித்தோப்பேல் தாவீதுக்கு விரோதமாக இன்று இரவே யுத்தம்பண்ணப் போகவேண்டும் என்று ஆலோசனை சொன்னான். ஆனால் ஊசாயோ, அகித்தோப்பேலின் ஆலோசனைக்கு, மாறுபட்ட ஆலோசனையைச் சொல்லுகிறான்.

தாவீதுக்கு விரோதமாக உடனே யுத்தம்பண்ணப்போகாமல், காலதாமதம்பண்ணி யுத்தம்பண்ண வேண்டுமென்பது ஊசாயின் ஆலோசனை. இஸ்ரவேல் தேசத்திலுள்ள யுத்தவீரர் எல்லோரும் கூட்டப்படவேண்டும் என்றும், அப்சலோம் தன்னுடைய சேனையின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்றும் ஊசாய் ஆலோசனை சொல்லுகிறான்.

ஊசாயின் ஆலோசனை தாவீதுக்கு விரோதமானதல்ல. அது தாவீதுக்கு சாதகமானது. தாவீதை அப்சலோமின் சதிஆலோசனைகளிலிருந்து பாதுகாப்பதற்காக ஊசாய் சாதுரியமான ஆலோசனைகளை சொல்லுகிறான். தாவீதுக்கு விரோதமாக அப்சலோம் உடனே யுத்தம்பண்ணப்போகாமல், காலதாமதம்பண்ணினால், தாவீது அந்தக்கால அவகாசத்தைப் பயன்படுத்தி, தன்னுடைய சேனையை வலுப்படுத்திக்கொள்ளலாம்.

மேலும் தாவீது இந்தக் காலஅவகாசத்தை தனக்கு சாதமாகப் பயன்படுத்தி, யோர்தான் நதியைத் தாண்டி, அக்கரையிலுள்ள தேசத்திற்குப்போய் விடலாம். தாவீது வெகுதூரத்திலுள்ள தேசத்திற்கு ஓடிப்போய்விட்டால், அப்சலோம் ஒருவேளை தாவீதைப் பின்தொடருகிற முயற்சியை கைவிட்டுவிடுவான்.

அகித்தோப்பேலின் ஆலோசனையை அப்சலோமும், இஸ்ரவேலுடைய சகல மூப்பரும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும் அப்சலோம் ஊசாயின் ஆலோசனையையும் கேட்கவேண்டுமென்று விரும்புகிறான். கர்த்தர் அப்சலோமின் இருதயத்தை ஆளுகை செய்கிறார். அகித்தோப்பேலின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாதபடிக்கு, கர்த்தர் அப்சலோமைத் தடைபண்ணுகிறார். கர்த்தருடைய வழிநடத்துதலினால், ஊசாயின் ஆலோசனையையும் கேட்கவேண்டும் என்னும் ஆவல், அப்சலோமின் மனதில் உண்டாயிற்று. ஆகையினால் அப்சலோம், "ஊசாயின் வாய்மொழியையும் கேட்போம்" என்று சொல்லுகிறான்.

ஊசாய் அப்சலோமுக்கு ஆலோசனை சொல்லுவதோடு, தன்னுடைய ஆலோசனைக்கான காரணங்களையும் அவனுக்கு தெளிவுபடுத்துகிறான். அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பின்பற்றும்போது வரும் ஆபத்துக்களையும் ஊசாய் இங்கு தெளிவுபடுத்துகிறான். ஊசாய் பேசும்போதே, "அகித்தோப்பேல் இந்த விசை சொன்ன ஆலோசனை நல்லதல்ல" என்று சொல்லிவிடுகிறான்.

தாவீதும் அவருடைய மனுஷரும் பராக்கிரமசாலிகள். அவர்கள் குட்டிகளை பறிகொடுத்த கரடிகளைப்போல மனம் எரிகிறவர்கள். தாவீதும் யுத்தவீரனாயிருக்கிறார். அவர் இராக்காலத்திலே தன்னுடைய ஜனங்களோடு தங்கமாட்டார். அகித்தோப்பேல் சொல்லுவதுபோல தாவீது விடாய்த்தவராகவும், கைத்தளர்ந்தவராகவும் இருக்கமாட்டார். தாவீது எருசலேமைவிட்டு தப்பி ஓடினது அவருடைய கோழைத்தனமல்ல. இது அவருடைய புத்திசாலித்தனமும் ராஜதந்திரமுமாகும். ஊசாய் இவ்வாறாக அகித்தோப்பேலின் ஆலோசனைகளுக்கு மறுப்பு சொல்லுகிறான்.

தாவீதோடு கூடயிருக்கிறவர்கள் கொஞ்சம் பேராயிருந்தாலும் அவர்களெல்லோரும் பலசாலிகளாயிருக்கிறார்கள். "உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள்" (2சாமு 17:8) என்றும், "உம்முடைய தகப்பன் சவுரியவான் என்றும், அவரோடிருக்கிறவர்கள் பலசாலிகள்" (2சாமு 17:10) என்றும் ஊசாய் தாவீதின் மனுஷருடைய வீரத்தைப்பற்றிச் சொல்லுகிறான். தாவீதோடு கூடயிருக்கிறவர்கள் பல யுத்தங்களில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள். அவர்களுக்கு யுத்த அனுபவம் இருக்கிறது என்றும், அவர்களுக்கு யுத்த தந்திரமும் தெரியும் என்றும் ஊசாய் அப்சலோமுக்கு சொல்லுகிறான்.

தாவீதோடு கூடயிருக்கிறவர்கள் எல்லோரும் அப்சலோமுக்கு விரோதமாக கோபமாயிருக்கிறார்கள். தாவீதுக்கு வந்த பிரச்சனைகளுக்கு அப்சலோமே மூலகாரணம். ஆகையினால் அவர்கள் அப்சலோமுக்கு விரோதமாக உக்கிரகோபத்தோடு யுத்தம்பண்ணுவார்கள். தாவீதின் சேனைக்கு முன்பாக, அப்சலோமின் சேனையால் எதிர்த்து நிற்கமுடியாது. அப்சலோமோடு கூடயிருக்கிறவர்கள் யுத்தம்பண்ணி பழக்கமில்லாதவர்கள். அவர்கள் தாவீதுக்கு முன்பாக முறிந்து ஓடிப்போவார்கள் என்றும் ஊசாய் அப்சலோமுக்கு சொல்லுகிறான்.

தாவீது இராக்காலத்தில் ஜனங்களோடே தங்கமாட்டார் என்றும், அவர் இப்பொழுது ஒரு கெபியிலாவது, வேறே யாதொரு இடத்திலாவது ஒளிந்திருப்பார் என்றும் ஊசாய் சொல்லுகிறான். துவக்கத்திலே அப்சலோமின் வீரர்களில் சிலர் செத்துப்போனால், அவனுடைய மற்ற வீரர்களுக்கும் பயம் வந்துவிடும். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களை வேதனைப்படுத்தும். தாவீது கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற இருதயமாயிருக்கிறது. ஆகையினால் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியதற்காக, அப்சலோமின் வீரர்கள் வருத்தப்படுவார்கள் என்றும் ஊசாய் சொல்லுகிறான்.

ஊசாய் அப்சலோமுக்கு, தாவீதைப்பற்றியும், அவருடைய மனுஷரைப்பற்றியும் விளக்கமாகச் சொல்லுகிறான். "உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள் என்றும், வெளியிலேகுட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல மனமெரிகிறவர்கள் என்றும் நீர் அறிவீர்; உம்முடைய தகப்பன் யுத்தவீரனுமாயிருக்கிறார்; அவர் இராக்காலத்தில் ஜனங்களோடே தங்கமாட்டார்" (2சாமு 17:8) என்று ஊசாய் தாவீதைப்பற்றி அப்சலோமுக்கு சொல்லுகிறான்.

தாவீதுக்கு விரோதமாக, இந்த இரவு வேளையிலே யுத்தம்பண்ணப்போனால், அப்சலோமின் மனுஷருக்கு எப்படிப்பட்ட தோல்வி உண்டாகும் என்பதையும் ஊசாய் அப்சலோமுக்கு விவரமாக எடுத்துச் சொல்லுகிறான்.

"இதோ, அவர் இப்பொழுது ஒரு கெபியிலாவது, வேறே யாதோரிடத்திலாவது ஒளித்திருப்பார்; துவக்கத்திலேதானே நம்முடையவர்களில் சிலர் பட்டார்களேயானால், அதைக் கேட்கிற யாவரும் அப்சலோமைப் பின்செல்லுகிற ஜனங்களில் சங்காரம் உண்டாயிற்று என்பார்கள். அப்பொழுது சிங்கத்தின் இருதயத்திற்கொத்த இருதயமுள்ள பலவானாயிருக்கிறவனுங்கூட கலங்கிப் போவான்; உம்முடைய தகப்பன் சவுரியவான் என்றும், அவரோடிருக்கிறவர்கள் பலசாலிகள் என்றும், இஸ்ரவேலர் எல்லாரும் அறிவார்கள்" (2சாமு 17:9,10) என்று ஊசாய் அப்சலோமுக்கு சொல்லுகிறான்.

ஊசாய் தன்னுடைய ஆலோசனையைச் சொல்லும்போது, தன்னுடைய ஆலோசனைக்கான காரணங்களையும் எடுத்துச் சொல்லுகிறான். ஊசாயின் ஆலோசனைகள் அப்சலோமுக்கு பெருமை சேர்ப்பதாயிருக்கிறது. ஊசாய் அப்சலோமின் மனதிற்கேற்ற பிரகாரமாக பேசுகிறான்.

ஊசாய் இதுவரையிலும் அகித்தோப்பேலின் ஆலோசனைக்கு விரோதமாகப் பேசினான். இப்போது ஊசாய் தன்னுடைய ஆலோசனையைப்பற்றிச் சொல்லும்போது, "ஆதலால் நான் சொல்லுகிற யோசனையாவது, தாண்முதல் பெயெர்செபாமட்டும் இருக்கிற கடற்கரை மணலத்தனை திரட்சியான இஸ்ரவேலர் எல்லாரும் உம்மண்டையில் கூட்டப்பட்டு, நீர்தானே கூட யுத்தத்திற்குப் போகவேண்டும்" *(2சாமு 17:11)* என்று சொல்லுகிறான்.

அப்சலோம் முதலாவதாக இஸ்ரவேல் தேசம் முழுவதிலுமிருந்து தன்னுடைய சேனையை கூட்டிச்சேர்க்கவேண்டும். தாவீதுக்கு விரோதமான யுத்தத்திலே அப்சலோம் நேரடியாகப் போகவேண்டும். ஊசாய் இதைச் சொல்லும்போது, அப்சலோம் அகித்தோப்பேலைவிட மிகப்பெரிய வீரன் என்பதுபோல பேசுகிறான். அப்சலோம் யுத்தத்திற்குப்போனால்தான் அவனுக்கு வெற்றி கிடைக்கும் என்றும், அகித்தோப்பேல் யுத்தத்திற்குப்போனால் அப்சலோமுக்கு வெற்றி கிடைக்க வாய்ப்பில்லை என்பது போலவும் ஊசாய் சொல்லுகிறான். இதைக் கேட்டு அப்சலோமின் மனதில் பெருமை உண்டாயிற்று.

அப்சலோமின் சேனை திரளான எண்ணிக்கையிலிருக்கும்போது தாவீதை எளிதாக கண்டுபிடித்துவிடலாம் என்றும் ஊசாய் ஆலோசனை சொல்லுகிறான். அப்சலோமின் சேனை திரளான எண்ணிக்கையில் கூட்டிச்சேர்க்கப்படும்போது, அவனுக்கு என்னென்ன அநுகூலங்கள் உண்டாகும் என்பதையும் ஊசாய் விரிவாக சொல்லுகிறான்.

ஊசாய் அப்சலோமை நோக்கி, "அப்பொழுது அவரைக் கண்டுபிடிக்கிற எவ்விடத்திலாகிலும் நாம் அவரிடத்தில் போய், பனி பூமியின்மேல் இறங்குவதுபோல அவர்மேல் இறங்குவோம்; அப்படியே அவரோடிருக்கிற எல்லா மனுஷரிலும் ஒருவனும் அவருக்கு மீந்திருப்பதில்லை. ஒரு பட்டணத்திற்குள் புகுந்தாரேயானால், இஸ்ரவேலர் எல்லாரும் அந்தப் பட்டணத்தின்மேல் கயிறுகளைப் போட்டு, அங்கே ஒரு பொடிக்கல்லும் காணப்படாதே போகுமட்டும், அதை இழுத்து ஆற்றிலே போடுவார்கள்" *(2சாமு 17:12,13)* என்று சொல்லுகிறான்.

ஊசாயின் ஆலோசனையும் திட்டமும் அப்சலோமுக்கு பிடித்திருக்கிறது. தாவீதோடு கூடயிருக்கிற எல்லோரையும் சங்காரம்பண்ணவேண்டுமென்று அப்சலோம் விரும்புகிறான். அகித்தோப்பேலோ தாவீதை மாத்திரம் வெட்டிப்போட்டு கொன்றுபோடலாம் என்று சொன்னான். ஊசாயோ தாவீதோடு கூடயிருக்கிற எல்லோரையும் அழித்துப்போடலாம் என்று சொல்லுகிறான்.

தாவீதையும், அவரோடு கூடயிருக்கிற எல்லா மனுஷரையும் அழித்துப்போட்டு பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணம் அப்சலோமின் மனதிலிருக்கிறது. அப்சலோம் பெருமை பிடித்தவன். ஊசாயின் ஆலோசனை அப்சலோமின் பெருமையைக் கூட்டுகிறது. ஒரு பட்டணத்தையே இழுத்து ஆற்றிலே போடுமளவுக்கு, தன்னுடைய சேனையின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்று அப்சலோம் ஆசைப்படுகிறான்.

ஊசாயின் ஆலோசனை அப்சலோமின் பார்வைக்கும், இஸ்ரவேலுடைய சகல மூப்பரின் பார்வைக்கும் நலமாய்த் தோன்றுகிறது. அப்பொழுது அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும்: "அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது" என்று சொல்லுகிறார்கள்; இப்படி கர்த்தர் அப்சலோமின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணும் பொருட்டு, அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிடுகிறார் *(2சாமு 17:14)*.

தாவீதுக்கு இரகசிய செய்தி 2சாமு 17:15-21

2சாமு 17:15. பின்பு ஊசாய், சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களைப் பார்த்து: இன்ன இன்னபடி. அகித்தோப்பேல் அப்சலோமுக்கும் இஸ்ரவேலின் மூப்பருக்கும் ஆலோசனை சொன்னான்; நானோ இன்ன இன்னபடி ஆலோசனை சொன்னேன்.

2சாமு 17:16. இப்பொழுதும் நீங்கள் சீக்கிரமாய்த் தாவீதுக்கு அறிவிக்கும்படிக்குச் செய்தி அனுப்பி: நீர் இன்று இராத்திரி வனாந்தரத்தின் வெளிகளிலே தங்கவேண்டாம்; ராஜாவும் அவரோடிருக்கிற சகல ஜனங்களும் விழுங்கப்படாதபடிக்குத் தாமதம் இல்லாமல் அக்கரைப்படவேண்டும் என்று சொல்லச்சொல்லுங்கள் என்றான்.

2சாமு 17:17. யோனத்தானும் அகிமாசும், தாங்கள் நகரத்தில் பிரவேசிக்கிறதினால் காணப்படாதபடிக்கு, இன்றோகேல் அண்டை நின்றுகொண்டிருந்தார்கள்; ஒரு வேலைக்காரி போய், அதை அவர்களுக்குச் சொன்னாள்; அவர்கள் தாவீது ராஜாவுக்கு அதை அறிவிக்கப்போனார்கள்.

2சாமு 17:18. ஒரு பிள்ளையாண்டான் அவர்களைக் கண்டு, அப்சலோமுக்கு அறிவித்தான்; ஆகையால் அவர்கள் இருவரும் சீக்கிரமாய்ப் போய், பகூரிமிலிருக்கிற ஒரு மனுஷன் வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; அவன் முற்றத்தில் ஒரு கிணறு இருந்தது; அதில் இறங்கினார்கள்.

2சாமு 17:19. வீட்டுக்காரி ஒரு பாயை எடுத்து, கிணற்றுவாயின்மேல் விரித்து, காரியம் வெளிப்படாதபடிக்கு, அதின்மேல் நொய்யைப் பரப்பிவைத்தாள்.

2சாமு 17:20. அப்சலோமின் சேவகர் அந்த ஸ்திரீயினிடத்தில் வீட்டிற்குள் வந்து: அகிமாசும் யோனத்தானும் எங்கே என்று கேட்டார்கள்; அவர்களுக்கு அந்த ஸ்திரீ: வாய்க்காலுக்கு அப்பாலே போய்விட்டார்கள் என்றாள்; இவர்கள் தேடிக் காணாதேபோய், எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

2சாமு 17:21. இவர்கள் போனபிற்பாடு, அவர்கள் கிணற்றிலிருந்து ஏறிவந்து, தாவீது ராஜாவுக்கு அறிவித்து, தாவீதை நோக்கி: சீக்கிரமாய் எழுந்து ஆற்றைக் கடந்துபோங்கள்; இன்னபடி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோதமாய் ஆலோசனை சொன்னான் என்றார்கள்.

அப்சலோமின் வீட்டில் நடைபெறுகிற எல்லா காரியங்களையும் ஊசாய் தாவீதுக்கு வேவுகாரர் மூலமாக அனுப்பவேண்டும். இத்துடன் ஊசாய் அகித்தோப்பேலின் ஆலோசனையையும் அபத்தமாக்கவேண்டும். இதுவே தாவீதும் ஊசாயும் ஏற்கெனவே தீர்மானம்பண்ணின இரகசிய திட்டம். இந்த திட்டத்தின் பிரகாரமாக, ஊசாய் ஆசாரியர் மூலமாக தாவீதுக்கு இரகசிய செய்தியனுப்புகிறான்.

ஊசாய், சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களைப் பார்த்து: "இன்ன இன்னபடி அகித்தோப்பேல் அப்சலோமுக்கும் இஸ்ரவேலின் மூப்பருக்கும் ஆலோசனை சொன்னான்; நானோ இன்ன இன்னபடி ஆலோசனை சொன்னேன். இப்பொழுதும் நீங்கள் சீக்கிரமாய்த் தாவீதுக்கு அறிவிக்கும்படிக்குச் செய்தி அனுப்பி: நீர் இன்று இராத்திரி வனாந்தரத்தின் வெளிகளிலே தங்கவேண்டாம்; ராஜாவும் அவரோடிருக்கிற சகல ஜனங்களும் விழுங்கப்படாதபடிக்குத் தாமதம் இல்லாமல் அக்கரைப்படவேண்டும் என்று சொல்லச்சொல்லுங்கள்" (2சாமு 17:15,16) என்று சொல்லுகிறான்.

அப்சலோம் தன்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வானா அல்லது அகித்தோப்பேலின் ஆலோனையை ஏற்றுக்கொள்வானா என்பது ஊசாயிக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. ஆகையினால் தாவீதும் அவரோடு கூடயிருக்கிற ஜனங்களும் வனாந்தர வெளியில் தங்காமல், யோர்தான் நதியைக் கடந்து, பாதுகாப்பான இடத்திற்கு தப்பித்துப்போய்விடவேண்டும் என்று ஊசாய் தாவீதுக்கு செய்தி சொல்லியனுப்புகிறான்.

தாவீது யோர்தான் நதியைத் தாண்டி தப்பித்துப்போய்விடவில்லையென்றால், அப்சலோம் தாவீதையும், அவரோடு கூடயிருக்கிற எல்லா ஜனங்களையும் விழுங்கிப்போடுவான். அவர்களெல்லோரும் அப்சலோமின் பட்டயத்திற்கு சங்காரமாவார்கள்.

அப்சலோம் எருசலேம் நகரத்திற்கு வந்தவுடன், நகரம் முழுவதும் தன்னுடைய சேவகர்களை நிறுத்தி, நகரத்தைப் பாதுகாக்கிறான். எருசலேம் நகரத்திற்குள்ளே யாராலும் வரமுடியவில்லை. எருசலேம் நகரத்தைவிட்டு யாராலும் வெளியேயும் யாராலும் போகமுடியவில்லை. எருசலேம் நகரம் முழுவதும் அப்சலோமின் கட்டுப்பாட்டிலிருக்கிறது. இதனால் தாவீதுக்கு இரகசிய செய்தி சொல்லியனுப்புவது ஊசாயிக்கு மிகவும் கடினமாயிருக்கிறது.

ஊசாய் அப்சலோமின் வீட்டில் நடைபெறுகிற காரியத்தை சாதோக், அபியத்தார் ஆகிய ஆசாரியர்களிடத்தில் சொல்லுகிறான். அவர்கள் தங்கள் குமாரராகிய யோனத்தான், அகிமாஸ் ஆகியோர் மூலமாக, ஊசாய் தங்களுக்கு சொன்ன இரகசிய செய்தியை, தாவீதுக்கு சொல்லியனுப்புகிறார்கள். ஆசாரியர்களாலும், ஊசாய் சொன்ன இரகசிய செய்தியை தங்களுடைய குமாரருக்கு, நேரடியாக சொல்லமுடியவில்லை. அவர்கள் ஒரு வேலைக்காரி மூலமாக, இந்த இரகசிய செய்தியை, தங்கள் குமாரருக்கு சொல்லியனுப்புகிறார்கள்.

சாதோக், அபியத்தார் ஆகிய இரண்டு ஆசாரியராலும் எருசலேம் நகரத்தைவிட்டு வெளியே போகமுடியவில்லை. அப்சலோம் அவர்களை நேரடியாக கண்காணிக்கிறான். எருசலேம் நகரத்தைப் பாதுகாக்கும் ஆலோசனையெல்லாம் அகித்தோப்பேல் மூலமாக அப்சலோமுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாதோக், அபியத்தார் ஆகிய ஆசாரியரின் குமாரர்களாகிய யோனாத்தானும் அகிமாசும், தாங்கள் நகரத்தில் பிரவேசிக்கிறதினால் காணப்படாபடிக்கு, இன்றோகேல் அண்டை நின்றுகொண்டிருக்கிறார்கள்; ஒரு வேலைக்காரி போய், அந்தச் செய்தியை அவர்களுக்குச் சொல்லுகிறாள்; இந்த வேலைக்காரி ஒருவேளை தண்ணீர் எடுப்பதற்கு போவதுபோல அந்த இடத்திற்குப்போய், ஆசாரியர்கள் தனக்கு சொன்ன இரகசிய செய்தியை, அவர்களுடைய குமாரரிடத்தில் சொல்லியிருக்கவேண்டும். ஆசாரியரின் குமாரர்கள் இருவரும் தாவீது ராஜாவுக்கு அதை அறிவிக்கப்போகிறார்கள் (2சாமு 17:17).

அப்சலோமின் வேவுகாரர்கள் எருசலேம் நகரம் முழுவதிலும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். யோனத்தானும் அகிமாசும் இன்றோகேல் அருகிலே நின்றுகொண்டிருக்கும்போது, ஒரு பிள்ளையாண்டான் அவர்களைக் கண்டு, அந்தச் செய்தியை அப்சலோமுக்கு அறிவிக்கிறான்.

ஆகையால் ஆசாரியரின் குமாரர்கள் இருவரும் சீக்கிரமாய்ப் போய், பகூரிமிலிருக்கிற ஒரு மனுஷன் வீட்டிற்குள் பிரவேசிக்கிறார்கள்; அவன் முற்றத்தில் ஒரு கிணறு இருக்கிறது; அதில் இறங்குகிறார்கள். வீட்டுக்காரி ஒரு பாயை எடுத்து, கிணற்றுவாயின்மேல் விரித்து, காரியம் வெளிப்படாதபடிக்கு, அதின்மேல் நொய்யைப் பரப்பிவைக்கிறாள் (2சாமு 17:18,19).

பகூரிமிலே, தாவீதும் அவரோடிருந்த ஜனங்களும் விடாய்த்தவர்களாய் இளைப்பாறினார்கள் (2சாமு 16:14). இப்போது இதே பட்டணத்தில் ஆசாரியரின் குமாரரும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். இது கோடைகாலமாக இருப்பதினால், கிணறு தண்ணீரில்லாமல் வற்றிப்போயிருக்கிறது. ஆகையினால் ஆசாரியரின் குமாரர் அந்தக் கிணற்றில் இறங்கி ஒளிந்துகொள்கிறார்கள். அந்த வீட்டுக்காரியும் ஒரு பாயை எடுத்து கிணற்று வாயின்மேல் விரிக்கிறாள். அதின்மேல் நொய்யை பரப்பி வைக்கிறாள். வெளிப்பார்வைக்கு அது கிணறுபோலவே தெரியவில்லை.

ஆசாரியரின் குமாரர்களை ஒரு பிள்ளையாண்டான் கண்டு, அந்தச் செய்தியை அப்சலோமுக்கு அறிவிக்கிறான். அப்சலோமும் அவர்களை பிடிப்பதற்காக தன்னுடைய சேவகரை அனுப்புகிறான்.

அப்சலோமின் சேவகர் அந்த ஸ்திரீயினிடத்தில் வீட்டிற்குள் வந்து: "அகிமாகசும் யோனத்தானும் எங்கே" என்று கேட்கிறார்கள்; அவர்களுக்கு அந்த ஸ்திரீ: "வாய்க்காலுக்கு அப்பாலே போய்விட்டார்கள்" என்று பிரதியுத்தரம் சொல்லுகிறாள்; அப்சலோமின் சேவகர்கள் அகிமாகசையும் யோனத்தானையும் தேடிக் காணாதேபோய், எருசலேமுக்குத் திரும்புகிறார்கள் (2சாமு 17:20).

அப்சலோமின் சேவகர்கள் போனபிற்பாடு, அவர்கள் கிணற்றிலிருந்து ஏறிவந்து, தாவீதினிடத்திற்குப்போகிறார்கள். அவர்கள் தாவீது ராஜாவுக்கு ஊசாய் சொன்ன இரகசிய செய்தியை அறிவிக்கிறார்கள். அவர்கள் தாவீதை நோக்கி: "சீக்கிரமாய் எழுந்து ஆற்றைக் கடந்துபோங்கள்; இன்னபடி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோதமாய் ஆலோசனை சொன்னான்" (2சாமு 17:21) என்று சொல்லுகிறார்கள்.

தாவீது சீக்கிரமாய் யோர்தான் ஆற்றைக் கடந்து பாதுகாப்பான இடத்திற்குப்போய்விடவேண்டும். தாவீது இப்போது தங்கியிருக்கிற இடம் யோர்தானுக்கு அருகாமையிலிருக்கிறது.

யோர்தானுக்கு அப்புறத்திலே தாவீது
2சாமு 17:22-29

2சாமு 17:22. அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல ஜனங்களும் எழுந்து யோர்தானைக் கடந்துபோனார்கள்; பொழுது விடிகிறதற்குள்ளாக யோர்தானைக் கடவாதவன் ஒருவனும் இல்லை.

2சாமு 17:23. அகித்தோப்பேல் தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று கண்டபோது, தன் கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப்போய், தன் வீட்டுகாரியங்களை ஒழுங்குபடுத்தி, நான்றுகொண்டு செத்தான்; அவன் தகப்பன் கல்லறையில் அவனை அடக்கம்பண்ணினார்கள்.

2சாமு 17:24. தாவீது மக்னாயீமுக்கு வந்தான்; அப்சலோமும் சகல இஸ்ரவேலரோடுங் கூட யோர்தானைக் கடந்தான்.

2சாமு 17:25. அப்சலோம், யோவாபுக்குப் பதிலாக அமாசாவை இராணுவத்தலைவனாக்கினான்; இந்த அமாசா, நாகாசின் குமாரத்தியும் செருயாவின் சகோதரியும் யோவாபின் அத்தையுமாகிய அபிகாயிலைப் படைத்த இஸ்ரவேலனாகிய எத்திரா என்னும் பேருள்ள ஒரு மனுஷனுடைய குமாரனாயிருந்தான்.

2சாமு 17:26. இஸ்ரவேல் ஜனங்களும் அப்சலோமும் கீலேயாத் தேசத்திலே பாளயமிறங்கினார்கள்.

2சாமு 17:27. தாவீது மக்னாயீமில் சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்து ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரனும், லோதேபார் ஊரானான அம்மியேலின் குமாரன் மாகீரும், ரோகிலிம் ஊரானும் கீலேயாத்தியனுமாகிய பர்சிலாவும்,

2சாமு 17:28. மெத்தைகளையும், கலங்களையும், மண்பாண்டங்களையும், கோதுமையையும், வாற்கோதுமையையும், மாவையும், வறுத்த பயற்றையும், பெரும் பயற்றையும், சிறு பயற்றையும், வறுத்த சிறு பயற்றையும்,

2சாமு 17:29. தேனையும், வெண்ணெயையும், ஆடுகளையும், பால்கட்டிகளையும், தாவீதுக்கும் அவனோடிருந்த ஜனங்களுக்கும் சாப்பிடுகிறதற்குக் கொண்டுவந்தார்கள்; அந்த ஜனங்கள் வனாந்தரத்திலே பசியும் இளைப்பும் தவனமுமாயிருப்பார்கள் என்று இப்படிச் செய்தார்கள்.

அந்த இரவுவேளையிலே, தாவீதும் அவரோடிருந்த சகல ஜனங்களும் எழுந்து யோர்தானைக் கடந்துபோகிறார்கள்; பொழுதுவிடிகிறதற்குள்ளாக யோர்தானைக் கடவாதவன் ஒருவனும் இல்லை. தாவீது தன்னோடிருந்த ஜனங்கள் யாரையும் கைவிட்டுவிடவில்லை. எல்லோரும் யோர்தானைக் கடக்கிறார்கள்.

தாவீதும் அவரோடிருக்கிற சகல மனுஷரும் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள ஏரிகோவுக்கு வருகிறார்கள். அதன்பின்பு அவர்கள் எல்லோரும் பல மைல்கள் நடந்து மக்னாயீமுக்கு வருகிறார்கள். மக்னாயீம் காத் கோத்திரத்திலுள்ள லேவியரின் பட்டணம்.

சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் மக்னாயீம் பட்டணத்தை தனக்கு ராஜதானி பட்டணமாக வைத்திருந்தான். இப்போது மக்னாயீம் பட்டணம் தாவீதுக்கு ராஜதானி பட்டணமாயிருக்கிறது *(2சாமு 17:24)*.

"சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவனைக் கிலேயாத்தின்மேலும், அஷூரியர்மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின்மேலும், பென்யமீனின்மேலும், இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக்கினான்" *(2சாமு 2:8,9)*.

தாவீது மக்னாயீம் பட்டணத்திலிருக்கும்போது அவருக்கு போதுமான காலஅவகாசம் கிடைக்கிறது. இது தாவீதுக்கு கிடைத்திருக்கிற கிருபையின் காலம். தாவீது இந்தக் காலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, தன்னுடைய சேனையின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறார். தனக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறவர்களை எதிர்ப்பதற்கு தாவீது தன்னுடைய சேனையை பலப்படுத்திக்கொள்கிறார்.

தாவீதும் அவரோடு கூடயிருக்கிற ஜனங்கள் அனைவரும் யோர்தான் நதியைக் கடந்து அக்கரைக்குப்போகும்போது, எருசலேமிலே ஒரு சோக சம்பவம் நடைபெறுகிறது.

தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று அகித்தோப்பேல் கண்டபோது, அவன் கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப்போய், தன் வீட்டுகாரியங்களைஒழுங்குபடுத்தி, நான்றுகொண்டு செத்துப்போகிறான்; அவன் தகப்பன் கல்லறையில் அவனை அடக்கம்பண்ணுகிறார்கள் *(2சாமு 17:23)*.

தன்னுடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அறிந்தபோது, அகித்தோப்பேலுக்கு மிகுந்த அவமானமுண்டாயிற்று. அந்த அவமானத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய புத்திக்கும், ராஜதந்திரத்திற்கும் அப்சலோமிடத்தில் மதிப்பும் மரியாதையும் இல்லை என்பதை அறிந்தபோது, அகித்தோப்பேல் மனமுடைந்து போகிறான்.

தன்னுடைய ஆலோசனையைக் கேட்காமல், அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனால், யுத்தத்திலே அப்சலோமுக்கு தோல்வி உண்டாகும் என்பது அகித்தோப்பேலுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இதனால் தாவீதுக்கு விரோதமாக எழும்பினவர்கள் எல்லோருடைய ஜீவனுக்கும் ஆபத்து உண்டாகும். அதிலும் விசேஷமாக, தன்னுடைய ஜீவனுக்கு தாவீது மூலமாக நிச்சயமாய் ஆபத்து வரும் என்று அகித்தோப்பேல் பயப்படுகிறான்.

அகித்தோப்பேலின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகிறான். யுத்தத்திலே அப்சலோம் தோற்றுப்போவான். தாவீதின் கண்களில் யாருக்கு கிருபை கிடைக்கிறதோ, அவர்களுடைய ஜீவன் மாத்திரம் தப்பிக்கும். தாவீதின் கண்களில் தனக்கு கிருபை கிடைக்காது என்பது அகித்தோப்பேலுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

தாவீதின் மறுமனையாட்டிகளோடு பிரவேசிக்குமாறு, அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஆலோசனை சொன்னான். இந்தச் செய்தி தாவீதுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கும். இதனால் தாவீது தன்னைப் பழிவாங்குவார் என்று அகித்தோப்பேல் பயப்படுகிறான்.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, "கர்த்தாவே அகித்தோப்பேலின் ஆலோசனையை பயித்தியமாக்கிப்போடும்" என்று விண்ணப்பம் பண்ணினார். தாவீது ஜெபம்பண்ணிய பிரகாரம், கர்த்தர் அகித்தோப்பேலின் ஆலோசனையை பயித்தியமாக்கிப்போட்டார். தன்னுடைய ஆலோசனையின்படி ஒருவரும் நடக்கவில்லை என்பதை கண்டு, அகித்தோப்பேலும் நான்றுகொண்டு செத்துப்போகிறான்.

அப்சலோம் ஊசாயின் ஆலோசனை நன்றாயிருக்கிறது என்று சொன்னாலும், அவனுடைய ஆலோசனைக்கும் கீழ்ப்படியவில்லை. அப்சலோம் அகித்தோப்பேலின் ஆலோசனைக்கும் மதிப்பு கொடுக்கவில்லை. தாவீதை எப்படியாவது அழித்துப்போடவேண்டும் என்னும் வெறி அப்சலோமின் மனதிலிருக்கிறது.

அப்சலோமும் சகல இஸ்ரவேலரும் தாவீதைத் தொடர்ந்து வருகிறார்கள். அவர்களெல்லோரும் யோர்தானைக் கடக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களும் அப்சலோமும் கீலேயாத் தேசத்திலே பாளயமிறங்குகிறார்கள் (2சாமு 17:26).

அப்சலோம் தன்னுடைய தகப்பனாராகிய தாவீதை, இஸ்ரவேல் தேசத்தின் ஓரத்திலே ஒதுக்கி வைத்துவிட்டாலே போதுமானது. ஆனால் அப்சலோமோ அதில் திருப்தியடையவில்லை. அவன் தாவீதை இந்த உலகத்தைவிட்டே துரத்தவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறான்.

அப்சலோம், யோவாபுக்குப் பதிலாக அமாசாவை இராணுவத்தலைவனாக்குகிறான்; இந்த அமாசா, நாகாசின் குமாரத்தியும் செருயாவின் சகோதரியும் யோவாபின் அத்தையுமாகிய அபிகாயிலைப் படைத்த இஸ்ரவேலனாகிய எத்திரா என்னும் பேருள்ள ஒரு மனுஷனுடைய குமாரனாயிருக்கிறான் (2சாமு 17:25).

"அபிகாயில் அமாசாவைப் பெற்றாள்; அமாசாவின் தகப்பன் இஸ்மவேலியனாகிய யெத்தேர் என்பவன்" (1நாளா 2:17).

தாவீது மக்னாயீமிலே தங்கியிருக்கும்போது, அவருடைய சிநேகிதர்கள் பல தேசங்களிலிருந்து தாவீதை சந்திக்க வருகிறார்கள். தாவீது மக்னாயீமில் சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்து ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரனும், லோதேபார் ஊரானான அம்மியேலின் குமாரன் மாகீரும், ரோகிலிம் ஊரானும் கீலேயாத்தியனுமாகிய பர்சிலாவும் தாவீதை பார்க்க வருகிறார்கள். இவர்கள் எல்லோரும் தாவீதின் மேல் அன்பாயிருக்கிறார்கள் (2சாமு 17:27).

இவர்களெல்லோரும் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தாவீது இவர்களுக்கு ஏற்கெனவே நன்மை செய்தார். தாவீது தங்களுக்கு செய்த நன்மைகளுக்கு பிரதி உபகாரமாக, இவர்கள் இப்போது தாவீதுக்கு நன்மை செய்ய வந்திருக்கிறார்கள்.

தாவீது மக்னாயீமில் சேர்ந்தபோது, தாவீதின் சிநேகிதர்களாகிய இவர்கள், மெத்தைகளையும், கலங்களையும், மண்பாண்டங்களையும், கோதுமையையும், வாற்கோதுமையையும், மாவையும், வறுத்த பயற்றையும், பெரும் பயற்றையும், சிறு பயற்றையும், வறுத்த சிறு பயற்றையும், தேனையும், வெண்ணெயையும், ஆடுகளையும், பால்கட்டிகளையும், தாவீதுக்கும் அவனோடிருந்த ஜனங்களுக்கும் சாப்பிடுகிறதற்குக் கொண்டுவருகிறார்கள்; தாவீதும் அவரோடிருக்கிற ஜனங்களும் வனாந்தரத்திலே பசியும் இளைப்பும் தவனமுமாயிருப்பார்கள் என்று இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் (2சாமு 17:28,29).

நமக்கு நன்மை செய்ய திராணியிருக்கும்போது நாமும் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். அம்மியேலின் குமாரனாகிய மாகீர், சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்திற்கு, தன்னுடைய வீட்டிலே தங்க இடம் கொடுத்து, அவனைப் பராமரித்தவன் (2சாமு 9:4). மாகீர் இப்போது தாவீதுக்கும் உதவி செய்ய வந்திருக்கிறான்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடமாட்டார். சில சமயங்களில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, அவர்கள் அறியாத அந்நியர் மூலமாகவும் உதவியும், ஒத்தாசையும், ஆறுதலும் வரும். சில சமயங்களில் நம்முடைய உற்றார் உறவினரும், நம்முடைய வீட்டிலுள்ளவர்களும் நம்மைக் கைவிட்டுவிட்டாலும், அவர்கள் நமக்கு விரோதமாக எழும்பினாலும், கர்த்தர் நமக்கு ஆதரவாக, தமக்கு சித்தமான சிலரை நம்மிடத்தில் அனுப்புவார். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு அவருடைய கிருபை என்றுமுள்ளது.

18 அதிகாரம்

அப்சலோமின் கலகமும், அவனுடைய ஜீவியமும் முடிவு பெறுகிறது. தாவீது மறுபடியுமாய் தன்னுடைய ராஜாசனத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

தாவீது தனக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்கள்மீது யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார். தன்னுடைய சேனையை ஒழுங்குபடுத்துகிறார் *(2சாமு 18:1-5)*. இந்த யுத்தத்தில் அப்சலோமுக்கும், அவனுடைய மனுஷருக்கும் முற்றிலுமாய் தோல்வி உண்டாயிற்று *(2சாமு 18:6-8)*.

அப்சலோம் மரித்துப்போகிறான் *(2சாமு 18:9-18)*. தாவீது மக்னாயீமிலிருக்கிறார். அப்சலோமின் மரணச்செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது *(2சாமு 18:19-32)*. தாவீது அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார் *(2சாமு 18:33)*.

தாவீதின் சேனை
2சாமு 18:1-8

2சாமு 18:1. தாவீது தன்னோடிருந்த ஜனங்களை இலக்கம் பார்த்து, அவர்கள்மேல் ஆயிரத்துக்கு அதிபதிகளையும், நூற்றுக்கு அதிபதிகளையும் வைத்து,

2சாமு 18:2. பின்பு தாவீது ஜனங்களில் மூன்றில் ஒரு பங்கை யோவாபின் வசமாகவும், மூன்றில் ஒரு பங்கைச் செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமான அபிசாயின் வசமாகவும்,

மூன்றில் ஒரு பங்கைக் கித்தியனாகிய ஈத்தாயின் வசனமாகவும் அனுப்பி: நானும் உங்களோடேகூடப் புறப்பட்டு வருவேன் என்று ராஜா ஜனங்களிடத்தில் சொன்னான்.

2சாமு 18:3. ஜனங்களோ: நீர் புறப்படவேண்டாம்; நாங்கள் முறிந்தோடிப்போனாலும், அவர்கள் எங்கள் காரியத்தை ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள்; எங்களில் பாதிப்பேர் செத்துப்போனாலும், எங்கள் காரியத்தைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்; நீரோ, எங்களில் பதினாயிரம்பேருக்குச் சரி; நீர் பட்டணத்தில் இருந்துகொண்டு, எங்களுக்கு உதவிசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்கும் என்றார்கள்.

2சாமு 18:4. அப்பொழுது ராஜா அவர்களைப் பார்த்து: உங்களுக்கு நலமாய்த் தோன்றுகிறதைச் செய்வேன் என்று சொல்லி, ராஜா ஒலிமுகவாசல் ஓரத்திலே நின்றான்; ஜனங்கள் எல்லாரும் நூறுநூறாகவும், ஆயிரம் ஆயிரமாகவும் புறப்பட்டார்கள்.

2சாமு 18:5. ராஜா யோவாபையும், அபிசாயையும், ஈத்தாயையும் நோக்கி: பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள் என்று கட்டளையிட்டான்; இப்படி ராஜாஅப்சலோமைக் குறித்து அதிபதிகளுக்கெல்லாம் கட்டளையிட்டதை ஜனங்கள் எல்லாரும் கேட்டிருந்தார்கள்.

2சாமு 18:6. ஜனங்கள் வெளியே இஸ்ரவேலருக்கு எதிராகப் புறப்பட்டபிற்பாடு, எப்பிராயீம் காட்டிலே யுத்தம் நடந்தது.

2சாமு 18:7. அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டார்கள்; அங்கே அன்றையதினம் இருபதினாயிரம்பேர் மடியத்தக்கதாக பெரிய சங்காரம் உண்டாயிற்று.

2சாமு 18:8. யுத்தம் அந்த தேசம் எங்கும் பரந்தது; அன்றையதினம் பட்டயம் பட்சித்த ஜனங்களைப்பார்க்கிலும், காடு பட்சித்த ஜனம் அதிகம்.

தாவீது தனக்கு ஒரு சேனையை ஆயத்தம்பண்ணுகிறார். தாவீது இஸ்ரவேலின் எல்லா பகுதிகளிலிருந்தும் தனக்கு ஆதரவானவர்களை கூட்டிச்சேர்க்கிறார். தாவீது தன்னோடிருந்த ஜனங்களை இலக்கம் பார்த்து, அவர்கள்மேல் ஆயிரத்துக்கு அதிபதிகளையும், நூற்றுக்கு அதிபதிகளையும் வைக்கிறார் (2சாமு 18:1).

பின்பு தாவீது ஜனங்களில் மூன்றில் ஒரு பங்கை யோவாபின் வசமாகவும், மூன்றில் ஒரு பங்கைச் செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமான அபிசாயின் வசமாகவும், மூன்றில் ஒரு பங்கைக் கித்தியனாகிய ஈத்தாயின் வசனமாகவும் அனுப்புகிறார் (2சாமு 18:2).

தாவீதின் சேனையில் சுமார் நாலாயிரம் போர்வீரர்கள் இருந்திருக்கவேண்டுமென்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். தாவீது தன்னுடைய யுத்தவீரர்களை, படைப்பிரிவுகளாகவும், பகுதிகளாகவும் பிரிக்கிறார். ஒவ்வொரு படைப்பிரிவுக்கும், அதற்குரிய தளபதிகளையும் நியமிக்கிறார்.

தாவீது யுத்தத்திற்குப்போகும்போது, வலது பக்கத்தில் ஒரு சேனையும், இடது பக்கத்தில் ஒரு சேனையும், மையத்தில் ஒரு சேனையும் போவது வழக்கம். யோவாபும் அபிசாயும் தாவீதின் சேனையில் பயிற்சி பெற்ற தளபதிகள். தாவீதுக்கு ஈத்தாய் புதிய சிநேகிதராக வந்திருக்கிறார். தாவீது ஈத்தாயையும் இந்த யுத்தத்திலே தளபதியாக பயன்படுத்துகிறார்.

சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய் நடைபெறவேண்டும். சேனையிலுள்ள போர்வீரர்கள் ஒழுக்க கட்டுப்பாடோடிருக்க வேண்டும். சேனையில் திரளான எண்ணிக்கையிருந்தாலும், அவர்களிடத்தில் கட்டுப்பாடு இல்லையென்றால், அந்த சேனை பலவீனமாயிருக்கும். கட்டுப்பாடுள்ள சிறிய சேனை, அதிக எண்ணிக்கையுள்ள பெரிய சேனையைப்போல பலமுள்ளதாயிருக்கும்.

தாவீது தன்னுடைய சேனையை மூன்று பங்காகப் பிரித்து, அதற்கு தளபதிகளையும் நியமிக்கிறார். அவர்களோடுகூட தானும் யுத்தத்திற்குப்போகவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். "நானும் உங்களோடேகூட புறப்பட்டு வருவேன்" (2சாமு 18:2) என்று தாவீது ராஜா ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

ஆனால் தாவீது தங்களோடுகூட யுத்தத்திற்கு வருவதை ஜனங்கள் விரும்பவில்லை. தாவீதின் மெய்யான சிநேகிதர்கள், அவருடைய பாதுகாப்பின்மீது கவனம் செலுத்துகிறார்கள். அகித்தோப்பேல் தாவீதுக்கு விரோதமாய் சதிபண்ணியிருக்கிறான். "தாவீதை மாத்திரம் பட்டயத்தால் வெட்டிப்போடுவேன்" என்று அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஆலோசனை சொன்னான். அகித்தோப்பேலின் தீய ஆலோசனை தாவீதுக்கும் அவரோடிருக்கிற ஜனங்களுக்கும் தெரியும். ஆகையினால் தாவீது தங்களோடுகூட யுத்தத்திற்கு வரக்கூடாது என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்.

தன்னுடைய ஜனங்களோடு தானும் யுத்தத்திற்குப்போகவேண்டும் என்று விரும்புவது தாவீதின் நல்ல குணத்திற்கு அடையாளமாயிருக்கிறது. அவர் தன்னுடைய ஜனங்களையும், தன்னுடைய தேசத்தையும் நேசிக்கிறார். தன்னுடைய ஜனங்கள் யுத்தத்தில் கஷ்டப்படும்போது, தாவீது மக்னாயீமிலே ஓய்வெடுக்க விரும்பவில்லை.

ஆனால் தாவீதின் ஜனங்களோ அவரிடத்தில் "நீர் புறப்படவேண்டாம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தாவீது ராஜாவிடம் "நாங்கள் முறிந்தோடிப் போனாலும், அவர்கள் எங்கள் காரியத்தை ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள்; எங்களில் பாதிப்பேர் செத்துப்போனாலும், எங்கள் காரியத்தைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள்; நீரோ, எங்களில் பதினாயிரம்பேருக்குச் சரி; நீர் பட்டணத்தில் இருந்துகொண்டு, எங்களுக்கு உதவிசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்கும்" (2சாமு 18:3) என்று சொல்லுகிறார்கள்.

தாவீது மக்னாயீமில் தங்கியிருந்தால், அவருடைய ஜனங்களுக்கு அதிக உதவியாயிருப்பார். யுத்தக்களத்திலே இன்னும் அதிகமான படைவீரர்கள் தேவைப்பட்டால், தாவீது மக்னாயீமிலிருந்து கொண்டே, தன்னுடைய சேனைக்கு இன்னும் அதிகமான யுத்தவீரர்களை கூட்டிச்சேர்ப்பார். தாவீது யுத்தத்திற்குப் போவது அவருடைய ஜீவனுக்கு ஆபத்தாயிருக்கும். ஆகையினால் அவர் மக்னாயீம் பட்டணத்திலிருந்து கொண்டு தங்களுக்கு உதவி செய்கிறது நலமாயிருக்கும் என்று தாவீதின் ஜனங்கள் அவருக்கு சொல்லுகிறார்கள்.

தாவீது தன்னுடைய ஜனங்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறார். தான் நினைத்ததை சாதிக்கவேண்டுமென்று தாவீது பிடிவாதமாயிருக்கவில்லை. அப்பொழுது தாவீது ராஜா அவர்களைப் பார்த்து: "உங்களுக்கு நலமாய்த் தோன்றுகிறதைச் செய்வேன்" (2சாமு 18:4) என்று சொல்லி, ஒலிமுகவாசல் ஓரத்திலே நிற்கிறார்; ஜனங்கள் எல்லாரும் நூறுநூறாகவும், ஆயிரம் ஆயிரமாகவும் யுத்தம்பண்ண புறப்பட்டுப் போகிறார்கள்.

அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக இஸ்ரவேல் மனுஷரோடு புறப்பட்டு வருகிறான். தாவீதோ தன்னுடைய குமாரனாகிய அப்சலோமின்மீது இன்னும் பிரியமாயிருக்கிறார். இந்த யுத்தத்திலே அப்சலோம் செத்துப்போய்விடக்கூடாது என்று தாவீது மிகுந்த கவனத்தோடிருக்கிறார்.

தாவீது தன் குமாரனாகிய அப்சலோமைக் குறித்த அக்கரையை, தன்னுடைய படைத்தளபதிகளுக்கு சொல்லுகிறார். தாவீது ராஜா யோவாபையும், அபிசாயையும், ஈத்தாயையும் நோக்கி: "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" (2சாமு 18:5) என்று கட்டளையிடுகிறார்; இப்படி ராஜா அப்சலோமைக் குறித்து அதிபதிகளுக்கெல்லாம் கட்டளையிட்டதை ஜனங்கள் எல்லாரும் கேட்கிறார்கள்.

தாவீது தன்னுடைய படைத்தளபதிகளை தன்னிடத்தில் அழைத்து அவர்களுக்கு யுத்தஆலோசனைகளையும், யுத்தவியூகங்களையும் சொல்லுகிறார். அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். தாவீது அவர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொல்லி, அவர்களை தைரியப்படுத்துகிறார். அதே வேளையில், அவர்கள் தன்னுடைய குமாரனாகிய அப்சலோமை தன்னிமித்தம் மெதுவாய் நடப்பிக்கவேண்டும் என்றும் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார். தன்னுடைய தளபதிகள் அப்சலோமுக்கு எந்த தீங்கும் செய்துவிடக்கூடாது என்பதில் தாவீது அக்கரை காண்பிக்கிறார்.

தாவீதை மாத்திரம் கொல்ல வேண்டும் என்று அப்சலோம் தீர்மானம்பண்ணியிருக்கிறான். தாவீதோ அப்சலோமை மாத்திரம் உயிரோடே பாதுகாக்கவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார். இவ்விரண்டு பேருமே தங்களுடைய முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். தாவீதிடம் பிள்ளைப் பாசம் இருக்கிறது. அப்சலோமோ தன்னை பெற்று வளர்த்த, தன்னுடைய தகப்பனாராகிய தாவீதை கொன்றுபோடும் வெறியோடிருக்கிறான்.

இக்காலத்திலும் பெற்றோர் நல்லவர்களாகவும், அவர்களுடைய பிள்ளைகள் துன்மார்க்கராகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. பிள்ளைகள் தங்களுக்கு விரோதமாக தீங்கு செய்தாலும், பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு நன்மையையே செய்ய விரும்புகிறார்கள். மனுஷன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். அவருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறான். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறான். ஆனாலும் கர்த்தர் மனுஷர்மீது தம்முடைய அன்பையும், கிருபையையும், இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

அப்சலோம் தாவீதுக்கு விரோதமாக சதிபண்ணுகிறான். அவன் ஒரு சதிகாரன். தாவீதோ அந்த சதிகாரனை மெதுவாய் நடப்பியுங்கள் என்று சொல்லுகிறார். தாவீதுக்கு தன்னுடைய சொந்தக்குமாரன்மீது மாத்திரமே இவ்வளவு பாசம் இருக்கிறது. தாவீது மற்ற சதிகாரர்களை "மெதுவாய் நடப்பியுங்கள்" என்று கட்டளை கொடுக்கமாட்டார்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோ, கிருபையும் இரக்கமும் நிரம்பியவராயிருக்கிறார். அவரே இஸ்ரவேலின் உண்மையான ராஜாவாகவும், இஸ்ரவேலுக்கு உண்மையான இரட்சகராகவும் இருக்கிறவர். கிறிஸ்துவானவர் தம்மைத் துன்பப்படுத்தினவர்களாக ஜெபம் பண்ணுகிறார். தம்மை உபத்திரவப்படுத்தியவர்களைக்கூட, "பிதாவே அவர்களுக்கு மன்னியும்" என்று சொல்லி, அவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்கைளை திருத்துவதற்காக, அவர்களுக்கு வேதனைகளையும் பாடுகளையும் அனுமதிக்கிறார். தம்முடைய பிள்ளைகளை அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமல்ல. அவர்கள் திருந்தவேண்டும் என்பதுதான் கர்த்தருடைய நோக்கம். தம்முடைய பிள்ளைகளுக்கு பாடுகளும், வேதனைகளும் வந்தாலும், அவர்களை வருத்தப்படுத்துகிறவர்களைப் பார்த்து, "அவர்களை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" என்று கட்டளை கொடுக்கிறார். நம்முடைய பலவீனம் என்ன என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார்.

தாவீதின் ஜனங்கள் வெளியே இஸ்ரவேலருக்கு எதிராகப் புறப்பட்டபிற்பாடு, எப்பிராயீம் காட்டிலே யுத்தம் நடக்கிறது. அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்கள்; அங்கே அன்றையதினம் இருபதினாயிரம்பேர் மடியத்தக்கதாக பெரிய சங்காரம் உண்டாயிற்று *(2சாமு 18:6,7)*.

எப்பிராயீம் காடு காத் கோத்திரத்தாரின் சுதந்தரத்திலுள்ளது. ஆனாலும் எப்பிராயீமர் இந்தக் காட்டிலே சில விசேஷித்த காரியங்களை செய்திருக்கிறார்கள். ஆகையினால் அதை நினைவுகூரும் வண்ணமாக, இந்த ஸ்தலம் எப்பிராயீம் காடு என்று அழைக்கப்படுகிறது. தாவீது இப்போது மக்னாயீமிலிருக்கிறார். எப்ராயீம் காடு மக்னாயீமுக்கு சற்று தூரத்திலிருக்கிறது. இஸ்ரவேலருக்கு விரோதமான யுத்தம், தான் இருக்கும் இடமாகிய மக்னாயீமைவிட்டு சற்று தூரத்தில் நடைபெறவேண்டும் என்று தாவீது திட்டமிடுகிறார்.

ஒருவேளை இந்த யுத்தத்திலே தன்னுடைய மனுஷருக்கு தோல்வி ஏற்பட்டாலும், அப்சலோமின் மனுஷர், எப்பிராயீம் காட்டிலிருந்து மக்னாயீமுக்கு வர சற்று நேரமாகும். அந்தக் காலத்தை தாவீது தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, அப்சலோமுக்கு தப்பித்துக்கொள்ளலாம். மக்னாயீம் மனுஷர் தாவீதுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும் ஏராளமான உதவிகளை செய்திருக்கிறார்கள். தனக்கு ஆதரவு கொடுத்த மக்னாயீம் பட்டணத்திற்கு தன்னிமித்தமாக ஒரு சேதமும் வரக்கூடாது என்று தாவீது விரும்புகிறார். இதன் நிமித்தமாக, மக்னாயீமுக்கு சற்று தூரத்திலுள்ள, எப்ராயீம் காட்டிலே யுத்தம் நடைபெறவேண்டுமென்று தாவீது திட்டமிட்டிருக்கிறார்.

இந்த யுத்தத்தில் அப்சலோமின் மனுஷருக்கு முற்றிலுமாய் தோல்வி உண்டாயிற்று. அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்கள்; அன்றையதினம் இருபதினாயிரம்பேர் மடியத்தக்கதாக பெரிய சங்காரம் உண்டாயிற்று *(2சாமு 18:7)*. அப்சலோம் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ண வந்திருக்கிறான். கர்த்தர் அப்சலோமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்.

யுத்தம் கர்த்தருடையது. கர்த்தருக்கு விரோதமாக யாராலும் யுத்தம்பண்ணி ஜெயம் பெறமுடியாது. தாவீதின் சேனையில் சொற்பஎண்ணிக்கையுள்ள ஜனமே இருக்கிறார்கள். அப்சலோமின் சேனையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தாவீதின் சேனை எண்ணிக்கையிலும், பலத்திலும், ஆயுதத்திலும் குறைவாகவே இருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறியடிக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள தப்பித்து ஓடுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை காத்துக்கொள்ளும்போதே, அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள். யுத்தம் அந்த தேசம் எங்கும் பரவுகிறது; அன்றையதினம் பட்டயம் பட்சித்த ஜனங்களைப்பார்க்கிலும், காடு பட்சித்த ஜனம் அதிகம். அப்சலோமின் மனுஷர் காடுகளிலே தப்பித்து ஓடும்போது, காட்டிலுள்ள பள்ளங்களில் விழுந்து செத்துப்போகிறார்கள். எப்பிராயீம் காடு அப்சலோமின் மனுஷரை அழிக்கிறது. காட்டிலுள்ள கொடிய மிருகங்கள் அப்சலோமின் மனுஷரை கொன்றுபோடுகிறது.

அப்சலோமின் மரணம் 2சாமு 18:9-18

2சாமு 18:9. அப்சலோம் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்பட்டான்; அப்சலோம் கோவேறு கழுதையின்மேல் ஏறிவரும் போது, அந்தக் கோவேறுகழுதை சன்னல்பின்னலான ஒரு பெரிய கர்வாலிமரத்தின் கீழ் வந்ததினால், அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டு, அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்; அவன் ஏறியிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று.

2சாமு 18:10. அதை ஒருவன் கண்டு, யோவாபுக்கு அறிவித்து: இதோ, அப்சலோமை ஒரு கர்வாலிமரத்திலே தொங்கக்கண்டேன் என்றான்.

2சாமு 18:11. அப்பொழுது யோவாப் தனக்கு அதை அறிவித்தவனை நோக்கி: நீ அதைக் கண்டாயே; பின்னை ஏன் அவனை அங்கே வெட்டி, தரையிலே தள்ளிப்போடவில்லை? நான் உனக்குப் பத்து வெள்ளிக்காசையும் ஒரு கச்சையையும் கொடுக்கக் கடமையுள்ளவனாயிருப்பேனே என்றான்.

2சாமு 18:12. அந்த மனுஷன் யோவாபை நோக்கி: என் கைகளில் ஆயிரம் வெள்ளிக்காசு நிறுத்துக் கொடுக்கப்பட்டாலும், நான் ராஜாவுடைய குமாரன்மேல் என் கையை நீட்டமாட்டேன்; பிள்ளையாண்டானாகிய அப்சலோமை நீங்கள் அவரவர் காப்பாற்றுங்கள் என்று ராஜா உமக்கும் அபிசாய்க்கும் ஈத்தாய்க்கும் எங்கள் காதுகள் கேட்கக் கட்டளையிட்டாரே.

2சாமு 18:13. ராஜாவுக்கு ஒரு காரியமும் மறைவாயிருக்கமாட்டாது; ஆதலால், நான் அதைச் செய்வேனாகில், என் பிராணனுக்கே விரோதமாகச் செய்பவனாவேன், நீரும் எனக்கு விரோதமாயிருப்பீர் என்றான்.

2சாமு 18:14. ஆதலால் யோவாப்: நான் இப்படி உன்னோடே பேசி, தாமதிக்கமாட்டேன் என்று சொல்லி, தன் கையிலே மூன்று வல்லயங்களை எடுத்துக்கொண்டு, அப்சலோம் இன்னும் கர்வாலிமரத்தின் நடுவிலே உயிரோடே தொங்குகையில், அவைகளை அவன் நெஞ்சிலே குத்தினான்.

2சாமு 18:15. அப்பொழுது யோவாபின் ஆயுததாரிகளாகிய பத்து சேவகர் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக்கொன்று போட்டார்கள்.

2சாமு 18:16. அப்பொழுது யோவாப் எக்காளம் ஊதி ஜனங்களை நிறுத்திப்போட்டபடியினால், ஜனங்கள் இஸ்ரவேலைப் பின்தொடருகிறதை விட்டுத் திரும்பினார்கள்.

2சாமு 18:17. அவர்கள் அப்சலோமை எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு, அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இஸ்ரவேலர் எல்லாரும் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

2சாமு 18:18. அப்சலோம் உயிரோடே இருக்கையில்: என் பேரை நினைக்கப்பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்திருந்தான்; அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின் அடையாளம் என்று சொல்லப்படும்.

தாவீதுக்கு விரோதமாக அப்சலோம் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தது. இந்த யுத்தத்திலே அவனுடைய சேனையிலுள்ளவர்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறியடிக்கப்படுகிறார்கள். அப்சலோமும் இந்த யுத்தத்திலே செத்துப்போகிறான். தாவீது தன்னுடைய தளபதிகளிடம், "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" என்று கட்டளையிட்டிருந்தார். ஆகையினால் தாவீதின் சேனையிலுள்ளவர்கள், அப்சலோமுக்கு அருகாமையில் போய் யுத்தம்பண்ணவில்லை.

ஆனாலும் அப்சலோம் சும்மாயிருக்கவில்லை. அவன் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்படுகிறான். தாவீதின் சேவகர்கள், இஸ்ரவேலின் மனுஷரோடு யுத்தம்பண்ணும்போது, அப்சலோம் தானாகவே வலிய முன்வந்து, தாவீதின் சேவகருக்கு எதிர்ப்படுகிறான். அப்சலோம் தங்களுக்கு அருகாமையிலிருந்தாலும், தாவீதின் சேனையிலுள்ளவர்கள் அவனைக் கொன்றுபோட முயற்சி பண்ணவில்லை. தாவீதின் சேவகர்கள் அப்சலோமை பிடிக்காவிட்டாலும், எப்பிராயீம் காட்டிலுள்ள ஒரு கர்வாலி மரத்தில் அவன் மாட்டிக்கொள்கிறான்.

அப்சலோம் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்படுகிறான்; அப்சலோம் கோவேறு கழுதையின்மேல் ஏறிவரும் போது, அந்தக் கோவேறுகழுதை சன்னல்பின்னலான ஒரு பெரிய கர்வாலிமரத்தின் கீழ் வந்ததினால், அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டு, அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்குகிறான்; அவன் ஏறியிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று *(2சாமு 18:9)*.

அப்சலோம் கோவேறு கழுதையின்மீது கம்பீரமாக ஏறிவந்தான். இப்போதோ அவன் தலைகீழே தொங்கிக்கொண்டிருக்கிறான். அவனை ஏற்றிக்கொண்டு வந்த கோவேறு கழுதையும் அவனை விட்டுப்போய்விடுகிறது. எப்பிராயீம் காட்டிலே மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கிறது. அப்சலோமோ தன்னுடைய கோவேறு கழுதையின்மேல் ஏறி, தாறுமாறான வேகத்திலே வருகிறான். தன்னை எதிர்ப்பதற்கு ஒருவருமில்லை என்று அவன் ஆணவத்தோடு வருகிறான்.

ஆனால் அவன் ஏறி வந்த கோவேறு கழுதையோ, நேர்வழியில் வராமல், சன்னல் பின்னலான ஒரு பெரிய கர்வாலி மரத்தின்கீழ் வருகிறது. அந்த மரத்திலுள்ள கிளைகளும் கொப்புகளும் நீளமாய் வளர்ந்திருக்கிறது. அவையெல்லாம் பின்னி பிணைந்திருக்கிறது. அப்சலோமின் தலைமுடி மிகவும் நீளமாயிருக்கும். அது அவனுடைய பெருமைக்கு அடையாளம். அவனுடைய தலைமுடி கர்வாலி மரத்தில் மாட்டிக்கொள்கிறது.

அப்சலோம் கர்வாலி மரத்திலே மாட்டிக்கொண்டு, வானத்திற்கும் பூமிக்கும் நடுவே தொங்குகிறான். அவன் ஏறியிருந்த கோவேறு கழுதையும், அப்சலோமின் பாரம் நீங்கி, அவனை அப்படியே விட்டுவிட்டு, அப்பாலே போயிற்று. அப்சலோமை வானமும் ஏற்றுக்கொள்ளவில்லை. பூமியும் ஏற்றுக்கொள்ளவில்லை. வானமும் பூமியும் கைவிட்ட நிலையில் அப்சலோம் கர்வாலி மரத்திலே தொங்கிக்கொண்டிருக்கிறான்.

அப்போது அந்த வழியாக தாவீதின் சேவகரில் ஒருவன் வருகிறான். அப்சலோம் கர்வாலி மரத்திலே மாட்டிக்கொண்டு தொங்குவதைப் பார்க்கிறான். அந்த சம்பவத்தை அவன் யோவாபுக்கு அறிவிக்கிறான்.

அப்சலோமைக் கண்டவன் யோவாபிடத்தில் போய், அவனை நோக்கி "இதோ, அப்சலோமை ஒரு கர்வாலிமரத்திலே தொங்கக்கண்டேன்" என்று சொல்லுகிறான். அப்பொழுது யோவாப் தனக்கு அதை அறிவித்தவனை நோக்கி: "நீ அதைக் கண்டாயே; பின்னை ஏன் அவனை அங்கே வெட்டி, தரையிலே தள்ளிப்போடவில்லை? நான் உனக்குப் பத்து வெள்ளிக்காசையும் ஒரு கச்சையையும் கொடுக்கக் கடமையுள்ளவனாயிருப்பேனே" *(2சாமு 18:10,11)* என்று சொல்லுகிறான்.

அப்சலோம் கர்வாலி மரத்திலே தொங்குவதைக் கண்டவன் அவனை அங்கேயே கொன்றுபோடவில்லை. இதற்காக யோவாப் அந்த மனுஷனைக் கடிந்துகொள்கிறான். அந்த மனுஷனுக்கு அப்சலோம்மீது கோபம் இருக்கிறது. ஆனாலும் அவன் தாவீதின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அப்சலோமை அங்கே கொன்றுபோடாமல் விட்டுவிடுகிறான். அவனுடைய சுபாவம் யோவாபுக்கும் தெரிந்திருக்கிறது.

அப்சலோம் கர்வாலி மரத்திலே தொங்குவதைக் கண்டவன், அவனை கொன்றுபோடாததற்கான காரணத்தையும் யோவாபுக்கு சொல்லுகிறான்.

அந்த மனுஷன் யோவாபை நோக்கி: "என் கைகளில் ஆயிரம் வெள்ளிக்காசு நிறுத்துக் கொடுக்கப்பட்டாலும், நான் ராஜாவுடைய குமாரன்மேல் என் கையை நீட்டமாட்டேன்; பிள்ளையாண்டானாகிய அப்சலோமை நீங்கள் அவரவர் காப்பாற்றுங்கள் என்று ராஜா உமக்கும் அபிசாய்க்கும் ஈத்தாய்க்கும் எங்கள் காதுகள் கேட்கக் கட்டளையிட்டாரே. ராஜாவுக்கு ஒரு காரியமும் மறைவாயிருக்கமாட்டாது; ஆதலால், நான் அதைச் செய்வேனாகில், என் பிராணனுக்கே விரோதமாகச் செய்பவனாவேன், நீரும் எனக்கு விரோதமாயிருப்பீர்" *(2சாமு 18:12,13)* என்று சொல்லி தன்னை நியாயப்படுத்துகிறான்.

யோவாபோ அப்சலோமை எப்படியும் கொன்றுபோடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறான். யோவாப் தன்னோடு பேசிக்கொண்டிருக்கிறவனிடம், இன்னும் அதிகமாக பேசி தாமதம்பண்ண விரும்பவில்லை. யோவாப் தன் கையிலே மூன்று வல்லயங்களை எடுத்துக்கொண்டு, அப்சலோம் இன்னும் கர்வாலிமரத்தின் நடுவிலே உயிரோடே தொங்குகையில், அவைகளை அவன் நெஞ்சிலே குத்துகிறான். அப்பொழுது யோவாபின் ஆயுததாரிகளாகிய பத்து சேவகர் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக்கொன்று போடுகிறார்கள் *(2சாமு 18:14,15)*.

தாவீது தன்னுடைய படைத் தளபதிகளுடன், "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" என்று கட்டளையிட்டிருந்தார். யோவாப் தாவீதின் கட்டளைக்கு கீழ்ப்படிய விரும்புகிறவன். ஆனாலும் அவன் தாவீது சொன்ன இந்தக் குறிப்பிட்ட கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. தாவீதின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல், அப்சலோமைக் கொன்றுபோடுகிறான். இதினால், தான் இஸ்ரவேலின் ராஜாவுக்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் உண்மையான சேவை செய்வதாக நினைக்கிறான். அப்சலோமைக் கொன்றுபோடவில்லையென்றால், இஸ்ரவேல் தேசத்திற்கும், இஸ்ரவேலின் ராஜாவுக்கும் பிரச்சனை தொடரும் என்பது யோவாபுக்கு தெரியும்.

யோவாப் அப்சலோமின் தகப்பனாராகிய தாவீதின் கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆனால் அவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதுக்கு நன்மை செய்கிறான். யோவாவோடுகூட பத்து சேவகர்கள் இருக்கிறார்கள். யோவாப் தன் கையிலுள்ள மூன்று வல்லயங்களினால் அப்சலோமின் நெஞ்சிலே குத்துகிறான். யோவாபின் வாலிபர்கள், அப்சலோமை சூழ்ந்து அவனை அடித்து கொன்றுபோடுகிறார்கள். அப்சலோம் கர்வாலி மரத்தின் நடுவிலே, வானத்திற்கும் பூமிக்கும் நடுவே தொங்கிக்கொண்டிருந்த பிரகாரமாக செத்துப்போகிறான்.

அப்சலோம் செத்துப்போனதை யோவாப் உறுதிபண்ணுகிறான். அதன்பின்பு யோவாப் எக்காளம் ஊதி, அப்சலோம் செத்துப்போன செய்தியை ஜனங்களுக்கு அறிவிக்கிறான். இஸ்ரவேல் ஜனங்களை முறியடித்து துரத்துகிற தாவீதின் சேவகர், அவர்களை மேலும் துரத்தாமல் அப்படியே நின்றுவிடுகிறார்கள். தாவீதின் ஜனங்கள் இஸ்ரவேலரை பின்தொடருகிறதை விட்டு திரும்புகிறார்கள் *(2சாமு 18:16)*.

அப்சலோம் செத்துப்போனதினால், தாவீதுக்கு விரோதமாக வந்த ஆபத்தும் முறியடிக்கப்படுகிறது. ஜனங்கள் தாவீதோடு சேரவேண்டும். இனிமேலும் இரத்தம் சிந்தப்படவேண்டிய அவசியமில்லை. யுத்தம் முடிந்துபோயிற்று. தாவீதின் சேனைக்கு ஜெயமுண்டாயிற்று. இதை அறிவிக்கும் வண்ணமாக யோவாப் எக்காளம் ஊதுகிறான். தாவீதின் ஜனங்கள் இஸ்ரவேலரை பின்தொடருகிறதை விட்டு திரும்புகிறார்கள். இஸ்ரவேலர் எல்லாரும் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போகிறார்கள்.

அப்சலோமோ கர்வாலி மரத்திலே, வானத்திற்கும் பூமிக்கும் நடுவே, செத்தவனாகத் தொங்குகிறான். யோவாபின் மனுஷர் அப்சலோமை எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு, அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவிக்கிறார்கள் *(2சாமு 18:17)*.

அப்சலோமுக்கு கண்ணியமான அடக்க ஆராதனை நடைபெறவில்லை. ராஜாவின் குமாரனை மரியாதையோடு அடக்கம்பண்ணுவதுபோல, அப்சலோமை அடக்கம்பண்ணவில்லை. அவனை காட்டிலுள்ள ஒரு பெரிய குழியில் போட்டுவிடுகிறார்கள். அவன்மேல் மகாபெரிய கற்களை குவிக்கிறார்கள். யோவாபின் மனுஷர் அப்சலோமின் சரீரத்தை தாவீதினிடத்தில் கொண்டு வந்து, அவருக்கு அதைக் காண்பிக்கவில்லை. ஒருவேளை அப்சலோமின் சரீரத்தைப் பார்த்து தாவீதின் துக்கம் மிகவும் அதிகமாயிருக்கும் என்று நினைத்து, அவர்கள் அப்சலோமின் சரீரத்தை தாவீதிடம் கொண்டுவராமல் இருந்திருக்கலாம்.

தாவீதின் சேவகர்கள் அப்சலோமின் சரீரத்தைப் பாதுகாத்து, அதற்கு கண்ணியமான அடக்க ஆராதனை செய்திருக்கலாம். ஆனால் அவர்களோ அப்சலோமுக்கு மரியாதையான அடக்க ஆராதனை பண்ணவில்லை. எப்பிராயீம் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியில் அவனுடைய சரீரத்தை தூக்கிப்போட்டு, அந்தக் குழியை பெரிய கற்களால் மூடிவிடுகிறார்கள்.

அப்சலோம் உயிரோடிருந்த காலத்தில் தன்னுடைய அழகைப் பார்த்து பெருமைப்பட்டான். தன்னோடு கூடயிருக்கிற பெரிய சேனையைப் பார்த்து ஆணவமாயிருந்தான். இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால் இப்போதோ அவனுடைய சரீரம், காட்டிலுள்ள ஒரு பெரிய குழியில் வீசி எறியப்படுகிறது.

அப்சலோமின் ஆசைகள் எதுவும் நிறைவேறவில்லை. அவன் வானத்திலே கோட்டை கட்டினான். முடிவில் அவன் வானத்திற்கும் பூமிக்கும் நடுவிலே தொங்கினான். அவனுடைய பேராசைகளெல்லாம், அவனோடேகூட காட்டிலுள்ள பெரிய குழியில் தூக்கிப்போடப்படுகிறது.

அப்சலோம் உயிரோடிருக்கும்போது, தனக்கு பெருமை சேரவேண்டும் என்றும் தன் பேர் நிலைக்கவேண்டுமென்றும், ஒரு சில நினைவுச்சின்னங்களை ஏற்படுத்தியிருந்தான். அப்படிப்பட்ட ஒரு நினைவு சின்னத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அப்சலோம் உயிரோடே இருக்கையில்: என் பேரை நினைக்கப்பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்திருந்தான்; அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின் அடையாளம் என்று சொல்லப்படும்" *(2சாமு 18:18).*

இந்தப் பள்ளத்தாக்கு கீதரோன் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. இது எருசலேமுக்கு அருகாமையிலுள்ளது. தான் இறந்த பின்பு, இந்தத் தூணுக்கு அருகாமையில், தன்னுடைய சரீரம் ராஜமரியாதையோடு அடக்கம்பண்ணப்பட வேண்டுமென்று அப்சலோம் ஆசைப்பட்டான். அவனுடைய ஆசை நிறைவேறவில்லை. தாவீதின் சேவகர், அப்சலோமின் சரீரத்தை, காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டுவிடுகிறார்கள்.

அப்சலோமைப்போலவே, இக்காலத்திலும் சிலர், தாங்கள் மரித்துப்போன பின்பு, தங்களுடைய சரீரம் எவ்வாறு அடக்கம்பண்ணப்படவேண்டுமென்று, அதில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் இவர்களிடத்தில் தங்களுடைய ஆத்துமாவைக் குறித்த அக்கரையோ, கவனமோ காணப்படுவதில்லை.

அப்சலோம் ராஜாவின் பள்ளத்தாக்கிலே, தனக்கு தூணை நிறுத்தியபோது அவனுக்கு பிள்ளைகள் இல்லை. அதன்பின்பு அவனுக்கு பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள். "அப்சலோமுக்கு மூன்று குமாரரும், தாமார் என்னும் பேர்கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தார்கள்; இவள் ரூபவதியான பெண்ணாயிருந்தாள்" *(2சாமு 14:27).*

தன்னுடைய பேர் நிலைத்திருக்கவேண்டும் என்று அப்சலோம் ஆசைப்பட்டான். அவன் ஆசைப்பட்ட பிரகாரமாக, எல்லோரும் அப்சலோமின் பெயரை நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்சலோமை ஒரு நல்லவனாகவோ, அல்லது ஒரு நீதிமானாகவோ நினைக்கவில்லை. அப்சலோமைப்பற்றி நினைக்கிறவர்கள், அவனை ஒரு சதிகாரனாகவும், ஒரு துன்மார்க்கனாகவும், அவனை இஸ்ரவேல் தேசத்திற்கு துரோகியாகவும் நினைவுகூருகிறார்கள்.

தாவீதின் துக்கம்
2சாமு 18:19-33

2சாமு 18:19. சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ்: கர்த்தர் ராஜாவை அவர் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி நியாயஞ்செய்தார் என்னும் செய்தியை அவருக்குக் கொண்டுபோக, நான் ஓடட்டுமே என்றான்.

2சாமு 18:20. யோவாப் அவனை நோக்கி: இன்றையதினம் நீ செய்தியைக் கொண்டு போகக்கூடாது; இன்னொருநாளிலே நீ செய்தியைக் கொண்டுபோகலாம்; ராஜாவின் குமாரன் செத்தபடியினால், இன்றைக்கு நீ செய்தியைக் கொண்டுபோக வேண்டாம் என்று சொல்லி,

2சாமு 18:21. யோவாப் கூஷியை நோக்கி: நீ போய், கண்டதை ராஜாவுக்கு அறிவி என்றான்; கூஷி யோவாபை வணங்கி ஓடினான்.

2சாமு 18:22. சாதேக்கின் குமாரனாகிய அகிமாஸ் இன்னும் யோவாபை நோக்கி: எப்படியானாலும் கூஷியின் பிறகாலே நானும் ஓடட்டுமே என்று திரும்பக் கேட்டதற்கு, யோவாப்: என் மகனே, சொல்லும்படி உனக்கு நல்ல செய்தி இல்லாதிருக்கையில், நீ ஓடவேண்டியது என்ன என்றான்.

2சாமு 18:23. அதற்கு அவன்: எப்படியானாலும் நான் ஓடுவேன் என்றான்; அப்பொழுது யோவாப்: ஓடு என்றான்; அப்படியே அகிமாஸ் சமனான பூமிவழியோடி கூஷிக்கு முந்திக்கொண்டான்.

2சாமு 18:24. தாவீது இரண்டு ஒலிமுகக் கெவுனி வாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருந்தான்; ஜாமங்காக்கிறவன் அலங்கத்திலிருக்கிற கெவுனியின்மேல் நடந்து, தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஒரு மனுஷன் தனியே ஓடிவருகிறதைக் கண்டு,

2சாமு 18:25. கூப்பிட்டு ராஜாவுக்கு அறிவித்தான். அப்பொழுது ராஜா: அவன் ஒருவனாய் வந்தால்,அவன் வாயிலே நல்ல செய்தி இருக்கும் என்றான்; அவன் ஓடிகிட்டவரும்போது,

2சாமு 18:26. ஜாமங்காக்கிறவன், வேறொருவன் ஓடிவருகிறதைக் கண்டு: அதோ பின்னொருவன் தனியே ஓடிவருகிறான் என்று வாசல் காக்கிறவனோடே கூப்பிட்டுச் சொன்னான்; அப்பொழுது ராஜா: அவனும் நல்ல செய்தி கொண்டுவருகிறவன் என்றான்.

2சாமு 18:27. மேலும் ஜாமங்காக்கிறவன்: முந்தினவனுடைய ஓட்டம் சாதோக்கின் குமாரன் அகிமாசுடைய ஓட்டம் போலிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது என்றான்; அப்பொழுது ராஜா: அவன் நல்ல மனுஷன்; அவன் நல்ல செய்தி சொல்ல வருகிறான் என்றான்.

2சாமு 18:28. அகிமாஸ் வந்து ராஜாவை நோக்கி: சமாதானம் என்று சொல்லி, முகங்குப்புற விழுந்து, ராஜாவை வணங்கி, ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு விரோதமாய்த் தங்கள் கைகளை எடுத்த மனுஷரை ஒப்புக்கொடுத்திருக்கிற உம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக என்றான்.

2சாமு 18:29. அப்பொழுது ராஜா: பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று கேட்டதற்கு, அகிமாஸ் யோவாப் ராஜாவின் வேலைக்காரனையும் உம்முடைய அடியானையும் அனுப்புகிறபோது, ஒரு பெரிய சந்தடியிருந்தது; ஆனாலும் அது இன்னதென்று தெரியாது என்றான்.

2சாமு 18:30. அப்பொழுது ராஜா: நீ அங்கே போய்நில் என்றான்; அவன் ஒரு பக்கத்தில் போய் நின்றான்.

2சாமு 18:31. இதோ, கூஷி வந்து: ராஜாவாகிய என் ஆண்டவனே, நற்செய்தி, இன்று கர்த்தர் உமக்கு விரோதமாயெழும்பின எல்லாரின் கைக்கும் உம்மை நீங்கலாக்கி நியாயஞ்செய்தார் என்றான்.

2சாமு 18:32. அப்பொழுது ராஜா கூஷியைப் பார்த்து: பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று கேட்டதற்கு, கூஷி என்பவன்: அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்ததுபோல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவது என்றான்.

2சாமு 18:33. அப்பொழுது ராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான்; அவன் ஏறிப்போகையில்: என் மகனாகிய அப்சலோமே , என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப்பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே, என்று சொல்லி அழுதான்.

தாவீது மக்னாயீமிலே தங்கியிருக்கிறார். எப்பிராயீம் காட்டிலே அவருடைய குமாரனாகிய அப்சலோம் செத்துக் கிடக்கிறான். அவனை அந்தக் காட்டிலுள்ள ஒரு குழியிலே தூக்கிப்போட்டு, அவனுடைய சரீரத்தின்மீது கல்லைப்போட்டு மூடியிருக்கிறார்கள். மக்னாயீமிலிருக்கிற தாவீதுக்கு அப்சலோம் செத்துப்போன செய்தியை அறிவிக்கவேண்டும்.

இஸ்ரவேலருக்கு விரோதமான யுத்தம் முடிந்துபோயிற்று. இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலர் எல்லாரும் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போகிறார்கள். தாவீதின் சேவகர், இஸ்ரவேலைப் பின்தொடருகிறதைவிட்டு திரும்பியிருக்கிறார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் மக்னாயீமிலிருக்கிற தாவீதுக்கு அறிவிக்கவேண்டும்.

அப்சலோமின் சேனையிலுள்ளவர்கள் தோற்று ஓடிப்போகிறார்கள். அவர்கள் யோர்தானைத் தாண்டி எருசலேமுக்கு போகவேண்டும். தாவீது மக்னாயீமில் இரண்டு ஒலிமுகக் கெவுனி வாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருக்கிறார்; ஜாமங்காக்கிறவன் அலங்கத்திலிருக்கிற கெவுனியின்மேல் நடந்து காவல்காக்கிறான். யுத்தக்களத்தில் என்ன நடைபெற்றது என்பது தாவீதுக்கு இன்னும் தெரியவில்லை. இஸ்ரவேலர் யோர்தான் நதியை நோக்கி ஓடுகிறார்கள். அவர்கள் மக்னாயீமுக்கு எதிர்திசையில் ஓடிப்போகிறார்கள்.

தாவீது ராஜாவுக்கு யுத்தக்களத்தின் செய்தியை அறிவிக்க, யோவாப் கூஷி என்பவனை அனுப்புகிறான். இவன் ஒரு எத்தியோப்பியன். கருப்பு நிறமுள்ளவன். இவன் யோவாபின் மெய்க்காவலர்களில் ஒருவன் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். யோவாப் கூஷியை நோக்கி: "நீ போய், கண்டதை ராஜாவுக்கு அறிவி" *(2சாமு 18:21)* என்று சொல்லுகிறான்; கூஷி யோவாபை வணங்கி ஓடுகிறான்.

யோவாபோடுகூட அகிமாஸ் என்பவனும் இருக்கிறான். இவன் ஆசாரியனாகிய சாதோக்கின் குமாரன். அப்சலோமின் வீட்டில் நடைபெற்ற செய்தியை, அகிமாஸ் தாவீதுக்கு இரகசியமாய் அறிவித்தவன். "யோனாத்தானும் அகிமாசும், தாங்கள் நகரத்தில் பிரவேசிக்கிறதினால் காணப்படாதபடிக்கு, இன்றோகேல் அண்டை நின்றுகொண்டிருந்தார்கள்; ஒரு வேலைக்காரி போய், அதை அவர்களுக்குச் சொன்னாள்; அவர்கள் தாவீது ராஜாவுக்கு அதை அறிவிக்கப்போனார்கள்" *(2சாமு 17:17)*.

எப்பிராயீம் காட்டிலே நடைபெற்ற யுத்தத்தைப்பற்றிய செய்தியை, தாவீது ராஜாவுக்கு தானே அறிவிக்கவேண்டுமென்று அகிமாஸ் ஆசைப்படுகிறான். தன்னுடைய ஆசையை அகிமாஸ் யோவாபுக்கு சொல்லுகிறான்.

சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ் யோவாபை நோக்கி, "கர்த்தர் ராஜாவை அவர் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி நியாயஞ்செய்தார் என்னும் செய்தியை அவருக்குக் கொண்டுபோக, நான் ஓடட்டுமே" *(2சாமு 18:19)* என்று கேட்கிறான்.

யோவாப் அகிமாசை நோக்கி: "இன்றையதினம் நீ செய்தியைக் கொண்டு போகக்கூடாது; இன்னொருநாளிலே நீ செய்தியைக் கொண்டுபோகலாம்; ராஜாவின் குமாரன் செத்தபடியினால், இன்றைக்கு நீ செய்தியைக் கொண்டுபோக வேண்டாம்" *(2சாமு 18:20)* என்று சொல்லி, அவனை தடைபண்ணிவிடுகிறான்.

அகிமாசுக்கு தாவீதைப்பற்றி தெரிவதைவிட, யோவாபுக்கு தாவீதைப்பற்றி நன்றாய்த் தெரியும். அகிமாஸ் தாவீதுக்கு நல்ல செய்தியை அறிவிக்க விரும்புகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறிந்து ஓடிப்போனது மெய்யாகவே நல்ல செய்திதான். ஆனாலும் எப்பிராயீம் காட்டிலே அப்சலோம் செத்துப்போனது தாவீதுக்கு நல்ல செய்தியல்ல. அப்சலோமின் மரணச்செய்தி தாவீதுக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுக்கும். அகிமாஸ் தாவீதுக்கு நல்ல செய்தியைக் கொண்டு போகவேண்டும். ஆனால் இப்போது தாவீதுக்கு அனுப்பப்படும் செய்தி நல்ல செய்தியல்ல. இது ஒரு துக்கசெய்தி. இது தாவீதுக்கு துர்ச்செய்தி. அகிமாஸ் இந்தச் செய்தியை தாவீதுக்கு கொண்டுபோகவேண்டாம் என்று யோவாப் அவனைத் தடைபண்ணுகிறான்.

யோவாப் தாவீதுக்கு செய்தி சொல்ல கூஷியை அனுப்புகிறான். கூஷியும் புறப்பட்டுப்போய்விடுகிறான். ஆனாலும் தாவீதுக்கு தானும் செய்தி சொல்லப்போகவேண்டுமென்று, அகிமாஸ் இன்னும் ஆசைப்படுகிறான்.

சாதேக்கின் குமாரனாகிய அகிமாஸ் இன்னும் யோவாபை நோக்கி: "எப்படியானாலும் கூஷியின் பிறகாலே நானும் ஓடட்டுமே" என்று திரும்பக் கேட்கிறான் அதற்கு,யோவாப்: "என் மகனே, சொல்லும்படி உனக்கு நல்ல செய்தி இல்லாதிருக்கையில், நீ ஓடவேண்டியது என்ன" *(2சாமு 18:22)* என்று அகிமாசிடம் சொல்லுகிறான்.

அதற்கு அகிமாஸ் யோவாபிடம், "எப்படியானாலும் நான் ஓடுவேன்" என்று சொல்லுகிறான்; அப்பொழுது யோவாப்: "ஓடு" *(2சாமு 18:23)* என்று அகிமாசுக்கு அனுமதி கொடுக்கிறான்; அப்படியே அகிமாஸ் சமனான பூமிவழியோடி கூஷிக்கு முந்திக்கொள்கிறான்.

அகிமாசுக்கு தாவீது ராஜாவின்மீது அன்பும் பிரியமும் அதிகமாயிருக்கிறது. அப்சலோம் செத்துப்போன செய்தி அகிமாசுக்கும் தெரியும். இந்தச் செய்தியைக் கேட்டு தாவீது எவ்வளவு வேதனைப்படுவார் என்பதும் அவனுக்கு தெரியும். கூஷி தாவீதுக்கு யுத்தத்தின் பொதுவான செய்தியை சொல்லுவதற்கு முன்பாக, தான் அந்தச் செய்தியைச் சொல்லவேண்டுமென்று அகிமாஸ் விரும்புகிறான். கூஷியைவிட தன்னால் பக்குவமாய்ச் சொல்ல முடியும் என்றும், அப்சலோமின் மரணச்செய்தியைக் கேட்பதற்கு, தாவீதை ஆயத்தம் பண்ண முடியும் என்றும் அகிமாஸ் நினைக்கிறான். சோகமான செய்தியை சொல்லும்போது, அதை மொத்தமாகச் சொல்லாமல், கொஞ்சம் கொஞ்சமாக சொல்லவேண்டும். அப்போதுதான் சோகசெய்தியை கேள்விப்படுகிறவர்களால், அந்த சோகத்தை தாங்கிக்கொள்ள முடியும்.

தாவீது மக்னாயீமிலே இரண்டு ஒலிமுகக் கெவுனி வாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருக்கிறார்; ஜாமங்காக்கிறவன் அலங்கத்திலிருக்கிற கெவுனியின்மேல் நடந்து கொண்டிருக்கிறான். ஜாமங்காக்கிறவன், அகிமாசையும் கூஷியையும் பார்க்கிறான். அகிமாஸ் சமானான பூமி வழியாய் ஓடி, கூஷிக்கு முந்திக்கொண்டதினால், ஜாமங்காக்கிறவன் முதலாவதாக அகிமாசைப் பார்க்கிறான். அதன்பின்பு அவன் கூஷியைப் பார்க்கிறான்.

ஜாமங்காக்கிறவன் அலங்கத்திலிருக்கிற கெவுனியின்மேல் நடந்து, தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஒரு மனுஷன் தனியே ஓடிவருகிறதைக் காண்கிறான். அவன் ராஜாவுக்கு அதை அறிவிக்கிறான். அப்பொழுது தாவீது ராஜா: "அவன் ஒருவனாய் வந்தால், அவன் வாயிலே நல்ல செய்தி இருக்கும்" *(2சாமு 18:25)* என்று சொல்லுகிறார்.

அகிமாஸ் ஓடிகிட்டவரும்போது, ஜாமங்காக்கிறவன், வேறொருவன் ஓடிவருகிறதைக் காண்கிறான். அவன் "அதோ பின்னொருவன் தனியே ஓடிவருகிறான்" என்று வாசல் காக்கிறவனோடேகூப்பிட்டுச் சொல்லுகிறான்; அப்பொழுது தாவீது ராஜா: "அவனும் நல்ல செய்தி கொண்டுவருகிறவன்" *(2சாமு 18:26)* என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு அகிமாசைப்பற்றி ஏற்கெனவே தெரியும். அவன் வேகமாக ஓடக்கூடியவன் என்பதும், அவனுடைய ஓட்டத்தைப்பற்றியும் ஜாமங்காக்கிறவனுக்கு தெரிந்திருக்கிறது. ஜாமங்காக்கிறவன் தாவீது ராஜாவிடம், "முந்தினவனுடைய ஓட்டம் சாதோக்கின் குமாரன் அகிமாசுடைய ஓட்டம்போலிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது" *(2சாமு 18:27)* என்று சொல்லுகிறான்; அப்பொழுது தாவீது ராஜா: "அவன் நல்ல மனுஷன்; அவன் நல்ல செய்தி சொல்ல வருகிறான்" என்று சொல்லுகிறார்.

அகிமாஸ் தூரத்தில் ஓடி வரும்போதே தாவீது ராஜாவை வாழ்த்துகிறான். அகிமாஸ் வந்து ராஜாவை நோக்கி: "சமாதானம்" என்று சொல்லி, முகங்குப்புற விழுந்து, ராஜாவை வணங்குகிறான். மேலும் அகிமாஸ் தாவீது ராஜாவிடம், "ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு விரோதமாய்த் தங்கள் கைகளை எடுத்த மனுஷரை ஒப்புக்கொடுத்திருக்கிற உம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" *(2சாமு 18:28)* என்றும் சொல்லுகிறான்.

அகிமாசின் செய்தி மிகவும் சுருக்கமாகயிருக்கிறது. தாவீது ராஜாவுக்கு விரோதமாக தங்களுடைய கைகளை எடுத்தவர்கள் முறியடிக்கப்பட்டுப்போனார்கள். அகிமாஸ் ஒரு ஆசாரியன். ஆகையினால் அவன் யுத்தச்செய்தியைச் சொல்லும்போது, கர்த்தரையும் துதிக்கிறான். கர்த்தரே தாவீதுக்கு இந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறார் என்று அங்கீகரிக்கிறான். தாவீது ராஜாவுக்கு விரோதமாக தங்கள் கைகளை எடுத்த மனுஷரை, தேவனாகிய கர்த்தரே தாவீதின் கைகளில் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்று சொல்லி, அகிமாஸ் "தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" என்று கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறான்.

கர்த்தர் தாவீதுக்கு இஸ்ரவேலின் ராஜாசனத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். "உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" என்பது கர்த்தர் தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தமாகும் *(2சாமு 7:16)*. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக, தாவீதின் சத்துருக்களை அவருடைய கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அகிமாஸ் தாவீது ராஜாவிடம் இந்த செய்தியை சொல்லும்போதே, முகங்குப்புற விழுந்து, தாவீதை வணங்குகிறான். தாவீது ராஜாவுக்கு அகிமாஸ் தன்னுடைய மரியாதையைக் காண்பிக்கிறான். அதே வேளையில் அகிமாஸ் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, அவரைக் கனம்பண்ணுகிறான். யுத்தத்தில் தாவீதுக்கு கிடைத்திருக்கிற ஜெயம் கர்த்தரால் உண்டாயிற்று. கர்த்தரே எல்லா துதிகளுக்கும், கனத்திற்கும் பாத்திரமானவர்.

அகிமாஸ் தாவீதிடம் யுத்தத்தின் வெற்றியைப்பற்றிச் சொல்லும்போது, "உம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" என்று சொல்லுகிறான். இதன் மூலமாக, தாவீது கர்த்தரைத் துதிக்கவேண்டுமென்று அவரை உற்சாகப்படுத்துகிறான்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது, நாம் கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கவேண்டும். கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் நினைத்து, அவரை ஸ்தோத்திரிக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் துக்கமும் சந்தோஷமும் கலந்திருக்கும். நம்முடைய துக்கத்திற்காக யார்மீதும் குறை சொல்லக்கூடாது. அதே வேளையில் நம்முடைய சந்தோஷத்திற்காக, நாம் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணவேண்டும்.

தாவீதின் மனதில் இப்போது, தான் அப்சலோமின் தகப்பன் என்னும் சிந்தனையே நிரம்பியிருக்கிறது. அவர் இஸ்ரவேலின் ராஜா என்பதை மறந்துவிடுகிறார். தன்னுடைய சத்துருக்கள்மீது கர்த்தர் தனக்கு ஜெயத்தைக் கட்டளையிட்டிருந்தும், தாவீதால் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க முடியவில்லை. தாவீது தன்னுடைய மனதிலே அப்சலோமைக் குறித்தே நினைத்துக்கொண்டிருக்கிறார்.

அகிமாஸ் தாவீதிடம், சத்துருக்கள்மீது கர்த்தர் ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னாலும், தாவீது அகிமாசிடம், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா" *(2சாமு 18:29)* என்று கேட்கிறார். அப்போதுதான் அகிமாசுக்கு யோவாப் சொன்னது புரிகிறது. யோவாப் அகிமாசிடம், "ராஜாவின் குமாரன் செத்தபடியினால் இன்றைக்கு நீ செய்தியைக் கொண்டுபோகவேண்டாம்" *(2சாமு 18:20)* என்று சொன்னான்.

தாவீது ராஜாவின் குமாரனாகிய அப்சலோம் செத்துப்போனதினால், அவருக்கு தன் குமாரனைப்பற்றிய துக்கமே அதிகமாயிருக்கும். தாவீது யுத்தத்திலே கிடைத்த வெற்றியை நினைத்து சந்தோஷப்படமாட்டார் என்பது யோவாபுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அதை இப்போது அகிமாசும் புரிந்துகொள்கிறான்.

தாவீது அகிமாசிடத்தில், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா" என்று கேட்டதற்கு, அகிமாஸ் தாவீது ராஜாவிடம், "யோவாப் ராஜாவின் வேலைக்காரனையும் உம்முடைய அடியானையும் அனுப்புகிறபோது, ஒரு பெரிய சந்தடியிருந்தது; ஆனாலும் அது இன்னதென்று தெரியாது" *(2சாமு 18:29)* என்று சொல்லுகிறான்.

ராஜா கேட்கிற விஷயத்தைப்பற்றி, தன்னைவிட கூஷிக்கு நன்றாய்த் தெரியும் என்பதுபோல அகிமாஸ் சொல்லுகிறான். அகிமாஸ் அப்சலோமைப் பற்றி பேச விரும்பவில்லை. ஆனால் தாவீதோ அப்சலோமைப்பற்றிய செய்தியை மாத்திரமே கேள்விப்படுவதற்கு ஆவலாயிருக்கிறார். அகிமாஸ் தாவீதுக்கு நல்ல செய்தியை மாத்திரமே சொல்ல விரும்புகிறான். ஆகையினால் அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்பது தனக்கு தெரியாது என்பதுபோல அகிமாஸ் தாவீதுக்கு பிரதியுத்தரம் சொல்லிவிடுகிறான்.

யுத்தத்திலே தாவீதுக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது. அகிமாஸ் தாவீதுக்கு யுத்தத்தின் ஜெயசெய்தியை சொன்னான். ஆனால் தாவீதோ, யுத்தச்செய்தியைவிட, அப்லோமின் செய்தியை அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறார். அகிமாஸ் அப்சலோமைப்பற்றி தனக்குத் தெரியாது என்று சொன்னவுடன், தாவீது அவனிடம், "நீ அங்கே போய் நில்" என்று சொல்லுகிறார். அகிமாஸ் ஒரு பக்கத்தில் போய் நிற்கிறான்.

தாவீது ராஜாதான், அகிமாசைப்பற்றிச் சொன்னபோது, "அவன் நல்ல மனுஷன், அவன் நல்ல செய்தி சொல்ல வருகிறான்" *(2சாமு 18:27)* என்று சொன்னார். தாவீதுக்கு யுத்தத்தின் ஜெயத்தைப்பற்றிய செய்தி நல்ல செய்தியாயில்லை. தன்னுடைய பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருப்பதுதான் தாவீதுக்கு நல்ல செய்தியாயிருக்கிறது.

தாவீது இப்போது கூஷியை தன்னிடத்தில் அழைத்து, அவன் கொண்டு வந்திருக்கிற செய்தியை சொல்லச் சொல்லுகிறார். அப்போது கூஷி தாவீது ராஜாவினிடத்தில் வந்து, "ராஜாவாகிய என் ஆண்டவனே, நற்செய்தி, இன்று கர்த்தர் உமக்கு விரோதமாயெழும்பின எல்லாரின் கைக்கும் உம்மை நீங்கலாக்கி நியாயஞ்செய்தார்" *(2சாமு 18:31)* என்று சொல்லுகிறான். கூஷியும் யுத்தத்தில் தாவீதுக்கு கிடைத்த வெற்றியையே முதலாவதாகச் சொல்லுகிறான்.

தாவீதோ தன்னுடைய பிள்ளையாண்டானாகிய அப்சலோமைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறார். அப்பொழுது ராஜா கூஷியைப் பார்த்து; "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா" என்று கேட்கிறார். அதற்கு, கூஷி, தாவீது ராஜாவினிடத்தில், "அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்தது போல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவது" *(2சாமு 18:32)* என்று சொல்லுகிறான்.

கூஷி அகிமாசுக்கு பின்பு மெதுவாக ஓடி வந்தாலும், நிச்சயமான செய்தி சொல்லுகிறான். அகிமாஸ் சொன்ன யுத்தசெய்தியை உறுதிபண்ணுகிறான். தாவீது ராஜாவோ, கூஷியிடம் "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா" என்று கேட்டதற்கு, கூஷி தாவீது ராஜாவுக்கு பிரதியுத்தரமாக, "ஆம், அவன் தன்னுடைய பிரேதக் குழியில் சுகமாயிருக்கிறான்" என்று பொருள்படும்படியாக பிரதியுத்தரம் சொல்லுகிறான். செய்தி சொல்லுகிறவன் எப்படிப்பட்ட செய்தியை சொன்னாலும், அவனைக் குற்றப்படுத்த முடியாது.

கூஷி தாவீது ராஜாவுக்கு துக்கமான செய்தியை சொல்லுகிறான். தாவீதைப் பொறுத்தவரையில் அது கெட்ட செய்திதான். ஆனால் கூஷியோ தாவீதிடம் அந்த செய்தியை சொல்லும்போது, அதை "நற்செய்தி" *(2சாமு 18:31)* என்று சொல்லுகிறான். தாவீதின் சத்துருக்கள் எல்லோருக்கும், தாவீதுக்கு விரோதமாக எழும்புகிற யாவருக்கும், அப்சலோமுக்கு நடந்ததுபோல பொல்லாப்பு நடக்கவேண்டும் என்று கூஷி சொல்லுகிறான்.

கர்த்தர் தனக்கு விரோதமாக எழும்பின எல்லாரின் கைக்கும் தன்னை நீங்கலாக்கி நியாயம் செய்திருக்கிறார் என்பதை தாவீது மறந்துவிடுகிறார். தாவீதின் மனதில் யுத்தத்தின் ஜெயசெய்தி சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. அப்சலோமின் மரணச்செய்தி அவருக்கு துக்க செய்தியாகயிருக்கிறது. அகிமாசும், கூஷியும் தாவீதுக்கு சொன்ன செய்தி, அவருக்கு நற்செய்தியாயிராமல், துர்ச்செய்தியாயிருக்கிறது.

தன்னுடைய பிள்ளையாண்டானாகிய அப்சலோம் மரித்துப்போனதை கேள்விப்பட்டு, தாவீது ராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் அழுகிறார்; தாவீது அங்கே ஏறிப்போகையில்: "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே" *(2சாமு 18:33)* என்று சொல்லி அழுகிறார்.

19 அதிகாரம்

தாவீதின் சேவகர்கள் இஸ்ரவேல் மனுஷரை முறியடிக்கிறார்கள். தாவீதின் சேனைக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. ஆனால் தாவீதோ, தன்னுடைய குமாரன் மரித்துப்போனதினிமித்தமாக கண்ணீர் விட்டு அழுகிறார். யோவாப் தாவீதுக்கு ஆலோசனை சொல்லுகிறார். தாவீது தன்னுடைய துக்கத்தைவிட்டு திரும்புகிறார் (2சாமு 19:1-8).

தாவீது மறுபடியுமாக இஸ்ரவேலின் ராஜாசனத்தைப் பெற்றுக்கொள்கிறார். இஸ்ரவேல் மனுஷர் தாவீதை அழைத்து வருவதற்கு முந்திக்கொள்கிறார்கள் (2சாமு 19:9,10). தாவீதின் ஆசாரியர் யூதாவின் மனுஷருக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்கள். (2சாமு 19:11-15).

தாவீது ராஜா யோர்தான் நதிக்கு வருகிறார். தாவீது சீமேயியை மன்னிக்கிறார் (2சாமு 19:16-23). தாவீது மேவிபோசேத்தையும் மன்னிக்கிறார் (2சாமு 19:24-30). பர்சிலா தாவீதுக்கு உதவியாயிருக்கிறார். தாவீது பர்சிலாவுக்கு தன்னுடைய நன்றியைச் சொல்லுகிறார். பர்சிலாவுக்குப் பதிலாக கிம்காம் தாவீதோடு கூட வருகிறான் (2சாமு 19:31-39).

யூதாமனுஷர் தாவீதை யோர்தானைக் கடந்து வர பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் மனுஷர் வருவதற்கு முன்பாக, யூதாமனுஷர் தாவீதுக்கு உதவி செய்ய முந்திக்கொள்கிறார்கள். இதன் நிமித்தமாக இஸ்ரவேல் மனுஷர் யூதாமனுஷரோடு விவாதம்பண்ணுகிறார்கள்.

தாவீதின் துக்கம் நீங்கிற்று
2சாமு 19:1-8

2சாமு 19:1. இதோ, ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார் என்று யோவாபுக்கு அறிவிக்கப்பட்டது.

2சாமு 19:2. ராஜா தம்முடைய குமாரனுக்காக மனம்நொந்திருக்கிறார் என்று அன்றைய தினம் ஜனங்கள் கேள்விப்பட்டார்கள்; அதினிமித்தம் அன்றையதினம் அந்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய்மாறிற்று.

2சாமு 19:3. யுத்தத்தில் முறிந்தோடுகிறதினால் வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வருகிறவர்கள்போல, ஜனங்கள் அன்றையதினம் திருட்டளவாய்ப் பட்டணத்திற்குள் வந்தார்கள்.

2சாமு 19:4. ராஜா தன் முகத்தை மூடிக்கொண்டு, மகா சத்தமாய்: என் மகனாகிய அப்சலோமே, அப்சலோமாகிய என் மகனே, என் மகனே என்று அலறிக்கொண்டிருந்தான்.

2சாமு 19:5. அப்பொழுது யோவாப் வீட்டிற்குள்ளே ராஜாவினிடத்தில் போய்: இன்று உம்முடைய ஜீவனையும், உம்முடைய குமாரர் குமாரத்திகளின் ஜீவனையும், உம்முடைய மனைவிகளின் ஜீவனையும், உம்முடைய மறுமனையாட்டிகளின் ஜீவனையும் தப்புவித்த உம்முடைய ஊழியக்காரர் எல்லாரின் முகத்தையும் வெட்கப்படுத்தினீர்; இன்று நீர் உம்மைப் பகைக்கிறவர்களைச் சிநேகித்து, உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறீர் என்று விளங்குகிறது.

2சாமு 19:6. அதிபதிகளும் சேவகரும் உமக்கு அற்பமானவர்கள் என்று இன்று விளங்கப்பண்ணுகிறீர்; அப்சலோம் உயிரோடிருந்து, நாங்கள் அனைவரும் இன்று செத்துப்போனால், அப்பொழுது உம்முடைய பார்வைக்கு நலமாயிருக்கும் என்று இன்று அறிந்துகொண்டேன்.

2சாமு 19:7. இப்பொழுதும் எழுந்திருந்து வெளியே வந்து, உம்முடைய ஊழியக்காரரோடே அன்பாய்ப் பேசும்; நீர் வெளியே வராதிருந்தால், இன்று இரவு ஒருவரும் உம்மோடே தங்கியிருப்பதில்லை என்று கர்த்தர்மேல் ஆணையிடுகிறேன்; அப்பொழுது உம்முடைய சிறுவயது முதல் இதுவரைக்கும் உமக்கு நேரிட்ட எல்லாத் தீமையைப்பார்க்கிலும், அது உமக்கு அதிக தீமையாயிருக்கும் என்றான்.

2சாமு 19:8. அப்பொழுது ராஜா எழுந்துபோய், ஒலிமுகவாசலில் உட்கார்ந்தான்; இதோ, ராஜா ஒலிமுகவாசலில் உட்கார்ந்திருக்கிறார் என்று சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப்பட்டபோது, ஜனங்கள் எல்லாரும் ராஜாவுக்கு முன்பாக வந்தார்கள்; இஸ்ரவேலரோவெனில் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

அப்சலோம் மரித்துப்போன செய்தியைக் கேட்டு தாவீது மிகவும் கலங்குகிறார். கெவுனிவாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் அழுகிறார். அகிமாசும், கூஷியும் யுத்தத்தின் செய்தியை தாவீதுக்கு அறிவித்த பின்பு, தாவீதின் சேவகர்கள் மக்னாயீமுக்கு சந்தோஷமாய் வருகிறார்கள். இதோ, ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார் என்று யோவாபுக்கு அறிவிக்கப்படுகிறது *(2சாமு 19:1).*

யுத்தத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் முறியடிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டு தாவீது ராஜா சந்தோஷப்படுவார் என்றும், அவர் தங்களை அன்போடு வரவேற்பார் என்றும் எதிர்பார்த்து, தாவீதின் சேவகர்கள் சந்தோஷத்தோடு மக்னாயீமுக்கு திரும்பி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று. ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார் என்று அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. ராஜா யுத்தத்தின் ஜெயத்தை நினைத்து சந்தோஷப்படாமல், தன் குமாரன் அப்சலோமுக்காக அழுது புலம்புவது அவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

தாவீது ராஜா தன்னுடைய குமாரனுக்காக மனம்நொந்திருக்கிறார் என்று அன்றைய தினம் ஜனங்கள் கேள்விப்படுகிறார்கள்; அதினிமித்தம் அன்றையதினம் அந்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய்மாறிற்று. யுத்தத்தில் முறிந்தோடுகிறதினால் வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வருகிறவர்கள்போல, ஜனங்கள் அன்றையதினம் திருட்டளவாய்ப் மக்னாயீம் பட்டணத்திற்குள் வருகிறார்கள் *(2சாமு 19:2,3).*

எப்பிராயீம் காட்டிலே அப்சலோமைக் கொன்றுபோட்டதற்காக, தாவீது தங்கள்மீது கோபமாகவும், வருத்தமாகவும் இருக்கிறாரோ என்னும் சந்தேகம், தாவீதின் சேவகர் மனதில் உண்டாயிற்று. அதின் நிமித்தம் அன்றையதினம், அந்த ஜெயம், தாவீதின் சேவகருக்கு துக்கமாய் மாறிற்று. தாவீது யுத்தசெய்தியைக் கேட்டு சந்தோஷப்படுவார் என்று அவருடைய சேவகர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று. தாவீது சந்தோஷப்படாமல், தன்னுடைய மகனின் மரணத்திற்காக துக்கப்படுகிறார்.

யுத்தத்திலே தங்களுக்கு ஜெயம் கிடைத்ததற்காக ராஜா ஏன் சந்தோஷப்படவில்லை என்றோ, தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்த அப்சலோமுக்காக அவர் ஏன் அழுது புலம்புகிறார் என்றோ, அவருடைய ஜனங்கள் யாரும் அவரிடத்தில் கேட்கவில்லை. ஏனென்றால், "ராஜா செய்ததெல்லாம் சகல ஜனங்களுக்கும் நலமாய்த் தோன்றினது" *(2சாமு 3:36).*

தாவீதின் சேனையிலுள்ளவர்கள், யுத்தத்திலே ஜெயித்திருந்தாலும், தங்கள் ஜெயத்தை சந்தோஷமாய்க் கொண்டாடவில்லை. தாவீதின் துக்கத்தில் அவர்களும் பங்குபெறுகிறார்கள். தாவீதின் சேவகர் மக்னாயீம் பட்டணத்திற்குள் வரும்போது, ஆரவாரத்தோடும், ஜெயதொனியோடும் வரவில்லை. அதற்கு பதிலாக யுத்தத்திலே முறிந்தோடி தோற்றுப்போனால், வெட்கப்பட்டு திருட்டளவாய் வருகிறதுபோல, தாவீதின் சேவகரும் மக்னாயீம் பட்டணத்திற்குள் வெட்கப்பட்டு திருட்டளவாய் வருகிறார்கள்.

தாவீது ராஜா தன் முகத்தை மூடிக்கொண்டு, மகா சத்தமாய்: "என் மகனாகிய அப்சலோமே, அப்சலோமாகிய என் மகனே, என் மகனே" *(2சாமு 19:4)* என்று அலறிக்கொண்டிருக்கிறார். தாவீதின் சேவகர்களில் ஒருவர்கூட, அவரிடத்தில் போய், "ஏன் அழுகிறீர்" என்று கேட்கத் துணியவில்லை. "இதோ ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார்" என்று யோவாபுக்கு அறிவிக்கப்படுகிறது. ராஜா தன் குமாரனுக்காக அழுவதை யோவாபால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தாவீதின் சேவகர் ஒருவரும் தாவீதினிடத்தில் போய் பேசாவிட்டாலும், யோவாப் தாவீதினிடத்தில் போய் இதுபற்றி பேசவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறான்.

அப்பொழுது யோவாப் வீட்டிற்குள்ளே ராஜாவினிடத்தில் போய்: "இன்று உம்முடைய ஜீவனையும், உம்முடைய குமாரர் குமாரத்திகளின் ஜீவனையும், உம்முடைய மனைவிகளின் ஜீவனையும், உம்முடைய மறுமனையாட்டிகளின் ஜீவனையும் தப்புவித்த உம்முடைய ஊழியக்காரர் எல்லாரின் முகத்தையும் வெட்கப்படுத்தினீர்; இன்று நீர் உம்மைப் பகைக்கிறவர்களைச் சிநேகித்து, உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறீர் என்று விளங்குகிறது" *(2சாமு 19:5)* என்று சொல்லுகிறான்.

தாவீது அழுவதைப் பார்த்து யோவாப் அவர்மீது குற்றம் சொல்லுகிறான். தாவீது தன் மகனுக்காக அழுவதினால், அவர் தனக்கு நன்மை செய்த அனைவரையும் வெட்கப்படுத்துகிறார் என்றும், தன்னை சிநேகிக்கிறவரை பகைக்கிறார் என்றும், யோவாப்தாவீதின்மீது குற்றம் சொல்லுகிறான்.

யோவாப் தாவீதின்மீது தொடர்ந்து குற்றம் சொல்லுகிறான். யோவாப் தாவீதை நோக்கி, "அதிபதிகளும் சேவகரும் உமக்கு அற்பமானவர்கள் என்று இன்று விளங்கப்பண்ணுகிறீர்; அப்சலோம் உயிரோடிருந்து, நாங்கள் அனைவரும் இன்று செத்துப்போனால், அப்பொழுது உம்முடைய பார்வைக்கு நலமாயிருக்கும் என்று இன்று அறிந்துகொண்டேன்" *(2சாமு 19:6)* என்றும் சொல்லுகிறான்.

யோவாபின் வார்த்தையில் உறுதியிருக்கிறது. அவன் தாவீதோடு சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசுகிறான். தாவீது இந்த சூழ்நிலையில், தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்துவிடுகிறார். தன்னுடைய உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல், அப்சலோமுக்காக அழுது கொண்டிருக்கிறார். தாவீதின் இருதயம் அவருடைய ஜனங்கள்மீது இல்லாமல், அவருடைய குமாரன்மீது இருக்கிறது.

யோவாப் தாவீதிடம் அவருடைய சேவகர் அவருக்காக செய்த சேவைகளை புகழ்ந்து பேசுகிறான். ஆனால் தாவீதோ அவருடைய சேவகர்களை அற்பமாய் எண்ணுவதுபோல யோவாபுக்கு தெரிகிறது. தாவீது தன்னுடைய சிநேகிதரைப் பகைக்கிறார் என்றும், அவர் தன்னுடைய பகைஞரை சிநேகிக்கிறார் என்றும் யோவாப் அவர்மீது குற்றம் சொல்லுகிறான். இந்த சூழ்நிலையில் தாவீது என்ன செய்யவேண்டும் என்றும் யோவாப் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

யோவாப் தாவீதை நோக்கி, "இப்பொழுதும் எழுந்திருந்து வெளியே வந்து, உம்முடைய ஊழியக்காரரோடே அன்பாய்ப் பேசும்; நீர் வெளியே வராதிருந்தால், இன்று இரவு ஒருவரும் உம்மோடே தங்கியிருப்பதில்லை என்று கர்த்தர்மேல் ஆணையிடுகிறேன்; அப்பொழுது உம்முடைய சிறுவயது முதல் இதுவரைக்கும் உமக்கு நேரிட்ட எல்லாத் தீமையைப்பார்க்கிலும், அது உமக்கு அதிக தீமையாயிருக்கும்" *(2சாமு 19:7)* என்று சொல்லுகிறான்.

தாவீது தன்னுடைய சேனைக்கு தலைவராயிருக்கிறார். யுத்தத்திலே அவருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. தாவீதின் சேனையிலுள்ளவர்கள், தங்களுடைய ஜீவனையும் பொருட்படுத்தாமல், அவருக்காக யுத்தம்பண்ணினார்கள். தாவீதின் சேனைக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அவருடைய சேவகர்கள் இப்போது யுத்தக்களத்திலிருந்து ஜெயத்தோடு திரும்பி வருகிறார்கள். தாவீது அழுவதை நிறுத்திவிட்டு, வீட்டிற்கு வெளியே வந்து, யுத்தத்திலே ஜெயம் பெற்று வருகிற தன்னுடைய சேனையிலுள்ளவர்களை சிரித்த முகத்தோடு வரவேற்கவேண்டும். அவர்களை பாராட்டவேண்டும். அவர்களுடைய சேவைகளை புகழவேண்டும். அவர்கள் தனக்கு செய்த சேவைக்காக தாவீது அவர்களுக்கு நன்றி சொல்லவேண்டும் என்று, யோவாப் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

யோவாப் தாவீதின் படைத்தளபதிகளில் ஒருவன். தாவீது யோவாபுக்கும் ராஜாவாயிருக்கிறான். யோவாப் தன்னை கடிந்துகொள்ளும்போது தாவீது அவன்மீது கோபப்படவில்லை. அவன் தனக்கு ஆலோசனை சொல்லும்போது, தாவீது வீண்பெருமைக்கு இடங்கொடுத்து, அவனுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கவுமில்லை. தாவீது யோவாபின் புத்தியுள்ள ஆலோசனைகளை அங்கீகரிக்கிறார். அவன் தன்னை கடிந்துகொள்ளுவதையும் பொறுத்துக்கொள்கிறார்.

அப்பொழுது தாவீது தன்னுடைய அழுகையை நிறுத்துகிறார். தன்னுடைய முகத்தைக் கழுவுகிறார். தலையிலே எண்ணெய் பூசிக்கொள்கிறார். தாவீது ராஜா ஜனங்களைப் பார்க்க எழுந்துபோய், ஒலிமுகவாசலில் உட்காருகிறார்; தாவீது ஜனங்களுக்கு முன்பாக தன்னுடைய துக்கமுகத்தைக் காண்பிக்கவில்லை. தாவீது சந்தோஷமாயிருக்கிறார். இதோ, ராஜா ஒலிமுகவாசலில் உட்கார்ந்திருக்கிறார் என்று சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. ஜனங்கள் எல்லாரும் ராஜாவுக்கு முன்பாக வருகிறார்கள்; இஸ்ரவேலரோவெனில் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போகிறார்கள் (2சாமு 19:8).

தாவீது எருசலேமுக்கு திரும்பிப்போகிறார் 2சாமு 19:9-15

2சாமு 19:9. இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களிலுமுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் வாக்குவாதம் உண்டாகி, அவர்கள்: ராஜா நம்முடைய சத்துருக்களின் கைக்கு நம்மை நீங்கலாக்கிவிட்டார், அவர்தானே பெலிஸ்தரின் கைக்கு நம்மைத் தப்புவித்தார்; இப்போதோ அப்சலோமுக்குத் தப்ப, தேசத்தைவிட்டு ஓடிப்போனார்.

2சாமு 19:10. நமக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணிவைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தான்; இப்போதும் ராஜாவைத் திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன் என்று சொல்லிக் கொண்டார்கள்.

2சாமு 19:11. இப்படி இஸ்ரவேலர் எல்லாரும் பேசிக்கொண்டிருக்கிறது, ராஜா இருக்கிற வீட்டிலே அவனுக்குக் கேள்வியானபடியினால், தாவீதுராஜா சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களிடத்துக்கு ஆள் அனுப்பி, நீங்கள் யூதாவின் மூப்பரோடே பேசி: ராஜாவைத் தம்முடைய வீட்டுக்குத் திரும்ப அழைத்துவர நீங்கள் மற்றவர்களுக்குப் பிந்திப்போவானேன்?

2சாமு 19:12. நீங்கள் என் சகோதரர், நீங்கள் என் எலும்பும் என் மாம்சமுமானவர்கள்; ராஜாவைத் திரும்ப அழைத்துவர நீங்கள் பிந்தினவர்களாயிருப்பானேன் என்று சொல்லுங்கள்.

2சாமு 19:13. நீங்கள் அமாசாவையும் நோக்கி: நீ என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ? நீ யோவாபுக்குப் பதிலாக எந்நாளும் எனக்கு முன்பாகப் படைத்தலைவனாயிராவிட்டால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று சொல்லச்சொன்னான்.

2சாமு 19:14. இப்படியே யூதாவின் சகல மனுஷருடைய இருதயத்தையும் ஒரு மனுஷனுடைய இருதயத்தைப்போல் இணங்கப்பண்ணினதினால், அவர்கள் ராஜாவுக்கு: நீர் உம்முடைய எல்லா ஊழியக்காரரோடும் திரும்பிவாரும் என்று சொல்லி அனுப்பினார்கள்.

2சாமு 19:15. ராஜா திரும்ப வருகிறதற்கு யோர்தான்மட்டும் வந்தபோது, யூதா கோத்திரத்தார் ராஜாவுக்கு எதிர்கொண்டுபோய், ராஜாவை யோர்தானைக் கடக்கப்பண்ண கில்கால்மட்டும் வந்தார்கள்.

தாவீதின் சேனை இஸ்ரவேலரை முறியடிக்கிறார்கள். தாவீது உடனே தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு எருசலேமுக்கு திரும்பிப்போகவில்லை. கீலேயாத்திலே தாவீதோடுகூட அவருடைய சேனையிலுள்ளவர்கள் இருக்கிறார்கள். தாவீது விரும்பியிருந்தால் தன்னுடைய சேனையைக் கூட்டிக்கொண்டு எருசலேமுக்கு போயிருக்க முடியும். ஆனால் தாவீதோ எருசலேமுக்கு உடனே திரும்பிப்போகாமல், இன்னும் மக்னாயீமில் தங்கியிருக்கிறார்.

தாவீதோடுகூட இஸ்ரவேல் கோத்திரத்தாரில் ஒரு சிலர் மாத்திரமே இருக்கிறார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோருமே தன்னோடு கூடயிருக்கவேண்டுமென்று தாவீது எதிர்பார்க்கிறார். இஸ்ரவேல் மனுஷருடைய ஏகோபித்த ஆதரவோடு, சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகவேண்டும் என்பது தாவீதின் விருப்பம்.

இஸ்ரவேலின் ராஜாசனத்திலே, சகல இஸ்ரவேலரின் ஆதரவோடு அமர்ந்து, இஸ்ரவேலின்மீது ராஜ்யபாரம்பண்ண வேண்டுமென்று தாவீது விரும்புகிறார். அவர் யாரையும் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. யார்மீதும் தன்னுடைய அதிகாரத்தைத் திணிப்பதற்கும் தாவீது ஆயத்தமாயில்லை. தாவீது தன்னுடைய சேனைக்கு தலைவராயிருப்பதைவிட, தன்னுடைய ஜனங்களுக்கு சேவை செய்யும் கரமாயிருக்க விரும்புகிறார். ராஜாவுக்கு ஜனங்களின் ஆதரவு வேண்டும். இஸ்ரவேலின் ராஜாசனத்தில் இடம் பிடிப்பதைவிட, இஸ்ரவேல் ஜனங்களுடைய இருதயத்திலே இடம் பிடிக்கவேண்டும் என்பது தாவீதின் விருப்பம்.

பெரிய சேனையை உடைய ராஜா தன் ஜனங்களைப் பயமுறுத்துவான். ஜனங்களும் வேறு வழியில்லாமல் ராஜாவுக்கு கீழ்ப்படிவார்கள். அவர்கள் ராஜாவுக்கு பயந்து நடுங்குவார்கள். தாவீதோ இஸ்ரவேல் ஜனங்களை பயமுறுத்தி ஆளுகை செய்யாமல், அன்பினால் ஆளுகை செய்யவேண்டுமென்று விரும்புகிறார். சேனைகளின் ஆதரவைவிட, ஜனங்களின் ஆதரவே ராஜாவுக்கு பலம்.

தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஆக்கவேண்டும் என்று, இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தங்களுக்குள்ளே விவாதம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களிலுமுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் வாக்குவாதம் உண்டாயிற்று. இவர்கள் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரும் "ராஜா நம்முடைய சத்துருக்களின் கைக்கு நம்மை நீங்கலாக்கிவிட்டார், அவர்தானே பெலிஸ்தரின் கைக்கு நம்மைத் தப்புவித்தார்; இப்போதோ அப்சலோமுக்குத் தப்ப, தேசத்தைவிட்டு ஓடிப்போனார். நமக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணிவைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தான்; இப்போதும் ராஜாவைத் திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன்" (2சாமு 19:9,10) என்று தங்களுக்குள் சொல்லிக் கொள்கிறார்கள்.

தாவீது இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு ஏற்கெனவே பல உதவிகளை செய்திருக்கிறார். அவர்களுக்காக யுத்தம்பண்ணி, அவர்களுக்கு விரோதமாக வந்த சத்துருக்களை ஒடுக்கியிருக்கிறார். தாவீது தங்களுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கும்போது, தாவீதை இஸ்ரவேல் தேசத்தைவிட்டே துரத்திவிட்டது தங்களுக்கு அநியாயமான காரியம் என்று அவர்கள் தங்களுக்குள் வாக்குவாதம்பண்ணுகிறார்கள். தேசத்திற்கு நன்மை செய்த தாவீதை, தேசத்தைவிட்டே துரத்தவிட்டதற்காக அவர்கள் வேதனைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தார் அப்சலோமை நம்பினார்கள். அப்சலோமோ அவர்களைக் கைவிட்டுவிட்டான். இஸ்ரவேல் ஜனங்கள் கேதுரு மரத்தை கைவிட்டுவிட்டு, கேதுரு மரத்தின் கிளையைப்பற்றிக் கொண்டார்கள். கிளை முறிந்தது. அவர்களும் கீழே விழுந்தார்கள். அப்சலோம் யுத்தத்திலே செத்துப்போனான். இஸ்ரவேல் கோத்திரத்தாரோ அப்சலோமோடு செத்துப்போகாமல் பிழைத்துக்கொண்டார்கள். தாங்கள் தொடர்ந்து பிழைத்திருக்கவேண்டுமென்றால், தாவீது ராஜாவை மறுபடியும் இஸ்ரவேலுக்கு அழைத்து வரவேண்டும் என்றும், தாவீது ராஜாவுக்கு தங்களுடைய ஆதரவைக் கொடுக்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் கோத்திரத்தார் தங்களுக்குள் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தார் தாவீது ராஜாவை இஸ்ரவேலுக்கு திரும்ப அழைத்து வரவேண்டுமா, வேண்டாமா என்று வாக்குவாதம்பண்ணவில்லை. தாவீதை இஸ்ரவேலுக்கு அழைத்து வராமலிருப்பது யாருடைய குற்றம் என்று அவர்கள் தங்களுக்குள் வாக்குவாதம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தார், தாவீதை இஸ்ரவேலுக்கு அழைத்து வரவேண்டுமென்று மும்முரமாயிருக்கும்போது, யூதாமனுஷரோ அதுபற்றி ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள். தாவீதை மறுபடியும் இஸ்ரவேல் தேசத்திற்கு அழைத்து வர யூதாகோத்திரத்தார் ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. யூதா மனுஷருடைய மெத்தனம் தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் தனக்கு ஆதரவாயிருக்கும்போது, யூதாகோத்திரத்தார் மாத்திரம் அமைதியாயிருப்பது தாவீதுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

தாவீது யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். தன்னுடைய கோத்திரத்து ஜனங்கள் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள், அவர்களுடைய மனநிலமை எப்படியிருக்கிறது என்பதை தாவீது அறிந்துகொள்ள விரும்புகிறார். இஸ்ரவேல் கோத்திரத்தார் தனக்கு ஆதரவாயிருந்தாலும், யூதாகோத்திரத்தாரும் தனக்கு ஆதரவாயிருக்கவேண்டுமென்று தாவீது எதிர்பார்க்கிறார். குடும்பத்தில் குழப்பமும், வெளியிலே சமாதானமுமாய் இருப்பது உண்மையான ஆசீர்வாதமல்ல. இரண்டு இடங்களிலும் சமாதானம் இருக்கவேண்டும். அதுவே மெய்யான ஆசீர்வாதம்.

சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தாவீதுக்கு ஆதரவானவர்கள். இவ்விரண்டு ஆசாரியர்களுக்கும் யூதாவின் மூப்பரோடு நல்ல ஐக்கியம் இருக்கிறது. தாவீது இந்த ஆசாரியர்கள் மூலமாக, தன்னுடைய மனதின் விருப்பத்தை, யூதாகோத்திரத்தாருக்கு சொல்லியனுப்புகிறார்.

தாவீதுராஜா சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களிடத்துக்கு ஆள் அனுப்பி, "நீங்கள் யூதாவின் மூப்பரோடே பேசி: ராஜாவைத் தம்முடைய வீட்டுக்குத் திரும்ப அழைத்துவர நீங்கள் மற்றவர்களுக்குப் பிந்திப்போவானேன்? நீங்கள் என் சகோதரர், நீங்கள் என் எலும்பும் என் மாம்சமுமானவர்கள்; ராஜாவைத் திரும்ப அழைத்துவர நீங்கள் பிந்தினவர்களாயிருப்பானேன் என்று சொல்லுங்கள்" *(2சாமு 19:11,12)* என்று சொல்லச் சொல்லுகிறார்.

சாதோக்கும் அபியத்தாரும், தாவீது ராஜா சார்பாக, யூதாவின் மூப்பரோடு பேசவேண்டும். தாவீதை எருசலேமுக்கு அழைத்து வர யூதாகோத்திரத்தார் முந்திப்போகவேண்டும். இஸ்ரவேல் கோத்திரத்தார் தாவீதை அழைத்து வருவதற்கு முன்பாக, யூதாகோத்திரத்தார், அவர்களுக்கு முந்தி தாவீதை எருசலேமுக்கு அழைத்து வரவேண்டும். இந்த வார்த்தைகளை சாதோக்கும் அபியத்தாரும், தாவீதின் சார்பாக, யூதாவின் மூப்பரோடே பேசுகிறார்கள். யூதாவின் மூப்பர் இவ்வாறு செய்வதினால், யூதாகோத்திரத்திற்கு மகிமையும் மேன்மையும் உண்டாகும்.

யூதாகோத்திரத்தார் தாவீதைக் கைவிட்டுவிட்டு, அப்சலோமோடு சேர்ந்துகொண்டார்கள். இதனால் அவர்கள் தாவீதைப் பார்ப்பதற்கு ஒருவேளை பயந்து நடுங்கிக்கொண்டிருக்கலாம். தாவீது தங்களுக்கு உதவியோ அல்லது நன்மையோ செய்யமாட்டார் என்று நினைத்து அவர்கள் ஒருவேளை சோர்ந்துபோயிருக்கலாம்.

தாவீதுக்கு யூதாகோத்திரத்தாரின் மனம் எல்லாமே தெரிந்திருக்கிறது. அவர்கள் எல்லா சூழ்நிலையிலும் தன்னோடு கூடயிருக்கவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். தாவீது யூதாகோத்திரத்தாரை நோக்கி, "நீ என் சகோதரனும், என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ" என்று அவர்களோடு அன்பாகவும் உரிமையாகவும் பேசுகிறார். யூதாகோத்திரத்தாரை விட்டுவிட தாவீதுக்கு மனதில்லை.

அமாசா இதுவரையிலும் அப்சலோமின் படைத்தளபதியாயிருந்தவன். யோவாப் தாவீதுக்கு சொந்தக்காரனாகயிருப்பதுபோல, அமாசாவும் தாவீதுக்கு சொந்தக்காரனாயிருக்கிறான். தாவீதின் பார்வை அமாசாவின் பக்கம் திரும்புகிறது. அமாசா தன்னோடு கூடயிருக்கவேண்டுமென்று தாவீது விரும்புகிறார்.

தாவீது சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியரை யூதாவின் மூப்பரிடத்திலே அனுப்பும்போது, அவர்களை விசேஷமாக அமாசாவிடமும் அனுப்புகிறார். அவர்கள் அமாசாவிடம், "நீ என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ? நீ யோவாபுக்குப் பதிலாக எந்நாளும் எனக்கு முன்பாகப் படைத்தலைவனாயிராவிட்டால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" *(2சாமு 19:13)* என்று தாவீது அமாசாவுக்கு சொன்ன செய்தியை சொல்லவேண்டும்.

தாவீதுக்கு இப்போது யோவாப் படைத்தளபதியாயிருக்கிறான். தாவீது அமாசாவை யோவாபுக்கு பதிலாக படைத்தலைவனாய் அமர்த்த தீர்மானித்திருக்கிறார். யோவாப் அப்சலோமைக் கொன்றுபோட்டதினால், தாவீது இவ்வாறு தீர்மானம் செய்திருக்கலாம். அமாசாவை படைத்தலைவனாக்கினால், யோவாபுக்கு அமாசாமீது கோபம் வரும். யோவாப் அமாசாவின்மீது பொறாமைப்படுவான். அமாசாவை தனக்கு படைத்தலைவனாக்க வேண்டும் என்னும் விருப்பத்தை தாவீது யோவாபுக்கு சொல்லவில்லை.

தாவீது அமாசாவை தனக்கு படைத்தலைவனாக்கிய செய்தி யோவாபுக்கு தெரியவருகிறது. யோவாப் அமாசாவின்மீது கோபமாயிருக்கிறான். தனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தபோது, யோவாப் அமாசாவை கொன்றுபோடுகிறான்.

"தன் கையிலிருக்கிற பட்டயத்திற்கு அமாசா எச்சரிக்கையாயிராதபோது, யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சரிந்துபோகத்தக்கதாய், அதினால் வயிற்றிலே ஒரே குத்தாக குத்தினான்; அவன் செத்துப்போனான் *(2சாமு 20:10)*.

தாவீதின் திட்டம் யூதாகோத்திரத்தார் மத்தியிலே அவருக்கு சாதகமாக கிரியை செய்கிறது. தாவீது தன்னுடைய ஆலோசனைப் பிரகாரம், யூதாவின் சகல மனுஷருடைய இருதயத்தையும் ஒரு மனுஷனுடைய இருதயத்தைப்போல் இணங்கப்பண்ணுகிறார். யூதாவின் மனுஷர் தாவீது ராஜாவுக்கு: "நீர் உம்முடைய எல்லா ஊழியக்காரரோடும் திரும்பிவாரும்" என்று சொல்லி அனுப்புகிறார்கள் *(2சாமு 19:14)*.

கர்த்தருடைய கிருபையும் வழிநடத்துதலும் தாவீதோடு கூடயிருக்கிறது. தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாக, சாதோக்கும் அபியத்தாரும் யூதாவின் மூப்பரிடத்திலே பேசுகிறார்கள். அமாசாவும் தாவீதுக்கு ஆதரவாயிருக்கிறான். யூதாவின் சகல மனுஷரும் தாவீதை எருசலேமுக்கு திரும்பவும் அழைத்து வரவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்.

யூதாவின் சகல மனுஷரும், "நீர் உம்முடைய எல்லா ஊழியக்காரரோடும் திரும்பி வாரும்" என்று சொல்லும் வரையிலும், தாவீது மக்னாயீமிலேயே இருக்கிறார். அவர் யோர்தானைக் கடந்து எருசலேமுக்கு போக முயற்சி பண்ணவில்லை. யூதாகோத்திரத்தாரின் அழைப்பு தாவீதுக்கு கிடைத்தவுடன், அவர் யோர்தானைக் கடந்து எருசலேமுக்கு திரும்பிப்போக ஆயத்தமாகிறார்.

தாவீது ராஜா எருசலேமுக்கு திரும்ப வருகிறதற்கு யோர்தான்மட்டும் வருகிறார். அப்போது, யூதா கோத்திரத்தார் தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டுபோய், ராஜாவை யோர்தானைக் கடக்கப்பண்ண கில்கால்மட்டும் வருகிறார்கள் *(2சாமு 19:15)*.

தாவீதும் சீமேயியும்
2சாமு 19:16-23

2சாமு 19:16. பகூரிம் ஊரானுன பென்யமீனனாகியகேராவின் மகன் சிமேயியும் தீவிரித்து, யூதா மனுஷரோடுங்கூடத் தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டுபோனுன்.

2சாமு 19:17. அவனோடே பென்யமீன் மனுஷர் ஆயிரம்பேரும், சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபாவும், அவனோடேகூட அவனுடைய பதினைந்து குமாரரும், அவனுடைய இருபது வேலைக்காரரும் இருந்தார்கள்; அவர்கள் ராஜாவுக்கு முன்பாக யோர்தானை வேகமாய்க் கடந்துபோனார்கள்.

2சாமு 19:18. அவர்கள் ராஜாவின் வீட்டாரை இக்கரைப்படுத்தவும், அவன் விரும்பும் காரியத்துக்கு உதவவும், ஒரு படகு இக்கரையிலே வந்தது; அப்பொழுது கேராவின் குமாரனாகிய சீமேயி யோர்தானைக் கடக்கப்போகிற ராஜாவுக்கு முன்பாகத் தாழவிழுந்து,

2சாமு 19:19. ராஜாவை நோக்கி: என் ஆண்டவன் என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமலும், ராஜாவாகிய என் ஆண்டவன் எருசலேமிலிருந்து புறப்பட்டு வருகிற நாளிலே, உமது அடியான் செய்த துரோகத்தை ராஜா நினைக்காமலும், தமது மனதில் வைக்காமலும் இருப்பாராக.

2சாமு 19:20. உமது அடியானாகிய நான் பாவஞ் செய்தேன் என்று அறிந்திருக்கிறேன்; இப்போதும், இதோ, ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு எதிர்கொண்டுவர, யோசேப்பு வீட்டார் அனைவருக்கும் நான் இன்று முந்திக்கொண்டேன் என்றான்.

2சாமு 19:21. அப்பொழுது செருயாவின் குமாரனாகிய அபிசாய் பிரதியுத்தரமாக: கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைச் சீமேயி தூஷித்தபடியினால், அவனை அதற்காகக் கொல்லவேண்டாமா என்றான்.

2சாமு 19:22. அதற்குத் தாவீது: செருயாவின் குமாரரே, இன்று நீங்கள் எனக்குச் சத்துருக்களாகிறதற்கு, எனக்கும் உங்களுக்கும் என்ன? இன்று இஸ்ரவேலில் ஒருவன் கொல்லப்படலாமா? இன்று நான் இஸ்ரவேலின்மேல் ராஜாவானேன் என்று எனக்குத் தெரியாதா என்று சொல்லி,

2சாமு 19:23. ராஜா சீமேயியைப் பார்த்து: நீ சாவதில்லை என்று அவனுக்கு ஆணையிட்டான்.

தாவீது அப்சலோமுக்கு தப்பித்து யோர்தான் தேசத்திலும், எர்மோன் மலைகளிலும் இருந்தபோது, அவர் கலக்கத்தோடிருந்தார். அந்த சூழ்நிலையில் அவர் கர்த்தரையே நினைத்துக்கொண்டிருந்தார்.

"என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது; ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்" *(சங் 42:6).*

தாவீது இப்போது மகிமையோடு திரும்பி வருகிறார். மிகவும் சந்தோஷமாக யோர்தானைக் கடக்கிறார். சிறுமையிலிருந்த தாவீதை கர்த்தர் இப்போது உயர்த்தியிருக்கிறார். கர்த்தர் தாவீதின் சிறுமையை அவரைவிட்டு நீக்கிப்போட்டார். தாவீதும் அவரோடுகூட அவருடைய எல்லா ஊழியக்காரரும் யோர்தானைக் கடந்து எருசலேமுக்கு திரும்பி வர ஆயத்தமாகிறார்கள். அவர் யோர்தான் மட்டும் வந்தபோது, யூதாகோத்திரத்தார் தாவீதுக்கு எதிர்கொண்டு போகிறார்கள். அவர்கள் யோர்தானைக் கடக்கப்பண்ண தாவீதுக்கு உதவி செய்கிறார்கள். அவர்கள் கில்கால் மட்டும் வந்திருக்கிறார்கள். அவர்கள் தாவீது ராஜாவின் வீட்டாரை இக்கரைப்படுத்தவும், அவர் விரும்பும் காரியத்திற்கு உதவவும், ஒரு படகு இக்கரையிலே வந்திருக்கிறது *(2சாமு 19:18).*

தாவீது யோர்தான் மட்டும் வந்தபோது, அவரை அநேகர் வந்து சந்திக்கிறார்கள். அவர்களில் இரண்டுபேரை பற்றி இந்த வசனப்பகுதியில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவன் சீபா மற்றொருவன் சீமேயி.

சீபா மேவிபோசேத்தின் நிலங்களை பராமரிக்கிறவன். அவன் தன்னுடைய எஜமானின் நிலங்களை அபகரித்துக்கொள்ள திட்டமிட்டான். தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தாவீது ராஜாவிடம் மேவிபோசேத்தைப்பற்றி தப்பிதமான செய்திகளை சொன்னான்.

"அப்பொழுது ராஜா: உன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே என்று கேட்டதற்கு, சீபா ராஜாவை நோக்கி: எருசலேமில் இருக்கிறான்; இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப்பண்ணுவார்கள் என்றான் என்று சொன்னான். அப்பொழுது ராஜா சீபாவை நோக்கி: மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று என்றான். அதற்குச் சீபா: ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்க வேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன் என்றான்" (2சாமு 16:3,4).

தாவீதும் அவருடைய எல்லா ஊழிக்காரரும் யோர்தான் மட்டும் வந்தபோது, பகூரிம் ஊரானான பென்யமீனனாகிய கேராவின் மகன் சிமேயியும் தீவிரித்து, யூதா மனுஷரோடுங்கூடத் தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டுபோகிறான். அவனோடே பென்யமீன் மனுஷர் ஆயிரம்பேரும், சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபாவும், அவனோடேகூட அவனுடைய பதினைந்து குமாரரும், அவனுடைய இருபது வேலைக்காரரும் இருக்கிறார்கள்; அவர்கள் ராஜாவுக்கு முன்பாக யோர்தானை வேகமாய்ப் கடந்துபோகிறார்கள் (2சாமு 19:16,17).

தாவீதும், சவுலின் குமாரனாகிய யோனத்தானும் நெருங்கிய சிநேகிதர்கள். மேவிபோசேத் யோனத்தானுடைய குமாரன். தாவீது யோனத்தானுக்கு தயை செய்ய விரும்பி, மேவிபோசேத்தை தன்னுடைய அரண்மனையில், ராஜபோஜனம் பண்ணுவதற்கு அனுமதித்திருந்தார். தாவீது சவுலின் நிலங்களை மேவிபோசேத்திற்கு கொடுத்தார். அந்த நிலங்களை உழுது பயிரிட்டு பராமரிக்கும் வேலையை சீபாவுக்கு கொடுத்தார். சீபாவோ மேவிபோசேத்தைப் பற்றி தாவீது ராஜாவிடம் தப்பிதமான செய்தியை சொல்லி, மேவிபோசேத்தின் நிலங்கள் அனைத்தையும் தனக்கு சொந்தமாக்கிக்கொண்டான். தன்னுடைய சதியினால் தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இருந்த நல்ல சிநேகத்தைப் பிரித்துவிட்டான்.

இப்போது தாவீது எருசலேமுக்கு திரும்பி வர யோர்தான் மட்டும் வந்தபோது, சீபாவும் தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டு போகிறான். தாவீது எருசலேமுக்கு போகும்போது, அங்கே மேவிபோசேத்தைப் பார்ப்பார் என்றும், மேவிபோசேத் தன்னுடைய உண்மையான நிலமையை தாவீதுக்கு சொல்லிவிடுவான் என்றும், தன்னுடைய சதித்திட்டம் தாவீதுக்கு தெரியவரும் என்றும் சீபா பயப்படுகிறான். ஆகையினால் மேவிபோசேத் தாவீதைப் பார்ப்பதற்கு முன்பாக, சீபா தாவீதைப் பார்த்து, அவருடைய தயவைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறான்.

சீபா எதிர்பார்த்த பிரகாரமாக மேவிபோசேத்தும் தாவீதைப் பார்த்து, தன்னிடத்தில் தப்பிதம் இல்லையென்பதை தெளிவுபடுத்துகிறான். "சீபா ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் உமது அடியான்மேல் வீண்பழி சொன்னான்; ராஜாகிய என் ஆண்டவனோ தேவனுடைய தூதனைப்போல இருக்கிறார்; உமது பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறபடி செய்யும்" (2சாமு 19:27) என்று மேவிபோசேத் தாவீது ராஜாவிடம் சொல்லுகிறான்.

தாவீது யோர்தான் மட்டும் வந்தபோது, பகூரிம் ஊரானான பென்யமீனனாகிய கேராவின் மகன் சிமேயியும் தீவிரித்து, யூதா மனுஷரோடுங்கூடத் தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டுபோகிறான். சீமேயி பென்யமீன் கோத்திரத்தான். தாவீது அப்சலோமுக்கு தப்பித்து ஓடியபோது, சீமேயி பகூரிமிலே தாவீதைத் தூஷித்தான்.

"தாவீதுராஜா பகூரிம்மட்டும் வந்தபோது, இதோ, சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சீமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன் அங்கேயிருந்து புறப்பட்டு, தூஷித்துக் கொண்டே நடந்துவந்து, சகல ஜனங்களும், சகல பலசாலிகளும், தாவீதின் வலதுபுறமாகவும் இடதுபுறமாகவும் நடக்கையில், தாவீதின்மேலும், தாவீதுராஜாவுடைய சகல ஊழியக்காரர் மேலும் கற்களை எறிந்தான். சீமேயி அவனைத் தூஷித்து: இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்து போ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப்பண்ணினார்; கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் என்றான்" (2சாமு 16:5-8).

சீமேயி இப்போது தாவீதின் சமாதானத்தை தேடி வந்திருக்கிறான். அவன் தனியாக வராமல் யூதாமனுஷரோடுகூட தாவீதுக்கு எதிர்கொண்டு வந்திருக்கிறான். சீமேயியோடுகூட, பென்யமீன் மனுஷர் ஆயிரம்பேரும், சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபாவும், அவனோடேகூட அவனுடைய பதினைந்து குமாரரும், அவனுடைய இருபது வேலைக்காரரும் இருக்கிறார்கள் (2சாமு 19:17).

சீமேயியோடு கூடயிருக்கிற பென்யமீன் மனுஷர் ஆயிரம்பேரும் யுத்தவீரர்கள். அவர்கள் இப்போது தாவீது ராஜாவுக்கு சேவை செய்ய ஆயத்தமாய் வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதைப் பார்க்க வருவதற்கு முன்பாக, சீமேயி யூதாமனுஷரோடு வந்து, தாவீதைப் பார்ப்பதில் முந்திக்கொள்கிறான்.

சீமேயி ஏற்கெனவே எல்லோருக்கும் முன்பாக தாவீதைத் தூஷித்தவன். அவன் இப்போது எல்லோருக்கும் முன்பாக தாவீதைப் பார்க்க வருகிறான்.

கேராவின் குமாரனாகிய சீமேயி யோர்தானைக் கடக்கப்போகிற ராஜாவுக்கு முன்பாகத் தாழவிழுகிறான். சீமேயி தாவீது ராஜாவை நோக்கி: "என் ஆண்டவன் என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமலும், ராஜாவாகிய என் ஆண்டவன் எருசலேமிலிருந்து புறப்பட்டு வருகிற நாளிலே, உமது அடியான் செய்த துரோகத்தை ராஜா நினைக்காமலும், தமது மனதில் வைக்காமலும் இருப்பாராக" (2சாமு 19:18,19) என்று பணிவோடு சொல்லுகிறான்.

சீமேயி தாவீது ராஜாவிடம், "உமது அடியானாகிய நான் பாவஞ் செய்தேன் என்று அறிந்திருக்கிறேன்; இப்போதும், இதோ, ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு எதிர்கொண்டுவர, யோசேப்பு வீட்டார் அனைவருக்கும் நான் இன்று முந்திக்கொண்டேன்" (2சாமு 19:20) என்றும் சொல்லுகிறான்.

மற்றவர்கள் பார்க்காத இரகசியமான இடத்தில் சீமேயி தாவீது ராஜாவுக்கு முன்பாக தாழவிழவில்லை. தாவீதின் ஊழியக்காரரும், தன்னோடு கூட வந்திருக்கிற யூதாவின் மனுஷரும், பென்யமீன் மனுஷரும் பார்க்கும்போது, சீமேயி எல்லோருடைய கண்களுக்கும் முன்பாக, தாவீது ராஜாவுக்கு முன்பாக தாழவிழுகிறான். சீமேயி தாவீது ராஜாவை எல்லோருக்கும் முன்பாக தூஷித்தான். இப்போது அவன் எல்லோருக்கும் முன்பாக தாவீது ராஜாவிடம் மன்னிப்பு கேட்கிறான்.

"உமது அடியானாகிய நான் பாவம் செய்தேன் என்று அறிந்திருக்கிறேன்" என்று சீமேயி தாவீது ராஜாவிடம் தன்னுடைய பாவத்தை அங்கீகரித்து அறிக்கை செய்கிறான். தாவீது ராஜா தன்னுடைய அக்கிரமத்தை தன்மேல் சுமத்தாமல், தன்னை தயவாய் மன்னிக்கவேண்டுமென்று சீமேயி தாவீது ராஜாவிடம் பணிவாகக் கேட்டுக்கொள்கிறான்.

தாவீது சீமேயியின் துரோகத்தை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். தாவீது இரக்க குணமுள்ளவர். சீமேயியின் துரோகம் தாவீதோடு கூடயிருக்கிற எல்லோருக்கும் தெரியும். தாவீது சீமேயியை மன்னித்தாலும், அவர்கள் சீமேயியை மன்னிக்க ஆயத்தமாயில்லை. சீமேயிக்கு மரணதண்டனை கொடுக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

அப்பொழுது செருயாவின் குமாரனாகிய அபிசாய் தாவீது ராஜாவிடம், "கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைச் சீமேயி தூஷித்தபடியினால், அவனை அதற்காகக் கொல்லவேண்டாமா" (2சாமு 19:21) என்று சொல்லுகிறான். சீமேயிக்கு மரணதண்டனை கொடுக்கவேண்டுமென்று அபிசாய் சொல்லுகிறான். சீமேயி தாவீதைத் தூஷித்தபோது அபிசாய் அவனைக் கொன்றுபோட ஆயத்தமாயிருந்தான்.

"அப்பொழுது செருயாவின் குமாரன் அபிசாய் ராஜாவை நோக்கி: அந்தச் செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப்போடட்டுமே என்றான்" (2சாமு 16:9).

தாவீது ராஜா அபிசாயிக்கு சீமேயியைக் கொல்ல அப்போதும் அனுமதி கொடுக்கவில்லை. இப்போதும் அனுமதி கொடுக்கவில்லை. அபிசாய் தாவீது ராஜாவிடம், "சீமேயியை கொல்லவேண்டாமா" என்று கேட்கிறான்.

தாவீது அபிசாயிக்கு பிரதியுத்தரமாக, "செருயாவின் குமாரரே, இன்று நீங்கள் எனக்குச் சத்துருக்களாகிறதற்கு, எனக்கும் உங்களுக்கும் என்ன? இன்று இஸ்ரவேலில் ஒருவன் கொல்லப்படலாமா? இன்று நான் இஸ்ரவேலின்மேல் ராஜாவானேன் என்று எனக்குத் தெரியாதா" *(2சாமு 19:22)* என்று சொல்லுகிறார். தாவீது ராஜா சீமேயியைப் பார்த்து: "நீ சாவதில்லை" *(2சாமு 19:23)* என்று அவனுக்கு ஆணையிடுகிறார்.

தாவீது சீமேயியை பழிவாங்க விரும்பவில்லை. அபிசாய் சீமேயியை பழிவாங்க விரும்புகிறான். நம்முடைய சிநேகிதர்களிடத்தில் பழிவாங்கும் ஆவி இருக்குமென்றால், நாம் அவர்களுடைய கோபத்தைத் தணிப்பதற்கு முயற்சி பண்ணவேண்டும்.

தன்னிடத்தில் சரணடையும் ஜனங்களை மன்னிப்பது ராஜாவுக்கு அழகு. தாவீது ராஜா சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். அவர் சீமேயியைப் பார்க்கும்போது, அவனை ஒரு துரோகியாகப் பார்க்காமல், இஸ்ரவேல் தேசத்தில் அவனும் ஒரு பிரஜை என்று பார்க்கிறார். தாவீது எருசலேமுக்கு திரும்பிப்போகும் சந்தோஷத்திலிருக்கிறார். சந்தோஷமான இந்த நாளில் ஒருவரும் கொல்லப்படக்கூடாது என்பது தாவீதின் விருப்பம். சீமேயியை கொன்றுபோடாமல், அவனை மன்னிப்பதினால், தாவீதின் சந்தோஷம் அதிகரிக்கிறது.

தாவீது கர்த்தருடைய கிருபையை நினைவுகூருகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் தாவீதுக்கு அவருடைய ராஜ்யத்தை திரும்பவும் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபையினால், "இன்று நான் இஸ்ரவேலின்மேல் ராஜாவானேன்" என்று தாவீது சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு கிருபையும் இரக்கமும் காண்பித்திருக்கும்போது, தாவீது சீமேயிக்கு இரக்கம் காண்பிக்க விரும்புகிறார்.

கர்த்தர் தாவீதின் பாவத்திற்குத்தக்க தண்டனையைக் கொடுக்காமல், தமது கிருபையினால் தாவீதின் பாவங்களை மன்னித்தார். தாவீது இப்போது சீமேயியின் பாவங்களை மன்னிக்கிறார். தாவீது ராஜா சீமேயியைப் பார்த்து: "நீ சாவதில்லை" என்று அவனுக்கு ஆணையிடுகிறார். தாவீது தன்னுடைய வார்த்தைகளை ஆணையினால் உறுதிபடுத்துகிறார்.

தாவீதும் மேவிபோசேத்தும் 2சாமு 19:24-30

2சாமு 19:24. சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்தும் ராஜாவுக்கு எதிர்கொண்டுவந்தான்; ராஜா போனநாள்முதல், அவன் சமாதானத்தோடே திரும்பிவருகிற நாள் மட்டும், அவன் தன் கால்களைச் சுத்தம் பண்ணவுமில்லை, தன் தாடியைச் சவரம் பண்ணவுமில்லை; தன் வஸ்திரங்களை வெளுக்கவுமில்லை.

2சாமு 19:25. அவன் எருசலேமிலிருந்து ராஜாவுக்கு எதிர்கொண்டு வருகிறபோது, ராஜா அவனைப் பார்த்து: மேவிபோசேத்தே, நீ என்னோடு கூட வராமல்போனது என்ன என்று கேட்டான்.

2சாமு 19:26. அதற்கு அவன்: ராஜாவாகிய என் ஆண்டவனே, என் வேலைக்காரன் என்னை மோசம்போக்கினான்; உமது அடியானாகிய நான் முடவனானபடியினால், ஒரு கழுதையின்மேல் சேணம்வைத்து அதின்மேல் ஏறி, ராஜாவோடேகூடப் போகிறேன் என்று அடியேன் சொன்னேன்.

2சாமு 19:27. அவன் ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில்உமது அடியான்மேல் வீண்பழி சொன்னான்; ராஜாகிய என் ஆண்டவனோ தேவனுடைய தூதனைப்போல இருக்கிறார்; உமது பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறபடி செய்யும்.

2சாமு 19:28. ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு முன்பாக என் தகப்பன் வீட்டார் எல்லாரும் சாவுக்கு ஏதுவாயிருந்தார்களே ஒழிய, மற்றப்படி அல்ல; ஆனாலும் உமது பந்தியிலே சாப்பிடுகிறவர்களோடே உமது அடியேனை வைத்தீர்; இன்னும் நான் ராஜாவிடத்தில் முறையிட, இனி எனக்கு என்ன நியாயம் இருக்கிறது என்றான்.

2சாமு 19:29. அப்பொழுது ராஜா அவனைப் பார்த்து: உன் காரியத்தைக்குறித்து அதிகமாய்ப் பேசுவானேன்? நீயும் சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 19:30. அதற்கு மேவிபோசேத் ராஜாவை நோக்கி: ராஜாவாகிய என் ஆண்டவன் சமாதானத்தோடே தம்முடைய வீட்டிற்கு வந்திருக்கும்போது, அவனே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளட்டும் என்றான்.

தாவீது மகனாயீமிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வரும்போது, அநேகர் அவரை சந்திக்க வருகிறார்கள். முதலில் சீமேயி தாவீதைப் பார்க்க வந்தான். அதன் பின்பு மேவிபோசேத் அவரைப் பார்க்க வருகிறான்.

சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்தும் ராஜாவுக்கு எதிர்கொண்டுவருகிறான்; ராஜா போனநாள்முதல், அவர் சமாதானத்தோடே திரும்பிவருகிற நாள் மட்டும், மேவிபோசேத் தன் கால்களைச் சுத்தம் பண்ணவுமில்லை, தன் தாடியைச் சவரம் பண்ணவுமில்லை; தன் வஸ்திரங்களை வெளுக்கவுமில்லை *(2சாமு 19:24).*

தாவீது எருசலேமுக்கு திரும்பி வரும்போது யூதாகோத்திரத்தார் எல்லோரும் சந்தோஷமாயிருக்கிறார்கள். தாவீதின் சந்தோஷத்தில் மேவிபோசேத்தும் பங்குபெறுகிறான். தாவீது அப்சலோமுக்கு தப்பித்து ஓடினபோது மேவிபோசேத் தாவீதுக்காக வருத்தப்பட்டான். தன்னுடைய வருத்தத்திற்கு அடையாளமாக, மேவிபோசேத் தன் கால்களை சுத்தம்பண்ணாமல், தன் தாடியை சவரம்பண்ணாமல், தன் வஸ்திரங்களை வெளுக்காமலிருக்கிறான். அவன் தன்னையே வெறுத்து, தாவீதுக்காக துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறான். தாவீது ராஜாவின் நெருக்கங்களுக்காகவும், பாடுகளுக்காகவும், வேதனைகளுக்காகவும் மேவிபோசேத்தும் துக்கப்படுகிறான். இஸ்ரவேல் தேசத்திற்கு வந்த துன்பத்திற்காக, மேவிபோசேத்தும் மனவேதனைப்படுகிறான்.

மேவிபோசேத் எருசலேமிலிருந்து தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டு வருகிறான். தாவீது அவனைப் பார்த்து "மேவிபோசேத்தே நீ என்னோடே கூடவராமல் போனது என்ன" *(2சாமு 19:25)* என்று கேட்கிறார். தாவீது மேவிபோசேத்தை தன்னுடைய குடும்பத்தில் ஒருவனாகப் பாவித்தார். தாவீதின் பந்தியிலே சாப்பிடுகிறவர்களோடே அவனையும் சாப்பிட வைத்தார். ஆனாலும் தாவீது அப்சலோமுக்கு தப்பித்து ஓடியபோது, மேவிபோசேத் அவரோடு கூடப்போகவில்லை.

மேவிபோசேத்தின் வேலைக்காரனாகிய சீபா, அவனைப்பற்றி தாவீதிடம் பொல்லாப்பான காரியங்களை சொல்லியிருக்கிறான். சீபா மேவிபோசேத்தின்மீது வீண் பழி சொல்லியிருக்கிறான். சீபாவின் தந்திரம் மேவிபோசேத்திற்கும் தெரிந்திருக்கிறது. சீபா மேவிபோசேத்திற்கு சிநேகிதனாயிருக்கவேண்டும். ஆனால் அவனோ மேவிபோசேத்திற்கு சத்துருவாயிருக்கிறான்.

தாவீது அப்சலோமுக்கு தப்பித்து ஓடும்போது, மேவிபோசேத்தும் அவரோடுகூட ஓடிப்போக முயற்சி பண்ணினான். ஆனால் சீபா அதைத் தடைபண்ணிவிட்டான். மேவிபோசேத் கால்கள் முடமானவன். அவனால் நடக்க முடியாது. தாவீதோடு கூடப்போகவேண்டும் என்பதற்காக மேவிபோசேத் ஒரு கழுதையை ஆயத்தமாய் வைத்திருந்தான். மேவிபோசேத்தின் கோவேறு கழுதையை சீபா எடுத்துக்கொண்டு போய்விட்டான். தாவீது எருசலேமைவிட்டு தப்பித்துப்போகும்போது, மேவிபோசேத் ஒரு கழுதையின்மேல் சேணம் வைத்து அதின்மேல் ஏறி, ராஜாவோடே கூடப்போவதற்கு அவன் ஆயத்தமாயிருந்தான்.

மேவிபோசேத் சேபாவைப்பற்றியும், தான் தாவீதோடுகூடப்போக ஆயத்தமாயிருந்தது பற்றியும் அவரிடத்தில் சொல்லுகிறான். மேவிபோசேத் தாவீது ராஜாவிடம் "ராஜாவாகிய என் ஆண்டவனே, என் வேலைக்காரன் என்னை மோசம்போக்கினான்; உமது அடியானாகிய நான் முடவனானபடியினால், ஒரு கழுதையின்மேல் சேணம்வைத்து அதின்மேல் ஏறி, ராஜாவோடேகூடப் போகிறேன் என்று அடியேன் சொன்னேன். அவன் ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் உமது அடியான்மேல் வீண்பழி சொன்னான்" *(2சாமு 19:26,27)* என்று சொல்லுகிறான்.

மேவிபோசேத் தாவீதோடு கூடப்போவதற்கு, சேபாவின் உதவி தேவைப்படுகிறது. ஆனால் சேபாவோ, தன் எஜமானுக்கு உதவி செய்யாமல் அவனை வஞ்சிக்கிறான். தாவீது ராஜாவிடம் அவனைப்பற்றி வீண்பழி சொல்லுகிறான். சீபா தாவீது ராஜாவைப் பார்க்க வந்தபோது, அவர் அவனிடம், "உன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே" என்று கேட்டார். அதற்கு, சீபா ராஜாவை நோக்கி: "எருசலேமில் இருக்கிறான்; இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப்பண்ணுவார்கள் என்றான்" *(2சாமு 16:3)* என்று சொன்னான்.

சீபா சொன்னதை கேட்டபோது, தாவீதுக்கு மேவிபோசேத்தின்மீது கோபமுண்டாயிற்று. தாவீது ராஜாவின் கோபம் மேவிபோசேத்திற்கும் தெரிந்திருக்கிறது. ஆகையினால் அவன் ராஜாவோடே கூடப்போகவில்லை. ராஜாவோடு கூடப்போவதற்கு, சீபாவும் அவனுக்கு உதவி செய்யவில்லை.

மேவிபோசேத் தாவீதிடம் தன்னுடைய நிலமையை சொல்லுகிறான். அதன் பின்பு, மேவிபோசேத் தாவீது ராஜாவிடம் "ராஜாகிய என் ஆண்டவனோ தேவனுடைய தூதனைப்போல இருக்கிறார்; உமது பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறபடி செய்யும்" *(2சாமு 19:27)* என்று சொல்லி தன்னை தாவீதின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறான்.

தாவீது அப்சலோமுக்கு தப்பித்து ஓடிப்போகும்போது, அவருடைய ராஜ்யத்தை அபகரித்துக்கொள்ளவேண்டும் என்னும் சதிஆலோசனை மேவிபோசேத்திடம் இல்லை. மேவிபோசேத் தாவீது ராஜாவிடம், தன்னைப்பற்றியும் தன்னுடைய தகப்பன் வீட்டாரைப்பற்றியும் எடுத்துச் சொல்லுகிறான்.

மேவிபோசேத் தாவீது ராஜாவிடம், "ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு முன்பாக என் தகப்பன் வீட்டார் எல்லாரும் சாவுக்கு ஏதுவாயிருந்தார்களே ஒழிய, மற்றப்படி அல்ல; ஆனாலும் உமது பந்தியிலே சாப்பிடுகிறவர்களோடே உமது அடியேனை வைத்தீர்; இன்னும் நான் ராஜாவிடத்தில் முறையிட, இனி எனக்கு என்ன நியாயம் இருக்கிறது" *(2சாமு 19:28)* என்று கேட்கிறான்.

தானும் தன்னுடைய தகப்பன் வீட்டாரும் தாவீதின் தயவிலிருப்பதை மேவிபோசேத் அங்கீகரிக்கிறான். தாவீது ஞானமுள்ளவர். அவர் தேவனுடைய தூதனைப்போலிருக்கிறார். அவருக்கு நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசம் தெரியும். ஆகையினால் தாவீது தன்னுடைய பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறபடி தனக்கு செய்யட்டும் என்று மேவிபோசேத் தாவீதின் விருப்பத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறான்.

சீபா மேவிபோசேத்தைப்பற்றி தாவீதிடம் பொல்லாத காரியங்களை சொன்னபோது, தாவீது ராஜா சீபாவை நோக்கி, "மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று" *(2சாமு 16:4)* என்று சொல்லியிருந்தார். இப்போது தாவீது தான் சொன்ன தீர்ப்பை திருத்துகிறார்.

தாவீது ஏற்கெனவே சவுலுக்கும் அவருடைய வீட்டார் எல்லாருக்கும் இருந்த யாவையும், மேவிபோசேத்திற்கு கொடுத்துவிட்டார். சீபா தன் குமாரரையும், தன் வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு, மேவிபோசேத்தின் நிலத்தைப் பயிரிட்டு அதின் பலனை சேர்க்கவேண்டும் *(2சாமு 9:10)*. இது தாவீது சீபாவுக்கு கொடுத்த கட்டளை. அதன் பின்பு தாவீது மேவிபோசேத்தின் நிலங்களை சீபாவுக்கு கொடுத்துவிட்டார். தாவீது சீபாவுக்கு கொடுத்த நிலத்தை மறுபடியுமாய், இரண்டு பங்காக வைத்து, சீபாவுக்கு ஒரு பங்கும், மேவிபோசேத்திற்கு ஒரு பங்குமாக பிரித்துக்கொடுக்கிறார்.

அப்பொழுது தாவீது ராஜா மேவிபோசேத்தைப் பார்த்து: "உன் காரியத்தைக்குறித்து அதிகமாய்ப் பேசுவானேன்? நீயும் சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன்" (2சாமு 19:29) என்று சொல்லுகிறார். தாவீது சீபாவைத் தண்டிக்கவில்லை. அவன் தன் எஜமானுக்கு விரோதமாக பொல்லாப்பு செய்திருந்தாலும், சீபா தண்டனைக்கு தப்பித்துக்கொள்கிறான்.

மேவிபோசேத்திற்கோ, தன்னுடைய நிலத்தின்மீது பிரியமில்லை. அவன் தாவீது ராஜாவின்மீது பிரியமாயிருக்கிறான். தாவீது ராஜா மறுபடியும் எருசலேமுக்கு வந்தது அவனுக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது. மேவிபோசேத் தாவீது ராஜாவின் பந்தியிலே சாப்பிடுகிறவன். ஆகையினால் அவனுக்கு நிலம் எதுவும் தேவையில்லை. சீபா தனக்கு கேடு செய்திருந்தாலும், மேவிபோசேத் சீபாவை ஆசீர்வதிக்கிறான். மேவிபோசேத் கால்கள் முடமானவனாகயிருந்தாலும், அவனுடைய இருதயம் முடமாகவில்லை.

மேவிபோசேத் தாவீது ராஜாவை நோக்கி: "ராஜாவாகிய என் ஆண்டவன் சமாதானத்தோடே தம்முடைய வீட்டிற்கு வந்திருக்கும்போது, அவனே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளட்டும்" (2சாமு 19:30) என்று சொல்லுகிறான். தனக்கு தாவீது ராஜாவின் அன்பும் ஆதரவும் கிடைத்தால் அதுவே போதுமானது என்று மேவிபோசேத் நினைக்கிறான்.

தாவீதும் பர்சிலாவும் 2சாமு 19:31-39

2சாமு 19:31. கீலேயாத்தியனாகிய பர்சிலாவும் ரோகிலிமிலிருந்து வந்து, யோர்தான்மட்டும் ராஜாவை வழிவிட்டனுப்ப, அவனோடேகூட யோர்தானின் துறைமட்டும் கடந்துவந்தான்.

2சாமு 19:32. பர்சிலா எண்பது வயதுசென்ற கிழவனாயிருந்தான்; ராஜா மகனாயீமிலே தங்கியிருக்குமட்டும் அவனைப் பராமரித்து வந்தான்; அவன் மகா பெரிய மனுஷனாயிருந்தான்.

2சாமு 19:33. ராஜா பர்சிலாவை நோக்கி: நீ என்னோடேகூடக் கடந்துவா, எருசலேமிலே உன்னை என்னிடத்தில் வைத்து பராமரிப்பேன் என்றான்.

2சாமு 19:34. பர்சிலா ராஜாவைப் பார்த்து: நான் ராஜாவோடேகூட எருசலேமுக்கு வர, நான் இன்னும் உயிரோடிருக்கும் ஆயுசின் நாட்கள் எம்மாத்திரம்?

2சாமு 19:35. இப்பொழுது நான் எண்பது வயதுள்ளவன்; இனி நலமானது இன்னதென்றும் தீதானது இன்னதென்றும் எனக்குத் தெரியுமோ? புசிக்கிறதும் குடிக்கிறதும் உமது அடியேனுக்கு ருசிகரமாயிருக்குமோ? சங்கீதக்காரர் சங்கீதக்காரிகளுடைய சத்தத்தை இனிக் கேட்கக்கூடுமோ? உமது அடியேனாகிய நான் இனி ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பாரமாயிருக்கவேண்டியது என்ன?

2சாமு 19:36. அடியேன் கொஞ்சதூரம் யோர்தான்மட்டும் ராஜாவோடேகூட வருவேன்; அதற்கு ராஜா இவ்வளவு பெரிய உபகாரத்தை எனக்குச் செய்யவேண்டியது என்ன?

2சாமு 19:37. நான் என் ஊரிலே மரித்து, என் தாய் தகப்பன்மார் கல்லறையிலே அடக்கம்பண்ணப்படும்படிக்கு, உமது அடியான் திரும்பிப்போகட்டும்; ஆனாலும், இதோ, உமது அடியானாகிய கிம்காம் ராஜாவாகிய என் ஆண்டவனோடேகூட வருவான்; உம்முடைய பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்யும் என்றான்.

2சாமு 19:38. அப்பொழுது ராஜா: கிம்காம் என்னோடேகூட வரட்டும்; உன் பார்வைக்கு நலமானபடியே நான் அவனுக்கு நடப்பித்து, நீ என்னிடத்தில் வேண்டிக்கொள்வதையெல்லாம் நான் உனக்குச் செய்வேன் என்றான்.

2சாமு 19:39. ஜனங்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்தபோது, ராஜா பர்சிலாவை முத்தமிட்டு அவனை ஆசீர்வதித்து, தானும் கடந்துபோனான்; அவனோ தன்னிடத்திற்குத் திரும்பிப்போய்விட்டான்.

பர்சிலா ஒரு கீலேயாத்தியர். இவர் ரோகிலிம் பட்டணத்தைச் சேர்ந்தவர். இவர் இந்தப் பட்டணத்தில் பிரதானமானவர். ரோகிலிம் பட்டணம் மக்னாயீம் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ளது. தாவீது மிகுந்த உபத்திரவத்தில் மக்னாயீம் பட்டணத்திலிருந்தார். அப்போது பர்சிலா தாவீதுக்கு ஏராளமான உதவிகளை செய்தார். அவருக்கு மிகவும் ஆதரவாயிருந்தார்.

தாவீதுக்கும் அப்சலோமுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில், அப்சலோம் ஜெயித்திருந்தால், அவன் நிச்சயமாகவே பர்சிலாவைத் தண்டித்திருப்பான். பர்சிலா அந்த அளவுக்கு தாவீதுக்கு உதவி செய்திருக்கிறார். இந்த யுத்தத்தில் தாவீதின் சேவகர் ஜெயம் பெற்றதினால், பர்சிலாவும் ஆபத்துக்கு தப்பிக்கிறார்.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தவர். பர்சிலா தாவீதின் ராஜாசனத்தை அங்கீரித்து, அவரைக் கனம்பண்ணுகிறார். கீலேயாத்தியனாகிய பர்சிலாவும் ரோகிலிமிலிருந்து வந்து, யோர்தான்மட்டும் ராஜாவை வழிவிட்டனுப்ப, அவரோடேகூட யோர்தானின் துறைமட்டும் கடந்துவருகிறார். பர்சிலா எண்பது வயதுசென்ற கிழவனாயிருக்கிறார்; தாவீது ராஜா மக்னாயீமிலே தங்கியிருக்குமட்டும் பர்சிலா அவரைப் பராமரித்து வந்தார்; பர்சிலா மகா பெரிய மனுஷனாயிருக்கிறார் (2சாமு 19:31,32).

கர்த்தர் பர்சிலாவை ஆசீர்வதித்திருக்கிறார். அவருக்கு ஏராளமான நிலங்கள் இருக்கிறது. அவர் ரோகிலிமில் மகா பெரிய மனுஷனாயிருக்கிறார். அவர் ஒரு ஐசுவரியவான். பர்சிலா தன்னுடைய ஐசுவரியத்தை நல்ல காரியங்களுக்காக செலவு பண்ணுகிறார். ஒருவனுக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தாலும், அவன் யாருக்கும் உதவி செய்யாத கஞ்சனாகயிருந்தால், அவனுடைய சொத்து அவனுக்கும் ஆசீர்வாதமாயிருக்காது. அது பிறருக்கும் ஆசீர்வாதமாயிருக்காது.

தாவீது ராஜாவும் பர்சிலாவை நேசிக்கிறார். தாவீது மக்னாயீமிலிருந்து எருசலேமுக்கு திரும்பிப்போகும்போது, பர்சிலாவையும் தன்னோடுகூட வருமாறு அழைக்கிறார். தாவீது ராஜா பர்சிலாவை நோக்கி: "நீ என்னோடேகூடக் கடந்துவா, எருசலேமிலே உன்னை என்னிடத்தில் வைத்து பராமரிப்பேன்" (2சாமு 19:33) என்று சொல்லுகிறார்.

எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனையில், பர்சிலாவும் தன்னோடு கூடயிருக்கவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். பர்சிலாவின் ஆலோசனைகளும் சிநேகமும் தாவீதுக்கு தேவைப்படுகிறது. தாவீது மக்னாயீமிலிருந்தபோது, பர்சிலா அவருக்கு ஏராளமான உதவிகளை செய்திருக்கிறார். அவர் தனக்கு செய்த உதவிகளுக்கு கைமாறாக, தாவீது அவருக்கு எருசலேமிலே உதவி செய்ய விரும்புகிறார். தாவீது பர்சிலாவை எருசலேமிலே வைத்து பராமரிக்க விரும்புகிறார்.

பர்சிலாவோ தாவீது ராஜாவுக்கு பாரமாயிருக்க விரும்பவில்லை. தாவீது தன்னை அன்போடு அழைத்தாலும், பர்சிலா அவருடைய அழைப்பை நிராகரித்துவிடுகிறார். தாவீது ராஜாவின் அன்பான அழைப்பு பர்சிலாவுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

தாவீது எருசலேமிலே ராஜாங்க காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பார். தன்னுடைய ராஜரீக கடமைகளுக்கு மத்தியில், தாவீது பர்சிலாவையும் எருசலேமில் வைத்து பராமரிக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் பர்சிலாவோ தாவீதுக்கு பாரமாயிருக்க விரும்பவில்லை. தாவீது தன்னுடைய முழுநேரத்தையும், முழுகவனத்தையும், இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தின்மீது செலுத்த வேண்டும் என்றும் பர்சிலா விரும்புகிறார்.

பர்சிலா ராஜாவைப் பார்த்து; "நான் ராஜாவோடேகூட எருசலேமுக்கு வர, நான் இன்னும் உயிரோடிருக்கும் ஆயுசின் நாட்கள் எம்மாத்திரம்? இப்பொழுது நான் எண்பது வயதுள்ளவன்; இனி நலமானது இன்னதென்றும் தீதானது இன்னதென்றும் எனக்குத் தெரியுமோ? புசிக்கிறதும் குடிக்கிறதும் உமது அடியேனுக்கு ருசிகரமாயிருக்குமோ? சங்கீதக்காரர் சங்கீதக்காரிகளுடைய சத்தத்தை இனிக் கேட்கக்கூடுமோ? உமது அடியேனாகிய நான் இனி ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பாரமாயிருக்கவேண்டியது என்ன?" *(2சாமு 19:34,35)* என்று கேட்கிறார்.

பர்சிலா மிகவும் வயதானவராயிருப்பதினால், அவரால் எளிதாக பிரயாணம் பண்ண முடியாது. தாவீது ராஜாவின் அரண்மனை சுகத்தை அவரால் அனுபவிக்கவும் முடியாது. பர்சிலா எண்பது வயது கிழவனாராயிருப்பதினால், அவர் தன்னுடைய மரணத்தைக் குறித்து யோசிக்கிறார். தன்னுடைய மரணகாலம் சமீபித்திருப்பதினால், பர்சிலா நீண்டதூரம் பிரயாணம் பண்ண விரும்பவில்லை.

பர்சிலா தாவீதிடம் தன்னுடைய மரணத்தைப்பற்றியும் சொல்லுகிறார். பர்சிலா தாவீது ராஜாவைப் பார்த்து "அடியேன் கொஞ்சதூரம் யோர்தான்மட்டும் ராஜாவோடேகூட வருவேன்; அதற்கு ராஜா இவ்வளவு பெரிய உபகாரத்தை எனக்குச் செய்யவேண்டியது என்ன? நான் என் ஊரிலே மரித்து, என் தாய் தகப்பன்மார் கல்லறையிலே அடக்கம்பண்ணப்படும்படிக்கு, உமது அடியான் திரும்பிப்போகட்டும்" *(2சாமு 19:36,37)* என்று சொல்லுகிறார்.

கிம்காம் என்பவன் பர்சிலாவின் குமாரன். தாவீதோடுகூட தன்னால் எருசலேமுக்கு போகமுடியாவிட்டாலும், பர்சிலா தன்னுடைய குமாரன் கிம்காமை, தாவீதோடுகூட எருசலேமுக்கு அனுப்ப விரும்புகிறார். பர்சிலா தாவீது ராஜாவைப் பார்த்து "இதோ, உமது அடியானாகிய கிம்காம் ராஜாவாகிய என் ஆண்டவனோடேகூட வருவான்; உம்முடைய பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்யும்" *(2சாமு 19:37)* என்று கேட்கிறார்.

கிம்காம் தன்னோடு கூட வருவதை தாவீது அங்கீகரிக்கிறார். தாவீது ராஜா பர்சிலாவை நோக்கி, "கிம்காம் என்னோடேகூட வரட்டும்; உன் பார்வைக்கு நலமானபடியே நான் அவனுக்கு நடப்பித்து, நீ என்னிடத்தில் வேண்டிக்கொள்வதையெல்லாம் நான் உனக்குச் செய்வேன்" *(2சாமு 19:38)* என்று சொல்லுகிறார்.

ஜனங்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்துபோகிறார்கள். அப்போது, தாவீது ராஜா பர்சிலாவை முத்தமிட்டு அவரை ஆசீர்வதிக்கிறார். அதன் பின்பு தாவீது யோர்தானை கடந்துபோகிறார்; பர்சிலா தன்னிடத்திற்குத் திரும்பிப்போய்விடுகிறார் *(2சாமு 19:39)*.

தாவீது பர்சிலாவை தன்னுடைய அன்பான முத்தத்தோடும், பரிசுத்தமான ஆசீர்வாதத்தோடும் வழியனுப்பி வைக்கிறார். பர்சிலா தனக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, தாவீது அவருக்காக கர்த்தரிடத்தில் ஜெபித்து, அவரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதித்து வழியனுப்பி வைக்கிறார். தாவீது பர்சிலாவிடம் "நீ என்னிடத்தில் வேண்டிக்கொள்வதையெல்லாம் நான் உனக்கு செய்வேன்" *(2சாமு 19:38)* என்று வாக்குப்பண்ணுகிறார்.

தாவீது தன்னோடுகூட, பர்சிலாவின் குமாரனாகிய கிம்காமையும் எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு போகிறார். தாவீது ராஜா யோர்தானைக் கடந்து கில்கால் மட்டும் போகிறார். கிம்காம் தாவீதோடேகூட கடந்து வருகிறான் *(2சாமு 19:39)*.

பர்சிலா தாவீது ராஜாவிடத்தில், எருசலேமுக்கு அருகாமையில் தனக்கு ஒரு ஸ்தலம் வேண்டும் என்று கேட்டிருக்கவேண்டும். தாவீதின் நகரமாகிய பெத்லகேமுக்கு அருகாமையிலுள்ள ஒரு ஊருக்கு "கிம்காமின் பேட்டை" என்று பேரிடப்பட்டிருக்கிறது. இந்தப் பேட்டை தாவீதின் பூர்வீகத்து நிலத்திலிருந்து, கிம்காமுக்கு கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் மனுஷரும் யூதாமனுஷரும் 2சாமு 19:40-43

2சாமு 19:40. ராஜா கடந்து, கில்கால்மட்டும் போனான்; கிம்காம் அவனோடேகூடக் கடந்துவந்தான்; யூதா ஜனம் அனைத்தும், இஸ்ரவேலில் பாதிஜனமும், ராஜாவை இக்கரைப்படுத்தி வந்தபின்பு,

2சாமு 19:41. இதோ, இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவை நோக்கி: எங்கள் சகோதரராகிய யூதா மனுஷர் திருட்டளவாய் உம்மை அழைத்துவந்து, ராஜாவையும், அவர் வீட்டாரையும், அவரோடேகூட இருக்கிற தாவீதின் மனுஷர் அனைவரையும், யோர்தானைக் கடக்கப்பண்ணினது என்ன என்றார்கள்.

2சாமு 19:42. அப்பொழுது யூதா மனுஷர் எல்லாரும் இஸ்ரவேல் மனுஷருக்குப் பிரதியுத்தரமாக: ராஜா எங்களைச் சேர்ந்தவரானபடியினால் இதைச் செய்தோம்; இதற்காக நீங்கள் கோபிப்பானேன்? நாங்கள் ராஜாவின் கையிலே ஏதாகிலும் வாங்கித் தின்றோமோ? எங்களுக்கு வெகுமானம் கொடுக்கப்பட்டதோ என்றார்கள்.

2சாமு 19:43. இஸ்ரவேல் மனுஷரோ யூதா மனுஷருக்குப் பிரதியுத்தரமாக: ராஜாவினிடத்தில் எங்களுக்குப் பத்துப்பங்கு இருக்கிறது; உங்களைப்பார்க்கிலும் எங்களுக்குத் தாவீதினிடத்தில் அதிக உரிமை உண்டு; பின்னை ஏன் எங்களை அற்பமாய் எண்ணினீர்கள்; எங்கள் ராஜாவைத் திரும்ப அழைத்துவரவேண்டும் என்று முந்திச் சொன்னவர்கள் நாங்கள் அல்லவா என்றார்கள்; ஆனாலும் இஸ்ரவேல் மனுஷரின் பேச்சைப்பார்க்கிலும் யூதா மனுஷரின் பேச்சு பலத்தது.

தாவீது யோர்தான் நதியண்டையில் வந்தபோது, யூதாவின் மனுஷர் மாத்திரமே அவரோடு கூடயிருந்தார்கள். அவர்கள் மாத்திரமே தாவீதுக்கு உதவி செய்தார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும் யோர்தானைக் கடப்பதற்கு, யூதாமனுஷர் அதிக உதவி செய்தார்கள். இஸ்ரவேல் மனுஷர் யோர்தானின் அக்கரைக்கு வரவில்லை.

தாவீது யோர்தானைக் கடந்து கில்கால் மட்டும் வருகிறார். கில்கால் யோர்தானுக்கு இக்கரையிலுள்ள முதலாவது பட்டணம். யூதாஜனம் அனைத்தும், இஸ்ரவேலின் பாதிஜனமும் ராஜாவை இக்கரைப்படுத்தியிருக்கிறார்கள். ராஜா யோர்தானின் இக்கரையிலுள்ள கில்கால் மட்டும் வந்திருக்கிறார்.

தாவீது ராஜா கில்காலுக்கு வந்தபோது, இதோ, இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தாவீது ராஜாவினிடத்தில் வந்து, அவரை நோக்கி: "எங்கள் சகோதரராகிய யூதா மனுஷர் திருட்டளவாய் உம்மை அழைத்துவந்து, ராஜாவையும், அவர் வீட்டாரையும், அவரோடேகூட இருக்கிற தாவீதின் மனுஷர் அனைவரையும், யோர்தானைக் கடக்கப்பண்ணினது என்ன" (2சாமு 19:41) என்று கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் மனுஷர் தாவீதை சந்திக்க வருவதற்கு முன்பாக, யூதாமனுஷர் தாவீதை சந்தித்து முந்திக்கொள்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் மனுஷருக்கும், யூதாமனுஷருக்கும் இடையே வாக்குவாதமுண்டாயிற்று. யூதாமனுஷர் தங்களுக்கு அறிவிக்காமலேயே, தாவீது ராஜாவை போய் சந்தித்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் தாவீதை யோர்தானைக் கடக்கப்பண்ணியிருக்கிறார்கள் என்றும், அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து தங்களை ஒதுக்கி வைத்துவிட்டார்கள் என்றும் இஸ்ரவேல் மனுஷர் விவாதம்பண்ணுகிறார்கள்.

தாவீது ராஜா தன்னுடைய ஆசாரியராகிய சாதோக், அபியத்தார் ஆகிய இருவரையும் யூதாமனுஷரிடத்தில் அனுப்பினார். தாவீது ஆசாரியர்கள் மூலமாக யூதாமனுஷருக்கு தன்னுடைய செய்தியை சொல்லியனுப்பினார். இந்த சம்பவம் இஸ்ரவேல் மனுஷருக்கு தெரியாது.

தாவீது ராஜா யோர்தானைக் கடந்து எருசலேமுக்கு வரப்போகிறார் என்னும் செய்தி தங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தால், தாவீது ராஜாவை வரவேற்க தாங்களும் ஏற்ற காலத்திலே வந்திருப்போம் என்று இஸ்ரவேல் மனுஷர் வாக்குவாதம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் மனுஷர் தாவீது ராஜாவிடம் விவாதம்பண்ணுவதை யூதாமனுஷர் கவனமாய்க் கேட்கிறார்கள். தாவீது ராஜா அவர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லுவதற்கு முன்பாக, யூதாமனுஷர் அவர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

அப்பொழுது யூதா மனுஷர் எல்லாரும் இஸ்ரவேல் மனுஷருக்குப் பிரதியுத்தரமாக: "ராஜா எங்களைச் சேர்ந்தவரானபடியினால் இதைச் செய்தோம்; இதற்காக நீங்கள் கோபிப்பானேன்? நாங்கள் ராஜாவின் கையிலே ஏதாகிலும் வாங்கித் தின்றோமோ? எங்களுக்கு வெகுமானம் கொடுக்கப்பட்டதோ" *(2சாமு 19:42)* என்று சொல்லுகிறார்கள்.

தங்கள்மீது இஸ்ரவேல் மனுஷர் சொல்லும் குற்றச்சாட்டுக்களை யூதாமனுஷர் மறுக்கிறார்கள். தாவீது எருசலேமுக்கு திரும்பி வருவதினால், தாங்கள் அவரிடத்திலிருந்து எந்த ஆதாயத்தையும் எதிர்பார்க்கவில்லை என்பதை யூதா மனுஷர் உறுதிபண்ணுகிறார்கள்.

ஆனால் இஸ்ரவேல் மனுஷரோ, ஆதாயத்தைத் தேடியே, தாவீதைப் பார்க்க வந்திருப்பதாக, யூதா மனுஷர் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

யூதாமனுஷர் தங்களுக்கு விரோதமாகச் சொல்லும் குற்றச்சாட்டுக்களை, இஸ்ரவேல் மனுஷர் ஏற்றுக்கொள்ளவில்லை. இஸ்ரவேல் மனுஷரோ யூதா மனுஷருக்குப் பிரதியுத்தரமாக: "ராஜாவினிடத்தில் எங்களுக்குப் பத்துப்பங்கு இருக்கிறது; உங்களைப்பார்க்கிலும் எங்களுக்குத் தாவீதினிடத்தில் அதிக உரிமை உண்டு; பின்னை ஏன் எங்களை அற்பமாய் எண்ணினீர்கள்; எங்கள் ராஜாவைத் திரும்ப அழைத்துவரவேண்டும் என்று முந்திச் சொன்னவர்கள் நாங்கள் அல்லவா" *(2சாமு 19:43)* என்று சொல்லுகிறார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் மனுஷரின் பேச்சைப்பார்க்கிலும் யூதா மனுஷரின் பேச்சு பலக்கிறது. தாவீது ராஜா யூதா மனுஷருக்கு ஆதரவாயிருக்கிறார். அவர் தன்னுடைய கோத்திரத்தார் மீது பிரியமாயிருக்கிறார். தாவீதே யூதாமனுஷரை அழைத்து வந்தவர். ஆகையினால் யூதாமனுஷரின் பேச்சு, தாவீதுக்கு முன்பாக பலக்கிறது. இஸ்ரவேல் மனுஷருடைய பேச்சு பலவீனமாயிற்று.

20 அதிகாரம்

தாவீதுக்கு ஒரு பிரச்சனை முடிந்தாலும் மற்றொரு பிரச்சனை வருகிறது. அவர் எருசலேமுக்குப்போய் சேருவதற்கு முன்பாகவே, சேபா என்பவன் தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான் *(2சாமு 20:1,2).*

தாவீது எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, முதல் வேலையாக தன்னுடைய மறுமனையாட்டிகளை, ஒரு காவல்வீட்டில் வைத்து பராமரிக்கிறார் *(2சாமு 20:3).*

சேபாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண, அமாசா ஒரு சேனையை ஆயத்தம் பண்ணவேண்டுமென்று தாவீது அவனுக்கு கட்டளை கொடுக்கிறார். ஆனால் அமாசாவோ தனக்கு குறித்த காலத்திலே வராமல் தாமதிக்கிறான் *(2சாமு 20:4-6).* தாவீதின் படைத்தளபதிகளில் ஒருவனாகிய யோவாப் என்பவன், அமாசாவைக் கொன்றுபோடுகிறான் *(2சாமு 20:7-13).*

தாவீதுக்கு விரோதமாக கலகம்பண்ணின சேபா என்பவன் ஆபேல் பட்டணத்திற்குள் புகுந்து ஒளிந்துகொள்கிறான் *(2சாமு 20:14,15).* ஆபேல் பட்டணத்து மனுஷர் சேபாவின் தலையை வெட்டி யோவாபினிடத்தில் போடுகிறார்கள். கலகம் ஒடுக்கப்படுகிறது *(2சாமு 20:16-22).*

தாவீதின் மந்திரிகள், சம்பிரதி, ஆசாரியர், பிரதானி ஆகியோரைப்பற்றிய விவரம் *(2சாமு 20:23-26).*

சேபாவின் கலகம்
2சாமு 20:1,2

2சாமு 20:1. அப்பொழுது பென்யமீன் மனுஷனான பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன் ஒருவன் தற்செயலாய் அங்கே இருந்தான்; அவன் எக்காளம் ஊதி: எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை; இஸ்ரவேலே, நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுங்கள் என்றான்.

2சாமு 20:2. அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தாவீதை விட்டுப் பின்வாங்கி, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்பற்றிப் போனார்கள்; யோர்தான் தொடங்கி எருசலேம் மட்டுமுள்ள யூதா மனுஷர் தங்கள் ராஜாவைச் சார்ந்திருந்தார்கள்.

அப்சலோமுக்கு விரோதமான யுத்தத்திலே தாவீதுக்கு ஜெயமுண்டாயிற்று. ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தில் குழப்பம் ஏற்படுகிறது. தாவீதுக்கு விரோதமாக கலகமுண்டாகிறது. தாவீதின் குடும்பத்திலே பிரச்சனைகள் உண்டாகிறது.

தாவீது யோர்தானைக் கடந்து இக்கரைப்பட்டிருக்கிறார். தாவீதும் அவருடைய மனுஷரும் யோர்தானைக் கடக்க யூதாமனுஷர் உதவி செய்கிறார்கள். யோர்தானுக்கு இக்கரையிலே, கில்காலில், இஸ்ரவேல் மனுஷர் தாவீதை சந்திக்க வருகிறார்கள். இஸ்ரவேல் மனுஷருக்கும், யூதாமனுஷருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று.

அப்பொழுது பென்யமீன் மனுஷனான பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன் ஒருவன் தற்செயலாய் அங்கே இருக்கிறான்; அவன் எக்காளம் ஊதி: "எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை; இஸ்ரவேலே, நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுங்கள்" *(2சாமு 20:1)* என்று சொல்லுகிறான்.

தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இருதயமாயிருக்கிறது. சேபாவோ பேலியாளின் மகனாயிருக்கிறான். தாவீது கர்த்தருடைய மனுஷன். சேபாவோ பேலியாளின் மனுஷன்.

விசுவாசிகளாகிய நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், நம்மைச் சுற்றிலும் சேபாவைப்போல பேலியாளின் மனுஷர் இருப்பார்கள். அவர்கள் மூலமாக நமக்கு பிரச்சனைகளுக்குமேல் பிரச்சனைகள் வரும். பேலியாளின் மனுஷரைப் பார்த்து நாம் ஆச்சரியப்படக்கூடாது. முறிந்த எலும்புகள் சரியாக ஒட்ட வைக்கப்பட்டாலும், அதிலும் சிறிது பிசகு காணப்படும்.

சேபா பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இவன் எப்பிராயீம் பர்வதத்தானாயிருக்கிறான் *(2சாமு 20:21)*. சீமேயி, சேபா, சவுல் ஆகிய எல்லோருமே பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். பென்யமீன் கோத்திரத்தாருக்கும் தாவீதின் வீட்டாருக்கும் பூர்வகாலத்து பகை இருக்கிறது. சவுல் தாவீதை கொன்றுபோட வகைதேடினார். சீமேயி தாவீதுக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைச் சொன்னான். இப்போது சேபா தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

யூதாவின் மனுஷரும், இஸ்ரவேல் மனுஷரும் அற்ப காரியத்திற்காக வாக்குவாதம்பண்ணுகிறார்கள். தாவீது ராஜாவை எருசலேமுக்கு யார் அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்பதில் அவர்களுக்குள் பிரச்சனை உண்டாயிற்று. யூதாவின் மனுஷர், இஸ்ரவேல் மனுஷரிடத்தில், "தாவீது ராஜா எங்களை சேர்ந்தவரானபடியினால் இதைச் செய்தோம்" *(2சாமு 19:42)* என்று சொன்னார்கள்.

யூதாவின் மனுஷர் சொன்ன வார்த்தைகளை இஸ்ரவேல் மனுஷர் தப்பிதமாகப் புரிந்துகொள்கிறார்கள். தாவீது யூதாவின் மனுஷரை சேர்ந்தவராக இருக்கும்போது, "எங்களுக்கு தாவீதினிடத்தில் பங்குமில்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்கு சுதந்தரமுமில்லை" என்று சேபா சொல்லுகிறான்.

சேபா இதற்கு முன்பு அப்சலோமோடு சேர்ந்து, தாவீதுக்கு விரோதமாக கலகம் செய்திருக்கவேண்டும். இஸ்ரவேல் மனுஷர் யூதாமனுஷருக்கு விரோதமாகவும், தாவீதுக்கு விரோதமாகவும் வாக்குவாதம் பண்ணுவதை சேபா கவனித்து கேட்கிறான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சேபா எக்காளம் ஊதி, தாவீதுக்கு விரோதமாக கலகத்தை ஆரம்பிக்கிறான். "இஸ்ரவேலே நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு போய்விடுங்கள்" என்று சொல்லுகிறான்.

சேபா வருவதற்கு முன்பு, இஸ்ரவேல் மனுஷர் தாவீதின்மேல் பிரியமாயிருந்தார்கள். சேபா வந்தபின்பு, இஸ்ரவேல் மனுஷர் மத்தியிலே தாவீதுக்கு விரோதமாக குழப்பமும் கலகமும் உண்டாயிற்று. இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தாவீதை விட்டுப் பின்வாங்கி பிக்கிரியின் குமாரனாகிய சேபாவை பின்பற்றிப்போகிறார்கள் *(2சாமு 20:2)*.

சேபா யூதாவின் மனுஷர் சொன்ன வார்த்தைகளுக்கு தப்பிதமான வியாக்கியானம் சொல்லி, அவர்கள் மத்தியிலே சமாதானத்தைக் கெடுத்துப் போடுகிறான். மனுஷர் சொல்லும் வார்த்தைகளை தவறாக வியாக்கியானம் பண்ணுவதினால் கலகங்களும் குழப்பங்களும் உண்டாகிறது. யூதாமனுஷர், இஸ்ரவேல் மனுஷரிடத்தில், "ராஜா எங்களை சேர்ந்தவர்" *(2சாமு 19:42)* என்று மாத்திரமே சொன்னார்கள். அவர்கள் இஸ்ரவேல் மனுஷரிடத்தில், "உங்களுக்கு தாவீதினிடத்தில் பங்குமில்லை, சுதந்தரமுமில்லை" என்று சொல்லவில்லை. யூதாமனுஷர் சொல்லாத வார்த்தைகளை சேபா கற்பனைபண்ணி சொல்லுகிறான்.

"ராஜா எங்களைச் சேர்ந்தவர்" என்று யூதாமனுஷர் சொன்ன வார்த்தைக்கு, "இஸ்ரவேல் மனுஷருக்கு தாவீதினிடத்தில் பங்குமில்லை, சுதந்தரமுமில்லை" என்று சேபா வியாக்கியானம் சொல்லுகிறான். யூதாவின் மனுஷர் சொல்லாத வார்த்தைகளையும், நினைக்காத வார்த்தைகளையும், சேபா கற்பனை பண்ணி சொல்லுகிறான். இஸ்ரவேல் மனுஷரும் சேபாவின் வார்த்தையைக் கேட்டு அவனைப் பின்பற்றிப்போகிறார்கள். யோர்தான் தொடங்கி எருசலேம் மட்டுமுள்ள யூதாமனுஷர், தங்கள் ராஜாவாகிய தாவீதை சார்ந்திருக்கிறார்கள்.

தாவீதின் மறுமனையாட்டிகள் 2சாமு 20:3

2சாமு 20:3. தாவீது எருசலேமிலுள்ள தன் வீட்டுக்கு வந்தபோது, வீட்டைக் காக்க ராஜா பின்வைத்துப்போன பத்து மறுமனையாட்டிகளையும் வருவித்து, அவர்களை ஒரு காவல் வீட்டிலே வைத்து பராமரித்தான்; அப்புறம் அவர்களிடத்தில் அவன் பிரவேசிக்கவில்லை; அப்படியே அவர்கள் சாகிற நாள்மட்டும் அடைக்கப்பட்டு, உயிரோடிருக்கிற நாளெல்லாம் விதவைகள்போல் இருந்தார்கள்.

தாவீது ராஜா எருசலேமுக்கு வருகிறார். எருசலேமிலுள்ள அரண்மனையில், தாவீது தன் வீட்டைக்காக்க பத்து மறுமனையாட்டிகளை பின்வைத்துப் போயிருந்தார். அப்சலோம் அகித்தோப்பேலின் ஆலோசனைப் பிரகாரமாக, சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான் (2சாமு 16:22).

தாவீது எருசலேமிலுள்ள தன் வீட்டுக்கு வந்தபோது, முதல் வேலையாக தன்னுடைய வீட்டைக் காக்க, தான் பின்வைத்துப்போன பத்து மறுமனையாட்டிகளையும் வரவழைக்கிறார். தாவீது அவர்களை ஒரு காவல் வீட்டிலே வைத்து பராமரிக்கிறார்; அப்புறம் தாவீது அவர்களிடத்தில் பிரவேசிக்கவில்லை; அப்படியே அவர்கள் சாகிற நாள்மட்டும் அடைக்கப்பட்டு, உயிரோடிருக்கிற நாளெல்லாம் விதவைகள்போல் இருக்கிறார்கள் (2சாமு 20:3). அப்சலோம் அவர்களைக் கெடுத்துப்போட்டதினால், தாவீது அவர்களை தனியாக ஒரு காவல் வீட்டிலே வைத்துவிடுகிறார்.

அமாசாவின் மரணம் 2சாமு 20:4-13

2சாமு 20:4. பின்பு ராஜா அமாசாவைப் பார்த்து: நீ யூதா மனுஷரை மூன்றுநாளைக்குள்ளே என்னிடத்தில் வரவழைத்து, நீயும் கூட வந்து இருக்கவேண்டும் என்றான்.

2சாமு 20:5. அப்பொழுது அமாசா யூதாவை அழைப்பிக்கப் போய், தனக்குக் குறித்த காலத்திலே வராமல் தாமதித்திருந்தான்.

2சாமு 20:6. அப்பொழுது தாவீது அபிசாயைப் பார்த்து: அப்சலோமைப்பார்க்கிலும் பிக்கிரியின் குமாரனாகிய சேபா, இப்பொழுது நமக்குப் பொல்லாப்புச் செய்வான்; அவன் அரணான பட்டணங்களில் வந்தடைந்து, நம்முடைய கண்களுக்குத் தப்பிப்போகாதபடிக்கு, நீ உன் எஜமானுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பின்தொடர்ந்துபோ என்றான்.

2சாமு 20:7. அப்படியே யோவாபின் மனுஷரும், கிரேத்தியரும் பிலேத்தியரும், சகல பலசாலிகளும் அவன் பிறகாலே புறப்பட்டு, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர எருசலேமிலிருந்து போனார்கள்.

2சாமு 20:8. அவர்கள் கிபியோன் கிட்ட இருக்கிற பெரிய கல்லண்டையிலே வந்தபோது, அமாசா அவர்களுக்கு எதிர்ப்பட்டுவந்தான்; யோவாபோ, தான் உடுத்திக் கொண்டிருக்கிற தன் சட்டையின்மேல் ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; அதில் உறையோடே ஒரு பட்டயம் அவன் இடுப்பண்டையிலே தொங்கிற்று; அவன் புறப்படுகையில் அது விழுந்தது.

2சாமு 20:9. அப்பொழுது யோவாப் அமாசாவைப் பார்த்து: என் சகோதரனே, சுகமாயிருக்கிறாயா என்று சொல்லி, அமாசாவை முத்தஞ்செய்யும்படி, தன் வலது கையினால் அவன் தாடியைப் பிடித்து,

2சாமு 20:10. தன் கையிலிருக்கிற பட்டயத்திற்கு அமாசா எச்சரிக்கையாயிராதபோது, யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சரிந்துபோகத்தக்கதாய், அதினால் வயிற்றிலே ஒரே குத்தாக குத்தினான்; அவன் செத்துப்போனான்; அப்பொழுது யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர்ந்தார்கள்.

2சாமு 20:11. யோவாபுடைய வாலிபரில் ஒருவன் செத்தவனண்டையிலே நின்று, யோவாபின்மேல் பிரியப்படுகிறவன் எவனோ, தாவீதின் பட்சத்தில் இருக்கிறவன் எவனோ, அவன் யோவாபைப் பின்பற்றிப் போவானாக என்றான்.

2சாமு 20:12. அமாசா நடுவழியிலே இரத்தத்திலே புரண்டு கிடந்தபடியினால், ஜனங்கள் எல்லாரும் தரித்துநிற்பதை அவன் கண்டு, அமாசாவை வழியிலிருந்து வயலிலே இழுத்துப்போட்டான்; அவனண்டையில் வருகிறவர்கள் எல்லாரும் தரித்துநிற்பதைக் கண்டு, ஒரு வஸ்திரத்தை அவன் மேல் போட்டான்.

2சாமு 20:13. அவன் வழியிலிருந்து எடுத்துப் போடப்பட்ட பிற்பாடு, எல்லாரும் கடந்து, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைத் தொடர, யோவாபுக்குப் பின்சென்றார்கள்.

அமாசா இதற்கு முன்பு அப்சலோமின் படைத்தளபதியாயிருந்தவன். தாவீது அவனை தன் பக்கமாகச் சேர்த்துக்கொண்டார். தாவீதின் ஆலோசனைப் பிரகாரம், சாதோக்கும் அபியத்தாரும், அமாசாவை நோக்கி, "நீ என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ? நீ யோவாபுக்குப் பதிலாக எந்நாளும் எனக்கு முன்பாகப் படைத்தலைவனாயிராவிட்டால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" *(2சாமு 19:13)* என்று தாவீது சொன்ன வார்த்தைகளை அவனுக்கு சொன்னார்கள்.

அமாசா இப்போது யோவாபுக்கு பதிலாக தாவீதின் படைத்தளபதியாயிருக்கிறான். அமாசா உயர ஆரம்பிக்கும்போது, அவனுக்கு வீழ்ச்சி வருகிறது. தாவீது எருசலேமுக்கு வருவதற்கு முன்பாகவே சேபா அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். இஸ்ரவேல் மனுஷர் சேபாவை பின்பற்றிப்போயிருக்கிறார்கள். யூதாமனுஷர் மாத்திரமே தாவீதை சார்ந்திருக்கிறார்கள்.

தாவீது சேபாவின் கலகத்தை ஆரம்பத்திலேயே ஒடுக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். இதற்காக ஒரு சேனையைத் திரட்டவேண்டுமென்று தாவீது கட்டளையிடுகிறார். பின்பு ராஜா அமாசாவைப் பார்த்து: "நீ யூதா மனுஷரை மூன்றுநாளைக்குள்ளே என்னிடத்தில் வரவழைத்து, நீயும் கூட வந்து இருக்கவேண்டும்" *(2சாமு 20:4)* என்று சொல்லுகிறார்.

தாவீது ராஜாவின் கட்டளைப் பிரகாரம் அமாசா மூன்று நாளைக்குள்ளே யூதாதேசம் முழுவதும் சுற்றிப்போய் தாவீதுக்கு மிகப்பெரிய சேனை ஒன்றை ஆயத்தம்பண்ணவேண்டும். தாவீதின் கட்டளைப்படி அமாசா யூதாவின் மனுஷரை அழைக்கப்போகிறான். தாவீது அமாசாவுக்கு மூன்று நாள் மாத்திரமே காலஅவகாசம் கொடுத்திருக்கிறார். ஆனால் அமாசாவோ தனக்கு குறித்த காலத்தில், தாவீதினிடத்தில் வராமல் தாமதித்திருக்கிறான் *(2சாமு 20:5)*.

தாவீது அமாசாவை தன்னுடைய படைத்தளபதியாக நியமிக்க விரும்பினாலும், அமாசா சுறுசுறுப்பில்லாத சோம்பேறியாயிருக்கிறான். ராஜா சொன்ன வேலையை அவனால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க முடியவில்லை. ராஜாவின் கட்டளைக்கு பூரணமாய்க் கீழ்ப்படியாமல், அமாசா தாமதிக்கிறான்.

சேபாவின் கலகமும் அதிகரிக்கிறது. அமாசா தாமதம்பண்ணினாலும், தாவீது சேபாவின் கலகத்தை அடக்க தாமதம் பண்ணவில்லை. அவர் சேபாவை உடனே அடக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார். யோவாபின் தம்பியாகிய அபிசாயும் தாவீதின் படைத்தளபதியாயிருக்கிறான்.

அப்பொழுது தாவீது அபிசாயைப் பார்த்து: "அப்சலோமைப்பார்க்கிலும் பிக்கிரியின் குமாரனாகிய சேபா, இப்பொழுது நமக்குப் பொல்லாப்புச் செய்வான்; அவன் அரணான பட்டணங்களில் வந்தடைந்து, நம்முடைய கண்களுக்குத் தப்பிப்போகாதபடிக்கு, நீ உன் எஜமானுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பின்தொடர்ந்துபோ" *(2சாமு 20:6)* என்று கட்டளை கொடுக்கிறார்.

சேபாவின் கலகத்தை உடனே அடக்கவில்லையென்றால், அவனுடைய கலகம் பெரிதாகிவிடும். அதனால் இஸ்ரவேல் தேசத்திலே ஆபத்தான விளைவுகள் உண்டாகும். கலகத்தை முற்றவிட்ட பின்பு, அதை அடக்குவது கடினமாயிருக்கும். தாவீது அமாசாவை மூன்று நாளைக்குள் வருமாறு சொன்னார். அவன் வர தாமதித்தபடியினால், தாவீது அபிசாயை சேபாவுக்கு விரோதமாக அனுப்புகிறார்.

யோவாப் தாவீதின் படைத்தளபதிகளில் ஒருவன். ஆனாலும் தாவீது, சேபாவின் கலகத்தை ஒடுக்குமாறு, அவர் யோவாபுக்கு கட்டளை கொடுக்கவில்லை. அவனுடைய சகோதரனாகிய அமாசாவுக்கு தாவீது இந்தக் கட்டளையைக் கொடுக்கிறார். தாவீதின் சேனையில் யோவாபின் மதிப்பு குறைந்துபோயிற்று. அவனுக்கு முக்கியத்துவம் இல்லை. யோவாப் அப்சலோமைக் கொன்று போட்டதினால், தாவீது அவனுக்கு தன் சேனையில் முக்கியத்துவம் கொடுக்காமலிருந்திருக்கலாம். தாவீது யோவாபுக்கு பதிலாக அமாசாவை தன்னுடைய படைத்தளபதியாக நியமித்திருக்கிறார். இதனால் யோவாபுக்கு அமாசாமீது கோபமும் பொறாமையும் இருக்கிறது.

தாவீதின் கட்டளைப் பிரகாரமாக, அபிசாய் தன்னுடைய படைவீரரோடு சேபாவின் கலகத்தை ஒடுக்கப் புறப்பட்டுப்போகிறான். அவனோடுகூட யோவாபின் மனுஷரும், கிரேத்தியரும் பிலேத்தியரும், சகல பலசாலிகளும் அவன் பிறகாலே புறப்பட்டு, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர எருசலேமிலிருந்து போகிறார்கள் *(2சாமு 20:7)*.

யோவாப் இதற்கு முன்பு, யுத்தத்திலே தலைமை தாங்கினவன். இப்போதோ தன்னுடைய சகோதரன் அபிசாயின் சேனையிலே, யோவாபும் அவனுடைய மனுஷரும், சாதாரண யுத்தவீரர்களாக புறப்பட்டுப்போகிறார்கள்.

அபிசாயின் சேனை கிபியோன் கிட்ட இருக்கிற பெரிய கல்லண்டையில் வருகிறார்கள். அப்போது அமாசா அவர்களுக்கு எதிர்ப்பட்டு வருகிறான். அமாசாவைப் பார்த்தபோது யோவாபின் கோபம் அவனுக்கு விரோதமாக அதிகரிக்கிறது. யோவாபுக்கு ஏற்கெனவே அமாசாவின்மீது பொறாமை இருக்கிறது. அமாசாவைப் பார்த்தபோது, அவனைக் கொன்றுபோடவேண்டும் என்னும் கொலைவெறி யோவாபின் மனதில் உண்டாயிற்று.

யோவாப், தான் உடுத்திக் கொண்டிருக்கிற தன் சட்டையின்மேல் ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; அதில் உறையோடே ஒரு பட்டயம் அவன் இடுப்பண்டையிலே தொங்கிற்று; அவன் புறப்படுகையில் அது விழுந்தது. அப்பொழுது யோவாப் அமாசாவைப் பார்த்து: "என் சகோதரனே, சுகமாயிருக்கிறாயா" என்று சொல்லி, அமாசாவை முத்தஞ்செய்யும்படி, தன் வலது கையினால் அவன் தாடியைப் பிடித்து, தன் கையிலிருக்கிற பட்டயத்திற்கு அமாசா எச்சரிக்கையாயிராதபோது, யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சரிந்துபோகத்தக்கதாய், அதினால் வயிற்றிலே ஒரே குத்தாக குத்துகிறான்; அமாசா செத்துப்போகிறான் *(2சாமு 20:8-10)*.

யோவாப் தன்னுடைய சட்டையின்மேல் ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிறான். அதில் உறையோடே ஒரு பட்டயம் இருக்கிறது. யோவாப் தன்னுடைய கச்சையை லேசாக அசைத்தாலும் அந்தப் பட்டயம் கச்சையிலிருந்து விழுந்து விடும் வண்ணமாக கட்டப்பட்டிருக்கிறது. யோவாப் அமாசாவைப் பார்த்தபோது, அவன் வேண்டுமென்றே தன்னுடைய கச்சையை அசைக்கிறான். அப்போது அவன் இடுப்பண்டையில் தொங்கின பட்டயம் கீழே விழுகிறது. யோவாப் கீழே விழுந்த பட்டயத்தை, மறுபடியும் இடுப்பண்டையிலுள்ள கச்சையில் வைக்காமல், அதைத் தன் கையில் பிடித்துக்கொள்கிறான். பட்டயம் எதேச்சையாக கீழே விழுந்ததுபோல இருக்கிறது. யோவாபோ அந்தப் பட்டயத்தை திட்டமிட்டு கீழே விழ வைத்திருக்கிறான். யோவாபின் கையில் இப்போது பட்டயம் இருக்கிறது.

அமாசா படைத்தளபதியாயிருந்தாலும், அவனோடுகூட மெய்க்காப்பாளர்கள் யாருமில்லை. யோவாபும் அமாசாவைப் பார்த்து, "என் சகோதரனே" என்று அழைக்கிறான். ஆகையினால் அமாசாவுக்கு யோவாபின்மீது சந்தேகம் வரவில்லை.

அமாசா தாவீது சொன்ன வேலையை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கிறான். அமாசாவைக் கொன்றுபோடுவது, தாவீதை அவமதிப்பதற்கு அடையாளம். ஆனாலும் யோவாப் அமாசாவை கொன்றுபோடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறான். யோவாப் அமாசாவை யாருமில்லாத இரகசியமான இடத்தில், ஒருவருக்கும் தெரியாமல் மறைவாக கொல்லாமல், எல்லோருக்கும் முன்பாக கொன்றுபோடுகிறான்.

அமாசா செத்துப்போனபோது, யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடருகிறார்கள். யோவாபுடைய வாலிபரில் ஒருவன் செத்துப்போன அமாசாவண்டையிலே நிற்கிறான். அவன், அங்கே நிற்கிறவர்களைப் பார்த்து, "யோவாபின்மேல் பிரியப்படுகிறவன் எவனோ, தாவீதின் பட்சத்தில் இருக்கிறவன் எவனோ, அவன் யோவாபைப் பின்பற்றிப் போவானாக" *(2சாமு 20:11)* என்று சொல்லுகிறான்.

அமாசா செத்துப்போனவுடன், யோவாப் அமாசாவுக்கு பதிலாக அவனுடைய படைக்கு தளபதியாயிருக்கிறான். அபிசாய் சேபாவை பின்தொடரும்போது, யோவாபும் சேபாவை பின்தொடர்ந்துபோகிறான். அமாசாவின் சேனையிலுள்ளவர்கள் எத்தனைபேர் தனக்கு ஆதரவாகயிருப்பார்கள் என்பது யோவாபுக்கு தெரியும். அமாசா ஏற்கெனவே அப்சலோமின் படைத்தளபதியாயிருந்தவன். இப்போது தாவீதின் படைத்தளபதியாக புதிதாய் நியமிக்கப்பட்டிருக்கிறான். யோவாபோ ஏற்கெனவே தாவீதின் படைத்தளபதியாயிருந்தவன். யோவாப் இதற்கு முன்பு அப்சலோமுக்கு விரோதமாகவும், அவன் படைத்தளபதியாகிய அமாசாவுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணியிருக்கிறான்.

யோவாப் ஒரு கொலைகாரன். அமாசாவோ ஒரு வஞ்சனைக்காரன். வஞ்சகம் பண்ணினவன் செத்துப்போனான். அமாசாவின் சேனையிலுள்ளவர்களால் இனிமேல் செத்துப்போன தங்கள் படைத்தளபதியை பின்தொடர முடியாது. ஆகையினால் அவர்கள் யோவாபை பின்தொடருகிறார்கள். யோவாப் ஒரு கொலைகாரனாயிருந்தாலும், வேறு வழியில்லாமல், அவனோடு கூடப்போகிறார்கள்.

அமாசா நடுவழியிலே இரத்தத்திலே புரண்டு கிடக்கிறான். ஆனபடியினால், ஜனங்கள் எல்லாரும் அங்கே தரித்துநிற்கிறார்கள். அப்போது யோவாபுடைய வாலிபன் அதைக்கண்டு, அமாசாவை வழியிலிருந்து வயலிலே இழுத்துப்போடுகிறான்; அமாசாவண்டையில் வருகிறவர்கள் எல்லாரும் தரித்துநிற்பதைக் கண்டு, ஒரு வஸ்திரத்தை அவன் மேல் போடுகிறான். அமாசா வழியிலிருந்து எடுத்துப் போடப்பட்ட பிற்பாடு, எல்லாரும் கடந்து, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைத் தொடர, யோவாபுக்குப் பின்செல்லுகிறார்கள் *(2சாமு 20:12,13)*.

அமாசாவின் சரீரத்தின்மீது ஒரு வஸ்திரத்தைப்போட்டு மூடிய உடன், தன்னுடைய கொலைக்குற்றம் மூடப்படும் என்று யோவாப் நினைக்கிறான். யோவாபைப்போலவே, இந்தப் பிரபஞ்சத்தில் அநேக பாவிகள் நினைக்கிறார்கள். தங்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் மறைத்துவிட்டால், தங்களுடைய பாவசுபாவம் வெளிஉலகத்திற்கு தெரியாது என்று நினைக்கிறார்கள். இந்த உலகத்தாரின் பார்வைக்கு நம்முடைய அக்கிரமங்களை மறைத்தாலும், கர்த்தருடைய பார்வைக்கு நம்மால் எதையும் மறைக்க முடியாது. கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமே இல்லை. அவர் சர்வஞானமுள்ளவர். அவர் சர்வவியாபகர்.

சேபாவின் மரணம்
2சாமு 20:14-22

2சாமு 20:14. அவன் இஸ்ரவேல் கோத்திரங்களையெல்லாம் சுற்றி, பெத்மாக்காவாகிய ஆபேல்மட்டாகவும், பேரீமின் கடைசிமட்டாகவும் வந்திருந்தான்; அவ்விடத்தாரும் கூடி, தாங்களும் அவனுக்குப் பின்சென்றார்கள்.

2சாமு 20:15. அவர்கள் போய் பெத்மாக்காவாகிய ஆபேலிலே அவனை முற்றிக்கைபோட்டு, பட்டணத்திற்கு எதிராகத் தெற்றுவரைக்கும் கொத்தளம் போட்டார்கள்; யோவாபோடே இருக்கிற ஜனங்கள் எல்லாரும் அலங்கத்தை விழப்பண்ணும்படி அழிக்க எத்தனம்பண்ணினார்கள்.

2சாமு 20:16. அப்பொழுது புத்தியுள்ள ஒரு ஸ்திரீ பட்டணத்திலிருந்து சத்தமிட்டு: கேளுங்கள், கேளுங்கள்; நான் யோவாபோடே பேசவேண்டும்; அவரை இங்கே கிட்டவரச் சொல்லுங்கள் என்றாள்.

2சாமு 20:17. அவன் அவளுக்குச் சமீபத்தில் வந்தபோது, அந்த ஸ்திரீ: நீர்தானா யோவாப் என்று கேட்டாள்; அவன் நான் தான் என்றான்; அப்பொழுது, அவள் அவனைப் பார்த்து: உமது அடியாளின் வார்த்தைகளைக் கேளும் என்றாள்; அவன்: கேட்கிறேன் என்றான்.

2சாமு 20:18. அப்பொழுது அவள்: பூர்வகாலத்து ஜனங்கள் ஆபேலிலே விசாரித்தால் வழக்குத் தீரும் என்பார்கள்

2சாமு 20:19. இஸ்ரவேலிலே நான் சமாதானமும் உண்மையுமுள்ளவளாயிருக்கையில், நீர் இஸ்ரவேலிலே தாய் பட்டணமாயிருக்கிறதை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்க வேண்டியது என்ன என்றாள்.

2சாமு 20:20. யோவாப் பிரதியுத்தரமாக: விழுங்க வேண்டும் அழிக்கவேண்டும் என்கிற ஆசைஎனக்கு வெகுதூரமாயிருப்பதாக.

2சாமு 20:21. காரியம் அப்படியல்ல, பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள எப்பிராயீம் பர்வதத்தானாயிருக்கிற ஒரு மனுஷன், ராஜாவாகிய தாவீதுக்கு விரோதமாய்த் தன் கையை ஓங்கினான்; அவனை மாத்திரம் ஒப்புக்கொடுங்கள்; அப்பொழுது பட்டணத்தை விட்டுப் போவேன் என்றான். அப்பொழுது அந்த ஸ்திரீ யோவாபைப் பார்த்து: இதோ, அவன் தலை மதிலின் மேலிருந்து உம்மிடத்திலே போடப்படும் என்று சொல்லி,

2சாமு 20:22. அவள் ஜனங்களிடத்தில் போய் புத்தியாய்ப் பேசினதினால், அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி, யோவாபிடத்திலே போட்டார்கள்; அப்பொழுது அவன் எக்காளம் ஊதினான்; அவரவர் பட்டணத்தை விட்டுக் கலைந்து, தங்கள் கூடாரங்களுக்குப் புறப்பட்டுப்போனார்கள்; யோவாபும் ராஜாவிடத்துக்குப் போகும்படி எருசலேமுக்குத் திரும்பினான்.

சேபா இஸ்ரவேல் கோத்திரங்களையெல்லாம் சுற்றி வருகிறான். அவர்கள் தனக்கு ஆதரவு கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் அவர்கள் சேபாவின் கலகத்திற்கு ஆதரவு கொடுக்க முன்வரவில்லை. அதன் பின்பு சேபா பெத்மாக்காவாகிய ஆபேல்மட்டாகவும், பேரீமின் கடைசிமட்டாகவும் வருகிறான். இஸ்ரவேல் கோத்திரங்கள் ஆரம்பத்தில் சேபாவுக்கு ஆதரவு கொடுக்காவிட்டாலும், அதன் பின்பு, அவர்கள் தங்கள் மனதை மாற்றி, அவனுக்கு ஆதரவு கொடுக்க முன்வருகிறார்கள். அவர்கள் சேபாவுக்கு பின்செல்கிறார்கள்.

பெத்மாக்காவாகிய ஆபேல் வடக்கு தேசத்திலுள்ள மிகப்பெரிய பட்டணம். சேபா பேரீம் என்னும் பட்டணம் வரையிலும் வருகிறான். இது பென்யமீன் கோத்திரத்திலுள்ளது. சேபாவைப் பின்பற்றுகிறவர்களில் அநேகர் பேரீமின் பட்டணத்தார்.

யோவாபும் அவனுடைய சேனையும் சேபாவை பின்தொடர்ந்து வருகிறார்கள். சேபா பெத்மாக்காவாகிய ஆபேலிலே இருக்கிறான். அப்போது யோவாபும் அவனுடைய சேனையும்,பெத்மாக்காவாகிய ஆபேலிலே அவனை முற்றிக்கைபோட்டு, பட்டணத்திற்கு எதிராகத் தெற்றுவரைக்கும் கொத்தளம் போடுகிறார்கள்; யோவாபோடே இருக்கிற ஜனங்கள் எல்லாரும் அலங்கத்தை விழப்பண்ணும்படி அழிக்க எத்தனம்பண்ணுகிறார்கள் *(2சாமு 20:15)*.

சேபாவை பிடிக்க முடியவில்லையென்றால், பெத்மாக்காவாகிய ஆபேல் பட்டணத்தை மொத்தமாக அழித்துப்போடவேண்டும் என்பது யோவாபின் திட்டம். ஆபேலின் அலங்கத்தை இடிப்பதற்கும் யோவாபின் மனுஷர் ஆயத்தம்பண்ணுகிறார்கள். இதைப் பார்த்து ஆபேல் பட்டணத்திற்கு உள்ளே இருக்கிற மனுஷர் எல்லோரும் கலங்கிப்போயிருக்கிறார்கள்.

ஆபேல் பட்டணத்திலே புத்தியுள்ள ஒரு ஸ்திரீ இருக்கிறாள். யோவாபின் ஜனங்கள் ஆபேல் பட்டணத்தையும், பட்டணத்திலுள்ள ஜனங்களையும், அழித்துவிடாதவாறு அவன் பாதுகாக்க முயற்சி பண்ணுகிறாள். அந்த ஸ்திரீ யோவாபோடு சமாதானம் பேச முன்வருகிறாள்.

புத்தியுள்ள அந்த ஸ்திரீ ஆபேல் பட்டணத்திலிருந்து சத்தமிட்டு, "கேளுங்கள், கேளுங்கள்; நான் யோவாபோடே பேசவேண்டும்; அவரை இங்கே கிட்டவரச் சொல்லுங்கள்" என்று சொல்லுகிறாள். யோவாப் அவளுக்குச் சமீபத்தில் வருகிறான். அப்போது, அந்த ஸ்திரீ யோவாபிடம், "நீர்தானா யோவாப்" என்று கேட்கிறாள்; அவன் "நான் தான்" என்று சொல்லுகிறான்; அப்பொழுது, அந்த ஸ்திரீ யோவாபைப் பார்த்து: "உமது அடியாளின் வார்த்தைகளைக் கேளும்" என்று சொல்லுகிறாள். யோவாப் "கேட்கிறேன்" *(2சாமு 20:16,17)* என்று அவளுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

ஆபேல் பட்டணத்தில் ஏராளமான ஜனங்கள் இருந்தாலும், இந்த ஸ்திரீ புத்தியுள்ள ஸ்திரீயாக இருக்கிறாள். அவள் தன்னுடைய பட்டணத்தாரின் சார்பாக யோவாபிடம் பரிந்து பேசுகிறாள். ஆபேல் பட்டணத்தின் பெருமைகளைப்பற்றி அந்த ஸ்திரீ யோவாபுக்கு சொல்லுகிறாள். "பூர்வகாலத்து ஜனங்கள் ஆபேலிலே விசாரித்தால் வழக்கு தீரும்" *(2சாமு 20:15)* என்பார்கள். அந்த அளவுக்கு ஆபேல் பட்டணம் அக்காலத்தில் புத்தியிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கிற்று.

ஆபேல் பட்டணத்தாரும் சமாதானத்தை விரும்புகிறவர்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு உண்மையுள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். ஆபேல் பட்டணம் இஸ்ரவேல் தேசத்திற்கு தாய் பட்டணமாயிருக்கிறது. ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளை போஷித்து பராமரிப்பதுபோல, ஆபேல் பட்டணம், இஸ்ரவேலின் மற்ற பட்டணங்களை போஷித்து பராமரிக்கிறது.

ஆபேல் பட்டணத்திலுள்ள புத்தியுள்ள ஸ்திரீ, ஆபேல் பட்டணத்தின் பூர்வகாலத்து மேன்மைகளைப்பற்றி யோவாபுக்கு விரிவாக எடுத்து சொல்லுகிறாள். அந்த ஸ்திரீ யோவாபை நோக்கி, "பூர்வகாலத்து ஜனங்கள் ஆபேலிலே விசாரித்தால் வழக்குத் தீரும் என்பார்கள். இஸ்ரவேலிலே நான் சமாதானமும் உண்மையுமுள்ளவளாயிருக்கையில், நீர் இஸ்ரவேலிலே தாய் பட்டணமாயிருக்கிறதை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்க வேண்டியது என்ன" *(2சாமு 20:18,19)* என்று கேட்கிறாள்.

புத்தியுள்ள ஸ்திரீ யோவாபிடம் ஆபேல் பட்டணத்தின் பெருமையைப்பற்றி பேசிவிட்டு, "நீர் ஆபேல் பட்டணத்தை நிர்மூலமாக்க பார்க்கிறீரே" என்று அவன்மீது குற்றம் சொல்லுகிறாள். மேலும் "நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்கவேண்டியது என்ன" என்றும் அந்த ஸ்திரீ யோவாபிடம் கேட்கிறாள்.

ஆபேல் பட்டணத்து மனுஷர் யோவாபிடம் சமாதானத்தை எதிர்பார்க்கிறார்கள். யோவாபின் மனுஷர் ஆபேல் பட்டணத்து அலங்கத்தை அழித்துப்போடுவதற்கு முன்பாக, அவர்கள் தங்களோடு சமாதானம்பண்ணவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இதுவே இஸ்ரவேலின் யுத்த பிரமாணம்.

"நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக்கடவாய்" *(உபா 20:10).* ஆபேல் பட்டணத்து புத்தியுள்ள ஸ்திரீக்கு, இஸ்ரவேலரின் யுத்த பிரமாணம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆகையினால் அந்த ஸ்திரீ யோவாபிடம், தங்களோடு சமாதானம் பேசாமல், "நீர் இஸ்ரவேலிலே தாய் பட்டணமாயிருக்கிறதை நிர்மூலம்பண்ணப் பார்க்கிறீரோ" என்று கேட்கிறாள்.

யோவாபுக்கு ஆபேல் பட்டணத்தை அழிக்கவேண்டும் என்னும் ஆசையில்லை. அவன் சேபாவைப் பிடிக்க வந்திருக்கிறான். யோவாப் சேபாவைப் பிடித்து விட்டால், அவனுக்கும் ஆபேல் பட்டணத்திற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை. யோவாப் தான் வந்த வழியே திரும்பிப்போய்விடுவான்.

யோவாப் தன்மீது குற்றம் சொல்லுகிற, ஆபேல் பட்டணத்து ஸ்திரீக்கு பிரதியுத்தரமாக, "விழுங்க வேண்டும் அழிக்கவேண்டும் என்கிற ஆசைஎனக்கு வெகுதூரமாயிருப்பதாக" *(2சாமு 20:20)* என்று சொல்லுகிறான்.

தானும் தன்னுடைய மனுஷரும் பெத்மாக்காவாகிய ஆபேலிலே முற்றிக்கைப் போட்டிருப்பதற்கான காரணத்தையும் யோவாப் அந்த ஸ்திரீக்கு சொல்லுகிறான். "காரியம் அப்படியல்ல, பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள எப்பிராயீம் பர்வதத்தானாயிருக்கிற ஒரு மனுஷன், ராஜாவாகிய தாவீதுக்கு விரோதமாய்த் தன் கையை ஓங்கினான்; அவனை மாத்திரம் ஒப்புக்கொடுங்கள்; அப்பொழுது பட்டணத்தை விட்டுப்போவேன்" *(2சாமு 20:21)* என்று சொல்லுகிறான்.

யோவாபுக்கு ஆபேல் பட்டணத்தார்மீது விரோதம் ஒன்றுமில்லை. சேபா தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். அவனுடைய கலகத்தை அடக்கி ஒடுக்கவேண்டும் என்பதே யோவாபின் விருப்பம். சேபா இப்போது ஆபேல் பட்டணத்திற்குள் இருக்கிறான். ஆபேல் பட்டணம் யோவாபின் கைக்கு தப்பவேண்டுமென்றால், சேபாவின் தலை நிவாரணகிரயமாக கொடுக்கப்படவேண்டும். ஆபேல் பட்டணத்தின் புத்தியுள்ள ஸ்திரீயும், யோவாபின் மனதை புரிந்துகொள்கிறாள். அப்பொழுது அந்த ஸ்திரீ யோவாபைப் பார்த்து: "இதோ, அவன் தலை மதிலின் மேலிருந்து உம்மிடத்திலே போடப்படும்" *(2சாமு 20:21)* என்று சொல்லுகிறாள்.

யோவாபுக்கு சேபாவின் தலை கிடைத்துவிட்டால், அவனும் அவனுடைய மனுஷரும் ஆபேல் பட்டணத்தை விட்டுப்போய்விடுவார்கள். அவர்கள் ஆபேல் பட்டணத்திற்கோ அல்லது அந்த பட்டணத்தின் மனுஷருக்கோ தீங்கு ஒன்றும் செய்யமாட்டார்கள். தாவீதுக்கு விரோதமாக கலகம்பண்ணின சேபா உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்கப்படவேண்டும். அவனைப் பிடிக்கும் வரையிலும், யோவாபும் அவனுடைய மனுஷரும், ஆபேல் பட்டணத்தை முற்றிக்கைப்போட்டிருப்பார்கள்.

கர்த்தர் நம்முடைய ஆத்துமாவோடு இதுபோலவே கிரியை நடப்பிக்கிறார். பாவம் நம்மை வஞ்சிக்கிறது. அது நம்மை மோசம் போக்குகிறது. நம்முடைய ஆத்துமாவை பாவமும், குற்றவுணர்வும், துன்பங்களும் முற்றிக்கைப்போட்டிருக்கிறது. நம்முடைய மாம்சத்தின் இச்சைகள் ஆத்துமாவுக்கு விரோதமாக கிரியை செய்கிறது. நம்முடைய ஆத்துமா பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்றால், நம்மைவிட்டு மீறுதல் அகற்றப்படவேண்டும். அப்போது நாம் கர்த்தருக்குள் சுகமாயிருப்போம்.

ஆபேல் பட்டணத்தைவிட்டு சேபா வெளியேற்றப்பட்டால், ஆபேல் பட்டணம் சமாதானமாயிருக்கும். நம்முடைய ஆத்துமாவைவிட்டு பாவம் அகற்றப்பட்டால், நம்முடைய ஆத்துமாவும் கர்த்தரோடு சமாதானமாயிருக்கும்.

ஆபேல் பட்டணத்தின் புத்தியுள்ள ஸ்திரீ ஆபேல் பட்டணத்தாரிடத்தில் பேசுவதற்காக புறப்பட்டுப்போகிறாள். சேபாவின் தலை மதிலின் மேலிருந்து யோவாபிடம் போடப்படும் என்று அவள் ஆபேல் பட்டணத்தார் சார்பாக சொன்னாள். தான் சொன்ன வார்த்தைகளை செயல்படுத்தி காண்பிப்பதற்காக இப்போது அந்த ஸ்திரீ ஆபேல் பட்டணத்தாரோடு பேசப்போகிறாள். அவள் பட்டணத்து ஜனங்களிடத்தில் புத்தியாய்ப்பேசுகிறாள். அவர்களும் அந்த ஸ்திரீயின் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி யோவாபிடத்தில் போடுகிறார்கள்.

அப்பொழுது யோவாப் எக்காளம் ஊதுகிறான்; இது சமாதானத்தின் எக்காளம். யுத்தம் முடிந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக யோவாப் எக்காளம் ஊதுகிறான். யோவாபின் மனுஷர் அவரவர் பட்டணத்தை விட்டுக் கலைந்து, தங்கள் கூடாரங்களுக்குப் புறப்பட்டுப்போகிறார்கள்; யோவாபும் ராஜாவிடத்துக்குப் போகும்படி எருசலேமுக்குத் திரும்புகிறான் *(2சாமு 20:22)*.

யோவாப் ஆபேல் பட்டணத்தின்மீது யுத்தம்பண்ணவில்லை. அவன் சமாதானத்தோடு திரும்பி போகிறான். யுத்தம்பண்ணி ஜெயமுண்டாவதுபோல, இங்கு சமாதானம்பண்ணி ஜெயமுண்டாயிருக்கிறது. ஜெயத்திற்கு அடையாளமாக யோவாபின் கையில் சேபாவின் தலை இருக்கிறது.

யோவாப் ஆபேல் பட்டணத்தை முற்றிக்கைப்போட்டபோது, ஒரு ஸ்திரீ மாத்திரமே யோவாபோடு புத்தியாய்ப் பேசுவதற்கு முன்வந்தாள். ஆபேல் பட்டணத்திலுள்ள மற்ற மனுஷர் யாரும் யோவாபிடம் பேச முன்வரவில்லை. ஒரு ஸ்திரீ தன்னுடைய புத்தியினால் ஆபேல் பட்டணத்தையும், அந்தப் பட்டணத்தின் மனுஷரையும் அழிவிலிருந்து பாதுகாக்கிறாள்.

தாவீதின் ராஜரீகம்
2சாமு 20:23-26

2சாமு 20:23. யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின்மேலும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும் தலைவராயிருந்தார்கள்.

2சாமு 20:24. அதோராம் பகுதிகளை வாங்குகிறவனும், அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியும்,

2சாமு 20:25. சேவா சம்பிரதியும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயிருந்தார்கள்.

2சாமு 20:26. யயீரியனாகிய ஈராவும் தாவீதுக்குப் பிரதானியாயிருந்தான்.

தாவீது எருசலேமிலே தங்கியிருந்து சமஸ்த இஸ்ரவேலையும் ஆளுகை செய்கிறார். அமாசா செத்துப்போனான். அவனுக்கு பதிலாக யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின்மேலும் தலைவனாயிருக்கிறான். யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும் தலைவனாயிருக்கிறான் *(2சாமு 20:23)*.

தாவீதுக்கு ஏராளமான ராஜாக்கள் பகுதிகளை செலுத்தி, அவரோடு சமாதான உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அவர்கள் செலுத்துகிற பகுதிகளை வாங்குவதற்காக, தாவீது அதோராம் என்பவனை அதிகாரியாக நியமிக்கிறார். இதற்கு முன்பு தாவீதுக்கு இந்த வேலையைப் பார்க்க யாரும் நியமிக்கப்படவில்லை. இப்போது தாவீதின் பொக்கிஷம் நிரம்பி வழிகிறது.

தாவீதுக்கு அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியாயும், சேவா சம்பிரதியாயும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயும் இருக்கிறார்கள். யயீரியனாகிய ஈராவும் தாவீதுக்குப் பிரதானியாயிருக்கிறான் *(2சாமு 20:24-26)*.

தாவீதின் ராஜரீகம்
2சாமு 20:23-26

2சாமு 20:23. யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின்மேலும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும் தலைவராயிருந்தார்கள்.

2சாமு 20:24. அதோராம் பகுதிகளை வாங்குகிறவனும், அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியும்,

2சாமு 20:25. சேவா சம்பிரதியும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயிருந்தார்கள்.

2சாமு 20:26. யயீரியனாகிய ஈராவும் தாவீதுக்குப் பிரதானியாயிருந்தான்.

தாவீது எருசலேமிலே தங்கியிருந்து சமஸ்த இஸ்ரவேலையும் ஆளுகை செய்கிறார். அமாசா செத்துப்போனான். அவனுக்கு பதிலாக யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின் மேலும் தலைவனாயிருக்கிறான். யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும் தலைவனாயிருக்கிறான் *(2சாமு 20:23).*

தாவீதுக்கு ஏராளமான ராஜாக்கள் பகுதிகளை செலுத்தி, அவரோடு சமாதான உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அவர்கள் செலுத்துகிற பகுதிகளை வாங்குவதற்காக, தாவீது அதோராம் என்பவனை அதிகாரியாக நியமிக்கிறார். இதற்கு முன்பு தாவீதுக்கு இந்த வேலையைப் பார்க்க யாரும் நியமிக்கப்படவில்லை. இப்போது தாவீதின் பொக்கிஷம் நிரம்பி வழிகிறது.

தாவீதுக்கு அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியாயும், சேவா சம்பிரதியாயும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயும் இருக்கிறார்கள். யயீரியனாகிய ஈராவும் தாவீதுக்குப் பிரதானியாயிருக்கிறான் *(2சாமு 20:24-26).*

21 அதிகாரம்

இந்த அதிகாரம் எழுதப்பட்ட காலம் தெளிவாகத் தெரியவில்லை. அப்சலோம், சேபா ஆகியோரின் கலகத்திற்கு பின்பு, இந்த சம்பவம் நடைபெற்றிருக்கவேண்டும் என்று தீர்மானித்து, இது இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்போது தாவீதின் ஆட்சிக்காலத்தின் கடைசி பகுதி நடைபெறுகிறது.

கிபியோனியர் நிமித்தமாக இஸ்ரவேல் தேசத்தில் மூன்று வருஷம் ஒயாத பஞ்சமுண்டாயிற்று *(2சாமு21:1)*. கிபியோனியர் சவுலின் குமாரரில் ஏழுபேரை கொன்றுபோட்டார்கள். அதன் பின்பு பஞ்சம் நின்றுபோயிற்று *(2சாமு 21:2-9)*.

மூன்று வருஷ பஞ்சத்திற்கு பின்பு தாவீது தன்னுடைய மனுஷரை இலக்கம் பார்த்தார். இதனால் மூன்று வருஷம் பஞ்சமுண்டாகும் என்னும் எச்சரிப்பு தாவீதுக்கு கொடுக்கப்பட்டது (1நாளா 21:13). இது ஏழுவருஷ பஞ்சம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வருஷத்தோடு, மேலும் மூன்று வருஷத்தைக் கூட்டும்போது, ஏழுவருஷ பஞ்சம் உண்டாகும்.

தாவீது சவுலின் எலும்புகளையும், யோனத்தானின் எலும்புகளையும், கிபியோனியர் கொன்றுபோட்ட, சவுலின் குமாரருடைய எலும்புகளையும், சேர்த்து கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார் *(2சாமு 21:10-14)*.

பெலிஸ்தர் மத்தியிலே இராட்சதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் யுத்தங்களில் கொல்லப்படுகிறார்கள் *(2சாமு 21:15-22)*.

கிபியோனியர்

2சாமு 21:1-9

2சாமு 21:1. தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது; அப்பொழுது தாவீது கர்த்தருடைய சமுகத்தில் விசாரித்தான். கர்த்தர்: கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிற்று என்றார்.

2சாமு 21:2. அப்பொழுது ராஜா: கிபியோனியரை அழைப்பித்தான்; கிபியோனியரோ, இஸ்ரவேல் புத்திரராயிராமல் எமோரியரில் மீதியாயிருந்தவர்கள்; அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருந்தும், சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும் யூதாவுக்காகவும் காண்பித்த வைராக்கியத்தினால் அவர்களை வெட்ட வகைதேடினான்.

2சாமு 21:3. ஆகையால் தாவீது கிபியோனியரைப் பார்த்து: நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன? நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு, நான் செய்யவேண்டிய பிராயச்சித்தம் என்ன என்று கேட்டான்.

2சாமு 21:4. அப்பொழுது கிபியோனியர் அவனைப் பார்த்து: சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்கு இருக்கிற காரியத்திற்காக எங்களுக்கு வெள்ளியும் பொன்னும் தேவையில்லை; இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்றுபோடவேண்டும் என்பதும் எங்கள் விருப்பம் அல்ல என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால், நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

2சாமு 21:5. அவர்கள் ராஜாவை நோக்கி: நாங்கள் இஸ்ரவேலின் எல்லையிலெங்கும் நிலைக்காதபடிக்கு, அழிந்துபோக எவன் எங்களை நிர்மூலமாக்கி எங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தானோ,

2சாமு 21:6. அவன் குமாரரில் ஏழுபேர் கர்த்தர் தெரிந்துகொண்ட சவுலின் ஊராகிய கிபியாவிலே நாங்கள் அவர்களைக் கர்த்தருக்கென்று தூக்கிப்போட, எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்றார்கள். நான் அவர்களை ஒப்புக்கொடுப்பேன் என்று ராஜா சொன்னான்.

2சாமு 21:7. ஆனாலும் தாவீதும் சவுலின் குமாரனாகிய யோனத்தானும் கர்த்தரைக் கொண்டு இட்ட ஆணையினிமித்தம், ராஜா சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத்தைத் தப்பவிட்டு,

2சாமு 21:8. ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பான் சவுலுக்குப் பெற்ற அவனுடைய இரண்டு குமாரராகிய அர்மோனியையும் மேவிபோசேத்தையும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மேகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய ஆதரியேலுக்குப் பெற்ற அவனுடைய ஐந்து குமாரரையும் பிடித்து,

2சாமு 21:9. அவர்களைக் கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தான்; அவர்களைக் கர்த்தருடைய சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப்போட்டார்கள்; அப்படியே அவர்கள் ஏழுபேரும் ஒருமிக்க விழுந்தார்கள்; வாற்கோதுமை அறுப்பு துவக்குகிற அறுப்புக் காலத்தின் முந்தின நாட்களிலே அவர்கள் கொன்றுபோடப்பட்டார்கள்.

சவுல் இஸ்ரவேலின் ராஜாவாயிருந்த காலத்தில் கிபியோனியருக்கு விரோதமாக தீங்கு செய்தான். கிபியோனியர் இஸ்ரவேல் புத்திரரல்ல. இவர்கள் எமோரியரில் மீதியாயிருந்தவர்கள். யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கிபியோனியரோடு சமாதான உடன்படிக்கை செய்திருந்தார்கள்.

"யோசுவா அவர்களோடே சமாதானம்பண்ணி, அவர்களை உயிரோடே காப்பாற்றும் உடன்படிக்கையை அவர்களோடே பண்ணினான்; அதற்காகச் சபையின் பிரபுக்கள் அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார்கள்" *(யோசு 9:15).*

"கடுங்கோபம் நம்மேல் வராதபடிக்கு, நாம் அவர்களுக்கு இட்ட ஆணையினிமித்தம் நாம் அவர்களை உயிரோடே வைத்து, அவர்களுக்கு ஒன்று செய்வோம். பிரபுக்களாகிய நாங்கள் அவர்களுக்குச் சொன்னபடி அவர்கள் உயிரோடிருந்து, சபையார் எல்லாருக்கும் விறகு வெட்டுகிறவர்களாகவும், தண்ணீர் எடுக்கிறவர்களாகவும் இருக்கக்கடவர்கள் என்று பிரபுக்கள் அவர்களோடே சொன்னார்கள்" *(யோசு 9:20,21).*

யோசுவா கிபியோனியரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தில் வாசம்பண்ணும் உரிமை கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேலர் கிபியோனியருக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். இஸ்ரவேலர் கிபியோனியரை தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிடவும் கூடாது, அவர்களைக் கொன்றுபோடவும் கூடாது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலுக்கு, இந்த உடன்படிக்கையைப்பற்றித் தெரியும். ஆனால் அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்வதாக நினைத்து, கிபியோனியரைக் கொன்றுபோட்டார். கிபியோனியர் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். சவுலோ அவர்களை மொத்தமாக அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். சவுல் கிபியோனியரில் அநேகரை வெட்டிக்கொன்றுபோடுகிறார்.

சவுல் அமலேக்கியரை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை. ஆனால் சவுலோ அமேலேக்கியரை மொத்தமாய் அழித்துப்போடாமல், அவர்களில் அநேகரை உயிரோடு தப்பவிடுகிறார். இது சவுல் செய்த தப்பிதம். சவுல் அமலேக்கியரை முற்றிலுமாய் அழித்துப்போடாமல், அவர்களை தப்பவிட்ட பாவத்திற்கு பிராயச்சித்தமாக, அவர் கிபியோனியரைக் கொன்றுபோடுகிறார்.

சவுல் உடன்படிக்கையை மீறியதினால், கர்த்தருடைய கோபம் சவுலின்மீதும் அவருடைய வீட்டார்மீதும் உண்டாயிற்று. சவுல் கிபியோனியரைப் பாதுகாக்கவேண்டும். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரின் பாதுகாப்பிலிருக்கிறார்கள். ஆனால் சவுலோ, உடன்படிக்கையை மீறி, குற்றமில்லாத கிபியோனியரின் இரத்தத்தை சிந்துகிறார். இஸ்ரவேல் தேசத்தார் கிபியோனியரை பாதுகாக்காமல் அவர்களைக் கொன்றுபோட்டார்கள். இதன் நிமித்தமாய் இஸ்ரவேல் தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது.

தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருக்கிறது; அப்பொழுது தாவீது கர்த்தருடைய சமுகத்தில் விசாரிக்கிறார். கர்த்தர் தாவீதிடம், "கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிற்று" *(2சாமு 21:1)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். ஆனாலும் கர்த்தர் சவுலுடைய பாவத்தினிமித்தமாக இஸ்ரவேல் தேசத்தைத் தண்டிக்கிறார். தாவீதின் ஆட்சிக்காலம் செழிப்பான காலமாகவும், மகிமையான காலமாகவும் இருக்கிறது. ஆனாலும் தாவீதின் நாட்களில் இஸ்ரவேல் தேசத்தில், மூன்று வருஷம் ஓயாத பஞ்சமுண்டாயிற்று. மழை பெய்யவில்லை. தானியம் விளையவில்லை. ஜனங்களுக்கு போஜனமும் தண்ணீரும் கிடைக்கவில்லை.

தாவீது ஒரு தீர்க்கதரிசி. ஆனாலும் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்றால், அவரும் கர்த்தருடைய சமுகத்தில் விசாரிக்க வேண்டியதாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலே மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருப்பதற்கான காரணத்தை, தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். தாவீது கர்த்தருடைய சித்தத்தையும், திட்டத்தையும் அறிந்துகொள்ள விரும்புகிறார்.

கர்த்தரும் தாவீதுக்கு உடனே பிரதியுத்தரம் சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் உண்டானபோது, தாவீது கர்த்தரிடத்தில் அதுபற்றி உடனே விசாரிக்கவில்லை. மூன்று வருஷம் தாமதம்பண்ணுகிறார். கர்த்தரோ, தாவீது தன்னிடத்தில் விசாரித்த உடனேயே, அவருக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

இந்தப் பஞ்சம் சவுலுக்காகவும், அவருடைய வீட்டாருக்காகவும் உண்டாயிற்று. இந்தப் பஞ்சத்திற்கு தாவீதோ, தாவீதின் குடும்பத்தாரோ காரணமல்ல. சவுலும் அவருடைய வீட்டாருமே காரணம். சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டார். இந்த சம்பவம் நடைபெற்று பல வருஷங்களாயிற்று. காலம் கடந்தாலும், மனுஷனுடைய பாவக்கறைகள் அழிவதில்லை. கர்த்தர் சவுலை உடனே தண்டிக்கவில்லை. அவர் சவுலை தண்டிக்காமலும் விடவில்லை.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தன்மீது உடனே வரவில்லை என்பதை நினைத்து, சவுல் இறுமாப்பாயிருந்திருக்கவேண்டும். கர்த்தர் தன்னுடைய பாவத்தை நினைக்கவில்லையென்றும், அவர் தன்னுடைய பாவத்தை மறந்துவிட்டார் என்றும் சவுல் நினைத்திருக்கவேண்டும். நியாயத்தீர்ப்பு உடனே வரவில்லை என்பதற்காக, அது வரவே வராது என்று தீர்மானம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவருக்கு ஏற்ற வேளையில் வரும்.

இஸ்ரவேல் தேசத்தில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சமுண்டாயிருக்கிறது. கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இந்தப் பஞ்சமுண்டாயிற்று என்று கர்த்தர் தாவீதுக்கு சொல்லுகிறார்.

சவுல் கிபியோனியருக்கு விரோதமாக செய்த பாவத்தை நிவிர்த்தி பண்ண வேண்டுமென்று தாவீது விரும்புகிறார். இதற்காக அவர் கிபியோனியரை தன்னிடத்தில் அழைப்பிக்கிறார்.

கிபியோனியர், இஸ்ரவேல் புத்திரராயிராமல் எமோரியரில் மீதியாயிருக்கிறவர்கள்; அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருந்தும், சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும் யூதாவுக்காகவும் காண்பித்த வைராக்கியத்தினால் அவர்களை வெட்ட வகைதேடினார் *(2சாமு 21:2)*.

தாவீது கிபியோனியரை அழைத்து பேசவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அவர்களுக்கு விரோதமாக சவுல் தீங்கு செய்திருக்கிறார். அந்தத் தீங்குக்கு கிபியோனியர் என்ன பரிகாரம் எதிர்பார்க்கிறார்கள் என்பதை, அவர்களிடத்திலேயே கேட்டு அறிந்துகொள்ளவேண்டுமென்று தாவீது தீர்மானிக்கிறார்.

தாவீது கிபியோனியரைப் பார்த்து: "நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன? நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு, நான் செய்யவேண்டிய பிராயச்சித்தம் என்ன" *(2சாமு 21:3)* என்று கேட்கிறார்.

கிபியோனியரும், சவுல் தங்களுக்கு செய்த தீங்குகளை மறக்கவில்லை. அவர்கள் சவுலின் வீட்டாருக்கு விரோதமாக கோபமாயிருக்கிறார்கள். கிபியோனியரின் எண்ணிக்கை சொற்பமாயிருப்பதினால், அவர்களால் சவுலுக்கு விரோதமாக இதுவரையிலும் யுத்தம்பண்ண முடியவில்லை. கிபியோனியரால் சவுல் வீட்டாருக்கு விரோதமாக தங்கள் கோபத்தையும் காண்பிக்கமுடியவில்லை. இப்போது தாவீது கிபியோனியரைப் பார்த்து, "நான் உங்களுக்கு செய்யவேண்டியது என்ன" என்று கேட்கிறார்.

கிபியோனியர் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கவேண்டும். அதற்கு தாவீது பிராயச்சித்தம் பண்ண ஆயத்தமாயிருக்கிறார். கிபியோனியரோ பிராயச்சித்தமாக வெள்ளியையும், பொன்னையும் விரும்பவில்லை.

கிபியோனியர் தாவீதைப் பார்த்து: "சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்கு இருக்கிற காரியத்திற்காக எங்களுக்கு வெள்ளியும் பொன்னும் தேவையில்லை; இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்றுபோடவேண்டும் என்பதும் எங்கள் விருப்பம் அல்ல" *(2சாமு 21:5)* என்று சொல்லுகிறார்கள்.

கிபியோனியர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அடிமை வேலைகளை செய்கிறார்கள். விறகு வெட்டுவதும், தண்ணீர் சுமப்பதும் கிபியோனியரின் வேலையாயிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே அடிமைகளாயிராவிட்டாலும், அவர்களுக்கு அடிமையின் வேலைகளே கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் கிபியோனியர் எங்கும் சுதந்தரமாகப் போகலாம். ஆனால் அவர்கள் தங்களுக்கு பிடித்தமான வேலைகளை செய்ய முடியாது.

யோசுவா கிபியோனியரோடு உடன்படிக்கை பண்ணியபோது, அவர்களை கர்த்தருக்கும், கர்த்தருடைய ஜனத்திற்கும் சேவை செய்ய ஒப்புக்கொடுத்துவிட்டார். கிபியோனியர் அக்காலத்தில் "நிதனீமியர்" என்று அழைக்கப்பட்டார்கள். தாவீது இப்போது கிபியோனியரிடம், "நான்உங்களுக்கு செய்யவேண்டிய பிரயாச்சித்தம் என்ன" என்று கேட்கிறார். கிபியோனியர் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தாங்கள் இதுவரையிலும் செய்து வந்த அடிமை வேலையிலிருந்து விடுதலை பெற்றிருக்கலாம்.

ஆனால் நிதனீமியரோ, தாங்கள் இதுவரையிலும் செய்த வேலைகளில் களைப்படையவில்லை. சுமை தூக்குவதினாலோ, தண்ணீர் சுமப்பதினாலோ அவர்கள் சோர்ந்துபோய்விடவில்லை. அவர்கள் எப்போதும்போல, இனிமேலும் அடிமை வேலை செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனாலும் சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டது, அவர்களுடைய மனதிலே இன்னும் ஆறாத காயமாயிருக்கிறது.

தாவீது கிபியோனியரைப் பார்த்து "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்" *(2சாமு 21:4)* என்று கேட்கிறார். அதற்கு கிபியோனியர், தாவீது ராஜாவை நோக்கி, "நாங்கள் இஸ்ரவேலின் எல்லையிலெங்கும் நிலைக்காதபடிக்கு, அழிந்துபோக எவன் எங்களை நிர்மூலமாக்கி எங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தானோ, அவன் குமாரரில் ஏழுபேர் கர்த்தர் தெரிந்துகொண்ட சவுலின் ஊராகிய கிபியாவிலே நாங்கள் அவர்களைக் கர்த்தருக்கென்று தூக்கிப்போட, எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும்" *(2சாமு 21:5,6)* என்று கேட்கிறார்கள்.

தாவீது கிபியோனியரிடம், "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறார். கிபியோனியர் தாவீதை தங்களுக்காக ஒன்றும் செய்யச்சொல்லவில்லை. சவுலின் குமாரரில் ஏழுபேரை தங்களுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று கிபியோனியர் கேட்கிறார்கள். அந்த ஏழுபேரையும் தாவீது தங்களுக்காக கொன்றுபோடவேண்டுமென்று கிபியோனியர் எதிர்பார்க்கவில்லை. தாவீது சவுலின் குமாரரில் ஏழுபேரை தங்களிடத்தில் ஒப்புக்கொடுத்தால், தாங்கள் அவர்களை கர்த்தருக்கென்று தூக்கிப்போடுவோம் என்று கிபியோனியர் தாவீதினிடத்தில் சொல்லுகிறார்கள்.

தாவீது கிபியோனியரிடம் "நான் செய்யவேண்டிய பிராயச்சித்தம் என்ன" *(2சாமு 21:3)* என்று கேட்டார். அதற்கு கிபியோனியர் தாவீது ராஜாவை நோக்கி "இஸ்ரவேலில் ஒருவனை கொன்றுபோடவேண்டும் என்பது எங்கள் விருப்பமல்ல" *(2சாமு 21:4)* என்று சொன்னார்கள். தாவீது தங்களுக்காக யாரையும் கொல்லவேண்டும் என்பது கிபியோனியரின் விருப்பமல்ல. யாரைக் கொல்லவேண்டுமோ அவர்களை தாங்களே கொன்றுபோடுவதாக கிபியோனியர் சொல்லுகிறார்கள். "நாங்கள் அவர்களை கர்த்தருக்கென்று தூக்கிப்போடுவோம்" என்று கிபியோனியர் தாவீதினிடத்தில் சொல்லுகிறார்கள்.

சவுலின் குமாரரில் ஏழுபேரை கொன்றுபோடுவதினால், ஏதாவது பிரச்சனைகள் வந்தாலும், கஷ்டங்களும் நஷ்டங்களும் வந்தாலும், அதை தாங்கள் தாங்கிக்கொள்ள ஆயத்தமாயிருப்பதாக கிபியோனியர் சொல்லுகிறார்கள். சவுலின் குமாரரைக் கொன்றுபோடுவதினால், குற்றப்பழி வந்தாலும் அது தங்கள்மீது வரட்டும் என்று கிபியோனியர் தாவீதுக்கு சொல்லுகிறார்கள்.

கிபியோனியருக்கு சவுலின்மீதோ அல்லது அவருடைய குடும்பத்தார்மீதோ இப்போது கோபமோ, பழிஉணர்ச்சியோ இல்லை. சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டது பழைய சம்பவம். கிபியோனியர் அந்த வேதனையை மறந்துவிட்டார்கள். கிபியோனியர் இப்போது சவுலின் குமாரரை கொன்றுபோட முன்வருகிறார்கள்.

கிபியோனியருக்கு சவுலின் வீட்டார்மீது கோபமில்லை. ஆனால் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின்மீதும், இஸ்ரவேல் மனுஷர்மீதும் அன்பாயிருக்கிறார்கள். அதினால், அவர்கள் சவுலின் குமாரரில் ஏழுபேரை கொன்றுபோட ஆயத்தமாயிருக்கிறார்கள். கிபியோனியர் இஸ்ரவேலை பழிவாங்க நினைக்கவில்லை. ஆனால் கர்த்தர் கிபியோனியர் நிமித்தமாக இஸ்ரவேலை நியாயந்தீர்க்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சமுண்டாயிருக்கிறது. இந்தப் பஞ்சம் தேசத்தைவிட்டு நீங்கவேண்டும். இஸ்ரவேல் தேசம் மறுபடியும் செழிக்கவேண்டும். அங்கே பாலும் தேனும் ஓடவேண்டும். இஸ்ரவேல் மனுஷருக்கு அப்பத்தாழ்ச்சியோ, போஜனக்குறைவோ, திராட்சரசக்குறைவோ ஏற்படக்கூடாது. அவர்களுக்கு திருப்தியான போஜனம் கிடைக்கவேண்டும். இதுவே கிபியோனியரின் விருப்பம்.

தாவீது கிபியோனியரிடத்தில் "நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு, நான் செய்யவேண்டிய பிராயச்சித்தம் என்ன" *(2சாமு 21:3)* என்று கேட்டார். கிபியோனியரும் தாவீதினிடத்தில் சவுலின் குமாரரில் ஏழுபேரைக் கேட்கிறார்கள். கிபியோனியர் அந்த ஏழுபேரையும் கர்த்தருக்கென்று தூக்கிப்போடப்போவதாக சொல்லுகிறார்கள். சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டதினிமித்தமாக, இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. சவுலின் குமாரரில் ஏழுபேர் கொல்லப்பட்டால், இஸ்ரவேல் தேசத்தைவிட்டு இந்தப் பஞ்சம் விலகும். இதற்காக கிபியோனியர் சவுலின் குமாரரில் ஏழுபேரை கொல்ல ஆயத்தமாயிருக்கிறார்கள்.

கிபியோனியர் தாவீது ராஜாவிடம், "சவுலின் குமாரரில் ஏழுபேரை கர்த்தருக்கென்று தூக்கிப்போட, எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும்" என்று சொல்லுகிறார்கள். தாவீது அவர்களிடம், "நான் அவர்களை ஒப்புக்கொடுப்பேன்" என்று சொல்லுகிறார். கிபியோனியர் தன்னிடத்தில் கேட்கும், சவுலின் குமாரரில் ஏழுபேரை, அவர்களிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு சம்மதிக்கிறார்.

சவுலுக்கு அநேக குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் எந்த ஏழுபேரை தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமையை, கிபியோனியர் தாவீது ராஜாவினிடத்தில் விட்டுவிடுகிறார்கள். தாவீது தன் சிநேகிதன் யோனத்தான் நிமித்தமாக, அவனுடைய குமாரன் மேவிபோசேத்தை, கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை.

தாவீது யோனத்தானோடு ஏற்கெனவே உடன்படிக்கை செய்திருக்கிறார். தாவீது அந்த உடன்படிக்கையை மீற விரும்பவில்லை. யோசுவா கிபியோனியரோடு செய்த உடன்படிக்கையை சவுல் மீறியதினால், இஸ்ரவேல் தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. தாவீது யோனத்தானோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறுவதினால், இஸ்ரவேல் தேசத்தின்மீது கர்த்தருடைய மற்றும் ஒரு நியாயத்தீர்ப்பு வருவதை தாவீது விரும்பவில்லை. ஆகையினால் தாவீது யோனத்தானின் மகன் மேவிபோசேத்தை, கிபியோனியரிடத்தில் ஒப்புக்கொடுக்காமல், அவனை தப்பவிடுகிறார் (2சாமு 21:7).

தாவீது சவுலின் குமாரரில் ஏழுபேரை தேர்ந்தெடுத்து, அவர்களை கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுக்கிறார். அவர்களின் விவரம் வருமாறு : ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்குப் பெற்ற அவளுடைய இரண்டு குமாரராகிய அர்மோனியும் மேவிபோசேத்தும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மேகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய ஆதரியேலுக்குப் பெற்ற அவளுடைய ஐந்து குமாரரும், ஆக மொத்தம் ஏழுபேர்.

தாவீது சவுலின் குமாரரில் இந்த ஏழுபேரையும் பிடித்து அவர்களை கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுக்கிறார்; கிபியோனியர் அவர்களைக் கர்த்தருடைய சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப்போடுகிறார்கள்; அப்படியே அவர்கள் ஏழுபேரும் ஒருமிக்க விழுகிறார்கள்; வாற்கோதுமை அறுப்பு துவக்குகிற அறுப்புக் காலத்தின் முந்தினநாட்களிலே அவர்கள் கொன்றுபோடப்படுகிறார்கள் (2சாமு 21:9).

கிபியோனியர் சவுலின் குமாரரை கொன்றுபோடும் ஸ்தலம், காலம், முறைமை ஆகியவையெல்லாமே, தேவனுடைய நீதியை நிறைவேற்றும் வண்ணமாக இருக்கிறது. கிபியோனியர் அவர்களை தூக்கிப்போடுகிறார்கள். தேவனுடைய கோபம் சவுலின் வீட்டார்மீது இருக்கிறது என்பதற்கு அடையாளமாக, சவுலின் குமாரரில் ஏழுபேரை, கர்த்தருடைய சமுகத்தில், மலையின்மேல் தூக்கிப்போடுகிறார்கள். தூக்கிப்போடப்பட்டவனை அன்றே அடக்கம் பண்ணவேண்டும். ஆனால் சவுலின் குமாரரோ, அன்றே அடக்கம்பண்ணப்படவில்லை. இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்யும் வரையிலும் அவர்கள் பிணமாக தொங்குகிறார்கள்.

"கொலைசெய்யப்பட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலைசெய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளிலேதானே அதை அடக்கம்பண்ண வேண்டும்; தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக" (உபா 21:22,23)

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா 3:13).

கிபியோனியர் சவுலின் குமாரரில் ஏழுபேரையும், சவுலின் ஊராகிய கிபியாவிலே தூக்கிப்போடுகிறார்கள் (2சாமு 21:6). சவுலின் பாவத்தினிமித்தமாக, அவருடைய குமாரரில் ஏழுபேரும் மரித்துப்போனார்கள் என்பதற்கு, அவர்கள் சவுலின் ஊராகிய கிபியாவிலே தூக்கிப்போடப்பட்டது அடையாளமாயிருக்கிறது,

இஸ்ரவேலிலே பஞ்சம் நீங்கிற்று 2சாமு 21:10-14

2சாமு 21:10. அப்பொழுது ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் இரட்டுப்புடவையை எடுத்துக்கொண்டுபோய், அதைப் பாறையின்மேல் விரித்து, அறுப்புநாளின் துவக்கம் முதற்கொண்டு வானத்திலிருந்து அவர்கள்மேல் மழை பெய்யுமட்டும் பகலில் ஆகாயத்துப் பறவைகளாகிலும் இரவில் காட்டுமிருகங்களாகிலும் அவர்கள்மேல் விழவொட்டாதிருந்தாள்.

2சாமு 21:11. ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் சவுலின் மறுமனையாட்டி செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட போது,

2சாமு 21:12. தாவீது போய், பெலிஸ்தர் கில்போவாவிலே சவுலை வெட்டினபோது, பெத்சானின் வீதியிலே தூக்கிப்போடப்பட்டதும், கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்டணத்தார் அங்கே போய்த் திருட்டளவாய்க் கொண்டுவந்ததுமான சவுலின் எலும்புகளையும், அவன் குமாரனான யோனத்தானின் எலும்புகளையும், அவர்களிடத்திலி ருந்து எடுத்து,

2சாமு 21:13. அங்கே இருந்து அவர்களைக் கொண்டுவந்து, தூக்கிப்போடப்பட்டவர்களின் எலும்புகளையும் அவைகளோடே சேர்த்து,

2சாமு 21:14. சவுலின் எலும்புகளையும் அவன் குமாரனாகிய யோனத்தானின் எலும்புகளையும், பென்யமீன் தேசத்துச் சேலா ஊரிலிருக்கிற அவன் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம்பண்ணுவித்தான்; ராஜா கட்டளையிட்டபடியெல்லாம் செய்தார்கள்; அதற்குப்பின்பு தேவன் தேசத்திற்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்.

கிபியானியர் சவுலின் குமாரரை மலையின்மேல் தூக்கிப்போடுகிறார்கள். அவர்கள் ஏழுபேரும் மலையிலிருந்து ஒருமிக்க விழுகிறார்கள். செத்துப்போனவர்களின் சரீரம் உடனே அடக்கம்பண்ணப்படவில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறும் வரையிலும், அவர்கள் மரித்தவர்களாக விழுந்து கிடக்கிறார்கள். கர்த்தர் சவுலின்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றி, இஸ்ரவேல் தேசத்திற்கு மறுபடியும் மழையை வரப்பண்ணுகிறார். தேசத்திலே பஞ்சம் நீங்கிற்று.

சவுலின் குமாரர் ஏழுபேரும் கர்த்தருடைய சமுகத்தில் தூக்கிப்போடப்பட்டார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலிகளாக செலுத்தப்பட்டார்கள். பலியாக செலுத்தப்பட்டவர்களை அக்கினி பட்சித்துப்போடவில்லை. அவர்களுடைய சரீரங்கள் வெட்ட வெளியிலே கிடக்கிறது. காற்றும், வெயிலும் அந்த சரீரங்கள்மீது பட்டு, அந்த சரீரங்களை பட்சித்துப்போடுகிறது.

கிபியோனியர் சவுலின் குமாரர் ஏழுபேரையும், வாற்கோதுமை அறுப்பு துவக்குகிற, அறுப்புக்காலத்தின் முந்தின நாட்களிலே கொன்றுபோடுகிறார்கள் *(2சாமு 21:9)*. அறுப்புக்காலம் மழைக்காலமல்ல. இது மழையில்லாமல் வறண்டுபோயிருக்கும் காலம்.

கிபியோனியர் கொன்றுபோட்ட ஏழுபேரில் இரண்டுபேர் ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்கு பெற்ற இரண்டு குமாரர் ஆவார்கள். ரிஸ்பாள் வயது முதிர்ந்தவள். தன்னுடைய இரண்டு குமாரரும் செத்துப்போனது ரிஸ்பாளுக்கு மிகுந்த வேதனையாயிருக்கிறது. தன்னுடைய வயதான காலத்தில், தன்னுடைய இரண்டு குமாரரும், தனக்கு ஆதரவாயிருப்பார்கள் என்று ரிஸ்பாள் எதிர்பார்த்தாள். ஆனால் கிபியோனியர் ரிஸ்பாளின் இரண்டு குமாரரையும் கொன்றுபோட்டார்கள்.

ரிஸ்பாளின் வருத்தம் கிபியோனியருக்கு தெரியாது. அவளுடைய வருத்தத்தைப்பற்றி தாவீதுக்கும் தெரியாது. ஆனால் தாவீது ரிஸ்பாளின் இரண்டு குமாரரையும், கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்கள் இவ்விரண்டு பேரையும் கர்த்தருடைய சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப்போட்டார்கள். ரிஸ்பாளின் குமாரருக்கு எதிர்பாராத வேளையிலே மரணமுண்டாயிற்று. ஆனாலும் ரிஸ்பாள், செத்துப்போன இரண்டு குமாரரையும் கண்ணியமான முறையிலே பராமரிக்கிறாள்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின்மீது மழையை பெய்யப்பண்ணும் வரையிலும், சவுலின் குமாரரை அடக்கம்பண்ணக்கூடாது. அவர்கள் தூக்கிப்போடப்பட்டவர்களாகவே இருக்கவேண்டும். கிபியோனியர் சவுலின் குமாரரை மலையின்மேல் தூக்கிப்போட்டார்கள் என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது *(2சாமு 21:9).*

கிபியோனியர் சவுலின் குமாரரை சங்கிலிகளால் கட்டி தூக்கிப்போட்டார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். தூக்கிப்போடப்பட்டவர்கள் செத்துப்போனார்கள். ஆனாலும் அவர்களுடைய சரீரங்கள் இறக்கப்படவில்லை. அவை சங்கிலிகளால் கட்டப்பட்டு, தூக்கப்பட்ட நிலமையிலிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் மறுபடியும் மழை பெய்யும் வரையிலும், சவுலின் குமாரருடைய சரீரங்களை இறக்கி, அவர்களை அடக்கம்பண்ண முடியாது.

சவுலின் குமாரரில் ஏழுபேர் கொன்றுபோடப்படுகிறார்கள். அவர்களில் இரண்டுபேர் ரிஸ்பாளின் குமாரர். தன்னுடைய குமாரர் இரண்டுபேரும் மரித்தவர்களாக, சங்கிலிகளில் தொங்குவதை ரிஸ்பாள் பார்த்து வேதனைப்படுகிறாள். மழை எப்பொழுது வரும் என்று அவளுக்கு தெரியாது. அவளோ சரீரத்தில் பெலமில்லாதவள். முதிர்ந்த வயதுள்ளவள். அவளால் தன்னுடைய குமாரரின் சரீரங்களை திருடிச்சென்று அடக்கம்பண்ணவும் முடியாது.

தேவனுடைய தெய்வீக பிரமாணத்தின் பிரகாரமாக, சவுலின் குமாரர் ஏழுபேரும் தூக்கிப்போடப்பட்டிருக்கிறார்கள். தன்னுடைய குமாரர் இரண்டுபேரின் சரீரங்களும் தொங்கிக்கொண்டிருப்பதை ரிஸ்பாள் வேதனையோடு பார்க்கிறாள். அவள் அந்த வேதனையைத் தாங்கிக்கொள்கிறாள். ரிஸ்பாள் கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறாள். சவுலின் குமாரர்கள் மரித்துப்போனாலும், அவர்களுடைய சரீரங்களை பராமரிக்கவேண்டும் என்னும் வைராக்கியம் ரிஸ்பாளின் மனதில் உண்டாயிற்று.

அப்பொழுது ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் இரட்டுப்புடவையை எடுத்துக்கொண்டுபோய், அதைப் பாறையின்மேல் விரிக்கிறாள். அறுப்புநாளின் துவக்கம் முதற்கொண்டு வானத்திலிருந்து அவர்கள்மேல் மழை பெய்யுமட்டும், பகலில் ஆகாயத்துப் பறவைகளாகிலும் இரவில் காட்டுமிருகங்களாகிலும் அவர்கள்மேல் விழவொட்டாதிருக்கிறாள் *(2சாமு 21:10).* ஒருவேளை ரிஸ்பாளின் உறவினர்களும், அவளுடைய சிநேகிதர்களும் அவளுக்கு உதவி செய்திருக்கவேண்டும்.

ரிஸ்பாளின் குமாரர் மரித்துப்போனது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. கிபியோனியர் அவர்களை கர்த்தருடைய சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப்போட்டார்கள். பாவத்திற்கு தண்டனையாக ரிஸ்பாளின் குமாரர் கொல்லப்படவில்லை. அவர்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணவில்லை. சவுலின் குமாரர் ஏழுபேருமே, தங்களுடைய தகப்பனாராகிய சவுலின் பாவத்தினிமித்தமாக, இங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சவுலின் குமாரர் கொல்லப்படவேண்டும் என்பது கிபியோனியரின் விருப்பமாயிருக்கிறது. அவர்களுடைய விருப்பத்தை தாவீதும் அங்கீகரிக்கிறார். ஆகையினால் ரிஸ்பாளால் தன்னுடைய குமாரரை மரணத்திற்கு தப்புவிக்க முடியாது. தாவீது ராஜாவின் கட்டளை பிரகாரம் அவர்கள் மரித்தே ஆகவேண்டும். தன்னுடைய குமாரர் மரித்துப்போவதை ரிஸ்பாளால் தடைபண்ண முடியவில்லை. அதே வேளையில் தன்னுடைய குமாரரின் மரணத்திற்காக ரிஸ்பாள் அழுவதையும், அவள் அவர்களுடைய சரீரங்களை இரவு பகலாக பாதுகாப்பதையும் யாராலும் தடைபண்ண முடியவில்லை. ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் சவுலின் மறுமனையாட்டி செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது *(2சாமு 21:11)*.

சவுலின் மறுமனையாட்டியாகிய ரிஸ்பாள் செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டாலும், தாவீது அவள்மீது கோபப்படவில்லை. தாவீதும் அவளோடு சேர்ந்து, சவுலின் குமாரரை கனம்பண்ண விரும்புகிறார்.

சவுலின் குடும்பத்தாருக்கு தாவீதும் மரியாதை செய்ய விரும்புகிறார். சவுலின் குமாரருடைய சரீரங்கள் வெட்டவெளியிலே காய்ந்துபோய் கிடக்கிறது. பல நாட்களாக வெயிலிலும், காற்றிலும் அந்த சரீரங்கள் இருந்ததினால், அவை இப்போது எலும்புக்கூடாக இருக்கிறது. தாவீது அவர்களுடைய எலும்புகளை, சவுல், யோனத்தான் ஆகியோரின் எலும்புகளோடு சேர்ந்து அடக்கம்பண்ண விரும்புகிறார்.

சவுலின் வீட்டார் அவமானமாய் செத்துப்போவது தாவீதுக்கு பிரியமல்ல. தாவீதுக்கு சவுலின் வீட்டார்மீது தனிப்பட்ட முறையில் கோபம் எதுவுமில்லை. சவுல்மீது இருந்த கோபத்தினால் தாவீது, சவுலின் குமாரரை, கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று யாரும் அவர்மீது குற்றம் சொல்லவும் முடியாது. அந்த அளவுக்கு தாவீது சவுலின் வீட்டாரைக் கனம்பண்ணுகிறார்.

சவுலுடைய குடும்பத்தாரின் எலும்புகளெல்லாம் பல இடங்களில் சிதறிக்கிடக்கிறது. பெலிஸ்தர் கில்போவாவிலே சவுலை வெட்டிப்போட்டார்கள். அவருடைய சரீரத்தை பெத்சானின் வீதியிலே தூக்கிப்போட்டார்கள். கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்டணத்தார் அங்கே போய்த் திருட்டளவாய்க் கொண்டுவந்ததுமான சவுலின் எலும்புகளையும், அவன் குமாரனான யோனத்தானின் எலும்புகளையும், அவர்களிடத்திலிருந்து எடுத்து தங்கள் தேசத்தில் வைத்திருக்கிறார்கள்.

"பெலிஸ்தர் சவுலுக்குச் செய்ததைக் கீலேயாத்தேசத்து யாபேஸ் பட்டணத்தார் கேட்டபோது, அவர்களிலே பலசாலிகள் எல்லாரும் எழுந்து இராமுழுதும் நடந்து போய், பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேசுக்குக் கொண்டுவந்து, அவைகளை அங்கே தகனம்பண்ணி, அவர்களுடைய எலும்புகளை எடுத்து, யாபேசிலிருக்கிற தோப்பிலே அடக்கம்பண்ணினார்கள்" *(1சாமு 31:11-13)*

தாவீது கீலேயாத்திலிருந்து, சவுலின் எலும்புகளையும், யோனத்தானின் எலும்புகளையும் கொண்டு வந்து, தூக்கிப்போடப்பட்டவர்களின் எலும்புகளையும் அவைகளோடே சேர்க்கிறார்.

சவுலின் குடும்பத்தாருடைய எலும்புகளையெல்லாம் தாவீது ஒன்றாய்க் கூட்டிச்சேர்க்கிறார். தாவீது அந்த எலும்புகளை பென்யமீன் தேசத்துச் சேலா ஊரிலிருக்கிற சவுலின் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம்பண்ணுவிக்கிறார் *(2சாமு 21:14)*.

சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டதினிமித்தமாக கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் தேசத்தின்மீது வந்தது. கிபியோனியர் சவுலின் ஏழுகுமாரர்களை கொன்றுபோட்டதினால், இஸ்ரவேல் தேசத்தின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறிற்று. கர்த்தருடைய கோபமும் நீங்கிற்று. ஆகையினால் சவுலின் குமாரர் தூக்கிப்போடப்பட்டாலும், அவர்களுடைய சரீரங்கள் சாபமாக கருதப்படவில்லை. வானத்திலிருந்து அவர்கள் சரீரங்கள்மேல் மழை பெய்தது *(2சாமு 21:10)*.

இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்த பின்பு, தாவீது அவர்களுடைய எலும்புகளை எடுத்து, பென்யமீன் தேசத்து சேலா ஊரிலிருக்கிற, சவுலின் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார். தாவீது அங்கே அவர்களுடைய எலும்புகளோடு, சவுலின் எலும்புகளையும், யோனத்தானின் எலும்புகளை சேர்த்து அடக்கம்பண்ணுகிறார்.

தாவீது ராஜா கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் ஜனங்கள் செய்கிறார்கள்; அதற்குப்பின்பு தேவன் தேசத்திற்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளுகிறார் *(2சாமு 21:14)*.

பெலிஸ்தர்
2சாமு 21:15-22

2சாமு 21:15. பின்பு பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்செய்தார்கள்; அப்பொழுது தாவீதும் அவனோடேகூட அவன் சேவகரும் போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணினார்கள்; தாவீது விடாய்த்துப்போனான்.

2சாமு 21:16. அப்பொழுது முந்நூறு சேக்கல் நிறை வெண்கலமான ஈட்டியைப் பிடிக்கிறவனும், புதுப்பட்டயத்தை அரையிலே கட்டிக் கொண்டவனுமான இஸ்பிபெனோப் என்னும் இராட்சத புத்திரரில் ஒருவன் தாவீதை வெட்டவேண்டும் என்று இருந்தான்.

2சாமு 21:17. செருயாவின் குமாரனாகிய அபிசாய் ராஜாவுக்கு உதவியாக வந்து, பெலிஸ்தனை வெட்டிக் கொன்றுபோட்டான். அப்பொழுது தாவீதின் மனுஷர்: இஸ்ரவேலின் விளக்கு அணைந்துபோகாதபடிக்கு, நீர் இனி எங்களோடே யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம் என்று அவனுக்கு ஆணையிட்டுச் சொன்னார்கள்.

2சாமு 21:18. அதற்குப் பின்பு பெலிஸ்தரோடே திரும்பவும் கோபிலே யுத்தம் நடந்தது; ஊசாத்தியனாகிய சீபெக்காய் இராட்சத சந்ததியான சாப்பை வெட்டிப்போட்டான்.

2சாமு 21:19. பெலிஸ்தரோடு இன்னும் வேறொரு யுத்தம் கோபிலே உண்டானபோது, யாரெயோர்கிமின் குமாரனாகிய எல்க்கானான் என்னும் பெத்லகேமியன் காத் ஊரானாகிய கோலியாத்தின் சகோதரனை வெட்டினான்; அவன் ஈட்டித் தாங்கானது நெய்கிறவர்களின் படைமரம் அவ்வளவு பெரிதாயிருந்தது.

2சாமு 21:20. இன்னும் ஒரு யுத்தம் காத் ஊரிலே நடந்தபோது, அங்கே நெட்டையனான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் கைகளில் அவ்வாறு விரல்களும் அவன் கால்களில் அவ்வாறு விரல்களும், ஆக இருபத்து நான்கு விரல்களுள்ளவன்; இவனும் இராட்சத பிறவியாயிருந்து,

2சாமு 21:21. இஸ்ரவேலை நிந்தித்தான்; தாவீதின் சகோதரனான சீமேயாவின் குமாரனாகிய யோனத்தான் அவனை வெட்டினான்.

2சாமு 21:22. இந்த நாலுபேரும் காத்தூரிலே இராட்சதனுக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்.

தாவீதினுடைய ஆட்சிக்காலத்தின் இறுதியிலே பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் செய்கிறார்கள். தாவீது ஏற்கெனவே பெலிஸ்தரை பல யுத்தங்களிலே முறியடித்திருக்கிறார். பெலிஸ்தரில் அநேகர் ஏற்கெனவே சங்காரமாகிவிட்டார்கள். ஆனாலும் தாவீதின் கடைசி காலத்திலே, பெலிஸ்தர் மறுபடியும் இஸ்ரவேலின்மேல் யுத்தம் செய்கிறார்கள். பெலிஸ்தரின் எண்ணிக்கை அதிகமாயில்லை. அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருக்கிறார்கள்.

பெலிஸ்தர் மத்தியிலே இராட்சத புத்திரர் இருக்கிறார்கள். பெலிஸ்தர் இருக்கும் வரையிலும், அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் சமாதானத்திற்கு இடையூறாக இருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள்.

பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் செய்தபோது, தாவீதும், அவரோடேகூட, அவருடைய சேவகரும் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். தாவீது வயது முதிர்ந்தவராயிருக்கிறார். அவருடைய சரீரத்தில் பழைய பலமில்லை. ஆனாலும் பெலிஸ்தருக்கு விரோதமாக இஸ்ரவேலர் யுத்தம்பண்ணப்போகும்போது, தாவீது எருசலேமிலே, தன்னுடைய அரண்மனையில் படுத்து ஓய்வெடுக்கவில்லை. அவரும் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்.

தாவீதின் சரீரம் தளர்ந்துபோயிற்று. ஆனாலும் அவருடைய மனம் தளர்ந்துபோகவில்லை. தாவீக்கு அதிக வயதானதினால் அவர் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ண முடியாமல் விடாய்த்துப்போகிறார். தாவீதின் சரீரம் அவருடைய மனதின் வேகத்திற்கு ஒத்துழைக்கவில்லை. பெலிஸ்தரில் இராட்சத புத்திரர் இருக்கிறார்கள். அவர்களுக்கு தாவீதின் சரீர பலவீனம் தெரிந்திருக்கிறது. இராட்சதர் தாவீதின் சரீர பலவீனத்தைப் பயன்படுத்தி அவரைக் கொன்றுபோட திட்டம்பண்ணுகிறார்கள்.

அப்பொழுது முந்நூறு சேக்கல் நிறை வெண்கலமான ஈட்டியைப் பிடிக்கிறவனும், புதுப்பட்டயத்தை அரையிலே கட்டிக்கொண்டவனுமான இஸ்பிபெனோப் என்னும் இராட்சத புத்திரரில் ஒருவன் தாவீதை வெட்டவேண்டும் என்று இருக்கிறான் *(2சாமு 21:16)*.

தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது கர்த்தரையே நினைத்துக்கொண்டிருக்கிறார். கர்த்தர் தாவீதைப் பாதுகாக்கிறார். அப்போது செருயாவின் குமாரனாகிய அபிசாய் ராஜாவுக்கு உதவியாக வந்து, பெலிஸ்தனை வெட்டிக் கொன்றுபோடுகிறான் *(2சாமு 21:17)*.

தாவீது விடாய்த்தவராயிருக்கிறார். அபிசாய் தாவீதுக்கு உதவியாக வந்து, இராட்சதனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவனை வெட்டிப்போடுகிறான். ஆனாலும் இராட்சதன் செத்துப்போகவில்லை. தாவீது இராட்சத புத்திரரை தன்னுடைய கையினால் வெட்டிக்கொல்லவேண்டுமென்று விரும்புகிறார். அபிசாய் தாவீது ராஜாவின் விருப்பத்தை நிறைவேற்றுகிறான்.

"இந்த நாலுபேரும் காத்தூரிலே இராட்சதனுக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்" *(2சாமு 21:22)*.

தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, விடாய்த்துப்போனவராயிருக்கிறார். ஆனாலும் அவர் பெலிஸ்தருக்கு பயந்து தப்பித்து ஓடிப்போய்விடவில்லை. தாவீதின் சரீரத்தில் பெலமில்லை. ஆனாலும் தாவீது யுத்தக்களத்திலே நிற்கிறார். கர்த்தர் தாவீதுக்கு தேவையான உதவிகளை ஏற்ற வேளையில் அனுப்புகிறார்.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து களைப்பாயிருந்த வேளையில், பிதாவாகிய தேவனானவர், தம்முடைய தூதனை அனுப்பி, கிறிஸ்துவானவரை பலப்படுத்தினார்.

விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் சத்துருக்களோடு போராட்டம் உண்டு. பரிசுத்தவான்கள் பல சமயங்களில் சோர்ந்துபோகிறார்கள். விசுவாசிகளின் சோர்வை சாத்தான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். விசுவாசிகள் சாத்தானுக்கு பயப்படாமல் அவனை எதிர்த்து நிற்கவேண்டும். நாம் சத்துருவுக்கு எதிர்த்து நிற்கும்போது, பிசாசானவன் தோற்று ஓடிப்போவான். நாம் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருப்போம்.

பெலிஸ்தரில் இராட்சதன் ஒருவன் தாவீதை வெட்டவேண்டும் என்று இருந்தபோது, அபிசாய் தாவீதுக்கு உதவியாக வந்து, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றுபோடுகிறான். அப்பொழுது தாவீதின் மனுஷர் "இஸ்ரவேலின் விளக்கு அணைந்துபோகாதபடிக்கு, நீர் இனி எங்களோடே யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம்" *(2சாமு 21:17)* என்று தாவீதுக்கு ஆணையிட்டுச் சொல்லுகிறார்கள்.

இதற்கு பின்பும் பெலிஸ்தர் இஸ்ரவேலின் மேல் யுத்தம்பண்ண வருகிறார்கள். அந்த யுத்தங்களிலே தாவீதின் சேவகர் பெலிஸ்தரின் இராட்சத புத்திரரைக் கொன்றுபோடுகிறார்கள்.

அதற்குப் பின்பு, பெலிஸ்தரோடே திரும்பவும் கோபிலே யுத்தம் நடக்கிறது; ஊசாத்தியனாகிய சீபேக்காய் இராட்சத சந்ததியான சாப்பை வெட்டிப்போடுகிறான் *(2சாமு 21:18).* 'ஊசாத்தியானாகிய சிபெக்காய், அகோகியனாகிய ஈலாய்'' *(1நாளா 11:29).*

பெலிஸ்தரோடு இன்னும் வேறொரு யுத்தம் கோபிலே உண்டாகிறது. அந்த யுத்தத்தில் யாரெயொர்கிமின் குமாரனாகிய எல்க்கானான் என்னும் பெத்லகேமியன் காத் ஊரானாகிய கோலியாத்தின் சகோதரனை வெட்டுகிறான்; அவன் ஈட்டித் தாங்கானது நெய்கிறவர்களின் படைமரம் அவ்வளவு பெரிதாயிருக்கிறது *(2சாமு 21:19).* "யோவாபின் தம்பி ஆசகேல் மற்ற முப்பதுபேரில் ஒருவன்; அவர்கள் யாரெனில், பெத்லகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன் எல்க்கானான்'' *(2சாமு 23:24).*

இன்னும் ஒரு யுத்தம் காத் ஊரிலே நடக்கிறது. அப்போது, அங்கே நெட்டையனான ஒரு மனுஷன் இருக்கிறான்; அவன் கைகளில் அவ்வாறு விரல்களும் அவன் கால்களில் அவ்வாறு விரல்களும், ஆக இருபத்து நான்கு விரல்களுள்ளவன்; இவனும் இராட்சத பிறவியாயிருந்து, இஸ்ரவேலை நிந்திக்கிறான்; தாவீதின் சகோதரனான சீமேயாவின் குமாரனாகிய யோனத்தான் அவனை வெட்டுகிறான் *(2சாமு 21:20,21).*

"அம்னோனுக்குத் தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி'' *(2சாமு 13:3).*

இந்த இராட்சதர் புத்திரர் எல்லோரும் ஏனோக்கின் புத்திரரில் மீதமானவர்கள். இவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு சத்துருக்களாயிருந்தார்கள். இவர்கள் இஸ்ரவேலை நிந்தித்தார்கள். இவர்கள் எல்லோருமே விழுந்தார்கள். இராட்சதர்கள் தங்கள் சுயபலத்தை நம்பினார்கள். தாவீதின் சேவகர்கள் இராட்சதரைப்போல சரீர பெலமுள்ளவர்களல்ல. ஆனாலும் கர்த்தருடைய உதவி தாவீதின் சேவகருக்கு கிடைக்கிறது. கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது நமக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்க முடியாது. சத்துரு எவ்வளவு பெரியவனாகயிருந்தாலும், அவனுக்கு தோல்வியே உண்டாகும்.

தாவீது ஆரம்பத்தில் ஒரு இராட்சதனோடு யுத்தம்பண்ணினார். இங்கே நான்கு இராட்சதரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "இந்த நாலுபேரும் காத்தூரிலே இராட்சதனுக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்'' *(2சாமு 21:22).*

விசுவாசிகளாகிய நமக்கு கடைசி சத்துரு மரணம். மரணம் ஏனோக்கின் குமாரனாகிய இராட்சதனைப்போல பெரியதாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் மரணத்தை ஜெயித்தார். கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாமும், கிறிஸ்துவினாலே, மரணத்தை ஜெயிப்போம் என்னும் நிச்சயமான நம்பிக்கை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

22 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் தாவீது எழுதின துதியின் சங்கீதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. தாவீது எழுதின சங்கீதப் புஸ்தகத்திலும், இந்த சங்கீதம் சேர்க்கப்பட்டிருக்கிறது (18-ஆவது சங்கீதம்).

தாவீது கர்த்தருக்கு முன்பாக இந்த சங்கீதத்தைப் பாடுகிறார். இதன் பின்பு இந்த சங்கீதம் ராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்படுகிறது. சபையார் எல்லோரும் கர்த்தரைத் துதிக்கும்போது இந்த சங்கீதத்தைப் பாடும் வண்ணமாக, ராகத்தலைவன் இதற்கு இசை அமைத்திருக்கிறார்.

தாவீதுக்கு ஏராளமான பிரச்சனைகளும், கஷ்டங்களும், நெருக்கங்களும் உண்டாயிற்று. கர்த்தர் இந்தப் பிரச்சனைகளிலிருந்து தாவீதுக்கு எவ்வாறு விடுதலை கொடுத்தார் என்பது இந்தப் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தனக்கு செய்த எல்லா நன்மைகளையும் தாவீது நன்றியோடு நினைவுகூருகிறார். தாவீது தன்னுடைய முதிர்வயதில் இந்த சங்கீதத்தை எழுதியிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் தன்னுடைய ஜீவியகாலத்தில், தனக்கு காண்பித்த எல்லா கிருபைகளையும் இரக்கங்களையும், தாவீது இந்த சங்கீதத்தில் மொத்தமாக நினைவுகூர்ந்து எழுதுகிறார்.

தாவீது சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்து, அவர் இப்போது முதிர்வயதுள்ளவராயிருக்கிற காலம் வரையிலும், கர்த்தருடைய கிருபை அவருக்கு கிடைத்திருக்கிறது.

கர்த்தர் நமக்கும் நன்மை செய்திருக்கிறார். கர்த்தர் நமக்கு செய்த எல்லா நன்மைகளையும், அவர் நமக்கு காண்பித்த எல்லா கிருபைகளையும் நாம் நினைவுகூர்ந்து, கர்த்தரைத் துதிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்டவர்கள், எவ்வளவு காலங்கள் ஆனாலும், அந்தக் கிருபைகளை மறவாமல் தங்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

இந்த சங்கீதத்தின் தலைப்பு (2சாமு 22:1). தாவீது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். அவர் கர்த்தருக்குள் ஆறுதலாயிருக்கிறார். கர்த்தர் இதுவரையிலும் தனக்கு காண்பித்த கிருபைகளையும் இரக்கங்களையும் தாவீது நினைவுகூருகிறார். இனிமேல் வரப்போகிற காலங்களிலும், கர்த்தர் தனக்கு கிருபையும் இரக்கமும் காண்பிப்பார் என்று தாவீது விசுவாசத்தோடு எதிர்பார்க்கிறார்.

தாவீது கர்த்தருக்குப் முன்பாகப் பாடின பாட்டு 2சாமு 22:1

2சாமு 22:1. கர்த்தர் தாவீதை அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும், நீங்கலாக்கி விடுவித்தபோது, அவன் கர்த்தருக்குப் முன்பாகப் பாடின பாட்டு:

கர்த்தருடைய ஜனத்திற்கு ஏராளமான சத்துருக்கள் இருப்பார்கள். நம்முடைய சத்துருக்கள் மூலமாக நமக்கு எப்போதுமே ஆபத்துக்கள் வருவதற்கு வாய்ப்புள்ளது. நாமும் பல சமயங்களில், நம்முடைய சத்துருக்களின் கைகளில் விழுந்துவிடக்கூடிய ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்திருப்போம்.

தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இருதயமாயிருக்கிறது. அவரிடத்தில் மனுஷருக்கு ஏற்ற இருதயமில்லை. தாவீதை அநேகர் பகைத்தார்கள். அநேகர் அவருக்கு சத்துருக்களாயிருந்தார்கள். தாவீதின் சத்துருக்கள், அவர் அழிந்துபோக வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். விசுவாசிகளாகிய நம்மை இந்த உலகம் பகைக்கும்போது, நாம் அதைப் பார்த்து ஆச்சரியப்படக்கூடாது. கர்த்தர் நம்மை நேசிக்கும்போது, உலகம் நம்மைப் பகைக்கிறது.

கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற கடமைகளை நாம் பயபக்தியாய்ச் செய்யவேண்டும். கர்த்தரை நம்பி நாம் நன்மை செய்யும்போது, நமக்கு எவ்வளவு ஆபத்துக்கள் வந்தாலும், கர்த்தர் நம்மை அந்த ஆபத்துக்களிலிருந்து விடுவித்து, நமக்கு உதவிசெய்வார். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும் நமக்கு சத்துருக்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

நாம் பரலோகத்திலே பிரவேசிக்கும் வரையிலும், இந்தப் பிரபஞ்சத்தில் நம்முடைய சத்துருக்கள் நமக்கு விரோதமாக கிரியை செய்வார்கள்.

"கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (2தீமோ 4:18).

கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்டவர்கள், கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு ஒவ்வொரு நாளும் அவருடைய புதிய கிருபைகள் கிடைக்கும். நாம் கர்த்தருடைய புதிய கிருபைகளைப் பெற்றுக்கொள்ளும்போது, நாம் கர்த்தரை புதிய பாட்டுக்களால் பாடி துதிக்கவேண்டும்.

கர்த்தர் தாவீதை அவருடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும், நீங்கலாக்கி விடுவித்தார். அப்போது, தாவீது கர்த்தருக்குப் முன்பாக இந்தப் பாட்டை நன்றியுள்ள இருதயத்தோடு பாடினார். கர்த்தர் நமக்கு நன்மைகளை செய்யும்போது, நாம் காலதாமதம்பண்ணாமல் அவரைத் துதிக்கவேண்டும். கர்த்தர் தாவீதை அவருடைய சத்துருக்களின் கைகளுக்கு நீங்கலாக்கி விடுவித்த உடனேயே, அவர் கர்த்தருக்கு முன்பாக இந்தத் துதிப்பாடலைப் பாடுகிறார்.

கர்த்தர் ஜீவனுள்ளவர்

தாவீது கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார். கர்த்தர் பரிபூரணமுள்ளவர். தாவீது கர்த்தருடைய குணாதிசயங்களை நினைவுகூர்ந்து அவரை நன்றியோடு துதிக்கிறார். கர்த்தருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. கர்த்தரோடு யாரையும் ஒப்பிடவும் முடியாது.

2சாமு 22:32. கர்த்தரை அல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றி கன்மலையும் யார்?

புறஜாதியார் விக்கிரகங்களை தங்களுக்கு தெய்வங்களாக ஆக்கியிருக்கிறார்கள். விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. வல்லமையுமில்லை. விக்கிரகங்கள் எல்லாமே மாயையாயிருக்கிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஜீவனுள்ளவர். அவர் நமக்கு கன்மலையானவர். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. அவர் தம்முடைய கிரியைகள் எல்லாவற்றையும் பரிபூரணமாக செய்து முடிக்கிறவர். கர்த்தருடைய வார்த்தைகளெல்லாம் புடமிடப்பட்டவைகள். நாம் கர்த்தருடைய வார்த்தைகளை நம்பவேண்டும்.

2சாமு 22:47. கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக; என் ரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் உயர்ந்திருப்பாராக.

கர்த்தரும் தாவீதும்

தாவீது கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். அவர் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார். தாவீது கர்த்தரிடத்திலிருந்து ஏராளமான நன்மைகளை பெற்றிருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதின் தேவனாகவும் இருக்கிறார். கர்த்தர் தாவீதின் தேவனாகயிருப்பதினால், தாவீது கர்த்தரிடத்திலிருந்து எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், கர்த்தர் நம்முடைய தேவனாயிருக்கவேண்டும்.

தாவீது கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். தாவீது கர்த்தருடைய வழிகளை காத்துக்கொண்டு வருகிறார். கர்த்தர் தாவீதுக்கு கன்மலையாயிருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு பலத்த அரணானவர்.

2சாமு 22:7. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார்; என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று.

2சாமு 22:22. கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டு வந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை.

2சாமு 22:2. கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் ரட்சகருமானவர்.

2சாமு 22:33. தேவன் எனக்குப் பலத்த அரணானவர்; அவர் என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர்.

2சாமு 22:3. தேவன் நான் நம்பியிருக்கிற துருக்கமும், என் கேடகமும், என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர்; என்னை வல்லடிக்கு நீங்கலாக்கி ரட்சிக்கிறவர் அவரே.

2சாமு 22:47. கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக; என் ரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் உயர்ந்திருப்பாராக.

தாவீது பல சமயங்களில் கெபிகளிலும், கன்மலைகளிலும் ஒளிந்து, ஆபத்துக்கு தப்பியிருக்கிறார். கர்த்தரே தாவீதுக்கு பிரதான மறைவிடமாயிருக்கிறார். கர்த்தர் தாவீதின் கோட்டையாகயிருப்பதினால், அவர் கர்த்தருக்குள் பாதுகாப்பாயிருக்கிறார்.

"அப்பொழுது சவுல்: இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவன் மனுஷரையும் வரையாடுகளுள்ள கன்மலைகளின்மேல் தேடப்போனான்" *(1சாமு 24:2).*

2சாமு 22:51. தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான ரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார்.

இரட்சிப்பு கர்த்தருடையது. கர்த்தருடைய இரட்சிப்பு தாவீதைப் பாதுகாக்கிறது. கர்த்தர் தாவீதை அவனுடைய சத்துருக்களின் கைகளுக்கு நீங்கலாக்கி விடுவித்து, காத்துக்கொள்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு தாவீதின் வம்சத்திலே ஏற்படுத்தப்பட்ட இரட்சணியக் கொம்பாயிருக்கிறார். "தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

தாவீதுக்கு ஏராளமான சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாவீதுக்கு எதிராக வந்தார்கள். கர்த்தர் தாவீதுக்கு ஆதரவாகயிருந்தார்.

2சாமு 22:19. என் ஆபத்துநாளிலே எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்.

தாவீது பல சமயங்களில் இருளிலிருப்பதுபோல இருந்தார். காணாமல் போனவரைப்போல தவித்துக்கொண்டிருந்தார். கர்த்தர் தாவீதுக்கு விளக்காயிருக்கிறார். அவர் தாவீதின் இருளை வெளிச்சமாக்குகிறார்.

2சாமு 22:29. கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர்; கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நம்முடைய தேவனாகவும், கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தர் தாவீதுக்கு செய்த நன்மைகளை நமக்கும் செய்வார். அதைவிட அதிகமான நன்மைகளையும் செய்வார். நாம் வேண்டிக்கொள்வதற்கும், நினைப்பதற்கும் அதிகமான நன்மைகளை கர்த்தர் நமக்கு செய்வார். நம்முடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தமும், அவருடைய திட்டமும் நிறைவேறும்.

கர்த்தர் ஸ்துதிக்குப் பாத்திரர்

கர்த்தர் தாவீதின் தேவனானவர். ஆகையினால் அவர் கர்த்தரை நம்புகிறார்.

2சாமு 22:3. தேவன் நான் நம்பியிருக்கிற துருக்கமும், என் கேடகமும், என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர்; என்னை வல்லடிக்கு நீங்கலாக்கி ரட்சிக்கிறவர் அவரே.

2சாமு 22:4. ஸ்துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாக்கி ரட்சிக்கப்படுவேன்.

2சாமு 22:50. இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள் உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்.

கர்த்தர் தாவீதுக்கு செய்த நன்மைகள்

கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளை தாவீது மறவாமல் நினைவுகூருகிறார். அந்த நன்மைகளை தாவீது மற்றவர்களுக்கும் சொல்லுகிறார். கர்த்தர் தாவீதின் ஜீவியத்தில் பெரிய காரியங்களை செய்திருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு செய்த ஏராளமான நன்மைகள் இந்தப் பாடலில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாவீதை விடுவித்தார். அவர் தாவீதுக்கு ஜெயத்தைக் கொடுத்தார். கர்த்தர் தனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும் தாவீது கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்.

கர்த்தர் தாவீதுக்கு மகா பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்கிறார். தாவீதுக்கு ஏராளமான ஆபத்துக்கள் உண்டாயிற்று. அவருடைய ஜீவனுக்கு மோசங்களும் உண்டாயிற்று. கர்த்தரோ தமது இரட்சிப்பின் கிருபையினால் தாவீதை அவருடைய ஆபத்துக்களுக்கும், ஜீவமோசங்களுக்கும் விலக்கி காத்துக்கொண்டார்.

2சாமு 22:40. யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர்.

2சாமு 22:41. நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

2சாமு 22:49. அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர்; எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்மேல் என்னை உயர்த்திக் கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.

சவுல் தாவீதுக்கு விரோதமாக எழும்பினார். தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று சவுல் அவரைப் பின்தொடர்ந்தார். தாவீது இந்த சம்பவத்தை ஒரு உவமையாகச் சொல்லுகிறார்.

2சாமு 22:5. மரண அலைகள் என்னைச் சூழ்ந்து கொண்டு, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.

2சாமு 22:6. பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது; மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது.

தாவீதின்மேல் மரண அலைகள் மோதிற்று. மரணக்கண்ணிகள் அவர்மேல் விழுந்தது. தாவீதால் தனக்குத்தானே உதவிசெய்து கொள்ளமுடியாது. அவர் மரண அலைகளுக்கு முன்பாகவும், மரணக்கண்ணிகளுக்கு முன்பாகவும் பெலனற்றவராயிருக்கிறார். தாவீது ஆபத்தான சூழ்நிலையிருக்கும்போது, கர்த்தர் அவருக்கு உதவிசெய்து, அவருடைய ஆபத்துக்களிலிருந்து அவரை மீட்டுக்கொள்கிறார்.

தனக்கு நெருக்கங்கள் உண்டாகும்போதெல்லாம் தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது வழக்கம். தாவீது நமக்கும் ஒரு நல்ல முன்மாதிரியை சொல்லுகிறார். நமக்கும் நெருக்கங்கள் வரும்போது நாம் கர்த்தரை நோக்கி அபயமிடவேண்டும். பிள்ளைகள் பெற்றோரிடத்தில் தங்கள் நெருக்கங்களைப்பற்றிச் சொல்லுவதுபோல, நாமும் கர்த்தரிடத்தில் நம்முடைய நெருக்கங்களையும், பாடுகளையும், பிரச்சனைகளையும் சொல்லவேண்டும்.

2சாமு 22:7. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார்; என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று.

கர்த்தர் தாவீதின் ஜெபத்தைக் கேட்டு அவருக்கு உதவி செய்ய வருகிறார். கர்த்தர் தனியாகவே வருகிறார். அவருக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. கர்த்தர் தாவீதுக்கு ஆதரவாகவும், அவருடைய சத்துருக்களுக்கு விரோதமாகவும் பெரிய காரியங்களை செய்கிறார்.

சீனாய் மலையிலே கர்த்தருடைய தெய்வீக மகிமையும் மகத்துவமும் வெளிப்பட்டது. கர்த்தர் தாவீதை இரட்சிப்பதற்காக வரும்போது, சீனாய் மலையிலே வெளிப்பட்ட அதே வல்லமை, இப்போதும் வெளிப்படுகிறது.

2சாமு 22:8. அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது; அவர் கோபங்கொண்டபடியால் வானத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது.

2சாமு 22:9. அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று, அவர் வாயிலிருந்து அக்கினி புறப்பட்டது, அதனால் தழல் மூண்டது.

2சாமு 22:10. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்; அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது.

2சாமு 22:11. கேருபீனின்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார். காற்றின் செட்டைகளின்மீதில் தரிசனமானார்.

2சாமு 22:12. ஆகாயத்து மேகங்களிலே கூடிய தண்ணீர்களின் இருளைத் தம்மைச் சுற்றிலும் இருக்கும் கூடாரமாக்கினார்.

2சாமு 22:13. அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் நெருப்புத்தழலும் எரிந்தது.

2சாமு 22:14. கர்த்தர் வானத்திலிருந்து குமுறி, உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்.

2சாமு 22:15. அவர் அம்புகளை எய்து, அவர்களைச் சிதற அடித்து, மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார்.

2சாமு 22:16. கர்த்தருடைய கண்டிதத்தினாலும், அவருடைய நாசியின் சுவாசக் காற்றினாலும் சமுத்திரத்தின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது.

கர்த்தர் தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறார். அவர் தாவீதுக்கு விசேஷித்த கிருபைகளையும், விசேஷித்த சிலாக்கியங்களையும் கொடுத்து, அவரை ஆசீர்வதிக்கிறார்.

2சாமு 22:20. என்மேல் அவர் பிரியமாயிருந்தபடியால், விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்னைத் தப்புவித்தார்.

கர்த்தருடைய இரட்சிப்பு, அவருடைய பொதுவான பராமரிப்பினால் வருவதில்லை. அது கர்த்தருடைய அன்பின் உடன்படிக்கையினால் வருகிறது. தாவீது இங்கு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின்மேல் பிரியமாயிருக்கிறார். ஆனபடியினால் பிதாவானவர், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை தாங்கி ஆதரிக்கிறார்.

"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார்" (ஏசா 42:1,2).

கர்த்தர் தாவீதுக்கு யுத்தங்களிலே வெற்றியைக் கொடுக்கிறார். அவர் தாவீதின் சிரசிலே கிரீடத்தை சூட்டுகிறார். கர்த்தர் தாவீதை ஆபத்துக்களிலிருந்து இரட்சிப்பதோடு, அவரை ஆசீர்வதிக்கவும் செய்கிறார். தாவீது கர்த்தருக்குள் செழித்திருக்கிறார். தாவீதுக்கு கர்த்தர் மூலமாக விடுதலையும் விசலாமும் கிடைத்திருக்கிறது.

2சாமு 22:17. உயரத்திலிருந்து அவர் கை நீட்டி, என்னைப் பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.

2சாமு 22:18. என்னிலும் பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என் பகைஞருக்கும் என்னை விடுவித்தார்.

2சாமு 22:19. என் ஆபத்துநாளிலே எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்.

2சாமு 22:20. என்மேல் அவர் பிரியமாயிருந்தபடியால், விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்னைத் தப்புவித்தார்.

கர்த்தர் தாவீதுக்கு பெலத்தையும், வேகத்தையும், யுத்தப்பயிற்சிகளையும் கொடுக்கிறார். தாவீது ஆரம்பத்தில் ஆடுகளை மேய்த்துகொண்டிருந்தவர். கர்த்தர் அவருக்கு யுத்த பயிற்சிகளை கொடுத்து, அவரை யுத்தம்பண்ண தகுதிப்படுத்துகிறார். தாவீது யுத்தத்தின் கஷ்டங்களையும், நஷ்டங்களையும், ஜெயங்களையும் தாங்கிக்கொள்ளுமளவுக்கு பயற்சி பெற்றிருக்கிறார்.

2சாமு 22:35. வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்.

2சாமு 22:36. உம்முடைய ரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்; உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்.

2சாமு 22:37. என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்.

கர்த்தர் தாவீதை தம்முடைய யுத்தங்களை நடத்துமாறு அழைத்தார். தாவீதை அழைத்தவர் உண்மையுள்ளவர். கர்த்தர் தாவீதை யுத்தம்பண்ண அழைத்து அவருக்கு யுத்தம்பண்ணுவதற்கு தேவையான பயிற்சிகளையும் கொடுக்கிறார்.

தாவீதுக்கு யுத்தங்களில் ஜெயம் கிடைத்தது. சவுல், அப்சலோம், ஆகியோர்மீது மாத்திரமல்ல, அவருக்கு பெலிஸ்தர், மோவாபியர், அம்மோன் புத்திரர், சீரியர், இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தார் ஆகியோர்மீதும் ஜெயம் கிடைத்தது. யுத்தம் கர்த்தருடையது. தாவீது கர்த்தருடைய யுத்தத்தை நடத்தினார். கர்த்தர் தாவீதுக்காக யுத்தம்பண்ணினார். கர்த்தருடைய கிருபையினால் தாவீதுக்கு இந்த யுத்தங்களில் ஜெயம் கிடைத்தது. தாவீது தன்னுடைய சத்துருக்களை கீழ்ப்படுத்தினார். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு பகுதிகட்டுகிறவர்களானார்கள்.

தாவீதுக்கு கிடைத்த வெற்றிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2சாமு 22:38. என் சத்துருக்களைப் பின் தொடர்ந்து அவர்களை அழிப்பேன்; அவர்களை நிர்மூலமாக்கும்வரைக்கும் திரும்பேன்.

2சாமு 22:39. அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு என் பாதங்களின் கீழ் விழுந்தார்கள்; அவர்களை முறிய அடித்து வெட்டினேன்.

2சாமு 22:40. யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர்.

2சாமு 22:41. நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

2சாமு 22:42. அவர்கள் நோக்கிப்பார்க்கிறார்கள், அவர்களை ரட்சிப்பார் ஒருவருமில்லை; கர்த்தரை நோக்கிப்பார்க்கிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக்கிறதில்லை.

2சாமு 22:43. அவர்களை பூமியின் தூளாக இடித்து, தெருக்களின் சேற்றைப்போல அவர்களை மிதித்து சிதறப்பண்ணுகிறேன்.

கர்த்தர் தாவீதின் வழியை செவ்வைப்படுத்துகிறார். கர்த்தர் அவரை உயர்ந்த தலங்களில் நிறுத்துகிறார்.

2சாமு 22:33. தேவன் எனக்குப் பலத்த அரணானவர்; அவர் என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர்.

2சாமு 22:34. அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என் உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு பாதுகாப்பையும், பாக்கியத்தையும் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபையும் அவருடைய இரக்கமும், அவருடைய காருணியமும் தாவீதை பெரியவனாக்குகிறது.

2சாமு 22:36. உம்முடைய ரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்; உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்.

கர்த்தருடைய நீதி

கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளுக்கு தாவீது சாட்சி சொல்லுகிறார். தாவீதுக்கு பல சமயங்களில் ஆபத்துக்கள் வந்தது. அப்போது கர்த்தர் தமது பெரிதான கிருபையினால் தாவீதை அவருடைய ஆபத்துக்களுக்கெல்லாம் விலக்கி காத்துக்கொண்டார்.

2சாமு 22:21. கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதில் அளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

2சாமு 22:22. கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டுவந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை.

2சாமு 22:23. அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்; நான் அவருடைய பிரமாணங்களை விட்டு விலகாமல்,

2சாமு 22:24. அவர் முன்பாக மனஉண்மையாயிருந்து, என் துர்க்குணத்திற்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்.

2சாமு 22:25. ஆகையால் கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாகவும், தம்முடைய கண்களுக்கு முன் இருக்கிற என் சுத்தத்திற்குத்தக்கதாகவும் எனக்குப் பலனளித்தார்.

தாவீது இஸ்ரவேலின் ராஜாவாவதற்கு சவுல், இஸ்போசேத், அப்சலோம், சேபா ஆகியோர் தடையாயிருந்தார்கள். தாவீது ராஜாவான பின்பும், அவர்கள் தாவீதை சிங்காசனத்திலிருந்து கீழே இறக்கிவிட வேண்டுமென்று தீர்மானமாயிருந்தார்கள். அவர்கள் தாவீதுக்கு விரோதமாக பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். தாவீதுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைச் சொன்னார்கள். தாவீதின் வார்த்தைகளையும் கிரியைகளையும் தவறுதலாக வியாக்கியானம்பண்ணினார்கள்.

தாவீதின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. தாவீதின் வார்த்தையும் கிரியையும் ஒன்றாயிருக்கிறது. தாவீதின் சத்துருக்கள் அவரை நிந்தித்தாலும், தாவீதின் நற்குணத்திற்கு அவருடைய மனச்சாட்சி சாட்சி சொல்லுகிறது.

தாவீதின் ஜீவியத்தில் கர்த்தருடைய வார்த்தையே பிரமாணமாயிருக்கிறது. தாவீது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். தாவீது எங்கே இருந்தாலும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு, அவரை வழிநடத்துவதற்காக, அவருக்கு முன்னாகப் போகிறது. தாவீது எங்கே போனாலும் கர்த்தருடைய வார்த்தையையும் தன்னுடைய இருதயத்தில் சுமந்துகொண்டு போகிறார்.

மனுஷருடைய வாழ்க்கையில் பாவம் செய்வதற்கான குறுக்கு வழிகள் வரும். தாவீதோ பாவமான குறுக்கு வழிகளில் போகாமல், கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற நீதியின் பாதையில் போகிறார். தாவீது தன்னுடைய துன்மார்க்கத்தினால் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போய்விடவில்லை. கர்த்தர் தாவீதின் வழியை செவ்வைப்படுத்துகிறார். தாவீது ஒருபோதும் கர்த்தருடைய வழியை விட்டு விலகிப்போகவுமில்லை. கர்த்தருடைய கிருபை தாவீதோடு எப்போதும் கூடயிருக்கிறது. தாவீது துணிகரமாகப் பாவம் செய்துவிடாதவாறு கர்த்தருடைய கிருபை அவரை நீதியின் பாதையில் நடத்துகிறது.

தாவீது கோலியாத்தைக் கொன்றுபோட்டார். விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரை சங்காரம்பண்ணினார். கர்த்தரே தாவீதுக்கு ஜெயத்தைக் கொடுத்தார். தாவீது இஸ்ரவேல் தேசத்தில் உயர்ந்தவராகவும் இருக்கிறார். நற்குணமுள்ளவராகவும் இருக்கிறார். தாவீது தன்னுடைய ஜீவியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் தான் உயர்ந்திருப்பதை நினைத்து பெருமைப்படவில்லை. கர்த்தருடைய கிருபையினால் தனக்குள்ளே நற்குணங்கள் இருப்பதைப் பார்த்து, தாவீது கர்த்தருக்குள் சந்தோஷப்படுகிறார்.

கர்த்தர் தயவுள்ளவனுக்கு தயவுள்ளவர்

தாவீதுக்கு கர்த்தருடைய கிருபை கிடைத்திருக்கிறது. தாவீது தன்னுடைய கடந்தகால வாழ்க்கையை திரும்பிப் பார்க்கிறார். தன்னுடைய வருங்கால வாழ்க்கையையும் நோக்கிப் பார்க்கிறார். கர்த்தருடைய கிருபை அவருக்கு இதுவரையிலும் கிடைத்திருக்கிறது. அந்தக் கிருபை தனக்கு இனிமேலும் கிடைக்கும் என்று தாவீது நம்பிக்கையோடிருக்கிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எல்லோருக்குமே கர்த்தரிடத்தில் கிருபை உள்ளது. கர்த்தருடைய கிருபை அவருடைய பரிசுத்தவான்கள் எல்லோருக்கும் போதுமானது. கர்த்தருடைய கிருபை தாவீதுக்கும், அவருடைய சந்ததிக்கும் போதுமானதாயிருக்கிறது. கர்த்தர் நீதிமான்கள் எல்லோருக்கும் கிருபையுள்ளவராயிருக்கிறார்.

2சாமு 22:26. தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்,

2சாமு 22:27. புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடானவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்.

2சாமு 22:28. சிறுமைப்பட்ட ஜனத்தை ரட்சிப்பீர்; மேட்டிமையானவர்களைத் தாழ்த்த, உம்முடைய கண்கள் அவர்களுக்கு விரோதமாய்த் திருப்பப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் மனுஷருக்கு எவ்வாறு கொடுக்கப்படுகிறது என்பதை தாவீது இங்கே தெளிவுபடுத்துகிறார். மனுபுத்திரருக்கு கர்த்தருடைய பிரமாணம் தெரிந்திருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய சித்தத்தையும், திட்டத்தையும் அறிந்திருக்கவேண்டும்.

நம்முடைய இருதயம் செம்மையானதாயிருக்கும்போது கர்த்தர் நமக்கு நன்மை செய்வார். கிருபையுள்ளவர்களுக்கும், இரக்கமுள்ளவர்களுக்கும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கொடுக்கப்படும். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். கர்த்தர் தயவுள்ளவனுக்கு தயவுள்ளவராக இருப்பார்.

கர்த்தர் புனிதனுக்கு புனிதராகயிருப்பார். கர்த்தருக்குள் நீதியுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களும், கர்த்தருடைய நீதியிலும், நியாயத்திலும் சந்தோஷப்படுவார்கள்.

கர்த்தர் பரிசுத்தர். பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பரிசுத்தத்தை தியானித்து கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் கர்த்தரை தரிசிப்பார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் தயவுள்ளவர்களும், புனிதர்களும் இருப்பதுபோல, மாறுபாடுள்ளவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தவறான வழிகளைப் பின்பற்றிப்போகிறார்கள். துன்மார்க்கருக்கு வரும் தீங்குகளைப்பற்றி தாவீது வேறொரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறார். மாறுபாடானவனுக்கு கர்த்தர் மாறுபடுகிறவராக தோன்றுவார் என்று தாவீது இங்கே சுருக்கமாய்ச் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதையும், அவருடைய ராஜ்யத்தையும் ஆசீர்வதிக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணுகிறார். தன்னுடைய ராஜ்யம் இன்னும் விஸ்தாரமாகும் என்றும், தனக்கு இன்னும் அநேக யுத்தங்களில் ஜெயம் கிடைக்கும் என்றும் தாவீது நம்புகிறார்.

2சாமு 22:45. அந்நியர் இச்சகம் பேசி எனக்கு அடங்கி, என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

2சாமு 22:46. அந்நியர் முனைவிழுந்துபோய், தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள்.

தாவீது தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னுடைய சந்ததியைப்பற்றியும் சொல்லுகிறார். தாவீது கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். ஆகையினால் கர்த்தர் தனக்கு கிருபை செய்வார் என்பதில் அவருக்கு சந்தேகம் எதுவுமில்லை. தாவீதோ கர்த்தருடைய கிருபை தனக்கு கிடைத்திருப்பதுபோல, தன்னுடைய சந்ததிக்கும் கிடைக்கவேண்டுமென்று, கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணுகிறார்.

2சாமு 22:51. தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான ரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார்.

"உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன். உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச்சொன்னார்" *(2சாமு 7:15,16).*

தாவீது இங்கு தன்னுடைய சந்ததியைப்பற்றிச் சொல்லுவது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் சதாகாலமும் நிலைத்திருக்கும். நம்முடைய சந்தோஷங்கள், நம்பிக்கைகள் எல்லாமே, நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது.

23 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் தாவீதுடைய கடைசி வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது தன்னுடைய ராஜாசனத்தின் முடிவு பகுதிக்கு வந்திருக்கிறார். தாவீதின் கடைசி வார்த்தைகளில் சில, அவருடைய சந்ததியாருக்கும், சந்ததியாரைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது (2சாமு 23:1-7). தாவீதின் பராக்கிரமசாலிகள் (2சாமு 23:8-17). மூன்று பராக்கிரமசாலிகளில் பேர் பெற்றவன் (2சாமு 23:18-23). தாவீதின் மற்ற முப்பது பராக்கிரமசாலிகள் (2சாமு 23:24-29).

தாவீதுடைய கடைசி வார்த்தைகள் 2சாமு 23:1-7

2சாமு 23:1. தாவீதுடைய கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்;

2சாமு 23:2. கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது.

2சாமு 23:3. இஸ்ரவேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது: நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார்.

2சாமு 23:4. அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப்பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார் என்றார்.

2சாமு 23:5. என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ? சகலமும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார்; ஆதலால் என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?

2சாமு 23:6. பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக்கூடாததாய் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள்.

2சாமு 23:7. அவைகளை ஒருவன் தொடப்போனால், இருப்பாயுதத்தையும் ஈட்டித்தாங்கையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும்; அவைகள் இருக்கிற இடத்திலேதானே அக்கினியினால் முற்றும் சுட்டெரிக்கப்படும் என்றான்.

தாவீதுக்கு பின்பு சாலொமோன் இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அமர ஆயத்தமாயிருக்கிறார். தாவீது எருசலேமிலே தேவாலயம் கட்டுவதற்கு தேவையான பொருட்களையும், பொக்கிஷங்களையும் சேமித்து வைத்திருக்கிறார்.

தாவீது தன்னைப்பற்றிச் சொல்லும்போது, மிகவும் தாழ்மையாக "ஈசாயின் குமாரன்" என்று சொல்லுகிறார். தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தாலும், அவர் ஒரு ராஜாவின் குமாரனல்ல. அவர் ஈசாயின் குமாரன். ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை, கர்த்தர் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக உயர்த்தினார்.

கர்த்தர் தாவீதை அதிகமாய் நேசித்தார். அவரை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். தாவீது கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தர் தாவீதை மேன்மையாய் உயர்த்தினார். அவர் யாக்கோபின் தேவனால் அபிஷேகம் பெற்றவர். தாவீது கர்த்தருடைய ஜனத்திற்கு சேவை செய்கிறவர். தாவீது இஸ்ரவேல் புத்திரரை நீதியாய் நியாயம் விசாரித்து ஆளுகை செய்கிறார்.

அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தை ஆக்கிரமித்துவிடாதபடி, தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு பாதுகாப்பு கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே, தாவீது நீதியாயும் நியாயமாயும் ஆளுகை செய்கிறார்.

தாவீது இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடுகிறார். தாவீது இஸ்ரவேல் புத்திரரின் சமுதாய காரியங்களை கவனிப்பதோடு, அவர்களுடைய மார்க்க காரியங்களிலும் கவனம் செலுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேலின் தேவனானவர். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைத் துதிக்கவேண்டும். தாவீது கர்த்தரை ஆராதிப்பதற்கு சங்கீதங்களை இயற்றுகிறார். அந்த துதியின் கீதங்களை இன்பமாய்ப் பாடுகிறார் *(2சாமு 23:1)*.

தாவீது கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசுகிறார். கர்த்தருடைய வசனம் தாவீதின் நாவிலிருக்கிறது. தாவீது தன்னைப்பற்றிச் சொல்லுகிற வாக்கியங்கள், அவருடைய சந்ததிக்கு மிகவும் பிரயோஜனமானது. தாவீது ராஜாக்களுக்கு புத்தியுள்ள வார்த்தைகளையும், அவர்களை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

தாவீது இங்கு சொல்லுகிற வார்த்தைகளை கர்த்தருடைய ஆவியானவர் பேசுகிறார். அவர் இஸ்ரவேலின் தேவனானவர். கர்த்தரே இஸ்ரவேலின் கன்மலையுமானவர். தாவீது இங்கு கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, கர்த்தருடைய மூன்று நாமங்களைச் சொல்லுகிறார். அவையாவன: 1. கர்த்தருடைய ஆவியானவர் 2. இஸ்ரவேலின் தேவன் 3. இஸ்ரவேலின் கன்மலையுமானவர்.

தாவீது கர்த்தரைப்பற்றிச் சொல்லும் மூன்று நாமங்களும், கர்த்தருடைய திரித்துவத்தை வெளிப்படுத்துகிறது. தேவனாகிய கர்த்தர் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார். இஸ்ரவேலின் தேவனானவர் பிதாவாகிய தேவன். இஸ்ரவேலின் கன்மலையானவர் குமாரனாகிய தேவன். கர்த்தருடைய ஆவியானவர் பரிசுத்த ஆவியானவராகிய தேவன்.

கர்த்தருடைய ஆவியானவர் பிதாவானவர் மூலமாகவும், குமாரன் மூலமாகவும் பேசுகிறார். ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசுகிறார். அதிலும் விசேஷமாக கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதை ஏவுகிறார். தாவீதுக்கு தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவரின் ஏவுதலினால், தாவீது இந்த சங்கீதங்களை இயற்றுகிறார். தாவீது இந்த சத்தியத்தை உறுதிபண்ணும் வண்ணமாக, "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்" *(2சாமு 23:2)* என்று சொல்லுகிறார்.

சங்கீதங்களின் புஸ்தகத்தை தாவீது இயற்றினாலும், கர்த்தருடைய ஆவியானவரே, தாவீதை ஏவி, இந்த சங்கீதங்களை இயற்றியிருக்கிறார். இதனால் சங்கீதப்புஸ்தகத்திற்கு விசேஷித்த மேன்மையும், கனமும், மகிமையும் உண்டாயிருக்கிறது. நாம் கர்த்தரைத் துதிக்கும்போதும், அவருடைய வார்த்தைகளைத் தியானிக்கும்போதும், நாம் சங்கீதப் புஸ்தகத்தைப் பயன்படுத்தவேண்டும். சங்கீதப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற வாக்கியங்களெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் வாக்கியங்கள். ஆவியானவர் சங்கீதங்கள் மூலமாக தம்முடைய சத்தியங்களை நமக்கு உபதேசம் பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசின வார்த்தைகள் என்றும், இஸ்ரவேலின் கன்மலையுமானவர் தாவீதுக்கு சொல்லி உரைத்த வார்த்தைகள் என்றும், இரண்டு வாக்கியங்கள் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசின வார்த்தைகள், அவர் எழுதின எல்லா சங்கீதங்களிலும் இடம் பெற்றிருக்கிறது. இஸ்ரவேலின் கன்மலையுமானவர் தாவீதுக்கு சொல்லி உரைத்த வார்த்தைகள், அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் போதனையாக சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய சத்தியங்களை மற்றவர்களுக்கு போதிக்கிற ஊழியத்தை செய்கிறவர்கள், கர்த்தரிடத்திலிருந்து சத்தியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். தாங்கள் கற்றுக்கொண்ட சத்தியங்களை தங்கள் சொந்த ஜீவியத்தில் கடைப்பிடிக்கவேண்டும்.

தாவீது இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடினவர். தாவீது தான் இயற்றின சங்கீதங்களைப்பற்றிச் சொல்லும்போது, "இஸ்ரவேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது: நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார். அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப்பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார் என்றார்" *(2சாமு 23:3,4)* என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசுகிற வார்த்தைகள், தாவீதுக்கும், அவருடைய ராஜகுடும்பத்திற்கும் பொதுவான வார்த்தைகளாகும். நியாயாதிபதிகள் எவ்வாறு துரைத்தனம் பண்ணவேண்டும் என்று முதலாவதாக ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசுகிறார். கர்த்தருடைய வசனம் தாவீதின் நாவிலிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனும், இஸ்ரவேலின் கன்மலையுமானவர் தாவீதுக்கு தம்முடைய வார்த்தைகளை உரைக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை தாவீதின் மூலமாக சொல்லப்பட்டாலும், தாவீதும் அந்த வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். தாவீது இஸ்ரவேல் தேசத்து ராஜாசனத்தில் வீற்றிருந்தாலும் அவரும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். தாவீதும் கர்த்தருக்கு பயந்து தன்னுடைய கடமைகளை நிறைவேற்றவேண்டும். தாவீது நீதிபரராய் மனுஷரை ஆளுகை செய்யவேண்டும். அவர் தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணவேண்டும்.

தாவீது மாத்திரமல்ல, தாவீதுக்கு கீழே இஸ்ரவேல் தேசத்தில் உயர்ந்த பதவிகளிலிருக்கிற, பிரபுக்களும், நியாயாதிபதிகளும், அதிகாரிகளும் நீதிபரராய் மனுஷரை ஆளுகை செய்யவேண்டும். தாவீதைப்போலவே அவர்களும் தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளையும், பொறுப்புக்களையும் உண்மையாயும், உத்தமமாயும் நிறைவேற்றவேண்டும்.

துரைத்தனம்பண்ணுகிறவர்கள் மனுஷர்மீது துரைத்தனம்பண்ணுகிறார்கள். இதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. அவர்கள் மிருகங்கள்மீது துரைத்தனம்பண்ணவில்லை. அதிகாரிகள் மனுஷரை ஆளுகை செய்கிறார்கள். மனுஷரிடத்தில் மதியீனமும் குறைவுகளும் இருக்கும். மனுஷரை ஆளுகை செய்கிறவர்கள், மனுஷருடைய பாவசுபாவங்களையும், பலவீனங்களையும் கருத்தில்கொண்டு, அவர்களை ஆளுகை செய்யவேண்டும்.

துரைத்தனம்பண்ணுகிறவர்களும், நியாயாதிபதிகளும் தப்பிதம் செய்யாத நீதிமான்களாயும் பரிசுத்தவான்களாயும் இருந்தால் மாத்திரம் போதாது. மனுஷர் மத்தியிலே தப்பிதம் நடைபெறாதவாறு உத்திரவாதம் பண்ணவேண்டும். நியாயாதிபதிகளும் பரிசுத்தவான்களாயிருக்கவேண்டும். ஜனங்களும் பரிசுத்தவான்களாயிருக்க வேண்டும். ஜனங்கள் மத்தியிலும் பரிசுத்தம் காணப்படுவதற்கு, அவர்கள் தங்களுடைய கடமைகளை நீதியாய்ச் செய்யவேண்டும். அவர்கள் நீதிபரராய் மனுஷரை ஆளுகை செய்யவேண்டும். மேலும் அவர்கள் தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணவேண்டும்.

ராஜாக்களும், பிரபுக்களும், நியாயாதிபதிகளும், அதிகாரிகளும் ஜனங்களை ஆளுகை செய்யும்போது, அவர்கள் தெய்வபயமாய் துரைத்தனம் பண்ணவேண்டும். அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். மனுஷர் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயம் வருவதற்கு அவர்கள் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். இதுவே அடிப்படை மார்க்க உபதேசம்.

தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணுகிறவர், சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார் *(2சாமு 23:4)*. வெளிச்சம் எல்லோருக்கும் இனிமையானது. அது மனுஷருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். தங்களுடைய கடமைகளை நேர்த்தியாய்ச் செய்கிறவர்களுக்கு ஆறுதல் உண்டாயிருக்கும். அவர்கள் தங்கள் வேலையில் உண்மையாயும் சந்தோஷமாயும் இருப்பார்கள். அவர்களுடைய மனச்சாட்சி, அவர்களுடைய உண்மைக்கும், நேர்மைக்கும் சாட்சி கொடுக்கும். தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணுகிறவர்கள், தங்கள் மனச்சாட்சி கொடுக்கும் சாட்சியினால் மகிழ்ந்து களிகூருவார்கள்.

சூரியனுடைய விடியற்கால வெளிச்சம் பிரகாசமாயிருக்கும். நற்குணமுள்ள ராஜாக்களும் பிரபுக்களும், ஜனங்கள் மத்தியிலே சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல பிரகாசமாயிருப்பார்கள். அவர்களுடைய நீதியும், தெய்வபக்தியும், அவர்களுக்கு மகிமையையும், மேன்மையையும், கனத்தையும் கொடுக்கும்.

வெளிச்சம் ஆசீர்வாதமானது. தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணுகிற பிரபுக்கள் ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பார்கள். ஜனங்களுக்கு இதைவிட பெரிய ஆசீர்வாதம் இருக்க முடியாது. இரவு முழுவதும் இருள் இருக்கும். விடியற்காலத்திலே சூரியனுடைய வெளிச்சம் பிரகாசமாய்த் தோன்றும். அப்போது இருள் மறையும். ஜனங்கள் சூரியனுடைய விடியற்காலத்து வெளிச்சத்தை அன்போடு வரவேற்பார்கள்.

"அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்" *(ஏசா 58:8)*.

தாவீதுடைய கடைசி வார்த்தைகள், அவரையும், இஸ்ரவேலின் ராஜசந்ததியையும் பொதுவாக குறிப்பிடுகிறது. தாவீதின் வார்த்தைகள், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் குறிப்பிடுகிறது. தாவீதின் வார்த்தைகளெல்லாமே தீர்க்கதரிசன வார்த்தைகள் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

"நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார்" *(2சாமு 23:3)* என்னும் வாக்கியம், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும். பிதாவினுடைய சித்தத்தின் பிரகாரமாக, மனுஷர் மத்தியிலே மார்க்க காரியங்கள் ஒழுங்கும் கிரமமுமாகயிருக்கும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் தெய்வீக ஆராதனை நடைபெறும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப்பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப் போல இருப்பார் *(2சாமு 23:4)*.

கிறிஸ்துவானவர் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறார். அவரே கர்த்தருடைய கிளையாகவும், பூமியின் கனியாகவும் இருக்கிறார். "இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்" *(ஏசா 4:2)*.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதுக்கு இந்த சத்தியத்தை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தியிருக்கிறார். தாவீதுக்கு பல பிரச்சனைகளும், நெருக்கங்களும் வந்திருக்கிறது. தாவீதின் குடும்பத்தார் மூலமாக அவருக்கு கவலைகளும் துக்கங்களும் உண்டாயிற்று. இந்தப் பிரச்சனைகளுக்கு மத்தியில், கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசுகிறார். கர்த்தருடைய வசனம் தாவீதின் நாவிலிருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவரின் வெளிப்பாடு, தாவீதுக்கு துக்கத்தின் நடுவிலே சந்தோஷத்தையும், ஆறுதலையும் கொடுக்கிறது.

கர்த்தருடைய ஆவியானவர் தன்னைக்கொண்டு பேசின வார்த்தைகள், தனக்கு ஆறுதலாயிருக்கவேண்டும் என்று தாவீது எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் தன் மூலமாக பேசின வார்த்தைகளை தாவீது தியானித்துப் பார்க்கிறார்.

"என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ? சகலமும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார்; ஆதலால் என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?" *(2சாமு 23:5)* என்று தாவீது கர்த்தரிடத்தில் பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

இஸ்ரவேலின் நீதிபரர் மனுஷரை எவ்வாறு ஆளுகை செய்யவேண்டும் என்றும், ஜனங்களை துரைத்தனம்பண்ணுகிறவர் தெய்வபயமாய் எவ்வாறு துரைத்தனம்பண்ண வேண்டும் என்றும், கர்த்தருடைய ஆவியானவர் தாவீதுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் தாவீதின் வீட்டாரோ தெய்வபயமாய் துரைத்தனம்பண்ணவில்லை. அவர்கள் நீதிபரராய் ஜனங்களை ஆளுகை செய்யவில்லை. தாவீதின் வீட்டார் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலில்லை.

இஸ்ரவேலை ஆளுகை செய்கிறவர் எவ்வாறு இருப்பார் என்று, இஸ்ரவேலின் தேவனும், இஸ்ரவேலின் கன்மலையுமானவர் தாவீதுக்கு இவ்வாறு சொல்லி உரைத்திருக்கிறார். "நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார். அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப்பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார்" *(2சாமு 23:3,4)*.

ஆனால் தாவீதின் வீட்டாரோ, கர்த்தர் இங்கு சொன்ன பிரகாரமாக இல்லை. அவர்கள் கர்த்தர் சொன்ன பிரகாரமாக இருக்கவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். ஆனால் தாவீதின் வீட்டார் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாகயில்லை. அவர்களிடத்தில் தெய்வபயமில்லை.

தாவீது இப்போது உயிரோடிருக்கிறார். இப்போது தாவீதின் வீட்டிலே, பெரிய பிரச்சனை எதுவுமில்லை. தாவீது மரித்துப்போன பின்பு, அவருடைய வீட்டார் எப்படி இருப்பார்கள் என்பதை கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்துகிறார். தாவீதின் வீட்டாரிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்காது. அவர்கள் கர்த்தர்மீது பக்தியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள்.

தாவீது இப்போது செழித்திருக்கிறார். மேன்மையாய் உயர்த்தப்பட்டிருக்கிறார். தாவீது யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்றிருக்கிறார். அவர் இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடுகிறார். கர்த்தருடைய ஆவியானவர் தாவீதைக் கொண்டு பேசுகிறார். கர்த்தருடைய வசனம் தாவீதின் நாவிலிருக்கிறது. ஆனால் தாவீதின் குடும்பத்தாருக்கு இந்த ஆசீர்வாதத்தில் ஒன்றுகூட கடந்து வராது. அவர்கள் தாவீது அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை அனுபவிக்கமாட்டார்கள். அவர்கள் செழித்திருக்கமாட்டார்கள்.

தாவீது தன்னுடைய வருங்கால சந்ததியை நினைத்து மனம் வேதனைப்படுகிறார். அவர்கள் கர்த்தரோடு ஒப்புரவாகியிருக்கவேண்டும் என்றும், அவர்கள் நீதிமான்களாயிருக்கவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாயிருக்க வேண்டும் என்றும் தாவீது விரும்புகிறார். "என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படி இராதோ" என்று தாவீது ஏக்கத்தோடு சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய பின்சந்ததியாருக்கு வரும் பிரச்சனைகளை தீர்க்கதரிசனமாகப் பார்க்கிறார். தன்னுடைய சந்ததியைப்பற்றி நினைக்கும்போது தாவீதின் மனதிலே சந்தோஷமோ, உற்சாகமோ, ஆறுதலோ உண்டாகவில்லை. ஆனாலும் தாவீது கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறார். "சகலமும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார்" *(2சாமு 23:5)* என்று தாவீது விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் ஏராளமான பிரச்சனைகளை அனுபவிக்கலாம். அவர்கள் அநேக பாடுகளையும், வேதனைகளையும் கடந்துவரலாம். விசுவாசிகளுக்கு எவ்வளவு பாடுகள் இருந்தாலும், அவர்களுக்கு கர்த்தருக்குள்ளே ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் பிரச்சனைகளை அனுபவித்தாலும், கர்த்தர் மூலமாக அவர்களுக்கு ஆறுதல்களும் வரும்.

"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப் படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" *(2கொரி 4:8,9).*

கர்த்தர் நம்மோடு, இயேசுகிறிஸ்துவுக்குள்ளே, கிருபையின் உடன்படிக்கையை செய்திருக்கிறார். இந்த உடன்படிக்கை நிச்சயமான நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது. கர்த்தருடைய நித்திய ஆலோசனையில் அவர்களுடைய உடன்படிக்கை திட்டம்பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்மோடு செய்திருக்கிற உடன்படிக்கையின் விளைவுகள் நித்திய காலத்திற்கும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிறது.

கர்த்தர் நம்மோடு செய்திருக்கிற உடன்படிக்கை சகலமும் திட்டம் பண்ணப்பட்டிருக்கிறது. இந்த உடன்படிக்கையின் எல்லா காரியங்களும் ஒழுங்கும் கிரமமுமாகயிருக்கும். அவையெல்லாமே ஆச்சரியமாயும் நன்மையாயும் இருக்கும். கர்த்தருடைய கிருபையின் உடன்படிக்கை கர்த்தரை மகிமைப்படுத்தும், மத்தியஸ்தரைக் கனம்பண்ணும். கர்த்தரை விசுவாசிக்கிறவர்களுக்கு பரிசுத்தமும் ஆறுதலும் உண்டாகும்.

கர்த்தர் நம்மோடு செய்திருக்கிற உடன்படிக்கை நிச்சயமான உடன்படிக்கை. கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிற கிருபைகளும் இரக்கங்களும் நமக்கு நிச்சயமாகவே கொடுக்கப்படும். கர்த்தருடைய உடன்படிக்கையில் ஒரு சில நிபந்தனைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அந்த நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியும்போது, கர்த்தருடைய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தடையேதுமில்லை.

கர்த்தர் நம்மோடு செய்திருக்கும் உடன்படிக்கை நம்முடைய எல்லா இரட்சிப்புக்கும் ஏதுவானதாயிருக்கிறது. நம்மை இரட்சிப்பதற்கு கர்த்தருடைய கிருபையின் உடன்படிக்கையே போதுமானது. நம்முடைய இரட்சிப்பு, கர்த்தர் நம்மோடு செய்திருக்கும் உடன்படிக்கையை சார்ந்திருக்கிறது.

கர்த்தர் நம்மோடு செய்த உடன்படிக்கை நிச்சய உடன்படிக்கையாகவும், நித்திய உடன்படிக்கையாகவும், சகலமும் திட்டம் பண்ணப்பட்டிருக்கிற உடன்படிக்கையாகவும், நம்முடைய இரட்சிப்புக்கு ஏற்ற உடன்படிக்கையாகவும் இருப்பதினால், நாம் அதை வாஞ்சிக்கவேண்டும்.

தாவீது இந்த உடன்படிக்கைப்பற்றிச் சொல்லும்போது, "சகலமும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார்; ஆதலால் என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?" *(2சாமு 23:5)* என்று சொல்லுகிறார்.

பேலியாளின் மக்களுக்கு அழிவு வரும். அவர்கள் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்கு சமானமானவர்கள். முள்ளை ஒதுக்கி தள்ளுவதுபோல, பேலியாளின் மக்களையும் ஒதுக்கி தள்ளவேண்டும்.

தாவீது பேலியாளின் மக்களைப்பற்றிச் சொல்லும்போது, "பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக்கூடாததாய் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள். அவைகளை ஒருவன் தொடப்போனால், இருப்பாயுதத்தையும் ஈட்டித்தாங்கையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும்; அவைகள் இருக்கிற இடத்தில்தானே அக்கினியினால் முற்றும் சுட்டெரிக்கப்படும்" *(2சாமு 23:6,7)* என்று சொல்லுகிறார்.

தாவீது பேலியாளின் மக்களைப்பற்றிய வார்த்தைகளை, நியாயாதிபதிகளுக்கு ஆலோசனையாக சொல்லுகிறார். நியாயாதிபதிகள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பேலியாளின் மக்களைத் தண்டிக்கவேண்டும். அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளை ஒடுக்கவேண்டும்.

"அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்" *(சங் 101:8)*.

தாவீது பேலியாளின் மக்களைப்பற்றிச் சொல்லும்போது, இந்த வாக்கியங்களை நியாயாதிபதிகளுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளாகவும் சொல்லுகிறார். தாவீதின் வார்த்தைகள் விசேஷமாக அவருடைய குமாரருக்கும், பின்சந்ததியாருக்கும் எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது. தாவீதின் சந்ததியார் பேலியாளின் மக்களாக மாறிவிடக்கூடாது. ஆனால் தாவீதின் சந்ததியில் அநேகர் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள்.

தாவீதின் சந்ததியில் வருகிறவர்கள், எருசலேமிலுள்ள அரண்மனையில் வாசம்பண்ணினாலும், அவர்கள் தாவீதின் சந்ததியை சேர்ந்தவர்களாகயிருந்தாலும், அவர்களில் அநேகர் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். அவர்களால் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்புகளுக்கு தப்பிக்க முடியவில்லை. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. தாவீதின் சந்ததியார் பேலியாளின் மக்களாயிருக்கும்போது, கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களையும் நியாயந்தீர்க்கிறார்.

தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகள் 2சாமு 23:8-17

2சாமு 23:8. தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலிகளின் நாமங்களாவன: தக்கெமோனியின் குமாரனாகிய யோசேப்பாசெபெத் என்பவன் சேர்வைக்காரரின் தலைவன்; இவன் எண்ணூறுபேர்களின்மேல் விழுந்து, அவர்களை ஒருமிக்க வெட்டிப்போட்ட அதீனோ ஏஸ்னி ஊரானானவன்.

2சாமு 23:9. இவனுக்கு இரண்டாவது, அகோயின் குமாரனாகிய தோதோவின் மகன் எலெயாசார் என்பவன்; இவன் பெலிஸ்தர் யுத்தத்திற்குக் கூடின ஸ்தலத்திலே இஸ்ரவேல் மனுஷர் போகையில், தாவீதோடே இருந்து, பெலிஸ்தரை நிந்தித்த மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவனாயிருந்தான்.

2சாமு 23:10. இவன் எழும்பித் தன் கைசலித்து, தன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டினான்; அன்றையதினம் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்; ஜனங்கள் கொள்ளையிட மாத்திரம் அவனைப் பின்சென்றார்கள்.

2சாமு 23:11. இவனுக்கு மூன்றாவது, ஆகேயின் குமாரனாகிய சம்மா என்னும் ஆராரியன்; சிறுபயறு நிறைந்த வயலிருந்த இடத்திலே பெலிஸ்தர் ஏராளமாய்க் கூடி, ஜனங்கள் பெலிஸ்தரைக் கண்டு ஓடுகிற போது,

2சாமு 23:12. இவன் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றி, பெலிஸ்தரை மடங்கடித்துப்போட்டான்; அதனால் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்.

2சாமு 23:13. முப்பது தலைவருக்குள்ளே இந்த மூன்றுபேரும் அறுப்புநாளிலே அதுல்லாம் கெபியிலே தாவீதிடத்தில் போயிருந்தார்கள்; பெலிஸ்தரின் தண்டு ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினபோது,

2சாமு 23:14. தாவீது அரணான ஒரு இடத்தில் இருந்தான்; அப்பொழுது பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமிலே இருந்தது.

2சாமு 23:15. தாவீது பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல்கொண்டு: என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார் என்றான்.

2சாமு 23:16. அப்பொழுது இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலி முகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டுவந்தார்கள்; ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப் போட்டு:

2சாமு 23:17. கர்த்தாவே, தங்கள் பிராணனை எண்ணாமல் போய்வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக என்று சொல்லி, அதைக் குடிக்க மனதில்லாதிருந்தான்; இப்படி இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் செய்தார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகளைப்பற்றி இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் தாவீதுக்கு தேவைப்படும்போது, அவருக்கு விசேஷித்த உதவிகளை செய்ய வருவார்கள். தாவீது தன்னுடைய மேன்மைக்காகவும், மகிமைக்காகவும், பேர் பிரஸ்தாபத்திற்காகவும் இந்தப் பராக்கிரமசாலிகளுக்கு விசேஷித்த பயிற்சிகளைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் விசேஷித்த யுத்த பயிற்சிகளையும் பெற்றிருக்கிறார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகள், அவருடைய சேனையிலுள்ள மற்ற யுத்தவீரர்களுக்கு முன்மாதிரிகளாகவும், எடுத்துக்காட்டுக்களாகவும் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும், தாவீதின் பராக்கிரமசாலிகளைப்போல தைரியமுள்ளவர்களாயும், பராக்கிரமமுள்ளவர்களாயும் இருக்கவேண்டும்.

தாவீதின் பராக்கிரமசாலிகள் விசேஷித்த திறமையுள்ளவர்கள். இவர்கள் தங்களுடைய பேரை பெருமைப்படுத்துவதற்கு, விசேஷித்த பயிற்சிகளை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விசேஷித்த பிரகாரமாக, தங்களுடைய திறமைகளையும், பராக்கிரமங்களையும் வெளிப்படுத்துகிறார்கள். தாவீது ராஜாவை இஸ்ரவேல் தேசத்தின் சிங்காசனத்தில் அமரச்செய்வதற்கு, அவருடைய பராக்கிரமசாலிகள் முக்கிய காரணமாயிருந்தவர்கள். அவர்கள் தாவீதின் பாதுகாப்புக்கு உத்திரவாதம் கொடுக்கிறவர்கள்.

தாவீதின் ராஜசனத்திற்கு விரோதமாக யாரும் கலகம்பண்ணாதவாறு, அவருடைய பராக்கிரமசாலிகள், தேசத்திலே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவார்கள். தாவீது யுத்தங்களுக்கு போகும்போது, அவருடைய பராக்கிரமசாலிகளும், அவரோடுகூட யுத்தக்களத்திற்குப் போவார்கள். யுத்தங்களிலே தாவீதுக்கு வெற்றி கிடைக்க, அவருடைய பராக்கிரமசாலிகள் அவருக்கு உதவியாயிருப்பார்கள். இவர்கள் மூலமாய் இஸ்ரவேலின் எல்லைகளெல்லாம் விஸ்தாரமாயிற்று.

கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறவர்கள் மத்தியிலே உண்மையான வீரம் இருக்கும். அவர்கள் கர்த்தருக்காகவும், இஸ்ரவேல் தேசத்திற்காகவும் பக்திவைராக்கியமாயிருப்பார்கள். தாவீதின் சேனையில் சேர்ந்திருக்கிற சாதாரண யுத்தவீரர்களும், பராக்கிரமசாலிகளின் விசேஷித்த வீரத்தையும், திறமையையும், பலத்தையும், பராக்கிரமத்தையும் பார்த்து, தாங்களும் அவர்களைப்போல பராக்கிரமசாலிகளாயிருக்கவேண்டும் என்று விரும்புவார்கள்.

தாவீது கர்த்தரைத் துதித்து சங்கீதங்களைப் பாடுகிறார். தேவாலயத்தின் ஊழியத்திற்காக காணிக்கைகளைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

“அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப்பூர்வமாய், தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள்” *(1நாளா 29:6,7).*

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயமும், கர்த்தரிடத்தில் பக்தியும் அதிகரித்தபோது, அவர்கள் மத்தியிலே சரீர பலமும், பராக்கிரமமும் அதிகரிக்கிறது. மனுஷருடைய ஆத்துமா பலப்படும்போது, அவர்களுடைய சரீரமும் பலப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குள் பக்தி வைராக்கியமாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் தேசத்திற்கும் பக்தி வைராக்கியமாயிருக்கிறார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலாவது பிரிவில் மூன்று பராக்கிரமசாலிகளின் பேர்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய விவரம் வருமாறு: 1. அதீனோ *(2சாமு 23:8).* 2. அகோயின் குமாரனாகிய தோதோவின் மகன் எலெயாசார் *(2சாமு 23:9,10).* 3. ஆகேயின் குமாரனாகிய சம்மா என்னும் ஆராரியன் *(2சாமு 23:11,12).*

தாவீதின் பராக்கிரமசாலிகள் செய்த சாகசங்களும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தங்களிலே, தங்களுடைய பராக்கிரமங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதீனோ எண்ணூறுபேர்களின்மேல் விழுந்து, அவர்களை ஒருமிக்க வெட்டிப்போட்டவன். இவன் ஏஸ்னி ஊரானவன்.

அதீனோவுக்கு இரண்டாவது, அகோயின் குமாரனாகிய தோதோவின் மகன் எலெயாசார் என்பவன்; இவன் பெலிஸ்தர் யுத்தத்திற்குக் கூடின ஸ்தலத்திலே இஸ்ரவேல் மனுஷர் போகையில், தாவீதோடே இருந்து, பெலிஸ்தரை நிந்தித்த மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவனாயிருந்தவன். இவன் எழும்பித் தன் கைசலித்து, தன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டினவன் *(2சாமு 23:9,10).*

கோலியாத் இஸ்ரவேலரை நிந்தித்ததுபோல, எலெயாசார் பெலிஸ்தரை நிந்திக்கிறான். இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணாமல் ஓடிப்போகிறார்கள். எலெயாசாரோ எழும்பி நின்று பெலிஸ்தரை வெட்டுகிறான். பெலிஸ்தர் எலெயாசாரின் வீரத்தைப் பார்த்து பயப்படுகிறார்கள். எலெயாசாரின் கை சலித்துப்போயிற்று. ஆனாலும் அவன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளு மட்டும் பெலிஸ்தரை வெட்டுகிறான். தன்னிடத்தில் பலம் இருக்கும் வரையிலும், அவன் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான்.

விசுவாசிகளாகிய நாம், தாவீதின் பராக்கிரமசாலிகளைப்போல, கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருக்காக சேவை செய்யவேண்டும் என்னும் ஆர்வமும் உறுதியும் நம்முடைய மனதில் நிலைத்திருக்கவேண்டும். மாம்சத்தில் பலவீனமும், களைப்பும், சலிப்பும் ஏற்பட்டாலும், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி முன்னேறிச்செல்லவேண்டும்.

எலெயாசாருடைய கை சலித்துப்போனாலும், அவன் பட்டயத்தைக் கீழே போடவில்லை. சலித்துப்போன கையினால் பட்டயத்தைப் பிடித்து பெலிஸ்தரை வெட்டுகிறான். நாமும் சலித்துப்போனாலும், களைப்படைந்தாலும், சோர்வடைந்தாலும் கர்த்தருடைய ஊழியத்தை விட்டுவிடக்கூடாது. கர்த்தருக்காக தொடர்ந்து ஊழியம் செய்யவேண்டும்.

"கிதியோன் யோர்தானுக்கு வந்தபோது, அவனும் அவனோடிருந்த முந்நூறுபேரும் அதைக்கடந்துபோய், விடாய்த்திருந்தும் (சத்துருவை) பின்தொடர்ந்தார்கள்" *(நியா 8:4)*.

எலெயாசார் எழும்பித் தன் கைசலித்து, தன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டுகிறான்; அன்றையதினம் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பிக்கிறார்; ஜனங்கள் கொள்ளையிட மாத்திரம் அவனைப் பின்செல்கிறார்கள் *(2சாமு 23:10)*.

எலெயாசாருக்கு, மூன்றாவது, ஆகேயின் குமாரனாகிய சம்மா என்னும் ஆராரியன்; சிறுபயறு நிறைந்த வயலிருந்த இடத்திலே பெலிஸ்தர் ஏராளமாய்க் கூடி, ஜனங்கள் பெலிஸ்தரைக் கண்டு ஓடுகிற போது, இவன் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றி, பெலிஸ்தரை மடங்கடித்துப்போடுகிறான்; அதனால் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பிக்கிறார் *(2சாமு 23:11,12)*.

பராக்கிரமசாலிகள் யுத்தம்பண்ணினாலும் கர்த்தரே ஜெயத்தைக் கொடுக்கிறவர். மனுஷர் முயற்சிபண்ணினாலும், கர்த்தரே அவர்களுக்கு இரட்சிப்பை கொடுக்கிறவர். யுத்தம் கர்த்தருடையது. இரட்சிப்பும் கர்த்தருடையது.

தாவீதின் இந்த மூன்று பராக்கிரமசாலிகளுடைய வீரசாகசங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் மூன்றுபேரும் தாவீதுக்காக பெரிய காரியங்களை செய்தார்கள். முப்பது தலைவருக்குள்ளே இந்த மூன்றுபேரும் அறுப்புநாளிலே அதுல்லாம் கெபியிலே தாவீதிடத்தில் போயிருக்கிறார்கள்; பெலிஸ்தரின் தண்டு ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிறது. தாவீது அரணான ஒரு இடத்தில் இருக்கிறார்; அப்பொழுது பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமிலே இருக்கிறது *(2சாமு 23:13,14)*.

தாவீதின் பராக்கிரமசாலிகள் வனாந்தரத்திலும் அவரோடுகூடவே இருக்கிறார்கள். ஆகையினால் தாவீது அவர்களை அதிகமாய் நேசிக்கிறார். தாவீதின் பராக்கிரமசாலிகள் பெலிஸ்தருக்கு விரோதமாக தைரியமாய் யுத்தம்பண்ணி அவர்களைத் துரத்திவிடுகிறார்கள். இதனால் தாவீது அதுல்லாம் கெபியிலே பாதுகாப்பாய்த் தங்கியிருக்கிறார். பெலிஸ்தரால் இந்த கெபிக்கு அருகாமையில் வரமுடியவில்லை.

பெலிஸ்தருடைய தண்டு ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். தாவீதுக்கு அவருடைய பராக்கிரமசாலிகள் பாதுகாப்பாயிருக்கிறார்கள். அவர் அரணான இடத்திலே இருக்கிறார். பெலிஸ்தரின் தாணயமோ பெத்லகேமிலே இருக்கிறது. அவர்களால் தாவீதின் அரணுக்கு அருகாமையில் வரமுடியவில்லை. தாவீதின் பராக்கிரமசாலிகள் அவருக்கு பாதுகாப்பாயிருக்கிறார்கள். பெலிஸ்தர் பெத்லகேமிலே இருந்தாலும், அங்கேயும் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆகையினால் அவர்கள் பெத்லகேமிலும் தாணையத்தை வைத்திருக்கிறார்கள்.

பெத்லகேமின் ஒலிமுக வாசலிலே ஒரு கிணறு இருக்கிறது. தாவீது இந்தக் கிணற்றின் தண்ணீரின்மேல் ஆவலாயிருக்கிறார். இது அறுவடைக்காலம். மழை பெய்யாதகாலம். தாவீது தாகமாயிருக்கிறார். பூமி உஷ்ணமாயிருக்கிறது. தாவீதும் அவருடைய மனுஷரும் அதுல்லாம் கெபியிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை.

தாவீது பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்று தண்ணீரைக் குடிக்கவேண்டுமென்று விரும்புகிறார். தாவீது தன்னுடைய விருப்பத்தை பராக்கிரமசாலிகளிடம் சொல்லுகிறார்.

தாவீது பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல்கொண்டு: "என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார்" என்று கேட்கிறார் *(2சாமு 23:15)*.

அப்பொழுது இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டுவருகிறார்கள்; ஆனாலும் தாவீது அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப் போடுகிறார் *(2சாமு 23:16)*.

தாவீது தன்னுடைய செய்கைக்காக மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "கர்த்தாவே, தங்கள் பிராணனை எண்ணாமல் போய்வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக" என்று தாவீது கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். தாவீது அந்தத் தண்ணீரை குடிக்க மனதில்லாதிருக்கிறார் *(2சாமு 23:17)*.

தாவீது சிறுபிள்ளையாகயிருந்த காலத்திலிருந்து, பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற தண்ணீரைக் குடித்திருக்கிறார். அப்போது அவருடைய தாகம் தீர்ந்திருக்கிறது. எந்தத் தண்ணீரைக் குடித்தாலும் தாவீதின் தாகம் தீரும். ஆனாலும் பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றுத் தண்ணீரின்மேல் தாவீது ஆவலாயிருக்கிறார்.

"அந்தக் கிணற்றிலிருந்து என் தாகத்திற்கு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார்" என்று தாவீது கேட்டவுடனேயே, அவருடைய மூன்று பராக்கிரமசாலிகளும், அந்தத் தண்ணீரைக் கொண்டு வர புறப்பட்டுப்போகிறார்கள். அவர்கள் போகும்போது பெலிஸ்தரின் பாளயத்தின் வழியாகப் போகவேண்டும். தாவீதின் பராக்கிரமசாலிகள் அவருக்காக எந்த ஆபத்தையும் சந்திக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துகொள்கிறார்கள். பெலிஸ்தர் இவர்களை பிடித்துக்கொன்றுபோடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் இந்தப் பராக்கிரமசாலிகள் துணிந்து போகிறார்கள். அவர்கள் பெத்லகேம் வரைக்கும் போய், அங்கே ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டு வருகிறார்கள்.

தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளும், பெத்லகேமுக்கு புறப்பட்டுப்போனபோது, தாங்கள் அங்கே போவதை தாவீதுக்கு தெரிவிக்கவில்லை. அவர்கள் தாவீதுக்கு தெரியாமலேயே பெத்லகேமுக்கு போனார்கள். அங்கிருந்து வரும்போது அவர்கள் தாவீதுக்கு அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள். பராக்கிரமசாலிகள் மூன்றுபேரும் தங்கள் ராஜாவின்மீது அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். ராஜாவுக்கு சேவை செய்வதே இவர்களுக்கு சந்தோஷமாயிருக்கிறது. ராஜாவின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு, எத்தனை தடைகளும், ஆபத்துக்களும் வந்தாலும், இவர்கள் அதையெல்லாம் சந்தித்து, ராஜாவின் கட்டளையை நிறைவேற்றுகிறார்கள்.

கர்த்தர் நமக்கு ஊழியப்பொறுப்புக்களைக் கொடுக்கும்போது, ஊழியத்தை செய்யாமல் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. கர்த்தருடைய கட்டளைக்கு உடனே கீழ்ப்படியவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம்மோடு கூடயிருக்கிறார். தாவீதின் பராக்கிரமசாலிகள் பெலிஸ்தரின் பாளயத்திற்கு பயப்படவில்லை. நாமும் சாத்தானுக்கும், அவனுடைய அந்தகார சேனைகளுக்கும் பயப்படாமல், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும்.

தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளும் பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றின் தண்ணீரை, அவரிடத்தில் கொண்டு வருகிறார்கள். ஆனால் தாவீதோ அந்தத் தண்ணீரைக் குடிக்க மனதில்லாமலிருக்கிறார். அதை கர்த்தருக்கென்று ஊற்றிப்போடுகிறார் (2சாமு 23:17).

தாவீது பெத்லகேமின் கிணற்றுத்தண்ணீர்மீது மதியீனமாய் ஆவல் கொண்டார். அவர் தன்னுடைய மதியீனத்தைப் புரிந்துகொள்கிறார். தாவீது தன்னுடைய தப்பிதத்திற்கு தன்னைத்தானே தண்டிக்கிறார். தன்னுடைய பராக்கிரமசாலிகள் கொண்டு வந்த தண்ணீரை, குடிக்காமல், கர்த்தருக்கென்று ஊற்றிப்போடுகிறார். தாவீது கர்த்தருக்கு துதியையும் கனத்தையும் செலுத்துகிறார்.

தாவீதின் பராக்கிரமசாலிகள் கொண்டு வந்த தண்ணீர், அவருக்கு மிகவும் விசேஷமானது. அந்தத் தண்ணீர்மீது அவர் ஆவல் கொண்டிருந்தார். தாவீது அந்தத் தண்ணீரைக் குடிக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனாலும் அவர் அதைக் குடிக்காமல், அந்தத் தண்ணீரை கர்த்தருக்கென்று, பானபலியாக வார்த்து விடுகிறார்.

தாவீது பெத்லகேமின் தண்ணீரின்மேல் ஆவல்கொண்டார் என்று இங்கு எழுதப்பட்டிருப்பதற்கு, அவர் மேசியா கொடுக்கும் ஜீவத்தண்ணீரின்மேல் ஆவல் கொண்டார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். மேசியாவாகிய இயேசுகிறிஸ்து பெத்லகேமிலே பிறப்பார் என்று தாவீதுக்கு முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. மேசியாவினிடத்தில் ஜீவத்தண்ணீர் இருக்கிறது. பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றை, பெத்லகேமிலே தாணயம் போட்டிருக்கிற பெலிஸ்தரால் பாழாக்கவோ, அழிக்கவோ முடியாது என்பது தாவீதுக்கு தெரிந்திருக்கிறது.

மூன்று பராக்கிரமசாலிகளில் பேர் பெற்றவன் 2சாமு 23:18-23

2சாமு 23:18. யோவாபின் சகோதரனும் செருயாவின் குமாரனுமான அபிசாய் என்பவன், அந்த மூன்றுபேரில் பிரதானமானவன்; அவன் தன் ஈட்டியை ஓங்கி முந்நூறு பேரை மடங்கடித்ததினால், இந்த மூன்று பேர்களில் பேர்பெற்றவனானான்.

2சாமு 23:19. இந்த மூன்று பேர்களில் அவன் மேன்மையுள்ளவனாயிருந்ததினாலல்லவோ, அவர்களில் தலைவனானான்; ஆனாலும் அந்த முந்தின மூன்று பேருக்கு அவன் சமமானவன் அல்ல.

2சாமு 23:20. பராக்கிரமசாலியாகிய யோய்தாவின் குமாரனும் கப்செயேல் ஊரானுமாகிய பெனாயாவும் செய்கைகளில் வல்லவனாயிருந்தான்; அவன் மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்றதுமல்லாமல், உறைந்த மழை காலத்தில் அவன் இறங்கிப்போய், ஒரு கெபிக்குள் இருந்த ஒரு சிங்கத்தையும் கொன்றுபோட்டான்.

2சாமு 23:21. அவன் பயங்கர ரூபமான ஒரு எகிப்தியனையும் கொன்றுபோட்டான்; அந்த எகிப்தியன் கையில் ஒரு ஈட்டியிருக்கையில், இவன் ஒரு தடியைப் பிடித்து, அவனிடத்தில் போய், அந்த எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறித்து, அவன் ஈட்டியினாலே அவனைக் கொன்றுபோட்டான்.

2சாமு 23:22. இவைகளை யோய்தாவின் குமாரனாகிய பெனாயா செய்தபடியினால், மூன்று பராக்கிரமசாலிகளுக்குள்ளே பேர்பெற்றவனாயிருந்தான்.

2சாமு 23:23. முப்பதுபேரிலும் இவன் மேன்மையுள்ளவன்; ஆனாலும் அந்த முந்தின மூன்றுபேருக்கும் இவன் சமானமானவன் அல்ல; இவனைத் தாவீது தன் மெய்க்காவலருக்குத் தலைவனாக வைத்தான்.

அபிசாய் என்பவன், இந்த மூன்று பேர்களில் பேர் பெற்றவன். யோவாபின் சகோதரனும் செருயாவின் குமாரனுமான அபிசாய் என்பவன், அந்த மூன்றுபேரில் பிரதானமானவன்; அவன் தன் ஈட்டியை ஓங்கி முந்நூறு பேரை மடங்கடித்ததினால், இந்த மூன்று பேர்களில் பேர்பெற்றவனாயிருக்கிறான். இந்த மூன்றுபேர்களில் அவன் மேன்மையுள்ளவனாயிருந்ததினால், அவர்களில் தலைவனாயிருக்கிறான்; ஆனாலும் அந்த முந்தின மூன்று பேருக்கு அவன் சமமானவன் அல்ல *(2சாமு 23:18,19)*.

பெனாயா என்பவன் மற்றொரு பராக்கிரமசாலி. பராக்கிரமசாலியாகிய யோய்தாவின் குமாரனும் கப்செயேல் ஊரானுமாகிய பெனாயாவும் செய்கைகளில் வல்லவனாயிருக்கிறான்; அவன் மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்று போட்டவன். அதுமல்லாமல், உறைந்த மழை காலத்தில் அவன் இறங்கிப்போய், ஒரு கெபிக்குள் இருந்த ஒரு சிங்கத்தையும் கொன்றுபோட்டவன்.

பெனாயா பயங்கர ரூபமான ஒரு எகிப்தியனையும் கொன்றுபோடுகிறான்; அந்த எகிப்தியன் கையில் ஒரு ஈட்டியிருக்கையில், இவன் ஒரு தடியைப் பிடித்து, அவனிடத்தில் போய், அந்த எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறித்து, அவன் ஈட்டியினாலே அவனைக் கொன்றுபோடுகிறான். இவைகளை யோய்தாவின் குமாரனாகிய பெனாயா செய்தபடியினால், மூன்று பராக்கிரமசாலிகளுக்குள்ளே பேர்பெற்றவனாயிருக்கிறான் *(2சாமு 23:20-22)*.

பெனாயா "மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களை கொன்றுபோட்டான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு, பெனாயா சிங்கம் போன்ற பலத்தையுடைய இரண்டு மோவாபியரை கொன்றுபோட்டான் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பெனாயா ஒரு கெபிக்குள் இருந்த ஒரு சிங்கத்தையும் கொன்றுபோடுகிறான். ஒருவேளை சிம்சோனைப்போல, பெனாயாவும் தன்னுடைய பாதுகாப்புக்காக இந்த சிங்கத்தை கொன்றுபோட்டிருக்கலாம். அல்லது இந்த சிங்கம் இஸ்ரவேல் தேசத்திற்கு தீங்கு செய்திருக்கலாம். பெனாயா தன் தேசத்திற்கு நன்மை செய்வதற்காக, இந்த சிங்கத்தைக் கொன்றுபோட்டிருக்கலாம். உறைந்த மழைக்காலமாயிருக்கிறது. ஆனாலும் பெனாயா சிங்கத்தைக் கொன்றுபோட்டு பராக்கிரமமான காரியத்தை செய்கிறான்.

பெனாயா பயங்கர ரூபமான ஒரு எகிப்தியனையும் கொன்றுபோடுகிறான். அவன் எந்தக்காலத்தில் எகிப்தியனைக் கொன்றுபோட்டான் என்று சொல்லப்படவில்லை. எகிப்தியனின் கையில் ஈட்டி இருக்கிறது. பெனாயாவின் கையில் யுத்த ஆயுதம் எதுவுமில்லை. ஒரு தடி மாத்திரமே இருக்கிறது. ஆனாலும் பெனாயா எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறித்து அவன் ஈட்டியினாலே அவனைக் கொன்றுபோடுகிறான்.

பெனாயா பராக்கிரமசாலியாயிருந்து, வீரசாகசங்களை செய்ததினால், தாவீது அவனை தனக்கு மெய்க்காப்பாளனாக வைத்து, அவனை மேன்மைப்படுத்துகிறார். பெனாயாவைப்பற்றி சொல்லும்போது, "முப்பதுபேரிலும் இவன் மேன்மையுள்ளவன்; ஆனாலும் அந்த முந்தின மூன்றுபேருக்கும் இவன் சமானமானவன் அல்ல; இவனைத் தாவீது தன் மெய்க்காவலருக்குத் தலைவனாக வைத்தான்" *(2சாமு 23:23)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீதின் மற்ற பராக்கிரமசாலிகள் 2சாமு 23:24-39

2சாமு 23:24. யோவாபின் தம்பி ஆசகேல் மற்ற முப்பதுபேரில் ஒருவன்; அவர்கள் யாரெனில், பெத்லகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன் எல்க்கானான்,

2சாமு 23:25. ஆரோதியனாகிய சம்மா, ஆரோதியனாகிய எலிக்கா,

2சாமு 23:26. பல்தியனாகிய ஏலெஸ் இக்கேசின் குமாரனாகிய ஈரா என்னும் தெக்கோவியன்.

2சாமு 23:27. ஆனதோத்தியனாகிய அபியேசர், ஊசாத்தியனாகிய மெபுன்னாயி,

2சாமு 23:28. அகோகியனாகிய சல்மோன், நெத்தோபாத்தியனாகிய மகராயி,

2சாமு 23:29. பானாவின் குமாரனாகிய ஏலேப் என்னும் நெத்தோபாத்தியன், பென்யமீன் புத்திரரின் கிபியா ஊரானாகிய ரிபாயின் குமாரன் இத்தாயி,

2சாமு 23:30. பிரத்தோனியனாகிய பெனாயா, காகாஸ் நீரோடைகளின் தேசத்தானாகிய ஈத்தாயி,

2சாமு 23:31. அர்பாத்தியனாகிய அபிஅல்பொான், பருமியனாகிய அஸ்மாவேத்,

2சாமு 23:32. சால்போனியனாகிய எலியூபா, யாசேனின் குமாரரில் யோனத்தான் என்பவன்.

2சாமு 23:33. ஆராரியனாகிய சம்மா, சாராரின் குமாரனாகிய அகியாம் என்னும் ஆராரியன்,

2சாமு 23:34. மாகாத்தியனின் குமாரனாகிய அகஸ்பாயிம் மகன் எலிப்பெலேத், கீலோனியனாகிய அகித்தோப்பேலின் குமாரன் எலியாம் என்பவன்.

2சாமு 23:35. கர்மேலியனாகிய எஸ்ராயி, அர்பியனாகிய பாராயி,

2சாமு 23:36. சோபா ஊரானாகிய நாத்தானின் குமாரன் ஈகால், காதியனாகிய பானி,

2சாமு 23:37. அம்மோனியனாகிய சேலேக், செருயாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுததாரியான பெரோத்தியானாகிய நகராய்,

2சாமு 23:38. இத்ரியனாகிய ஈரா, இத்ரியனாகிய காரேப்,

2சாமு 23:39. ஏத்தியனாகிய உரியா என்பவர்களே; ஆக முப்பத்தேழுபேர்.

தாவீதின் மற்ற பராக்கிரமசாலிகளைப்பற்றி இங்கு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயர்களும், அவர்கள் பிறந்த ஊர்களும், அவர்களின் பிரதிபேர்களும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் எல்லா பாகங்களிலும் தாவீதின் பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள். தாவீது அவர்களை இஸ்ரவேல் தேசம் முழுவதும் தேடிப் பார்த்து, தன்னுடைய பராக்கிரமசாலிகளாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தாவீதினுடைய பராக்கிரமசாலிகளின் பெயர் அட்டவணை:

1. ஆசகேல் - யோவாபின் சகோதரன் (2சாமு 23:24)
2. எல்க்கானான் - பெத்லகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன்.
3. சம்மா - ஆரோதியன் (2சாமு 23:25)
4. எலிக்கா - ஆரோதியன்
5. ஏலெஸ் - பல்தியன் (2சாமு 23:26)
6. ஈரா - இக்கேசின் குமாரன் - தெக்கோவியன்
7. அபியேசர் - ஆனதோத்தியன். (2சாமு 23:27)
8. மெபுன்னாயி - ஊசாத்தியன்

9. சல்மோன் - அகோகியன் (2சாமு 23:28)

10. மகராயி - நெத்தோபாத்தியன்

11. ஏலேப் - பானாவின் குமாரன் (2சாமு 23:29)

12. இத்தாயி - ரிபாயின் குமாரன் - பென்யமீனன்

13. பெனாயா - பிரத்தோனியன் (2சாமு 23:30)

14. ஈத்தாயி - காகாஸ் நீரோடைகளின் தேசத்தான்.

15. அபிஅல்பொன் - அர்பாத்தியன் (2சாமு 23:31)

16. அஸ்மாவேத் - பருமியன்

17. எலியூபா - சால்போனியன் (2சாமு 23:32)

18. யோனத்தான் - யாசேனின் குமாரன்

19. சம்மா - ஆராரியன் (2சாமு 23:33)

20. அகியாம் - சாராரின் குமாரன் - ஆராரியன்

21. எலிப்பெலேத் - அகஸ்பாயிமின் குமாரன். (2சாமு 23:34)

22. எலியாம் - அகித்தோப்பேலின் குமாரன்.

23. எஸ்ராயி - கர்மேலியன் (2சாமு 23:35)

24. பாராயி - அர்பியன்

25. ஈகால் - சோபா ஊரானாகிய நாத்தானின் குமாரன் (2சாமு 23:36)

26. பானி - காதியன்

27. சேலேக் - அம்மோனியன் (2சாமு 23:37)

28. நகராய் - பெரோத்தியன்

29. யோவாப் - செருயாவின் குமாரன்

30. ஈரா - இத்ரியன் (2சாமு 23:38)

31. காலேப் - இத்ரியன்

32. உரியா - ஏத்தியன் (2சாமு 23:39)

இங்கே தாவீதின் பராக்கிரமசாலிகளாக குறிப்பிடப்பட்டிருக்கிறவர்களில் அநேகர், தாவீதின் பன்னிரண்டு வகுப்புகளுக்கு தளபதிகளாயிருக்கிறார்கள். இவர்களுடைய ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு மாதம் தாவீதின் பன்னிரண்டு வகுப்புகளுக்கு தளபதிகளாயிருப்பார்கள் (1நாளா 27-ஆவது அதிகாரம்).

தாவீதுக்கு பராக்கிரமசாலிகள் இருந்ததுபோல, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள். தாவீதின் பராக்கிரமசாலிகள், தாவீதின் முன்மாதிரியை பின்பற்றினார்கள். தாவீதின் ராஜ்யத்திற்கு விரோதமாக எழும்பி வந்த சத்துருக்களுக்கு விரோதமாக அவர்கள் யுத்தம்பண்ணினார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் எல்லோருமே அவருடைய பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் முன்மாதிரிகளைப் பின்பற்றி, சாத்தானுக்கும், அவனுடைய அந்தகார சக்திகளுக்கும் விரோதமாக யுத்தம்பண்ணினார்கள்.

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்காக ஏராளமான பாடுகளை அனுபவித்தார்கள். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவோடுகூட ஆளுகையும் செய்வார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய அப்போஸ்தலர்களைக் கனம்பண்ணுகிறார்.

"நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன" (வெளி 21:14).

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைப் போலவே, கிறிஸ்துவின் விசுவாசிகள் எல்லோருமே, கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகராயிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகள் எல்லோருடைய பேர்களையும், தம்முடைய ஜீவப்புஸ்தகத்திலே எழுதி வைத்திருக்கிறார். தாவீதுடைய பராக்கிரமசாலிகளின் பெயர்கள் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருப்பதுபோல, விசுவாசிகளாகிய நம்முடைய பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

24 அதிகாரம்

தாவீதின் கடைசி வார்த்தைகள் ஆசீர்வாதமாயிருக்கிறது. தாவீதின் கடைசி கிரியைகளோ பாவமானதாயிருக்கிறது. தாவீது தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார். அதன் பின்பு தாவீதின் காரியங்கள் நன்மையாய் முடிவு பெறுகிறது.

தாவீதின் இருதயத்தில் மேட்டிமை இருக்கிறது. அவர் இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு சொல்லுகிறார் *(2சாமு 24:1-9)*. தாவீது தன்னுடைய பாவத்தை உணர்ந்து, அதற்கு மனந்திரும்புகிறார் *(2சாமு 24:10)*. தாவீதின் பாவத்தினிமித்தமாக அவர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது *(2சாமு 24:11-15)*.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறுத்தி வைக்கப்படுகிறது *(2சாமு 24:16,17)*. தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். கர்த்தர் தாவீதின் பாவத்தை மன்னிக்கிறார் *(2சாமு 24:18-25)*.

தாவீதின் பாவம்
2சாமு 24:1-9

2சாமு 24:1. கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது. இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டான்.

2சாமு 24:2. அப்படியே ராஜா தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து: ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலின் கோத்திரமெங்கும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள் என்றான்.

2சாமு 24:3. அப்பொழுது யோவாப் ராஜாவைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப்பார்க்கிலும், நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன என்றான்.

2சாமு 24:4. ஆகிலும் யோவாபும் இராணுவத்தலைவரும் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு, ராஜாவின் வார்த்தை பலத்தது; அப்படியே இஸ்ரவேல் ஜனங்களைத் தொகையிட, யோவாபும் இராணுவத்தலைவரும் ராஜாவைவிட்டு புறப்பட்டுப் போய்,

2சாமு 24:5. யோர்தானைக் கடந்து, காத் என்னும் ஆறுகளின் நடுவே இருக்கிற பட்டணத்திற்கு வலதுபுறமான ஆரோவேரிலும் யாசேரிடத்திலும் பாளயமிறங்கி,

2சாமு 24:6. அங்கேயிருந்து கீலேயாத்திற்கும் தாதீம்ஒத்சிக்கும் போய், அங்கேயிருந்து தாண்யானுக்கும், சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் போய்,

2சாமு 24:7. பிற்பாடு தீரு என்னும் கோட்டைக்கும் ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் போய், அங்கேயிருந்து யூதாவின் தென்புறமான பெயெர்செபாவுக்குப் போய்,

2சாமு 24:8. இப்படி தேசமெங்கும் சுற்றித்திரிந்து, ஒன்பது மாதமும் இருபது நாளும் ஆனபிற்பாடு எருசலேமுக்கு வந்தார்கள்.

2சாமு 24:9. யோவாப் ஜனத்தை இலக்கம்பார்த்த தொகையை ராஜாவுக்குக் கொடுத்தான்; இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டுலட்சம்பேர் இருந்தார்கள்; யூதா மனுஷர் ஐந்து லட்சம் பேர் இருந்தார்கள்.

இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு, தாவீது யோவாபுக்கு கட்டளைகொடுக்கிறார். இதனால் கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூளுகிறது.

"இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார்" என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்படுகிறார். தாவீது ராஜா தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து: "ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலரின் கோத்திரமெங்கும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள்" *(2சாமு 24:2)* என்று சொல்லுகிறார்.

தாவீதின் கட்டளையில் இரண்டு காரியங்கள் விநோதமாயிருக்கிறது. தாவீது பாவமான காரியத்தை செய்யச் சொல்லுகிறார். இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்ப்பதில் தப்பிதம் ஒன்றுமில்லை. ஆனாலும் கர்த்தருடைய கோபம் இதன் நிமித்தமாக, இஸ்ரவேலின்மேல் திரும்பவும் மூளுகிறது. கர்த்தருடைய கோபத்திற்கு வேதபண்டிதர்கள் காரணங்களை சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் இருபது வயதிற்கும் மேற்பட்ட ஆண்பிள்ளைகளை மாத்திரம் இலக்கம் பார்க்கவேண்டும் தாவீதோ இருபது வயது ஆகாத வாலிபரையும் இலக்கம் பார்க்குமாறு கட்டளை கொடுத்திருக்கவேண்டும். இவர்கள் ஆயுதம் ஏந்தக்கூடிய சரீர பெலமுள்ளவர்களாக இருந்திருப்பார்கள். பலசாலிகளாகவும் இருந்திருப்பார்கள். ஆனாலும் கர்த்தருடைய பிரமாணத்தின்படி, இருபது வயது ஆகாதவர்களை இலக்கம் பார்க்கக்கூடாது.

"இஸ்ரவேலை வானத்தின் நட்சத்திரங்கள் அத்தனையாய்ப் பெருகப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லி யிருந்தபடியால், தாவீது இருபது வயதுமுதல் அதற்குக் கீழ்ப்பட்டவர்களின் இலக்கத்தைத் தொகையேற்றவில்லை. செருயாவின் குமாரன் யோவாப் எண்ணத்துவக்கியும் முடிக்காதே போனான்; அதற்காக இஸ்ரவேலின்மேல் கடுங்கோபம் வந்தது; ஆதலால் அந்தத் தொகை தாவீதுராஜாவின் நாளாகமக் கணக்கிலே ஏறவில்லை" *(1நாளா 27:23,24)*.

தாவீது இருபது வயதிற்கும் மேற்பட்ட புருஷரை இலக்கம் பார்த்திருந்தாலும், இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தன் தன் ஆத்துமாவுக்காக கர்த்தருக்கு அரைசேக்கலை மீட்கும் பொருளாக கொடுக்கவேண்டும். இது கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியத்திற்கு பயன்படுத்தப்படும். தாவீதோ இலக்கம் பார்க்கப்பட்ட ஜனங்களிடத்திலிருந்து, கர்த்தருக்கு மீட்கும் பொருளை சேகரிக்கவில்லை.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படி கணக்குப்பார்க்கும் பொருட்டு, அவர்களை எண்ணும்போது, அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்" *(யாத் 30:11,12)*.

தாவீது தன்னுடைய அரண்மனையின் கஜானாவை பொக்கிஷங்களினால் நிரப்ப ஆசைப்படுகிறார். இதற்காக அவர் இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்த்து, அவர்களிடத்திலிருந்து வரிவசூலிப்பதற்கு திட்டமிடுகிறார். இதன் நிமித்தமாக கர்த்தருடைய கோபம் திரும்பவும் இஸ்ரவேலின்மேல் மூளுவதற்கு வாய்ப்புள்ளது.

தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்காமலேயே, இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்கிறார். தாவீது அவர்களை இலக்கம் பார்ப்பதற்கு கர்த்தருடைய அனுமதியை பெற்றுக்கொள்ளவில்லை.

கர்த்தர் பூர்வகாலத்தில் இஸ்ரவேலின் முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தைச் சொன்னார். ஆபிரகாமின் சந்ததி கடற்கரை மணலத்தனையாகவும், வானத்து நட்சத்திரங்களைப்போலவும் எண்ணமுடியாத அளவுக்கு அதிகமாயிருக்கும் என்று கர்த்தர் சொன்னார். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை, தாவீது விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாமல், இஸ்ரவேலையும் யூதாவையும் எண்ணித் தொகையேற்றி, கர்த்தருடைய வார்த்தையை உறுதிபண்ண ஆசைப்படுகிறார். தாவீது கர்த்தரைச் சோதிக்கிறார்.

தாவீதின் இருதயத்தில் பெருமையிருக்கிறது. மனமேட்டிமையிருக்கிறது. எசேக்கியாவின் இருதயத்திலும் பெருமை இருந்தது. அவன் தன்னுடைய அரண்மனையின் பொக்கிஷங்களையெல்லாம் அந்நிய தேசத்து சேனாபதிகளுக்கு காண்பித்தான். எசேக்கியா கர்த்தருக்கு முன்பாக பணிவாயில்லாமல், இருதயத்தில் பெருமையோடிருந்தது அவனுக்கு பாவமாயிற்று. தாவீதும், எசேக்கியாவைப்போலவே, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தாமல், தன் இருதயத்தில் பெருமைப்பட்டு, இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்கிறார்.

தன்னுடைய தேசத்தில் ஏராளமான ஜனங்கள் இருப்பது தனக்கு பெருமையாகவும், பெலமாகவும் இருக்கும் என்று தாவீது நினைக்கிறார். இது அவருடைய பெருமைக்கும், மேட்டிமைக்கும் அடையாளம்.

தாவீது கர்த்தரை நம்பாமல், தன்னுடைய பலத்தை நம்புகிறார். தன்னுடைய சுயபலத்தில் பெருமைப்படுகிறார். தன்னுடைய இராணுவத்தில் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை, அந்நிய தேசத்தாருக்கு பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறார்.

மேலே சொல்லப்பட்டிருக்கிற காரணங்களுக்காக, கர்த்தருடைய கோபம் தாவீதின்மேலும், இஸ்ரவேலின்மேலும், மறுபடியும் மூண்டிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் தடைபண்ணின காரியத்தை தாவீது செய்கிறார். அது தாவீதுக்கு பாவமாயிற்று.

இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாக சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டார் (2சாமு 24:1). இஸ்ரவேலுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் மூளுவது புதுமையான காரியமல்ல. ஆனால் அந்தக் கோபம் மூளுவதற்கு, தாவீது இங்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறார். இஸ்ரவேலை இலக்கம் பார்ப்பதற்கு தாவீது ஏவப்படுகிறார்.

கர்த்தர் ஒருபோதும் மனுஷருடைய பாவத்திற்கு காரணமானவரல்ல. அவர் எந்த மனுஷரையும் சோதிக்கிறவருமல்ல. இஸ்ரவேலை இலக்கம் பார்க்க சொல்லுமாறு, கர்த்தர் தாவீதை ஏவவில்லை. சாத்தானே தாவீதை இந்தக் காரியத்தை செய்யுமாறு ஏவுகிறான். "சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது" (1நாளா 21:1).

சாத்தான் மனுக்குலத்திற்கு சத்துருவாயிருக்கிறான். அவன் மனுஷரைப் பாவம் செய்யத் தூண்டுகிறான். இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்குமாறு சாத்தான் யூதாஸ்காரியோத்தை ஏவினான். கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி. சாத்தான் தாவீதை ஏவினான், கர்த்தர் ஒரு நோக்கத்தோடு அதை அனுமதிக்கிறார்.

தாவீது தன்னுடைய பாவத்தினிமித்தமாக, ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வரும்போது, அவருடைய கோபத்திற்கு மனுஷருடைய பாவமே காரணம் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். மனுஷர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது, அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள்.

தாவீது தன்னோடிருக்கிற சேனாதிபதியாகிய யோவாபைப் பார்த்து, ஜனங்களை தொகையிடுமாறு கட்டளையிடுகிறார். யோவாப் தாவீதின் கட்டளைக்கு உடனே கீழ்ப்படியாமல், அவருடைய வார்த்தைகளை எதிர்க்கிறார். யோவாபால் தாவீதுக்கு விரோதமாக கடினமான வார்த்தைகளைப் பேசமுடியாது. தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். யோவாபோ தாவீதுக்கு கீழே வேலை செய்கிற அவருடைய சேனாபதி.

இஸ்ரவேலின் கோத்திரங்களை எண்ணித்தொகையிடுமாறு தாவீது யோவாபுக்கு கட்டளை கொடுக்கிறார். தாவீதின் வார்த்தைகள் மதியீனமானது என்று யோவாபுக்கு தெரிந்திருக்கிறது. தாவீது மாயையையும், வீண்பெருமையையும் நம்புகிறார்.

இஸ்ரவேல் தேசம் செழிப்பாயிருக்கிறது. ஜனங்கள்மீது அதிகமான வரியை சுமத்தவேண்டும் என்னும் அவசியமில்லை. தாவீதின் பொக்கிஷங்கள் நிரம்பியிருக்கிறது. ஜனங்களை இலக்கம் பார்த்து, அவர்கள்மீது புதிய வரிகளை விதிக்கவேண்டிய அவசியமில்லை. ஜனங்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கும் தாவீதின் கஜானாவில் ஒன்றுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருமே சமாதானமாயும், சந்தோஷமாயும், ஆறுதலாயும் இருக்கிறார்கள்.

தாவீதுக்கு வயதாயிற்று. இஸ்ரவேல் ஜனங்களை எண்ணித்தொகையேற்றும்போது, அவர்களுடைய தொகை நிச்சயமாகவே அதிகரித்திருக்கும். தாவீது இஸ்ரவேலின் ஜனத்திரட்சியைப் பார்த்து சந்தோஷப்படுவார். ஒருவேளை தாவீது தன்னுடைய சொந்த சந்தோஷத்திற்காக இஸ்ரவேலை எண்ணித்தொகையேற்றுமாறு யோவாபுக்கு கட்டளை கொடுத்திருக்கலாம்.

ஆனாலும் யோவாப் தன்னுடைய மனதிலுள்ளதை தாவீதிடம் சொல்லுகிறார். யோவாப் தாவீது ராஜாவைப் பார்த்து: "ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப்பார்க்கிலும், நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன" *(2சாமு 24:3)* என்று கேட்கிறான்.

"இஸ்ரவேலரின் ஜனங்களை எண்ணித்தொகையிடவேண்டிய அவசியம் என்ன" என்று யோவாப் தாவீதிடம் கேட்கிறான். தாவீதின் வீண்பெருமையும், மாயையான நம்பிக்கையும், மதியீனமும் யோவாபுக்கு தெரிந்திருக்கிறது. ஆனாலும் யோவாபால் தாவீதை கடின வார்த்தைகளால் கண்டிக்க முடியவில்லை. யோவாபும் இராணுவத்தலைவரும் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு, தாவீது ராஜாவின் வார்த்தை பலக்கிறது *(2சாமு 24:4)*.

யோவாப் தாவீது ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறான். யோவாபும் இராணுவத்தலைவரும் இஸ்ரவேல் ஜனங்களைத் தொகையிட, தாவீது ராஜாவைவிட்டு புறப்பட்டுப் போகிறார்கள். தாவீது ராஜாவின் கட்டளை யோவாபுக்கு பிடிக்கவில்லை. யோவாபின் மனதில் சந்தோஷமில்லாவிட்டாலும், அவன் தாவீது ராஜாவின் கட்டளையை நிறைவேற்ற புறப்பட்டுப்போகிறான். தனக்கு உதவிசெய்ய இராணுவத்தலைவரையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போகிறான்.

அவர்கள் யோர்தானைக் கடந்து, காத் என்னும் ஆறுகளின் நடுவே இருக்கிற பட்டணத்திற்கு வலதுபுறமான ஆரோவேரிலும் யாசேரிடத்திலும் பாளயமிறங்கி, அங்கேயிருந்து கீலேயாத்திற்கும் தாதீம்ஒத்சிக்கும் போய், அங்கேயிருந்து தாண்யானுக்கும், சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் போகிறார்கள் *(2சாமு 24:5,6)*.

பிற்பாடு அவர்கள் தீரு என்னும் கோட்டைக்கும் ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் போய், அங்கேயிருந்து யூதாவின் தென்புறமான பெயெர்செபாவுக்குப் போய், இப்படி தேசமெங்கும் சுற்றித்திரிந்து, ஒன்பது மாதமும் இருபது நாளும் ஆனபிற்பாடு எருசலேமுக்கு வருகிறார்கள் *(2சாமு 24:7,8)*.

யோவாப் ஜனத்தை இலக்கம்பார்த்த தொகையை ராஜாவுக்குக் கொடுக்கிறான்; இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டுலட்சம்பேர் இருக்கிறார்கள்; யூதா மனுஷர் ஐந்து லட்சம் பேர் இருக்கிறார்கள் *(2சாமு 24:9)*.

யோவாப் தனக்கு கொடுத்த இலக்கத்தை தாவீது பெற்றுக்கொள்கிறார். இது தாவீது எதிர்பார்த்த இலக்கமா, இந்த இலக்கம் தாவீதுக்கு திருப்தியாயிருக்கிறதா என்று இங்கு சொல்லப்படவில்லை. இந்த இலக்கத்தைப் பார்த்து தாவீதின் பெருமை அதிகரித்ததா அல்லது அவருடைய பெருமை அவரைவிட்டு நீங்கிப்போயிற்றா என்றும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு

2சாமு 24:10-17

2சாமு 24:10. இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது; அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்.

2சாமு 24:11. தாவீது காலமே எழுந்திருந்த போது, தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகிச் சொன்னது:

2சாமு 24:12. நீ தாவீதினிடத்தில் போய், மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

2சாமு 24:13. அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ? அல்லது மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாகவேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோக வேண்டும் என்பதை நீர் யோசித்துப் பாரும் என்று சொன்னான்.

2சாமு 24:14. அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான்.

2சாமு 24:15. அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே அன்று காலமேதொடங்கி குறித்தகாலம் வரைக்கும் கொள்ளைநோயை வரப்பண்ணினார்; அதினால் தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள ஜனங்களில் எழுபதினாயிரம்பேர் செத்துப்போனார்கள்.

2சாமு 24:16. தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனை நோக்கி: போதும், இப்போது உன் கையை நிறுத்து என்றார்; அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான்.

2சாமு 24:17. ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி: இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம்பண்ணினான்.

தாவீது இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு கட்டளை கொடுத்தார். தான் கொடுத்த கட்டளை கர்த்தருக்கு விரோதமான பாவம் என்பதை தாவீது இப்போது உணருகிறார். தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்புகிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கிறார்.

இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, தாவீது ராஜாவின் இருதயம் அவரை வாதிக்கிறது; தாவீதின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது. அதுவரையிலும் தூங்கிக்கொண்டிருந்த அவருடைய மனச்சாட்சி, இரவுவேளையிலே விழித்துக்கொள்கிறது. அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: "நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன்" (2சாமு 24:10) என்று சொல்லுகிறார்.

தாவீது காலமே எழுந்திருந்த போது, தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று (2சாமு 24:11). அதிகாலையில் காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்க்க வருவதற்கு முன்பாகவே தாவீதின் இருதயம் அவரை வாதிக்கிறது. தாவீதின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது.

"தாவீது காலமே எழுந்திருந்தபோது" என்று அடுத்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது காலமே எழுந்திருந்தபோது, தாவீதின் இருதயம் அவரை வாதித்தது என்றும், அவர் கர்த்தரை நோக்கி, "நான் இப்படி செய்ததினால் பெரிய பாவம் செய்தேன்" என்றும் ஜெபம்பண்ணியிருக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

தாவீது கர்த்தரிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார். கர்த்தர் தாமே தன்னுடைய பாவங்களை தயவாய் மன்னிக்கவேண்டுமென்று கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். "நான் பெரிய பாவம் செய்தேன்" என்றும், "நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன்" என்றும் தாவீது கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். தாவீது தன்னுடைய இருதயத்தின் பெருமையினால் இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்கச் சொன்னார். இது புத்தியீனமான காரியம்.

கர்த்தர் தாவீதின் பாவத்திற்கு தக்கதாக அவருக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியும் நியாயமுமுள்ளது. பாவம் செய்த தாவீது தண்டிக்கப்படவேண்டும். அவர் தன்னுடைய பாவத்தை உணரவேண்டும். தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும். தாவீது பல சமயங்களில் பாவம் செய்திருக்கிறார். அவர் ஒவ்வொருமுறை பாவம் செய்யும்போதும், தன்னுடைய பாவத்திற்கு இதுபோல மனம் வருந்துவது வழக்கம். எப்போதும்போலவே, இப்போதும் தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்துகிறார்.

தாவீது காலமே எழுந்திருந்தபோது, தன்னுடைய பாவத்தைப்பற்றி தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசியிடம் விசாரிக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார். தாவீதுக்கு என்னென்ன வார்த்தைகளைச் சொல்லவேண்டுமென்று, கர்த்தருடைய வார்த்தை காத்திற்கு உண்டாயிற்று.

கர்த்தர் காத்தை நோக்கி, "நீ தாவீதினிடத்தில் போய், மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்" (2சாமு 24:12) என்று சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் வெறுக்கிற ஏழுகாரியங்களில் மேட்டிமையும் ஒன்று.

"ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே" (நீதி 6:16-19).

பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்திற்கு தண்டனை கொடுக்கப்படும். தாவீது பாவம் செய்தாலும், இந்தப் பாவத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் பங்குள்ளது. ஆகையினால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின்மேல் மூளுகிறது (2சாமு 24:1). இஸ்ரவேல் ஜனங்களும் தாவீதின் பாவத்திற்கு பங்காளிகளாயிருப்பதினால், தாவீதுக்கு தண்டனை வரும்போது, இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தண்டனை வருகிறது.

தாவீது கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய ஆரம்பித்தார். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் பாவத்திற்கு ஆதரவாயிருந்தார்கள். தாவீது இஸ்ரவேல் தேசம் முழுவதும் பாவம் செய்யுமாறு, ஜனங்கள் அவரை வழிநடத்தினார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் பாவத்தை பரிபூரணமாக நிறைவேற்றி வைத்தார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் தாவீதின்மேலும், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோர்மேலும் வருகிறது.

கர்த்தர் தாவீதுக்கு மூன்று தண்டனைகளைச் சொல்லுகிறார். இந்த மூன்று தண்டனைகளில் தாவீது ஒரு தண்டனையை தெரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் மூன்று தண்டனைகளையும் மொத்தமாகக் கொடுக்க விரும்பவில்லை. அதே வேளையில் கர்த்தர் தாவீதை தண்டிக்காமலும் விட்டு விடவில்லை.

கர்த்தர் காத் மூலமாக தாவீதை நோக்கி, "மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன்" *(2சாமு 24:12)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை காத் தாவீதுக்கு சொல்லுகிறார். அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவரை நோக்கி: "உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ? அல்லது மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாகவேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோக வேண்டும் என்பதை நீர் யோசித்துப் பாரும்" *(2சாமு 24:13)* என்று சொல்லுகிறான்.

பரலோகப்பிதா தாவீதை தண்டித்து திருத்த விரும்புகிறார். தாவீதைத் தண்டிப்பதில் கர்த்தருக்கு பிரியமல்ல. கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். அவர் பாவிகளையும் நேசிக்கிறார். ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். மனுஷருடைய பாவத்தினிமித்தமாக, அவர்களை தண்டித்து முற்றிலுமாக அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் பாவிகளுக்கு கொடுக்கும் தண்டனை, அவர்கள் தங்களுடைய பாவங்களை உணரவும், அவர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறவும் உதவியாயிருக்கவேண்டும். இதுவே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் தாவீதுக்கு மூன்று தண்டனைகளைச் சொல்லுகிறார். அவையாவன : 1. இஸ்ரவேல் தேசத்திலே ஏழுவருஷம் பஞ்சம். 2. மூன்று வருஷம் யுத்தம் 3. இஸ்ரவேல் தேசத்திலே மூன்றுநாள் கொள்ளை நோய் உண்டாகும். தாவீது இந்த மூன்று தண்டனைகளில், ஏதாவது ஒரு தண்டனையைத் தெரிந்துகொள்ளவேண்டும். தாவீது இதை அவசரப்பட்டு முடிவுபண்ண வேண்டிய அவசியமில்லை. அவர் யோசித்துப் பார்த்து முடிவு பண்ணலாம். தாவீது முடிவு பண்ணாமலும் இருக்கமுடியாது.

அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: "கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக" *(2சாமு 24:14)* என்று சொல்லுகிறார்.

சத்துருக்கள் மூலமாக தனக்கு தண்டனையோ அல்லது பஞ்சமோ வரக்கூடாது என்று தாவீது நினைக்கிறார். கர்த்தருடைய கோல் தன்னை கண்டித்து திருத்தட்டும் என்று, தாவீது கர்த்தரிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கிறார். தாவீது மனுஷர் கையில் விழ விரும்பவில்லை. அவர் கர்த்தருடைய கையில் விழ ஆயத்தமாயிருக்கிறார். கர்த்தருடைய இரக்கங்கள் மகாபெரியது என்பது தாவீதுக்கு தெரியும். தாவீது ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில், கர்த்தருடைய மகாபெரிய தயவையும், கிருபையையும், இரக்கங்களையும் அனுபவித்திருக்கிறார்.

பஞ்சம் ஏழுவருஷம் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கும். சத்துருக்கள் மூன்று மாதம் தாவீதைப் பின்தொடருவார்கள். கொள்ளைநோயோ இஸ்ரவேல் தேசத்தில் மூன்று நாள் மாத்திரமே இருக்கும். இம்மூன்று தண்டனைகளில், கொள்ளைநோய் மாத்திரமே மிகவும் குறுகிய காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. தாவீது இந்தக் குறுகிய காலத்திற்குள் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பி விடலாம் என்றும், கர்த்தரோடு ஒப்புரவாகிவிடலாம் என்றும் விசுவாசத்தோடிருக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் மூன்று நாள் கொள்ளை நோய் உண்டாகும்போது, அந்த நோய் தாவீதின்மேலும், அவருடைய சொந்தக் குடும்பத்தார்மேலும் வரும். இஸ்ரவேல் தேசத்திலே சாதாரண ஜனங்கள்மீது கொள்ளை நோய் வருவதுபோல, பிரபுக்கள் மேலும், ராஜகுடும்பத்தார்மேலும் கொள்ளை நோய் வரும்.

பஞ்சம் அப்படிப்பட்டதல்ல. தரித்திரருக்கு மாத்திரமே பஞ்சம் வரும். ஐசுவரியவான்கள் பஞ்சத்திற்கு தப்பித்துக்கொள்வார்கள். தாவீதும் அவருடைய ராஜகுடும்பத்தாரும் பஞ்சத்திற்கு நிச்சயமாய்த் தப்பித்துக்கொள்வார்கள். இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு தாவீதுதான் கட்டளைகொடுத்தார். இந்தப் பாவத்திற்கு தண்டனையாக இஸ்ரவேல் தேசத்தின்மேல் ஏழுவருஷம் பஞ்சம் வரும்போது, தாவீதும் அவருடைய ராஜகுடும்பத்தாரும் பஞ்சத்திற்கு தப்பிப்பார்கள். தாவீது இந்தத் தண்டனைக்குத்தப்பிக்க விரும்பவில்லை. தன்னுடைய பாவத்திற்கு மற்றவர்கள் தண்டனை அனுபவிக்கும்போது, தான் மாத்திரம் பாவத்திற்கு தப்பிக்க விரும்பவில்லை.

தாவீது கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுக்கிறார். மனுஷர் கையிலே விழாமல் கர்த்தருடைய கையிலே விழ ஆரம்பித்திருக்கிறார். கர்த்தருடைய இரக்கங்கள் மகாபெரியதாயிருப்பதினால், கர்த்தர் தன்னுடைய பாவத்தை மன்னிப்பார் என்று தாவீது எதிர்பார்க்கிறார். தாவீதின் இருதயம் மேட்டிமையாயிருந்தபோது பாவம் செய்தது. இப்போதோ அவருடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறது. தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்துகிறது. கர்த்தருடைய இரக்கத்திற்காக கெஞ்சுகிறது.

தான் பாவம் செய்தாலும், கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர் என்று தாவீது சொல்லுகிறார். பரிசுத்தவான்கள் கர்த்தருடைய தண்டனைகளை அனுபவித்தாலும், அவர்கள் கர்த்தரைப்பற்றி நல்ல வார்த்தைகளையே சொல்லுவார்கள். அவர்கள் கர்த்தரை மேன்மைப்படுத்துவார்கள். அவரை மகிமைப்படுத்துவார்கள். அவரைப் போற்றிப் புகழுவார்கள். தங்களுடைய பாவத்திற்கு கர்த்தர் நீதியான தண்டனையைக் கொடுத்தார் என்று பரிசுத்தவான்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை அங்கீகரிப்பார்கள். "கர்த்தர் என்னைக் கொன்றுபோட்டாலும், நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன்" என்று யோபு சொன்னார். இதுவே பரிசுத்தவான்களின் பொதுவான வார்த்தை.

இஸ்ரவேல் தேசத்திலே மூன்றுநாள் கொள்ளை நோய் உண்டாகட்டும் என்று தாவீது சொல்லுகிறார். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே அன்று காலமேதொடங்கி குறித்தகாலம் வரைக்கும் கொள்ளைநோயை வரப்பண்ணுகிறார்; அதினால் தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள ஜனங்களில் எழுபதினாயிரம்பேர் செத்துப்போகிறார்கள் (2சாமு 24:15). மூன்று நாளில் எழுபதினாயிரம் பேர் செத்துப்போகிறார்களா அல்லது முதல்நாள் மாலையில், அந்திப்பலி செலுத்தும் வேளைக்கு முன்பாக எழுபதினாயிரம் பேர் செத்துப்போகிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கர்த்தரோ தம்முடைய கிருபையினால், தம்முடைய நியாயத்தீர்ப்பை தளர்த்துகிறார். தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறார். தேவதூதன் எருசலேமை அழிக்க ஆயத்தமாயிருக்கிறான்.

ஒருவேளை மற்ற பட்டணங்களைவிட எருசலேமிலே துன்மார்க்கமும், மேட்டிமையும் அதிகமாகயிருந்திருக்கலாம். ஆகையினால் தேவதூதன் எருசலேமை அழிக்க தன் கையை அதின் மேல் நீட்டுகிறான். அப்போது கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறார். கர்த்தர் ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனை நோக்கி: “போதும், இப்போது உன் கையை நிறுத்து” என்று சொல்லுகிறார்; அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருக்கிறான் *(2சாமு 24:16)*.

அர்னாவின் போரடிக்கிற களம் மோரியா மலையிலிருக்கிறது. இதே மலையில்தான் ஆபிரகாம் தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடுவதற்கு வந்தார். அப்போது கர்த்தர் வானத்திலிருந்து ஆபிரகாமோடு பேசினார். ஈசாக்கை பலியிடுவதை தடைபண்ணினார். அதுபோலவே இப்போது, கர்த்தர் வானத்திலிருந்து பேசுகிறார். எருசலேமை அழித்துப்போடாதவாறு அதைப் பாதுகாக்கிறார்.

தாவீது ஏற்கெனவே தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். “நான் இப்படி செய்ததினாலே பெரிய பாவம் செய்தேன்” என்றும், “நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன்” *(2சாமு 24:10)* என்றும் தாவீது கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபித்தார்.

இப்போது தாவீது மறுபடியுமாய், கர்த்தரிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார். ஜனத்தை உபாதிக்கிற தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருக்கிறான்.

தாவீது ஜனத்தை உபாதிக்கிற தூதனை காண்கிறார். அப்போது, தாவீது கர்த்தரை நோக்கி: “இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக” *(2சாமு 24:17)* என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

தேவதூதனுடைய கையிலே பட்டயம் இருக்கிறது. அவன் அந்தப் பட்டயத்தை எருசலேமை அழிப்பதற்காக, அதற்கு நேராக நீட்டியிருக்கிறான். கர்த்தருடைய தூதன் இப்போது எருசலேமை உபாதிக்கிற தூதனாயிருக்கிறான். தாவீது அந்தத் தூதனைப் பார்க்கிறார். ஆனாலும் அவர் அந்தத் தூதனிடம் ஒன்றும் விண்ணப்பம்பண்ணவில்லை. தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தருடைய தூதனால் அவனுடைய சுயசித்தத்தின் பிரகாரமோ அல்லது, சுயவிருப்பத்தின் பிரகாரமோ கிரியை செய்ய முடியாது என்பது தாவீதுக்கு தெரியும். கர்த்தரே அந்தத் தூதனை ஆளுகை செய்கிறவர். தூதனுடைய கையில் சுடரொளி பட்டயம் இருக்கிறது. கர்த்தரிடத்தில் மகாபெரிய இரக்கங்கள் இருக்கிறது. தாவீது கர்த்தருடைய இரக்கத்திற்காக ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தரை நோக்கி, “இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது?” என்று கேட்கிறார். தாவீது தன்னுடைய பாவங்களை அங்கீகரிக்கிறார். தன்னுடைய பாவங்களுக்கும், மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்கும் தானே காரணம் என்பதையும் தாவீது ஒத்துக்கொள்கிறார். தன்னுடைய பாவத்திற்காக, எருசலேம் ஜனங்கள் அழிந்துபோகக்கூடாது என்று தாவீது அவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் “நான்தான் பாவம் செய்தேன்”, ஆகையினால், “உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக” என்று தாவீது விண்ணப்பம்பண்ணுகிறார். தாவீது இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றிச் சொல்லும்போது, “இந்த ஆடுகள் என்ன செய்தது” என்று கேட்கிறார்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். நம்முடைய பாவங்களிமித்தமாக நாம் தண்டிக்கப்படக்கூடாது என்று கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் நமக்காக பரிந்துபேசுகிறார். நம்முடைய பாவங்களுக்கும், பாவத்தின் தண்டனைகளுக்கும் நாம் தப்பிக்கவேண்டும் என்பதற்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை சிலுவையிலே தம்மீது ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவானவர் தம்முடைய திருஇரத்தத்தை, நம்முடைய பாவங்களை நீக்குவதற்கான மீட்பின் கிரயமாக செலுத்தினார். ஆடுகள் தப்பிக்க வேண்டும் என்பதற்காக, மேய்ப்பன் தன்னுடைய ஜீவனையே கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான்.

கர்த்தருக்கு ஒரு பலிபீடம்
2சாமு 24:18-25

2சாமு 24:18. அன்றையதினம் காத் என்பவன் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தை உண்டாக்கும் என்றான்.

2சாமு 24:19. காத்துடைய வார்த்தையின்படியே தாவீது கர்த்தர் கற்பித்த பிரகாரமாகப் போனான்.

2சாமு 24:20. அர்வனா ஏறிட்டுப்பார்த்து: ராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும் தன்னிடத்தில் வருகிறதைக்கண்டு, அர்வனா எதிர்கொண்டுபோய் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி,

2சாமு 24:21. ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன என்று கேட்டதற்கு, தாவீது: வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையிலே கொள்ள வந்தேன் என்றான்.

2சாமு 24:22. அர்வனா தாவீதைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவன் இதை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நல்லபடி பலி யிடுவாராக; இதோ, தகனபலிக்கு மாடுகளும் விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும் மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே இருக்கிறது என்று சொல்லி,

2சாமு 24:23. அர்வனா ராஜயோக்கியமாய் அவை எல்லாவற்றையும் ராஜாவுக்குக் கொடுத்த பின்பு, அர்வனா ராஜாவை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மிடத்தில் கிருபையாயிருப்பாராக என்றான்.

2சாமு 24:24. ராஜா அர்வனாவைப் பார்த்து: அப்படியல்ல; நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான்.

2சாமு 24:25. அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தினான்; அப்பொழுது கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்; இஸ்ரவேலின்மேலிருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது.

கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருக்கிறான். அந்தக் களத்தில் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கவேண்டுமென்று காத் என்பவன் தாவீதுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். கர்த்தருடைய வார்த்தை தாவீதுக்கு சந்தோஷமாயிருக்கிறது. கர்த்தர் தன்னோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கு காத் சொல்லுகிற வார்த்தை அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் தாவீதைக் கொல்ல வேண்டுமென்று சித்தமாயிருப்பாரென்றால், அவர் தாவீதின் கையிலிருந்து பலிகளை அங்கீகரிக்கமாட்டார். கர்த்தர் அர்வனாவின் களத்திலே ஒரு பலிபீடத்தை உண்டாக்குமாறு கட்டளையிடுகிறார். இந்தப் பலிபீடம் கர்த்தருக்காக கட்டப்படும் பலிபீடம். தாவீது இந்தப் பலிபீடத்திலே கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்துவார். கர்த்தர் அந்தப் பலிகளை அங்கீகரிப்பார்.

நாம் கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளை செலுத்தவேண்டுமென்று கர்த்தர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். கர்த்தர் நம்மோடு ஒப்புரவாயிருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளை உற்சாகமாய்ச் செலுத்தவேண்டும்.

தேவனுக்கும் பாவிகளுக்கும் நடுவே பலியின் மூலமாக சமாதானமுண்டாயிருக்கிறது. கிறிஸ்துவானவரே மகாபதிலீடாக செலுத்தப்பட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவே நம்முடைய பாவங்களைப் போக்கும் பிரதான பலியாகயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்து பலிகளெல்லாம் இயேசுகிறிஸ்துவின் பலியிலே அடையாளங்களாயிருக்கிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவருடைய கிருபையினால் நிறுத்தி வைக்கப்படும்போது, கர்த்தருடைய கிருபையை நாம் துதிகளோடும் ஸ்தோத்திரங்களோடும் அங்கீகரிக்க வேண்டும். நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தருடைய கிருபைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அன்றையதினம் காத் என்பவன் தாவீதினிடத்தில் வந்து, அவரை நோக்கி: "நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும்" என்று சொல்லுகிறான். காத்துடைய வார்த்தையின்படியே தாவீது கர்த்தர் கற்பித்த பிரகாரமாகப் போகிறார் *(2சாமு 24:18,19).*

தாவீது கர்த்தருக்கு பலிபீடத்தை உண்டாக்க, எபூசியனாகிய அர்வனாவின் களத்தை கிரயத்திற்கு வாங்க புறப்பட்டுப்போகிறார்.

அர்வனா ஏறிட்டுப்பார்த்து: ராஜாவும் அவருடைய ஊழியக்காரரும் தன்னிடத்தில் வருகிறதைக்கண்டு, அர்வனா எதிர்கொண்டுபோய் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்குகிறார். அர்வனா தாவீது ராஜாவை நோக்கி, "ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன" என்று கேட்கிறான். அதற்கு, தாவீது: "வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையிலே கொள்ள வந்தேன்" *(2சாமு 24:21)* என்று சொல்லுகிறார்.

அர்வனா ஒரு எபூசியன். இவன் பிறப்பினால் புறஜாதி மார்க்கத்தைச் சேர்ந்தவன். பிற்காலத்தில் இவன் யூதமார்க்கத்தமைந்தவனாகயிருக்கிறான். இஸ்ரவேலர் மத்தியிலே வாசம்பண்ணும் சிலாக்கியம் இவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

"ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக்கொள்ளலாம்; ஒரு வருஷத்துக்குள்ளாகவே அதை மீட்டுக்கொள்ளவேண்டும். ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது" *(லேவி 25:29,30).*

கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருக்கிறான். போரடிக்கிற களம் என்பது ஒரு சாதாரண ஸ்தலம். ஆனாலும் இந்த ஸ்தலம் மிகவும் விசேஷமாயிருக்கிறது. இது வேலை செய்யும் ஸ்தலம். கர்த்தர் வேலை செய்யும் ஸ்தலத்தையும், வேலை செய்கிறவர்களையும் கனம்பண்ணுகிறார். அர்வனாவின் போரடிக்கிற களம் கர்த்தருடைய பார்வையில் விசேஷமாயிருக்கிறது.

அர்வனாவிடமிருந்து இந்தக் களத்தை கிரயத்திற்கு வாங்குவதற்காக தாவீதும் அவருடைய ஊழியக்காரரும், அர்வனாவைப் பார்க்க போகிறார்கள். தாவீது சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜா. அர்வனாவோ ஒரு எபூசியன். அவன் புறஜாதி தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்திலே வாசம்பண்ண வந்திருக்கிறவன். போரடிக்கிற களம் அர்வனாவுக்கு சொந்தமானது. அறுவடைக்காலத்தில் மாத்திரமே போரடிக்கிற களத்தைப் பயன்படுத்துவார்கள். தாவீது ராஜா தன்னுடைய ராஜாசனத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அர்வனாவிடமிருந்து, அவனுடைய போரடிக்கிற களத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் தாவீதோ அப்படி செய்ய விரும்பவில்லை.

தாவீதும் அவருடைய ஊழியக்காரரும் அர்வனாவின் போரடிக்கிற களத்தை, அவனுடைய கையிலே கிரயத்திற்கு கொள்வதற்காக அங்கே நேரடியாக வருகிறார்கள். கர்த்தர் நியாயமாமாக கிரயத்திற்கு வாங்கப்பட்ட ஸ்தலத்திலே, தமக்கு பலிபீடம் கட்டப்படவேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தருக்கு திருட்டுப்பொருட்களையோ, அநியாயமாக அபகரித்த பொருட்களையோ, சர்வாங்க தகனபலிகளாய் செலுத்தக்கூடாது. கர்த்தர் கொள்ளைப்பொருட்களால் செலுத்தப்படும் பலிகளில் பிரியப்படுகிறவரல்ல.

தாவீது மனத்தாழ்மையுள்ளவர். அவர் ராஜாவாகயிருந்தாலும், அர்வனாவைப் பார்ப்பதற்கு தானே போகிறார். இதனால் தன்னுடைய மேன்மையோ, ராஜமகிமையோ குறைந்துபோகும் என்று தாவீது நினைக்கவில்லை. அர்வனா தாவீதைப் பார்த்தபோது, அவன் எதிர்கொண்டு போய், தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்குகிறான். பெரியவர்கள் மனத்தாழ்மையோடிருந்தாலும், அவர்களுடைய மதிப்பும் மரியாதையும் ஒருபோதும் குறைந்துபோவதில்லை.

தாவீது தன்னிடத்தில் வந்த காரணத்தை அர்வனா விசாரிக்கிறான். "ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன" என்று அர்வனா தாவீது ராஜாவிடம் கேட்கிறான். அதற்கு, தாவீது: "வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையிலே கொள்ள வந்தேன்" *(2சாமு 24:21)* என்று சொல்லுகிறார்.

தாவீது என்ன நோக்கத்திற்காக தன்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்பது அர்வனாவுக்கு புரிகிறது. அர்வனாவிடம் கஞ்சத்தனமில்லை. அவன் தன்னுடைய களத்தையும், பலிசெலுத்துவதற்கு தேவையான மாடுகளையும், உருளைகளையும் தாவீதுக்கு கொடுக்க சம்மதிக்கிறான்.

அர்வனா தாவீதைப் பார்த்து: "ராஜாவாகிய என் ஆண்டவன் இதை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி பலியிடுவாராக; இதோ, தகனபலிக்கு மாடுகளும் விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும் மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே இருக்கிறது" *(2சாமு 24:22)* என்று சொல்லுகிறான்.

அர்வனா ராஜயோக்கியமாய் அவை எல்லாவற்றையும் தாவீது ராஜாவுக்குக் கொடுக்கிறான் அதன் பின்பு, அர்வனா தாவீது ராஜாவை நோக்கி: "உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மிடத்தில் கிருபையாயிருப்பாராக" *(2சாமு 24:23)* என்றும் சொல்லுகிறான்.

அர்வனாவின் இருதயம் கிருபையும் இரக்கமும் நிரம்பியதாகயிருக்கிறது. அவன் இஸ்ரவேல் தேசத்திலே ஒரு சாதாரண குடிமகனாகயிருந்தாலும், அவனுடைய மனது ராஜாவுக்குரிய மனதாயிருக்கிறது. அர்வனா தன்னுடைய நிலத்தையும் மாடுகளையும், உருளைகளையும், நுகத்தடிகளையும் தாவீது ராஜாவுக்கு ராஜயோக்கியமாய்க் கொடுக்கிறான். அர்வனா ஒருவேளை, இஸ்ரவேல் தேசத்திலே வந்து வாசம்பண்ணுவதற்கு முன்பாக, அவன் எபூசியருக்கு ராஜாவாக இருந்திருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எபூசியரை முறியடித்தார்கள். தாவீது எபூசியரை முறியடித்த போதிலும், அர்வனா தாவீதின்மீது உயர்ந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். அவன் தாவீது ராஜாவைக் கனம்பண்ணுகிறான். தாவீது தன்னிடத்தில் வருகிறதைக் கண்டு, அர்வனா எதிர்கொண்டுபோய், தரைமட்டும் குனிந்து அவரை வணங்குகிறான்.

அர்வனா தாவீது ராஜாவின்மீது அன்பாயிருப்பதுபோல, அவன் இஸ்ரவேல் தேசத்தின்மீதும் அன்பாயிருக்கிறான். இஸ்ரவேல் தேசத்தையும், இஸ்ரவேல் தேசத்தாரையும் அர்வனா நேசிக்கிறான். வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்பட வேண்டுமென்று அர்வனாவும் விரும்புகிறான். கர்த்தருடைய தூதன் அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருப்பது, அவனுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியமாயிருக்கிறது.

அர்வனா ராஜயோக்கியமாய் தாவீது கேட்ட எல்லாவற்றையும், அவருக்கு இலவசமாக கொடுக்க முன்வருகிறான். ஆனால் தாவீதோ அர்வனாவிடமிருந்து அவற்றை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை.

தாவீது ராஜா அர்வனாவைப் பார்த்து: "அப்படியல்ல; நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்" (2சாமு 24:24) என்று சொல்லுகிறார். தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்கு அர்வனாவிடமிருந்து கிரயத்திற்குக் கொள்கிறார். இதன் பின்பு இந்தக் களத்திற்கு அருகாமையிலுள்ள நிலத்திலே, கர்த்தருடைய தேவாலயத்தைக் கட்டுவதற்கு, தாவீது அறுநூறு சேக்கல் நிறை பொன்னைக் கொடுத்து, அந்த நிலத்தையும் கிரயத்திற்கு வாங்குகிறார்.

தாவீது அர்வனாவிடமிருந்து கிரயத்திற்கு வாங்கின போரடிக்கிற களத்திலே, கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்துகிறார். அப்பொழுது கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளுகிறார்; இஸ்ரவேலின்மேலிருந்த அந்த வாதை நிறுத்தப்படுகிறது (2சாமு 24:25). சர்வாங்க தகனபலி தேவனுடைய நீதிக்கு மகிமையாகவும், சமாதானபலி தேவனுடைய இரக்கத்திற்கு மகிமையாகவும் செலுத்தப்படுகிறது.